தஞ்சை ஸரஸ்வதி மஹால் வெளியீடு—131

இலிங்கன் இயற்றிய

# வராகர் ஓரா சாத்திரம்

(பழைய உரையுடன்)

பதிப்பாசிரியர் :
வித்துவான் திரு. அடிகளாசிரியர்,
தமிழ்ப் பேராசிரியர்,
திருவருள் நிலையம், சித்தநாதேச்சுராதீனம், குலகமூர்.



தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் குழுவிற்காக
கௌரவக் காரியதரிசி,
திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்களால்
வெளியிடப்பட்டது.

சகம் 1892] விலை ரு. 12-00 [கி. பி. 1970

உ
இறைவன் துணை

இலிங்கன் இயற்றிய

## வராகர் ஓரா சாத்திரம்

முதலாவது

### இராசி பேத அத்தியாயம்

பாயிரம் : காப்பு

1. உலகெலாம் பூத்துங் காத்தும்
அழித்தலு முடையோ னாகி
நிலவுறும் மூர்த்தி யாகிப்
பிறப்பிறப் பிலனாய் நின்றும்
அலகறு சோதி யாகி
அணுமுத லெவையு மாகிக்
கலைகளின் முடிவாய் நின்ற
கதிரினைச் சிந்தை செய்வாம்.

* (என்பது) எல்லா உலகங்களையும் மலர்வித்தும், காத்தும், பின்னர் அவற்றை அழித்தலும் உடையவனாகி, என்றும் விளங்குகிற வடிவுடையவனாகி, வடிவுடையார்க்கு உண்டாகும் பிறப்பும், இறப்பும் இல்லாதவனாய் நின்றும், அளவிறந்த ஒளியாகி அணுமுதலான எப்பொருளுந் தானாகிக் கலைகளின் பொருண் முடிவாய் நிற்கிற ஞாயிறு

* குறிப்பு :—இந் நூற் சுவடியில் இது முதல் மூன்று பாடல்களுக்கு உரையில்லை. அவற்றிற்குப் பதிப்பாசிரியனால் உரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. 'உம்மையில்' என்னும் 4-ஆம் பாட்டிலிருந்தே பழைய உரை உள்ளது.

RangaRakes
tamilnavarasam.com

என்னுந் தெய்வத்தை இந் நூல் நிறைவு பெறுதலைக் கருதிச் சிந்தித்து வணங்குதலைச் செய்வாம் (என்றவாறு)

இது இந் நூலிற்கு ஏற்புடைக் கடவுள் வாழ்த்தாகும். கதிரவன் படைத்தல் முதலிய முத்தொழில் செய்கின்றான் என்பதை " நீராகி நிலம் படைத்தனை ; நெருப்பாகி நீர் பயந்தனை ; ஊழியிற் காற்றெழுவினை ; ஒளி காட்டி வெளி காட்டினை; கருவாயினை ; விடராயினை ; கதியாயினை ; விதியாயினை ; உருவாயினை ; அருவாயினை ; ஒன்றாயினை ; பலவாயினை " என்னும் பாட்டால் அறிக.-(தொல் செய்யுளியல்-பேராசிரியர் உரை 146)

சூரியனைத் தெய்வமாகக் கருதி வழிபடுஞ் சமயத்தைச் சௌர சமயம் என்பர். இச் சமய நெறியினை—

" உதயந்தனி லயனும்வரு முயிர்காவலி லரியாய், வதைவந்திடி லரனும்வரு மாலும்பிற லங்கன், இதயங்களி லிவனே யிறை யெவையெங்கணு மிவனே, கதையென்றறி காணுவிறை காணும்மிறை கதிரோன்."

" அறியாத வண்ண மணுமேரு வாக வணுவா யடங்கியருளும், பிறியாத வண்ட பகிரண்ட மந்த வணுவாக வேபெருகிடும், குறியா லமைந்த நெறியாகி நின்று குருவாகி வந்து குறுகும், செறிவா னிறைந்த சிவமா யமர்ந்து தெளிவாய வன்றினகரன்."—என்னும் பெருந்திரட்டுப் பாடல்களால் அறிக.

ஏட்டில் இந் நூற் பெயர் வராகர் ஓராசாரம், வராகர் ஓரா சாத்திரம் என்று, இரண்டு விதமாக எழுதப்பட்டுள்ளது. ஆராய்ந்து பார்த்ததில் இது வராகர் ஓரை என்னும் பிருகத் சாதகமே என்று தெளிவாக விளங்குகிறது. வராகமிகிரர் புதல்வன் பிருதுயசஸ் என்பவர் இயற்றியது ஓராசாரமாகும். 1

தற்சிறப்புப் பாயிரம்

2. ஓரையாங் கடல்க டக்க
வுத்தியின் வல்லோர் சொன்ன
வேர்தரு சாத்தி ரத்தை
விருத்தவித் தார மாக



ஆரிய வராகர் கூற
வம்மணி யழுத்த லேபோல்
பாரினல் லவனி லிங்கன்
தமிழினாற் பகர லுற்றேன்.

(எ-து) ஓரா சாத்திரமாகிய பெருங்கடலைக் கடந்து செல்வதற்குக் கலம்போல, பொருந்தும் நெறியினை யறியும் அறிஞர் கூறிய மூல நூல்களின் சாரத்தை விருத்த யாப்பால் விரிவாக வடமொழிக்கண் வராக முனிவர் கூறியருள, அழகிய ஒன்பது மணிகளைத் தேர்ந்தெடுத்து அருங்கலஞ் செய்யும் பொன்வினைஞர் செயல்போல, இந் நிலவுலகத்தில் நல்லவன் மகனாகிய இலிங்கன் என்பேன் (அவ் வராகர் ஓரா சாத்திரத்தைத்) தமிழ் மொழியினால் மொழிபெயர்த்துக் கூறத் தொடங்கினேன் (எ-று).

வேர்தரு சாத்திரம்—மூலநூல். 2

அவையடக்கம்

3. ஒருஞ்சோ திடம தென்னு
முததிக்கோர் கலம தாக
ஆரியந் தனில்வ ராகர்
அறைந்தன ரதனை யானுந்
தேர்கிலேன் புன்சொற் கொண்டு
சிறப்புடன் விரிப்ப வெண்ணல்
சூரியற் கெதிரே மின்மின்
துணைச்சிறை விரித்த லொப்பாம்.

(எ-து) ஆராய்ந்து உணரப்படும் சோதிடம் என்னும் கடலினைக் கடப்பதற்கு மரக்கலம் போன்றதாக, ஆரியமொழியில் வராகமுனிவராம் வராகர், ஓரை என்னும் பெயரால் சிறந்த நூலொன்றினை இயற்றியருளினர் ; அச் சிறந்த நூலினை அறிவிற் சிறியேனாகிய யானும்

RangaRakes
tamilnavarasam.com

தெளிவாக ஆராயும் ஆற்றலின்றி, என் நாவிற் றோன்றும் புன்மையான சொற்களைக்கொண்டு அந் நூலினைச் சிறப்பாக விரித்துக் கூற எண்ணுதல் எது போலுமெனின் ? ஆயிரம் கதிரினை யுடைய சூரியனுக்கு முன்னர் அதற்கு ஒப்பாக மின்மினிப் பூச்சி யொன்று அதன் இரண்டு சிறகுகளையும் விரித்துப் பறந்து சென்றாற் போன்றதாம். ஆதலின் அறிவிற் சிறந்த அவையத்தீரே ! என் புன்மையைப் பொறுத்து அருள் புரிவீராக (எ-று). 3

நூதலிய பொருள்

4. உம்மையிற் புண்ணி யங்கள்
பாவங்க ளுணர்த்தீ ரைத்தால்
இம்மையிற் சுபாசு பங்க
ளேழ்சுகம் புண்ணி யங்கள்
தம்மினாற் றசாப லங்கள்
சமயோக மட்ட வர்க்கம்
கொம்மைவெம் முலையி னய்கேள்
குவலயத் துரைக்க லுற்றேன்.

(எ-து) பூர்வ சென்மத்திற் செய்த புண்ணிய பாவங்கள் பத்தாமிடங்கொண் டறிந்து, இச் சென்மத்தில் அந்தப் புண்ணிய பாவங்கள் அனுபவம், நன்மையுந் தீமையும் ஏழாமிடத்தினாலும், நான்கா மிடத்தினாலும் அறிந்து, பூர்வ சென்மத்திற் செய்த புண்ணியம் அனுபவிக்கிற காலம் புண்ணிய திசா பலத்தினாலும், பூர்வ சென்மத்திற் செய்த மத்திம பலங்கள் யோக பலத்தினாலும், பூர்வ சென்மத்திற்செய்த புண்ணிய பாவங்க ளிரண்டுந் அனுபவிக்கிற காலம் அட்டவர்க்கத்தினாலும் உணர்ந்து பூமியிலுள்ளோர்க்கு அறியத்தக்கதாகச் சொல்லுவேன் (எ-று). 4

இப் பாட்டில் ' சம யோகம் ' என்பதைச் சமமும் யோகமும் என்று பிரித்துக்கொள்க. சமம், இங்கே மத்திம பலன்கள் என்னும் பொருட்டு.



கால புருடனுடைய உறுப்பும், நவாம்சமும்,
இராசியின் பொதுப்பெயரும்.

5. சிரமுக முரச்சு நெஞ்சு
திகழ்வயி றரைநா பிக்கீழ்த்
தருகுறி யூரு சானு
சங்கந்தாட் டிணைமே டாதி
புரவிமுன் கால்க ளியாவும்
கிரியாதி புகுமி ருட்சம்
கிரகஞ்சேத் திரம்பம் மோரை
கிளத்திய பவனம் ராசி.

(எ-து) தலை, முகம், உரச்சு (மார்பு), இருதயம், வயிறு, இடை, நாபிக்குங் கீழ் (வஸ்தி), இலிங்கம், இரண்டு துடை, இரண்டு முழங்கால், இரண்டு கணைக்கால், இரண்டு பாதம் இவை பன்னிரண்டும் மேடம் முதல் மீனம் ஈருகப் பன்னிரண்டும் அடைவிலே கொள்வது.

அசுவதிமுதல் நட்சத்திரம் இருபத்தேழுக்கும் ஒரு நட்சத்திரத்திற்கு நான்கு காலாக இருபத்தேழு நட்சத்திரத்திற்கும் நூற்றெட்டு காலுக்கும் அசுவதி முதல் மும்மூன்று நாளைக்கும் மேடமுதற் பன்னிரண்டு இராசியும் அடைவிலே ஒட்டிக்கொள்வது.

இராசியின் பெயர் இருட்சம், கிரகம், சேத்திரம், பம், ஓரை இவை இராசியின் பொதுப்பெயர் (எ-று)

குறிப்பு :-- மிதுனத்திற்கு மார்பு கூறப்பட்டிருப்பினும் கை, கழுத்து, தோள் இவற்றையும் சேர்த்துக் கொள்க. " சங்கம் கணைக்கால் " (பிங். 5-275) புரவி--அசுவதி. மேடம் முதலிய

RangaRakes tamilnavarasam.com

எல்லா இராசிகட்கும் குட்சம், பவனம் என்ற பெயர்களும், வீட்டின் பரியாயப் பெயர்களான கேகம், வேஸ்மம், திஷ்ணியம், ஸத்மம், மனை, நகர், சேர்பு, வசதி, அகம், இல், புரையுள், பாத்தி, புக்கில், இல்லம், உறையுள், பதி, மாடம், குலம் முதலிய பெயர்களும் வழங்கப்படும்.

பிங்கல நிகண்டு "இல்லும் ஓரையும் பவனமும் இராசி" என்று இராசியின் பொதுப்பெயரைக் கூறுகின்றது.

### இராசிகளின் வடிவம்

6. மச்சமீன் குடந்தான் கும்பம்
மனிதன்பெண் கதையாழேந்து
மச்சதா மிதுனஞ் சாபம்
மனிதன்முன் னசுவம் பொற்பின்
வைச்சுட லிடங்கர் மானின்
முகம்மக ரந்து லாத்தான்
நச்சுப்பெண் பயிர்வி ளக்காள்
நாமம்மற் றவைகட் காமே.

(எ–து) மீன இராசி என்பது இரண்டு மீன்கள்; அதன் தலையில் இதன் வாலும், இதன் தலையில் அதன் வாலு மாகும்படி மாறுபாடாக விருக்கும். கும்பம் என்பது குடமாகும்; புருடனொருவன் தண்ணீர்க் குடங்கொண்டு தண்ணீர்க்குப் போகிறவனாயிருப்பன். மிதுனம் என்பது ஆணும் பெண்ணுமாய்ப் புருடன் கையில் தண்டும், பெண்ணின் கையில் யாழும் பிடித்து இருவரும் ஒரு ஆசனத்தில் இருக்கும் வடிவாம். தனுசு என்பது அரைக்குமேல் புருடனைப்போல் விளங்கி வில்லும் அம்பும் எடுத்து அரைக்குக்கீழ் குதிரை வடிவா யிருப்பது. மகரம் என்பது முகம் மானின் முகமாய் உடல் மகரம் என்னப்பட்ட முதலை வடிவா யிருக்கும். துலாம் என்பது துலாக்கோல் பிடித்துக்கொண்டு கடை



வீதியில் நிற்பானொரு புருடன் போலிருப்பது. கன்னி யென்பது பெண்ணாகும்; ஒரு கையில் முளைப் பாலிகையும் ஒரு கையில் நெருப்பையும் பிடித்துக்கொண்டு ஓட மேறிக்கொண்டு இருப்பவள்போ லிருப்பது. "நாமம் மற்றவைகட் காமே" என்றதனால், மேடம் ஆடு; இடபம் எருது; கடகம் நண்டு; சிங்கம் சிங்கம்; விருச்சிகம் தேள் என்றறிவது (எ–று). 6

### இராசி அதிபதிகளும், நவாங்கிச பதிகளும், நவாங்கிசத்தை அறிவதும், துவாதசாங்கிசமும்.

7. ஆரல் புகர்மால் மதிபருதி
யருணன் புகர்சேய் பொன்சனிகள்
ஓர்பொன் கிரகாங் கிசபதிகள்
உணர்க வடைவே நவாங்கிசங்கள்
சாரும் மேடம் மகரதுலாம்
கடகந் தனது பவனாதி
சேருந் தத்தங் கிரகாதி
செப்புந் துவாத சாங்கிசமே.

(எ–து) செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன், சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, சனி, வியாழன் என்று கூறிய ஒழுங்கிலே மேடாதி பன்னிரண்டு இராசிகட்கும், அந்தந்த அங்கிசங்கட்கும் இவர்கள் அதிபதிகளாவார்.

நவாங்கிசம் அறியும்படி மேடம், மகரம், துலாம், கடகம் என்ற அடைவிலே இந்த இராசிகள் அடைவிலே நாலும் அந்த இராசிக்கு அந்த இராசிமுதல் அடைவிலே ஒட்டிக்கொள்வது.

துவாதசாங்கிசம் அந்த இராசி முதல் பன்னிரண்டு இராசியும் அடைவிலே ஒட்டிக்கொள்க (எ–று). 7

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :— மேட இராசிக்கு மேடம் முதலாகவும், இடபத்திற்கு மகரம் முதலாகவும், மிதுனத்திற்குத் துலாம் முதலாகவும், கடகத்திற்குக் கடகம் முதலாகவும் நவாம்சத்தைக் கண்டு கொள்க. இம் முறை போலவே சிங்கம் முதலான இராசிகட்கும் மேடாதியாக நவாம்சத்தை அறிந்து கொள்க.

துவாதசாம்சக மாவது ஓர் இராசியைப் பன்னிரண்டாகப் பிரித்தது ; அஃதாவது ஒரு இராசியிலுள்ள முப்பது பாகையைப் பன்னிரண்டாகப் பிரித்துவிடின் ஒரு பாகம் இரண்டரைப் பாகையாகும் ; இப் பன்னிரண்டனுள் எந்தப் பாகத்திற் கிரகம் நின்றதென்றறிந்து அந்தப் பாகத்தைக் கிரகம் நின்ற இராசியிலிருந்து எண்ணி அறிவதாம். இதனை,

"உன்னிய துவாத சாங்கிசங் கூறி லொருராசி
முப்பது பாகைத், தன்னிலோ ரங்கிச மிரண்டரைப்
பாகைத் தானென்றிவ் வடைவினிற் கொண்டு, பன்
னியே பார்க்கி லிராசியே முதலாயப் பன்னிரண் டங்கிச
மேவத், துன்னியக் கிரக மிருந்தவங் கிசமே துவாதசாங்
கிசமெனச் சொல்வர்" (102)—என்னும் சாதக சிந்
தாமணிப் பாட்டால் அறிக.

திரிம்சாங்கிசமும், இராசிச் சந்தியும்.

8. ஓசந் தனிற்சே யைந்துசனி
யைந்தோண் பொன்னே ரெட்டாகும்
வீசும் மாலேழ் புகரைந்தாம்
மேவுக் கும்மே விபரீதம்
தேசி யிவைகள் திரிங்கிசமாம்
பாகங் ; கடகந் தேள்மீனம்
பேசு மிவற்றி னந்தங்கள்
இராசிச் சந்தி யெனும்பேரே.

(எ—து) திரிங்கிசாங்கிசம் அறியும்படி ஓச இராசிக் குரிய முப்பது பாகமும் (பாகையையும்) செவ்வாய்க்கு ஐந்து, சனிக்கு ஐந்து, வியாழனுக்கு எட்டு, புதனுக்கு ஏழு, சுக்கிரனுக்கு ஐந்து இவ்வகையாலே அடைவே ஒட்டிக்கொள்வது.



உக்கும இராசிக்குரிய முப்பதுபாகமும் (பாகையும்) விபரீதமாய் வரும். அவையாவன, சுக்கிரனுக்கு ஐந்து, புதனுக்கு ஏழு, வியாழனுக்கு எட்டு, சனிக்கு ஐந்து, செவ்வாய்க்கு ஐந்து என்ற அடைவிலே ஒட்டிக் கொள்வது.

கர்க்கடகம், விருச்சிகம், மீனம் என்னும் இந்த இராசிகளின் அந்திகள் (கடைசிப்பாகம்) இராசிச் சந்தி என்னும் பெயராகும் (எ—று). 8

குறிப்பு :—மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் என்னும் ஆண் இராசிகட்கு ஐந்து பாகைவரையிற் செவ்வாயும், பத்துபாகை வரையிற் சனியும், பதினெட்டுபாகை வரையில் வியாழனும், இருபத்தைந்து பாகைவரையிற் புதனும், முப்பது பாகைவரையிற் சுக்கிரனும் திரும்சாங்கி சாதிபர் ஆகின்றனர்.

பெண் இராசியான இடபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் என்னும் இவைகட்குத் தலைகீழாகக் கொள்ள வேண்டும். எவ்வாறெனின் ? ஐந்துபாகைவரைச் சுக்கிரனும், பன்னிரண்டு பாகைவரையிற் புதனும், இருபது பாகைவரையில் வியாழனும், இருபத்தைந்து பாகைவரையிற் சனியும், முப்பது பாகைவரையிற் செவ்வாயும் திரிம்சாங்கிசாதிபர் ஆகின்றனர்.

இராசிச் சந்தியாவன :—கடகம், விருச்சிகம், மீனம் என்னும் இந்த இராசிகளின் கடைசி நவாம்சம் இராசிச் சந்தியாகும். இதற்கு இருட்ச சந்தியென்றும், கண்டாந்த மென்றும் பெயர். இக் கண்டாந்த சந்தியிற் பிறந்த குழந்தை தாய் தந்தையர்க்கும் குலத்திற்கும் அழிவினைத் தருவதாயிருக்கும். அக் குழந்தை உயிருடனிருப்பின் பல யானை குதிரைகளுடன் கூடிய மன்னனாகவோ, மன்னனால் விரும்பப்பட்டவனாகவோ யிருக்கும். (சாராவளி-அத் 3-சு-20, 21) இதனை "சனமா மிராசிச் சந்தில் ஏந்தலே தோன்று மேனும், தானவை திரிகோ ணத்திற் றந்தைகே டிரிட்ட மாமே" (1210) என்னும் சாதக சிந்தாமணியால் அறிக.



RangaRakes tamilnavarasam.com

### மேடம் முதலான இராசிகளின் பெயர்

9. கிறியந்தா புருசு தூமம்
 கிளத்திய குளீர மோடு
பறைதரு லேயந் தானும்
 பார்த்தூனஞ் சூகங் கோர்ப்பி
எறிதவுட் சிகமு மாகே
 கோமே யிருது ரோகம்
செறியுசேத் தசியீ ராறும்
 மேடாதி செப்பு நாமம்.

(எ-து) கிரியம், தாபுரு, சுதுமம், குளீரன், இலேயம், பார்த்தோனம், சூகம், கோர்ப்பி, தவுட்சிகம், ஆகோகேரம், இருதுரோகம், சேத்தசி இவை பன்னிரண்டும் மேடாதி இராசி பன்னிரண்டிற்கும் அடைவிலே பெயராம் (எ-று). 9

குறிப்பு :—ஜுதுபம் என்பது சுதுமம் என்றாயிற்று. ஜூகம் என்பது சூகம் என்றாயிற்று. தௌர்க்ஷம் என்பது தவுட்சிகம் என்றாயிற்று. ஹிருத்ரோகம் என்பது இருதுரோகம் என்றாயிற்று. சேத்தசி என்பது அத்தியம் என்றும் வழங்கும். இவை வடமொழிப் பெயர்கள்.

### ஆறு (சட்) வர்க்கங்கள்

10. பவனமொன் றிருகூ றோரை
 பகர்திரேக் காண மூன்றும்
நவமது நவாங்கி சங்கள்
 நவில்துவா தசாங்கி சங்கள்
அவைபனி ரண்டு கூறாய்
 அறிதிரீங் சாங்கி சங்கள்
தவறில்முப் பஃதாம் பாகை
 யென்னிடுஞ் சட்டு வர்க்கம்.



(எ-து) பவனமாவது சேத்திர மாம். ஒரு இராசியை இரண்டு கூறு செய்தது ஓரை யாம். ஒரு இராசியை மூன்று கூறு செய்தாற் றிரேக்காண மாம். ஒரு இராசியை ஒன்பது கூறு செய்தால் நவாங்கிச மாம். ஒரு இராசியைப் பன்னிரண்டு கூறு செய்தாற் றுவா தசாங்கிச மாம். ஒரு இராசியை முப்பது கூறு செய்தால் திரீங்கிசாங்கிச மாம் என்பது.

இவ் வகையாலே சேத்திரம், ஓரை, திரைக்காணம், நவாங்கிசம், துவாதசாங்கிசம், திரீங்கிசாங்கிசம் (என) ஒரு இராசிக்குப் பிரித்துக்கொண்டது சட்டு வர்க்கமாம் (எ-று). 10

குறிப்பு :—சேத்திரம் என்றது இலக்கினத்தை. இலக்கினம், திரைக்காணம், நவாம்சம், தசாம்சம், ஓரை, திரிம்சாம்சம், சப்தாம்சம், சஷ்டி அம்சம், கலாம்சம், துவாதசாம்சம் என்னும் இவற்றைத் தச வர்க்கம் என்பர். சிலர் தசாம்சம், சஷ்டி அம்சம், கலாம்சம் என்னும் மூன்றை நீக்கி ஏழு வர்க்கம் (சப்த வர்க்கம்) கொள்வர். இன்னுஞ் சிலர் ஏழில் சப்தாம்சத்தை நீக்கி ஆறு வர்க்கங் கொள்வர். இந் நூலாசிரியர் ஆறுவர்க்கமே கூறுகின்றனர்.

### நிசி யிராசியும், திவா விராசியும், சிரோதய இராசியும், பிருட்டோதய இராசியும், இருபுறமும் உதிக்கும் இராசியும்.

11. மாறுடை மதிமுன் றுன்கும்
 மான்றனு நிசியி ராசி
கூறிய அரிமுன் றுன்கும்
 கும்பமீன் திவாவி ராசி
வீறுடை அரிபெண் கோல்தேள்
 மிதுனஞ்சால் சிரோத யங்கள்
பேறிரு புறமீன் தோன்றும்
 பின்னெழும் மற்றை யோரை.

RangaRakes

tamilnavarasam.com

(எ-து) மேடம் முதல் நான்கும், மகரமும், தனுவும் நிசி இராசி; நிசி இராசி யென்பது இராத்திரியில் பலமுள்ள இராசி யாம். சிங்கம் முதல் நான்கும், கும்பமும், மீனமும் ஆகிய இவை திவாபல இராசி யாம்; திவாபல இராசி யென்பது பகற்காலத்திற் பலமுள்ள இராசியாம்.

சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், மிதுனம், கும்பம் என்னும் இவை சிரோதய இராசிகளாம். மீனம் சிரம், பிருட்டம் என்னும் இருபுறமும் உதிக்கும் இராசி யாம். மற்ற இராசிகளெல்லாம் பிருட்டோதய இராசி யாம். (எ-று). 11

குறிப்பு :—"மேடம் முதல் நான்கும், தனுசு முதல் இரண்டும் சந்திரன் இனமாய் இரவில் விழிக்கு மென்றும், சிங்கம் முதல் நான்கும், கும்பம் முதல் இரண்டு இராசியும் அருக்கன் கூறுய்ப் பகல் விழிக்கு மென்றுஞ் சொல்வது" என்று சூடாமணி உள்ளமுடையான் 48-ஆம் பாட்டின் உரை கூறும்.

சிரோதய இராசிகளிலுள்ள கோள்களின் திசா புத்திகள் நடந்தால் தொடக்கத்திலும், பிருட்டோதய இராசிகளுள்ள கோள்களின் திசா புத்திகள் நடந்தால் கடைசியிலும், சிரபிருட்டோதய இராசியிலுள்ள கோள்களின் திசா புத்திகள் நடந்தால் இடையிலும் தாம் கொடுக்க வேண்டிய நற்பலனையோ தீயபலனையோ தருவார்கள் என்று கூறும் பலதீபிகை (அத்-20-சுலோ-33).

சிலர் மிதுனவிராசியைச் சிரபிருட்டோதய மென்பர்.

12. ஓசமுக் குமங்கு ரூரம்
சவுமிய மாண்பெண் ணொட்டு
தேசரந் திரோப யங்கள்
திரிகோணந் தகர்முன் னன்குங்



காசில்பூ ருவமுன் னோரைக்
கும்மதி யோச முக்குமம்
ஏசினந் தருக்கன் ஒன்றைந்
தொன்பதாந் திரேக்கா ணேசர்.

(எ-து) மேடாதி பன்னிரண்டு இராசியும் ஓச மென்றும், உக்கும மென்றும் அடைவிலே ஒட்டிக் கொள்ளவும். ஓசம் குரூரம், உக்குமம் சவுமியம். அன்றியும் ஓசம் ஆண்; உக்குமம் பெண்ணென் றறிவது.

மேடாதி பன்னிரண்டு இராசியும் சரம், திரம், உபயம் என்று அடைவிலே ஒட்டிக்கொள்ளவும். திரிகோணம் மேட முதல் நாலுக்கும் பூர்வதிசை (பூர்வாதி திசை) நாலும் அறியவும். பூர்வம்-கிழக்கு; அஃதாவது, மேட சிங்கந் தனுசு கிழக்கு; இடப கன்னியா மகரந் தெற்கு; மிதுன துலா கும்பம் மேற்கு; கர்க்கடக விருச்சிக மீனம் வடக்குத் திக்கு என்றறிவது.

ஒரு இராசியை இரண்டு (கூறு) செய்தது ஓரை; ஓசைவி ராசிக்கு முற்கூறு சூரியன்; பிற்கூறு சந்திரன்; உக்குமவிராசிக்கு முற்கூறு சந்திரன்; பிற்கூறு சூரியன் என்று ஒட்டுவது.

திரேக்காணம் ஓர் இராசியை மூன்று கூறு செய்தது; திரேக்காண முதற் கூறு அந்த இராசிக்கு உடையவன்; இரண்டாங் கூறு ஐந்தாம் இராசிக்கு உடையவன்; மூன்றாங் கூறு ஒன்பதாம் இராசிக்கு உடையவன். இந்த அடைவிலே ஒட்டிக் கொள்க (எ-று). 12

இந் நூலாசிரியர் கூறியவாறே:

"உரைத்திடிலோ ரிராசியொரு மூன்று கூறும் ஓரையுடை யவனுண்ணும் முதல்அஞ்சாம் ஓரை, கருத்

RangaRakes tamilnavarasam.com

துடைய நடுவொன்பான் ஓரை காப்போன் கடை
யுண்ணுந் திரேக்காண மிவை "—என்று சூடாமணி
உள்ளமுடையான் ஆசிரியரும் கூறுவர். இப் பாட்டின் பொருள் ஒரு இராசியை மூன்று கூருக்கி இராசியுடையவன் முதற் கூறு உண்ணும்; ஐந்தாமிராசி யுடையவன் நடுவிற்கூறு உண்ணும்; ஒன்பதாம் இராசியுடையவன் கடைக்கூறு உண்ணும். இவ் வகை எல்லா இராசிகளுக்குந் திரேக்காணம் ஒட்டிக் கொள்வது என்பதாம்.

ஆனுல், வீமேசுர உள்ள முடையான் " சரராசியாகில் முற் கூறு இலக்கினுதிபன்; நடுக்கூறு ஐந்தாம் இராசியாதிபன்; கடைக்கூறு ஒன்பதாம் இராசி அதிபன் பொசிப்பன். திர இராசி யாகில் அந்த இராசியை மூன்று கூருக்கி முற்கூறில் ஒன்பதாம் இராசி அதிபதிக் கோளும், நடுக்கூறில் இலக்கினுதிபதியும், கடைக்கூறில் ஐந்தாம் இராசியாதிபதிக் கோளும் பொசிப்பன். உபய இராசியாகில் முதற் கூறு ஐந்தாம் இராசியாதிபதியும், நடுக்கூறு ஒன்பதாம் இராசியதிபனும், கடைக்கூறு இலக்கினுதி பனும் பொசிப்பன் " என்று கூறும். (சட்வர்க்கப்படலம்-2)

" பரவு திரேக்காணமது "-(241) என்னுஞ் சாதகாலங்காரப் பாடலும் வீமேசுரன் உள்ளமுடையானைப் போலவே கூறு கின்றது.

ஓரைக்கு அதிபரும், பிறர் வேண்டு
மாற்றான் திரேக்காணுதிபரும்.

13. இசைபிர தமவோ ரைக்கவ்
விராசியா திபனே யாகும்
அசைவிலா விரண்டா மோரைக்
கிலாபேச னதிப னாகும்
முசிவறு திரேக்கா ணேசன்
முன்னவன் வியேச னந்த
மிசையுறு மிலாப மாள்வோன்
அதிபனு மெனவி ளம்பே.



(எ-து) முந்தின ஓரைக்கு அந்த இராசியதிபனே அதிபன். இரண்டா மோரைக்கு இலாபாதிபனே அதிபன் என்றறியவும்.

திரேக்காணம், முதல் திரேக்காணத்திற்கு அந்த இராசிக்குடையவன்; இந்த இரண்டாவதற்குப் பன் னிரண்டா மிராசியுடையவன். மூன்ருவதற்குப் பதி னென்ரு மிராசியுடையவன் அதிபனும் (எ-து). 13

குறிப்பு :—ஓரை என்றது இராசியின் பாதியாகும். ஆண் இராசிக்கு முற்பாதி சூரிய ஓரையும், பிற்பாதி சந்திர ஓரையுமாம். பெண் இராசிக்கு முற்பாதி சந்திர ஓரையும், பிற் பாதி சூரிய ஓரையுமாம்.

ஆண், பெண் என்னும் எல்லா இராசிகட்கும் முதல் ஓரைக்கதிபன் அந்தந்த இராசியாதிபனுவான். இரண்டாவது ஓரைக்குப் பதினென்ரும் இராசியதிபனே அதிபனுவான் என்றறிக.

திரேக்காணத்திற் சரம், திரம், உபயம் என்னும் எல்லா இராசிகட்கும் முதற் கூறுக்கு இலக்கினுதிபனும், இரண்டாங் கூறுக்குப் பன்னிரண்டாமதிபனும், மூன்ருங் கூறுக்குப் பதினென்ருமதிபனும் திரேக்காணுதிபர் ஆகின்றனர் என்பது யவனுசாரியருடைய கொள்கையாகும். இதனைச் சோதிடர்கள் வழங்குவதாகத் தெரியவில்லை.

கோள்களுக்கு
உச்ச இராசிகளும் நீச இராசிகளும்.

14. மறியுடன் எருது மான்பெண்
வருகுளிர் மீனம் கோலேழ்
எறிகதிர் முதலா யுச்சம்
பத்துமுன் றிருபத் தெட்டும்
குறிபதி னைந்து மைந்தும்
இருபத்தேழ் இருபான் கூறில்
செறியுமத் துச்ச பாகந்
திகழுதி நீச மேமே.

RangaRakes

tamilnavarasam.com

(எ—து) மேடம், இடபம், மகரம், கன்னி, கர்க்கடகம், மீனம், துலாம் என்னும் இந்த ஏழு இராசியும் ஆதித்தன் முதலாக அடைவிலே உச்ச இராசிகள் என்றறிவது. அன்றியும், பத்தும், மூன்றும், இருபத்தெட்டும், பதினைந்தும், ஐந்தும், இருபத்தேழும், இருபதும் ஆதித்தன் முதல் ஏழு கோள்களுக்கும் அடைவிலே அத்துச்ச (அதியுச்ச) பாவமென் றறிவது.

வரலாறு :—ஆதித்தனுக்கு மேடம் பத்தாம் பாகை, சந்திரனுக்கு இடபம் மூன்றும் பாகை, செவ்வாய்க்கு மகரம் இருபத்தெட்டாம் பாகை, புதனுக்குக் கன்னி பதினைந்தாம் பாகை, வியாழத்திற்குக் கர்க்கடகம் ஐந்தாம் பாகை, வெள்ளிக்கு மீனம் இருபத்தேழாம் பாகை, சனிக்குத் துலாம் இருபதாம் பாகை இவை அத்துச்ச பாகை என்றறிவது.

'அதிநீசம் ஏழே' என்று சிறப்பித்த வதனல், ஆதித்தனுக்குத் துலாம் பத்தாம் பாகமும், சந்திரனுக்கு விருச்சிகம் மூன்றும் பாகமும், செவ்வாய்க்குக் கர்க்கடகம் இருபத்தெட்டாம் பாகமும், புதனுக்கு மீனம் பதினைந்தாம் பாகமும், வியாழத்திற்கு மகரம் அஞ்சாம் பாகமும், வெள்ளிக்குக் கன்னி இருபத்தேழாம் பாகமும், சனிக்கு மேடம் இருபதாம் பாகமும் ஆகிய இவை அதிநீசம் என்றறிவது.

அதிநீசம் எனினும், பரம நீசம் எனினும் ஒக்கும் (எ—று). 14

வர்க்கோத்தம நவாங்கிசமும்
மூலத் திரிகோண இராசிகளும்.

15. ஆய்சரந் திரோப யங்கட்
காதிமத் தியமே யந்தம்
ஏய்தரு மிவற்றை வர்க்கோத்
தமநவாங் கிசமெ தென்பர்



பாய்பரி யேறு மேடம்
பாவைவிற் கோல்சால் ஏழும்
சாய்கதிர் முதலாய் மூலத்
திரிகோண மென்று சாற்றே.

(எ—து) சர விராசி, திரவிராசி, உபய விராசிகளுக்கு ஆதி, மத்திய, அந்தியம் என்னும் இவை வர்க்கோத்தம நவாங்கிசம் என்றறிவது. அஃதாவது, சரவிராசிகட்கு ஆதி நவாங்கிசமும், திர விராசிகட்கு மத்திய நவாங்கிசமும், உபய இராசிகட்கு அந்திய நவாங்கிசமும் இவை வர்க்கோத்தம நவாங்கிசம் என்றறிவது.

சிங்கம், இடபம், மேடம், கன்னி, தனுசு, துலாம், கும்பம் என்னும் இவை அடைவே ஆதித்தன் முதலான ஏழு கோள்களுக்கும் மூலத்திரிகோண பவனம் (எ—று). 15

குறிப்பு :—வர்க்கோத்தமாம்சம் என்பது தன்னுடைய ஸ்புடம் நிற்கின்ற இராசியில் வருகின்ற நவாம்சமாகும், ஒன்பது பாகத்துள் சரவிராசிக்கு முதலாவது பாகமும், திரவிராசிக்கு ஐந்தாவது பாகமும், உபய விராசிக்கு ஒன்பதாவது பாகமும் வர்க்கோத்தமம் ஆகும். (சாராவளி-8—12)

ஆதித்தனுக்குச் சிங்கமும், சந்திரனுக்கு இடபமும், செவ்வாய்க்கு மேடமும், புதனுக்குக் கன்னியும், குருவிற்குத் தனுசும், சுக்கிரனுக்குத் துலாமும், சனிக்குக் கும்பமும் மூல க்ஷேத்திரங்கள் ஆகும். மூலத்திரிகோணம் மூல க்ஷேத்திரம் ஒரு பொருட்சொற்கள். மூலத்திரிகோண பாகையை,

" அருக்கனுக்குச் சிங்கத்தி லிருபதே பாகை
அம்புலிக்கோ விடபத்திற் பாகைமூன் றின்மேல்
பெருக்குமிரு பத்தேழு சேய்க்குமே டத்திற்
பேசுமொரு பனிரண்டாம் புதற்குக்கன் னிதனில்



RangaRakes tamilnavarasam.com

செருக்குபதி னைந்தின்மேற் பத்துகுரு விற்கே
சிலையிலொரு பதுவெள்ளிக் கேதுலாந் தன்னில்
நெருக்குமொரு பதினைந்து சனிதனக்குக் குடத்தில்
நிகரிலிரு பதுபாகை மூலத்ரி கோணம்"

என்னும்-(120) சாதக சிந்தாமணிப் பாடலால் அறியலாம். சோதிட கிரக சிந்தாமணி இராகுவிற்குக் கும்பமும், கேதுவிற்குச் சிங்கமும், குளிகனுக்கு மீனமும் மூலத்திரிகோண இராசிகளாம் என்று கூறுகிறது. சாதகாலங்காரம் சிறிது வேறுபட்டு "நலமறு சனிக்கே மகரம தாகும்" (42) என்று கூறுகிறது. இவ்வாறே பலதீபிகை சூரியன் முதலான கிரகங்கட்கு 20, 27, 12, 5, 10, 5, 4 ஆகிய இவை முறையே மூலத்திரிகோண பாகை என்று கூறும் (அத்-1-க-7).

இலக்கினம் முதலான பன்னிரண்டு பாவங்களின்
பெயர்களும், உபசயத் தானமும்.

16. சாற்றிய தனுக்கு டும்பம்
சகோதரம் பந்து புத்திரன்
மாற்றுறும் அரியே மத்தி
மரணமே சுபங்கள் தானும்
தேற்றுமாஸ் பதமே ஆயம்
இரிப்பஞ்செப் பிடுமோ ரசதி
ஏற்றுமுன் றாறு பன்னொன்
றிரைந்தா முபச யங்கள்.

(எ—து) தனு, குடும்பம், சகோதரம், பந்து, புத்திரன், அரி, மத்தி (மதம்), மரணம், சுபம், ஆஸ்பதம், ஆயம், இரிப்பம் என்னும் இவை இலக்கினம் முதல் பன்னிரண்டு இராசிக்கும் பெயர்.

வரலாறு :—தனு இலக்கினம். குடும்பம் இரண்டாமிடம். சகோதரம் மூன்றாமிடம். பந்து நான்காமிடம். புத்திரன் ஐந்தாமிடம். அரி ஆறாமிடம். மத்தி ஏழாமிடம். மரணம் அட்டமம். சுபம் ஒன்பதாமிடம். ஆஸ்பதம்



பத்தாமிடம். ஆயம் பதினொன்றாமிடம். இரிப்பம் பன்னிரண்டாமிடம் என்றறிவது.

இலக்கினத்திற்கு மூன்றாமிடம், ஆறாமிடம், பதினொன்றாமிடம், பத்தாமிடம் இவைகள் உபசயத்தானம் என்று பெயராம் (எ—று). 16

இப் பாட்டும் இலக்கினம் முதலானவற்றின்
பெயரைக் கூறுகின்றது.

17. கல்லியம் சுயமு விக்ரம்
அஞ்சுகம் பிரிதி பங்கள்
கொல்லிய ரிபுசித் தோத்தம்
இரந்திரம் குருவே மானம்
நில்பவம் வியஞ்ச துர்த்தம்
நிதனமே சதுரஸ் ரங்கள்
சொல்லுஞ்சத் தமந்தி யூனம்
தொழிலுமாக் கினையாஞ் செப்பே.

(எ—து) கல்லியம் இலக்கினம்; சுயமு இரண்டாமிடம்; விக்கிரமம் மூன்றாமிடம்; சுகம் நான்காமிடம்; பிரிதிபம் ஐந்தாமிடம்; இரிபு ஆறாமிடம்; சித்தோத்தம் ஏழாமிடம்; இரந்திரம் எட்டாமிடம்; குரு ஒன்பதாமிடம்; மானம் பத்தாமிடம்; பவம் பதினொன்றாமிடம்; வியம் பன்னிரண்டாமிடமென்று இலக்கினம்முதல் பன்னிரண்டுக்கும் பெயர்.

சதுர்த்தம் நான்காமிடம், நிதனம் எட்டாமிடமாகையால் நான்காமிடத்திற்கும், எட்டாமிடத்திற்கும் சதுரஸ்ரம் என்று பெயர். இலக்கினத்திற்குச் சத்தமக் கிரகத்திற்குத் (வீட்டிற்கு) தியூனம் என்று பெயர். தொழில், ஆக்கினை பத்தாமிடமென்று பெயர். (எ—று). 17

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :— கல்பம் என்னுஞ் சொல் கல்லியம் என்று திரிந்தது. ஸ்லவம், ஸ்லவம்மு என்னுஞ் சொல் சுயமு என்று திரிந்தது.

கேந்திரங்களும் கேந்திரங்களில் வலியுள்ளவையும்.

18. சத்தம விலக்கி னங்கள்
சதுர்த்தகன் மங்கள் நான்கிற்
கொத்ததோர் கண்டங் கேந்திரம்
உயர்சதுட் டயமாம் ; கீடம்
வைத்ததோர் நரர்ச லங்கள்
பசுபமும் வலியா மென்பர்
எய்த்திடு மிவற்றுக் கேழில்
வலியிலை யென்பர் மேலோர்.

(எ—து) சத்தமம், இலக்கினம், சதுர்த்தம், கன்மம் இந்த இராசிகளுக்குக் கண்ட மென்றும், கேந்திர மென்றும், சதுட்டய மென்றும் பெயராம். அவைவே, சத்தமத்திற் கீடவிராசி வலிது. இலக்கினத்தில் நர இராசி வலிது. நான்காமிடத்தில் அம்புச (சலத்திற் றோன்றிய) இராசிகளும், கர்மத்திற் சதுட்பாத விராசிகளும் (நாற்காலிராசிகளும்) பெலங்கள்.

அஃதாவது, கீடம் விருச்சிகம்; அஃது ஏழாமிடத்திற் பெலம். நரவிராசிகள் மிதுனந் துலாங் கன்னி கும்பம் தனுவின் மேலே பாதியும் ; இவை இலக்கினத்தில் வலிகள். செல இராசிகள் கர்க்கடகமும், மீனமும், மகரத்திற் கீழிடமும் ; இவை நாலாமிடத்து வலிகள். சதுஷ்பாதங்கள் மேடமும், இடபமும், சிங்கமும், தனுவினுடைய கீழே பாதியும் ; இவை பத்தாமிடத்தில் வலிகள்.



இச் சொல்லிய இராசிகள் அந்தத் தானத்துக்கு ஏழாமிடத்தில் ஏதும் வலியில்லை. இடையிலுள்ள இராசிகளுக்கு மத்திம பெலம் உண்டாம் (எ—று). 18

குறிப்பு :—" இவற்றில் உதய இராசியை உதய கண்டமென்றும், நான்கா மிராசியை நீர்க்கீழ்க் கண்டமென்றும், ஏழாமிராசியைப் பாட்டுக் கண்டமென்றும், பத்தாமிராசியை உச்சிக்கண்டமென்றும் சொல்லுவர்.' உதய இராசி, கோணம், கண்டம் என்னும் இரண்டிற்கும் பொதுமையாக விருக்கினும் கண்டங்களுக்கே சிறப்புடைத்தாம் " என்னும் சினேந்திர மாலை 34-ஆம் பாட்டின் உரையினையும், " இருகால் விராசிகள் நான்கும் உதயத்தில் வலிது ; சிறகுக்காலிராசிகள் இரண்டும் நீர்க்கீழ் வலிது ; பலகாலிராசிகள் இரண்டும் பாட்டில் வலிது ; நாற்காலி ராசிகள் நான்கும் உச்சியில் வலிது என்று இங்ஙனமாக இராசிகளின் கண்டவலிது சொல்லப்படும் " என்னும் சினேந்திர மாலை 40-ஆம் பாட்டின் உரையினையும் ஒப்பு நோக்கி அறிக.

பன்னிரண்டு பாவங்களும் கேந்திரம்
பணபரம் ஆபோக்லிமம் என மூன்றாக அடங்கும்
என்றலும், லக்கினம் பாவம் முதலானவற்றின்
பெயர்களும்.

19. கேந்திரம் பரமே யாபோக்
கிலிபமே யுதய மாதி
ஏய்ந்தவம் புசஞ்சு கங்கள்
இபுகம்வேக் குமம்கான் கின்போர்
சேர்ந்தவத் தமஞ்சா மித்திரம்
சுதபந்திரி கேசண மைந்தாம்
சாய்ந்தமே சூர ணங்கள்
தசமமே கன்மம் பத்தே.

(எ-து) கேந்திரமாவது உதயம், நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் என்னும் நான்காகும். இக் கேந்திரத் தொட்டுக் கேந்திரம், பணபரம், ஆபோக்கி

RangaRakes tamilnavarasam.com

லீபம் என்று பன்னிரண்டு இராசியும் அடைவிலே ஒட்டிக் கொள்ளவும்,

அம்புசம், சுகம், இபுகம், வேக்குமம் இவை நாலா மிடத்தின் பெயர். அத்தபவனத்திற்குச் சாமித்திரம் என்று பெயர். சுதபம் மென்றும் திரிகோண மென்றும் அஞ்சாமிடத்தின் பெயர். மேசூரண மென்றும், தசம மென்றும் பத்தாமிடத்தின் பெயராம் (எ–று). 19

குறிப்பு:—பரம்—பணபரம். கேந்திரத்திற்குப் பரமாய் (முன்னாய்) உள்ள இரண்டு, ஐந்து, எட்டு, பதினொன்று என்னும் நான்கும் பணபரமாம். பணபரங்கட்குப் பரமாய் (முன்னாய்) உள்ள மூன்று, ஆறு, ஒன்பது, பன்னிரண்டு என்னும் நான்கும் ஆபோக்கிலீபமாம். அத்தபவனம்—ஏழாமிடம். தமிழில் பாடு என்று கூறப்பெறும். சுத+பம் சுதபம் என்றாயிற்று. புத்திர இராசி என்று பொருள்.

இலக்கினாதிபனின் வலியும், கேந்திரம் முதலானவத்தின்
வலியும், இராசிப் பிரமாணமும், ஒன்பதாமிடம்,
மூன்றாமிடத்தின் பெயரும்.

20. வலியுறுஞ் சாமி மால்பொன்
உதித்திட வலிகண் டாதி
நலிவுறு மெல்லல் சந்தி
நராதி வலிமே டாதி
மெலிதரு மான மைந்து
முதலலேற் றுறு மாறும்
சொலில்நவந் தவங்கோ ணந்தந்
துச்சிக்கஞ் சகசம் மூன்றே.

(எ–து) இலக்கினாதிபனைப் புதன் வியாழன் கூடினும் நோக்கினும் இலக்கினாதிபனுக்குப் பல முண்டாம். மற்றுள்ள கிரகங்கள் கூடத்தான் நோக்கத்தான் செய்யின் இலக்கினாதிபனுக்குப் பலமில்லை.



கேந்திரத் தானத்தில் பலமுள்ள இராசிகள் பணபரத்தில் மத்திமபலன். ஆபோக்கிலீபத்தில் பெலவீனம். "எல்லல் சந்தி நராதி வலி" என்றது, பகலிலும் இரவிலும் இரண்டு சந்தியிலும் துவி பாதம், சதுட் பாதம், கீடம் வலி யென்று அடைவிலே ஒட்டிக்கொள்வது.

மேடாதி ஆறு இராசிக்கும் மானம் அஞ்சு முதல் என்றவதனால், மேடம் ஐந்து, இடபம் ஆறு, மிதுனம் ஏழு, கர்க்கடகம் எட்டு, சிங்கம் ஒன்பது, கன்னி பத்து; இந்த இராசி மானத்தை நாலிற் பெருக்கினது மேடாதி பம்முக்குப் (இராசிக்கு) பிரமாணம்.

'ஆறும் மாறும்' என்றது, மீனாதி துலாந்தமாக விபரீதமாக இப்படி இராசிமானத்தை நாலிற் பெருக்கினது மீனாதி பம்முகளுக்கு இராசிப் பிரமாணம்.

'நவம் தவம் கோணந்தம்' என்றது, நவமமென்றும் தவமென்றும், அந்திய திரிகோண மென்றும் ஒன்பதாமிடத்துக்குப் பெயராம்.

'துச்சிக்கம் சகசம் மூன்றே' என்பது, துச்சிக்கமென்றும், சகசமென்றும் மூன்றாமிடத்தின் பெயராம் (எ–று). 20

குறிப்பு:—ஒன்பதாமிடத்திற்குக் குரு. தர்மம், சுபம், மார்க்கம் என்னும் வேறு பெயர்களும்; மூன்றாமிடத்திற்குச் சகசயம், சகோதரம், தைரியம், சௌரியம், விக்கிரமம் முதலான வேறு பெயர்களும் உள்ளன.

இப் பாட்டிற் கூறிய இராசிப் பிரமாணத்தைப் பற்றி மங்களேஸ்வரீயம் கூறுவது வருமாறு:—

சக்கர பூர்வார்த்தத்தில் மேடாதி ஆறு இராசிக்குள்ள 5, 6, 7, 8, 9, 10 என்பவை எண் மானமாகும். இவற்றை அடைவே

RangaRakes tamilnavarasam.com

நான்கிற் பெருக்கி, அதனைப் பத்தாற் பெருக்கினால் அடைவே 200, 240, 280, 320, 360, 400 ஆகும். இவற்றை மீனுதி இடமாக ஆறிராசிக்குங் கொள்க. கொள்ளின் மேட மீனத்திற்கு 200 இடப கும்பத்திற்கு 240, மிதுன மகரத்திற்கு 280, கடக தனுசுக்கு 320, சிங்க விருச்சிகத்திற்கு 360, கன்னி துலாத்திற்கு 400, விநாடிகளாக வரும். இவற்றைக் கூட்டினால் (பன்னிரண்டு இராசிக்கும்) 3600 விநாடிகள் வரும். இவை அறுபது நாழிகையாகும். இவை இராசிப்பிரமாண நாழிகையாயினும், இக் காலத்தே இவ்வாறு கொள்ளப் பெறுவதில்லை.

இவற்றின் பயன் யாதென்னில்? கால புருஷனுடைய அங்கத்தில் இலக்கினம் முதலாக எண்ணலாம். தீர்க்க இராசியுள்ள அங்கம் தீர்க்கமும், குறைவுள்ள இராசியுள்ள அங்கம் குறைவும், சம இராசியிலுள்ள அங்கம் சமமும் ஆகும் என்றறியவும். சோர பிரச்சினையில் சோரன் போன தூரம் தெரியலாம் என்பர். (2-19)

இராசிகளின் நிறமும் வேசிநாமமும்.

21. அரத்தம்பால் பசுத்த வெள்ளை
 ஆனபா டலத்தி னேடு
பரித்தவெண் புகைநி றங்கள்
 பன்னிறங் கறுப்புப் பைம்பொன்
தெரித்தபிங் கலங்கற் பூரம்
 சேரும்வெண் ணிறமே வெண்மீன்
கருத்துறக் கிரிய மாதி
 கதிர்பம்முக் கிரண்டாம் வேசி.

(எ-து) அரத்தம்— சிவந்தது மேடம். பால் — வெளுத்த நிறம் இடபம். பசுத்தவெள்ளை—பசுத்து (பச்சையாகி) வெளுத்த நிறம் மிதுனம். பாடலம்— குறையக் கருத்துச் சிவந்தது (மங்கலான சிவப்பு) கர்க்கடகம். வெண் புகை—குறையக் கருத்து வெளுத்த நிறம் (புகைநிறமும் வெண்மை நிறமும் கலந்தநிறம்) சிங்கம். பன்னிறம்—நானு (பல) வண்ணம் கன்னி. கறுப்பு— கறுத்த நிறம் துலாம். பைம் பொன்—பொன்னிறம்



விருச்சிகம். பிங்கலம்—கிராலிச்ச (மங்கற் சிவப்பு) நிறம் தனுசு. கற்பூரம்—வெளுத்த கிராலிச்ச நிறம் மகரம். வெண்ணிறம்—வெளுத்த கிராலிச்ச நிறம் கும்பம். வெண் மீன்—வெள்ளையான மீனின் நிறம் மீனம். கிரியம் ஆதி—மேடாதி பன்னிரண்டு இராசிக்கும் இந்தப் படி நிறம் அறியவும்.

"கதிர் பம்முக்கு இரண்டாம் வேசி" என்றது, சூரியன் நின்ற இராசிக்கு இரண்டா மிராசி 'வேசி' என்று பெயராம் (எ-று). 21

சினேந்திரமாலை சிறிது வேறுபட நிறத்தினைக் கூறுகின்றது. அதனைக் கீழ்வரும் பாட்டால் உணர்க.

" வில்அரிஆ டாம் சிவப்பு ; வெள்ளேறு கோல் கடகம்
சொல்லரிய வெள்ளை ; மீன்தொல்குடந்தேள்—சொல்லுங்கால்
திண்பசுமை யாகும் ; திறலியாழ் கன்னிகரு
ஒண்கருமை யென்றுரைக்க வோர்ந்து " 54

முதலாம் அத்தியாயத்திற்
கூறப் பெற்றவை.

22. வகுத்திடும் ஓரை யங்கம்
 வடிவுடன் சட்டு வர்க்கம்
புகற்றரு பெயரு தித்தல்
 பொருந்திய கோணந் திக்குத்
தொகுத்திதற் குச்ச நீசம்
 சொற்றிடும் பாவ நாமம்
பகுத்ததன் வலிநி றங்கள்
 பகர்ந்தனன் இலிங்கன் நன்றே. 22

முதலாவது
இராசிபேத அத்தியாயம்
முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

இரண்டாவது

## கிரக பேத அத்தியாயம்.

கால புருடனுடைய ஆன்மா
முதலியவை இவை யெனல்.

23. சாரு மான்மாக் கதிர்மனது
சசிசத் துவன்சேய் புதன்வசனன்
மார்பின் ஞான சுகன்குருவாம்
மதனன் புகர்துக் கிதன்மந்தன்
பாரி லிரவி மதியரசர்
படைசேய் புதன்புத் திரன்றேவர்
தேருந் துணைபொன் னசுரதுணை
சிதன் சனியே விடயோகி.

(எ-து) கால புருடனுடைய சீவாத்மா ஆதித்தன்; மனசு சந்திரன்; சத்துவம் செவ்வாய்; புதன் வசனன்—வாக்குப் புதன்; ஞானம் சுகம் வியாழன்; மதனன் சுக்கிரன்; மதன மாவது காமம்; காம சுகமுடைய வொருத்தன் சுக்கிரன்; துக்கிதல்—சனி.

சூரியன் சந்திரன் இருவரும் பிரகாசக் கிரகமாகை யாலும் திரிசெய்கையாலும் இராசக் கிரகங்கள் என்றறிவது; படைத்தலைவன் செவ்வாய்; புதன் இராசகுமாரன்; சுரர்குரு வியாழன், அசுரர்குரு சுக்கிரன் ஆகையால், வியாழன் சுக்கிரன் இருவரும் சேவகன் மார் (அமைச்சன்மார்); சனி விடயோகி (வேலையாள்) (எ-று).





குறிப்புரை :- சத்துவமாவது, செல்வத்திலும் வறுமையிலும் இன்பத்திலும் துன்பத்திலும் வேறு பாடடையாமல் ஒரே நிலையிலிருக்கும் உள்ள நிலை. உடல் வலிமையுமாம்.

கோள்களின் பெயர்

24. எல்லி பருதி சூரியனு
திததன் பெயரா மிந்துசசி
அல்லன் சீதா சுமிமதிப்பே
ராகு மாரல் வக்கிரன்சேய்
கொல்லுங் குருரன் நிலமகன்பேர்
கூறும் ஞயன்மால் மதிமகன்பேர்
வெல்லுஞ் சீவ னங்கிரசன்
தேவ குருப்பொன் வியாழப்பேர்.

(எ-து) எல்லி, பருதி, சூரியன் இவை ஆதித்தன் பெயராம். இந்து, சசி, நிசாபதி, சீதாசுமி, மதி இவை சந்திரன் பெயராம். ஆரல், வக்கிரன், சேய், குரூரன், நிலமகன் இவை செவ்வாயின் பெயராம். ஞயன், மால், மதிமகன் இவை புதன் பெயர். சீவன் அங்கிரசன், சுருகுரு, பொன் இவை வியாழத்தின் பெயராம் (எ-று).

குறிப்பு :—சூரியனின் வேறு பெயர் :—அண்டயோனி, அரி, அரியமா, அருக்கன், அருணன், அலரி, அழலவன், அனலி, ஆதவன், ஆதித்தன், ஆயிரஞ்சோதி, இரவி, இருள்வலி, இனன், உதயன், எல், எல்லை, என்று, என்றூழ், ஏழ்பரியோன், ஒளி, ஒளியோன், கதிரவன், கனலி, கிரணமாலி, சண்டன், சவிதா, சான்றோன், சித்திரபானு, சுடரோன், சூரன், செங்கதிரோன், சோதி, ஞாயிறு, தபனன், தரணி, திவாகரன், தினகரன், தினமணி, நபோமணி, பகலோன், பகல், பங்கயன், பதங்கன், பரிதி, பர்க்கன், பனிப்பகை, பானு, மார்த்தாண்டன், மித்திரன், விகர்த்தனன், விண்மணி, விரிச்சிகன், விரோசனன், வெஞ்சுடர், வெயில், வெய்யோன், ஹேளி என்பன வாகும்.

RangaRakes tamilnavarasam.com

சந்திரனுடைய வேறு பெயர்கள் :—அமுதக்கதிரோன், அம்புலி, அரி, அரிச்சிகன், அலவன், ஆலோன், இமகரன், இராக்கதிர், இளன், உடுபதி, கலாநிதி, கலைவினன், களங்கன், குபேரன், குமுதநண்பன், குரங்கி, சீதன், சுதாகரன், சோமன், தண்சுடர், தண்ணவன், தாராபதி, தானவன், திங்கள், தெவ்வு, நிசாகரன், நிலவு, பசுங்கதிர்த்தே, மதியம், மானேந்தி, முயலின் கூடு, விது, விபத்து, வெண்கதிரோன், வேந்தன் முதலியன வாம்.

செவ்வாயின் வேறு பெயர்கள்:—அங்காரகன், அரத்தன், அழலோன், அழல், அறிவன், உதிரன், குசன், குருதி, செந்தீ வண்ணன், பௌமன், மங்கலன் முதலியன வாம்.

புதனின் வேறு பெயர்கள்:—அநுகு, அருணன், அனுவழி, கணக்கன், சவுமன், சாமன், சித்தைகூரியன், சௌமியன், தூதுவன், தேர்ப்பாகன், நற்கோள், நிபுணன், பச்சை, பண்டிதன், பாகன், புத்தி, புலவன், போதனன், மாலவன், மேதை, ஹேமன், வித், க்ஞன் முதலியன வாம்.

வியாழனின் வேறு பெயர் :—அந்தணன், அமைச்சன், அரசன், ஆசான், ஆண்டளப்பான், குரு, சிகண்டிசன், சுரகுரு, தாராபதி, தெய்வமந்திரி, நற்கோள், பிரகற்பதி, பீதகன், மறையோன், வேதன், வேந்தன் என்பனவும், சட்டியன், இஜ்யன் என்பனவுமாம்,

இதுவும் அது

25. பிருகு மகன்சுக் கிரன்சுங்கன்
பிருகு சிதனே வெள்ளியின்பேர்
கரியன் மந்தன் அசிதன்தான்
சகோணன் சவுரி கதிர்மகன்பேர்
அரவு சர்ப்பம் அசுரனரா
இராகுப் பெயராம் சிகிகேதாம்
சுரையும் முருகும் கமழிணராற்
றொடுத்த படலைக் கருங்குழலாய்.



(எ—து) பிருகுமகன், சுக்கிரன், சுங்கன், பிருகு, சிதன் (ஸிதன்) இவை வெள்ளியின் பெயர். கரியன், மந்தன் அசிதன் (அஸிதன்), சகோணன், சவுரி, கதிர்மகன் இவை சனியின் பெயர். அரவு, சர்ப்பம், அசுரன், அரா இவை இராகுவின் பெயர். சிகி என்பது கேதுவின் பெயராம். "சுரையும் முருகும் கமழ் இணரால் தொடுத்த படலைக் கருங்குழலாய்" என்பது மகடூஉ முன்னிலை. (எ—று). 8

குறிப்பு :—சுக்கிரனின் வேறு பெயர் :—அசுரர்மந்திரி, அநாவிலன், ஆசான், உசனன், ஒள்ளியோன், கவி, காப்பியன், சல்லியன், சீதகன், தயித்தியமந்திரி, நற்கோள், பளிங்கு, பார்க்கவன், பிரசுரன், புகர், புயல், மழைக்கோள், வெள்ளி என்பனவும் ஆஸ்ப்புஜிதன் என்பதும் ஆகும்.

சனியின் வேறு பெயர் :—அந்தணன், அந்தன், கரியவன், காரி, கீழ்மகன், சந்தில், சாவகன், தமனியன், நீலன், நோய்முகன், பங்கு, பச்சுமன், மந்தன், முடவன், முதுமகன், மேற்கோள், கிருஷ்ணன், யமன் என்பனவாம்.

இராகுவின் வேறு பெயர் :—கரும்பாம்பு, தமம், மதிப்பகை, மதியுணி என்பனவாம்.

கேதுவின் வேறு பெயர் :—கதிர்ப்பகை, செம்பாம்பு என்பனவாம்.

கோள்களின் நிறம்

26. இரத்தஞ்சா மளங்கேழ் வெய்யோன்
தவள்வெண் ணிறமே மிந்து
அரத்தமாந் தவளஞ் செவ்வாய்
அறுகுசா மளமே புந்தி
அரித்திரந் தவளஞ் செம்பொன்
அம்புகர் சாம வண்ணம்
வருத்தமில் கதிரோன் மைந்தன்
கறுப்பென வலியரற் கூறே.

(எ-து) ஆதித்தன் சிவப்பும், பச்சையும் கூடிய நிறம்; உச்சத்தை அணையுந்தோறும் சிவப்பு நிறம் ஏறும்; நீசத்தை அணையுந்தோறும் பச்சை நிறம் ஏறும். சந்திரன் வெள்ளை நிறம்; ஆதித்தனை அகல அகல நிறம் ஏறும்; ஆதித்தனை அணைய அணைய நிறம் மங்கும். செவ்வாய் வெள்ளையும் சிவப்பும் கூடிய நிறம்; உச்சத்திலே சிவப்பு நிறம்; நீசத்தில் வெள்ளை நிறம். அதி நீல மில்லாதே ஒத்தவன் புதன்; அஃதாவது, அறுகுப் போலே சாம நிறம். சாமம்—கருப்பு. வியாழன் மஞ்சளும் வெள்ளையுங் கூடிய நிறம். சுக்கிரன் சாம நிறம்; சாமநிறமாவது பச்சை நிறம். சனி கருத்த நிற முடையவன் (எ-று). 4

குறிப்பு:—சினேந்திர மாலை கோள்களின் நிறங்களை

“புகர்புகாரம் சேய்செம்மை பொன்பொன்னும் புந்தி
பகர்பசுமை பான்மதியும் வெண்மை—நிகரில்
விரிகதிர்க்குச் செம்மை முடவுற் கிராகுக்
குரிதருசீ ரொண்கருமை யோர்”

என்று கூறுகின்றது. புகர்-கருமை கலந்த பொன்னிறம். சுக்கிரன் கருமை கலந்த பொன்னிற முடையவன் என்பது கருத்து. ஆனால் சூடாமணி உள்ள முடையான் முதலிய நூல்களில் சுக்கிரன் நிறம் வெண்மை யென்று கூறப்பட்டிருத்தலால் சினேந்திரமாலை உரையாசிரியர் “புகர்வெளிரும்” என்று திருத்திப் பாடல் கொண்டார்.

கோள்களின் நிறமும், கோள்களுக்குரிய
தெய்வங்களும், திசைகளும்.

27. செம்புபால் அரத்தம் பச்சை
மஞ்சள்சித் திரங்க ருப்பாம்
அம்புசன் முதன்மெய்த் தேவர்
அம்பறு முகன்மா லிந்திரன்



வம்புறு சசிவி ரிஞ்சன்
அதிபர்மார்த் தாண்டன் சுங்கன்
கம்புறு சேய ராச்சுன்
களங்கன்மால் பொன்திக் கெட்டே.

(எ-து) ஆதித்தன் செம்பு நிறம்; சந்திரன் வெள்ளை நிறம்; செவ்வாய் அதிசிவப்பு நிறம்; புதன் பச்சைக்கிளி நிறம்; வியாழன் மஞ்சள் நிறம்; வெள்ளி பலவர்ணம்; சனி கருப்பு நிறம்; என்றறிவது.

ஆதித்தனுக்குத் தேவதை ஸ்ரீ அக்கினி; மகாதேவி சந்திரனுக்கு; செவ்வாய்க்குச் சுப்பிரமணியன்; புதனுக்கு மகாவிட்ணு; வியாழனுக்குத் தேவேந்திரன்; வெள்ளிக்குச் சசிதேவி; சனிக்குப் பிரமதேவன் என்றறிவது.

(திசைகள்) ஆதித்தன் கிழக்கு; சுக்கிரன் தென் கிழக்கு; செவ்வாய் தெற்கு; பாம்பு தென்மேற்கு; சனி மேற்கு; சந்திரன் வடமேற்கு; புதன் வடக்கு; வியாழன் வடகிழக்கு என்றறிவது (எ-று). 5

குறிப்பு:—சூரியன் முதலான ஒன்பது கோள்களுக்கும் அடைவே உருத்திரன், சத்தி, சண்முகன், திருமால், பிரமன், இலக்குமி, இயமன், சர்ப்பம், பிரமன் எனும் இவர் தெய்வங்களாம் என்று (அத்தி-சு-27) பலதீபிகை கூறுகிறது. வீமேசுர உள்ள முடையான் என்னும் நூல்,

“இரவி சங்கரன் ஈஸ்வரி திங்கள்சேய்
இனிய கந்தன் இறைதிரு மால்புதன்
குருவ யன்சுரர் கோன்வெள்ளி சுன்னமன்
குலவி ராகு குறிப்பத்திர காளியாம்
மருவு சித்திர புத்திரன் கேதுவாம்”

என்று சிறிது வேறுபடக் கூறுகின்றது. பாட்டில் ‘அம்பு’

RangaRakes tamilnavarasam.com

என்பதற்குச், 'சந்திரனுக்குத் தேவதை நீர்' என்பதே பொருளாம் ; உரையாசிரியர் அம்பிகை என்று பொருள்கொண்டார் போலும்.

தீக்கோள்களும்,
ஆண்பெண் அலிக்கோள்களும், ஐம்பூதக் கோள்களும்,
காரகக் கோள்களும்.

28. பின்மதி சனிசேய் பானு
யுதன் புதன் தீயோர் பேசின்
சுன்னனு அலிக்கோள் சுங்கன்
சோமன்பெண் மற்றோ ராணும்
வன்னழல் மண்வா னப்பு
வாயு சேய் முதலோர் நப்பன்
அன்னையே பிறந்தார் பந்து
சேய்பெண்சா வருக்கன் முன்னோர்.

(எ-து) (அமரபக்கச்) சந்திரனும், சனியும், செவ்வாயும், ஆதித்தனும் பாவக்கிரகங்கள். இவர்களோடு கூடிய புதனும் பாவன். 'சுன்னனு' என்றது, சுன்—சனி ; அனு—புதன் ; அலிக்கோள்—சனியும் புதனும் அலிக்கிரகம் ; சுக்கிரனும், சந்திரனும் பெண் கிரகம் ; ஆதித்தனும், செவ்வாயும், வியாழனும் புருடக்கிரகம் என்றறிவது.

செவ்வாய் அக்கினி ; புதன் மண் ; வியாழன் ஆகாசம் ; சுக்கிரன் அப்பு ; சனி வாயு இந்தப்படி பஞ்ச பூத (க்கோள்கள்) அறிவது.

ஆதித்தன் பிதுர்க்காரகன் ; சந்திரன் மாதுரு காரகன் ; செவ்வாய் சகோதர காரகன் ; புதன் பந்து காரகன் ; வியாழன் புத்திர காரகன் ; வெள்ளி களத்திர காரகன் ; சனி நிரியாண காரகன் (எ-று). 6

RangaRakes



குறிப்பு :— பாவக் கோள்களைக் கூறியதால் இவர்களல்லாத வியாழனும், வெள்ளியும் சுபரனவர். நல்லவரோடு கூடிய புதன் நல்லவனாவான். சுக்கில பக்க அட்டமியின் பிற்பாதி முதல் அமரபக்க அட்டமியின் முற்பாதிவரைச் சந்திரன் சுபனாவான். இராகுவும், கேதுவும் பாபிகள்.

புதன் ஸ்திரீ நபும்சகன் ; சனி புருஷநபும்சகன்,

ஐம்பூதக் கோள்களில் சூரியன் அக்கினி, சந்திரன் அப்பு என்று கூறுவதும் உண்டு. தமிழ்ச் சாதகாலங்காரம் " செவ்வாய் மண், சுக்கிரன் அப்பு, குரு அக்கினி, புதன் வாயு, சனி ஆகாயம் " 58 என்று வேறுபடக் கூறுகிறது.

கோள்களின் குலமும் குணமும்.

29. பொன்புக ருடன்சேய் பானு
புதன்மதி மறையோ ராதி
மன்னிய வருணம் மூன்றும்
மந்தனந் தரமாம் வர்ணம்
புன்புரை கதிர்பொன் சாந்தம்
புகர்புத னிராச தங்கள்
சுன்குசன் றமோகு ணங்க
ளாமெனச் சொல்வர் நல்லோர்.

(எ-து) குருவும், சுக்கிரனும் பிராமணன் ; செவ்வாயும், ஆதித்தனும் சத்திரியன் ; சந்திரனும், புதனும் வைசியன் ; சனி அந்தர சாதிகள் ; சனி பெலவீனமாகில் சண்டாள வருணம் என்றறிவது.

சந்திரன், சூரியன், வியாழன் சாந்த குணம். சுக்கிரன் புதன் இராசதகுணம். சனி, செவ்வாய் தமோ குணமாம் (எ-று). 7

குறிப்பு:— சாராவளி சிறிது வேறுபட்டுப் புதனைச் சூத்திர சாதி என்று கூறுகிறது (அத் 4-சு-14) வீமேசுர உள்ளமுடையான் " இரவியும், குசனும் சத்திரியர் ; குருவும் மதியும் பிராமணர் ;



tamilnavarasam.com

புதன் வைசியன்; இராகுவும், வெள்ளியும் சூத்திரர்; சனியும், கேதுவும் கீழ்ப்பட்ட சாதி" (130) என்று கூறுகிறது. தமிழ்ச் சாதகாலங்காரம் "ஆதவன் அரசன், அம்புலி வைசியன், சேய் அரசன், புதன் வைசியன், வியாழன் பிராமணன், சுக்கிரன் அந்தணாளர், சனி சூத்திரன், இராகு கேதுக்கள் சனகுலம்" என்று கூறுகிறது (56).

கோள்களின் இயல்பு
சூரியன், சந்திரன்.

30. மதுபிங் கலக்கண் சதுரசமன்
பித்த தேகன் மயிரற்பன்
கதிரோன் விருத்தன் கபவாதன்
மிருது வசனன் சிரீக்கண்ணன்
புதிய நயனன் பத்தியுளன்
பொருந்து மதிக்கு வலியிலையேல்
விதியி லிவைக ளெலாங்குறையும்
வேலைப் பழித்த கயல்விழியாய்.

(எ-று) சூரியன் தேன் போலே பொன்னிற முடைய கண்ணன்; நீளமும் அகலமும் சமமுடையவன்; பயித்திய தேகன்; தலைமுடி குறைந்திருக்கும்.

சந்திரன் விருத்த சரீரன்; சிலேத்தும வாத ரோகி; மிருது வசனன்; ஸ்திரீயுடைய வாக்கை அநுசரிப்பான்; அழகிய கண்ணுடையவன்; புத்திமான். சந்திரனுக்குப் பலம் இல்லையாகில் இக் குணங்களெல்லாம் குறைந்திருக்கும் (எ-று). 8

குறிப்பு:—சாராவளி சூரியனைத் தேன் போன்ற பிங்கல வர்ணன், தற் சதுரமான சரீர முடையவன், பித்தப் பிரகிருதி யுடையவன், கருண்யுருக்கிற குறைந்த தலைமயிரை உள்ளவனென்று கூறுகிறது. (அத்-4-சு.-21)



கோள்களின் இயல்பு: செவ்வாய், புதன்.

31. சிவந்த கண்ணன் குரூரனெழிற்
றேக னுதாரன் மனஞ்சபலன்
உவந்த பித்த னிடைமெலிந்தோன்
செவ்வாய்ச்; சிட்ட னுபயார்த்தன்
கவர்ந்துாண் பிரியன் கபவாத
பித்த தேகன் கவிவல்லோன்
பவந்த மனத்தன் புதனுகும்
வலியா லிவைகள் பகர்ந்திடுமே.

(எ-து) செவ்வாய் சிவந்த கண்ணன்; கோபி; அழகுடையவன்; உதாரகுணன்; பயித்தியன் (மனஞ்சபலன்); பித்த ரோகி இடைமெலிந்தவன் என்றறிவது.

புதன் சிரேட்ட வாக்குடையவன்; விநோதன் (உபயார்த்தன்); பட்சணப் பிரியன்; வாத பித்த சிலேத்தும ரோகி; வித்தியா சாத்திர வல்லவன்; புத்திமான். (புதன்) வலியுடையவனாகில் இச் சொன்ன சுபபலன்கள் அதிகமாம் (எ-று). 9

குறிப்பு:—சாராவளி செவ்வாயைத் திடமான சரீர முள்ளவனென்றும், ஸ்திரமில்லாதவனென்றும் குறிப்பிடும். (அத்-4,-சு.-23) புதனை இனிய சொல்லன் என்றும், உற்றியுடன் கூடிய அல்லது விரும்பத்தக்க, அல்லது வெளிப்படையான சொற்களை யுடையவனென்றும், வாத பித்த கபங்கள் சமமாயுள்ளவனென்றும் குறிப்பிடும். (அத்-4-24).

கோள்களின் இயல்பு: வியாழன், சுக்கிரன்.

32. கண்ணு முடலும் பொன்னிறத்திற்
றடித்த தேகன் கபமுள்ளோன்
எண்ணும் புத்திய னெண்குருவாம்
எழிலார் வடிவன் கபவாதன்

RangaRakes tamilnavarasam.com

கண்ணுஞ் சுகியன் சிரிகண்ணன்
கறுத்து வளைந்த கவிப்புகரோன்
பண்ணுங் குழலும் யாழினையும்
பழித்த மொழிச்செவ் வாய்மாதே.

(எ-து) வியாழன் பொன்னிறமுடைய கண்ணன் ; பொன்னிறமுடைய தேக முடையவன் ; பெருத்த சரீரன் ; சிலேத்தும முடையவன் ; அதிபுத்தியுடையவன் என்றறிவது.

சுக்கிரன் அழகுடைய சரீரன் ; சிலேத்தும வாத தேகன் ; சுகமுடையவன் ; சோபன நேத்திரன் ; கறுத்து வளைந்த தலைமுடியுடையோன் (எ-று). 10

குறிப்பு :— இங்கே தடித்த தேகன் என்றது சோல் கொழுப்பு நிறைந்த தூலதேகன் என்று சாராவளி (4-25) கூறும். ' தவிர் ' என்னுஞ் சொல் பிங்கல நிகண்டில் ஆண்மயில் மயிராகக் கூறப்பட்டுள்ளது.

கோள்களின் இயல்பு ; சத்த தாதுக்கோள்.

33. அலைசஞ் சலன்பிங் கலக்கண்ணன்
ஆகம்மெலிந்து நீண்டு யர்ந்தோன்
மலைமா ருதனும் பற்பெருத்தோன்
பரந்த ரோமன் சனியாகும்
நிலையில் மந்தன் கதிர்மதிமால்
கங்கன் பொன்சேய் கிரல்நிறையே
உலைவில் நரம்பென் பிரத்தந்தோல்
உறுசுக் கிலமே நிணம்மச்சை.

(எ-து) சனி சஞ்சலன் ; குரூரலிச்ச கண்ணன் ; மெலிந்த தேகமுடையவன் ; நீண்ட சரீரன் ; வாத ரோகி ; பருத்த பல்லுடையவன் ; பெருத்த உரோமன் என்றறிவது.



சனி நரம்பு ; சூரியன் அத்தி ; சந்திரன் இரத்தம் ; புதன் தோல் ; சுக்கிரன் சுக்கிலம் ; வியாழன் நிணம் ; செவ்வாய் மச்சை. இவை முறையே சத்த தாது என்றறிவது (எ-று).

குறிப்பு :— சாராவளி சனியினைப் பிங்கல நிறமுடையவனென்றும், ஆழமான கண்களுடன் கூடியவனென்றும், நீண்டிருக்கும் நகம்பற்களுடன் கூடியவனென்றும் (4-27) கூறும். பலதீபிகை சனியினை மெலிந்து நீண்ட தேகி, திமிரான மயிரோடு கூடிய தேகி என்று கூறும் (அத்-2 சு-14)

கோள்களின் இருப்பிடமும், ஆடையும்,
உலோகமும், பருவங்களும்.

34. இரவி முதலா யைஞ்சலந்தீ
விகாரங் கோச மனையெச்சில்
பெரிது புதுமை தீநவைவு
நடுவு பலத்த கிழிந்ததுகில்
கருது செம்பு மணிபொன்வெண்
கலமே வெள்ளி முத்திரும்பாம்
தெரிசுன் கங்கன் சேய்மதிமால்
பொன்திரேக் காணஞ் சசியாதி.

(எ-து) (கிரகயிருப்பிடங்கள்) ஆதித்தனுக்குத் தெய்வத்தானம் ; சந்திரனுக்குச் சலத்தானம் ; செவ்வாய்க்கு அக்கினித்தானம் ; புதனுக்கு விகாரத்தானம் ; விகாரமாவது ஆடல் பாடல் உள்ள இடம் ; வியாழத்திற்குக் கோசத்தானம் ; கோசமாவது பண்டாரத் தானம் ; சுக்கிரனுக்குச் சயனத்தானம் ; சனிக்கு எச்சில் தானம். சனி நீசனுகில் நிதன பூமி என்றறியவும். அட்டவர்க்கத்திற்கு இந்தத் தானம் யோசிக்கவும்.

(இனி) வத்திரங்கள் (ஆடைகள்) ஆதித்தனுக்குப் பெருத்த வத்திரம் ; சந்திரனுக்குக் கோடித்துண்டு ;

RangaRakes tamilnavarasam.com

செவ்வாய்க்குத் தீயினால் பொசுங்கிய ஆடை ; புதனுக்கு நீரில் நனைந்த ஆடை ; வியாழனுக்கு நடுத்தரமான ஆடை ; சுக்கிரனுக்குப் பெலத்த வத்திரம் ; சனிக்குக் கிழிந்த வத்திரம் என்றறிவது.

ஆதித்தன் செம்பு ; சந்திரன் இரத்தினம் ; செவ்வாய் பொன் ; புதன் வெண்கலம் ; வியாழன் வெள்ளி ; சுக்கிரன் முத்து ; சனி இரும்பு என்றறிவது.

(இனித்) திரேக்காணத்திலே சசியாதி ருது வறியவும். சனித் திரேக்காண முதிக்கில் சசி (சிசிர) ருது ; சுக்கிரன் திரேக்காண முதிக்கில் வசந்த ருது ; குசன் திரேக்காண முதிக்கில் கிரீஷ்ம ருது ; சந்திரன் திரேக்காண முதிக்கில் வருஷருது ; புதன் திரேக்காண முதிக்கில் சரருது ; குருத் திரேக்காண முதிக்கில் ஏமந்தருது (எ-று). 12

குறிப்பு:—சினேந்திரமாலை கோள்களின் சேர்விடத்தைப் பற்றிச் "சூரியன் அங்காரகன் சனி இவை மூன்றிற்குங் காடு ; சந்திரன் சுக்கிரன் இவையிரண்டிற்கும் நீர் ; புதன் குரு இவையிரண்டிற்கும் ஊர் ; பாம்பிற்கு மூங்கில் முதலிய (புற்று) உட்டுளையான இடங்கள்" (81) என்றும் "சூரியன் குரு இவை இரண்டிற்கும் பூசை வீடு அல்லது மேலிடம், அங்காரகனுக்குப் பூமி, சந்திரன், சுக்கிரன் இவையிரண்டிற்கும் நீர், புதனுக்குப் வயல், சனிக்கு ஓமகுண்டம், அடுப்பு, அடுமனை, பாம்பிற்கு மரப்பொந்து, வளை" 82 என்று கூறும்.

இந் நூலின் நட்ட சாதக அத்தியாயத்தில் இரண்டாம் பாட்டில் சூரியனுக்குக் கிரீஷ்ம ருது என்று கூறப்பட்டிருக்கிறது. கோள்களால் ருது அறியும் முறை நஷ்ட சாதகத்திற்குப் பயன்படும். அதனை அங்கே அறிக. சூரியனுக்குக் கிரீஷ்ம ருது வென்பது பிறர் மதம் என்று சாராவளி கூறுகிறது.



கோள்களின் நோக்கு.

35. திரிய தசங்கள் திரிகோணம்
சதுர சிரயஞ் சத்தமங்கள்
உரிய கால்கால் நோக்கதிகம்
உணர்க முழுநோக் களவுமிவை
திரிய முகமும் அதோமுகமும்
சேரு மூர்த்தஞ் சமமுகங்கள்
அரிய சனிபொன் சேய்மற்றோர்
முழுநோக் காகும் அடைவடைவே.

(எ-து) திரிய தசம், திரிகோணம், சதுரசிரயம், சத்தமம் (என்னும் இவ்விடங்களில் நிரல் நிறையே) சர்வக் கிரகங்களும் ஒன்றுக்கொன்று கால் நோக்கு அதிகம்.

அவையாவன :—எல்லாக் கிரகங்களுக்கும் மூன்றாமிடம், பத்தாமிடம் கால் நோக்கு ; ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் அரை நோக்கு ; நான்காமிடம் எட்டாமிடம் முக்கால் நோக்கு ; ஏழாமிடம் முழு நோக்கென் றறிவது ; ஆகையால், திரியதசம் கால் நோக்கு ; திரிகோணம் அரை நோக்கு ; சதுரசிரயம் முக்கால் நோக்கு ; சத்தமம் முழு நோக்கு (என்று அறிவது).

விஷேடன திட்டி அறியும்படி :—சனி திரியமுகமும், குரு அதோமுகமும், செவ்வாய் ஊர்த்துவ முகமும், மற்றுள்ளவர் சமமுகமும் (நோக்குவர்). திரியதசத்தில் சனி முழு நோக்கு ; திரிகோணத்தில் வியாழம் முழு நோக்கு ; சதுரசிரயத்தில் செவ்வாய் முழு நோக்கு ; சத்தமத்தில் எல்லோர்க்கும் முழு திருட்டி (எ-று).

குறிப்பு :—திரிய தசம்—மூன்றும் பத்தும். திரிகோணம் இங்கே ஐந்து ஒன்பது. வடமொழியில் நான்கிற்கும், எட்டிற்கும்

RangaRakes tamilnavarasam.com

சதுரஸ்ரம் என்று பெயர். அது தமிழில் சதுரசிரயம் என்று திரிந்தது.

கோள்களின் வேறுபட்ட நோக்கினை "எல்லோன் செவ்வாய் மேல்நோக்காம், இந்தும் குருவும் சமபார்வை, வெல்லும் புதற்கும் வெள்ளிக்கும் விழிபக் கத்தே நோக்கியிடும், நல்ல விராகு சனிதமக்கே நயனங் கீழ்நோக் காயிடுமே" (471) என்று சாதகாலங்காரம் கூறுகிறது.

சூடாமணி உள்ள முடையான் "உதய விராசியும் ஏழாமிராசியும் முழு நோக்கு; ஒன்பதாமிராசி முக்கால் நோக்கு; ஐந்தாமிராசி அரை நோக்கு; பத்து நான்காமிராசி கால் நோக்கு; மூன்று பன்னொன்றுமிராசி அரைக்கால் நோக்கு; இரண்டு ஆறு எட்டு பன்னிரண்டாமிராசி நோக்கில்லை என்னும்.

இவையெல்லாம் தத்தம் ஆட்சி நிலங்களில் நின்ற போது இதிற் சொன்ன நோக்கு முழுபலம்; நட்பில் நின்ற போது சொன்னவிலற்றில் நாலிலொன்று குறையும்; உச்சத்தில் பத்திலொன்று ஏறும்; பகையில் ஒன்று பாதி; நீசத்தில் ஒன்று கால் இவ்வகையெல்லாம் நோக்கறிக" (214) என்று இந் நூல் கூறுகிறது.

கோள்களின் காலமும் சுவையும்.

36. அயனம் கணமே தினமிருது
 மாதம் பக்க மாண்டிவைகள்
வெயிலோன் முதலேழ் கோட்களுக்கும்
 அடைவே யெண்ணி விரித்திடுக
பயிலு மெரிப்புப் புடன்கைப்புப்
 பலவா மிரச மிரசமினிப்
பயிலும் புளிப்புத் துவர்ப்பேமும்
 அருக்கன் முதலா மாரணங்கே.

(எ-து) அயனம், கணம், தினம், இருது, மாதம், பக்கம், யாண்டு இவை ஆதித்தன் முதல் ஏழு கிரகங் களுக்குங் காலம். அயனம்—ஆறுமாதம்; க்ஷணம்— இரண்டு நாழிகை; தினம்—ஒரு நாள்; இருது— இரண்டு மாதம்; பக்கம்—பதினைந்து நாள்; யாண்டு— ஒரு வருடம். இவை அடைவே ஆதித்தனுக்கு ஆறு மாசம், சந்திரனுக்கு இரண்டு நாழிகை, செவ்வாய்க்கு ஒரு நாள், புதனுக்கு இரண்டு மாசம், வியாழத்திற்கு ஒரு மாசம், வெள்ளிக்குப் பதினைஞ்சுநாள், சனிக்கு ஒரு வருடம் இவை காலம் என்றறிவது.



ஆதித்தனுக்கு எரிச்சது (உறைப்பு), சந்திரனுக்கு உப்பு, செவ்வாய்க்குக் கசப்பு, புதனுக்கு எல்லா இரசமும் சமன் கூடியது, வியாழத்திற்குத் தித்தித்த மதுரம், சுக் கிரனுக்குப் புளிப்பு, சனிக்குத் துவர்ப்பு (எ-று). 14

குறிப்பு:—க்ஷணத்தைப் பிறர் பத்து விநாடி என்பர். சந்திரனுக்குச் சூடாமணி உள்ளமுடையானிலும் (324) சினேந் திரமாலையிலும் (86) ஒரு முகூர்த்த நேரம் கூறப்பட்டுள்ளது.

கோள்களின் காலத்தைப்பற்றிச் சூடாமணி உள்ள முடையான் "சந்திரனுக்கு ஒரு முகூர்த்தம், செவ்வாய்க்கு ஒரு நாள், வெள்ளிக்குப் பதினைந்து நாள், வியாழனுக்கு ஒரு மாதம், புதனுக்கு இரண்டு மாதம், ஆதித்தனுக்கு ஆறு மாதம், வியாழ னுக்கு ஒரு மாதம், சனிக்கு ஓராண்டு" (324) என்று கூறுகிறது. சினேந்திர மாலை சனி பாம்பிற்கு ஓராண்டு என்றும், சாராவளி சந்திரனுக்கு க்ஷணம் என்றும் வேறுபடக் கூறுகிறது.

கோள்களின் நட்பு

37. பகலோற் குறவு பொன்; மதிக்குப்
 பந்து புதன்பொன்; சேய்க்குறவு
புகர்மால்; புதனுக் குறவுகதிர்
 ஒழிந்தோர் நட்புப்; பொன்னவனுக்
கிகல்சே யொழிந்தோர் பந்து; புகர்க்
 கினியர் சனிசேய் புதன்பொன்னும்
திகழுஞ் சனிக்கு நட்புப்பொன்
 புகர்மால் என்பர் தேர்ந்துணர்ந்தோர்.



RangaRakes tamilnavarasam.com

(எ-து) ஆதித்தனுக்கு உறவு வியாழம்; சந்திரனுக்கு உறவு புதனும் வியாழனும்; செவ்வாய்க்கு உறவு வெள்ளியும் புதனும்; புதனுக்கு உறவு ஆதித்தனொழிந்த மற்றவ ரெல்லோரும்; வியாழத்திற்குச் செவ்வா யொழிய மற்றவரெல்லோரும் உறவு; சுக்கிரனுக் குறவு சனியும், செவ்வாயும், புதனும், வியாழனும்; சனிக்குறவு வியாழனும், வெள்ளியும் புதனும் (எ-று). 15

குறிப்பு:—தமிழ்ச் சாதகாலங்காரம் சூரியனுக்குத் திங்கள், செவ்வாய் குருவையும், சந்திரனுக்குப் புதனையும் சூரியனையும், செவ்வாய்க்குச் சூரியன், சந்திரன் குருவினையும், புதனுக்குச் சுக்கிரன் சூரியனையும், வியாழனுக்குக் கதிர், திங்கள், செவ்வாயினையும், சுக்கிரனுக்குச் சனி புதனையும், சனிக்குச் சுக்கிரனையும், புதனையும் உறவென்று கூறும் (25).

கோள்களின் நைசர்க்கிக நட்பும், பகையும், சமமும்.

36. பருதிக் கிகலார் சனிசுங்கன்
சமம்மால் பகராக் கோளுறவாம்
வருமிந் தினுக்குக் கதிர்புந்தி
நட்பு மற்றோர் சமனாகும்
குருதிக் குறவு கதிர்மதிபொன்
கொடிய பகைமால் சமன்புகர்சுன்
அருணற் குறவு பிருகுரவி
சமன்சேய் பொன்சுன் அரிமதியே.

(எ-து) ஆதித்தனுக்குப் பகை சனி, சுக்கிரன்; சமன் புதன்; மற்றவர் உறவு. சந்திரனுக் குறவு சூரியன், புதன்; மற்றவர் சமன். செவ்வாய்க்கு உறவு சூரியன், சந்திரன், வியாழன்; சத்துரு புதன்; சமன் சுக்கிரன், சனி. புதனுக் குறவு சுக்கிரன், சூரியன்; சமன் செவ்வாய், வியாழன், சனி; சத்துரு சந்திரன் (எ-று). 16



இதுவும் அது

39. குருவுக் குறவு கதிர்மதிசேய்
கொடிய பகைமால் புகர்சமன்சுன்
பிருகுக் குறவு புதன்சனியாம்
பேசுஞ் சமன்பொன் சேய்மற்றோர்
அரிக ளாகும் சனிக்குறவே
அருணன் சுங்கன் சமனும்பொன்
தெரியிற் பகைமற் றவராகும்
தேனி னினிய மொழிமாதே.

(எ-து) வியாழத்திற்கு நட்புச் சூரியன், சந்திரன், செவ்வாய்; பகைவர் புதன், சுக்கிரன்; சமன் சனி. சுக்கிரனுக்கு நட்பு புதன், சனி; சமன் வியாழன், செவ்வாய்; மற்றவர் பகைவராவார். சனிக்கு நட்பு புதன், சுக்கிரன்; சமன் வியாழன்; மற்றவரெல்லாம் பகைவராம் (எ-று).

இது நைசர்க்கிகச் சத்துரு மித்துருத்துவம் என்றறிவது. (17)

கோள்களின் தற்காலச் சத்துருமித்துருத்துவம்.

40. சுகம்மூன் றிரண்டு வியமாயந்
தொழிலிற் றற்கோட் கிதிலுங்கோள்
நகைசேர் நட்பு மற்றைபகை
நட்பும் நட்பும் அதிநட்பாம்
பகையும் பகையும் அதிபகையாம்
பகையும் நட்புஞ் சமனாகும்
இகலுஞ் சமனும் இகலாகும்
நட்புஞ் சமனும் நட்பென்றே.

(எ-து) தற்காலச் சத்துரு மித்துருத்வம் அறியும் படி:—ஆதித்தன் முதலான கிரகங்களுக்கெல்லாம் அவரவர் நின்ற இராசிக்கு நான்காமிடம், மூன்றாமிடம்,

RangaRakes tamilnavarasam.com

இரண்டாமிடம், பன்னிரண்டாமிடம், பதினோராமிடம், பத்தாமிடம் இந்தத் தானங்களில் நின்ற கிரகங்கள் மித்துருவாம்; மற்றத் தானங்களில் நின்ற கிரகங்கள் சத்துருவாம் என்றறிவது.

நைசர்க்கிகத்திலும், தற்காலத்திலும், மித்துருவும், மித்துருவு மாகில் அதிமித்துருவென்றும், சத்துருவும், சத்துருவு மாகில் அதிசத்துருவென்றும், சத்துருவும் மித்துருவு மாகில் சமன் என்றும், சத்துருவும் சமனு மாகில் சமன் என்றும், மித்துருவும் சமனுமாகில் நட்பென்றும் அறிக (எ-று). 18

### ஆறு வலிவுகளில் தான வலியும் திக்கு வலியும்.

41. உச்சம் மூலஞ் சுயமதிநட்
புறவு சமன்மா பகைபகைகள்
வைச்ச தான வலியடைவிற்
றுனுஞ் சட்டு வர்க்கத்தாம்;
பச்சை செம்பொன் னுதயத்து
வலியாம்; பருதி சேய்தெற்காம்;
மெச்சுஞ் சனிமேற்; கிந்துபுகர்
வடக்காந் திக்கு மெல்லியலே.

(எ-து) தான பெலம் அறியும்படி :—(கோள்கள்) தங்கள் தங்கள் உச்சத்தில் பெலம் பூரணம்; மூலத்திரிகோணத்தில் பெலம் முக்கால்; ஆட்சியிற் பெலம் அரை அதிமித்துருபெலம் காலேயரைக்கால்; மித்துரு பெலம் கால்; சமன் பலம் அரைக்கால்; சத்துரு வீட்டிற் பலம் வீசம் (அரைக்காலிற் பாதி); அதிசத்துரு வீட்டில் நின்றவர்க்குப் பலம் (அரை வீசம்) அரைமா அரைக்காணி; நீசத்தில் நின்றவர்க்குப் பெலமில்லை. இந்தப்படிச் சேத்திராதி சட்டு வர்க்கங்களுக்கும் தான பெலம் அறிவது.



திக்குப்பெலம் அறியும்படி :—புதன் வியாழன் உதயத்திற் (கிழக்குத்திக்கிற்) பெலம் பூரணம்; சூரியன் செவ்வாய் பத்தாமிடத்தில் நிற்கில் தெற்குத்திக்கு வலி; சனி ஏழாமிடத்தில் நிற்கில் மேற்குத்திக்கு வலி; பூரண சந்திரன், சுக்கிரன் நான்காமிடத்தில் நிற்கில் வடக்குத் திக்கில் வலி (எ-று).

தான வலியுந் திக்கு வலியும் முற்றும். 19

குறிப்பு :—தான வலியில் உச்சம் நீங்கியவற்றை ஏழு வர்க்கத்தினுடைய (சப்தவர்க்கஜ) பலம் என்று கூறுவர். (1) மூலத்திரிகோணத்தி லிருந்தால் முக்காற் பலம்; இதற்குக் கலை 45. (2) ஆட்சியிலிருந்தால் அரைப்பலம்; இதற்குக் கலை 30. (3) அதிநட்பிலிருக்கின் காலே அரைக்காற் பலம்; இதற்குக் கலை 22½ (4) நட்பிலிருக்கிற் பலம் கால்; இதற்குக் கலை 15. (5) சமவிராசியிலிருப்பின் அரைக்கால் பலம்; இதற்குக்கலை 7½. (6) சத்துரு வீட்டிலிருப்பின் வீசம் பலம்; இதற்குக் கலை 3¾ (7) அதி சத்துரு வீட்டிலிருப்பின் அரைவீசம் பலம்; இதற்குக் கலை 1⅞ ஆகும். இத் தான பலம் சேத்திராதி சட்வர்க்கங்களுக்கும் (ஆறுவர்க்கங் கட்கும்) கொள்வது. சட்வர்க்கங்களை இந் நூல் பத்தாம் பாட்டால் அறிக.

### சேஷ்டா பலம்.

42. அயன பலமுத் தரவயனத்
தருக்கன் சிதன்சேய் பொன்வலியாம்
செயல்சுன் பிறைதெட் சணவயனம்
வலியால் என்றுந் திகள்வலியன்
பயிலு முயுத்தந் தனில் வடக்குப்
பதிகோள் வலிது பருதியைவிட்
டுயருங் கிரண வர்த்தனையர்
சேட்டா வலியா ரொண்டொடியே.

(எ-து) அயன பலம் அறியும்படி :—உத்தராயணத்தில் ஆதித்தன், வெள்ளி, செவ்வாய், வியாழன்

RangaRakes tamilnavarasam.com

வலியன். தெக்கிணாயனத்தில் சனியும், சந்திரனும் வலியன். புதன் எப்போதும் வலியன் என்றறிவது.

உயுத்தத்தில் வடக்கே நின்ற கோள் வலிபெறும் என்றறிவது.

ஆதித்தனைவிட்டு மிகுதியுங் கிரணவர்த்தனை யுடையவன் சேஷ்டா வலியுடையன் (எ-று). 20

குறிப்பு :—சேஷ்டா பலம், அயன பல மென்றும் சேஷ்டா பல மென்றும் இருவகையாம். அவற்றுள் அயன பலமாவது :—சூரியன், செவ்வாய், குரு, சுக்கிரன் இவர்கட்குத் தட்சணாயனத்தில் (கடகாதியில்) பலம் குறையும் (இரணமாம்); உத்தராயனத்தில் (மகராதியில்) பலம் கூடும் (தனமாம்). சந்திரன், சனி இவர்கட்கு உத்தராயனத்தில் பலம் குறையும். தட்சணாயனத்தில் பலம் கூடும். புதனுக்கு எப்பொழுதும் பலமாம்.

கோள்களின் போர் (கிரக உயுத்தம்) சூரிய சந்திரர்க்கு இல்லை. செவ்வாய் முதலான ஐந்து கோள்களுக்கே உண்டு. போர் உண்டாகிற காலம் ஒரேயிராசியில், ஒரேபாகையில், ஒரே கலையில் இரண்டு கோள்கள் சேர்ந்தால் அப் போது போர் தொடக்கமாம். அவ்வாதில்லையாயின் போரில்லை என்க இதனை,

" கொங்கலர் குசாதிபஞ்சக் கிரகமொரு காலில்
  கூடினூற் கிரகயுத்தம் ; எதிர்நடக்குங் கிரகம்
துங்கமிகு வெற்றியாம் வக்கிரதக் கிரகம்,
  தோல்வியாம்; இவையிரவி மதியுங்கூ டாதே
சிங்கமுத லாதிரா சியிலிருந்த கிரகம்
  சிறந்துவருங் கிரகத்தைத் திரமாகச் செயிக்கும்
இங்கிதமாங் கும்பமுத லாதிராசி தம்மில்
  இருந்தகிர கந்தன்னை வருங்கிரகம் வெல்லும் "

" இனியவெள்ளி தெற்கதனி லுற்றகோள் வடக்கில்
  எய்தினூற் றேல்வையில்லை யென்னவே பகர்வர் "

என்னும் சாதகசிந்தாமணிப் (132, 133) பாட்டால் அறிக.



கால பலமும், நிசர்க்க பலமும்.

43. இரவில் மதிசேய் சனிவலிமால்
  என்றும் வலிமற் றவரெல்லின்
உரவர் குருரர் பிற்பக்கம்
  உயர்ந்தோர் வலியாம் முற்பக்கம்
கருதும் வாரம் மதியாண்டும்
  ஓரை யுடையோர் காலவலி
பருதி மதிசுக் கிரன்பொன்மால்
  சேய்சுன் நிசர்க்கம் பகரேழால்.

(எ-து) இராத்திரியிற் சந்திரன், செவ்வாய், சனி இவர்கள் பலம் ; புதனுக்கு இராத்திரியும் பகலும் பலம் ; மற்றுள்ளவர் பகலிற் பலமுடையவர்.

குரூரக் கிரகங்கள் அமரபட்சத்திற் பலம் ; சவுமியக் கிரகங்கள் பூருவபட்சத்திற் பலம் ; வாரமும், மாசமும், வருடமும், கால வோரையும் உடையவர்களுக்குக் கால பலம் உண்டென் றறிவது.

நிசர்க்கபலம் அறியும்படி :—ஆதித்தனுக்குப் பலம் பூரணம் ; சந்திரனுக்கு ஏழில் ஒன்று குறையும் ; சுக்கிரனுக்கு ஏழில் இரண்டு குறையும் ; வியாழனுக்கு ஏழில் மூன்று குறையும் ; புதனுக்கு ஏழில் நான்கு குறையும் ; செவ்வாய்க்கு ஏழில் ஐந்து குறையும் ; சனிக்கு ஏழு கூறில் ஆறுகுறையும். இவை நிசர்க்க பலம் (எ-று).

குறிப்பு :– காலபலமானது தினராத்திரி பலமென்றும், பட்சபலமென்றும், தினராத்திரித் திரிபாக பலமென்றும், வருட, மாச, தின, ஹோரா பலமென்றும் நான்கு வகையாகும். அந் நான்குள் தினராத்திரித்திரிபாகபலம் நீங்கலாக ஏனைய மூன்றும் இப் பாட்டில் முதலிற் கூறப்பட்டுள்ளன.

RangaRakes tamilnavarasam.com

நிசர்க்க பலமாவது ;— சனி, செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சந்திரன், சூரியன் இந்தக் கோள்கள் முறையே ஒருவரைவிட ஒருவர் பலமுள்ளவராவார். இவருள் சூரியனுக்கு மட்டும் முழுப்பலம் உண்டு. மற்றக் கோள்களுக்கு மேற் சொன்ன முழுப்பலத்தில் ஒவ்வொரு கூறு குறைந்து கொண்டே வரும். (சாராவலி-அத்-4-சுலோ-40.)

இவ் வத்தியாயத்திற் கூறியவை

44. சொல்லிய கோள்வி திப்புந்
 தொழில்பெயர் நிறங்கள் தெய்வம்
புல்லிய திசைகள் ஆண்பெண்
 பூதங்கா ரகங்கு லங்கள்
மல்லலங் குணங்கள் நோக்கும்
 வருநட்பு வலிகள் யாவும்
நல்லவன் சுதனி லிங்கள்
 நவின்றனன் உணர்க வென்றே. 22

இரண்டாவது
கிரக பேத அத்தியாயம்
முற்றிற்று.

மூன்றாவது

## வியோனி சென்ம அத்தியாயம்

வியோனி பிறப்பும் ; அவற்றின் உருவமும்.

45. விளங்கு வியோனி சென்மங்கள்
 மேவுங் கிலீபர் சதுட்டயத்திற்
றுளங்க நோக்கச் சுபர்மெலியச்
 சோருந் தீயோர் வலியெய்த
உளங்கொ ளலிக ளுத்திருட்டி
 வியோனி சென்ம முதிக்குமிவை
களங்க ளெய்துந் துவாதசக்கால்
 அதற்குச் சமனுங் காரிகையே.

(எ-து) வியோனி சென்மம் அறியும்படி :—
வியோனி சென்மமாவது. நாலுவிதமா யிருக்கப்பட்ட செந்துக்களினுடைய சென்னம். கிலீபர்—நபுஞ்சகக் கிரகம். 'சதுட்டயத்தில் துளங்க நோக்க' என்பது கேந்திரத்தில் இருக்க (துலங்க ?) நோக்க என்க. 'சுபர் மெலிய' என்பது, சுபக்கிரகங்கள் பலவீனமாக. 'தீயோர் வலி எய்த' என்பது, பாவக்கிரகங்கள் பலவான்களாக என்க. அலிக்கிரகமான சனியும், புதனும் இலக்கினத்தில் நிற்கத்தான் நோக்கத்தான் செய்ய, அப்போது செனிக்கப்பட்டது வியோனி சென்மமாய்ப் பிறக்கும். 'களங்கள் எய்தும் துவாதசக்கால் அதற்குச் சமனும்' என்றது, சந்திரன் நின்ற இராசித் துவாதசாங்கிச ரூபமாகச் சென்மிக்கும்.

சந்திரன் நின்ற இராசித் துவாதசாங்கிசம் மேட மாகில் ஆடு, ஒட்டகங், கழுதை ; இடப துவாதசாங்கி



RangaRakes tamilnavarasam.com

சத்தி லாகில் காளை, பசு, மகிடம் ; கர்க்கடகத் துவாத சாங்கிசத்தி லாகில் நண்டு ; சிங்க துவாதசாங்கிசத்தி லாகில் சிங்கம் வியாக்கிராதி ; விருச்சிகத் துவாதசாங்கி சத்தி லாகில் தேள், வண்டு, சர்ப்பாதிகள் ; தனுசின் அபரார்த்த துவாதசாங்கிசத்தி லாகில் யானை, குதிரை கள் ; மகரப் பூருவார்த்த துவாதசாங்கிசத்தி லாகில் மான், முதலை, தவளை முதலானவை ; மீனத் துவாத சாங்கிசத்தி லாகில் மீன், மச்சம் முதலானவை ; தனுசின் பூர்வார்த்த துவாதசாங்கிசத்தி லாகில் மிருகத்தைப் போலே யிருக்கிற புருடர், மரை முதலானவை ; மனுட யோனி சங்கையான இராசித் துவாதசாங்கிசத்தி லாகில் மிருக சமானன் (எ-று). 1

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தை

" பாவர்கேந் திரத்திரிகோ ணத்தில்பெலத் திருக்கப்
        பண்பான சுபகேந்திரத் திரிகோண மன்றித்
தாழ்பெல மன்றிநிற்கக் கேந்திரத்தி லேதான்
        சசியிருக்க வல்லாது புந்திதா னிருக்க
மேவியவர் சார்ந்திடினும் வியோனிசா தகமே
        விளம்புமிந்தச் சாதகந்தான்; வெண்மதிதா னிருந்த
பூவகரும் துவாதசாங் கிசமெந்த விராசி
        பொற்பான ரூபமந்தச் சென்மமெனப் புகல்வர் "

(1922) என்னும் சாதக சிந்தாமணிப் பாடலாலும், உரையில் கூறப் படும் செய்தியை 1923, 1924, 1925-ஆம் பாடலாலும் அறிக. உரையுள் ' மரை ' என்பது கவரிக் குதிரையாகும்.

இதுவும் அது

46. தீயர் வலியோ டவரவர்தங்
        காலிற் சேரச் செவ்வியர்கள்
    தேயும் வலியர் அயலார்தங்
        காலிற் சேரத் திகழுதயம்



    ஏயும் வியோனி சம்பவமேல்
        இயம்பும் வியோனி ; யிந்துவுற்ற
    வாய பாகந் துவாதசத்தின்
        சமான யோனி யணங்கன்றாய்.

(எ-து) பாவக் கிரகங்கள் பலவான்களாய்த் தங் களுடைய நவாங்கிசங்களிலிருக்கச், சுபக்கிரகங்கள் பலவீனராய்ப் பரார்த்த நவாங்கிசத்திலிருக்க, இலக் கினம் வியோனி சம்பவம் உண்டானால், வியோனி சென் மம், சந்திரன் நின்ற துவாத சாங்கிசத்தின் வியோனி யாகப் பிறக்கும் என்று சொல்லுக (எ-று). 2

குறிப்பு :—பரார்த்த நவாங்கிசம்—அயலார் அல்லது பாபிகளுடைய நவாங்கிசமாகும்.

வியோனிகளின் உறுப்பு வேறுபாடு. [1]

47. சிரமுகங் களமும் முன்கால்
        செப்பிய பிருட்டம் மார்பு
    வரயிரு பாரி சங்கள்
        இருபகம் வயிற பானம்
    இருதிர மாம்பின் காலும்
        இலிங்கவி ஷணத்தி னேடும்
    அரையுடன் வாலீ ராறும்
        கிரியாதி யோனி யங்கம்.

(எ-நா) வியோனி அங்கம் அறியும்படி :—தலையும் முகமும் மேடம் ; கழுத்தும் முன்காலிரண்டும் இடபம் ; பிருட்டமாகிய முதுகு மிதுனம் ; மார்பு கர்க்கடகம் ; பாரிசம் சிங்கம் ; இரண்டு பகமும் கன்னி ; வயிறு துலாம் ; அபானம் விருச்சிகம் ; பின்காலிரண்டும் தனுசு ; இலிங்கமும் விருஷணங்களும் மகரம் ; ஆசனங் கும்பம் ; வால் மீனம். கிரியமாவது மேடம். இப்படிக்கு மேடம்

RangaRakes tamilnavarasam.com

முதல் பன்னிரண்டு இராசிக்கும் வியோனி அங்கமென் றறிவது.

சதுட்பாதப் பிரச்சினத்திற்கு இந்தத் தானங்களில் இலாஞ்சனஞ் சொல்லவும். (எ–று). 3

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினைச் சாதக சிந்தாமணி சிறிது வேறுபடக் கூறுகின்றது.

" வித்தகமா கப்பிறந்த வியோனியிலட் சணந்தான்
மேடமுடி யிடபமுகம் யாழ்கண்டம் முன்கால்
வைத்தசந்து கடகம்முது குஞ்சிங்கம் மார்பு
மன்னுயிரு விலாக்கன்னி வயிறுதுலா மென்பர் "
(1926)

" குதம்மேவு விருச்சிகமுன் னங்காற்கள் தனுசு
கூறியபி சமும்பின்னங் காலுமான் கும்பம்
இதமின்முழங் காலுக்குக் கீழ்மீனம் வாலாம் " (1927)

### வியோனியின் நிறம் முதலியன.

48. வருமுத யாங்கி சத்தின்
வண்ணமே யுத்தி ருட்டி
தெரிவலி யவராற் செப்பத்
திருட்டிக ளதனி னாலே
குருவையும் ஆணும் பெண்ணும்
அளவையும் இனிது கூறப்
பெருமுது குறுமி ரேகை
ஏழினு லுணர்ந்து பேசே.

(எ–து) இலக்கினம், நவாங்கிசத்தில் நின்ற கிரகமும், அதிலிருந்த கிரகமும், நோக்கிய கிரகமும் இதிற் பலமுள்ளவரைக்கொண்டு, வியோனியினுடைய நிறத்தைச் சொல்லவும்.



நோக்கிய கிரகங்களைக் கொண்டு ஆண் வியோனி என்றும், பெண் வியோனி யென்றும் அளவு இத்தனை என்றும் சொல்வது.

ஏழாமிடங்கொண்டு முதுகிலுள்ள இரேகையைச் சொல்லவும். ஊர்த்துவாதி முசிகளைக் கொண்டு (?) ஊர்த்துவாதி இரேகைகளைச் சொல்லவும் (எ–று). 4

### பறவைகளின் பிறப்பு

49. தருபட்சித் திரேக்கா ணங்கள்
சராங்கிசத் துதிக்கு மேனும்
வருபுதாங் கிசமு திப்ப
வலியின ரதனைக் கூடிக்
கரியனிந் திவர்கள் யோகங்
காணுதல் செயிற்ற லத்திற்
பொருசலந் தனிற்செ னிக்கும்
பறவையு முரைபொன் னன்றும்.

(எ–து) பட்சித் திரேக்காண முதிக்கச், சரவிராசி அங்கிசம் உதயமாகிலும், புதன் அங்கிசம் உதிக்கப் பலவான்களோடு கூடத்தான் செய்யில் (வலியினர் அதனைக் கூடி), சனி, சந்திரன் கூடினும், நோக்கினும் பட்சி பிறக்கும். சனி யுத்திருட்டியாகில் நிலத்திற் பிறக்கின்ற பட்சியும், சந்திர யுத்திருட்டியாகில் நீரில் பிறக்கின்ற பட்சியும் அறிந்து சொல்லுக (எ–று). 5

குறிப்பு :—யுத்திருட்டி—கூடினும் நோக்கினும்.

### மரங்களின் பிறப்பு.

50. இலக்கின மிந்த ருக்கன்
பொன்பெல வின மெய்த
நிலத்துறு தருக்கள் சென்மம்
நீர்த்தலத் திருப வங்கள்

RangaRakes tamilnavarasam.com

இலக்கிருட் சாங்கி சம்போல்
இருட்சதி பதியாங் கெய்தும்
நலத்தகா லளவி னூலும்
நவின்றிட வளவு மாதே.

(எ-து) இலக்கினம், சந்திரன், ஆதித்தன், வியாழன் இவர்கள் பலவீனரா யிருக்கும் போது, விருட்சங்கள் செனனத்தைச் சொல்லவும். "நீர்த் தலத் திருபவங்கள் இலக்கிருட்சாங்கிசம் போல்" என்றது, சலவிராசி யங்கிச முதிக்கில் சலசமீபத்தில் இருக்கின்ற விருட்சங்கள், தலவிராசி யங்கிச முதிக்கில் பூமியில் செனிக்கப்பட்ட விருட்சங்கள். இலக்கினத்தில் நின்ற தல சல இருட்சபதி, இலக்கினாதிபன் எந்த நவாங்கி சத்தில் நின்றான் அந்த இராசி சமான நவாங்கிசங்களையும் கூட்டி, அத்தனை விருட்சமென்று சொல்வது (எ-து). 6

குறிப்பு :—"நீர்த்தலத் திருபவங்கள்" என்பதே ஏட்டிலுள்ள பாடம். ஆனால், பிரதிசெய்வர் "நீர்த்தலத் தருபவங்கள்" என்று எழுதியுள்ளார். "குலக்கிருட் சாங்கிசம்" என்று ஏட்டில் உள்ளது. அப் பாடம் மோனைக்குப் பொருத்தமில்லை. அறிஞர் ஆய்க. சாதக சிந்தாமணி "உதய நவாங்கிசத்தோன் எத்தனை நவாங்கிசஞ் சென்றானோ, பழுதிலா வத்தனையாம் விருட்சமுதித் திருக்கும்" (1932) என்று கூறுகிறது.

மரங்களின் வேறுபாடு

51. பானுவாற் றருசென் மங்கள் ;
பானுகு னுவினாற் காழ்ப்பும் ;
வேனுறு பாலா மிந்து ;
வெங்குசன் முண்ம ரங்கள் ;
தேனுகு பலம்பொன் ; புந்தி
விபலனும் ; சிதனாற் பூவாம் ;
வானுறு மதிவெண் டுள்ள
மரம் ; விட விருட்சம் செவ்வாய்.



(எ-து) மதுர வத்துக்களா யிருக்கப்பட்ட விருட்சங்களைச் சனிப்பிக்கப்பட்டவன் சூரியன் ; வயிர மரங்களை யுண்டாக்கப்பட்டவன் சனி ; பசிய பாலுள்ள மரங்களை யுண்டாக்கப்பட்டவன் சந்திரன் ; முள்ளுள்ள மரங்களை யுண்டாக்கப்பட்டவன் செவ்வாய் ; நல்ல பழங்களை யுடைய மரங்களை யுண்டாக்கப்பட்டவன் வியாழன் ; பழமில்லாத விருட்சங்களை யுண்டாக்கப்பட்டவன் புதன் ; புட்ப விருட்சத்தை யுண்டாக்கப்பட்டவன் சுக்கிரன் ; அன்றியும், வெண்டுள்ள மரம் சந்திரன் ; விடமுள்ள மரம் செவ்வாய் (எ-து). 7

மரங்கள் தோன்றும் நிலமும்
அவைகளுக்கு ஏற்படுவதும்.

52. தீயபம் மதனில் நல்லோர்
தீநிலம் நல்வி ருட்சம்
ஆயநற் பம்மந் தீயோர்
அடையின்நன் னிலத்தில் தீதாம்
ஏயுத யாங்கி சேசன்
இருந்தபம் மளவோ ரேசன்
தேயுறச் சேய்தி ருட்டி
யுதனெனில் விருட்சஞ் சேதம்.

(எ-து) பாவச் சேத்திரத்தில் சுபக்கிரகம் நின்றால், ஆகாத நிலத்திலே நல்ல விருட்சங்களை உண்டாக்கும். சுபச் சேத்திரத்தில் பாவக்கிரகம் நின்றால், நல்ல நிலத்திலே ஆகாத விருட்சங்களை உண்டாக்கும். இலக்கின நவாங்கிசாதிபன் எந்த விராசியில் நின்றான், அத்தனை விருட்சங்கள் உண்டாம். இராசி யதிபன் பலவீனனாகச், செவ்வாயுடனே கூட, நோக்க அத்தனை விருட்சங்களுக்குச் சேதம் உண்டாகும் (எ-து). 8

RangaRakes tamilnavarasam.com

இவ் வத்தியாயத்திற் கூறப்பெற்றவை.

53\. நவின்றிடு மேட மாதி
நாலுகால் வியோனி தானும்
உவந்திடு மங்கந் தானும்
உயர்ந்திடு தருக்கள் பட்சி
திவந்திடு சலோற்ப வங்கள்
நீத்தலுண் டாகல் மற்றும்
பவங்கள்நல் லவனி லிங்கள்
பாருளோற் குரைத்தான் நன்றே.

குறிப்பு :—ஏட்டில் மூன்றும் அடி 'நீத்தலுண்டாக்கல்' என்று உள்ளது.

மூன்றாவது
வியோனி சென்ம அத்தியாயம்
முற்றும்.

நான்காவது

## நிஷேக அத்தியாயம்.

கருப்பமுண்டாகுங் காலம்.

54\. பூப்புறு மதிபெண் பம்முக்
குபசய மன்றிப் புல்லுங்
கோப்புறு மதியைச் செவ்வாய்க்
கூடநோக் கிடக்க ருப்பம்
வாய்ப்புறும் ; மகுனன் பம்முக்
குபசய மதியை நற்கோன்
காப்புறக் கருப்ப முண்டாம்
காதலின் மகுனை னென்றில்.

(எ-து) பெண்கள் பூப்பெய்திய மாதங்களில், பெண்ணினுடைய விராசிக்கு உபசயத்தான மல்லாத விடத்திலே, சந்திரன் நிற்க, அச் சந்திரனைச் செவ்வாய் கூடினும், நோக்கினும் கர்ப்ப முண்டாகும். (ஸ்திரீ பூத்த மாதத்தில் இந்த யோகங்கள் வந்து கூடில்) புருடனுடைய இராசிக்கு உபசயத்தானத்தில் சந்திரன் நிற்கச், சுபக்கிரகமான வியாழன் நோக்கினும் கெர்ப்ப முண்டாம். ஸ்திரீ பூத்த மாதத்தில் இந்த யோகங்கள் வந்து கூடில், ஸ்திரீயும் புருடனும் ஏக இருதயத்துடனே சம்போகம் செய்யில் கெர்ப்ப முண்டாம் (எ-று). 1

குறிப்பு :— பெண்ணின் பிறந்த இலக்கினத்திற்கு உபசயத் தானமல்லாத அநுபசயத் தானத்திலே (அநுபசயத் தானங்கள்-1, 2, 4, 5, 7, 8, 9, 12) சந்திரனிருந்து, செவ்வாயைக் கூடினாலும், அவனால் பார்க்கப்பெற்றாலும் பெண்களுக்கு



RangaRakes
tamilnavarasam.com

மாதந்தோறும் ரஜஸ் தோன்றும். ரஜஸ் தோன்றி நான்கு நாட்கள் சென்ற பின்னர் உள்ள பன்னிரண்டு நாட்களும் ஆண் பெண் கூடுதலால் கருப்பந் தோன்றுதற் குரிய கால மாகும்.

ஆணின் பிறந்த இலக்கினத்திற்கு உபசயத் தானத்திலே (உபசயத் தானங்கள் 3, 6, 10, 11) சந்திரன் நின்று, வியாழனால் பார்க்கப்பெறின் (நட்புக்கோளாவது, சுக்கிரனாவது பார்த்தால் என்று சாராவளி கூறுகிறது) அக் காலம் அவனுடைய மனைவி புணர்ச்சியைப் பெறும் காலமாகும். அக் காலம் கர்ப்பந் தோன்றுதற்குரிய கால மாகும்.

புணர்ச்சி நிகழும் விதம்

55. மைதுனம் ஏழ்பம் மேபோல்
வந்திடும் இருகால் நாற்கால்
செய்திடுங் காலம் நற்றோல்
சேரநோக் கினிராங் தீக்கோள்
வெய்துறு கலாப மூர்த்தம்
அதோதிரி மேல்கீழ் மாறும்
பெய்தகோ ளுந்தி ருட்டி
வயதழ கனையும் பேசே.

(எ-று) ஆதான காலத்திலேதான் பிரச்சின காலத்திலேதான் ஏழாமிராசி யாதொரு பிரகார மிருக்கும் அந்த இராசியைப் போலே மைதுனத்தைச் சொல்வது.

ஏழாம் இராசி இருகால் இராசியாகில் மனிதரைப் போலே மைதுனம் நிகழும். நாற்கால் இராசியாகில் விலங்குகளைப்போலே மைதுனம் நிகழும். ஏழாம் இராசி நிசி இராசியாகில் இராத்திரியில் மைதுனம் நிகழும். திவா இராசி யாகில் பகற் காலத்தில் மைதுனம் நிகழும்.

ஏழாமிடம் சுப யோக திருட்டி யுண்டானால் மகிழ்ச்சி யோடுங் கூடி மைதுனம் உண்டாம். ஏழாமிடம் பாப



யோக திருட்டி யுண்டானால் கோபத்தோடும் கலாபத்தோடும் புணர்ச்சி நிகழும்.

ஏழாமிடம் ஊர்த்த முகியாகில் ஸ்திரீ மேலே யென்றும், அதோமுகியாகில் ஸ்திரீ கீழே யென்றும், திரியமுகி யாகில் இருவரும் ஒருக்கணிச் சென்றும் கூறுக.

ஏழாமிடத்திற் சுபயோக திருட்டி யாகில் யௌவன வயதென்றும், பாபயோக திருட்டி யுண்டாகில் விருத்த வயதென்றும் கூறுக.

ஏழாமிடத்திற் சுபயோக திருட்டி அழகுடையவ னென்றும் பாப யோக திருட்டி நோயுடையவ னென்றும் கூறுக.

ஏழாமிடத்தில் உச்சம் பெற்ற கிரகம் நிற்கில் கட்டில், மெத்தை, தூங்கு மஞ்சமென்றும்; நீசம்பெற்ற கிரகம் நிற்கில் பூமி யென்றும்; நட்பு ஆட்சிக் கிரகமாகில் குசனுக்குக் கம்பளம், ஆதித்தனுக்குப் புற்பாய், சந்திரனுக்குப் பலகை, புதனுக்குந் தோல், வியாழம் வெள்ளி நல்ல வத்திரங் கட்டிய மெத்தை (எ-று). 2

குறிப்பு :—ஆதான காலம்—கர்ப்பாதான காலம். 'மான்' குறுக்கு என்னும் பொருளது.

கருப்ப முண்டாகாதும், பிசலமும்
சேர்ந்திர மனமும்

56. பருதி யிந்து புகர்சேயுந்
பாலா தமதாங் கிசமுறினும்
குருவின் றிரிகோ ணுமுதயங்
கூறும் விடயங் கற்பமுறும்
பிருகு கதிரோ சக்காலான்
பிறைசேய் சமன்கால் பெண்விசம்
கருது விசம் பலமிலையேல்
கண்ணில் லார்க்குக் கதிர்போலாம்.

RangaRakes tamilnavarasam.com

(எ-று) சூரியன், சந்திரன், சுக்கிரன், செவ்வாய் இவர்கள் தங்கள் தங்களுடைய நவாங்கிசத்தில் நிற்கினும், குருவின் திரிகோண திருட்டி (5,9 நோக்கு) யுண்டாகில் அப்பொழுது, ஸ்திரீ புருடர் விடயத்தில் கெற்பமுண்டாம். சுக்கிரன் சூரியன் ஓசை இராசி அங்கிசத்தில் நிற்கில் புருடனுக்குப் பீசபலம் உண்டு. சந்திரன் செவ்வாய் உக்குமாங்கிசத்தில் நிற்கில் ஸ்திரீக்குச் சேத்திர பலம் உண்டு.

அன்றியும், சுக்கிரன் சூரியன் இவர்கள் புடத்தைக் கூட்டி, இராசி பன்னிரண்டில் கழிந்து நின்ற சேடம் ஓச இராசி, ஓச நவாங்கிச மாகிலும் புருடனுக்குப் பீசபலம் உண்டு. உக்கும மாகில் பீசபலமில்லை.

சந்திரன் குசன் புடத்தைக் கூட்டினது உக்குமாங்கிசம் வரில் ஸ்திரீக்குச் சேத்திர பலம் உண்டு. ஓசமாகில் இல்லை. இருவர்க்கும் பல முண்டாகில் கர்ப்பம் உண்டாம்.

ஸ்திரீக்குச் சேத்திர பலம் உண்டாய்ப் (புருடனுக்குப்) பீசபலம் இல்லை யாகில் அந்நியனாலே கெற்பமுண்டாம். புருடனுக்குப் பீச பலம் உண்டாய், ஸ்திரீக்குச் சேத்திர பலம் இல்லையாகில் கெற்ப மில்லை.

திருட்டி யில்லாதவனுக்குச் சந்திர சூரிய பிரகாசத்தினாலே பலனில்லாதது போலச் சுக்கிலதாது வில்லாதவனுக்குப் (பீச பலமில்லாதவனுக்குப்) புத்திரனு மில்லை (எ—று).

குறிப்பு :—குரு, சந்திரன், செவ்வாய் இவர்களின் சுத்தஸ்புடங்களை ஒன்றுக்கி வரும் இராசி இரட்டை (பெண்) இராசியாயும், இரட்டை அம்சமாயும் இருப்பின் பெண்களுக்குச் சேத்திர பலம் உண்டென்றும், மிசிரமானால் பிரயாசத்தால் புதல் வருண்டாகு மென்றும் அறிக.



சூரியன், சுக்கிரன், குரு இவர்களின் ஸ்புடங்களைக் கூட்டி வந்த இராசி ஒற்றை (ஆண்) இராசியாயும், ஒற்றை அம்சமாயு மிருப்பின் ஆண்களுக்குப் பீசபலம் உண்டென்றும் (புதல்வர் தோற்றம் உண்டு). மிசிரமானால் சாந்தி முதலான வற்றால் புத்திரருண்டென்றும் அறிக. பீஜஸ்புட இராசிக்குத் திரிகோணமான இராசியில் வியாழன் நிற்பினும் புதல் வருண்டாம் என்று பலதீபிகை கூறுகின்றது. (அத்-12-சுலோ-14)

கணவன் மனைவி இருவருக்கும்
நோய் உண்டாதலும், இறப்பு உண்டாதலும்.

57\. மதித்த கதிர்க்கேழ் சேய்மந்தன்
மகிலான் நோயாம் மதிக்கேழேல்
விதித்த மடந்தை நோய்கொள்ளும்
வியத்தில் தனத்தில் கதிர்க்கிவர்கள்
கொதித்த பூமான் மதிக்கிவை
யிருந்தி யிவைபோற் கூடினுமாம்
பதித்த யிவரைக் கூடியவர்
பார்க்கு மெனிலங் கவர்மரிக்கும்.

(எ—று) சூரியனுக்கு ஏழாமிடத்திற் செவ்வாயாதல் சனியாதல் நிற்கில் பூமானுக்கு நோய் உண்டாம். சந்திரனுக்கு ஏழாமிடத்திற் செவ்வாயாதல், சனியாதல் நிற்கில் ஸ்திரீக்கு நோய் உண்டாம்.

ஆதித்தனுக்கு இரண்டாமிடத்தில் பன்னிரண்டா மிடத்தில் சனி, செவ்வாய் நிற்கில், ஸ்திரீ மிருத்யு. சந்திரனுடனே சனி, செவ்வாய் கூடில், ஸ்திரீ மரணம்.

சூரியனுடனே சனி, செவ்வாய் கூடில், புருடன் மரணம். ஆதித்தனுடனே செவ்வாயாதல், சனியாதல் ஒருவன் கூட இவர்களைச் செவ்வாயாதல், சனியாதல் ஒருவன் நோக்கப் புருடன் மரணம்.

RangaRakes tamilnavarasam.com

சந்திரனுடனே சனி, செவ்வாய் இருவரில் ஒருவன் கூட, ஒருவன் நோக்க ஸ்திரீ மரணம் (எ-று). 4

காரகக் கோள்கள்

58. எல்லினி லருக்கன் சுக்கன்
இரவினில் மந்த னிந்து
சொல்லிடுந் தந்தை தாயர்
அடைவினிற் றுணைவர் மாறும்
புல்லுமேல் ஓசம் உக்கு
மப்பமு சுகம்பொ ருந்தும்
அல்லிலுக் குமமே வோசம்
அடைவினிற் சுகமா மென்னே.

(எ-து) பகலில் கர்ப்பாதானம் ஆகப்பட்டவர்கட்கு ஆதித்தன் பிதுர்க்காரகன். சுக்கிரன் மாதுர்க் காரகன். இராத்திரியில் கர்ப்பாதானம் ஆன பேர்க்குச் சனி பிதுர்க்காரகன்; சந்திரன் மாதுரு காரகன்.

'துணைவர் மாறும்' என்பது, பகலில் கர்ப்பாதானம் ஆனவர்க்குச் சனி சிறிய பிதாவும், சந்திரன் சிறிய மாதாவும்; இராத்திரியாகில் ஆதித்தன் சிறிய பிதாவும், சுக்கிரன் சிறிய மாதாவுமாகக் கொள்வது.

பகலில் கர்ப்பாதானம் ஆனவர்க்கு ஓச இராசியில் ஆதித்தனும், உக்கும இராசியில் சுக்கிரனும் நிற்கில் பிதாவிற்கும், மாதாவிற்கும் சுகம் உண்டாம்.

இராத்திரியில் கர்ப்பாதானம் ஆனவர்க்கு உக்கும இராசியில் சனியும், ஓச இராசியில் சந்திரனும் நிற்கில் பிதாவிற்கும், மாதாவிற்கும் சுகமாம் (எ-று). 5



கர்ப்பாதான இலக்கினத்திற்குப்
பாவக் கோள்களின் சம்பந்தம் உண்டானால்
நிகழும் பலன்.

59. உதயமாம் பவனந் தன்னில்
ஊறுடை யோர்கள் நிற்ப
அதைச்சுபர் நோக்கா ராகில்
ஆயிழை மரிக்கு மென்க
முதுமகன் உதயம் மேவ
முடிவுறு மதிசேய் நோக்க
சுதனுத ரத்திற் றங்கிற்
றேகையாள் மரண மாமே.

(எ-து) கர்ப்பாதானம் உண்டான இலக்கினத்தில் பாவக்கிரகங்கள் நிற்கச் சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் ஸ்திரீ மரணம்.

சனி உதயத்தில் நிற்கத், தேய்ந் தழிகின்ற சந்திரன்தான், செவ்வாய்தான் நோக்க, அப்பொழுது கர்ப்பாதானம் உண்டாயின் ஸ்திரீ மரணம் (எ-று). 6

தாயும் சேயும் இறத்தலும்,
தாயும் தந்தையும் இறத்தலும்.

60. இலக்கினம் தன்னிற் சோமன்
இருக்கினும் வேறுற் றுனும்
நலக்குறு தீயர் முன்பின்
நெருக்கிட நன்றேக் கின்றேல்
குலக்கொடி மகம ரிக்கும்
கொடியரிக் கருக்கள் றன்னைப்
பிலத்தொடு நெருக்கு மாகில்
பேசுதாய் தந்தை சாவாம்.

(எ-து) இலக்கினத்திற் சந்திரன் நிற்க, முன்னும் பின்னும் பாவர் நிற்பினும்; சந்திரன் [illegible]

RangaRakes tamilnavarasam.com

இராசியில் இருக்கச், சந்திரனுக்கு முன்னும் பின்னும் பாவர் நிற்க, இலக்கினத்திற்கு முன்னும் பின்னும் பாவர் நிற்கச் சுபக்கிரகங்கள் நோக்கில்லை யாகில் கெர்ப்பத்துடனே தாய் மரணம்.

சந்திரனுக்கு முன்னும் பின்னும் பாவக்கிரகம் நின்ருல் ஸ்திரீ மரணம். சூரியனுக்கு முன்னும் பின்னும் பாவக்கிரகம் நின்ருல் பூமான் மரணமாம் (எ-று). 7

தாய் மரித்தலும் குழந்தை மரித்தலும்.

61. நிலவின் சதுர்த்தம் பாவருற
நியனஞ் செவ்வாய் நேரிழைசாம்
உலவு மெட்சி தனக்குறா
லெட்டேல் பிரசைக் குரைத்திடுக
இலகு மெட்சிக் கந்தியம்நால்
இரவி பூமான் சந்ததியிக்
தலகு பந்தந் தியஞ்செவ்வாய்
அருக்கன் பிரசைக் கந்தியமே.

(எ-து) சந்திரனுக்கு நான்காமிடத்திற் பாவரும், எட்டாமிடத்திற் செவ்வாயும் நிற்கில் ஸ்திரீ மரணம்.

இலக்கினத்திற்கு நான்காமிடத்திற் பாவியும், எட்டாமிடத்திற் செவ்வாயும் நிற்கில் பிரசை மரிக்கும். இவ் விரண்டும் கூட உண்டாகில் தாயும் பிரசையும் மரிக்கும்.

இலக்கினத்திற்குப் பன்னிரண்டா மிடத்தில், நான்காமிடத்தில் சூரியன், செவ்வாய் நிற்கில் சந்ததி மரணம்.

சந்திரனுக்கு நான்காமிடத்தில், பன்னிரண்டாமிடத்திற் செவ்வாய் சூரியன் நிற்கில் பிரசை மரிக்கும் (எ—று). 8



கருவியால் இறத்தலும், கெர்ப்பம் விழுதலும்,
சேய் இறத்தலும், தாய் இறத்தலும்.

62. உதய மந்தஞ் செய்பருதி
உற்ருல் கருவி யுற்றிறக்கும்
அதுமா சதிபன் நிபீடிதனேல்
அவன்றன் மதியாண் டுறுமந்த
மதியிற் கெற்பஞ் சிராவமுறும்
மதிக்கு வலியேற் பிரசைபடும்
உதயம் வலியாய் மதிமெலியில்
உறுந்தாய் மரண மென்றுரையே.

(எ-து) [1] ஸ்திரீ விடய காலத்தில் இலக்கினத்திலும், ஏழாமிடத்திலும் செவ்வாய் சூரியன் நிற்கில் அந்தக் கெற்பத்தை யுடையவள் ஆயுதங் கொண்டு மரணம்.

[2] (ஸ்திரீ) விடயகாலத்தில் மாசாதிபதி நிபீடிதனுக அவனுடைய மாதத்தில் கெற்பசிரவம் வரும். நிபீடிதனுவது உயுத்தத்திலே தோற்றவன்ருன், பரிவேட யுக்தன்ருன், அதிநீசன்ருன் என்பது. அவனுடைய மாதங்களில் கெற்ப சிராவமாவது, கெற்பம் விழுதல் என்பது.

---

குறிப்பு :—1 ஏழாமிடத்திற் சூரியனும், இலக்கினத்திற் செவ்வாயும் இருந்தாலும், ஏழாமிடத்திற் செவ்வாயும் இலக்கினத்திற் சூரியனும் இருந்தாலும் ; அல்லது இவர்கள் சேர்ந்து இருந்தாலும் இந்த இரண்டு யோகத்திலும் கர்ப்பிணிக்கு ஆயுத சிகிச்சையால் மரணம் உண்டென்று சொல்ல வேண்டும். (சாராவளி-அத்-9-சு-41)

2 கர்ப்ப மாசாதிபனுன கிரகத்திற்கு அஸ்தமனம் (மூடம்), பகை வீடு, நீசம், உயுத்தத்தில் தோல்வி முதலிய பலக் குறைவுகள் நிகழ்ந்தால் அந்த மாசத்தில் கர்ப்பத்திற்குக் குறைவு நிகழும். யோக கர்த்தாவாகிய கிரகம் இலக்கினத்தில் ஏறுகின்ற காலத்திலும் கர்ப்பக் குறைவு நிகழும். (சாராவளி அத்-3-சு 32).

RangaRakes tamilnavarasam.com

இலக்கினத்திற்கு வலியில்லாமல் சந்திரனுக்கு வலியுண்டானால் பிரசை மரணம். இலக்கினம் பெலமாய்ச் சந்திரன் பெலவீன மாகில் மாதா மரணம் (எ-று). 9

கெர்ப்பம் நன்றாயிருக்கு மென்பது.

63. சசிக்கே யெனினும் உதயமது
தனக்கே யெனினுஞ் சுபயுதமாய்
வசிக்குந் திரிகோ ணகேந்திரமேற்
றனமாம் பத்திற் சுபர்வதிய
நசிக்குந் தீயர் சகசமுடன்
இலாப மாறிற் பகைவீடும்
விசிக்கு மதிக்கீ திருமுன்பேல்
செற்பஞ் சுகியா நேனிலையே.

(எ-து) சந்திரன் சுபரோடு கூடச், சந்திர இலக்கினத்திற்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடம், நான்காமிடம், ஏழாமிடம், இரண்டாமிடம், பத்தாமிடம் என்னும் இவ்விடங்களிற் சுபக்கிரகங்கள் நிற்க, மூன்றாமிடம், பதினொன்றாமிடத்திற் பாவக் கிரகங்கள் நிற்கச் சந்திரனுக்கு ஆதித்திய திருட்டி யுண்டாகில் அந்தக் கெர்ப்பத்துக்குச் சுபமுண்டென்று சொல்லவும்.

உதய இலக்கினத்திற் சுபக்கிரக மிருக்க அதற்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடம், நான்காமிடம், ஏழாமிடம், இரண்டாமிடம், பத்தாமிடம் என்னும் இவ்விடங்களிற் சுபக்கிரக மிருக்க, மூன்றாமிடம், பதினொன்றாமிடத்திற் பாவக்கிரகங்க ளிருக்க இலக்கினத்திற்கு ஆதித்திய திருட்டி யுண்டாகில் அந்தக் கெர்ப்பம் சுகமுடையதாம் (எ-று). 10



ஆண் பிறக்கும் பெண் பிறக்கும் என்பது.

64. ஓச விருட்சத் தோசக்கால்
உதயங் கதிர்பொன் மதியானும்
பேசுக் குமந்தி லுக்குமக்கால்
பெண்ணாங் கதிர்பொன் வியனானுங்
காசில் புகர்சேய் மதிசமன்பெண்
கதிர்பொன் னுபயம் வியனிரண்டாண்
பூசும் புகர்சேய் மதியுபயம்
சமன்பெண் ணிரட்டைப் புதன்நோக்கே.

(எ-து) ஓச இராசியில் ஓசாங்கிசத்தில் இலக்கினம் (இலக்கினத்தில்) சூரியன் வியாழன் சந்திரன் நிற்கில் ஆண் பிறக்கும். (இலக்கினம் ஓச இராசியாக இலக்கின நவாங்கிசமும் ஓச நவாங்கிசமாக என்று கருத்து).

இலக்கினம் உக்கும இராசியாக, இலக்கின நவாங்கிசமும் உக்கும நவாங்கிசமாக, இதில் ஆதித்தன், வியாழன், சந்திரன் நிற்கப் பெண் பிறக்கும்.

ஆதித்தனும் வியாழனும் ஒற்றித்த இராசியில் ஒற்றித்த அங்கிசத்தில் நிற்கில் பெண் (ஆண் என்றிருக்க வேண்டும்) பிறக்கும்.

ஆதித்தன் வியாழன் உபய இராசியில் இரட்டித்த அங்கிசத்தில் (நிற்கில்) பெண் பிறக்கும்.

ஆதித்தன் வியாழன் உபய இராசியில் வியனாவது—ஒற்றை. ஒற்றையான தனுர்க் காலிலாதல் மிதுனக் காலிலாதல் நிற்க, அவர்கட்குப் புதன் திருட்டி உண்டாகில் இரண்டு ஆண் உண்டாம்.

சுக்கிரன், செவ்வாய், சந்திரன், இவர்கள் உபய இராசியில் இரட்டித்த அங்கிசமான மீன நவாங்கி


tamilnavarasam.com

சத்திலாதல், கன்னி நவாங்கிசத்திலாதல், நிற்கப் புதன் நோக்கு மாகில் இரண்டு பெண்ணுண்டாம் (எ-று). 11

குறிப்பு :—ஆண் பிறக்கும், பெண் பிறக்கும் என்பதைப் பற்றிச் சாதகாலங்காரம் 43, 44, 45, 46, 47, 48-ஆம் செய்யுளிற் கூறுகின்றது ; அதனை ஆண்டுக் காண்க.

இதுவும் அது.

65. மின்னனும் உதய மன்றி
விடமமா மிருட்சந் தன்னிற்
சுன்னுறிற் புருட னாகும்
தூயதோர் சமவி ருட்சம்
மன்னிடப் பெண்ண தாகும்
வகுத்தகோள் வலியாற் புக்தி
அன்னது முணர்ந்தே யங்க
பரிசமு முணர்ந்து கூறே.

(எ-து) உதய இலக்கின மொழிந்து விட (விஷ, விய, விடம) இருட்சமான ஒற்றை இராசிகளில் சனி நிற்கில் புருடன் செனனம். சம இருட்சமான (பெண்) இரட்டித்த இராசியில் சனி நிற்கில் பெண் செனனம். இந்தச் சனிக்கு வலிவுண்டாகில் (மேற் கூறிய பலன்) நிச்சயம்.

புதன் வலுப்பெற்று நிற்கிலுமாம். அவ் விடத்தில் புதன் வாமாங்கம் பரிசிக்கில் பெண்ணும், தெட்சணாங்கம் பரிசிக்கில் ஆணும் (பிறக்கும்) (எ-று). 12

குறிப்பு :—இக் கருத்தை "பாரின் மந்தன் பரிந் தொற்றை ராசியின், சேர நிற்கிலாண்பிள்ளை சனித்திடும், சிரு லாவிய செவ்வாய் இரட்டையில், பேர லாவொடு நிற்கிற்பெண் பிள்ளையே" (43) என்று சாதகாலங்காரம் வேறுபடக் கூறு கிறது. ஒற்றை இரட்டை என்பவைகளை இலக்கினம் முதலாகக் கொள்ள வேண்டு மென்று அதிருர் கூறுகின்றனர்.



சனி இலக்கினத்தில் இராமல், இலக்கினத்திலிருந்து ஓச இராசியில் (3, 5, 7, 9, 11) நின்றால் ஆண்மகவு பிறக்கு மென்றும் ; புதன் இலக்கினாதியான உக்கும இராசியில் (2, 4, 6, 8, 10, 12) நின்றால் பெண்மகவு பிறக்கு மென்றும் சாராவளி (அத்-8-சு-17) கூறுகின்றது.

கிலீப யோகத்தை (அலியோகத்தைக்) கூறுகின்றது.

66. இந்து கதிருக் குமமோச
மெனினுஞ் சனிமால் சமவிடமம்
வந்த தெனினும் கதிர்சேயுக்
குமமோ சத்தும் மதியுதயம்
தந்த வோசம் சமன்குசனேக்
கெனினு மரிமால் சமன்வியன்சே
யுந்த மெனினும் மதிசிதனே
டுதய மோச மலியாமே.

(எ-து) சந்திரன் உக்கும இராசியில் நிற்கச், சூரியன் ஓச இராசியில் நின்று நோக்கின் ஒரு கிலீப யோகம் (1)

சனி உக்கும இராசியில் நிற்கப், புதன் ஓச இராசியில் நின்று நோக்கில் ஒரு கிலீபயோகம். (2)

ஆதித்தன் சம இராசியில் நிற்கச் செவ்வாய் விட இராசியில் நின்று நோக்கினும் ஒரு கிலீபயோகம். (3)

ஓச இராசியில் சந்திரன் நிற்க, இலக்கினமும் ஓச இராசியாக, இவ் விரண்டையும் சம இராசியில் நின்று செவ்வாய் பார்க்கில் ஒரு கிலீபயோகம். (4)

உக்கும இராசியில் சந்திரன், நிற்க, ஓச இராசியில் புதன் நிற்கச் செவ்வாய் நோக்கினும் ஒரு கிலீப யோகம். (5)

RangaRakes tamilnavarasam.com

ஓச இராசியில் சந்திரன், சுக்கிரன் இவர்களிருக்க, இலக்கினமும் ஓச இராசி ஓச நவாம்சமுமாக ஒரு கிலீப யோகம். (6)

கிலீப யோகமாவது நபுஞ்சக யோகம். இப்படி ஆறு வகையும் அலி யோகம். (எ-று). 13

குறிப்பு :— சாதகாலங்காரம் 641, 642—ஆம் பாட்டில் வேறுபடக் கூறுகின்றது ; அதனை அங்கே காண்க.

இரட்டைக் குழந்தைகள் பிறப்பு : மூன்று
குழந்தைகள் பிறப்பு.

67. சிதனிந் திரட்டை சேய்மால்பொன்
உதய மொற்றை சேரினுமிந்
துதயஞ் சமனு நோக்கினும்பொன்
குசன்மால் உதயம் உக்குமமும்
மிதுன யோகம் உபயத்தில்
இவர்மே லுதய மாய்நின்றால்
அதைநோக் கிடுமேல் திரிதயமாந்
புதன்கா லிரட்டை யாமன்றே.

(எ-து) சுக்கிரனும் (சிதன்), சந்திரனும் உக்கும இராசியிற்றன், உக்குமாம்சகத்திற்றன் (நிற்க), வியாழன் ஓச பவனத்திற்றன், ஓசாம்சகத்திற்றன் இருக்க, இலக்கினமும் ஓசமாகில் மிதுன யோகமாம், பெண்ணும் ஆணும் (கூடிப் பிறக்கும்).

சந்திரன் உக்கும இராசியிலிருக்க, இலக்கினமும் உக்கும இராசி யாக, இந்த இரண்டையும் புருடக்கிர கங்கள் பார்க்க இதுவுமொரு மிதுன யோகம்.

வியாழன் செவ்வாய் புதன் உக்கும இராசியிலிருக்க, இலக்கினமும் உக்குமமாக இதுவுமொரு மிதுன யோகம்.



இந்த மூன்று யோகமும் மிதுன யோகம். ஆணும் பெண்ணும் கூடி யுண்டாம்.

இந்த மூன்று மிதுன யோகத்தில் ஒரு யோகம் உண்டாயிருக்கும் (உண்டாயிருக்க) அந்த யோகத்துக்கு பிரதானக் கிரகங்கள் உபய இராசியிலிருக்க, அதுவே யுதிக்க, அதற் கேழாமிடத்தில் தன்னுடைய இராசிக் காலில் நின்று புதன் நோக்குமாகில் திரிதய யோகம் என்று பெயர். மூன்று பிரசை யுண்டாம்.

வரலாறு, மிதுன யோகப் பிரதானக் கிரகங்கள் தனுக்காலில் நிற்கத், தனு இலக்கின மாக, புதன் மிதுனக்காலில் நின்று பார்க்கில் இரண்டாணும் ஒரு பெண்ணும் உண்டாம்.

மிதுனயோகப் பிரதானக் கிரகங்கள் மீனக்காலில் நிற்கப், புதன் கன்னிக்காலில் நின்று பார்க்க இரண்டு பெண்ணும் ஒரு ஆணும் உண்டாம்.

அந்த யோகப் பிரதானரா யிருக்கிறவர்கள் தனுக் கால் மேலும், மிதுனக்கால் மேலும் நிற்கப், புதன் மிதுனக்காலில் நிற்க மூன்றும் ஆணும்.

அந்தக் கிரகங்கள் மீனக்கால்மேலும், கன்னிக் கால் மேலும நிற்கப், புதன் கன்னிக்கால்மேல் நின்று பார்க்க மூன்றும் பெண்ணும் என்றறிவது.

திரிதயம் என்பது மூன்று. கிரகங்களும், உதயமும், புதனும் இந்த மூன்றிலும் அறிவது.

" புதன்கா லிரட்டையாம் " என்றவதனால், புதன் தன்னுடைய இராசியில் ஒற்றையாங்கிச மேறில் ஆணிரட்டை ; இரட்டித்த அங்கிச மேறில் பெண்ணிரட் டையாம் (எ—று).

RangaRakes tamilnavarasam.com

அநேக குழந்தைகள் பிறக்குமென்றல்

68\. தனுவிற் றனுக்கால் தானுதிப்ப
எல்லாக் கோளுந் தனுக்காலாய்ப்
புனித வலியி னுடனிற்பப்
புதன்சுன் னொந்தப் பம்மெனிலும்
இனிதின் மிதுனக் காலினில்நின்
றிவரை நோக்கில் ஒருகோசந் (து)
அனைய விருத்தி பிரசைபொதிந்
தவனி மீது பிறந்திடுமே.

(எ-து) தனுவில் தனுக்கால் இலக்கின மாக எல்லாக் கோள்களும் தனு நவாங்கிசத்திற் பலவான்களாய் நிற்கப், புதனும் சனியும் எந்த இராசியிலாவதும் மிதுனக் காலில் நின்று பார்க்கில், கருப்பை யொன்றிலே பொதியப்பட்டு அநேகம் பிரசை உண்டாம்

"கோசந்து விருத்தி பிரசை பொதிந்து பிறக்கும்" என்பது, கோசம்—மாம்சிசம்; விருத்தி—வர்த்தனை; பிரசை—சந்ததி; 'பொதிந்து பிறக்கும்' என்றது 'மூடிப் பிறக்கும்' என்றவாறு (எ-று). 15

குறிப்பு :—'அநேக' என்னுஞ் சொல் அனைக என்றாகி அனைய என்று திரிந்தது.

முன்சொன்ன திங்கள்தோறும் கருவளர்தலும்,
அத் திங்கள்களுக்குரிய கோள்களும்.

69\. கலலங் கனமங் குரமத்தி
சென்மாங் கசநசே தனங்கருதல்
பொலியும் பிரசை யீரைந்திற்
செனிக்கும் புகர்சேர் பொன்பருதி
நிலவு சனிமா லெழுச்சிமதி
நெடிய கதிரோன் சுபாசுபங்கள்
வலியால் மெலிவால் கொழிந்திடுக
மாசை யனைய விழிமாதே.



(எ-து) முதல் மாசம் 'கலல' மாவது, சுக்கில சுரோணிதங்கள் கூடி யிருக்கப்பட்டது. இரண்டாம் மாசத்திற் கனமம்; சிக்கென்றிருக்கும். மூன்றாம் மாதத்தில் அங்குரம்; கால் கை உண்டாம். நான்காம் மாசத்தில் அத்தி; எலும்பும் நரம்பும் உண்டாம். ஐந்தாம் மாசத்திற் சென்மம்; தோல் உண்டாம். ஆறாம் மாசத்தில் அங்கிசமாகிற உரோமம், நகம், அங்குலிகள் உண்டாம். ஏழாம் மாதத்திற் சேதனம்; சீவன் பிராணன் உண்டாம். எட்டாம் மாசத்திற் கருத்து. ஒன்பதாம் மாசத்திற் றேகம் வர்த்திக்கும். பத்தாம் மாசத்திற் பிரசையாய்ச் செனிக்கும் என்றறிவது.

முதல் மாசத்துக்குச் சுக்கிரன், இரண்டாம் மாசத்துக்குச் செவ்வாய், மூன்றாம் மாசத்துக்கு வியாழன், நான்காம் மாசத்துக்குச் சூரியன், ஐந்தாம் மாசத்துக்குச் சந்திரன், ஆறாம் மாசத்துக்குச் சனி, ஏழாம் மாசத்துக்குப் புதன், எட்டாம் மாசத்துக்கு இலக்கினாதிபன், ஒன்பதாம் மாசத்துக்குச் சந்திரன், பத்தாம் மாசத்துக்குச் சூரியன் என்றறிவது.

அந்த மாசாதிபதி பெலவானாகில் அந்த மாசங்களில் கெற்பஞ் சுகம். எந்த மாசாதிபன் பெலவீனன், அந்த மாசத்திற் கெற்பம் பிரசவிக்கும் (எ-று). 16

குறிப்பு :—கர்ப்பாதானம் முதல் எழு திங்களில் கர்ப்பம் பரிபூர்ணத்தை யடையு மென்று சாராவளி (அத். 1-சு-29) கூறுகின்றது.

பகலிற்கு உறுப்பு இரட்டிதல் முதலியன.

70\. உதய மைந்தொன் பான்புந்தி
யுற்று மற்றோர் வலியிலையேல்
வதனங் கைகால் துவய குணம்
என்னு மிடப மதியமுற



RangaRakes tamilnavarasam.com

முதிய சந்தி யந்தியந்திற்
றீக்கோள் நிற்கின் மூங்கையாம்
மதியைச் சுபர்நோக் கிடிற்சின்றுள்
கழிப்பின் வாக்கு வழங்கிடுமே.

(எ-து) இலக்கினம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் இவையொன்றிற் புதன் நிற்க மற்ற கிரகங்கள் வலி யில்லாதே யிருக்கில் முகம், கால், கை துவய குணம் (எய்தும்).

இலக்கினத்திற் புதன் நிற்க, மற்றவ ரெல்லாம் பெலவீன ராகில் முகத்துவயம் (எய்தும்). துவயமாவது, பிரமாணத்திற்கு இரட்டித் திருப்பது.

ஐந்தாமிடத்திற் புதன் நிற்க, மற்றவர் பெலவீன ராகிற் கால் இரட்டித்திருக்கும்.

புதன் ஒன்பதாமிடத்தில் நிற்க, மற்றவர் பெலவீன ராகிற் கை இரட்டித்திருக்கும் என்றறிவது.

இடபத்திற் சந்திரன் நிற்கக், கர்கடக விருச்சிக மீனங்களில் அந்திய நவாங்கிசம் மூன்றிலும் பாவ ரிருக்கச் சந்திரனுக்குச் சுபயோக திருட்டி இல்லாம லிருக்கப் பிறந்தவன் ஊமையாம். ஒரு சுபக்கிரகம் வலி பெற்றுச் சந்திரனைப் பார்க்கில் சிறிது நாளைக்கு மேல் வாக்குண்டாம். கர்க்கடகச் சந்தியில் பாபர் நிற்கில் பிறந்த பொழுதே ஊமையாம். விருச்சிகச் சந்தியிற் பாபரிருக்கப் பிறக்கில் பாபர் திசாபகாரத்தில் மத்திய வயசில் சன்னிபாதம் முதலான கிலேசங்களினாலே வாய் குளறி வார்த்தை சொல்லமாட்டான். மீன இராசியில் சந்தியில் பாபர்இருக்கப், பாவர் திசாபகாரமாகப் பிறக்கில் அந்திய வயசில் வாய் குளறி ஊமையாம். இவை யந்தப் பாபருடைய திசாந்தியத்தில் ஊமையாம் பலனைச் செய்யும்.



ஒரு கிரகம் பாப சந்தியில் நிற்கில் சற்றே வாக்குக் குழறும். பல கிரகங்களு மிருக்கில் மிகவும் ஊமையாம் (எ-று). 17

குறிப்பு :—இராசிச் சந்தி இன்ன தென்பதை இந் நூல் எட்டாம் பாட்டால் உணர்க. சுப யோக திருட்டி என்பது நல்ல கோள்களின் சேர்க்கையும் பார்வையு மாகும்.

மகவு பல்முளைத்தும், முடவனாயும், சளனாயும், பிறக்கும் என்பது.

71. புந்தி யிருட்சாங் கிசமதனிற்
பூமன் சனிபல் லுடன்பிறக்கும்
இந்து கவர்க்கத் தெழச்சனிசேய்
இந்தை நோக்கு மெனிற்கூனும்
மந்தன் மதிசேய் நோக்கியிட
வருமீ னெழுமேல் முடவனுமாஞ்
சந்தி யிருட்சம் மதிபாவர்
தம்மோ டிருப்பச் சளனுமே.

(எ-து) புதனுடைய இராசி யங்கிசமான மிதுன கன்னி அங்கிசத்தில் செவ்வாய், சனி நிற்கப் பிறக்கில் பல் முளைத்துப் பிறக்கும்.

சந்திரன் கர்கடகத்தில் உதிக்க, அந்தச் சந்திரனைச் சனி, செவ்வாய் பார்க்கில் கூனனும்.

சனி, சந்திரன், செவ்வாய் நோக்க, மீனம் உதய மாகப் பிறக்கில் முடவனும்.

கர்க்கடகம், விருச்சிகம், மீனங்களின் அந்தியங்களில் (சந்தி இருட்சம்) சந்திரன் பாபருடன் கூடி நிற்கில் சளனும் என்றவாறு.

சளனுவது அசடன்; செவிடனுமாம். இவை யெல்லாம் சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் (நிகழும்) (எ-று). 18

RangaRakes tamilnavarasam.com

மகவு குறள் முதலியனவாகப் பிறக்கும் என்பது.

72. மகரங் கடைக்கால் தானுதிப்ப
மதிசுன் கதிர்நோக் கிடக்குறளாம்
பகரு முதய சுதகவமத்
திரேக்கா ணங்கள் பாவகுற
விகலு மதிசுன் கதிர்நோக்கில்
ஈனஞ் சிறந்தோன் பாதமவை
புகுமுற் கரணஞ் சேயுதமாய்ப்
புகன்றூர் நோக்கிற் சிரசிலையே.

(எ-து) மகரத்தில் அந்திய நவாங்கிசம் உதயமாகச் சந்திரன் சனி ஆதித்தன் பார்க்கு மாகில் குறளனும். சனியும் சந்திரனும் பார்க்கில் அரைக்கு மேற் குறளன். சனியும் ஆதித்தனும் பார்க்கில் அரைக்குக்கீழ்க் குறளன், மூவருங் கூடிப் பார்க்கில் சருவாங்கமுங் குறளன். இருவருக்கும் பலமுண்டானால் பெருத்திருப்பன். பெலவீனரானால் சிறுத்திருப்பன்.

இலக்கினம் ஐந்தாமிடம் ஒன்பதாமிடம் இவற்றில் முதற்றிரேக்காணம் மூன்றிலும் பாவரிருக்கில் சந்திரன், சனி, சூரியன் பார்க்கச் சர்வாங்க ஈனனுய்ச் சப்பாணியாகப் பிறக்கும்.

இலக்கினத்தில் முதற்றிரேக்காணத்தில் செவ்வாய் நிற்கச், சந்திரன் சனி, சூரியன் பார்க்கச் சிரசில்லை.

ஐந்தாமிடத்தில் முதற்றிரேக்காணத்திற் பாவரிருக்கச், சந்திரன், சனி, சூரியன் பார்க்கக், கை யில்லாமல் பிறக்கும்.

ஒன்பதாமிடத்தில் ஆதித்தத் திரேக்காணத்தில் (முதற் றிரேக்காணத்தில்) பாவரிருக்கச், சந்திரன் சனி, சூரியன் பார்க்கக் கால் இல்லாமல் பிறக்கும் (எ-று). 19



மகவின் விழி கெடும் என்பது முதலியன.

73. இரவி சிங்கத் தெழில்வலக்கண்
இந்து சிங்கத் தெழிலிடக்கண்
அரியிந் திரவி யெழிலிருகண்
அழல்சுன் நோக்கின் மொல்லையெனத்
தெரியும் வியத்திற் கதிர்வலக்கண்
திங்க ளிடக்கண் தீக்கோனுக் (கு)
உரிய வாரு நற்கோனுக்
குறிற்புற் புதமாங் கண்ணென்றே.

(எ-து) ஆதித்தன் சிங்க இலக்கினத்தில் உதிக்கச், செவ்வாய் சனி நோக்க, வலக்கண் கெடும்.

சந்திரன் சிங்க இலக்கினத்தில் உதிக்கச், சனி, செவ்வாய் நோக்கில் இடக்கண் கெடும்.

ஆதித்தனும், சந்திரனும் சிங்க இலக்கினத்தில் உதிக்கச், செவ்வாய் சனி நோக்க, இரண்டுகண்ணும் கெடும்.

சிங்க இலக்கினத்தில் ஆதித்தன், சந்திரன் உதிக்கச், சுபரும் பாபரும் நோக்கக், குழிக்கண்ணனும். (கண்ணில் வெளுப்புள்ளவனுவன் என்று சாராவளி (அத்.-8-சு-51) கூறும்.

சிங்க இலக்கினத்தில் ஆதித்தன் இருக்கச், சுபரும் பாபரும் நோக்க, வலக்கண்ணில் மொல்லை யுண்டாம். சிங்க இலக்கினத்திற் சந்திரன் இருக்கச், சுபரும், பாபரும் நோக்க, இடக்கண்ணில் மொல்லை யுண்டாம்.

பன்னிரண்டாமிடத்திற் சூரியன் நிற்க, சுப திருட்டி யில்லாமல் சனி செவ்வாய் பார்க்க வலக்கண் கெடும், சுபயோக திருட்டி யுண்டாகில் புற்புதக் கண்ணன்.

RangaRakes
tamilnavarasam.com

பன்னிரண்டாமிடத்திற் சந்திரன் நிற்கச், சுபயோக திருட்டி யில்லாமல், சனி செவ்வாய் பார்க்க, இடக்கண் கெடும். சுபயோக திருட்டி யுண்டாகில் இடக்கண்ணிற் பூப்படும் (எ-று). 20

குறிப்பு :—இப் பாட்டிற் கூறியவற்றைச் சாதக சிந்தாமணி 544, 554, 558 என்னும் எண்களுள்ள செய்யுட் பொருளுடன் ஒப்பிட் டறிக. சூடாமணி உள்ள முடையான் " பச்சை மதியுங் கதிரவனும் பால னுயிர்க்குப் பன்னி ரண்டில், கச்சு முலையாய் நிற்பாரேல் கண்போம் ஒன்றேல் ஒருகண்போம் " (222) என்று கூறுவதை மேற்பாட்டுக் கருத்துடன் ஒப்பிட்டுக் காண்க. மொல்லை - கண்ணிற் பூவிழுதல்.

மகவு பிறக்குங் காலம்

74. தற்கா லத்தின் மதிசகித
மிந்து சார்ந்த துவாதசக்கால்
வற்கா லியின்முன் னெண்ணியதி
லிருந்து வருநாண் மகப்பிறக்கும்
முற்கா லத்தி னிரவுபகல்
முன்னும் பாகை கலைதியதி
சொற்கா லங்கள் நாழிகையும்
மதியா லுணர்ந்து சொல்லுகவே.

(எ-து) தற்காலமாவது ஆதான காலந்தான், பிரச்சின காலந்தான். மதி சகித மாவது சந்திரனோடு கூடியது. (இந்து சார்ந்த துவாதசக் கால்) சந்திரன் நின்ற துவாத சாங்கிசம் சார்ந்தது என்றது, பத்தா மாதம் ஆதான காலத்திற்ருன் பிரச்சின காலத்திற்ருன் சந்திரன் எந்தத் துவாதெசாங்கிசத்தில் நிற்கிருன் என்றறிவது. அது (அந்த எண்ணைக் கொண்டு) மேடாதியாக எண்ணி, அத்தனையாம் இராசியில் சந்திரன் வருநாள் பிரசவம் ஆகும். இது பிரதானம்,



பிரச்சின காலத்தில் சந்திரனை மேடாதியாக எண்ணி, எந்தத் துவாதசாங்கிசத்தில் நிற்கிருன், முன்பில் அந்தத் துவாதசாங்கிசத்தில் சந்திரன் வருநாள் பிறக்கும்.

சந்திரன் எந்த இராசியில் நின்ருன், அந்த இராசியில் சந்திரன் வருநாள் பிறக்கும்.

' மதி சகிதம் ' என்றது சந்திரன் நின்ற நவாங்கிச துவாதசாங்கிசம் எத்தனையா மிராசியோ அத்தனையா மிராசியில் சந்திரன் வருநாள் பிறக்கும்.

சந்திரன் நின்ற துவாதசாங்கிச இராசி திவா இராசியோ, நிசியிராசியோ என்றறிவது. அது திவா இராசியாகில் பகலிற் பிறக்கும்; நிசி இராசியாகில் இராத்திரியிற் பிறக்கும்.

அந்தக் கிரக புடத்தின் பாகை, கலை எத்தனையோ அத்தனை தியதியில் அத்தனை நாழிகை செல்லும்போது பிறக்கும் (எ-று). 21

குறிப்பு :—வற்காலி—மேட இராசி. வற்காலி என்னுஞ் சொல் ஆட்டிற்குப் பெயராய் மேட இராசியை உணர்த்துகிறது.

கர்ப்பாதான காலத்திலோ அல்லது பிரச்சின காலத்திலோ சந்திரன் எத்தனையாவது துவாதசாங்கிசத்தில் இருக்கின்ருன் என்றுணர்ந்து அத்தனையாவது எண்ணுல் மேட இராசியிலிருந்து எண்ணிஞல் எந்த இராசி வருமோ அந்த மாதத்தில் அந்த இராசியில் சந்திரன் வரும்போது பிரசவம் ஏற்படும் என்று கூறுகின்றது சாராவளி (அத்-8-சு-48).

மூன்று வருடத்திற் பிறப்பது. பன்னிரண்டு வருடத்திற் பிறப்பது.

75. மந்தன் பவன மெழச்சனியேழ்
வரின்மூ வாண்டு தனிற்பிறக்கும்
இந்து பவன மெழவிந்தேழ்
ஈரா ருண்டு தனிற்பிறக்கும்

RangaRakes tamilnavarasam.com

சிந்தித் திடுஞ்சூ தகிகாலம்
சேரும் புணர்ச்சி பெருங்காலம்
இந்த முக்கா லமுமுணர்ந்தே
அவனி மீதி லியம்புகவே.

(எ-து) சனியினுடைய இராசியில் சனியினுடைய அங்கிசம் உதிக்க, ஏழாமிடத்திற் சனி நிற்கக் கர்ப்பத் தான மாகில் (கருப்பத்திலுள்ள மகவு) மூன்று வருடத்திற் பிறக்கும்.

கர்க்கடக இலக்கினத்தில் கர்க்கடக நவாங்கிசத்தில் கர்ப்பத் தானம் ஆய, ஏழாமிடத்திற் சந்திரன் நிற்க உண்டான கர்ப்பம் பன்னிரண்டு வருடத்திற் பிறக்கும்.

இந்த யோகங்களுக்குப் பின்னே ஒரு யோக திருட்டி யில்லா திருக்கில் நிச்சயம் ஸ்திரீ சூதக காலமும், நிஷேக காலமும், பிரசவ காலமும் இந்த மூன்று கால முந் தேர்ந்து பூமியில் உள்ளவர்க்கு அறியத் தக்கதாகச் சொல்லுக (எ-று).

குறிப்பு :- பெருங்காலம் - பிரசவ காலம்.

இவ் அத்தியாயத்தின் கூறும் பொருள்.

76. காதலி மருண னென்றல்
கருப்பத்தாய் தந்தை யாயுள்
ஏதமி லாண்பெண் ணென்றை
இரட்டையிற் கூன்மு டங்கள்
கோதுடை யூமை திருட்டி
குறைகுறள் செவிடு மோர்ந்து
மாதுபெற் றிடுநா ளியாவும்
வகுத்தன னிமிங்கன் றனே. 23

நான்காவது
நிஷேக அத்தியாயம்
முற்றும்.

ஐந்தாவது

## சென்ம அத்தியாயம்.

பரசாதகன் என்பது.

77. இந்து வுதயந் தனைநோக்கா
தென்னிற் பிதாப்புத் திரனன்றித்
தந்த கதிரோன் பத்தாகிச்
சரமேல் விதேசன் திரமென்னில்
வந்த தந்தை பதியுளனும்
மற்ற வுபய விராசியெனிற்
றந்தை வழியி லுள்ளனென்றே
உணருந் தாமக் குழல்மயிலே.

(எ-து) சந்திரன் இலக்கினத்தைப் பாராம லிருக்கப் பிறந்தவன் பிதா புத்திரன் அல்லன்.

ஆதித்தன் பத்தாமிடத்தி லிருக்க (1) அது சர இராசியாகில் பிதா பரதேசத்தில் உள்ளவன். (2) திர இராசியாகில் பிதா சுதேசத்திலிருந்து பச்சனும் இருக்கும். (3) உபய இராசியாகில் சுதேசத்திலும் பர தேசத்திலுமில்லாமல் இடையிலுள்ள பதியிற் பரோச்சனு யிருப்பன்.

இந்த மூன்று யோகத்துக்கும் சந்திரன் இலக் கினத்தைப் பாராம லிருக்கி லாம் (எ-று). 1

குறிப்பு :- இலக்கினம் சந்திரன் இவைகளை ஒரு விதத்திலும் வியாழன் நோக்காம லிருக்கும் பொழுது பிறந்தவன் கள்ள புருடனுக்குப் பிறந்த புதல்வனுவான் என்று சாராவளி



RangaRakes tamilnavarasam.com

(அத்-9-சு-32) கூறுகின்றது. ஒரு விதத்திலும் என்றது முழு நோக்கமன்றிக் கால், அரை, முக்கால் நோக்குகளே.

இதுவும் அது.

78. உரைத்த பரசா தகயோகத்
துதயந் தன்னிற் சனியெனினும்
தெரித்த வேழா மிடந்தன்னிற்
செவ்வாய் நிற்கு மாமெனினும்
பொருத்த புகர்மாற் கிடைநடுவிற்
பிறைநின் றிடினும் பரசாதன்
சுரித்து நெரித்து நெய்த்திருண்ட
தொடலைச் சுரியற் பிணைவிழியாய்.

(எ-து) சந்திரன் இலக்கினத்தைப் பாராமலிருக்கிற் பர சாதக யோக மென்று பெயராம்.

உதயத்திற் சனி நிற்கிலும், ஏழாமிடத்திற் செவ்வாய் நிற்கிலும், புதன் சுக்கிரனுக்கு நடுவே சந்திரன் நிற்கிலும் இந்த மூன்று யோகத்திற்கும் சந்திரன் உதய இலக்கினத்தைப் (ஒரு விதத்திலும்) பாராமலிருக்க பிறந்தவன் பரசாதகனும் (எ-று). 2

பாம்பு பிறத்தலும், மகவுடன் பாம்பு சுற்றிப்பிறத்தலும்.

79. திங்கள் விருச்சி கேசன்றன்
திரேக்கா ணத்துச் சேர்ந்துநிற்ப
இங்கு சுபக்கோள் தாமெல்லாம்
இலாபந் தனந்தே விற்சர்ப்பம்
பங்கு சேயின் பவனமெழப்
பகர்தே ளதிபன் றிரேக்காணந்
தங்குந் திங்க ளாமென்னிற்
சர்ப்பஞ் சுற்றி மகப்பிறக்கும்.

(எ-து) சந்திரன் விருச்சிகேசனு யிருக்கப்பட்ட (செவ்வாயின)து திரேக்காணத்தில் நிற்க, சுபக்கோளெல்லாம்



பதினோராமிடத்தில் நிற்க, பாவ இலக்கினத்திற் பிறக்கச் சர்ப்பம் பிறக்கும்.

சனியின் வீடுதான் செவ்வாயின் வீடுதான் இலக்கின மாகச், செவ்வாய்த் திரேக்காணத்திற் சந்திரன் நிற்கில் அப் பொழுது பிறந்தவன் சர்ப்பஞ் சுற்றிப் பிறக்கும் (எ-று). 3

குறிப்பு :—இரண்டாவது அடிக்குள்ள உரையை நோக்கினுல் "இலாபந் தரியா ரிற்சர்ப்பம்" அல்லது "இலாபம் பாவ ரிற் சர்ப்பம்" என்று பாடங் கொள்வது பொருந்தும். ஏட்டிலுள்ளபடியே பாடங் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனுல் சாதகாலங்காரம் ;

" சந்திரன் பாவ ராசி
தனிற்குசன் றிரேக்கா ணத்தில்
உந்திடிற் சசிக்கி ரண்டில்
உற்றபன் னிரண்டில் நல்லோர்
வந்துதா னிருக்கிற் பெற்ற
மகவுடன் பிறக்கும் பாம்பு
செந்திரு மாதே பாம்பாய்ச்
செனிக்கினுஞ் செனிக்குந் தானே " (422)

என்று கூறுகின்றது. இப் பாட்டில் தனஸ்தானமாகிய இரண்டாமிடம் கூறப்பட்டுள்ளது. "சுபர்கள் இரண்டாமிடம் பதினோராமிடத்தில் நிற்க" என்றே (அத்-9-சு. 44) சாராவளியும் கூறுகின்றது.

மகவு இரண்டு கொடி சுற்றிப்
பிறக்கு மென்பது.

80. சதுர்ப்பத விராசி தன்னிற்
றபனனே சார்ந்து நிற்ப
இதிற்பல முடைய ராசி
ஏனையோ ருபய மெய்த

மதித்தமாங் கிசமி ரண்டு
வளைத்துறப் பிறக்கு மென்று
விதித்தசோ திடநூல் வல்லோர்
மேதினிக் கோதி னரே.

(எ-து) சதுர்ப்பத இராசியில் ஆதித்தன் நிற்க, மற்றக் கிரகங்களெல்லாம் வலிவு பெற்று உபய இராசியில் நிற்கில் (குழந்தை) இரண்டு கொடி சுற்றிப் பிறக்கும் (எ-று). 4

குறிப்பு :—சதுர்ப்பத இராசி என்பன நான்கு கால் இராசிகளாம், அவை மேடம், இடபம், சிங்கம், தனுசின் பிற்பாகம், மகரத்தின் முற்பாகம் என்பனவாம். இப் பாட்டின் கருத்தினைச் சாராவளி சிறிது வேறுபடக் கூறுகின்றது. "சூரியன் சதுட்பாத இராசியிலும், மற்ற எல்லாக் கிரகங்களும் பலவத்தர்களாகி உபய இராசியிலு மிருந்தால், ஒரு கர்ப்பாசயத்தில் குடலினால் சுற்றப்பட்டு இரண்டு குழந்தைகள் பிறக்கும்" என்பதாம் (அத்-9-சு-45)

மகவின் தொப்புட் கொடி.

இன்ன உறுப்பிலே சுற்றியிருக்கப் பிறக்குமென்பது.

81. தகர்தா புருவும் இலேயத்திற்
சனிசே யிவையே யுதித்திடினும்
இகலுங் குருர ளிதிலெழினும்
இயம்பும் உதய நவாங்கிசமாய்ப்
பகரும் பவனஞ் சிராதியதாய்ப்
பகர்காத் திரமே தாங்கவற்றிற்
புகலுந் தொப்புட் கொடிசூழ்ந்து
புதல்வன் பிறக்கும் பூங்குழலே.

(எ-து) மேடம், இடபம், சிங்கம் இவற்றிலொன்று இலக்கினமாக, அந்த இலக்கினத்திற் சனி நிற்கிலும் செவ்வாய் நிற்கிலும், உதித்த இராசியினுடைய நவாங்கிசம் எந்த இராசியோ அந்த இராசிக்கு "சிரமுகம்



உரச்சு" (இந்நூல் 5) என்று முன் சொன்ன அடைவிலே அங்கங்கண்டு, அந்த உறுப்பிலே தொப்புட்கொடி சுற்றிப் பிறக்கும் (எ-று). 5

குறிப்பு :—தாபுரு— இடபம். இலேயம்—சிங்கம் குருரன் —செவ்வாய். இப் பாட்டின் கருத்தினை,

"கன்னு ரிடபந் தகர்சிங்கம் கண்ட சன்ம லக்கினமாய்ப், பண்ணுர் சனிசெவ்வாய் கூடிப் பார்க்கிற் கொடிரண்டுளவாகும்' (449) என்னும் சாதகாலங்காரப் பாட்டால் அறிக. சாதக சிந்தாமணி "சிந்தைகூ ரிடப மேடஞ் சிங்கமே யுதயமாகப், புந்தியும் சனியுங் கூடப் பொருந்திடு மகவே தோன்றில் கொந்தவி ழுடலிற் பின்னிக் கொடிசுற்றிப் பிறக்கு மென்பர்" (492) என்று சிறிது வேறுபட்டுக் கூறுகின்றது.

பரசாதகன் என்பது

82. கூறு மதியை யுதயத்தைக்
குருநோக் காதே யாயிடினும்
சீறுங் கோளே மதியுறினும்
திங்கள் கதிரைச் சேர்ந்திடினும்
ஈறில் மதிக்கப் பொன்வர்க்கந்
திட்டி நோக்க மில்லையெனில்
மாறுந் தனது பிதாவன்றிப்
பரசா தகனே யெனவகுப்பர்.

(எ-து) சந்திரனையும் இலக்கினத்தையும் வியாழன் நோக்கா திருக்கில் பிறந்தவன் தன்னுடைய தந்தை யல்லாதே பிறர்க்குச் சனித்தவன் (1)

பாவருடனே சந்திரன் கூடி நிற்பினும் பரசாதகன். (2)

சந்திரன் ஆதித்தனுடன் கூடி நிற்பினும் பரசாதகன் (3)

RangaRakes tamilnavarasam.com

இந்த மூன்று யோகத்திற்கும் சந்திரன் வியாழத்தினுடைய சட்வர்க்கத்தில் ஒன்றிலும் நில்லாமல், வியாழன் திருட்டியு மில்லாமல் வியாழன் கூடாமலு மிருக்கில் நிச்சயம் (எ-று). 6

குறிப்பு :- இத் நூல் 77-ஆம் பாட்டின் குறிப்பினை நோக்குக. இப் பாட்டின் கருத்தினை,

"சிறந்த மதியையுஞ் சென்ம மனையையும்
அறிந்த பார்வைக ளரசனைக் காவிடில்
உறைந்த கதிர்மதி யொன்பதி னுற்றிடில்
பிறந்த சேய்பர சாதகம் போற்றுமே"

(582) என்னுஞ் சாதகாலங்காரப் பாட்டாலும் அறியலாம்.

தந்தை தளைப்படுவன் என்பது.

83. கதிரோன் தீய இருட்சமுறக்
கதிர்க்குத் தியூனம் நவமானம்
திதமாந் தீய இருட்சமதாத்
தீக்கோள் தந்தை பந்தமுறும்
அதுதான் சரமேற் பரதேசத்
தாகுந் திரமேற் சுயதேசம்
விதியா முபயம் வழிபந்தம்
பம்மால் விளம்பு மெல்லியலே.

(எ-து) ஆதித்தன் பாவ இராசியிலிருக்க, ஆதித்தனுக்கு ஏழாமிடம், ஒன்பதாமிடம், ஐந்தாமிடம் பாவ இராசியாகிப், பாவக்கிரகங்க ளிருப்பின் பிதாவுக்குப் பந்தம் உண்டாம்.

ஆதித்தன் நின்ற இராசி சர இராசியாகில் பிதாவுக்கு விதேசத்திற் பந்தம் உண்டாம். திர இராசியாகில் சுதேசத்திற் பந்தம் உண்டாம். உபய இராசியாகில் வழியிற் பந்தம் உண்டாம். ஆதித்தன் நீசனாகில் நிகள



பந்தனன். உச்சனாகில் உக்கிர இருட்ட காரியத்தால் (காரியத்தால் ?) பந்தனன்.

பந்தமாவது காவல், விலங்கு, கட்டுண்ணல் (எ-று). 7

குறிப்பு :—இப்பாட்டின் கருத்து சாராவளியிலும் (அத்-9-சு-30) கூறப்பட்டுள்ளது. சாதகாலங்காரம் "மற்றும் பாவர், உரிமையாம் பாவ ராசி யுறிற் கதிர்க் கைந்தேழொன்பான், பெரும் பாவர் நிற்கத் தந்தை சிறையுளான் பரதேசத்தில்" (425) என்று கூறுகிறது.

நீரின் நடுவே படகில் மகப்பெறுவாள் என்பது.

84. நண்டி னிறைந்த மதிநிற்க
நற்கோள் சுகத்திற் றுனிற்ப
உண்டாம் புந்தி யிலக்கினத்தி
லுதிக்கு மெனினு மிவையன்றித்
தண்டார் சலாப முதித்தாற்குச்
சாமித் திரத்திற் சசியுறினும்
வண்டார் குழலாள் நீர்நடுவே
படகில் மகவைப் பெற்றிடுவாள்.

(எ-து) கர்க்கடகத்திற் பூரண சந்திரன் நிற்கச், சுபக் கோள்கள் நான்காமிடத்தில் நிற்கப், புதன் உதயத்தில் நிற்கினும்; இதுவு மொரு யோகம்.

இலக்கினம் சல இராசியாகப் பூரண சந்திரன் ஏழாமிடத்தில் நிற்கினும்; இதுவு மொரு யோகம்.

இந்த யோகங்கள் உண்டாகில், செலத்தின் நடுவே தோணியிற் பிறக்கும் (எ-று). 8

குறிப்பு :—இப்பாட்டின் கருத்தைச் சாராவளியாலும் (அத்-9-சு-7) அறியலாம். ஆனால், இரண்டாவது யோகத்தை "இலக்கினம் நீர் இராசியாய், நான்காமிடத்திற் சந்திர னிருந்தால் தோணியில் மகவு பிறக்கும்" என்று வேறுபட அந்நூல் கூறுகின்றது.

RangaRakes tamilnavarasam.com

நீர்லேயாதல், நீர்க்கரையிலேயாதல்
மகப்பே றுண்டாம் என்பது.

85. சலில வோரை தானுதிப்பச்
சலில வோரை நிறைமதியாய்
வலியி னகநோக் கிடுமெனினும்
அன்றி மதியஞ் சலபம்மில்
நிலவு சுகமே சூரணங்கள்
நிகழு முதயம் நீர்ப்பம்மாய்
உலவு மெனினுஞ் சலக்கரையில்
ஓடிப் பெறுமோன் டொடியாளே.

(எ-து) சல இராசி இலக்கின மாகச், சல இராசியிலே பூரணச் சந்திரன் நின்று இலக்கினத்தை நோக்கிலும் ஒரு யோகம்.

சந்திரன், நான்காமிடம், பத்தாமிடம் சல இராசியாய் அதிலே நிற்க, உதய இலக்கினம் சல இராசியாகில் இதுவும் ஒரு யோகம்.

இந்த இரண்டு யோகத்திற்கும் சலத்திலேயாதல், சலக்கரையிலேயாதல் (மகப்) பிறக்கும் (எ-று). 9

குறிப்பு:—இப் பாட்டின் கருத்தைச் சாராவளியாலும் (அத்-9-சு-6) அறியலாம். சல இராசிகள் கடகம், மீனம், மகரத்தின் பிற்கூறு என்னும் இவையாம்.

மகவு சூட்சும தலத்தும் குழியிலும்
பிறக்கு மென்பது.

86. உதயந் தனக்கு வியத்தெனினும்
உடுவே சற்கு வியத்தெனினும்
முதிய சனிநின் றிடப்பாவர்
நோக்கின் மொழியுஞ் சூட்சதலம்
மதிலக்கினந்தேள் கடகமதாய்
மந்த னுதிப்ப மதிநோக்கில்
விதியாங் குழியிற் பிறந்திடுகை
மெய்யாம் விரைசேர் கருங்குழலாய்.

(எ-து) இலக்கினத்திற்குப் பன்னிரண்டா மிடத்தாதல், சந்திரனுக்குப் பன்னிரண்டா மிடத்தாதல், சனி நிற்கப், பாவக் கிரகங்கள் நோக்கில் இரகசியமாய்ச் சூட்சிக்க ரட்சிக்க இருக்கிற தலத்திலே பிறக்கும்.

சந்திர இலக்கினம் விருட்சிகம் கர்க்கடகத்திற் சனியுதிப்பச், சந்திரன் நோக்கில் குழியிற் பிறக்கும் (எ-று). 10

குறிப்பு:—இலக்கினம் கடக விருச்சிக மாகி அதில் சனி நின்று, அந்தச் சனியைச் சந்திரன் பார்த்தால் மகப்பேறு குழியில் ஏற்படு மென்று சாராவளி (அத்-9 சு-8) கூறுகின்றது. சூட்சதலம்—காவலுடன் கூடிய சிறைச்சாலை. 'மதிலக்கினம்' என்பதற்குக் 'கருதப்படும் இலக்கினம்' என்றல் நன்று.

மகவு பிறக்குமிடம்.

87. சலவோ ரையினிற் சனியுதிப்பச்
சாமன் கதிரோன் சந்திரனும்
இலகுஞ் சனியை நோக்கிடில்
இயம்புங் கிரீடா பவனமுடன்
உலவுந் தேவா லயமுடனே
உவராம் மணல்சேர் தலமதனில்
நிலவு கின்ற மகப்பிறக்கும்
என்றே நிகழ்த்து நேரிழையே.

(எ-து) சல இராசியிற் சனி யுதிக்க, அந்தச் சனியைப் புதன் பார்க்கில் கிரீடா பவனத்திற் செனனம். ஆதித்தன் நோக்கில் தேவாலயத்திற் செனனம். சந்திரன் நோக்கில் உவர்நிலத்தில் (அல்லது) மணலுள்ள தலத்திலாதல் பிறக்கும் (எ-று). 11





RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :—"இலக்கினம் சல இராசிகளில் ஒன்றாகி அதிற் சனி நிற்க" என்பது கருத்தாகும். இப் பாட்டின் கருத்தைச் சாராவளியாலும் (அத்-9-சு-9) அறிந்து கொள்ளலாம்.

இதுவும் அது.

88. மனிதர் பம்மிற் சனியுதிப்ப
வளர்சேய் நோக்கின் மயானதலம்
இனிய சோமன் புகர்நோக்கில்
இல்லே மனதுக் கினியத்தலம்
புனிதக் குருநற் கருமதலம்
புந்தி நோக்கிற் சிற்பதலம்
பனியின் பகைநோக் கிடில்வேந்தர்
பசுவோ டும்ப ராலயமாம்.

(எ-து) நரர் இராசியிற் சனி யுதிக்க, அந்தச் சனியைச் செவ்வாய் நோக்கில் மயானத்திற் பிறக்கும். அந்தச் சந்திரனாதல் சுக்கிரனாதல் நோக்கில் மனத்திற்கு இரம்மியமான தலத்திற் பிறக்கும். அந்தச் சனியைக் குரு பார்க்கில் அக்கினி கோத்திர தலம் (அல்லது) சத்கர்ம தலத்திற் பிறக்கும். அந்தச் சனியைப் புதன் பார்க்கிற் சிற்பதலத்திற் பிறக்கும். அந்தச் சனியை ஆதித்தன் பார்க்கில் இராச பவனத்திலாதல், பசுச் சாலையிலாதல், தேவாலயத்திலாதல் பிறக்கும் (எ-று). 12

குறிப்பு :—நரர் இராசி மிதுனம், கன்னி, துலாம், தனுவின் முற்பாதிகளாம். இப் பாட்டின் கருத்தினைச் சாராவளியாலும் (அத்-9-சு-10, 11) அறிக.

இதுவும் அது.

89. பருத்த வுதயாங் கிசமிரண்டின்
வலியோர்ந் ததனுற் சரமார்க்கம்
தொகுத்த திரந்தன் னில்லுபய
முன்றில் சுவர்க்கந் தன்மனையாம்



மிருத்தி நிலமும் பரநிலமேல்
விளம்பு மனையும் பரமனையாம்
பருத்த வுதய வங்கிசத்தாற்
பகர்மந் திரங்கள் பைந்தொடியே.

(எ-து) தற்கால இலக்கினமும் அதனுடைய நவாங்கிசமும் (ஆகிய) இரண்டிலும் வலி ஏதென்றறிவது ; அதில் (அவ் விரண்டில்) வலி பெற்ற இராசி சர விராசியாகில் மார்க்கத்திற் பிறக்கும். திரவிராசியாகில் கிரகத்திற் பிறக்கும். உபய இராசியாகின் முற்றத்திற் பிறக்கும். இலக்கினாதிபனாதல், இலக்கின நவாங்கிசாதிபனாதல் சுபச் சேத்திரத்தில் நிற்கில் பர கிரகத்திற் பிறக்கும். இலக்கினத்தினுடைய துவாதசாங்கிசம் சமான பூமியிற் பிறக்கும். இலக்கின நவாங்கிசத்தினாலே சல, தல, கிராம, ஆரண்ணிய, நகர பூமியும், யோசித்துக் கொள்ளவும் (எ-று). 13

குறிப்பு :—"சுவர்க்கம் தன் மனையாம் மிருத்தி நிலமும் பர நிலமேல் விளம்பு மனையும் பரமனையாம்" என்ற பகுதிக்குக் காணப்படும் உரை பிழையுள்ளதாகத் தெரிகிறது. அது வேறு ஏடுகளால் திருத்தமடைய வேண்டும். அதற்கு, "இலக்கினாதிபனாதல், இலக்கின நவாங்கிசாதிபனாதல் ஸ்வ க்ஷேத்திரத்திலிருப்பின் தன் மனையில் பிறக்கும் ; பர க்ஷேத்திரத்திலிருப்பின் பர கிரகத்திற் பிறக்கும்" என்பதே பொருளாம்.

இப் பாட்டின் பொருளைச் சாராவளியாலும் (அத்-9-சு-3, 4,) அறியலாம்.

மகவு தாயால் இகழப்படுதலும், அது நீண்ட ஆயுளையும் சுகத்தையும் பெற்றிருத்தலும் கூறப்படுகிறது.

90. சேயின் சனியின் திரிகோணம்
திங்க ளுடனே பருதியுறில்
தாயும் மகவைத் தூசிக்கும்
சசியைக் கதிரைப் பொன்னோக்கில்

RangaRakes tamilnavarasam.com

ஆயுள் தீர்க்க மவையுண்டாம்
அன்றி யவனுஞ் சுகியாகும்
வேயுங் கழையு மமைதோளின்
வேலோ டிகலுங் கயல்விழியாய்.

(எ-து) செவ்வாய் சனிக்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் இவைகளில், சந்திரனும் சூரியனும் நிற்கில் பிறந்த மகவு தாயினாலே இகழப்படும்.

இந்த யோகமுடைய சந்திரனையாதல், சூரியனையாதல் வியாழம் நோக்கில் அந்தச் சந்ததி (மகவு) தீர்க்காயுசாதக சுகியாயிருக்கும் (எ-று). 14

தாயால் சேய் மரித்தல் முதலியன.

91. மதியை யுதயந் தனைப்பாவர்
நோக்க மதிக்கேழ் சேயுறினும்
உதய மதியம் பாவருற
ஆயஞ் சனிசே யுற்றிடினும்
விதியிற் றுயாற் சிசுமரிக்கும்
வெட்சி மதியைச் சுபர்நோக்கில்
அதுவே வருணம் நன்னோக்கேல்
ஆயுள் தீநோக் கற்பாயுள்.

(எ-து) சந்திர இலக்கினத்தையும், சென்ம இலக்கினத்தையும் பாவக்கோள் நோக்கச், சந்திரனுக்கு ஏழாமிடத்திற் செவ்வாய் நிற்கிலும்; சந்திர இலக்கினத்திலும், சென்ம இலக்கினத்திலும் பாவக்கோள் நிற்கப், பதினோராமிடத்திற் சனி, செவ்வாய் நிற்கிலும்; (இந்த இரண்டிற்கும்) தாயினாலே பிறந்த குழந்தை இறக்கும்.

இலக்கினத்தையும், சந்திர விலக்கினத்தையும் சுபக்கிரகம் நோக்கில் அந்தக் கிரகத்தினுடைய வருணமுடையவரை (அம் மகவு) சேரும். சுபர் நோக்கில் தீர்க்காயுள்; பாவர் நோக்கில் அற்பாயுசாம் (எ-று). 15



குறிப்பு:—சந்திரன் இலக்கினத்தி லிருந்து தீயவரால் நோக்கப்பட்டிருக்க, ஏழிற் செவ்வாய் நின்றால் அம் மகவு தாயால் விடுபட்டுப் பின் இறந்துவிடும். இது போல சந்திரன் தீயவரால் பார்க்கப்பட்டு இலக்கினத்தி லிருக்க, செவ்வாயும் சனியும் சேர்ந்து பதினொன்றில் இருந்தால் தாயால் விருப்பமின்றி விடப்பட்டு அக் குழந்தை இறந்துவிடும் என்றும்; மேலே கூறியவாறுள்ள சந்திரனை வலிவுள்ள நற்கோள் நோக்கின் அக் கோளுக்குரிய சாதியினரால் அக் குழந்தை வளர்க்கப் பெறுமென்றும்; சந்திரனை நல்லோரும் தீயோரும் பார்ப்பின் அது பிறரால் வளர்க்கப் பெற்றுச் சிறிது காலத்துள் இறந்துவிடும் என்றும்; மேலே கூறிய எல்லா யோகங்களிலும் வலிவுள்ள வியாழனுடைய முழு நோக்கத்தைச் சந்திரன் பெற்றால் அக் குழந்தை எச் சாதியினரால் வளர்க்கப் பட்டாலும் நீண்ட ஆயுளுடனிருக்கு மென்றும் சாராவளி (அத்-9-சுலோ.-38, 39, 40) கூறுகின்றது.

மகவு பிறக்கு மிடம்.

92. அன்னை தந்தைக் கிரகங்கள்
அவருள் பலமே தவர்மனையாம்
மன்னுஞ் சுபர்கள் நீசமுறில்
மதிலின் கீழுந் தருக்கீழும்
துன்னு முதய மதிபொருந்தச்
சொல்லுங் கோள்கள் நோக்கிலையேல்
உன்னுங் காட்டிற் பிறந்திடும்நோக்
குண்டேல் மனித ருளரென்றே.

(எ-து) மாதுர் காரகன் பிதுர் காரகன் இவர்களில் எவன் பலவானோ அவனுடைய கிரகத்திற் பிறக்கும்.

சுபக்கிரகங்கள் நீசத்தில் நிற்கில் மதிலின் கீழாதல், மரத்தின் கீழாதல் பிறக்கும். சென்ம இலக்கினத்தில் சந்திரன் நிற்க, ஒரு கிரகமும் நோக்காதே யிருக்கில் ஒரு

RangaRakes tamilnavarasam.com

வ்ரும் இல்லாத காட்டிற் பிறக்கும். பல கிரகங்கள் நோக்கில் மனிதருள்ள இடத்திற் பிறக்கும் (எ-று). 16

குறிப்பு:—சூரியன் வலிவுள்ளவனுயின் தந்தையின் வீட்டிலும், சுக்கிரன் வலிவுள்ளவனுனல் தாயின் வீட்டிலும் சனி வலிவுள்ளவனுனல் தந்தையின் உடன் பிறந்தார் வீட்டிலும், சந்திரன் வலிவுள்ளவனுனல் தாயின் உடன்பிறந்தவள் வீட்டிலும் மகவு பிறக்கும். பகற் காலத்திற்கு இவ்வாறு கூறுக. இரவாயின் சனி தந்தை காரக னென்றும், சந்திரன் தாய்க் காரகனென்றும் சூரியன் தந்தையின் உடன் பிறந்தார்க்குக் காரக னென்றும் சுக்கிரன் தாயின் உடன்பிறந்தாட்குக் காரகனென்றும் அறிக.

மூன்றிற்குக் குறையாமல் சுபக்கோள்கள் நீசராயிருப்பின் மதிலருகிலும், மரத்தின் கீழும், ஆற்றின் கரையிலும் மகவு பிறக்கு மென்றும்; ஒரு இராசியில் கிரகங்களெல்லாம் நின்று வெவ்வேறு இராசியான இலக்கினத்தையும் சந்திரனையும் எவ்வகையிலும் பார்க்காம லிருப்பின் காட்டில் மகவு பிறக்குமென்றும் அறிக. (சாராவளி ஆத்-9-சு-4-5).

சூதகி சயனமும், மகவு பிறக்கும் வகையும்.

93. மந்தன் இருட்சாங் கிசமிருந்து
மருவு மெனினும் மதிசுகமாய்
மந்த னுறநோக் கினுஞ்சலபம்
மதியைச் சனிநோக் கினுஞ்சயனம்
அந்தி யவைகு தகியிபுகம்
ஆங்கோ ணீச மவனியதாந்
தந்த வுதயம் போற்செனனம்
சசிக்கேழ் சுகந்தீக் கோடாய்நோய்.

(எ-து) சனி நவாங்கிசத்திற் சந்திரன் நிற்கில் இருட்டிற் சயனம், நான்காமிடத்திற் சந்திரன் நிற்கச் சனி கூடினும், பார்க்கினும் இருட்டிற் சயனம். சல இராசியிற் சந்திரன் நிற்க, அந்தச் சந்திரனைச் சனி



பார்க்கினும் இருட்டிற் சயனம். இப்படிக்குச் சூதகி சயனம் சொல்லவும்.

அன்றியும், நிஷேக காலத்தினும் இந்தப்படி சயனம் சொல்லவும்.

நான்காமிடத்தில் (இபுகத்தில்) மூவராதியா யுள்ள கிரகங்கட்கு நீசத்திதி உண்டாகில் வெறு நிலத்திற் சயன மென்று சொல்வது.

உதய இராசி எந்தப்பிரகாரம் உதிக்கும் அந்தப் பிரகாரம் செனனம் சொல்லவும். ஊர்த்தமுகி யாகில் மல்லாந்து பிறக்கும். அதோமுகியாகில் கவிழ்ந்து பிறக்கும். திரியமுகி யாகில் ஒருக்கணித்துப் பிறக்கும். சிரோதய மாகில் தலை முன்னதாய்ப் பிறக்கும். பிருட் டோதயமாகில் கால் முன்னதாய்ப் பிறக்கும். உப யோதய மாகில் காலுங் கையுங் கூடிப் பிறக்கும் என்றறிவது. சந்திரனுக்கு ஏழாமிடத்திலும், நான்கா மிடத்திலும் பாவக் கிரகம் நிற்கப் பிறக்கில், மாதாவிற்கு நோயும், துன்பமும் உண்டாம் (எ-று). 17

மகப்பேறில்லில் உள்ள விளக்கின் இயல்பு முதலியன.

94. ஆச்சிய மதிசெல் பம்மி
னவதர முதயம்போல் வன்னம்
பாச்சிய திரியாம் திக்குப்
பானுவா சராதி நீபம்
ஏச்சது வாயில் வாஸ்த்துக்
கேந்திரந் திக்கா மின்றேற்
பூச்சனி குழலி ளுய்கேள்
வலியுடைக் கோளாற் போற்றே.

(எ-து) சூதகக் கிரகத்தில் விளக்கில் நெய் சந்திரன் நின்ற இராசியில் எவ்வளவு சென்றுள் அவ்

வளவு நெய் சென்றது. (அஃதாவது) சந்திரன் எந்த இராசியி லாகிலும் ஆதியில் நின்றால் விளக்கில் நெய் பூரணம். மத்தியத்தில் நின்றால் விளக்கில் நெய் பாதி சென்றது. அந்தியத்தில் நின்றால் நெய்யும் அந்தியம் என்று சொல்வது.

உதய இலக்கினத்தில் எவ்வளவு சென்றது அவ்வளவ திரியும் வெந்ததென்று சொல்வது. (அஃதாவது) இலக்கினம் ஆதியாகில் திரியும் ஆதியாம். இலக்கின மத்தியத்திற் பிறக்கில் திரியும் பாதி வெந்தது. இலக்கினம் அந்தியத்திற் பிறக்கில் திரியும் அந்தியமாயிருக்கும் என்று இவ்வாறு சொல்லவும். திரிக்கு நிறமும் இலக்கினத்தினுடைய நிறமே என்று சொல்வது.

ஆதித்தன் எந்த இராசியில் நின்றான் அந்தத்திக்கில் கிழக்காதியாக, மேடம், இடபம், மிதுனம், கடகம் திரிகோணாதியாக முன் சொன்னபடியே (12ஆம் செய்யுள்) தீபத் தானம் ஆகும். (அத் தீபத்தின் வகையாவன) ஆதித்தன் சர இராசியில் நிற்கிற் கைவிளக்காம். திர விராசியில் நிற்கில் நிலை விளக்காம். உபய இராசியில் நிற்கில் திருக்கு விளக்கு என்று சொல்வது. (இன்னும்) ஆதித்தன் பலவானாகில் செம்பு விளக்கு. ஆதித்தனுக்குச் சந்திர சம்பந்தத் தானம், சுக்கிர சம்பந்தத் தானம் உண்டாகில் இரத்தினம் அழுத்திய விளக்காம். ஆதித்தனுக்குக் குருயோக திருட்டி உண்டாகில் பொன் விளக்கு. ஆதித்தன் புதன் இராசியிலாதல் புதன் நவாங்கிசத்திலாதல் நிற்கிலும், புதயோக திருட்டி உண்டாகிலும் வெண்கல விளக்கு. ஆதித்தனுக்குக் குரு இராசிதான் குரு நவாங்கிசந்தான் கிடைத்து குரு யோக திருட்டி உண்டாகிலும் வெள்ளி விளக்கு. ஆதித்தனுக்குச் சனி இராசியாதல் சனி நவாங்கிசமாதல்



கிடைத்துச் சனி யோக திருட்டி உண்டாகில் இரும்பு விளக்கு என்று சொல்வது.

சாதியும் குலமும் தனத்தைக் கொண்டு சொல்லவும்.

வீட்டிற்கு வாயில் கேந்திரத்தைக் கொண்டு சொல்லவும். உதய இலக்கினத்திற் கிரகம் நிற்கிற் கிழக்கே வாயில், பத்தாமிடத்தில் நிற்கில் தெற்கே வாசல், ஏழாமிடத்திற் கிரகம் உண்டாகில் மேற்கே வாசல். நான்காமிடத்திற் கிரகம் உண்டாகில் வடக்கே வாசல். கேந்திரங்களிலே பல கிரகங்கள் உண்டாகில் அதில் பலவானுடைய திக்கில் வாயில். பல கிரகங்கட்கும் பலமுண்டாகில் பல திக்கிலும் துவாரம். கேந்திரத்தில் ஒருவரும் இல்லாதிருக்கில் எல்லாக் கிரகங்களினும் பலவானுடைய திக்கில் துவாரம்.

துவாரமாவது வீட்டு வாயில் என்றறிவது(எ-று). 18

குறிப்பு :—மகப்பேறுண்டான மனையைப் பன்னிரண்டு பாகமாகப் பிரித்து, மேடம் முதலாக எண்ணி, எந்தப் பாகத்திற் சூரியனுள்ளான் எனவுணர்ந்து அவ் விராசியிடத்தில் விளக்கு இருக்குமென்று சொல்லுக. சூரியன் சரத்திலிருப்பின் கோல் விளக்கு, திரத்திலிருப்பின் நிலை விளக்கு, உபயத்திலிருப்பின் தூக்கு விளக்கென்று கூறுக. சந்திரன் பூர்ணனாயிருப்பின் விளக்கில் எண்ணெய் நிறைந்திருக்குமென்றும், குறைமதியாயிருப்பின் விளக்கில் எண்ணெய் குறைந்திருக்குமென்றும் உணர்க. இலக்கினபுடத்திற் சென்ற பாகைகளைக் கொண்டு எரிந்த திரியையும், செல்ல வேண்டிய பாகைகளைக் கொண்டு மிச்சமிருக்கும் திரியையும் கூறுக. இலக்கின இராசியின் நிறமே திரியின் நிறமாகும். (சாராவளி—அந்-9-சு-24, 25).

சாராவளி கூறுவது போலவே சாதகாலங்காரம் "தேய்பிறையின் நெய்தீயத் தில்லைவளர் பிறைக்கே செப்பிடுவாய் நெய்விளக்கின் நிறைவுமெனத் தேர்ந்தே." (61) என்று கூறுகின்றது

யோக திருட்டி—கிரக சேர்க்கையும் நோக்கும்.



RangaRakes tamilnavarasam.com

மகவு பிறந்த மனையின் இயல்பு.

95. சனிசீ ரணவில் குசன்வெந்த
சாற்றுந் திங்கள் புதியமனை
தினநா தன்றன் மிகுந்தமரஞ்
சேர்ந்த மனைமால் சிற்பமனை
புனிதப் புகர்சித் திரமனையாம்
பொன்னேல் திடமாஞ் சிறந்தமனை
அனைய வுதய விராசியத்த
மத்தஞ் சேண் சேண் வீதிதிசை.

(எ-து) சனி பலவானாகில் சூதிகாக் கிரகம் சீரணைப் பட்ட மனையாகும். சீரணமாவது அழிந்த வீடு. செவ்வாய் வலிபெறில் வெந்த வீடு. சந்திரன் வலி பெறில் புதிய வீடு. சூரியன் வலிபெறில் அநேக மரங் களாற் கட்ட யுறப்புள்ள (?) வீடு. புதன் வலிபெறில் அநேகஞ் சிற்ப வேலையுள்ள வீடு. சுக்கிரன் வலிபெறில் இரம்மிய முள்ளதாய்ச் சித்திர முள்ளதாய புதிய வீடு. வியாழன் பலவானா யிருக்கில் திடமாய்ப் பலமாயிருக்கப் பட்ட வீடு என்று சொல்லுவது.

இராசி அர்த்தமான இலக்கினத்தில் நின்ற கிரகம் 2, 3, 4, 10, 11, 12 இந்த இராசிகளில் நிற்கில் கிரகத் திற்கு அடுக்க சூதிகாக் கிரகம் என்பது. 5, 6, 7, 8, 9 இதில் நிற்கில் கிரகத்திற்குத் தூரத்திற் சூதிகாக் கிரகம் என்பது.

சென்ன இலக்கின இராசி மாதத்தில் ஆதித்தன் உதிக்கிற வீதி யேதென் றறிந்து அந்த இராசியுடைய கேந்திரத்தில் நிற்கிற கிரகங்களில் எவன் பலமென் றறிவது. அவனுடைய திக்கில் கிரகத்தைச் சொல்லவும். கேந்திரத்தில் கிரகங்கள் இல்லாவிட்டால் வீதியாதிப னுடைய திக்கில் சூதிகாக் கிரகமென்பது (எ-று). 19



குறிப்பு :—ஆதித்தன் உதிக்கும் வீதிவை :
" இடபம் சிங்கம் மிதுனம் கடகம்
இனைய நான்கும் மேட வீதி "
" மீனம் மேடம் கன்னி துலாமும்
ஆனை இடப வீதிக் கமைந்தன "
" வில்லு மகரங் குடமே விருச்சிகம்
சொல்லிய மிதுன வீதித் துறையே "
என்னும் பிங்கல நிகண்டால் அறிக. 'பசிதிவலி தானலே பல மற்ற கூறையகம்.'—என்பது மங்களேஸ்வரீயம்.

மகவு பிறக்கும் அறையில் தாயின் சயன முள்ள விடம்.

96. மேடங் கடகங் குடந்தேள்கோல்
வெட்சி மனைக்குக் கீழ்சயனம்
ஓடந் தனுமீன் யாழ்கன்னி
உதிக்கின் மனைக்குத் தரசயனம்
சாடு மிடப முதித்திடின்மேற்
றிசையிற் சயனந் தானென்க
தேடு மகரஞ் சிங்கமெழிற்
றெற்கே சயனம் தேமொழியே.

(எ-து) மேடம், கடகம், கும்பம், விருச்சிகம், துலாம் இவை இலக்கின மாகில் சுப கிரகத்திற்கு (மனைக்கு மூலபாடம்) கிழக்கே சயனம். தனு, மீனம், மிதுனம், கன்னி இவை இலக்கின மாகில் வடக்கே சயனம். இடப விலக்கின மாகில் மேற்கே சயனம், மகரஞ் சிங்கம் இலக்கினமாகில் தெற்கே சயனம். (எ-று) 20

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினைக் கூறும் சாதகாலங் காரப் பாட்டொன்று பல்வேறு பாடமாகக் கூறப்படுகின்றது. அதன் சரியான பாடம் :

" சேயுதிக்கு மனையிருக்குந் திசைமகரஞ் சிங்கம்
சென்மலக் கினமாயின் ஆகுந் தெற்கே
ஆயிருக்குங் கன்னிதனு சேன்மிதுனம் வடக்காம்
அன்புடனே யிடபமேற் காகுமதன் மேலே

வேயுதிக்குந் தோளிகொறி னண்டுவிருச் சிகங்கோல்
விளங்குசால் வேந்தனூர் திசையெனவே விளம்பாய் "
(61) இவ்வாறு துணிய வேண்டியுள்ளது.

திசையும் கட்டிலும்.

97. கீழ்திசை முதல் தாகக்
கிரியாதி துவயந் திக்கு
வாழ்தரு முபயங் கோணம்
வாஸ்த்துவன் போற்கி டக்கும்
காழ்சடு திரிந வாந்தம்
கால்கள்மற் றதுகி டக்கை
ஊழுறு தண்ட தாகும்
உபமுப யந்தீக் கோனே.

(எ-து) கிரகத்துக்குக் கிழக்கு முதலாய் மேடாதி இராசிகள் இரண்டிரண்டாகத் திசை (பெருந்திசை) கொள்வது. கோணங்களுக்கு (கோணத்திசைக்கு) ஒவ்வொரு இராசியாகக் கொள்வது. வாஸ்த்துவைப் போலே கிடக்கைகள். சடு, திரி, நவ, அந்தியம் கால்கள் என்பது ஆறு, மூன்று, ஒன்பது, பன்னிரண்டு இவை கட்டிலினுடைய கால்களாகும். இவை இலக்கின முதலாக அறியவும். (எவ்வாறெனில்?) இலக்கினமும், இரண்டாமிடமும் கிழக்கு; மூன்றுமிடம் அக்நிகோணம்; நான்காமிடம், ஐந்தாமிடம் தெற்கு; ஆறுமிடம் நிருதுகோணம்; (ஏழாமிடம், எட்டாமிடம் மேற்கு; ஒன்பதாமிடம் வாயுகோணம்; பத்தாமிடம், பதினோராமிடம் வடக்கு; பனிரண்டாமிடம் ஈசான்ய கோணம். இப்பகுதி ஏட்டில் இல்லை). அவற்றுள் மூன்று, ஆறு, ஒன்பது, பன்னிரண்டு (இவை கட்டில்) கால்கள், மற்றவை தண்டு; இவையிற்றில் யாதொரு இடத்து, உபய இராசியும் பாவன மாறும் உண்டாயிருந்தது அவ்



விடத்தில் அந்தக் காலிற்குக் கேடு உண்டாய் இரண்டு பொருத்தியிருக்கும் என்றறிக (எ-று), 21

குறிப்பு :-பாட்டில் " கீழ்திசை முதல தாகக் கிரியாதி துவயம் திக்கு ; வாழ்தரும் உபயம் கோணம் " என்றே உள்ளது. கிரியாதி என்றால் மேடாதி என்று பொருள். மேடம், இடபம். கிழக்கு ; மிதுனம் அக்னிகோணம் ; கடகம், சிம்மம், தெற்கு ; கன்னி, திருதிகோணம் ; துலாம் விருச்சிகம் மேற்கு ; தனுசு வாயு கோணம் ; மகர கும்பம் வடக்கு ; மீனம் ஈசான கோணம் என்றே கூற வேண்டும். சாராவளியை நோக்குக. (அத்.-9 க.-13)

உபகுதிகைகளும், சூதிகாக் கிரகத்தின்
உள்ளும் புறம்பும் உள்ளவர்களும்.

98. மதியுத யாந்த ரங்கள்
மன்னுப சூத கிக்கோள்
உதயமுன் னத்திரி சார்த்தம்
அகத்தினுட் புக்கா ரென்ப
விதிகொளுந் திரிசி யார்த்தம்
வெளியினில் நின்று ரென்க
பதியுங்கோட் கடைத்த வண்ணம்
பண்புடைத் துகிலும் சாற்றே.

(எ-து) சந்திர இலக்கினத்திற்கும் சென்ம இலக்கினத்திற்கும் நடுவே எத்தனை கிரகங்கள் நின்றனவோ அத்தனைபேர் உபசூதிகள்.

(மகப்) பெற்ற வீட்டிற் புகுந்த பேர், உதயம் முதல் ஆறு இராசியளவும் அதிரிசிய சக்கரார்த்தம் ; அதற்கு மேல் ஆறு இராசியும் திரிசிய சக்கரார்த்தம். அதிரிசிய சக்கரார்த்தத்தில் நின்ற கிரகங்களைக்கொண்டு, அகத்திற் சென்று பிள்ளை பிறப்பித்த பேரென்பது. திரிசியார்த்தமான ஏழு முதல் பன்னிரண்டு இராசியளவும் நின்ற கிரகங்களைக்கொண்டு சூதிகாக் கிரகத்தினுடைய புறத்தில் நின்ற உசனங்களைச் சொல்லவும்.

அந்தந்தக் கிரகங்களி னுடைய நிறமும், ரூபமும், வத்திரமும் சொல்லுக (எ-று). 22

குறிப்பு :—உபகுதிகளைப் பற்றி " மருவிய லக்கினமுதற் சந்திரனிருக்கு மட்டும் மன்னு தொகை மடவார்கள் மருவியரு கிருப்பர் " என்று சாதகாலங்காரம் (63) கூறுகின்றது.

இலக்கினத்தில் செல்ல வேண்டிய பாகை கலையிலிருந்து நூற்றெண்பது பாகைகள்வரை செல்வதை அதிரிசிய சக்கரார்த்த மென்றும், அதற்குமேலுள்ள பாகைகளைத் திருசிய சக்கரார்த்த மென்றும் கூறுவர்.

மகவின் உடல் இயல்பு.

99. உதயத்து நவாங்கி சேசன்
 சமனுறு முடல்தென் பத்தி
இதந்தரு வலிபெ றுங்கோ
 ளாங்கது போலுந் தேகம்
மதியுறு நவாங்கி சத்தின்
 அதிபதி நிறமாம் வர்ணம்
உதயாதி சிரசே யாதி
 உடலுறு மவய வங்கள்.

(எ-து) இலக்கின நவாங்கி சாதிபதியைப் போலே சரீரம் என்று சொல்லவும். அன்றியும், செனன காலத்தில் ஆதியந்தம் பலவானாய் ஒரு கிரகம் நிற்கில், அவனுடைய சரீரத்தைச் சொல்லவும்.

சந்திரன் நின்ற நவாங்கிசாதிபதி எந்த நிறம் அந்த நிறம் என்று சொல்லவும்.

உதய இலக்கின முதல் பன்னிரண் டிராசியும் சிரசு முதல் கால்கள் ஈறாக அடைவே அவயவமாகக் கொள்க (எ-று). 23

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தை சாராவளியாலும் (அத்-9-சு-46) அறியலாம்.



மகவின் அவயவம் அறிவது.

100. தலைகண் காது நாசிகவுள்
 சாற்று மளிக வக்திரமாம்
மலைவில் களமங் குசம்வாகு
 பாகம் மார்பு வயிறுந்தி
வலவில் வஸ்தி சிசனகுதம்
 பீச மூர்சான் சங்கந்தாள்
வலனு றுதயத் திரேக்காண
 வகையின் மூன்றுய்க் கூறுகவே.

(எ-து) முதற் றிரேக்காணத்திற் செனிக்கில் இலக்கினம் தலை; இரண்டாமிடம் இடக்கண்; பன்னிரண்டாமிடம் வலக்கண்; மூன்று, பதினொன்று செவி; நான்கு, பத்து நாசி; ஐந்து, ஒன்பது கபோலம்; ஆறு, எட்டு தலை (யின்) இடம் வலம்; ஏழு முகம் என்றறிவது.

மத்தியத் திரேக்காண மாகில் முதலிராசி கண்டம்; இரண்டு, பன்னிரண்டு அங்கிசம்; மூன்று, பதினொன்று வாகு; நான்கு, பத்து பாரிசம்; ஐந்து, ஒன்பது இருதயம்; ஆறு, எட்டு வயிறு; ஏழு நாபி என்றறிவது.

அந்தியத் திரேக்காண மாகில் முதலிராசி வஸ்தி (நாபிக்கும் குய்யத்திற்கும் நடுவிடம்); இரண்டு பன்னிரண்டு சிசுன குதம்; மூன்று, பதினொன்று விருஷணம்; நான்கு, பத்து ஊரு; ஐந்து, ஒன்பது சானு; ஆறு, எட்டு சங்கம்; ஏழாமிடம் பாதம் என்றறிவது.

அதிரிசியார்த்தம் வலது பாகம்; திரிசியார்த்தம் இடது பாகம்; இப்படிக்குத் திரேக்காண பாகம் மூன்றுய்ப் பிரித்து அவயவம் அறிவ தென்றவாறு (எ-று). 24

RangaRakes tamilnavarasam.com

மறு உண்டாதலும் விரணம் உண்டாதலும்.

101. முந்து நற்கோ ளுத்திருட்டி
மறுவாம் மூரண்கோள் விரணமுறும்
மந்தன் வாயு வாதங்கல்
வன்சேய் வாளாற் றீவிடத்தால்
இந்து சிறுகஞ் செலபத்தால்
இரவி தருவால் நாற்காலால்
புந்தி நிலனில் மற்றையுகம்
புகமுஞ் சுவர்க்கம் பூருவமே.

(எ—று) முன் சொன்ன திரேக்காணங்களில் சுப யுத்திருட்டி உண்டாகில், அத்தந்த அவயவங்களில் நல்ல மறு உண்டாம். பாப யுத்திருட்டி உண்டாகில், அந்தந்த அங்கிசங்களில் (அவயவங்களில்) விரணம் உண்டாம்.

சனியோக திருட்டி உண்டாகில் வாயுவினாலாதல் ............... சேய் யோக திருட்டி உண்டாகில் வாளாலாதல் அக்கினியினாலாதல், விடத்தினாலாதல் விரணம் உண்டாம். சீண சந்திர யுத்திருட்டியாகில் கொம்புள்ளதினாலாதல். சலத்தி லுண்டான வஸ்துக்களினாலாதல் விரணம் உண்டாம். சூரிய யுத்திருட்டியாகில் விருட்சங்களினாலாதல், நான்கு காலுள்ள மிருகத்தினாலாதல் விரணம் உண்டாம். பாப சகித புதயோக திருட்டியுண்டாகில் பூமியில் நிற்கப்பட்ட மலை, கலை, சுவர்; விருட்சம் இவை விழுந்ததனால் விரணம் உண்டாம்.

சுபயுதப் புதனும், பூர்வபக்கத்துச் சந்திரனும், குருவும், சுக்கிரனும் இவர்கள் நிற்பினும், பார்க்கினும் சுப லாஞ்சனம் உண்டாம். சுப லாஞ்சனம் உண்டாதலாவது நல்ல மறு உண்டாதலாம்.



இவர்கள் ஆட்சி, உச்சத்தில் நிற்கில், பிறக்கும் பொழுதே அந்தந்தத் தானங்களில் நல்ல மறு உண்டாம் (எ—று). 25

குறிப்பு :— யுத்திருஷ்டி, அல்லது உத்திருட்டி என் பதற்குச் சேர, நோக்க என்று பொருள். சிறுகம் – கொம்புள்ளது

இதுவும் அது.

102. புதனைத் தீயர் சுபர்புல்லில்
பெலவான் விரணஞ் சமன்பொருந்தும்
உதயந் தனக்கா ருமோரை
சிராதி கிரியம் முதலொட்டி
அதனி லாறு தனக்குற்ற
அங்க மதனில் விரணமுறும்
இதனிற் சுபர்நோக் கிடிற்றிலகம்
திலம்போல் எழில்சேர் மறுவென்னே.

(எ-று) புதனைப் பாபரும் சுபரும் கூடி நிற்கில் இதனில் பலவானுடைய மறுவாதல் விரணமாதல் உண்டாம். (அஃதாவது) பாபன் பலவானாகில் விரணம், சுபன் பலவானாகில் மறு இவை உண்டாம்.

இலக்கினத்திற்கு ஆறும் இராசி மேடாதியாகச் " சிரம், முகம் " (செய்யுள்-5) என்ற அடைவிலே ஒட்டி, அந்தச் சரீர பாகத்திலே பாப யுத்திருட்டி உண்டாகில், அந்தத் தானத்திலே விரணம் வரும். சுப யோக திருட்டி உண்டாகில் திலகம் போலே யாதல், எள்ளுப் போலே யாதல் ......... சம் போலே யாதல் மறு உண்டாம் (எ-று). 29

குறிப்பு : சமன்—மறு.



RangaRakes tamilnavarasam.com

இவ் வத்தியாயத்திற் கூறியவை.

103\. இந்திரூற் பிதாவை யோர
　　பிறப்பிடம் வாஞு ளில்லின்
முந்துகு தகிபி றக்கும்
　　முகம்விளக் கென்னெய் வாசல்
வந்துறு மனையே கட்டில்
　　வருநிற மவய வங்கள்
தந்திடும் வடும றுக்கள்
　　சாற்றின னிலிங்க னன்றே. 27

ஐந்தாவது
ஜென்ம அத்தியாயம்
முற்றும்.

ஆருவது

## * சந்தி யோக மரண அத்தியாயம்.

அன்றே மகவு மரிக்கு மென்பது.

104\. சந்தியி லிந்து வோரை
　　தானெழப் பாவ ரெல்லாம்
அந்திய காலி னிற்கச்
　　சனித்தவன் அன்றே வீடும்
முந்துகண் டங்க ளிந்தைப்
　　பாவர்க ளுடனூற் ருலும்
செந்திரு வனையாய் வெவ்வே
　　றெய்தினுஞ் சிறுவன் மாயும்.

(எ-து) சந்திய காலத்திலே சந்திர வோரை உதிக்கப், பாவக் கிரகங்கள் அந்திய நவாங்மிசத்திலே நிற்கப், பிறந்த சிசு அன்றே மரிக்கும்.

நாற்கண்டத்திலே சந்திரனும் பாவரும் கூடி நிற்பினும், வெவ்வேறே நான்கு கேந்திரத்தில் நிற்கினும், இக் காலத்திற் பிறக்கில் சிசு மரணத்தை அடையும் (எ-று). 1

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினை, "பிராதஸ் சந்தியிலோ, சாயா சந்தியிலோ ஒரு மகவு பிறந்து, இலக்கினம் சந்திர ஒரையாகிச், சூரியனும் செவ்வாயும் சனியும் இராசிகளின் கடைசி நவாம்சத்தில் இருப்பின் அது அப்போதே மரணமடையும் என்றும், சந்திரன், சூரியனுடனும் செவ்வாயுடனும் சனியுடனும்

---

* இதற்குப் பிருகத்சாதகத்தில் அரிஷ்டாத்யாயம் என்று பெயர் உள்ளது. மங்களேஸ்வரீயம் பாலாரிட்டப் படலம் என்று கூறுகின்றது. சந்தியோ மரண அத்தியாயம் என்றிருக்கலாம் என்பது என் கருத்து. ஆயினும் ஏட்டில் உள்ளபடி பதிப்பித்துள்ளேன்.

RangaRakes tamilnavarasam.com

சேர்ந்து, இலக்கின கேந்திரத்தோ, நான்காமிடக் கேந்திரத்தோ, ஏழாமிடக் கேந்திரத்தோ, பத்தாமிடக் கேந்திரத்தோ இருப்பின் பிறந்த மகவு உடனே இறக்கும்" என்றும் சாராவளி கூறுகின்றது (அத்-10-சு-33).

பிராதஸ் சந்தி—உடுக்களின் ஒளி குன்றியது முதல் சூரியன் பாதி உதயமாகும் வரை உள்ள காலமாம்.

சாயம்சந்தி—சூரியன் பாதி அத்தமனம் முதல் உடுக்கள் ஒளிபெறுவதற்கு முன்னுள்ள காலமாகும்.

இதுவும் அது.

105. கோடுசக் கரார்த்த முன்பின்
கொடியபல் லோர்கள் சேரக்
கீடமே யுதிக்கு மாகில்
கிளர்த்திய மகம ரிக்கும்
நீடுத யத்த மத்தைத்
தீயகோள் நெருக்கி நிற்பின்
வீடுறும் மகவா மென்றே
விளம்புக வன்ன மின்னாய்.

(எ-து) சக்கிரார்த்த மாகிய முன் ஆறு இராசியில் பாபக் கிரகங்கள் நிற்கப், பின் ஆறு இராசியில் சுபக்கிர கங்கள் நிற்கக், கீட இராசியான கர்க்கடக விருச்சிகம் உதயமாகப் பிறந்தவன் மரணத்தை அடைவன்.

உதயத்துக்கு இரண்டிலும் பன்னிரண்டிலும் பாபக் கிரகங்கள் நிற்கிலும், அத்தமனமான ஏழாமிடத்துக்கு முன்னும் பின்னுமாகிய ஆறுமிடத்திலும், எட்டாமிடத் திலும் பாபக்கிரகங்கள் நிற்கிலும் பிறந்த சிசு மரணத்தை அடையும் (எ-று). 2

குறிப்பு :—அதிரிசியார்த்த சக்கரத்தில் எல்லா நற் கோள்களும், திரிசியார்த்த சக்கரத்தில் எல்லாத் தீக்கோள்களும் நிற்க, இலக்கினத்தில் இராகுவு மிருந்தால் பிறந்த மகவு ஐந்து வாண்டுகள் வரை பிழைத்திருக்கும் (சாராவளி அத்-10-சு-106).



இலக்கினத்திற்கு 12, 2, 6, 8 என்னும் இவ்விடங்களில் பாவிகளிருக்க, நற்கோள்களின் சேர்க்கையும் நோக்கமும் இல்லா திருப்பின் பிறந்த மகவு ஆறு அல்லது எட்டாவது மாதத்தில் இறந்து விடும் (சாராவளி அத்-10-சு-24) என்னும் இப்பகுதியை ஒப்பு நோக்கி அறிக.

இதுவும் அது.

106. தீயகோ ளுதயந் தன்னைத்
தீயயூ னத்தைச் சேரத்
தூயகோள் நோக்க மில்லாச்
சோமனைத் தீக்கோள் பற்ற
ஆயவிவ் வியோகந் தன்னில்
அம்புவி தனிற்ச னித்த
சேயுயி ரிழக்கு மென்று
செப்பினு ரொப்பில் நூலோர்.

(எ-து) பாபக் கிரகங்கள் உதயத்திலும் ஏழா மிடத்திலும் நிற்கப், பாபக் கிரகத்தோடுங் கூடின சந்திரனைச் சுபக்கிரகங்கள் நோக்காதே யிருக்கப் பிறந்த சந்ததி மரணத்தை அடையும் (எ-று).

இப்பாட்டின் கருத்தினை,
"பண்ணுஞ் சன்ம முடனேழிற் பாவ
ரிருக்கப் பாவர்கூடாம், அன்னனின் மதிய
முடன்கூட அணிய தாக வருமரிட்டம்"
(76) என்று சாதகாலங்காரம் கூறும்.

'த்யூனம்' என்னும் வடசொல் எதுகை நோக்கித் 'தீயயூனம்' என்று திரிந்தது. இது ஏழாமிடத்திற்குப் பெயர்.

வேறு

இதுவும் அது.

107. தேயு கின்ற மதிவியஞ் சேர்ந்திட
காயுங் கோளெட் டுதயங் கலந்திட
ஆயுங் கண்டத் தழகிய ரில்லெனில்
மாயு மந்த மகவென வோதுவர்.

RangaRakes tamilnavarasam.com

(எ-து). சீண சந்திரன் பன்னிரண்டா மிடத்தில் நிற்கப், பாபக் கிரகங்கள் எட்டாமிடத்திலும் உதயத்திலும் நிற்க, உதயம் நான்காமிடம், ஏழாமிடம், பத்தாமிடம் இவற்றில் சுபக்கிரக மில்லாதிருக்கப் பிறந்த சிசு மிருத்துவை அடையும் (எ-று). 4

குறிப்பு :—இப் பாட்டில் மூன்ருவது அடியில் 'அழகில சில்லெனில்' என்பது ஏட்டிற் கண்ட பாடமாகும்; காகிதப்பிரதி எழுதியவர் 'அழகிய சில்லெனில்' என்று எழுதியுள்ளார். உரையில் 'சுபக்கிரகம்' என்றிருப்பதால் 'அழகியர்' என்ற பாடத்தைக் கொடுத்துள்ளேன். இப் பாட்டின் கருத்தினை,

" எண்ணுந் தேய்ந்த பிறைவியத்தில்
ஏழில் ஒன்றில் பாவர்களும்
நண்ணி லரிட்டம் கேந்திரத்தில்
நல்லோ ரிருக்க வுய்வாரே " (76)

என்று சாதகாலங்காரம் கூறுகின்றது. இப்பாட்டு வராக ஓரையின்படி 'எட்டில் ஒன்றில் பாவர்களும்' என்றிருக்க வேண்டும். ஆனல் சாராவளி " இலக்கினத்திலும் எட்டிலும், ஏழிலும் தீய கோள்கள் நிற்க, சீண சந்திரன் பன்னிரண்டாமிடத்தில் நிற்பின், கேந்திரங்களில் பலவான்களான நற்கோள்கள் இல்லையெனின் உடனே மகவு மரிக்கும்" (அத்-10-சு-40) என்றும் கூறுகிறது.

இதுவும் அது.

108. தீய ரோடுறை திங்கள் தியூனமோ
டாயுள் வெட்சி வியத்தி லமர்ந்திடத்
தூயர் நோக்கன்றிக் கேந்திரத் தோய்கிலர்
ஆயின் அம்மக வந்தற் புரத்தனே.

(எ-து) பாவ யுத சந்திரன் ஏழாமிடத்தி லாதல், எட்டாமிடத்தி லாதல், உதயத்தி லாதல், பன்னிரண்டாமிடத்தி லாதல் நிற்கச் சுபக் கிரகங்கள் திருட்டியில்லாமல் கேந்திர சுபக்கிரகம் இல்லாமலு மிருக்கில், பிறந்தவன் அந்தக புரத்தை அடைவன் (எ-று). 5



குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினை :

" சந்திரன் நல்லோரின் நோக்கத்தைப் பெருமல் பன்னிரண்டாமிடத்திலோ, எட்டாமிடத்திலோ, ஏழாமிடத்திலோ இலக்கினத்திலோ தீயவருடன் சேர்ந்திருக்கக், கேந்திரங்களில் நற்கோள்கள் இல்லாமலிருப்பின் பிறந்த மகவு இறந்துவிடுவது நிச்சயம்" என்னும் சாராவளியுடன் (அத்-10-சு-30) ஒப்பிட்டறிக.

ஆனல், சாதக சிந்தாமணி சிறிது வேறுபடக் கூறுகிறது; " பன்னிரண் டெட்டே ழொன்றில் பாவரு மதியுங் கூட மன்னிய் சுபர்கேந் திரிக்கு மதலைக்கே யரிட்டம் காட்டும் " (397) என்பது அப் பாட்டு.

இதுவும் அது.

109. அரிவி ளுச மமர்மதி தீயரார்
றெரியின் மாயுந் திகழ்சுப ரெட்டியாண்ர
டிருவ ருஞ்சமன் பாதியென் டோற்றுமேழ்
மருவும் வெட்சி யதியனு மாய்க்குமே.

(எ-து) ஆறுமிடத்தி லாதல், எட்டாமிடத்தி லாதல் நின்ற சந்திரனைப் பாவர் கூடினும், நோக்கினும் பிறந்த சிசு மரணத்தை அடையும்.

அந்தச் சந்திரனுக்குச் சுபக்கிரக திருட்டி உண்டாகில், எட்டு வருடஞ் சீவிக்கும்; பின்பு மறிக்கும்.

அந்தச் சந்திரனுக்குச் சுபரும், பாபரும் சம யோக திருட்டி உண்டாகில், நான்கு வருடம் பிழைக்கும்.

அந்தச் சந்திரனைச் சுபரும், பாபரும், கூடுதல், நோக்குதல் செய்யாதிருக்கில் அரிட்ட மில்லை.

'எண்' என்ற விதப்பால், அபரபட்சத்திற் பகலிற் பிறக்கிலும், பூர்வ பட்சத்தில் இராத்திரியில் பிறக்கிலும், சட்டாட்டமத்தில் நின்ற சந்திரனைச் சுபரும், பாபரும் பார்க்கிலும் அரிட்ட மில்லை.

RangaRakes tamilnavarasam.com

கிரக உயுத்தத்தில் தோற்றும் இலக்கினாதிபன் ஏழாமிடத்தில் நிற்கப், பாப யோக திருட்டி உண்டாகில் அரிட்ட யோகம் உண்டு (எ-று). 6

குறிப்பு :—"சந்திரன் ஆறாமிடத்திலோ, எட்டாமிடத்திலோ யிருந்தால் பிறந்த மகவு ஒரு யாண்டுள் இறக்கும். அந்தச் சந்திரன் எல்லாத் தீயகோள்களின் பார்வையைப் பெற்றிருந்தால் அம் மகவு உடனே இறக்கும். எல்லா நற்கோளும் சந்திரனை நோக்கினால் எட்டு வருடங்களிருந்து மகவு மரிக்கும். நல்லவரும் தீயவரும் சேர்ந்து சந்திரனை நோக்கினால் நான்கு வருடங்களிருந்து மகவு மரிக்கும்" என்னும் சாராவளியை (அத்-10-சு-21, 22) ஒப்பு நோக்கி அறிக.

சாதகாலங்காரம் "சன்மத்துக் காறெட்டிற் சசிதானிருந்து சுபர் நோக்கத் துலங்கியநாள் காண்டென்றே சொல்லிடுவர் நல்லோர்" (72) என்றும் "கண்ட வமர பக்கத்திற் காணுஞ் சோமன் எட்டாறில், கொண்ட சன்ம மிதிற்பாவர் கூடி நோக்க விரைந்தே" (757) என்றும் கூறுகிறது.

இதுவும் அது.

110. பூமன் வெட்சி புகச்சுபர் நோக்கிடார்
ஆம தென்னி னடையு மிருத்தியுத்
தாமென் கன்கதிர் சேர்ந்துசட் டாட்டம
தீமை நோக்குறிற் பொன்றுமச் சேயரோ.

(எ-து) செவ்வாய் உதயத்தில் நிற்கச் சுபர் நோக்கு இல்லையாகில் பிறந்த சிசு மிருத்தியு (மரணம்) அடையும்.

சனி, சூரியன் கூடி ஆறுமிடம் எட்டாமிடம் இருக்கப் பாவர் நோக்குறில், சுபக்கிரகம் நோக்கு இல்லையாகில் சிசு மிருத்தியு அடையும் (எ-று). 7

குறிப்பு :—இப் பாட்டின் பொருள் சாதகாலங்காரத்தில் "இலக்கினத்தில், திக்கெனச்செவ் வாய்நிற்கச் சேயெட்டாறில்



சேர்ந்துசனி கூடிலோ மரணமாம்" (72) என்று கூறப்பட்டுள்ளது. இப்பாட்டில் சேய் என்றது செஞ்சுடராகிய சூரியன் போலும்.

வேறு

தாயும் மகவும் சாகும் என்பது.

111. தேயு மதிய முதயமுறத்
தீக்கோள் கண்ட நிதனமெனும்
ஏயுந் தீயர் நடுவின்மதி
யிபுகந் தியூனம் நிதனமெனும்
மாயு மதிதீக் கோள்நடுவாய்
மதன நிதனந் தீயரேனும்
தாயு மகவுஞ் சாமென்பர்
சுபர்நோக் கிலையேற் குழ்குழலே.

(எ-து) தேயும் சந்திரன் உதய இலக்கினத்தில் நிற்கப், பாபக் கிரகங்கள் கண்டம், நிதனத்தில் நிற்கிலும்; கண்டமாவது உதயம், நான்கு, ஏழு, பத்து; நிதனமாவது அட்டமம்; இவற்றில் பாபக்கிரகங்கள் நின்றதேயாயினும் மரணம்.

சந்திரன் பாபருக்கு நடுவே இபுகந், தியூனம், நிதனத்தில் நிற்கிலும் மரணம். இபுகம்–நான்காமிடம். தியூனம்–ஏழாமிடம். நிதனம்–அட்டமம். இவற்றில் சந்திரன் பாபருக்கு நடுவே நிற்கிலும் மரணம்.

தேயும் சந்திரன் பாபருக்கு நடுவே நிற்க, ஏழாமிடத்திலும், அட்டமத்திலும் பாவிகள் நிற்கிலும் சுபக்கிரக நோக்கம் இல்லையாகில், இந்த மூன்று யோகத்துக்கும் தாயும் பிள்ளையும் சாம் (எ-று). 8

குறிப்பு :—சந்திரன் சீணனாகி இலக்கினத்தி லிருக்க, கேந்திரங்களிலும் எட்டிலும் தீக்கோள் நிற்பின் பிறந்த மகவு



RangaRakes tamilnavarasam.com

உறுதியாக உடனே இறக்கும் என்று யவனர் சொல்லுகின்றனர். (சாராவளி அத்.-10-சுலோ.-32) என்பவற்றையும், ஏழிலோ, எட்டிலோ, நான்கிலோ சந்திரன் இரண்டு தீக்கோள்களின் இடையில் நிற்பின் அம் மகவு கடவுளால் காக்கப்பெறினும் உடனே இறந்துவிடும் (சாராவளி அத்-10-சு-34) என்பவற்றை யும் இப் பாட்டுடன் ஒப்பிட் டறிக.

சாதகாலங்காரம் "சன்மத்தில் ஏயசசிக் கிருபாலும் பாவர்நிற்கில் எட்டேழ் நான்கிடத்திற் றீக்கோள்கள் நிற்கி லூற்றசேயும், தாயுஞ்சாமென வுரைப்பர்" (73) என்று வேறு படக் கூறுகின்றது.

மகவு பரிக்கு மென்பது.

112. திங்க ளிராசி யந்தியத்திற்
சேரத் தீயர் திரிகோணம்
தங்கச் சுபக்கோள் நோக்கிலேயேல்
பிரான வியோக மெனச்சாற்றும்
மங்கு மதியந் தானுதிப்ப
மன்னுந் தீயர் தியுளமுறப்
பொங்கு நற்கோள் நோக்கிலையேற்
பொன்றும் வியோகம் பூங்குழலாய்.

(எ-து) இராசி அந்திகவில் சந்திரன் நிற்கப், பாபக் கிரகங்களெல்லாம் ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்தில் நிற் கச் சுபக்கிரகம் நோக்கில்லை யாயினும் மரணம்.

சீண சந்திரன் உதிக்கப் பாபக்கிரகங்கள் ஏழாமிடத் தில் நிற்கச், சுபக் கிரகம் நோக்கில்லையாகிலும் மரண மாம் (எ-று).

குறிப்பு :—இப் பாட்டின் இரண்டாவது கருத்துடன் "இலக்கினத்திற் சீண சந்திர னிருக்கத் தீயவ ரெல்லோரும் கேந்திரத்திலும் எட்டிலு மிருக்கச், சந்திரனுக்கு நல்லோர் பார்வை இல்லையாயின் மகவு உடனே மரிக்கும்" சாராவளி (அத்-10-சு-38) என்பதை ஒப்பு நோக்குக.



தாயும் மகவும் சாம் என்பது.

113. கிரண ளுகிப் பாபருடன்
கெழுமிச் சோமன் குனுதிப்பத்
தரணி புதல்வன் நிதனமுறில்
தாயும் மகவுஞ் சாமென்க
பருதி யெனினும் மதியமெனும்
உதிப்பப் பாவர் திரிகோணம்
தெரியும் நாச முறநற்கோள்
திட்டி யிலேயேல் தாய்மகசாம்.

(எ-து) கிரண யோக சந்திரன் பாபக் கிரகத்துடன் கூடி இலக்கனத்தி லுதிக்கச், செவ்வாய் அட்டமத்தில் நிற்கில், தாயும் பிள்ளையும் கூட மரிக்கும்.

சூரியனாதல், சந்திரனாதல் உதிப்பப், பாபக் கிரகங் கள் ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் இவைகளில் இருக்க, இலக்கினத்திற்குச் சுபயோக திருட்டி இல்லாமலிருக்கில் தாயும், பிள்ளையும் சாகும் (எ-று).

குறிப்பு :—"கிரகணத்தால் பீடிக்கப்பட்ட சந்திரன் பாபக்கிரகத்தோடு கூடி இலக்கினத்திலிருக்க, செவ்வாய், எட்டி லிருந்தால் தாயும் குழந்தையும் இறப்பர்" என்று சாராவளி (அத்.-10-சு.-37) கூறுவதை ஒப்பிட்டறிக.

"இலக்கினத்தில் சந்திரனாவது, சூரியனாவது, இருக்க, ஐந்தாமிடம், எட்டாமிடம், ஒன்பதாமிடம் என்னும் மூன்றிடத்தி னுள் எல்லாப் பாபருமிருக்க அவ்விடங்களுக்கு நல்லோர் பார் வையோ, சேர்க்கையோ இல்லாமலிருப்பின் உடனே மரணம் உண்டாகுமென்று யவனாச்சாரியார் கூறுகிறார்" என்று சாராவளி (அத்.-10 சு.-42) கூறுகின்றது.

மேற்கண்ட வராக ஓரைச் (113) செய்யுளில் "பாவர் திரிகோணம் தெரியும் நாசமுற" என்றே உள்ளது. அதற்கு "ஐந்தாமிடம், ஒன்பதாமிடம், எட்டாமிடம் இவைகளில் பாவ ரிருக்க" என்றே பொருள் கூற வேண்டும். நாசம் - எட்டா மிடம். சாராவளியும் அவ்வாறே கூறுகிறது. எக் காரணத்தி

RangaRakes tamilnavarasam.com

ளுலோ உரையில் 'எட்டாமிடம்' என்னுஞ் சொல்லில்லே. ஏடு எழுதியோர் தவறு போலும்.

பிறந்த மகவு மரிக்குமென்பது.

114. இசைகொள் விரையம் நலமுதயம்
இயம்பு நிதன மிவைதன்னில்
அசித னுடனே மார்த்தாண்டன்
திங்கள் செவ்வாய் அடைவினுறப்
பசைகொள் வலியாங் கவையில்லாப்
பைம்பொன் னேக்க முண்டெனினும்
நசையிற் பிறந்த மகமரணம்
என்பர் நன்னூல் உணர்ந்தோரே.

(எ-து) பன்னிரண்டாமிடம், ஒன்பதாமிடம், இலக்கினம், எட்டாமிட மென்னு மிவற்றில், சனி, சூரியன், சந்திரன், செவ்வாய் அடைவே நிற்கப், பெலவீனனுன குருவால் பார்க்கப்படினும் பிறந்த சிசு மரணமாம். (எ-று). 11

குறிப்பு :—"இலக்கினத்திற் சந்திரனும், பன்னிரண்டாமிடத்திற் சனியும், ஒன்பதாமிடத்திற் சூரியனும், எட்டாமிடத்திற் செவ்வாயு மிருக்க, இவ் விடங்களுக்குக் குருவின் நோக்கம் எவ் விதத்திலுமில்லை யெனின் குழந்தைக்கு உடனே இறப்பு உண்டாம்" என்று சாராவளி கூறுவதை (அத்.-10 சு.-41) இப் பாட்டுடன் ஒப்பிட் டறிக."

ஒய்யு மிரவி சனிசெவ்வாய் உறுப்புக் குறைந்த மதி நான்கும், மெய்யாம் வியம்பாக் கியமெட்டில் ஒன்றில் அவர் கண் மேவிடவே, பைய விந்தப் பதிகடமைப் பண்பா யரசன் பாரானேல், ஐய வரிட்டம் பொன்னேக்க மாளுலிருப்ப னணி மயிலே" (77) என்று சாதகாலங்காரம் சிறிது வேறுபடக் கூறுகிறது.

இதுவும் அது.

115. சுதமத நவமம் அந்தம்
சொல்லிய வுதய மெட்டில்
மதிகொடுங் கோளி னேடு
மன்னிட வலியுற் றேறிப்



புதனெடு வியாழந் தானும்
புகரிவர் கூட நோக்க
விதியிலே யென்ப தாகில்
விதியிலே வேற்கண் மாதே.

(எ-து) ஐந்தாமிடம், ஏழாமிடம், ஒன்பதாமிடம், பன்னிரண்டாமிடம், உதயம் எட்டாமிடம் என்னும் இவற்றில் சந்திரன் பாபருடனே கூடி நிற்கப், புதன், வியாழன், சுக்கிரன் இவர்கள் வலிபெற்றுச் சந்திரனைக் கூடுதல், நோக்குதல் செய்யாராகிலும் மரணமாம். (எ-று). 12

குறிப்பு :—சீண சந்திரன் வலிவுள்ள தீக்கோள்களுடன் சேர்ந்து, எட்டிலோ, ஏழிலோ, பன்னிரண்டிலோ, இலக்கினத்திலோ, திரிகோணத்திலோ இருந்தால், இவ்வாறு பிறந்த குழந்தைக்குப் பாலியத்திலேயே இறப்பு உண்டாகும். இந்தச் சந்திரனுக்குப் பலமுள்ள நல்லோரின் நோக்கம் உண்டாகில் இறத்தல் உண்டாவதில்லை" என்று சாராவளி (அத்.—10-சு.—98) கூறுகின்றது.

இப் பாட்டின் கருத்தை "அவனி மீதெட் டைந்தொன்றில் ஆனவியம்பாக் கியமேழில், தபனன் செவ்வாய் சனிமதியந் தாமுங் கூடி நின்றாலும், கவன முடனே தனித்தனியே கருது மிவற்றி னின்றாலும், எவனும் பிறக்கி லிப்பாரின் மேவு மரிட்ட மெய்துவனே" (78) என்று சாதகாலங்காரம் கூறும்.

ஒருயாண்டுக்குள் மகவு மரித்தலைச் சந்திரனால் அறிதல்.

116. சாற்றுறு மியோக நாதன்
சார்பம்மிந் துறுநாட் சாவாம்
மாற்றுமிந் திருந்த வோரை
மதிவரு நாள தேனும்
தேற்றுத யோரை யிந்து
புகுநாளுந் தீக்கோள் நோக்கம்
ஏற்றுறு நாளு மாண்டிற்
சாமென விசைத்தார் முன்னோர்.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) அரிட்ட யோகத்திற்குப் பலமுள்ளவன் நின்ற இராசியிற் சந்திரன் வருநாள் மரணம்.

சந்திரன் நின்ற இராசியிற் திரும்பச் சந்திரன் வருநாளும் மரணம்.

உதய இலக்கின இராசியில் சந்திரன் வருநாளும் மரணம்.

அரிட்ட யோகங் கொடுத்த கிரகங்களில் எவன் பலவான், அவனைப் பாவர் நோக்கில் அந் நாளில், சந்திரனுக்கும் பாப திருட்டி உண்டாகில் அந் நாளில் மரணம்.

அந்த அரிட்ட யோகங்களெல்லாம் ஒரு வருடத்திற் குள்ளாக மரணம் என்று முனிவர்களால் சொல்லப்பட்டது. (எ-று). 13

குறிப்பு :—மேற் கூறிய பால மரண யோகங்களில் இன்ன காலத்தில் இறப்பு நிகழுமென்று காலந்தைக் குறிப்பிட்டுச் சொல்லாத இடத்திலே ஒரு வருடத்துள் மரணம் நிகழும் என்க. அது எப்பொழுது நிகழும் என்பதை இப் பாட்டுக் கூறுகின்றது.

இவ் வத்தியாயத்திற் கூறியவை.

117. சந்ததி பிறந்த வன்றே
சாவதும் யாண்டு தன்னுள்
அந்திய மடையு மாறும்
அன்னையு மகவும் கூட
வெந்திறந் தேகு மாறும்
வீயுகா லிங்கா லென்றே
இந்துவாற் கூறு மாறும்
இயம்பினன் இலிங்கன் றனே. 14

ஆறுவது
சத்தி யோக மரண அத்தியாயம்
முற்றும்.

ஏழாவது

## ஆயுர்த்தாய அத்தியாயம்

பிண்டாயுர்த்தாயபலன உச்சநீச திசை

118. மயனூர் யவனர் மணிந்தருடன்
சத்தி தொல்லோர் வகுத்துரைத்த
சுயமாந் துங்கந் தினேசன்முதற்
சொல்லும் நவமந் திதிவிடயம்
பயமார் வினைகள் பூதமுருத்
திரரே தசமா மிவைபத்தோ
டுயர்விற் கூட்டக் கதிராதி
உச்ச நீசத் திசையாண்டாம்.

(எ-து) மயன், யவனாசாரியர், மணிந்தாசாரியர், பராசரர் என்ற முன்னோராற் சொல்லப்பட்ட அவரவர் உச்சங்க ளாதியாகத் திசைகள் ஆதித்தன் முதலாகச் சொல்வது.

நவமம்-ஒன்பது ; திதி-பதினைந்து ; விடயம்-ஐந்து ; வினை-இரண்டு ; பூதம்-ஐந்து ; உருத்திரர்-பதினொன்று; தசம்-பத்து. இவற்றை ஆதித்தன்முதல் ஏழு கோள்களுக்கும் அடைவே பத்திலே கூட்ட அவரவர் வருடங்களாம்.

அஃதாவது, ஆதித்தன் வருடம் 19 ; சந்திரன் வருடம் 25 ; செவ்வாய் வருடம் 15 ; புதன் வருடம் 12 ; வியாழன் வருடம் 15 ; சுக்கிரன் வருடம் 21 ; சனி வருடம் 20. இவை உச்ச நீச திசை வருடங்கள், (எ-று). 1

RangaRakes

tamilnavarasam.com

குறிப்பு : துங்கம்—உச்சம். அறிஞர் ஆயுர்த்தாயத்தை இரண்டு வகை என்பர். ஒன்று கோள்களின் இயைபால் அறியப் படுவது. மற்றொன்று கணிதம் செய்து பெறுவது. அவ் விரண்டுள் கோள்களின் இயைபால் அறியப்படுவது நியதாயுர்த் தாயம், பரமாயுர்த்தாயம், அமிதாயுர்த்தாயம் என மூன்றாகும். கணிதம் செய்து பெறுவது 1. அம்சாயுர்த்தாயம், 2. பிண்டாயுர்த் தாயம், 3. நிசர்க்காயுர்த்தாயம், 4. சீவசர்மோதிதாயுர்த்தாயம் என நான்காகும். இந் நான்கில் பிண்டாயுர்த்தாயம் இப் பாட்டிற் கூறப்பட்டுள்ளது. இப் பாட்டின் கருத்தினை,

" பாருலகிற் சாதகருக் காயுர்த்தா யந்தான்
  பண்புடைய சத்தியா சனர்சித்த சேசர்
பேருடைய வரநரா யணர்தெய்வ சுவாமிப்
  பெருமணியிந் தாசாரி மயன்பட்டோத் பலராம்
கூரும்யவ ஞசாரி இவர்களெண் மருந்தாம்
  குலவுதர்க்க வாதமுடன் மறைமுதற்சம் மதியாய்ச்
சீருடனே மூன்றுவகை ஆயுர்த்தா யந்தான்
  செப்பியதோர் வடமொழியைச் செந்தமிழாற் சொல்வாம்.

கதிரவன்பத் தொன்பதுடன் மதியிருபத் தைந்து
  கருதுசெவ்வாய் பதினைந்து கணக்கன்பனி ரண்டாம்
எதிர்பொன்னோன் பதினைந்து வெள்ளிமூ வேழாம்
  இனியசனி இருபதுடன் நூற்றிருப தாண்டும்
சதிருடனே பிண்டாயுர்த் தாயமென்ப ரிவர்கள்
  தங்கள்தங்கள் பரமவுச்சந் தன்னில்நின்றாற் றானே
அதிபரம வுச்சமுதல் அந்நீச மட்டும்
  ஆனநூற் றெண்பதுபா கையுமடைவிற் கொண்டே.

என்னும் (1353,-54) சாதக சிந்தாமணிப் பாட்டுடன் ஒப்பிட்டறிக.

பிண்டாயுர்த்தாய திசையும், இலக்கின நவாம்கிச
திசையும், இலக்கின திசையும், அரணமும்.

119. நீச முறுங்கோட் குரைத்ததனிற்
    பாதி கடுகின் றிடிலுணர்ந்து
  பேசு முதய நாவாங்கிசமான்
    டிடையின் றிடுதல் விரித்துரை



ஏசில் உதய பம்மனவான்
    டிடையோ ரெரிந்த் தறிமுன்றென்
றசில் புகர்சுன் றெழிந்தோரத்
    தமங்கள் பாதி யாண்டினிற்போம்.

(எ-து) இப்படிச் சொல்லிய கிரகங்கட்கு அந் தந்தக் கிரகங்கள் அவரவர் பரம நீசங்களில் நிற்கில், அவரவர்க்குச் சொல்லிய வருடங்களிற் பாதி குறையும்.

கிரகங்கள் தங்களுடைய உச்ச இராசிக்கும் நீச இராசிக்கும் இடையில் நிற்கில் திரிராசிகஞ் (திரை ராசிகம்) செய்து கொள்ளவும். அஃதாவது, அவரவர் பரமோச்சத்தில் அவரவர் திசை முழுமனும் ஆகும். அவரவர் பரம நீசத்தில் அவரவர் திசை வருடத்திற் பாதி செல்லுகையால், இடையிலுள்ள இராசி அறிந்து திரி ராசிகஞ் (திரைராசிகஞ்) செய்து கொள்ளவும். இது திசை வருடமாகும்.

பின்பு, இலக்கின நவாம்கிச திசை, இலக்கினத்திற் சென்ற அங்கிசம் எத்தனை, அத்தனை வருடம் வைத்துக் கொள்ளவும். நின்ற நவாங்கிச சேடத்தைத் திரிராசி கஞ் (திரைராசிகஞ்) செய்து மாதமும், தேதியும், நாழி கையுமாக வைத்துக்கொள்ளவும்.

பின்பு, இலக்கின திசை, இலக்கினத்தினுடைய இராசியளவும் எண்ணிச் சென்ற இராசியை வருடமாக, வைத்து இலக்கினத்திற் சென்ற பாகை கலையைத் திரி ராசிகஞ் (திரைராசிகஞ்) செய்து, மாசமுந் தியதியும் நாழிகையுமாக வைத்துக் கொள்வது. இந்தப்படி இலக் கினத்திசை அறியவும்.

பின்பு, அரணஞ் செய்யும்படி :— செவ்வாயொழிய மற்றுள்ள கிரகங்கள் சத்துருச் சேத்திரத்தில் நிற்கில்,



RangaRakes
tamilnavarasam.com

சத்துருச் சேத்திரத்திலே நின்ற கிரகங்களுடைய திசை வருடத்தில் மூன்றிலொன்று களையவும். இது சத்துருச் சேத்திர அரணம்.

பின்பு, மூட அரணஞ் செய்யும்படி :—சுக்கிரனும் சனியும் ஒழிய மற்றுள்ள கிரகங்கட்குப் பாடு உண்டாகில், பாடு உண்டான கிரகங்களுடைய திசை வருடத்திற் பாதி களையவும். இது மூட அரணம். (எ-று). 2

குறிப்பு :—"பிண்டாயுர்த்தாய கணிதத்தோடு கூடிய இலக்கின தசையானது நவாம்ச எண்ணிற்குச் சமமான யாண்டினைக் கொடுக்கிறது. நவாம்ச சேடங்கொண்டு திரைராசிகப் பிரகாரம் மாசம், நாள், நாழிகை, வினாடி முதலியனவற்றைக் கணித்துக் கொள்ளவேண்டும்.

இலக்கினாதிபன் முழுபலமுள்ளவனா யிருப்பின் இலக்கின ஸ்புடத்தினுடைய இராசி அளவான யாண்டுகள் திசையாண்டுகளாம்" என்று சாராவளி (அத்.-39-சு.-17) கூறுகிறது.

பிண்டாயுர்த்தாயத்தில் திரைராசிகம் செய்யும் முறை :— சூரியன் முதலான ஏழு கோள்களின் சுத்த புடத்தை அவரவர் உச்ச இராசி, பாகை, கலைகளில் கழிக்கவேண்டும். கழித்த மிகுதி ஆறு இராசிக்குக் குறைவாக இருப்பின் மண்டிலத்தில் (பன்னிரண்டு இராசியில்) கழிக்க வேண்டும்; ஆறு இராசிக்கு மேலிருப்பின் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும். இவற்றைக் கலைகளாக்கி அவரவர் திசையாண்டால் பெருக்கி அதனை 21600 ஆல் (360 பாகைகளுக்குரிய கலை) வகுத்து வந்த ஈவு வருடமாகவும், மிகுதியை அடைவே 12, 30, 60, 60-ஆல் பெருக்கி 21600 ஆல் வகுத்து வந்த ஈவு முறையே மாசம், நாள், நாழிகை, விநாடிகளாம்.

சூரியன் முதலான கோள்களின் மிக்க உச்ச இராசி, பாகைகள். சூரியன் இராசி 0 - பாகை 10; சந்திரன் இராசி 1—பாகை 3; செவ்வாய் இராசி 9—பாகை 28; புதன் இராசி 5—பாகை 15; வியாழனுக்கு இராசி 3—பாகை 5; வெள்ளிக்கு



இராசி 11—பாகை 28; சனிக்கு இராசி 6—பாகை 20. இவை மிக்க உச்ச பாகமாம். சத்துருத் தானத்தின் அரணத்தையும் மூட அரணத்தையும் சாதக சிந்தாமணி கூறுமாற்றை

" இவ்வண்ணா மிரவிமுத லெழுகோ ளுக்கும்
 எண்ணியே கண்டறிந்த வாயுர்த்தா யத்திற்
பவ்வமுறுஞ் சத்துருத்தா னத்திருந்த கோட்கள்
 பாங்காக வேகொடுத்த வருடத்தி லேதான்
செவ்வியசெவ் வாய்தவிர மற்றப்பேர்க் கெல்லாம்
 செப்பமுடன் மூன்றிலொன்று தள்ளியே கூட்டல்
வெவ்வினையா மூடமுற்றோர் கொடுத்தவரு டத்தில்
 வெள்ளிசனி யல்லார்க்குப் பாதிதள்ளிக் கூட்டே."

(1356) ஒப்பிட்டறிக.

இராசிச் சக்கரத்தின் பின்பாதி அரணம்.

120. விரையமுன் னிடம தாக
  மேவுந்தீக் கோட்கு நீக்கும்
நிரையெலாம் பாதி மூன்று
  நிகழ்நாலொங் தாறும் பாகம்
உறுசுபர்க் கிதனிற் பாதி
  ஒன்றினிற் பலகோ ளுற்றால்
அறைவலி யோர்க்குச் சக்ர
  அபரார்த்த வரண மாமே.

(எ-து) பன்னிரண்டாமிடம்முதல் இடமாக ஆறு இராசிகளிற் பாபக்கிரகங்கள் நிற்கில் சக்கிர அபரார்த்த அரணஞ் செய்யவும்.

அஃதாவது, பன்னிரண்டாமிடத்திற் பாவி நிற்கில் அவன் திசைவருட மெல்லாங் களைவது. பதினோராமிடத்தில் நின்றவன் திசையில் பாதி களையவும். பத்தாமிடத்தில் நின்றவன் திசையில் மூன்றிலொன்று களையவும். ஒன்பதாமிடத்தில் நின்றவன் திசையில்

RangaRakes tamilnavarasam.com

நான்கிலொன்று கழிக்கவும். எட்டாமிடத்தில் நின்றவன் திசையில் ஐந்திலொன்று கழிக்கவும். ஏழாமிடத்தில் நின்றவன் திசையில் ஆறிலொன்று கழிக்கவும். இந்தப் படிப் பாபக்கிரகங்கட்குச் சக்கிர அபரார்த்த அரணம் செய்வது.

இந்தத் தானங்களில் சுபக்கிரகம் நிற்கில், பாபக் கிரகங்கட்குச் சொன்ன பலத்திற் பாதி கழிக்கவும்.

அஃதாவது, பன்னிரண்டாமிடத்தில் நின்ற சுப னுக்கு அவன் திசையில் வாசிக்கவும் (பாதி கழிக்கவும்). பதினோராமிடத்தில் நின்றவன் திசைக்கு நான்கி லொன்று கழிக்கவும். பத்தாமிடத்தில் நின்ற கிரகத்துக்கு ஆறில் ஒன்று கழிக்கவும். ஒன்பதாமிடத்தில் நின்ற சுபனுக்கு எட்டில் ஒன்று கழிக்கவும். எட்டாமிடத்தில் நின்ற சுபனுக்குப் பத்தில் ஒன்று கழிக்கவும். ஏழா மிடத்தில் நின்ற சுபனுக்குப் பன்னிரண்டில் ஒன்று கழிக்கவும்.

இந்தத் தலங்களில் ஒரு கிரக நாதனே நின்றால் இந்தப்படிக் கழிக்கவும். ஓரிராசியில் இரண்டு மூன்று நான்கு கிரகங்கள் கூடியிருந்தால் அவர்கட்குள்ளே பல மேறினவன் எவன் என்றறிந்து அவனுக்கு மாத்திரம் கழிக்கவும். இது சக்கிரார்த்த அரணமாம் (எ-று). 3

இப் பாட்டின் கருத்தை :

" வியந்தொட்டே யபசவ்ய மாறிரா சியினும்
வெம்பாவ ரிருக்கிலவர் கொடுத்தவய தினிலே
இயல்வியத்திற் பாவர்நிற்கின் முற்றுங்கொடு போவர்
இனியசுப ரிருந்தக்காற் பாதிகொடு போவர்
நயமுறுலா பந்தன்னிற் பாவர்நிற்கிற் பாதி
நண்ணுசுப ரிருந்தக்கால் நாலிலொன்று கொள்வர்
சுயகருமர் தனிற்பாவ ருறின்மூன்றத் தொன்றும்
சுபரிருக்கி லாறிலொன்று தொடர்ந்துகொள்வர் தாமே"



" பாக்கியத்திற் பாவர்நிற்கில் நாலிலொன்று கொள்வர்
பாங்கான சுபரிருக்கில் எட்டிலொன்று கொள்வர்
வீங்குமெட்டிற் பாவர்நிற்கில் ஐந்திலொன்று கொள்வர்
வீறுசுப ரேயிருக்கிற் பத்திலொன்று கொள்வர்
நோக்கரிய காமத்திற் பாவரே யிருக்கில்
நுவலுமோ ராறிலொன்று சுபரிருக்கிற் பாதி
ஆர்க்கமொடு கொள்வர்கிர கங்களே கூடில்
ஆனபெலத் தவர்க்குமாத் திரந்தள்ளிக் கூட்டே."
என்று சாதக சிந்தாமணி (1875, 1858) கூறுகின்றது.

தீயகோள்கள் இலக்கினத்திருப்பின் கழிக்கவேண்டு பலை.

121. உதயத்துப் பாவ ருற்றால்
உதயத்து நவாங்கி சாந்தம்
பதிதொகை திசையாற் ருக்கி
நூற்றெட்டுக் கீய்ப லத்தைத்
துதியுறு திசையி னீக்கச்
சுபதிட்டி யுளவேற் பாதி
விதிபலங் கழிகு ருரோ
தயவர ணம்வேற் கண்ணாய்.

(எ-து) உதய இலக்கினத்தில் பாபக்கிரகங்கள் நிற்கில், குருரோதய அரணம் செய்யவும்.

அஃதாவது, உதய இலக்கினத்தினுடைய நவாங் கிசம் எத்தனையென் றறிந்து, அந்தத் தொகையை வேறே வைத்து, அவரவர் திசை வருடத்தினாலே பெருக்கி, நூற்றெட்டுக் கீய்ந்து நின்ற பலம் அவரவர் திசையிற் கழிக்கவும். உதய இலக்கினத்திற்குச் சுபக் கிரக திட்டி யுண்டாகில், நூற்றெட்டுக் கீந்து வந்த பலத்திற் பாதி கழிக்கவும். இது குருரோதய அரணமாம் (எ-று). 4

குறிப்பு :—இக் குருசோதய கணிதம் நட்சத்திரக் கால் கழி அடியாகக் கொண்டு கணிக்கத் தொடங்கியதால்

RangaRakes tamilnavarasam.com

(12×9=108) நூற்றெட்டிற்கு ஈயும் படிக் கூறுகின்றது. கலை களாக்கிக் கணிக்கும் முறையைக் கீழே காண்க.

இலக்கினத்திற் குரூரக் கோள்களாகிய சூரியனாவது, செவ்வாயாவது, சனியாவது இருப்பின், இலக்கின புடத்தை வைத்து அதிலுள்ள இராசியை நீக்கிப் பாகை கலைகளுள் பாகை களை மட்டும் கலைகளாக்கிக் கலைகளுடன் சேர்த்து வைத்துக் கொள்க. இக் கலைகளால், சூரியன் முதலானவர்க்கு முன் அரணஞ் செய்து எஞ்சியிருக்கும் ஆயுர்த்தாயத்தைத் தனித்தனி பெருக்கி, 21600ஆல் (1800×12=21600) வகுக்க வந்த ஈவே இலக்கினத்தி லிருக்கும் குரூரக்கோள் களுக்குரிய அரணமாகும். இதை முன் அவரவர்கட்குக் கிடைத்திருக்கும் ஆயுர்த்தாயத்தில் கழித்து விட வேண்டும், இது அவர்களால் கொடுக்கப் பெற்ற சுத்த ஆயுளாகும். பாவச் சக்கரத்தில் இலக்கினத்திலுள்ள பாவியை ஏழிலிருந்து புதன், குரு, சுக்கிரன் முதலிய சுபரில் ஒரு சுபன் பார்த்தால் முன் கிடைத்துள்ள குரூர அரண பலத்தில் பாதியைத் தள்ளிவிட்டு அப்பாதியை அவரவர் ஆயுர்த்தாயத்தில் கழித்து விட வேண்டும். இந்த அரணம் சூரியன் முதலான ஏழு கோள்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது. இலக்கினத்திற்கு இல்லை. (சாராவளி அத்-39-சு-18, 19 ; ஸ்ரீபதி பத்ததி அத்.-5-சு.-26, 27)

122. அறுபதிற் றிரட்டி யாண்டோ
டைந்துநாள் மனிதர் யானைக்
குறுமெணுன் கசுவ மையைந்
தொட்டகங் கழுதைக் கென்ப
இறுமெண்மூன் றிடப மேதிக்
கீராறும் பன்றி நாய்க்குத்
தெறுதகர் மிருக மாதிக்
கீரெட்டாம் செகத்தில் வாழ்நாள்.

(எ-து). மனிதருக்கும், யானைக்கும் நூற்றிருபது வருடமும். ஐந்து நாளும் பரமாயுள். குதிரைகட்கு முப் பத்திரண்டு வருடம். ஒட்டகங்கட்கும், கழுதைகட்கும்



இருபத்தைந்து வருடம். பசுக்களுக்கும், எருமைகட்கும் இருபத்துநான்கு வருடம். பன்றிகட்கும், நாய்கட்கும் பன்னிரண்டு வருடம். ஆடுகட்கும், புலி முதலான விலங்குகட்கும் பதினறு வருடம் பரமாயுளாகும் (எ-று). 5

மனிதருக்குக் கூடிய பரமாயுளைப்பெறும் சாதகன்.

123. மீனத்தி லந்தி யக்கால்
உதித்திட விடையிற் புந்தி
தானைந்தாம் வர்க்கம் நாடிச்
சார்ந்திடத் தத்த முச்சம்
ஏனையோர் நிற்கின் முன்னம்
இயம்பிய திசையி னுயுள்
மானையே யனைய கண்ணுய்
மனிதர்கட் கொக்கு மன்றே.

(எ-து). மீனத்தில் மீனக்கால் உதயமாக, புதன் இடபத்தில் பஞ்சவர்க்க நாடியான இருபத்தைந்து கலை சென்று நிற்க, மற்றக் கிரகங்களெல்லாம் தங்கள் தங்க ளுடைய பரமோச்சத்தில் (நிற்கின்) முன்னே சொன்ன பரமாயுசு ஒத்துவரும் (எ-று). 6

குறிப்பு :—“மீன இலக்கினத்தில் அந்திய நவாம்சத் தில் பிறந்தவனுக்கும், புதன் இடப இராசியில் 25 கலைகள் சென்று நிற்கும் காலத்தில், மற்ற ஆறுகோள்களும் தங்கள் தங்கள் பரமோச்ச பாகைகளில் நிற்பாராயின் அவர் 120 யாண் டாகிய பரமாயுளைப் பெறுவாரென்றும்” (அத் -39-சு.-21.)

“சந்திரனேடு கூடிய வியாழன் கடக இலக்கினத்திலும், புதன், சுக்கிரன் கேந்திரத்திலும், சூரியன், செவ்வாய் இவர்கள் மூன்று, ஆறு, பதினென்றிலும் இருக்கப் பிறந்தோன் 120 யாண்டு வரை இருப்பன்” என்றும் சாராவளி (அத். 39 சுலோ -22) கூறு கின்றது.

RangaRakes tamilnavarasam.com

உடம்பிற்கு நன்மை தருவதாயும், சிறிதாயும் உணவு முதலானவற்றை உண்கின்றவர்க்கும், வாய்மை பேசுபவர்கட்கும், நல்லொழுக்கம் உள்ளவர்கட்கும், இந்திரியம் மனம் முதலானவற்றை அடக்கியொழுகுபவர்கட்கும் மேலே கூறிய பரமாயுள் உண்டென்று இருடிகள் உறுதி செய்துள்ளனர் (சாராவளி அத்.-39-சுலோ.-25).

பிண்டாயுர்த்தாய மாகிய உச்ச நீச திசைக்கு இருபது வயதிற்குமேல்தான் ஆயுள் அறியலாம் என்றல்

124. பருதியா (ல்) மயன்முன் னோர்கள்
பகர்ந்திடுந் திசையி லாயுள்
உரைசெயி லிருப தற்குள்
உணரொணா தரிட்டந் தன்னால்
வருடமெட் டளவு மோர்ந்து
வகுக்கலா மாத லாலே
தெரிவுறு சித்த சென்ன
தேவசா மியுமன் றென்றார்.

(எ-து). மயன், யவனாசாரியார், மணிந்தாசாரியர் இவர்கள் ஆதித்தன் வலியினால் சொல்லப்பட்ட உச்ச நீச திசையினாலே பரமாயுள் இருபது வயதிற்குள்ளாக அறியக்கூடாது. அரிட்ட யோகத்தினாலே எட்டுவருட மட்டும் ஆயுள் அறியலாம். அதற்குமேல், இருபது வயது பரியந்தம் அரிட்ட முண்டாய்க் (உண்டாகக்) கண்டபடியினாலே, இந்த உச்சநீச திசைக்குத் தோஷமுண்டு. ஆதித்தனுக்கு வலியுண்டாகில் உச்சநீச திசை ஆயுள் ஒத்துவரும்; அல்லாமல் (அல்லாவிடில்) ஒத்துவராதென்று சித்த சென்ன தேவ சுவாமியும் சொன்னார் (எ-று). 7

குறிப்பு :- இலக்கினத்திற்கு அதிக பலம் உண்டாயின் அம்சாயுர்த்தாய திசையும், சூரியனுக்கு அதிகபலம் உண்டாயின்



உச்ச நீச திசையாகிய பிண்டாயுர்த்தாய திசையும், சந்திரனுக்கு அதிக பலமுண்டாயின் நைசர்க்கிக திசையும் கொண்டு ஆயுளை நிச்சயிக்கவேண்டும். (சாராவளி அத்.-39-சு.-2). இப் பாட்டிற் குறிப்பிடப்பட்ட சித்த சென்ன தேவ சுவாமி என்பார் சித்தசேனாசாரியர் போலும்.

தீர்க்காயுள் யோகமும், இராசயோகமும் ஆகிய இரண்டும் வேண்டும் என்பது.

125. அலைவில்தீர்க் காயு யோகத்
தவனிகா வலனா மென்று
சிலர்புகன் றிடுவ ரன்று
செம்பொனுண் டாகி யாயுள்
இலர்சிலர் ஆயு ளுண்டாய்
இருந்தன மிலாது முண்டாம்
உலைவிலா திருவ கைத்தென்
றுணர்ந்தவர் விரிப்ப ரன்றே.

(எ-து). தீர்க்காயுள் யோகம் உண்டாகில், (அத்) தீர்க்காயுள் யோகத்திற்றானே சக்கரவர்த்தித்துவ யோகமும் உண்டென்று சிலபேர் சொல்லுவர். சிலபேர் சக்கரவர்த்தித்துவத்தொடுங் கூடிய திரவிய யோகம் உண்டாய் ஆயுளில்லாமலும்; தீர்க்காயுள் யோகம் உண்டாய்த் திரவியமில்லாமலு மிருப்பவர் பூமியில் உண்டு. ஆகையால், யோகமுந் திசாயுர்த்தாயமும் இல்லாமல் ஆயுள் நிச்சயிக்கக் கூடாதென்று பெரியோர் சொல்லுவர். (எ-று). 8

வைசர்க்க திசையும் அம்ச திசையும்.

126. உயர்தரு நிசர்க்க வாண்டில்
ஏழினி லொன்று நீக்கி
பயனைமுன் போலத் தாக்கிப்
பகர்ந்தநா ளெணம் நீக்கில்



RangaRakes tamilnavarasam.com

நயனுறு சீவ சன்மத்
திசைகோட்கள் நவாங்கி சந்தை
அயமுத லெண்ணி லாண்டாம்
அவைசத்தி பலர்க்கு மதமே.

(எ-று). நிசர்க்க திசை வருடத்தில் ஏழிலொன்று நீக்கி, நின்றதைக் கிரகம் உச்சாந்தங்களினாலே பெருக்கி உச்ச நீச திசையைப் போலே (பிண்டாயுர்த்தாய திசையைப்போலே) நான்குவகை அரணமும் நீக்கினால் சீவ சன்மத் திசையாம் என்றறிவது.

அங்கிச திசை, (அம்சாயுர்த்தாயம்) கிரகங்கள் எந்தெந்த நவாங்கிசங்களில் நின்றார்கள் அந்தந்த நவாங்கிசத்தில் சென்றதை மேடமுதல் எண்ணி, அத்தனை அத்தனை வருடமாக வைத்துக்கொள்வது. நின்ற நவாங்கிச இராசியைத் திரிராசிகஞ் செய்து, மாதமும், தியதியுமாக வைத்துக்கொள்வது.

இது சத்தியாசாரியார் மதம்; பலருக்குஞ் சம்மதியாகச் சொல்லியது (எ-று). 9

குறிப்பு :—ஒரு சாதகனுக்கு இலக்கினம் சட்வர்க்க பலத்தைப் பெற்றிருப்பின் அம்சாயுர்த்தாய திசை கொள்ள வேண்டும். சூரியன் சட்வர்க்க பலத்தைப் பெற்றிருந்தால் பிண்டாயுர்த்தாய திசையினைக் கொள்ளவேண்டும். சந்திரன் சட்வர்க்க பலத்தைப் பெற்றிருப்பின் நைசர்க்கிக ஆயுர்த்தாய திசையினைக் கொள்ளவேண்டும். இலக்கினம் முதலான மூன்று சட்வர்க்க பலத்தில் குறைவுடையின் ஜீவசர்ம மகாரிஷி கூறிய சீவசன்மத் திசையைக் கொள்ளவேண்டும். அது கொள்ளும் முறை :— மக்கட்குப் பரமாயுளான யாண்டு 120, நாட்கள் 5 என்னும் இவற்றை ஏழால் வகுக்க வந்த ஈவு யாண்டு 17, திங்கள் 1, நாள் 22, நாழிகை 8, விநாடி 34 ஆகும். இவையே சூரியன் முதலான ஏழு கோள்களுக்கும் பரமோச்சத்தில் நிற்கும் காலத்து உண்டாகும் திசையாண்டுகளாம். இத் திசையாண்டுகளைப் பிண்டாயுர்த் தாயத்திற்குச் சொன்ன முறைப்படி பரமோச்சத்தில் நின்றால் முழுதும், பரம நீசத்திலிருந்தால் பாதியும், இடையிலிருந்தால் திரைராசிகஞ் செய்தும் கொள்க. பின்னர், பிண்டாயுர்த்தாயத்திற்குச் சொன்னதுபோலவே நான்குவகை அரணமும் செய்து கொள்க.



இம்முறை ஸ்ரீபதி பத்ததியிலும் (அ.-5-சு.-35), சாராவளியிலும் (அத்.-339 சு.-20) கூறப்பட்டுள்ளது.

ஆனால், இப் பாட்டு நிசர்க்க திசை வருடங்களான சந்திரனுக்கு 1, செவ்வாய்க்கு 2, புதனுக்கு 9, சுக்கிரனுக்கு 20, வியாழனுக்குப் 18, சூரியனுக்கு 20, சனிக்கு 50 (ஆக 120) என்னும் இவற்றை ஏழால் வகுத்து ஒரு பாகத்தை நீக்கிவிட்டு எஞ்சியதை முன்சொன்னவாறு கொள்ளும்படிச் சொல்லுகிறது. அறிஞர் ஆராய்க.

அங்கிச திசை என்பது நட்சத்திர கால்களால் கொள்ளப்படும் திசையாகும். இதற்கு அம்சாயுர்த்தாயம் என்றும் பெயர் கூறப்படும். இது சூரியன் முதல் ஏழு கோள்கள், இலக்கினம் ஒன்று ஆக எட்டினாலும் கொள்ளப்படுவது. இவ் வெட்டிற்கும் மேட முதல் எத்தனை நவாங்கிசங்கள் சென்றுள்ளன என்று தனித்தனி அறிந்து, எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கை அவ்வவற்றின் யாண்டுகளாகும். அவை நிற்கும் நவாங்கிசத்தை ஒரு யாண்டிற் குரியதாகக் கருதி, அந் நவாங்கிசத்தில் சென்றது, நின்றது, அறிந்து கணித்து, ஒரு யாண்டிற் சென்றது நின்றது அறிக.

இதனைக் கணிதவழியாய்க் கொள்ளு முறையைக் கீழே காண்க. சூரியன் முதலான ஏழு கோள்களின் சுத்த புடத்தையும் இலக்கின புடத்தையும் தனித்தனி கலைகளாக்கி, ஒரு நட்சத்திர காலுக்கு 200 கலைகளாதலின் அதனால் வகுக்க வரும் ஈவு யாண்டாகும். எஞ்சியதை முறையே 12, 30, 60 என்னும் இவற்றால் பெருக்கி 200ஆல் வகுக்க வந்த ஈவு திங்கள், நாள், நாழிகையாகும். இவ்வாறு எட்டிற்கும் கணித்து வைத்துக் கொள்க. யாண்டில் 12க்கு மேல் வரின் 12-ஆல் வகுத்து எஞ்சியதை வைத்துக் கொள்க.

RangaRakes tamilnavarasam.com

இனி, அத் தொகையைக் கோள்களின் வலிவு, வலி யின்மையை அறிந்து, கூட்டுதல், குறைத்தல் செய்து கொள்க. அது வருமாறு:—கோள்கள் வர்க்கோத்தமத்தி லிருப்பினும், இராசி, நவாம்சம், திரேக்காணங்களில் ஆட்சியி லிருப்பினும் அவரவர் ஆயுர்த்தாய யாண்டினை இரட்டித்துக் கொள்க. கோள்கள் வக்கிரத்திலும் உச்சத்திலு மிருப்பின் அவரவர் யாண்டினை மும் மடங்கு செய்து கொள்க. சத்துருச்சேத்திர அரணமும், மூட அரணமும், சக்ர அபசார்த்த அரணமும் முன் கூறியவாறு செய்து கொள்க, நீசத்திருப்பின் பாதி தள்ளவேண்டும். இதற்கு குருரோதய அரணமில்லை. இதனை, ஸ்ரீபதி பத்ததி, சாராவளி, பல தீபிகை, தமிழ்ச் சாதக சிந்தாமணி இவற்றிற் படித்துணர்க.

மேற் கூறிய அங்கிச திசைக்குக் கூட்டுவனவும் கழிப்பனவும்.

127. வைத்தவித் திசைக்கே யுச்சம்
வக்கிரம் மும்ம டங்காம்
உத்தமஞ் சுபாங்கி சங்கள்
திரிபாகங் கிரக முற்குல்
மொத்திரு மடங்க தாகும்
முன்புபோ லரணம் நீக்கிப்
பைத்தபரம் பல்கு லாய்கேள்
பராசரர் மதமி தாமே.

(எ—து) சத்தியாசாரியார் திசைக்கு (அங்கிச திசைக்கு) இன்னுமொரு விசேட முண்டு. அவையா வன, உச்சத்திலும், வக்கிரத்திலும் நிற்கின்ற கிரகத்தின் திசையை மூன்றிற் பெருக்கிக் கொள்ளவும். வர்க்கோத் தம நவாங்கிசத்திலும் தன்னுடைய சுயநவாங்கிசத்தி லும், தன்னுடைய சுயத் திரேக்காணத்திலும், தன் னுடைய சுயச் சேத்திரத்திலும் இவைகளில் நின்ற கிரகங்களுடைய திசையை இரட்டித்துக் கொள்ளவும். முன்பு போல் திருசியார்த்த அரணஞ் செய்துங் கணக (எ—று).





அங்கிச திசையில் செய்யப்பெறும் இலக்கினயுர்த்தாயம்.

128. அங்கிச திசைக்கு வெட்சி
நவாங்கிசஞ் சென்ற தாண்டாம்
தங்கியே நின்ற மாதந்
தியதியாந் தன்பொன் னேக்கில்
இங்குத யேசன் றேரில்
இலக்கினத் தளவாண் டென்னுந்
பங்கமில் நீக்கோள் வெட்சி
முன்னவர் பரிசு மின்றே.

(எ—து) முன் சொன்ன அங்கிச திசையில் சிறிது கூட்டவேண்டிய திசை யுண்டு. அஃதாவது, இலக்கின இராசியில் நவாங்கிசம் எத்தனை சென்றது, அத்தனை வருடமாக வைத்து, உதித்த நவாங்கிசத்தைத் திரிரா சிகஞ் செய்வது ; (செய்த அதனை) மாசமுந் திவசமுமாக வைத்துக்கொள்வது.

பின்பு, இலக்கினாதிபனுக்குக் குருயோக திருட்டி யுண்டாகில், இலக்கினாதிபன் பலவானாகிலும் இலக்கின இராசிக்கு முன்பில் மேட முதல் எத்தனை இராசி சென்றது, அத்தனை வருடமாக வைத்து, நின்றதை இலக்கினங்கொண்டு திரிராசிகஞ் செய்து, மாதமும், தியதியுமாக வைத்துக் கொள்வது. இது சத்தியாச் சாரியார் மதம். அந்த அங்கிச திசை சத்தியாச்சாரிய ரால் சொல்லப்பட்டது. இந்தத் திசைக்குக் குருரோதய அரணமில்லை.

முன்னேராகிய மயன, யவனுசாரியர் இவர்களாற் சொல்லப்பட்ட உச்ச, நீச, அந்தரத் திரியிராசிகமும், இந்தச் சத்தியாசாரியர் சொல்லப்பட்ட அங்கிச திசை, மற்றுள்ள ஆசாரியன்மாராற் சொல்லப்பட்ட திசை

RangaRakes
tamilnavarasam.com

வெகுவர்க்கமான அநேகங் குணங்களால் அயோக்கியஞ் செய்தபடியினாலே ஆசாரியர் உபதேசமும் இதுவேயாம் (எ-று). 11

குறிப்பு :—அங்கிச திசையில் (அம்சாயுர்த் தாயத்தில்) இலக்கினாயுர்த்தாயம் கொள்ளும் பொழுது சூரியாதி கோள்களுக்குக் கொள்வதைப் போல் பொதுவாகக் கொள்ள வேண்டும். இலக்கின பாவம் பலமாயிருந்தால், விசேடமாகவும் கொள்ள வேண்டும். பலமில்லாவிடில் இது கொள்ள வேண்டுவதில்லை. "இலக்கினமானது குரு, புதன், இலக்கினாதிபதி இவர்களாற் பார்க்கப்பெற்றாலும், இவர்கள் இலக்கினத்திலிருந்தாலும் இலக்கின பலமாம்" பலதீபிகை (அத்-22-சு-19)

விசேடமாகக் கொள்ளும் முறை :—இலக்கின புடத்தை வைத்துக்கொண்டு இராசி ஒன்றுக்கு ஒரு வருடமும், பாகை ஒன்றுக்குப் பன்னிரண்டு நாளும், கலை ஒன்றுக்குப் பன்னிரண்டு நாழிகையும், விகலை ஒன்றுக்குப் பன்னிரண்டு விநாடியுமாகக் கணக்கிட்டுக் கொள்க. இதனை முன் பொதுவாகக் கணித்தவற்றுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த இலக்கினாயுர்த்தாயம் அங்கிச திசைக்குமட்டுந்தான் கொள்ள வேண்டும். ஏனையவற்றிற் கில்லை. இப் பாட்டில் "பங்கமில் தீக்கோள் வெட்சி" என்றது குருரோதய அரணத்தை.

சத்தியாசாரியார் கூறிய அங்கிசதிசையே சிறந்த தென்றல்.

129. சாற்றிய திசைக டம்மிற்
சத்திய திசைசி றேட்டம்
ஆற்றுமற் றுயுர்த் தாயம்
அயோக்கியம் வெகுவர்க் கத்தால்
தோற்றுமி தேக மாகப்
பூரியாய்ச் செப்ப லாலே
வேற்றகும் விழியாய் ஆசா
ரியருக்கு விருப்ப மீதே.



(எ-து) முன் சொன்ன திசைகளுக் கெல்லாம் (திசைகளுள் ளெல்லாம்) சத்தியாசாரியர் திசையே (அங்கிச திசையே) விசேடம் பெற்றுள்ளது. மற்றைய ஆசாரியன்மாராற் சொல்லப்பட்ட திசைகள் வெகுவர்க்கமான அநேகங் குணங்களால் அயோக்கியஞ் செய்தபடியினாலே ஆசாரியர் உபதேசமும் இதுவேயாம் (எ-று). 12

குறிப்பு :—"சத்தியாசாரி கூறிய ஆயுர்த்தாயமே சிறந்தது; ஏனையோர் கருத்துக்கள் அவ்வாறானதன்று" என்று கூறுகிறது பலதீபிகை (அத்.-22-சு.-20)

அமிதாயுள் யோகம்.

130. திங்களும் வியாழந் தானுங்
கடகத்திற் சேர்ந்து திப்ப
சுங்கனும் புதனுங் கண்டந்
தோய்ந்திடப் பாவ ரியாரும்
தங்கிரி புடன்ப வங்கள்
சகசஞ்சார்ந் திடப்பி றக்கும்
அங்கவற் கறுதி யில்லை
அமிதாயு யோக மாமே.

(எ-து) சந்திரனும், வியாழனும் கூடிக் கர்க்கடக இலக்கினத்தி லுதிக்கச், சுக்கிரனும், புதனும் கேந்திரங்களில் நிற்க, மற்றக் கிரகங்கள் ஆறு, பதினொன்று, மூன்றாமிடம் ஆகிய இவற்றின்கண் நிற்கப், பிறந்த சிசுவிற்கு ஆயுட்பிரமாணம் இல்லை.

இந்த யோகத்திற்கு அமிதாயுரு யோகம் என்று பெயர். அமிதமாவது அறுதியில்லாமை (எ-று). 13

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினைச் சாராவளியிலும் (அத்.-39-சு.-22) காண்க.

RangaRakes tamilnavarasam.com

இவ் வத்தியாயத்திற் கூறப்பட்டவை.

131. ஆசா ரிய ரோடு
மரியுச்ச நீச திசை
பேசு மிலக்கின திசையுடனே
பெரிய அரண முண்டுசெய்தார்
ஏக மங்கிச திசையுடனே
இந்தச் சீவ சன்மதிசை
வாசு மாயுர்த் தாயத்தை
வணிக விலிங்கன் பகர்ந்ததிதே. 14

ஏழாவது
ஆயுர்த்தாய அத்தியாயம்
முற்றும்.

எட்டாவது

## திசாபல அத்தியாயம்.

திசை நடக்கும் முறை (நாசிரேயம்).

132. உதயம் பானு மதிவலியோர்க்
குயர்கேந் திரமுன் னுறுங்கோளால்
விதியி னுதி மத்தியமந்
தியமாம் வயசிற் பலமேவும்
இதனி லின வலிபவங்க
ளிவர்தம் மிதிலொன் றபாவமெனில்
அதிகேந் திரத்தைப் பணபரங்க
ளாபோக் கிலிபந் தருமடைவே.

(எ-து) இலக்கினம், ஆதித்தன், சந்திரன் இவர்களில் பலமுள்ளவன் எவன் என்றறிந்து, அந்த வலிவுள்ள கிரகத்திற்குக் கேந்திரத்தி லிருந்தவன் பூர்வ வயதிற் பலன் கொடுப்பான். பணபரத்தி லிருந்தவன் மத்திய வயதிற் பலன் கொடுப்பான். ஆபோக்கிலிபத்தி லிருந்தவன் அந்தியத்திற் பலன் தருவான்.

இலக்கினத்திற்குக் கேந்திரங்களில் நின்ற கிரகங்கள் பூர்வ வயதிற் பலன் தருவார். சூரியனுக்குக் கேந்திரத்தில் நின்றவர் மத்திய வயதிற் பலன் கொடுப்பார். சந்திரனுக்குக் கேந்திரத்தில் நின்றவர் அந்திய வயதிற் பலன் தருவார்.

இவர்கள் மூவருள்ளும் அதிக பலமுள்ளவனுடைய கேந்திரத்தில் நின்ற கிரகம் முன்பில் (முன்னே) பலன் தரும், மத்திய பலமுள்ளவனுடைய கேந்திரத்தில்



RangaRakes tamilnavarasam.com

நின்ற கிரகம் நடுவயதிற் பலன் தரும். வலி ஈனனு டைய கேந்திரத்தில் நின்ற கிரகம் அந்திய வயதிற் பலன் தரும்.

கேந்திரத்திற் கிரகம் இல்லையாகில் பணபரத்திலும், ஆபோக்லிபத்திலும் நின்றோர் கேந்திரத்தி லுள்ளோர் தரும் பலத்தைத் தருவார். ஆபோக்கிலீபத்தின் இல்லை யாகில் கேந்திரத்திலும், பணபரத்திலும் நின்ற கிரகம் ஆபோக்லிபத்தின் உள்ளோர் தரும் பலன் கொடுப்பர். கேந்திரத்திலும் பணபரத்திலும் கிரகம் இல்லையாகில் ஆபோக்லிபத்தின் நின்ற கிரகந்தானே மூன்று வயதிற்கும் பலன் தரும் (எ-று). 1

இதுவும் அது.

133. ஆயுர்த் தாய மெவனுல்வந்
தததுவே யாயு அதில்வலியோன்
ஏயு முன்ன மவன்கண்டத்
தனர்பின் பலத்தால் பணபரம்பின்
நேயு மாபோக் கிலிபக்கோள்
பின்பின் சமனேல் திசையுயர்ந்தோன்
சாயுஞ் சமனேல் பட்டுதித்தான்
றிசையே முதலாய்ச் சாற்றுகவே.

(எ-று) யாதொரு கிரகத்தினாலே யாதொரு ஆயுள் வந்தது, அது தானே அவனுக்குத் திசையாக உண்டாக்கப்பட்டது. இலக்கினம், சூரியன், சந்திரன் இவர்களிலே எவன் பலவான் அவன் திசை முந்தின திசை. பின்பு அவனுக்குக் கேந்திரத்தில் நின்ற கிரகங் களில் பலம் ஏறினவன். இப்படிக் கேந்திரத்திலுள்ள கிரகங் கழிந்தால் பணபரத்தில் பலம் அதிக முடையவன் முன்பில் திசை. பணபரத்தில் அப்படியுள்ள கிரகம் கழிந் தால் ஆபோக்லிபத்திலே யுள்ள கிரகங்கள். இப்படித்



திசாக்கிரமம். அவ்விடத்திலே பலமும் கிரமத்தாலே பிரதானமாய்க் கொள்வது.

இதில் பலன் சமனாகில் திசைவருடம் அதிக முடை யவன் திசை. முன் அவ்விடத்திலும் பலம் கிரமத்தாலே கொள்வது. பலம் கிரமத்தாலே வரும்பொழுது, பலன் சமனெத் திருந்ததாகில் அதிக வருடம் உள்ளவன் திசை முன்னும் அதிலும் (அவற்றுள்ளும்) முதலாய் வரும். அதுவும் சமனாகில், முன்னே பாடு தீர்ந்து முன்னே உதித்தவன் திசை (நடைபெறும்). அதிலும் சமனாகி அநேகமுண் டென்கில் அக் காலத்திலாகிலும் அத்த மித்து முன்னே உதித்தவன் திசை முன்னே யாம். இந்தப்படித் திசைக் கிரமம் (எ-று).

குறிப்பு :—திசைகள் நடக்கும் முறை, இலக்கினம் சூரியன் சந்திரன், என்னும் மூன்றில் எதற்கு அறுவகைப்பலம் இருக்கின்றதோ அதன் திசை தான் முதலாவதாய் நிகழும். அதன்பின் அம் முதல் திசையின் பாவச்சக்கரப்படி அதற்குக் கேந்திரத்தில் இருப்பவன் திசை நிகழும். அதன்பின் பணபரத் தில் இருப்பவன் திசை நிகழும். அதன்பின் ஆபோக்கிலீபத்தில் இருப்பவன் திசை நிகழும்.

இவ்விதம் கொள்ளும் பொழுது கேந்திரத்தில் பலகிரகங் கள் இருந்தால்; கீழே கூறியபடி திசையின் முறைக்குரிய பலத் தில் யார்க்குப் பலம் அதிகம் கிடைத்திருக்கின்றதோ அவன் திசை முன்னே நிகழும்.

முதலில் தொடங்கும் திசையை அறியும் பொழுது இலக் கினம், சூரியன், சந்திரன் என்னும் மூன்றிற்கும் அறுவகைப் பலமும் சமமானால், இம்மூன்றில் எதற்கு அதிக திசையாண்டு இருக்கின்றதோ அதனையே முதலில் வைத்துக் கொள்ள வேண் டும். அம் மூன்றுக்கும் திசையாண்டும் சமமானால் எது முதலில் உதித்ததோ அதற்குரிய திசையையே முதலாகக் கொள்ள வேண்டும்.

திசாபகாரம்

134. பகர்திசா பதிமுன் னெல்லாம்
உடனுறுங் கோட்குப் பாதி
தொகைதிரி கோண முன்றொன்
றுஞ்சுராங் கிசமத் தத்தில்
இகல்சது ரஸ்ரம் நாலொன்
றங்கிச முனும்லக் னேசன்
புகல்வழி பலகோ ளேனும்
புகன்றவை புகலார்க் கின்றே.

(எ—து) இனித் திசாபகாரம் வழுத்தும்படி, திசையுடையவனுக்கு முந்திரைதெல்லாம் திசாபதியோடு கூடி நின்றவனுக்குத் திசாபதியுடைய அங்கிசத்தில் பாதி அபகரிக்கும். திசேசனுக்கு ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்தில் நின்றவனுக்கு மூன்றிலொன்று அபகரிக்கும். திசேசனுக்கு ஏழாமிடத்தில் நின்றவனுக்கு ஏழிலொன்று அபகரிக்கும். சதுரஸ்ரம் ஆகிய நான்கு எட்டாமிடங்களில் நின்ற கிரகங்கட்கு நான்கு அங்கிசத்தில் ஒன்று அபகரிக்கும். இவ்வாறு அந்திரத்திசை (அந்தர்த் திசை) விபாகம் என்றறிவது.

இத் தானத்தில் இலக்கினம் வருகினும் இலக்கினுதிபன் நிற்கினும் முன்சொன்னபடியே அபகாரம் என்றறிவது.

இச் சொல்லிய தானங்களொன்றில் பலருண்டாகில் அந்தத் தானத்துக்குச் சொன்னபடியே அபகரிக்குமென்பது. சொல்லிய தானங்களில் (புகலார்க்கு) கிரகங்கள் நிற்கில் அவர்களுக்கு அபகாரம் இல்லை (எ—று).



இதுவும் அது

135. ஏகமா மிருட்ச மாதி
இயம்பிய தானங் கட்கே
ஆகுமங் கிசஞ்சே தங்க
ளாமவை குணகா ரங்கள்
ஓகையங் கிசக்கூட் டங்க
ளுறுங்கலை ஆர கங்கள்
தேகமாம் திசாபிண் டத்துக்
கிவைதிசாம் பிரபே தங்கள்.

(எ—து) முன் சொன்ன ஏக இராசியாதித் தானங்கட்கு வேறு வேறு அங்கிசஞ் சொன்னபடியே குணகாரம் அந்த அங்கிசம் சர்வமும் கூட்டியது ஆரகம். திசா பிண்டமாவது அந்தக் கிரக திசாவருடம். இது திசா பிரபேதமாம் (எ—று). 4

136. வலியுளோன் சுயதுங் கத்தில்
வறுபக மகாசு கங்கள்
சொலும்வலி மத்தி யத்திற்
சுயதுங்கம் சுபப லன்கள்
நலமிலா வலியி னீசஞ்
சத்துரு பலவும் நாசம்
இலைமலி பொன்பூண் டாங்கும்
ஏந்திளங் கொங்கை மானே.

(எ—து) ஆறுவகை வலியும் உண்டான கிரகம் பரமோச்சத்தில் வக்கிரகதனு யிருக்கில், அவன் திசையில் அநேகம் சுபபலன் தரும். பெலன் மத்திபமா யிருந்து பரமோச்சத்திலிருந்த கிரகதிசையிலும் நல்ல சுபபலனைத் தரும். ஆறுவகையிலும் பெலமில்லாமல் பரம நீசாங்கிசம் சத்துரு பாகத்தில் நின்ற கிரக திசையில் தேக

RangaRakes tamilnavarasam.com

நாசம் (தேகநாசமும்) அறிவில்லாத தீமையைத் (தீமையையும்) தரும் (எ-று). 5

குறிப்பு :—எல்லாக் கோள்களும் தமது உச்சம், ஆட்சி, நட்பு என்னும் இவற்றிலிருந்து, அவ் வீடு நல்லோர் வீடாயும் அமைய, இராசி, அம்சம் முதலானவற்றில் எல்லா வலிவுகளையும் பெற்று, நல்லோரின் பார்வையும் அடைந்திருப்பாராயின் அவர் தம் திசை மிக்க நற்பலனைத் தரும். (சாராவளி அத்.-40—சு -6).

அவர்கள் பகைவர்வீடு, நீசவீடு, பாபியர்வீடு, இவைகளிலிருந்து மூடம், கிரகயுத்தம், தோல்வி நிறம்வேறுபட்டிருத்தல் (வைவர்ணியம்) முதலானவற்றையுடையவராய்ப் பாபர் வீட்டிலும் பாபர் நோக்கம் பெற்றும் இருப்பின் அவர் திசை மிக்க தீய பலன்களைக் கொடுக்கும் என்க. (சாராவளி அத்.-40-சு.-7).

ஆரோகி, அவரோகி திசைகள்

137. சுயதுங்கந் தனக்குச் செல்கோள்
ஆரோகி திசைசு பங்கள்
. . . . . . . . . . .
. . . திசையுந் தீது
நயனில்நீ சத்திற் செல்கோள்
அபரோகி திசையும் நாசம்
உயர்சுய துங்க பாகம்
உத்தம பலனென் றேதே.

(எ-து). நீசங் கழிந்து உச்சத்திற்கு வருகிற கோளெல்லாம் ஆரோகி என்று பெயர். அவன் திசையில் சுபபலன் நிகழும். அந்தக் கிரகம் (உச்சத்திற்குச் செல்லும் கிரகம்) சத்துரு நீசாங்கிசத்தில் நின்றால் அவன் திசை தீது.

தன்னுடைய உச்சங் கழிந்து நீசத்திற்குப் போகிற கிரகம் அபரோகி (அவரோகிணி) என்று பெயர். அவன் திசையில் பொல்லாத பலன் நிகழும். அந்தக் கிரகம் (நீசத்திற்குச் செல்லுங் கிரகம்) சுவர்க்கம் உச்சாங்கிசத்தில் நிற்கில் அந்தக் கிரகதிசை சுபபலனும் (எ-று). 6



குறிப்பு :—பரம உச்சங்கழிந்து பரம நீசத்திற்கு இடையிலுள்ள ஆறு இராசிகளிலிருக்கும் கிரகத்தினுடைய திசை அவரோகிணி (இறக்கமான) திசை யெனவும் ; நட்பு நவாம்சத்திலோ உச்ச நவாம்சத்திலோயிருப்பின் அத்திசை மத்திய திசையெனவும் ; பரம நீசம் கழிந்து பரம உச்சத்திற்கு இடையிலுள்ள ஆறு இராசிகளில் இருக்கும் கோள்களினுடைய திசை ஆரோகிணி (ஏற்றமான) திசையெனவும்; பகை வீட்டிலோ, பகை நவாம்சத்திலோ, நீச நவாம்சத்திலோ இருக்கின்ற கோள்களினுடைய திசை அதம (கடைப்பட்ட) திசையெனவும் பெயர் பெறும். (சாராவளி அத்.-40-சு.-8 ; பலதீபிகை அத்.-20-சு.-56).

மிசிரபலந் தரும் உபயோக திசை.

138. உச்சமே யாட்சி மூலத்
திரிகோண முயர்ந்த நட்பில்
நச்சுகோ ளிருப்பு நீச
பாகமே நன்றும் மாயின்
மெச்சிய திசையி லாங்கே
மிசிரமாம் பலத்தை நல்கும்
கச்சணி தனத்தி ளாய்கேள்
உபயோக மென்று கானே.

(எ-து) உச்சம், ஆட்சி, மூலத்திரிகோணம், நட்புச் சேத்திரம் இவைகளில் நின்ற கிரகம் சத்துரு நவாங்கிசம், நீச நவாங்கிசத்தில் நிற்கில், அந்தக் கிரகத்தினுடைய திசையில் பலன்கள் மிசிரமா யிருக்கும் என்றறிவது. இரு உப (நன்றும், தீதுங் கலந்த) யோகம் என்றவாறு. உபயோகமாவது உத்தமமும், அதமமும் அல்லாதே மத்திய பலன் தரப்பட்டது (எ-று). 7

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :— பாசம் - அங்கிசம், மிசிரம் - நன்மையும், தீமையும் கலந்த பலன். "உச்சம் ஆட்சி முதலிய இராசியில் இருப்பினும், பகை, நீச நவாம்சத்திலிருக்குங் கோள்களின் திசை நன்றும், தீதுமாகிய பலன்களைக் கலந்தே கொடுக்கும்" (சாராவளி அத்.-40-சு.-19)

இலக்கின திசையின் நற்பலனும், தீயபலனும்.

139. உதயமே உபய மாகில்
உற்றிடுந் திரேக்கா ணங்கள்
அதமமத் திபத்தி னோடு
பூசித மடைவிற் சாரும்
இதுசர முத்த மங்கள்
மத்திப மதம மென்ப
திதமெனி லசுப மிட்டஞ்
சமபலன் றிசைவெட் சிக்கே.

(எ-து). இலக்கின திசாபலன் அறியும் படி :— உபய இராசி இலக்கினமாகிப், பிரதம திரேக்காண மாகில் அதம பலன் ; மத்திப திரேக்காண மாகில் மத்திப பலன் ; அந்திய திரேக்காண மாகில் பூசித பலன் உண்டாம்.

சர இராசி இலக்கின மாகும் பொழுது பிரதம திரேக்காண மாகில் உத்தம பலன் ; மத்திமத் திரேக்காண மாகில் மத்திம பலன் ; அந்தியந் திரேக்காண மாகில் அதம பலன் உண்டாம்.

திர இராசி உதிக்கில் முதல் திரேக்காண மாகில் அசுப பலன் ; மத்திமத் திரேக்காண மாகில் இஷ்டமான பலன் ; அந்தியத் திரேக்காண மாகில் சமபலன் உண்டாம். இந்தப்படி இலக்கின திசாபலம் அறிவது (எ-று).





குறிப்பு :— இலக்கினம் சரமாகில் முதல் திரேக்காணத்தில் உள்ள கோளின் திசை சிறந்த பலனைத் தரும். மத்திம திரேக்காணத்திலிருக்கும் கோளின் திசை மத்திம பலனைத் தரும். கடைசித் திரேக்காணத்தில் இருக்கும் கிரகதிசை அதம பலனைத் தரும்.

உபய இராசி இலக்கின மாயின் முதல் திரேக்காணத்தில் உள்ள கோளின் திசை அதம பலனையும், மத்திமத் திரேக்காணத்தில் உள்ளவன் திசை மத்திம பலனையும், கடைசித் திரேக்காணத்தில் உள்ளவன் திசை சிறந்த பலனையும் தரும்.

இலக்கினம் திர இராசியாயின் முதல் திரேக்காணத்தில் உள்ளவன் திசை தீய பலனையும், மத்திமத் திரேகாணத்தில் உள்ளவன் திசை சிறந்த பலனையும், கடைசித் திரேக்காணத்தில் உள்ளவன் திசை மத்திம பலனையும் தரும் (சாராவளி அத்.-40-சு.-20)

நிசர்க்க திசை.

140. இந்துமல் புந்தி சுங்கன்
பொன்கதிர் நீலன் நேரே
கந்துவி நவநா லைந்து
கணயிரு பஃதைம் பஃதாம்
முந்திய நிசர்க்க தாயம்
உடையவர் நிசர்க்க மீட்டம்
அந்தியோ தயம்நன் றென்னுர்
பவனர்மற் றென்றென் னுரே.

(எ-து) [திங்களும், செவ்வாயும், புதனும், வெள்ளியும், வியாழனும், ஞாயிறும், சனியும் என்கின்ற இவர்கள் முறையே நிசர்க்க (நைசர்க்கிக)திசைக்கு உரியவராவர். இவர்கட்கு முறையே ஒன்று, இரண்டு, ஒன்பது, இருபது பதினெட்டு (கணம்) இருபது, ஐம்பது என்பன] நிசர்க்க திசை வருடங்களாம்.

---

குறிப்பு :- பகர அடைப்புக் குறியிலிருப்பவை என்னால் எழுதப்பெற்றவை.—(பதிப்பாசிரியர்).



RangaRakes

tamilnavarasam.com

அவரவர் நிசர்க்க காலத்தில் அவரவர் திசை வருடங்கள் வரில், மிகுதியில் சுபங்களாயிருக்கிற பலனைத் தரும் என்றறிவது.

அந்தியத்திலே இலக்கின திசை சுபபலனைக் கொடுக்குமென்று யவனாசாரியர் சொன்னார். மற்றுஞ் சில ஆசாரியன்மார் அந்தியத்தில் இலக்கின திசை ஆகாதென்றார் (எ-று). 9

குறிப்பு :—சந்திரனுக்கு மிக்க பலமிருப்பின் நைசர்க்கிக திசை பயன்படும். சந்திரனுக்கு 1, செவ்வாய்க்கு 2, புதனுக்கு 9, வெள்ளிக்கு 20, வியாழனுக்கு 18, சூரியனுக்கு 20, சனிக்கு 50 என்னும் இவை அவ்வக் கோள்களுக்கு நிசர்க்க திசையாண்டுகளாகும். சூரியன் முதலானவர் பரமோச்ச பாகையிலிருப்பின் மேற் கூறிய யாண்டுகள் முழுவதையும், பரம நீசத்திலிருப்பின் பாதியையும் கொள்க. உச்சத்திற்கும் நீசத்திற்கும் இடையிலிருப்பின் திரைராசிகஞ் செய்து கணித்துக் கொள்ளவும். பிண்டாயுர்த் தாயத்திற்குப் போல் அரணம் செய்து கொள்க

திசையின் தொடக்க சுகம்.

141, தூய பதியே வுதயத்தின்
பிராரத் துவமே சுபஞ்சாரும்
ஆய பதியே பெந்துவர்க்கஞ்
சட்டு வர்க்க மடைந்திடினும்
தூய பம்மே யெனினுமுப
சயந்துன் னிடினும் நட்புச்சம்
ஏயுங் கோண மதனத்தில்
இந்து வுறினும் மிகுஞ்சுகமே.

(எ-று) திசாபதி உதயத்தில் நிற்கத் தொடங்கினுஞ் சுகத்தைத் தரும்.

திசாபதி பந்துவர்க்க மாகிய மித்துரு (நட்பு) வர்க்கங்களிலிருக்கினும், மேற்படியான் சட்டு (ஆறு) வர்க்கத்தில் நிற்கினும், சுப இராசி இலக்கினமாய் வரினும், திசாபதி மூன்றில், ஆறில், பத்தில், பதினொன்றில் (உபசயத்தில்) நிற்கினும், திசாபதி நட்பில், உச்சத்தில், திரிகோணத்தில், ஏழாமிடத்தில் நிற்கத் தொடங்கினும் சுப பலன்கள்.



இப்படிச் சொல்லிய தானங்களில் சந்திரன் நிற்கில் மிகுதியும் சுப பலன்களைத் தரும் (எ-று). 10

குறிப்பு :- பிராரத்துவம்—தொடக்கம், " திசைப் பகுதிக்குரிய கோள் இலக்கினத்திலிருக்கும் பொழுதும், நட்புக் கோள்களினுடைய நற்கோள்களினுடைய திரைக்சாணம் முதலிய ஆறு வர்க்கங்களிலிருக்கும் பொழுதும், திசைக்குரியவனின் நட்புக் கோள் இலக்கினத்தில் நிற்கும் பொழுதும், அந்தக் கோளின் வர்க்கம் இலக்கினத்தில் வரும்பொழுதும், நற்கோள்கள் இலக்கினத்திலிருக்கும் பொழுதும், அல்லது திசைக்குரியவன் இலக்கினத்திற்கு உபசயமாகிய 3, 6, 10, 11-இல் நிற்கும் பொழுதும் தொடங்கிய திசையும் அந்தர் திசையும் மிகவும் சுபபலத்தைக் கொடுக்கும் என்ப. இதற்கு மாறுயின் தீப்பலன் தருமென்ப. இந்தத் திசை அல்லது அபகாரம் இவற்றின் நற்பலன் தீப்பலன் நிகழ்ச்சியைச் சந்திரனைக் கொண்டும் அறியவேண்டும். எவ்வாறு அறிவதெனின் ? சந்திரன் திசைக்குரியவனின் நட்பு வீட்டிலோ, உச்ச வீட்டிலோ, உபசயஸ்தானத்திலோ, திரிகோணத்திலோ, ஏழாமிடத்திலோ, பாதசார முறையில் நிற்கின்ற காலம் நற்பலனும் மற்றைய இடங்களில் நிற்கில் சுபபலனும் உண்டாகும் என்ப. (சாராவளி அத்.-40-சு-16, 17, 18).

திசைத் தொடக்கத்தில் சந்திரன் நின்ற இராசிக்குப் பலன்.

142. மதிசுயம் பொன்னி ஹோரை
சவுக்கியம் மானம் அத்தம்
விதிகொள்சேய் யோரை யில்லின்
மேவிடும் தோடம் புந்தி

RangaRakes tamilnavarasam.com

அதிபந்து வித்தை சிங்கம்
அடலிருன் றடையுஞ் சுங்கன்
புதியவூன் சுகம்மான் கும்பம்
புன்மக ளுறுமிந் தென்னே.

(எ-து) சந்திரன் சுயச் சேத்திரத்தில் (கடகத்தில்) நிற்கும்பொழுது தொடங்கிய திசையும், அவன் வியாழனுடைய சேத்திரத்தில் நிற்கும்பொழுது தொடங்கிய திசையும் சவுக்கியம், அபிமானம், அர்த்தம் இவைகளைத் தரும் என்பது.

சந்திரன் செவ்வாய்ச் சேத்திரத்தில் நிற்கும் போது பிராரத்தமான திசையில் ஸ்திரீயைத் தோஷிப்பிக்கும்.

சந்திரன் புதன் ஆட்சியில் (புதன் வீட்டில்) நிற்கும் போது பிராரத்தமான திசை பந்துக்களும் வித்தையும் தரும்.

சந்திரன் சிங்கத்தில் நிற்கும் பொழுது பிராரத்தமான திசை ஆரணியம், வனம், மலை, வழி, கிரகம் நடப்பிவிக்கும்.

சந்திரன் சுக்கிரனாட்சியில் (சுக்கிரன் வீட்டில்) நிற்கும் போது பிராரத்தமான திசை அன்னதானம் சுகபோசனம் சுகம் தரும்.

சந்திரன் மகர கும்பத்தில் இருக்கும் பொழுது (தொடங்கும்) திசை போல வர்தவ ஸ்திரீயைத் தரும்.

இவை சந்திரன் நின்ற இராசியால் அறிவது. பிராரத்தமானது—தொடங்கியது (எ-று). 11

குறிப்பு :— எந்தக் கோள்களினுடைய திசையாவது தொடங்குங் காலத்தில் சந்திரன் கடகத்தில் நிற்பின் நல்ல



பெண்களையும், தனத்தையும், இலாபத்தையும் உடையவனாவான். அச் சந்திரன் மேட விருச்சிகத்தி லிருப்பின் பெண்களைத் துன்புறுத்துபவனாயும் அழிவினைச் செய்பவனாகவு மிருப்பான். அவன் மிதுன கன்னியிலிருக்கும் பொழுது தொடங்கிய திசை சிறந்த கல்வியையும், கலைகளின் அறிவையும், பந்துலாபத்தையும் உடையவனாவான். இடப துலாத்தில் சந்திரன் நிற்கும்பொழுது தொடங்கிய திசையில் நல்லுணவும், பொருட்பேறும், மிக்க சுகமும் பகைக்கேடும் உண்டாகும். தனுசு மீனத்தில் சந்திரன் நிற்கும் பொழுது தொடங்கிய திசை சுகம், தனம், பெருமை, ஆணை இவற்றை உண்டாக்கும். மகர கும்பத்தில் சந்திரன் நிற்கும் பொழுது தொடங்கிய திசை வயோதிகப் பெண்ணினையும், அழகில்லாத பெண்ணினையும், கற்பில்லாத பெண்ணினையும், அடையச் செய்வன். சந்திரன் சிம்மத்திலிருக்கும் பொழுது தொடங்கிய திசை காடு மலைகளில் வாழ்தலையும் அவ்விடங்களில் உழவு, வீடுகட்டல், அணைகட்டல் முதலியவற்றைச் செய்தலையும் மனைவி மக்களுடன் கலகம் செய்து கொண்டு உவகையின்றி இருத்தலையும் உண்டாக்கும். (சாராவளி அத்.-40-சு.-11, 12, 13, 14) என்பனவற்றை ஒப்பிட்டறிக.

வேறு

சூரிய திசைப் பலன்.

143. கதிர்திசையில் நகம்தந்தம் சென்மத்தில் நோயாம்
கனகமுறும் கோபமுடன் நடையரச ரிகலரம்
பதிவுடைய சுயதனங்கள் தீர்க்கதயா ரியங்கள்
பரிபவங்கள் பொருக்துபிர சித்திபிர தாபம்
சுதன்பாரி தனங்கொடையாள் நிருபரா பத்து
தூய்மையிலா குறவுசுயப் பிரத்தியரின் விரோதம்
இதயமதி லாதலன்றி யுதரமதி லாதல்
எய்திடும்நோய் பித்தமுத லென்றனர் நூலுணர்ந்தோர்.

(எ-து) சூரியன் திசையின் சம்பந்தத்திலுள்ளது நகத்திலும், தந்தத்திலும், சென்மத்திலும் நோயாம். தந்தம்-பல்; சென்மம்-தோல்; கனகம் உறும். கனகம்-

சுவர்ணம், கோபம், வழிநடை இராச விரோதம் நிலைத்த சுய திரவியம் தீர்க்க தயிரியங்கள் (முதலான) சுபாசுபங் களின் பலம் பிராரத்தமான பொழுது அதினுலே பரிபவ மில்லாம லிருக்கப்பட்டது. உத்தமமாயிருக்கப்பட்ட பாரி யுண்டாம். கீர்த்தியுண்டாம். பிரதாப மாவது, சத் துருக்கள் தானத்திலிருந்து பயந்திருப்பார்கள். புத்திரன் பாரி தனம் கொடை. இராசாக்களால் சில ஆபத்துகள் உண்டாகும். பாபிகள் இணக்கம் கபப் பிரத்தியரொடு (தன் தொண்டர்கள்) கலகம் மார்பிலே யாதல் வயற் றிலேயாதல் வியாதி, பித்தநோய் உண்டாகும் (எ-று). 12

குறிப்பு :— மேற்கண்ட பாட்டு சூரியன் திசை தரும் நற்பலனையும், தீப்பலனையும் கலந்து கூறுகிறது. சாராவளி தனித்தனியே கூறுகின்றது. அதனைக் கீழே காண்க.

"நற்பலனைத் தரும் சூரியன் திசையில், காடு, மலை, மருந்து, வழிநடை, நஞ்சூட்டல் அறியாதிருத்தல் என்னும் இவை களால் கிலேச மடைதலும், மலை, சாங்கம், தந்தம், தோல், நெருப்பு இவை பற்றிய வியாபாரஞ் செய்தலும், மன்னனைச் சார்ந்த செயல், போர் முதலியவற்றால் அரசனிடத்திலிருந்து பொருட்பேறு உண்டாதலும், தைரியம், எப்பொழுதும் முயற்சி, சீலம், கூர்மை, பிரசித்தி, பிரதாபசித்தி, சிறப்பு இவைகளை அடையப் பெறுதலும், அரசத்தன்மை அல்லது பிரபுத்தன்மை உடையனாயிருத்தலும் ஆகிய இவை விளையும்" (சாராவளி-அத்.-40-சு.-25, 26.)

"தீய பலனைத்தரும் சூரிய திசையில், தொழிலாளர் காரணமான பீடையும், பொருட்கேடும். கள்வரால் அச்சமும், விழிநோயும், ஆயுதம், அரசன், நீர், நெருப்பு இவைகளால் ஆபத்தும், மனைவி மக்களுக்குப் பீடையும், பாவ காரியஞ் செய் தலும், பசியும், தாகமும், சோகமும், மிருதலும், நெஞ்சுபற்றிய நோய், பித்தநோய் காயம் உண்டாதல் இவை விளைதலும் ஆகிய இவை விளையும்" (சாராவளி அத்.-40-சு-27, 28.)



சந்திர திசைப்பலன்

144. இந்துவினின் றிசைப்பலன்மந் திரமறையோர் சாதி
இனியபலம் தனம்பால விகாரமணி துகிலும்
உந்துதிரைக் கடற்பலங்கள் திலமன்ன முண்டாம்
உறக்கமுடன் கிலேசமுழன் மதனிறத்தியொத்தே
சந்ததியிற் பெண்பெறுகை கீர்த்திதம னியங்கள்
சாற்றியவர்த் தனையுண்டாம் அர்த்தநா சமுமாம்
சிந்தையுறும் வலியிலெனுடுங் தன்கிளைஞ ரோடுஞ்
செப்பரிய விரோதமுறும் மைப்படியும் விழியாய்.

(எ-து) சந்திர திசை சம்பத்தமாகவரின் மந்திரம், பிராமண சாதி மூலமாகத் திரவியந் தரும். பால ஸ்திரீ யும், விகாரம்-ஆடல் பாடல், இரத்தினங்கள், சமுத்திரத் திலுள்ள பலங்கள், எள்ளு (வெள்ளையெள்ளு), அன்ன பானமும், நித்திரை, கிலேசம், பெண்புத்திர லாபம், கீர்த்தி, திரவியம் இவையெல்லாம் வர்த்தனையாயிருக்கும் அர்த்த நாசமும் உண்டாம். தைரியமுண்டாம். பந்து சன விரோதம் உண்டாம் (எ-று). 13

குறிப்பு :—இப்பாட்டும், உரையும் பிழைமலிந்து காணப் பட்டன. ஒருவாறு செப்பஞ் செய்யப்பெற்றன.

"நற்பலனைத் தரும் சந்திர திசையில் பெண்களால் பொருட்பேறும், மென்மையான குணமும், தண்ணீர், பன்னீர், பால், வெண்ணெய், தயிர், கரும்பு, சர்க்கரை இவைகளால் பொருட்பேறும், விநோதமும், பிராமணர் மூலமாக மகிழ்ச்சி பொருட்பேறும், மந்திரசித்தியும், சிறந்த ஆடை மலர்கள் கிடைக்கப்பெறுதலும், மெலிந்த தன்மையும், மேதா சக்தியும், தைரியமும், புஷ்டியும், குரு, சனங்கள், அரசர் என்னும் இவர் களால் சிறப்பிக்கப்பெறுதலும் உண்டாகும்" (சாராவளி அத்.-40 சு-29,30).

"தீயபலனைத் தரும் சந்திரதிசையில் திடமென்று பொருள் அழிவும், அரசரின் சினமும், அவையில் மானக்குறைவும்,

RangaRakes tamilnavarasam.com

முயற்சியால் செயல் முடிவும், ஆற்றலுள்ளவரோடு பகையும், தன் குலத்திற்கு அச்சத்தினை உண்டுபண்ணும் இயல்பும், உறவுடைய மக்களுடன் போரிடுதலும், துன்பமும், எப்பொழுதும் உறங்கிக் கொண்டிருத்தலும், சோம்பலும், பெண்களால் அச்சமும், அலைந்தலும், பத்தின்மையும் விளையுமென்க. (சாராவளி அத்-40-க.-31, 32) சந்திர திசைக்குப் பூர்வபக்கத் தசமிவரை மத்திம பலனும், அமரபக்கப் பஞ்சமி வரை முழுப்பலனும், மேற்படி பக்க சஷ்டி முதல் அமாவாசி வரை அதமபலனும் உண்டாம். (பலதீபிகை அத்-19-க.-8.)

செவ்வாய்த் திசைபலன்.

145. பூமன்றன் றிசைட்லைகபோர் பூமனுடன் சகசர்பகை
பூமியுடன் பசுத்தகர்போம் புதல்வர்கிளை தாரம்
தாமிளிய சகசருடன் சாற்றியிடுந் தோடம்
தமிழ்க்கவிஞ ராசிரியர் தமையிகழ்ந்து கூறும்
வேமுதக வந்திரங்கள் களவுறுதல் வெதுப்பு
மிகுகால்கை முறிவதிக வியாதிபரத் திரியைக்
காமுறுதல் பாவியுடன் பிருதியுட னிணக்கம்
கருதரிய சுடுதொழில்கள் பாவங்கள் காட்டும்.

(எ-து) செவ்வாய்த் திசையில் சத்துரு விரோதம், இராசாக்கள் சகோதர விரோதம், பூமி, பசு, தகர், நாசமுண்டாம். புத்திரன், பந்து, செளம், களத்திரம் சகோதரம் இவர்களைத் தூஷிக்கும். வித்துவான்களையும், குருவையும் தூஷிக்கும். உஷ்ணம், அந்திரகம், களவு, அதிக சுரம், கால்கை முறிவு, அதிக வியாதி, பரஸ்திரீ சங்கமம், பாவிகளுடன், வேலையாட்களுடன் சிநேகிதம் பொல்லாத தொழில்கள் இப்படிப் பாவங்களைச் செய்யும் (எ-று) 14

குறிப்பு :— நற்பலனைக் கொடுக்குஞ் செவ்வாய்த் திசையில் அரசனாலும், நெருப்பாலும், பொருட்பேறு, களவு செய்தல், பகைவரை வெல்லல், கொடிய உயிர்கள், விஷம் பற்றிய செயல், படைக்கலம், பத்தனம், இழித்த மந்திர பிரயோகம்,



இயந்திரச் செயல்கள், நிலம் பற்றிய செயல்கள் ஆகிய இவைகள் மூலமாயும், வசியம் வித்வேஷணம் (வேறுபடுத்துதல்) முதலான மாந்திரீகங்கள் மூலமாயும், சூது, கள், சாராயம், மருந்து முதலியவற்றின் மூலமாயும் பலவகைப் பொருட்பேறு உண்டாம்" (சாராவளி அத்.-40-க.- 33, 34.)

தீய பலனைத் தரும் செவ்வாய்த் திசையில் பந்துக்கள், மனைவி மக்கள், உடன் பிறப்பினர் ஆகிய இவர்கட்குப் பகை செய்பவனும் ஆசை, மோக ஆலஸ்யம், இரத்த தோஷம், வெட்டுண்டல், சிதைவு, காயம், பரத்தையர் இன்பம் என்னும் இவற்றைப் பெறுபவனும், குரு, வித்துவான்களோடு பகை கொள்ளுபவனும், பாவத்தைச் செய்பவனும், பொருள்களால் உண்டாகும் தோஷங்களை அடைபவனுமிருப்பன். (சாராவளி அத்.-40-க. 35, 36).

புதன் திசைப்பலன்.

146. புதன்றிசையிற் றூதுரைத்நல் பந்துகுரு மறையோர்
புகல்கவிஞர் பாடல்புகழ் புத்தியிற்பொன் றேடும்
நிதிபரவி மேதிசவு பாக்கியமும் பிருந்தி
நிகழ்ந்தவினோ தஞ்சேர்வை பண்டிதமாம் புத்தி
அதிசயம்புண் ணியலாபம் வாயுபரி பவங்கள்
ஆர்பந்தங் காவல்மனக் கிலேசமிவை யடையும்
புதியசலந் திரிதோடம் பீடையிவை பொருந்தும்
பொற்கொடியொன் றிருகலசம் பொறுத்தனைய பொன்னே.

(எ-து) புதன் திசையில் தூதுபாவகம், பந்துக்கள், குருக்கள், பிராமணர், வித்துவான்கள் தன்பேரில் பாடல் கேட்டல், கீர்த்தி, தன்புத்தி சாமர்த்தியத்தினால் திரவியந் தேடல், இரணியம் (பொன்), குதிரை, மகிடம் (எருமை), சவுபாக்கியம், பிருத்தி (தொண்டு), விநோதம், சேவகம், பண்டிதம், புத்தி, புண்ணிய லாபம், வாய்வு, பீடை, பரிபவம், பந்தனம், காவல், மனக்கிலேசம் என்னும் இவையுண்டாம். புதியசல தோடமும், திரிதோஷமும், பீடையும் உண்டாம் (எ-று). 15

குறிப்பு :—நற்பலனைத் தரும் புதன் திசையில் புதல்வன் உறவினர், பிரபுக்கள், தீட்சிதர், மன்னர், வணிகர், சூதர் என்னும் இவர்தம் வழியாய்ப் பொருட்பேறு உண்டாம். சிறந்த புரவி, நிலம், பொன், முத்துச்சிப்பி, குப்பி, பரணி இவற்றாலும் பொருள் கிட்டும். யஜுசு, புகழ்ச்சி, பூதகர்மம், மிக்க இன்பம், சௌபாக்கியம், அறிவுவிருத்தி, பிரசித்தி, அறச்செயல், சித்தித்தல், நகைச்சுவை விருப்பம், பகைவரை அழித்தல் ஆகிய இவை உண்டாம். எழுத்து, கணிதம், கணக்கு, சித்திரம், சிற்பம் இவற்றில் அதிக திறமை வாய்ந்தவனாயும், அவையில் மகிழ்ச்சியடைபவனாயு மிருப்பன். (சாராவளி அத்.-40-சு.-37, 38, 39).

தீய பலனைத்தரும் புதன்திசையில் வாத, பித்த, கபங்களால் நோய் அடைதலும், கடுஞ்சொல்லும், பந்தனமும், சிறைவாசமும், பயமும், மனப்பீடையும், இருதய நோயும், தளர்ச்சியும் உண்டாகும். (சாராவளி அத்.- 40-சு.-40).

புதன் தூதுக்குக்காரகன். (சாராவளி அத்.-7-சு.-10).

குருதிசைப் பலன்

147. சீவன்றன் றிசைப்பலர்கட் குபகாரஞ் சீலம்
சீர்தருமந் திரசெபங்கள் நீதியர சுரிமை
வாவுமனம் மறைவேள்வி மானகுணோ தயங்கள்
மதிவிருத்தி காந்தியுடன் மாற்றலராற் பீதி
தேய்வில்நிதி யிட்டியிட லசுவங்குஞ் சரங்கள்
சித்தமுறும் புத்திரரும் சேர்ந்திடுமம் பரங்கள்
ஆவலொடு நிலம்புரக்கு மரசர்கள்மந் திரமும்
அழிவில்தர்க்க நூல்செவிநோய் விதனமுள னாமே.

(எ-து) குருதிசையின் பலன் பரோபகாரம், சீலம், குணம், மந்திரசெபம், நிட்டை, நீதி, இராசத்துவம், (லாவு மனம்), பூசை, மானம், குணம், புத்திவர்த்தனை, காந்தி, சத்துரு பயம், திரவியம், யானை, குதிரை, புத்திரன், நல்ல வத்திரம், பூபதியுறவு, தர்க்க சாத்திர நிபுணம், செவிரோகம், விதனங்களையுடையவனும் (எ-று).



குறிப்பு :— நற்பலனைக் கொடுக்கும் குரு திசையில் அரசன், அமைச்சன், பதவி கிட்டல், அல்லது அரச காரியங்களைச் செய்தல், நீதியான வழியிற் செல்லுதல் என்னும் இவற்றால் பொருட் பேறுண்டாம். மானம், கல்வி, குணங்கள், பிரதாபசக்தி, சிறந்த உறவினர் கிடைத்தல், மனைவி, பொன், யானை, குதிரை முதலிய வாகனங்களும் சௌபாக்கியமும் விருத்தியாகும். மங்கலத்தையும், புஷ்டியையும் செய்யும் காரியங்களால் இலாபம் உண்டாம், பகைக்கேடு எல்லாச் செயல்களும் முடிதல், சிறந்த அரசின் பிரீதி மக்கட் கூட்டம், அரசசமூகம், பெரும்வணிகர், ஆசாரியன் இவர்களால் பொருட்பேறுண்டாம். குடை, கொடி, சாமரம், ஆலவட்டம், மலர், பட்டாடை, பருகுதல், தின்னுதல் இவற்றால் மகிழ்ச்சி உண்டாம் (சாராவளி அத்.-40-சு.-41, 42, 43)

தீயபலனைத் தரும் குருதிசையில் உடம்பில் வீக்கம் உண்டாகும். மிக்க துன்பம், முடத்தன்மை, குன்ம நோய் செவிநோய் இவை விளையும். ஆண்மைக் குறைவு உடம்பில் நிணக் குறைவு அரசர் பயம் புத்திக் குறைவும் ஏற்படும். பாவிகளின் பகையும், மோக ஆலஸ்யமும், புத்தி மயக்கமும் உண்டாம்.

சுக்கிர திசைப் பலன்

148. சுக்கிரன்றன் றிசைசீத விர்த்தியரி சாதி
சுகந்திர வியமன்ன பானம்பரத் திரிகள்
மிக்கமணி தூதிமத னுபகரணம் ஞானம்
மித்திரருண் டாம்கிரைய விக்கிரையங் கிருஷி
தக்கதனப் பிராத்தியுறல் தனவரவுண் டாகும்
சாற்றியிடி லாரணியந் தனிற்றரிக்கு மாந்தர்
புக்கவன சரரோடும் பாவியர்க ளோடும்
பூரியர்க ளோடுஞ்சி னேகமுள னாமே.

(எ-து) சுக்கிரன்றன் திசை சம்பந்தமாகில் சீதாதி சிரார்த்தம், சீதாதி விலாசம், சுகந்தம், சுரவியாதி, திரவியம், அன்னபானம், பரத்திரீ, இட்டம், இரத்தினாபரணம், தூதிகள், மன்மதோபகரணம், ஞானம், அதிமித்திரம், கிரையம், விக்கிரையம், கிருஷிஇலாபம், தன

RangaRakes
tamilnavarasam.com

லாபம், திரவிய வரவு, காட்டிலிருக்கப்பட்டவர், காட்டில் நடக்கப்பட்டவர், பாவிகள், நீசர், இவர்களுடனே சினேகமுள்ளவன் (எ-று). 17

குறிப்பு :— இப் பாட்டு 'சீதவிர்த்தி' என்று குறிப்பிடுவதை "முக்கிய வாவித் தடாக நிர்மாணம்" (1936) என்னும் சாதக சிந்தாமணிப் பாட்டாலும் அறிக.

நற்பலனைத் தரும் சுக்கிர திசையில் நிலம், வீடு என்னும் இவற்றிற் சிறத்தலும், படுக்கைக்கு வேண்டிய பொருள்கள், மனைவி, மாலை, ஆடை, தின்பண்டம், யஜுசு, நிதி இவற்றால் இலாபமடைதலும், இசையிலும், பெண்களின் கூட்டுறவிலும் விருப்பமாயிருத்தலும், அரசனாலும், உழவுத்தொழிலாலும் பொருட்பேறுண்டாதலும், மிக்க அறிவுள்ளவனா யிருத்தலும், விரும்பியவை அடைதல், சுகமாயிருத்தல், உறவினரைப் பெறுதல் என்னும் இவைகளைப் பெற்றிருத்தலும் உண்டாம். (சாராவளி அத்.-40-சு.-46, 47).

தீய பலனைத் தரும் சுக்கிர திசையில் தன் குலத்திலுள்ள பெரியோர்களோடும், குணத்திற் சிறந்தவரோடும் வாதம் புரிதலும், வாகனத்தாலும், விற்றிருப்பதற்குப் பயன்படும் பொருள்களாலும், கிலேசமடைதலும், அரசராலும், பெண்களாலும் துன்பம் உண்டாகப் பெறுதலும், உலக நடைக்கு மாறுபட்டவருடன் கூடிவாழ்தலும் ஆகிய இவை நிகழுமென்பர். (சாராவளி அத்.-40-சு.-48).

சனிதிசைப் பலன்

149. சவுரிதிசை தனிற்கரமொட் டகமயிட மிடபந்
தாமெய்தும் விருத்தையினா லிங்கனங்கள் பிரத்தி
கவலில்புறங் கிராமாதி பத்தியங்க ளுண்டாம்
காவலர்கள் சன்மானம் குதானியங்கள் கபங்கள்
பவனகதங் குரோதமுடன் மோகாதி துக்கம்
பற்றுமடி கிலேசாதி பிருத்தயனு யிருத்தல்
உவகையலா துறைந்திடுசந் ததிபாரி விபாதம்
ஓதுமவ யவபங்கம் உற்றிடுமென் றேதே.



(எ-து) சனிதிசையில் கழுதை, ஒட்டகம், எருமை, இடபம் இவை உண்டாம். விருத்தப்பெண் ஆலிங்கனம், பிரத்தியாந்தேகம் (?), புறக்கிராம ஆதிபத்தியம், இராச சன்மானம், குதானிய இலாபம், கபநோய், வாய்வு, கோபம், குரோதம், மோகம்; அதிகமான துக்கம், உத்தேகம், மடி, கிலேசம், ஒருவன்கீழ் சேவகம், பாரி புத்திர தர்க்க விபாதம், அங்க ஈனம் இவை உண்டாம் (எ-று). 18

குறிப்பு :—'இடபந் தனர்வெய்தும்' என்றே சுவடியிற் பாடம்; உரைக்கியைய 'தாமெய்தும்' என்று மாற்றப்பட்டது. குதானியம் — இழிவான தானியம்.

நற்பலனைத் தரும் சனி திசையில் கழுதை, ஒட்டகம், எருமை இவற்றால் பொருட்பேறும், கற்பில்லாதவள் அல்லது வயதில் மூத்த பெண் இவரை அடைதலும், கொள், எள், வரகு (குதானியம்) இவற்றால் இலாபமும், கழகம், ஊர், நகரம் இவைகளில் தலைமையேற்றலும், அவற்றாலடையும் சிறப்பினைப் பெறுதலும், இரும்பு, பித்தளை முதலானவைகளால் இலாபமும், நிலையான இடமும் உண்டாகும். (சாராவளி அத். 40-சு.-49, 50).

தீய பலனைத் தரும் சனிதிசையில் ஊர்திக்கேடும், சம்பிரமமும், இடமாற்றமும், சுகமின்மையும், உறவினரையும், மனைவியையும் விட்டுப் பிரிதலும், போரிலும், வாதித்தலிலும் தோல்வியுறுதலும், சூதும், கள்ளும், வாதநோய், வாய்வு நோய் இவற்றை பெறுதலும், அறச்செயல் நிகழப் பெருமையும், கலகம், சிறை, தந்திரம், வருத்தம், உறுப்புக்குறைதல் இவற்றைப் பெறுதலும், வேலையாள், புதல்வர் இவரொடு கலகமும் நிகழும். (சாராவளி அத் -40—சு—51, 52).

வேறு

150. வலியுறுங் கோட்க ளுக்கு
வகுத்திடுந் திசைசு பங்கள்
மெலிவுறுங் கோட்க ளுக்கு
விதித்திடுந் திசையுந் தீதாம்.

RangaRakes tamilnavarasam.com

அலதுமத் திமவ லிக்கோள்
அவர்பலன் மிசிர மாகும்
சொலுமிலக் கினதி சைக்கே
அதிபதி வலியாற் சுட்டே.

(எ-து) பூரண வலிவுடைய கிரகத்தின் திசையில் சுபபலன்கள். சுபம்-மங்கலம். பலவீனமா யிருக்கிற கிரக திசையில் தீய பலன்கள். மத்திம பலமுடைய கிரக திசையில் மிசிர பலன்கள் ; அஃதாவது மத்திம பலன்கள் என்றறிவது.

இலக்கின திசாபலம் இலக்கினாதிபதி வலிமைப் போலவே பலம் என்றறிவது. இலக்கினாதிபதி பலம் சம்பூரண மெனில் சுபதிசை யாகும். பல ஈனமாகில் அசுப திசையாகும். இலக்கினாதிபதிக்குப் பலம் மத்திம மாகில் மிசிர திசை (எ-று). 19

குறிப்பு :—உச்ச வலிவு முதலான எல்லா வலிவுகளையும் முற்ற அடைந்து விரும்பத்தக்க இடத்தில் வாழும் கோள்களி னுடைய திசை மிக்க சுபபலனைத் தரும் என்க. மூலத்திரிகோணத் திலோ, ஆட்சியிலோ வாழும் கோள்களின் திசை சுப மத்திம பலனைத் தரக்கூடியதாம். உச்சத்திலிருந்து கீழே இறங்குகிற கிரகத்தின் தசையும் சுபமத்தியம பலனைத் தரும் என்க. அதிநட் பிடம், நட்பிடம் முதலிய இராசிகளிலோ, அங்கிசத்திலோ இருக்கும் கோள்களின் திசை சுப அதமபலனைத் தரும். மேற்கூறியவாறே பகைவீடு, நீசவீடு முதலிய விரும்பத்தகாத இடங்களில் இராசி யிலோ அங்கிசத்திலோ இருக்குங் கோள்களைக் கொண்டு பாப பலன்களை மூன்றுவகையாகப் பிரித்தறிந்து கொள்க என்பது (சாராவளி அத்.-40-சு-22, 23, 24).

திசைக்குப் பலன் கூறும் முறை

151. சமுச்சிய வத்தி யாயந்
தனிற்புகல் திரவி யங்கள்
அமைத்திடுங் கர்ம சீவ
அத்தமுத் திடுமக் கோட்கே



தமிற்பாவந் தனதி ரிட்டம்
யோகமாம் பலந்த மக்கே
அமைத்துறும் பலன்க ளெல்லாம்
அவரவர் திசையி னெய்தும்.

(எ-து.) சமுச்சியாத்தியாயத்தில் (சமிக்ஞா அத்தி யாயத்தில்) எந்தெந்த கிரகத்திற்கு எந்தெந்தத் திர வியம் என்றறிந்து கர்ம சீவ அத்தியாயத்தில் "அத்தம்" (163) என்று தொடங்கும் கவி முன்னாகச் சொல்லவும்.

பாவ பலம், தனபலம், திருட்டி பலம், யோக பலம், இவையெல்லாம் அவரவருடையதான திசையில் யோசித்துச் சொல்லவும் (எ-று). 20

குறிப்பு :—"சமிக்ஞா அத்தியாயத்தும், காரக கிரகாதி கட்கு விதித்துள்ள சுலோகத்தும், கர்ம சீவாத்தியாயத்தும், தேகாரோக அத்தியாயத்தும் சொல்லப்பெற்றவைகளைக் கொண்டும், அவ்வக் கிரக பார்வை (திருட்டிபலம்), கூட்டுறவு (யோக பலம்) இவற்றாலாய பலன்களைக் கொண்டும், பாவேசர் பாவத்திலுள்ள கோள்கள் முதலானவரின் பலத்தைக் கொண்டும் அவ்வத் திசைகட் குரிய பலன்களைக் கூற வேண்டும்" என்று கூறும் பலதீபிகைக் கருத்தினை (அத்.-20,-சு.-21) ஒப்பிட்டு நோக்குக.

152. ஆதுமிக் கோள்கட் கெல்லாம்
அவரவர் திசைகட் கெய்தும்
பூதமண் ணிர்தீக் கால்வான்
புகன்றவப் பரிசே போற்றும்
ஆதியில் நாசி நாக்கண்
தோல்செவி யடைவே யெண்ணி
தாதிவர் குழலி னுய்கேள்
தாந்தகை தோன்றச் சாற்றே.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) "சறுவ கிரகங்களும் தங்கள் தங்களுடைய திசையில் பிரிதிவு, யப்பு, தேய்வு, வாய்வு, ஆகாசம், இந்தப் பஞ்ச பூதங்களும் அவரவர் பில மீனக்கிறகங் களுடைய மகாபூதஞ் சேதந் தோன்றும் என்றது மூக்கு, ஞசி, நாவு, கண், தோல், காது இவை யடைவே அந் தந்தக் கிறக திசையில் பூசிக்க வென்றவாறு" என்று உள்ளன (எ-று).

குறிப்பு:—இப் பாட்டின் உரை விளக்கமாக இல்லே. கீழே உள்ள உரை என்னுல் எழுதப்பட்டுள்ளது.

சர்வ கிரகங்களும் தங்கள் தங்களுடைய திசையில் பிருதிவு அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் மகாபூதம் சேர்ந்தே தோன்றும். எவ்வாறெனில்? பிருதிவியைச் சேர்ந்தது மூக்கின் வழியாகவும், அப்புவைச் சேர்ந்தது நாவின் வழியாகவும், தேயுவைச் சார்ந்தது கண்ணின் வழியாகவும், வாயுவைச் சார்ந்தது தோலின் வழியாகவும், ஆகாயத்தைச் சேர்ந்தது காதின் வழியாகவும் தோன்றும்.

மங்களேஸ்வரீயம் கூறுவது:—சென்ம காலம் தெரியாத புருடனுக்கு அவன் சரீர காந்தியைக் கொண்டு கிரக திசை நிர்ணயம் செய்யும் விதம் கூறுகிருர் என்று கருத்துக் கூறி, முன் கிரகயோனிப் படலத்தில் சொல்லியிருக்கிற 13ஆம் பாட்டிலுள்ள படி குசன் முதலான கிரகங்கட்கு அக்னியாதி பூதங்கள் சொல்லப் பட்டிருக்கிற தல்லவா? அதுபோல சகல கிரகத்திற்கும் தன் திசையடைத்த பிருதிவியாதி பூத அம்சமான சரீர காந்தி பிரகா சிக்கும். அஃதெப்படி என்னில்? பிருதுவி பூதத்திற்குப் பிராணேந்திரிய கிரகஹ்யமான கந்தகுண புருடனுவான். அப் போது, பிருதுவி சாயல் குணமுள்ளவனுயிருப்பான். அப்போது புத்திசை என்றறியவும். அதைப்போலவே ரசனேந்திரியத் திற்குச் சந்திர, சுக்கிர திசையும், சட்சு இந்திரியத்திற்கு குஜ, ரவி திசையும்; துவக்கிந்திரியத்திற்குச் சனிதிசையும்; சுரோத் திரியேந்திரியத்திற்கு குருதிசையும் உண்டென்று அறிவது (9-21) என்று கூறுகிறது.



பலமுள்ளவன் திசை, பலமில்லாதவன் திசை.

153. தேறிய சுபாய லத்தின்
திசையுறி லந்தார் மாவுஞ்
கேறிய சவுக்கி யங்கள்
சுகமர்த்த மினிது நல்கும்
விறில்லீ ரியதி லைதோர்
மேவிய திசாய லன்கள்
மாறிலாச் சுபய லன்கள்
மாறுண்ட தாகு மன்றே.

(எ-று). சுபபல முடையவன் திசையில் அந்தச் சீவாந்மாவுக்குச் சவுக்கிய சுகம் அர்த்த இலாபம் உண்டு. பலமில்லாதவன் திசையில் இந்தச் சுபபலன்கள் மாறுபா டாய் அற்ப இலாபமும், கிலேசமும் உண்டாம் (எ-று).22

வேறு

கூடியுள்ள கோள்கள் பலன் தருவது.

154. ஒருகோ டனக்குப் பெலஞ்சமனாய்
ஒருகோட் கூடில் வலிவுகள்போம்
தருகோள் கவர்கோள் இவர்கூடில்
இரண்டு மில்லையா மிவர்தம்மின்
வருகோள் அதிக வலியுளனேல்
வலியோன் சமனேல் வலிபோக்கும்
பெருகோ ளிரண்டேல் பலம்போக்கா
தவர்தந் திசையிற் பலம்புகலே.

(எ-று). ஒரு கிரகத்துடனே கூடின கிரகம் அந் தந்தக் கிரகத்திற்குச் சம பலமாயிருக்கில் இரண்டு கிர கத்திற்கும் பல மில்லை.

ஒரு கிரகம் ஒரு இராசியில் சொர்க்கம் அல்லது கேந்திரமா யிருக்க, மற்றொரு கிரகம் சொர்ணாம் [illegible] கோளா



RangaRakes tamilnavarasam.com

யிருக்கில், அந்தக் கிரகம் தருவது மல்ல (இந்தக் கிரகம்) கவர்வது மல்ல வென்பது.

தருங்கோள் இரண்டு பலமும் கவர்கோள் ஒரு பலமு மாகில், இரண்டு பலன் உண்டான கிரகபலன் நடக்கும்.

ஒரு இராசியில் கிரக மிரண்டும் சமபல மாகில் மற்ற கிரகத்தின் வலியும் போம்.

அன்னியத் தானத்தில் நின்ற கிரகம் சமபல மாகில், மற்ற கிரகத்தின் பலனைக் களைய மாட்டாது.

*இரண்டு கிரகம் நின்ருல் அவரவர் திசையில் தாம் தரும் நற்பலனையோ, தீப்பலனையோ தருவர் (எ–று)

ஒரு கோளுடன் மற்ஞெரு கோள் கூடினுல் ஒன்று வலி யுள்ளதாயும் ஒன்று இளைத்து மிருக்கும் என்பதைத் " தருகதிரோ னுடன் சனியன் கூடினுற் சனியன் ருனிளைப்பன் சனியுடன் செவ்வாய்வந்து கூடின், மருவுசெவ்வா யிளைப்பனிந்த சேயு டனே பொன்ஞென் வந்துறையிற் குருவிளைப்பன் குருவைமதி கூடில், அருணமதி இளைப்பன்மதி யுடன்வெள்ளி கூடில் அசுரர்மந் திரியிளைப்பன் வெள்ளிபுந்தி கூடில், கருதுபுத னிளைப் பனிந்த புதனைமதி கூடிற் கலைமதியோ னிளைப்பனெனக் கட் டுரைக்க லாமே." (131) என்னும் சாதக சிந்தாமணிப் பாட லால் அறிக.

எட்டாவது

திசாபல அத்தியாயம் முற்றும்.

---

குறிப்பு :— * "அவரவர் திசையில் இரண்டு கிரகம் நின்ருல் சந்திக்கவும்" என்று பிரதியில் உரை உள்ளது.

ஒன்பதாவது

## அட்ட வர்க்க அத்தியாயம்

### சூரியன் அட்ட வர்க்கம் 48.

155. கதிர்வர்க்க மாதிதனங் கன்மமுட ஞயங்
காமம்பந் தாயுள்தவம் இரவிசன்சேய் நிலைக்காங்
கிதிலினியன் அரிகாமம் வியம்புகர்க்கு நல்லன்
இகலாயஞ் சுதன்றவத்தி லங்கிரசர்க் கினியன்
அரியபவம் அரிசகசம் தசமிந்து தனக்காம்
அரிசுதன்முன் ருயவியம் தவங்கன்மம் புதற்காம்
சதுரவியம் ஆயமொடுத் தசமமரி சகசக்
தனிலுதய மதற்கிரவி நல்லனெனச் சாற்றே.

(எ–து) ஆதித்தன் அட்டவர்க்கம், ஆதி 1, தனம் 2, கன்மம் 10, ஆயம் 11, காமம் 7, பந்து 4, ஆயுள் 8, தவம் 9, ஆதித்தன், சனி, செவ்வாய், இவர்கள் நின்ற தானத்திற்கு இத் தானங்களில் ஆதித் தன் சுபன்.

அரி 6, காமம் 7, வியம் 12 சுக்கிரன் நின்ற தானத் திற்கு இத் தானங்களில் ஆதித்தன் சுபன்.

இகல் 6, ஆயம் 11, சுதன் 5, தவம் 9 வியாழன் நின்ற தானத்திற்கு இத் தானங்களில் ஆதித்தன் சுபன்.

பவம் 11, அரி 6, சகசம் 3, தசம் 10 சந்திரன் நின்ற தானத்திற்கு இத் தானங்களில் ஆதித்தன் சுபன்.

அரி 6, சுதன் 5, மூன்று 3, ஆயம் 11, வியம் 12, தவம் 9, கன்மம் 10 புதன் நின்ற தானத்திற்கு இத் தானங்களில் ஆதித்தன் சுபன்,

RangaRakes tamilnavarasam.com

சதுரம் 4, வியம் 12, ஆயம் 11, தசமம் 10, அரி 6, சகசம் 3 இலக்கினத்திற்கு இத் தானங்களில் ஆதித்தன் சுபன் (எ—று).

குறிப்பு :— அட்டவருக்கம் என்பது சமுதாயம், திரிகோணம், ஏகாதிபத்தியம், நணசமூகம், இராசி குணகாரம், கிரக குணகாரம், சுத்தபிண்டம், ஏக சமூகம் என்னும் எட்டாகும்

திங்கள் அட்ட வர்க்கம்.

156. இந்திரிய மிலக்கினத்துக் கரிசகசந் தசாயம்
இதிற்காம மாயுளுறின் இரவிதனக் கினியன்
முந்தியதிற் றியூனதனு வுற்றிடிற்சந் திரற்காம்
முன்னிலத்திற் றனநவமஞ் சுதன்கூட்டிற் குசற்காம்
சந்ததியா யஞ்சகசம் ஆயுள்கண்டம் புதற்காம்
தனமாயுள் பவங்கண்டந் தமனியனுக் கினியன்
பந்துதிரி சுதமானம் பவந்தவமேழ் புகர்க்காம்
பவஞ்சகச மரிதனயன் பானுசனுக் கினிதே.

(எ-து) சந்திரன் அட்டவர்க்கம் இலக்கினத்திற்கு அரி 6, சகசம் 3, தசம் 10, ஆயம் 11 இந்தத் தானங்களில் சந்திரன் நல்லன்.

இதில் காமம் 7, ஆயுள் 8 உறில் இரவிதனக் கினியன் என்றது 6, 3, 10, 11 ஆகிய இவற்றுடன் 7, 8 ஆகிய இடங்கள் சூரியன் நின்ற தானத்திற்கு இத் தானங்களில் சந்திரன் சுபன்.

முந்திய இதில் தியூனம் 7, தனு 1 உற்றிடில் சந்திரற்காம் என்றது 6, 3, 10, 11 ஆகிய இவற்றுடன் 7, 1 ஆகிய இடங்கள் சந்திரன் நின்ற தானத்திற்கு இத் தானங்களில் சந்திரன் தானே சுபன்.

முன் நிலத்தில் தனம் 2, நவமம் 9, சுதன் 5 கூட்டில் குசற்காம் என்றது 6, 3, 10, 11 ஆகிய இவற்றுடன் 2, 9, 5 ஆகிய இடங்கள் செவ்வாய் நின்ற இராசிக்கு இத் தானங்களில் சந்திரன் சுபன்.



சந்ததி 5, ஆயம் 11, சகசம் 3, ஆயுள் 8 கண்டம் 1, 4, 7, 10 ஆகிய இடங்கள் புதன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் சந்திரன் சுபன்.

தனம் 2, ஆயுள் 8, பவம் 11, கண்டம் 1, 4, 7, 10 ஆகிய இடங்கள் வியாழன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் சந்திரன் சுபன்.

பந்து 4, திரி 3, சுதன் 5, மானம் 10 பவம் 11 தவம் 9, ஏழ் 7 ஆகிய இடங்கள் சுக்கிரன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் சந்திரன் சுபன்.

பவம் 11, சகசம் 3, அரி 6, தனயன் 5 ஆகிய இடங்கள் சனி நின்ற இராசிக்கு இத் தானங்களில் சந்திரன் சுபனும் (எ-று). 2

செவ்வாய் அட்டவர்க்கம்

157. பூமனலன் அரிசகசஞ் சுதன்மான மிலாபம்
போதிரவிக் காஞ்சகச மரிபவமம் புலிக்காம்
வேமரிக்குத் தனநிதனம் பவங்கண்ட மாகும்
மேதைக்குச் சகசமரி சுதாய மென்பார்
ஆமரியந் தியங்கன்மம் ஆயம்பொன் னவற்காம்
அரியிரிப்பம் பவந்நிதனம் பிருகுசனுக் காகும்
தசமசிதான் நிதனதவம் பவங்கண்ட மாகும்
சகசமரி பவமாதி தசமுதயந் தனக்கே.

(எ-து) செவ்வாய் அட்டவர்க்கம் அரி 6, சகசம் 3, சுதன் 5, மானம் 10, இலாபம் 11 சூரியன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் செவ்வாய் சுபன்.

RangaRakes
tamilnavarasam.com

சகசம் 3, அரி 6, பவம் 11 சந்திரன் நின்ற இத் தானங்களில் செவ்வாய் சுபன்.

தனம் 2, நிதனம் 8, பவம் 11, கண்டம் 1, 4, 7, 10 செவ்வாயில் நின்று இத் தானங்களில் செவ்வாய்தானே சுபன்.

சகசம் 3, அரி 6, சுதன் 5, ஆயம் 11 புதனில் நின்று இத் தானங்களில் செவ்வாய் சுபன்.

அரி 6, அத்தியம் 12, கன்மம் 10, ஆயம் 11 வியாழத்தினின்று இத்தானங்களில் செவ்வாய் சுபன்.

அரி 6, இரிப்பம் 12, பவம் 11, நிதனம் 8 சுக்கிரனில் நின்று இத் தானங்களில் செவ்வாய் சுபன்.

நிதனம் 8, தவம் 9, பவம் 11, கண்டம் 1, 4, 7, 10 சனி நின்ற இடத்தில் நின்று இத் தானங்களில் செவ்வாய் சுபன்.

சகசம் 3, அரி 6, பவம் 11, ஆதி 1, தசம் 10 இலக்கினத்தினின்று இத் தானங்களில் செவ்வாய் சுபனும் (எ-று), 3

### புதன் அட்டவர்க்கம்

158. புத்திசுபன் கதிர்க்காயம் வியந்தவமைந் தரியிற்
புகழ்மதிபந் தரிநிதனம் பவமானந் தனத்தில்
மந்தனொரி தனங்கண்டம் நிதனநவ மாயம்
மாலரிமூன் றைந்தாதி மானவியந் தவாயம்
அந்தணனுக் கட்டமமும் அரியாய மிரிப்பம்
அம்புகருக் காதிதனம் சகசதவ நிதனம்
பந்துசுதன் பவமினியன் இலக்கினத்துக் காதி
பவந்தசமம் நிதனமரி பந்துதன மாமே.



(எ-து) புதன் அட்டவர்க்கம் ஆயம் 11, வியம் 12, தவம் 9, ஐந்து 5, அரி 6; ஆதித்தனில் நின்று, இத் தானங்களில் புதன் சுபன்.

பத்து 4, அரி 6, நிதனம் 8, பவம் 11, மானம் 10, தனம் 2; சந்திரனில் நின்று இத் தானங்களில் புதன் சுபன்.

தனம் 2, கண்டம் 1, 4, 7, 10, நிதனம் 8, நவம் 9, ஆயம் 11; சனி, செவ்வாய் இவர்கள் நின்ற தானத்திலிருந்து இத் தானங்களில் புதன் சுபன்.

அரி 6, மூன்று 3, ஐந்து 5, ஆதி 1, மானம் 10, வியம் 12, தவம் 9, ஆயம் 11; புதனில் நின்று இத் தானங்களில் புதன் சுபன்.

அட்டமம் 8, அரி 6, ஆயம் 11, இரிப்பம் 12; வியாழன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் புதன் சுபன்.

ஆதி 1, தனம் 2, சகசம் 3, தவம் 9, நிதனம் 8, பந்து 4, சுதன் 5, பவம் 11; சுக்கிரன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் புதன் சுபன்.

ஆதி 1, பவம் 11, தசமம் 10, நிதனம் 8, அரி 6, பந்து 4, தனம் 2; இலக்கினத்திற்கு இத் தானங்களில் புதன் சுபன் (எ-று).

### வியாழன் அட்டவர்க்கம்.

159. பொன்னினியன் தனநிதனம் கண்டங்க ளாயம்
பூமனுக்காஞ் சகசமிதிற் புகுமெனிற்பொன் னவற்காம்
மன்னுசக சந்தவங்கள் கூட்டிடுங்கால் ரவிக்காம்
வாக்கிதயம் அரிதவசு மானுயம் புகர்க்காம்

RangaRakes tamilnavarasam.com

துன்னுதன் மனைவிமன்ந் நவம்பவஞ்சோ மற்காம்
சுதன்சகசம் அரியிரிப்பம் சுன்னவனுக் காகும்
பன்னுபுத னுதிதனஞ் சுகஞ்சுதமா னுயம்
பகைநவமாம் உதயத்துக் கிதிற்பாரி புகுமே.

(எ-து) வியாழன் அட்டவர்க்கம் அறியும்படி, தனம் 2, நிதனம் 8, கண்டங்கள் 1, 4, 7, 10, ஆயம் 11; செவ்வாய் நின்ற இராசிக்கு இத் தானங்களில் வியாழன் சுபன்.

மேற் கூறியவற்றிற் சகசந் தானம் 3 கூடில் வியாழத்தில் வியாழன் நல்லன்; 2, 8, 1, 4, 7, 10, 11, 3; வியாழன்தான் நின்ற இராசிக்கு இத் தானங்களில் வியாழன்தானே சுபன்.

மேற் கூறியவற்றில் சகசம் 3, தவம் 9 கூட்டில், சூரியனுக்காம். 2, 8, 1, 4, 7, 10, 11, 3, 9; சூரியன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் வியாழன்தானே சுபன்.

வாக்கு 2, இதயம் 5, அரி 6, நவம் 9, மானம் 10, ஆயம் 11; சுக்கிரன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் வியாழன் சுபன்.

தனம் 2, மனைவி 7, மனம் 5, நவம் 9, பவம் 11; சந்திரன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் வியாழன் சுபன்.

சுதன் 5, சகசம் 3, அரி 6, இரிப்பம் 8; சனி நின்ற இராசிக்கு இத் தானங்களில் வியாழன் சுபன்.

ஆதி 1, தனம் 2, சுகம் 4, சுதன் 5, மானம் 10, ஆயம் 11, பகை 6, தவம் 9; புதன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் வியாழன் சுபன்.



உதயத்திற்கு இதிற் பாரி 7 புகுமே என்றது, 1, 2, 4, 5, 10, 11, 6, 9 என்னும் இவற்றில் 7 சேர்த்துக் கொள்க: உதய இலக்கினத்திற்கு இத் தானங்களில் வியாழன் சுபனும் (எ-று). 5

சுக்கிரன் அட்டவர்க்கம்.

160. புகரினியன் உதயத்துக் காதிதனஞ் சகசம்
புத்திசுகம் நிதனநவம் பவமாகு மிவற்றுள்
பகரும்விய முறின்மதிக்காம் கன்மமுறிற் புகர்க்காம்
பருதிக்கு வியம்நிதனம் பவத்தினிய னென்பர்
மிகுசுசனுக் காயநவம் வியஞ்சுகமுன் றரியாம்
மேதைக்கு நவமாயம் புத்தியரி சகோர்த்தம்
தொகுகுருவில் நிதனநவம் மாயைஞ் சுதனும்
சுன்றவமாக் கினியாயஞ் சுகஞ்சுதன்முன் றெட்டே.

(எ-து) சுக்கிரன் அட்டவர்க்கம் அறியும்படி இலக்கினத்துக்கு ஆதி 1, தனம் 2, சகசம் 3, புத்தி 5, சுகம் 4, நிதனம் 8, நவம் 9, பவம் 11 இத் தானங்களில் சுக்கிரன் சுபன்.

இவற்றுள் பகரும் வியம் 12 உறின், மதிக்கு ஆம் என்றது, 1, 2, 3, 5, 4, 8, 9, 11, 12; சந்திரன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் சுக்கிரன் சுபன்.

இவற்றுள் கன்மம் 10 உறின், புகர்க்கு ஆம் என்றது, 1, 2, 3, 5, 4, 8, 9, 11, 10; சுக்கிரன் நின்ற இராசிக்கு இத் தானங்களில் சுக்கிரன் தானே சுபன்.

பருதிக்கு வியம் 12, நிதனம் 8, பவம் 11; ஆதித்தன் நின்ற இராசிக்கு 12, 8, 11 இத் தானங்களில் சுக்கிரன் சுபன்.



RangaRakes
tamilnavarasam.com

ஆயம் 11, நவம் 9, வியம் 12, சுகம் 4, மூன்று 3, அரி 6 ; செவ்வாய்க்கு 11, 9, 12, 4, 3, 6 என்னும் இத் தானங்களில் சுக்கிரன் சுபன்.

மேஷத்துக்கு நவம் 9, ஆயம் 11, புத்தி 5, அரி 6, சகோர்த்தம் 3 ; புதன் நின்ற இராசிக்கு 9, 11, 5, 6, 3 இத் தானங்களில் சுக்கிரன் சுபன்.

தொகு குருவில் நிதனம் 8, நவம் 9, மானம் 10, ஆயன் 11, சுதன் 5 ; வியாழத்திற்கு 8, 9, 10, 11, 5 என்னும் இத் தானங்களில் சுக்கிரன் சுபன்.

சுன் தவம் 9, ஆக்கினை 10, ஆயம் 11, சுகம் 4, சுதன் 5, மூன்று 3, எட்டே 8 ; சனி நின்ற இராசிக்கு 9, 10, 11, 4, 5, 3, 8 என்னும் இத் தானங்களில் சுக்கிரன் சுபனும் (எ-று). 6

சனி அட்டவர்க்கம்

161. சனிவர்க்கஞ் சனிக்காயஞ் சகசமரி சுதனும்
தரணிசனுக் கந்தியமாக் கினைகூடிற் சாரும்
இனியகதிர் கேந்திரமட் டமமாயந் தனமாம்
இந்துதிரி சடலாப மினியனென வுரைப்பார்
அனுவழிக்கு நிதனமரி தவங்கன்மம் வியாயம்
ஆடகனுக் காயவிய மரிபுத்தி யாகும்
பிறுமுதயந் தனக்காதி யரியாயங் கன்மம்
பெந்துசக சம்பிருகுக் கரியாயம் வியமே.

(எ-து) சனி அட்டவர்க்கம் அறியும்படி, சனிக்கு ஆயம் 11, சகசம் 3, அரி 6, சுதன் 5 ; சனி நின்ற இராசிக்கு 11, 3, 6, 5 என்னும் இத் தானங்களில் சனி தானே சுபன்.



தரணிசனுக்கு அந்தியம் 12, ஆக்கினை 10 கூடில் சாரும் என்றது, செவ்வாய் நின்ற இராசிக்கு 11, 3, 6, 5, 12, 10 என்னும் இத் தானங்களிற் சனி சுபன்.

கேந்திரம் 1, 4, 7, 10, அட்டமம் 8, ஆயம் 11, தனம் 2 ; சூரியன் நின்ற இராசிக்கு 1, 4, 7, 10, 8, 11, 2 என்னும் இத்தானங்களிற் சனி சுபன்.

திரி 3, சடம் 6, லாபம் 11 ; சந்திரன் நின்ற இராசிக்கு 3, 6, 11 என்னும் இத் தானங்களிற் சனி சுபன்.

அனுவழிக்கு-புதனுக்கு ; நிதனம் 8, அரி 6, தவம் 9, கன்மம் 10, வியம் 12, ஆயம் 11 ; புதன் நின்ற இராசிக்கு 8, 6, 9, 10, 12, 11 என்னும் இத் தானங்களிற் சனி சுபன்.

ஆடகன்-வியாழன் ; ஆயம் 11, வியம் 12, அரி 6, புத்தி 5 ; வியாழன் நின்ற இராசிக்கு 11, 12, 6, 5 என்னும் இத் தானங்களிற் சனி சுபன்.

உதயம்-இலக்கினம் ; ஆதி 1, அரி 6, ஆயம் 11, கன்மம் 10, பெந்து 4, சகசம் 3 ; இலக்கினத்திற்கு 1, 6, 11, 10, 4, 3 என்னும் இத் தானங்களிற் சனி சுபன்.

பிருகு-சுக்கிரன் ; அரி 6, ஆயம் 11, வியம் 12 ; சுக்கிரன் நின்ற இராசிக்கு 6, 11, 12 என்னும் இத் தானங்களிற் சனி சுபன் (எ-று). 7

இட்டமான இடமும் தீய இடமும் ; நற்பலன் செய்வதும், தீப்பலன் செய்வதும்

162. இன்னணம் புகன்ற தானம்
இட்டங்கள் மற்றைத் தீய
அன்னவன் பலமே யேறிற்
சுபபல மிலாமை தீதாம்

மன்னுப சயமே யாட்சி
    நட்புச்சஞ் சுபவாழ் வுண்டாம்
துன்னப சயமே நீசம்
    பகையுற்றே ரளிக்குந் தோடம்.

(எ-து) இந்தப்படிச் சொன்ன தானங்கள் இட்டம்; மற்றைய தானங்கள் இட்ட மல்லவென்பது. இந்தத் தானங்களில் அதிக பலமுள்ள தானங்கள் சுபபலன்களை சம்பூரணமாகக் கொடுக்கும்; பலவீனமான தானங்கள் சுபபலன்களைக் கொடுக்க மாட்டா.

உபசயம் (3, 6, 10, 11), ஆட்சி நட்பு, உச்சம் இந்தத் தானங்களில் நிற்கின்ற கிரகங்கள் சுபத்தைப் பூரணமாய்க் கொடுக்கும்.

அபசயம் (1, 2, 4, 5, 7, 8, 9, 12), நீசம், பகை, இந்தத் தானங்களில் நின்ற கிரகங்கள் தோடத்தைக் கொடுக்கும் (எ-று). 8

குறிப்பு :— இப் பாட்டின் கருத்தினை "இவ்விதம் சொல்லப்பெற்றுள்ள யாவும் இஷ்டத்தைத் தரத் தக்கவையாம். பிந்துவில்லாத மற்றைய இடங்கள் அநிஷ்டத்தைத் தரத் தக்கவையாம். உபசயம், ஆட்சி, உச்சம், மித்திரம் இவைகளிலிருக்கிற கிரகங்கள் பிந்து அதிகம் உடையனவாயின் அவ்வப் பாவங்களுக்குண்டான பலன்களை நிறைவு செய்யும். அபசயம், நீசம், பகை இவைகளிலிருக்கும் கிரகங்கள் இஷ்ட சம்பத்தைத் தர மாட்டா" (அத்.-23-சு.-10) என்னும் பலதீபிகைக் கருத்தொடு ஒப்பிட்டறிக.

ஒன்பதாவது
அட்ட வர்க்க அத்தியாயம்
முற்றும்.

பத்தாவது

## கன்ம சீவத் திரவியாகம சித்தி அத்தியாயம்.

சூரியன் முதலான கோள்களால் பொருள்வரும் வழி

163. அத்தசித்தி கதிர்தந்தை சோம னன்னை
    ஆரல்சகோ தரம்புந்தி பந்து செம்பொன்
புத்திரராற் புகரரிவை மாரால் மந்தன்
    பிருத்தியராற் பொருந்துதய மதிக்குங் கன்மத்
தொத்துநின்ற கோட்டனங்கள் ; கோட்க ளின்றேல்
    உதயமதிக் கதிரகர முடையோ னுதல்
துய்த்தநவாங் கிசவதிபன் றன்னு னுதல்
    தொகுத்துரைத்த படியர்த்த முணர்ந்து சொல்லே.

(எ-து) அத்த (பொருள்) சித்தி அறியும்படி, ஆதித்தனுக்குப் பிதுர்த் திரவியம் இராசத் திரவியம் அனுபவிக்கும். சந்திரனுக்கு மாதுரு திரவியம். செவ்வாய்க்குப் பிராதுரு (உடன்பிறந்தார்) திரவியம். புதனுக்குப் பந்துத் திரவியம். வியாழனுக்குப் புத்திர திரவியம். சுக்கிரனுக்கு அரிவை திரவியம். சனிக்கு பிருத்தயசன (அடிமை மக்கள்) திரவியம் என்று அறிவது.

இலக்கினத்திற்கும், சந்திரனுக்கும் பத்தாமிடத்தில் நின்றவரைக் கொண்டு அர்த்த இலாபம் சொல்லவும்.

பத்தாமிடத்திற் கிரகங்கள் இல்லையாகில் இலக்கினம், சந்திரன், சூரியன் இவர்களில் பலமுள்ளவனுடைய பத்தாமிடத்தி லுடையவனுதல், பத்தா

RangaRakes tamilnavarasam.com

மிராசிக்குடையவன் நின்ற நவாங்கிச இராசியதிபன் எவனென் றறிந்து அவனுக்குச் சொன்னபடி அர்த்த சித்தி சொல்லவும் (எ—று). 1

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினை,

“ அனுகுங்கிதி சேர்வகையா தவனுற்ற தையர்பொன்
அன்னைக்கும் புலிசெவ்வா யாற்றனது பொருளே
நனுகுபுத னற்பகைஞர் பொருளரசன் றன்னால்
நல்லுறவோர் நிதிசுங்க னர்க்குமனை வியரால்
பணமருவுங் காரியினு லடிமையுள்ளோர் பொருளும்
பண்பொடுசே வித்தவர்பொன் பாங்குடன்வந் தடையும்
குணமொடுலக் கினஞ்சோமன் றமர்குப்பத் தாகும்
குடிவீட்டுக் குடையோனைக் கொண்டுபலன் கூறே ”

என்னும் (501) சாத காலங்காரம் பாட்டொடு ஒப்பு நோக்கி அறிக.

சாத காலங்காரம் செவ்வாயாற் றனது பொருளென்றும், புதனாற் பகைவர் பொருளென்றும், வியாழனால் உறவோர் நிதி யென்றும் வேறுபடக் கூறுகின்றது.

பலதீபிகை (அத். 5 சு. 1) “ இலக்கினம், சந்திரன் இவற்றுள் எது வலிவுள்ளதோ அதற்குப் பத்திலிருக்கிற சூரியன் முதலான கோள்களால் முறையே தந்தை, தாய், பகைவர், நட்பினர், உடன் பிறந்தார் முதலானவராலும் சுக்கிரனுக்குச் சீதனத்தாலும், சனிக்குச் சேவகம் முதலானவற்றாலும் பொருட் பேறு கூறுக ” என்று கூறுகிறது.

164. ஆதித்த னங்கிசத்திற் றிரணமுடன் கனகம்
அழகுமயிர்ப் படமருந்தாற் சீவனம தாகும்
சாதித்த மதிக்காலேற் கிருஷியுடன் சலசம்
தாபிக்குஞ் செபஞ்சுரரா லர்த்தசித்தி யுண்டாம்
போதித்த குருதியினங் கிசமதனிற் புல்லிற்
பூசலுட னக்கினியாற் றதுவினாற் பொருளாம்
ஓதியமா லங்கிசத்திற் காவியங்கள் சிற்பம்
உரையெழுத்து கணிதத்தாற் சீவனமென்றோதே.



(எ—து) (இலக்கினம், சந்திரன், சூரியன் இவர் களில் பலமுள்ளவனுடைய பத்தா மிராசிக் குடையவன் நின்ற நவாங்கிச இராசி ஆதித்தன் அங்கிசமான) சிங்காங்கிச மாகில் புல், பாய், பொன், கம்பளம், ஔடதம், வயித்தியாதிகளால் சீவனம் (உண்டாம்).

(சந்திரன் அங்கிசமான) கர்க்கடகாங்கிச மாகில் கிருஷி—உழவு ; சலசம்—மச்சம் பவளம் முத்து முதலியவை ; இவைகளாலும், இவைகள் முதலானவற்றின் கிரைய விக்கிரையங்களாலும், மந்திராதி செபங்களாலும், மந்திர தேவதை பிரகாசிக்கையாலும் சீவனம் (உண்டாம்).

செவ்வாய் அங்கிசமான மேட, விருச்சிகாங்கிச மாகில் பூசலினாலும், அக்கினிப் பிரகரணத்தினாலும், தாதுத் திரவியங்களினாலும் சீவனம் (உண்டாம்).

(மிதுன கன்னி அங்கிசமான) புதன் அங்கிசமாகில் புராண காவியங்களினாலும், சிற்ப வேலையினாலும், ஆகமப் பிரசங்கத்தினாலும், அட்சரவித்தையினாலும், கெணித சோதிடத்தினாலும் சீவனமாம் (எ—று). 2

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினை,

“ ஆதவன் சசிலக் கினமிவை மூன்றுக்
கதிபரி லதிகமாம் பலத்தோன்
அடைந்தவங் கிசந்தான் பரிதியங் கிசமேல்
அம்பொனும் வைக்கலும் விற்று
நீதியாய் வயித்தி யங்களும் செய்வன்
நீள்பிறை யங்கிச மாயின்
நீரினிற் சோங்கு நடத்தியே யுய்வன்
நிலமகன் அங்கிசை யாயின்
ஓதுமக் கினியா லிரும்புபொன் வெள்ளி
உருக்கலா யுதங்களி னாலும்
உணவுகொண் டிடுவன் புந்தியங் கிசமேல்
உரைத்திடுங் கணிதமும் கணக்கும்


tamilnavarasam.com

தீதறு சிற்பத் தொழில்கள்கா வியத்தாற்
சீவனம் வேந்தனங் கிசைக்குத்
தெய்வமா மறையோர் பெரியவ ராலும்
சீவனம் புரிந்துவாழ்ந் திருப்பன்." (961)

என்னும் சாதகாலங்காரப் பாட்டுடன் ஒப்பிட்டு உணர்க.

165. சீவன்றன் னங்கிசத்திற் றேவர்மறை யோரால்
சீதன்றன் னங்கிசமேற் றெரிவையர்க டன்னல்
ஆவதனல் மயிடத்தா விரசதத்தான் மணியால்
அசிதனெனிற் பொறுத்தலினல் நடைசேவை யதனல்
ஏவமுறும் நீசதன்ம கருமத்தா லத்தம்
எய்திடும் வலியுடையோர்க் கீரைந்தை யுடையோன்
தாவியுறு மங்கிசத்துக் கதிபனையே யோர்ந்து
சாற்றியவிப் பரிசடைவே சீவனங்கள் சாற்றே.

(எ-து) (வியாழன் அங்கிசமான) தனு, மீன அங்கிச மாகில் தேவத் திரவியத்தினலாதல், பிராமணத் திரவியத்தின லாதல் சீவனம் (உண்டாம்).

(வெள்ளி அங்கிசமான) இடப, துலாங்கிச மாகில் ஸ்திரிகளாலும், பசு, எருமை, கிரைய, விக்கிரையத் தினலும், வெள்ளியின லாதல், இரத்தினங்களின லாதல் சீவனம் (உண்டாம்).

(சனி அங்கிசமான) மகர, கும்ப அங்கிசமாகில் சுமைகளைச் சுமத்தலினலும், நடத்தலினலும், சேவகாப் பிரவிருத்தியினலும் நீசத் தொழினலும் சீவனம் (உண்டாம்).

இலக்கினம், சந்திரன், ஆதித்தன் இவர்களில் பல வானுக்குப் பத்தாமிடத்தினை யுடையவன் நின்ற நவாங்கிச அதிபதிக்குத் தக்க கர்மங்கொண்டு அர்த்த சித்தி சொல்லவும் (எ-று).





குறிப்பு :—சீவன்-குரு. சீதன்-சுக்கிரன். அசிதன்-சனி.

சாதகா லங்காரம் சுக்கிரன், சனி அங்கிசத்திற்குக் கீழ் வருமாறு பலன் கூறுகின்றது.

" இருந்த சுக்கிரன் அங்கிச மேறிலோ
தெரிந்த ரத்தினம் வெள்ளியாற் சீவனம்
பொருந்த கன்னங் கிசம்புக வீனமாய்
வருந்தி டுந்தொழில் செய்வன் வளமிலான் " (962)

பலதீபிகை கூறுமாறு (அத்தியாயம் 5) :—" சூரியன், இலக்கினம், சந்திரன் இவர்தம்மில் வலிவுள்ளவர் எவர் என்று ஆராய்ந்து அவர்க்குப் பத்தாமிட நவாம்சாதிபனுல் சீவனத்தைக் கூற வேண்டும் (சுலோ-1).

அந்த நவாம்சாதிபன் சூரியனுகில் :—பழுத்த மரங்கள், மந்திர செபம், சூதாடுதல், பொய்யுரைத்தல் இவைகளாலும், கம்பளம், வைத்தியம் இவற்றுனும், பொருள் முதலாய தாது வர்க்கங்களாலும், அரசரால் சிறப்பிக்கப் படுதலாலும் சீவிப்பன். (சு.-2).

அந்த நவாம்சாதிபன் சந்திரனுயின் :—நீரில் வாழும் பொருள்களாய மச்சம் முதலிய பொருள்களை விலைப்படுத்தும் வாணிகத்தாலும், பயிர், பசுக்கள், எருமை என்னும் இவற்றுனும், தீர்த்த யாத்திரை புரிதலாலும், பெண்களைப் பின்பற்றலாலும், ஆடை நெய்தலாலும் சீவிப்பன். (சு-3).

அந்த நவாம்சாதிபன் செவ்வாயாயின் :—பொன் முதலிய தாதுப் பொருள்களாலும், போர், ஆயுதம், சமையல், நிலம் என்னும் இவற்றுலும், பிறர்க்குத் துன்பம் புரிதலாலும் மிலேச்சர் உறவாலும், கோள் கூறுதலாலும் சீவிப்பன். (சு.-4).

அந்த நவாம்சாதிபன் புதனுயின் :—காவியம், ஆகமம், எழுத்துவேலை, சோதிடம், கணக்கறிவு, சிறந்த முறையில் ஓதுதல், செபம், புரோகிதம் என்னும் இவற்றுல் சீவிப்பன் (சு-5)

அந்த நவாம்சாதிபன் வியாழனுயின் :—அந்தணர் தேவர் என்னும் இவர்களைப் பற்றி யொழுகுதல், அரசர்பேறு,



RangaRakes tamilnavarasam.com

புராணம், சாத்திரம், வேதம், நீதிநெறி, அறங்கூறுதல், வட்டி வாங்குதல் என்னும் இவற்றாற் சீவிப்பன் (க.-6).

அந்த நவாம்சாதிபன் வெள்ளியாயின் :—பெண்களைப் பின்பற்றி யொழுகுதலாலும், ஆக்கள், எருமைகள், யானைகள், குதிரைகள், நாட்டியம், வெள்ளி, வாசனைப்பொருள், பால், அணி, பட்டாடை, அமைச்சியல், கவித்தன்மை என்னும் இவற்றாலும் பிழைப்பன் (க.-7).

அந்த நவாம்சாதிபன் சனியாயின் :—கிழங்கு, பழம், வருத்தம், அடிமை, துர்ச்சனர், இழிந்த தன்மை, சிறிய சகை, பாரம் சுமத்தல், தீய வழியி லியங்கல், மரவேலை, கொல்லுதல் என்னும் இவற்றால் பிழைப்பன் (க.-8).

பொருள்தருங்கோள் தன் வலிவுக்குத் தக்கவாறு
பொருள் தரும் என்றல்

166. அத்தத்தைத் தருங்கோள் தானே
கட்புற கட்பாம் அன்றிச்
சத்துருச் சத்து ருக்கள்
தனுர்ச்சயம் பந்தந் தங்கள்
துய்த்திடுங் கதிருச் சத்திற்
சுபதனம் இரக்கும் நீசம்
வைத்திலா பார்த்தம் வெட்சி
சுபர்தனம் வலியி னேதே.

(எ-து) அத்தப் பிராரத்தக் கிரகம் நட்பில் நிற்கில் மித்திரரிடத்தி லிருந்து (நண்பரிடமிருந்து) தனப் பிராப்தி உண்டாம். சத்துரு வீட்டில் நிற்கில் சத்துருக் களிடத்திலிருந்து தனப்பிராப்தி உண்டாம். சுபர் வீட்டில் நிற்கில் சுப சனங்களிடமிருந்து தனப் பிராப்தி உண்டாம், (பாபர் வீட்டில் நிற்கில் பாப சனங்களிட மிருந்து தனப் பிராப்தி உண்டாம்.)



அங்சிசாதிபன் உச்சத்தில் நிற்கில் சுபதனப் பிராப்தி உண்டாம். ஆதித்தனுய் உச்சத்தில் நிற்கில் சுபதனப் பிராப்தி உண்டாம் ; நீசத்தில் நிற்கில் இரந் துண்ணும்.

இலக்கினம், பதினொன்று, இரண்டு என்னும் இவ் விடங்களிற் சுபரெல்லாம் நிற்கில் வெகுதன லாபம் உண்டாம், இவை (வலி) அறிந்து சொல்லுக (எ-று). 4

குறிப்பு :—அத்தப் பிராரத்தக் கிரகம்— பொருளை அடை விக்குங் கோள். பிராப்தி—அடைதல்.

" நவாம்சாதிபன் வலிவுள்ளவனுயின் முயற்சியின்றிப் பெரும் பொருள் கிட்டும். அவன் வலிகுன்றி யிருப்பின் பெரு முயற்சியாற் சிறிது பொருள் பெறுவன் " என்று கூறும் பல தீபிகை (அத் 5-ச-9).

" பிறந்த காலத்தில் இலக்கினத்திற்குப் பத்தாம் இராசி எதுவென்று அறிந்து அதைக்கொண்டு சாதகனின் கன்மப் பிராப்தியை (தொழிற்பேற்றைச்) சொல்ல வேண்டும். பத்தாம் இராசி ஜாங்கலமோ, ஆநூபமோ, சாதாரணமோ என்றும், சுப இராசியோ, பாப இராசியோ என்றும், இருகாலிராசியோ, நாற் காலிராசியோ, பலகாலிராசியோ என்றும், சர ஸ்திர உபய இராசியோ என்றும் இவற்றின் வேறுபாடுகளை அறிந்து, அவற்றின் வடிவம், சுபாவம், அவஸ்தை, ஆகிருதி, பிரகிருதி முதலியவைகளையும், நன்கு நிச்சயித்து, அவற்றிற்குத் தக்கவாறு கன்மப் பிராப்தி கிடைக்குமென்று கூறுக " என்பது சாராவளி (அத் 33-ச-3, 4, 5).

பத்தாவது
கன்ம சீவத் திரவியாகம சித்தி
அத்தியாயம் முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

பதினொன்றாவது

## இராச யோக அத்தியாயம்

யவனாசாரியர் சீவசன்மாசாரியர் கருத்து.

167. பாவர்கள் உச்ச முற்றால்
படியினிற் குரூர னான
காவல னாவா னென்றே
யவனர்தாங் கழற லோடும்
சீவசன் மாவுந் தீய
கோள்களால் இராச யோகந்
தாவுறல் செய்யா தன்றோன்
தனத்தினுக் கரச னாமே.

(எ-து) பாவக் கோள்கள் உச்சத்தில் நிற்கில் குரூரபுத்தியினையுடைய இராசன் ஆவானென்று யவனாசாரியர் சொல்லச், சீவசன்மாசாரியர் பாவக்கிரகங்கள் உச்சத்தில் நின்றதினாலேதானே இராச யோகம் இல்லை; திரவியங்களால் இராச சமானன் ஆவானென்று சொன்னார் (எ-று). 1

குறிப்பு :— இப் பாட்டின் கருத்தினை "பாவக் கோள்கள் தங்கள் பரமோச்சத்தில் (அதியுச்சத்தில்) இருந்தால் சாதகன் குரூர சுபாவமுள்ள அரசனாயிருப்பான்" என்று யவனேச்சுரர் மொழிகின்றார். நற்கோள்கள் பரமோச்சத்தில் இருந்தால் நற்குண இயல்புள்ள அரசன் ஆவானென்றும் கூறுகிறார். இவ் வகையான யோகத்தில் பிறப்பவன் மிக்க செல்வமுள்ளவனாயிருப்பானேயன்றி, ஒருக்காலும் அரசனாகமாட்டான் என்று சீவசன்மா கூறுகிறார்" என்று கூறும் (சாராவளி அத் 35-சு-3). "பருமைசேர் உச்ச கேத்திரத் தன்னிற் பாவர்கள் மேவியே



யிருக்கில், பாவியாங் குரூர மன்னவனாகிப் பார்தனக் கரசனா யிருப்பன்" (313) என்று சாதகாலங்காரமும் கூறும்.

கோள்கள் உச்சம் பெற்றிருந்தால் அரசன் ஆவானென்றும்; இராசயோக அமைப்பிருந்தாற்றான் அரசனாவான், கோள்கள் உச்சம்பெற்றிருத்தலாகிய ஒன்றினாலேயே அரசனாகி விடமாட்டானென்றும் அறிஞர்தம்முள் இருவேறு கருத்துகளுமுள்ளன. அவற்றையே இப் பாட்டு கூறுகின்றது.

கோள்கள் உச்சம் பெற்றிருப்பின் அரசன் ஆவான் என்னுங் கருத்தினை உட்கொண்டு,

" உள்ளதொரு கிரகமுச்ச மேவிற்கிரா மணியாம்
உபயமுச்சம் பெறிற்பலவூர்க் கிராமணியு மாவன்
தெள்ளியதோ ரொருமூன்று கிரகமுச்ச மானாற்
செங்கோன்மன் னவனாகிச் சிறிதவனி புரப்பன்
நள்ளியதோ ரீரண்டு கிரகமுச்ச மானால்
நவிலொருமண் டலந்தனக்கு நாயகனே யாவன்
புள்ளிசெறி யோரைந்து கிரகமுச்ச மானாற்
பூலோக நாயகனா மெனப்பலன்கள் புகல்வர்.
என்று (252) சாதகாலங்காரம் கூறும்.

இராச யோகம் 32

168. வக்கிரன் றுக்கன் கோணன்
சுரகுரு வுச்சம் மன்ன
புக்கிதொன் றுதிக்கு மேனும்
புகன்றதின் மூவ ருச்சம்
தக்கசோ டசமும் வேந்தாம்
சசிகுயச் சேத்தி ரத்தில்
மிக்கதொன் றிரண்டுச் சத்துச்
சோடசம் நிதிக்கும் வேந்தே.

(எ-து) செவ்வாய், சூரியன், சனி, வியாழன், இந்த நாலுபேரும் உச்சத்தில் நிற்க, அவர்களில் ஒருத்தன் இலக்கினத்தில் நிற்கினும்; இவர்களில் மூன்றுபேர்

RangaRakes tamilnavarasam.com

உச்சத்தில் நின்று, ஒருவன் இலக்கினத்தில் நிற்கிலும்; இதில் (இவ் விரண்டு வகையிலும்) பதினாறு இராச யோகம் உண்டாம்.

அஃதாவது, மகரத்திற் செவ்வாய், மேடத்தில் ஆதித்தன், துலாத்திற் சனி, கர்கடகத்தில் வியாழன் நிற்க, மகர விலக்கினமாகில் ஒரு யோகம். மேட இலக்கினமாகில் ஒரு யோகம். துலா இலக்கினமாகில் ஒரு யோகம். கர்கடக இலக்கினமாகில் ஒரு யோகம். இந்தப்படி நான்கு கிரகங்களைக் கொண்டு நான்கு யோகங்கள் உண்டாம்.

இனி மூன்று கிரகங்களைக் கொண்டுள்ள யோகங்களாவன :—மகரத்திற் செவ்வாய், துலாத்திற் சனி, மேடத்தில் ஆதித்தன் நிற்க (உச்ச விராசியிலிருக்க) மகர இலக்கினமாகில் ஒரு யோகம். துலா இலக்கினமாகில் ஒரு யோகம். மேட இலக்கினமாகில் ஒரு யோகம். இந்தப்படி (இம்) மூன்று கிரகங்களால் மூன்று யோகம்.

மகரத்திற் செவ்வாய், மேடத்தில் ஆதித்தன், கர்க்கடகத்தில் வியாழம் நிற்க, மகர இலக்கினமாகில் ஒரு யோகம். மேட இலக்கினமாகில் ஒரு யோகம். கர்க்கடக இலக்கினமாகில் ஒரு யோகம். இந்தப்படி இம் மூன்று கிரகங்களால் மூன்று யோகம்.

கர்க்கடகத்தில் வியாழம், மகரத்திற் செவ்வாய், துலாத்தில் சனி நிற்க, கர்க்கடக இலக்கினமாகில் ஒரு யோகம். மகர இலக்கினமாகில் ஒரு யோகம். துலா இலக்கினமாகில் ஒரு யோகம். இப்படி மூன்று யோகம்.

மேடத்தி லாதித்தன் கர்க்கடகத்தில் வியாழன் துலாத்திற் சனி நிற்க, மேட இலக்கினமாகில் ஒரு

RangaRakes



யோகம். கர்க்கடக இலக்கினமாகில் ஒரு யோகம். துலா இலக்கினமாகில் ஒரு யோகம். இப்படி மூன்று யோகம்.

இந்தப் பிரகாரம் (4+3+3+3+3=16) பதினாறு இராச யோகமாம்.

சந்திரன் சுயச் சேத்திரத்தில் நிற்க. (மேற்கூறிய நான்கு கிரகங்களுள்) ஒரு கிரகத்தினாலும் (ஒரு கிரக உச்சத்தினாலும்), இரண்டு கிரகத்தினாலும் (இரண்டு கிரக உச்சத்தினாலும்), பதினாறு யோகம் தன இராச யோகமாம்.

அஃதாவது, ஒரு தன சந்திரன் தன்னுடைய இராசியில் நிற்க, இரண்டு கிரகங்களாலே யோகமாவது, மகரத்திற் செவ்வாய் துலாத்திற் சனி நிற்க, மகர இலக்கினமாகில் ஒரு யோகம். துலா இலக்கினமாகில் ஒரு யோகம். இப்படி இரண்டு யோகம்.

மகரத்திற் செவ்வாய், மேடத்திற் சூரியன் நிற்க, மகர இலக்கினமாகில் ஒரு யோகம். துலா இலக்கினமாகில் ஒருயோகம். இப்படி இரண்டு யோகம்.

மேடத்தில் ஆதித்தன் கர்க்கடகத்தில் வியாழன் நிற்க, மேட இலக்கினமாகில் ஒருயோகம். கர்க்கடக இலக்கினமாகில் ஒருயோகம். இப்படி இரண்டு யோகம்.

துலாத்திற் சனி நிற்க, மேடத்தில் ஆதித்தன் நிற்கத், துலா இலக்கினமாகில் ஒரு யோகம். மேட இலக்கின மாகில் ஒருயோகம். இப்படி இரண்டு யோகம்.

துலாத்திற் சனிநிற்கக், கர்க்கடகத்தில் வியாழன் நிற்கத், துலா இலக்கினமாகில் ஒரு யோகம். கர்க்கடக இலக்கினமாகில் ஒரு யோகம். இப்படி இரண்டு யோகம்.

tamilnavarasam.com

மகரத்திற் செவ்வாய் நிற்கக், கர்க்கடகத்தில் வியாழன் நிற்க, மகர இலக்கினமாகில் ஒருயோகம். கர்க்கடக இலக்கினமாகில் ஒரு யோகம். இவ்வாறு இரண்டு யோகம்.

ஆக (இவ்வாறு இரண்டு கோள்களால்) பன்னிரண்டு யோகங்கள்.

கர்க்கடகத்தில் வியாழன் நிற்க, அஃது இலக்கினமாகில் ஒன்று, மேடத்தில் ஆதித்தன் நிற்க அஃது இலக்கினமாகில் ஒன்று, மகரத்திற் செவ்வாய் நிற்க அஃது இலக்கினமாகில் ஒன்று, துலாத்திற் சனி நிற்க அஃது இலக்கினமாகில் ஒன்று இப்படி நான்கு யோகம்.

ஆக (12+4=16)ப் பதினாறு இராசயோகமாம். இப் பதினாறு (தன) இராச யோகத்திற்குச் சந்திரன் சுயச் சேத்திரத்தில் நிற்க வேண்டும் என்றறிவது. ஆக முப்பத்திரண்டு இராசயோகம் (எ-று). 2

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தை “ சூரியன், வியாழன், சனி, செவ்வாய் என்னும் இத் நான்கு கோள்களேனும் அல்லது இவர்களில் மூன்று கோள்களேனும் அவரவர் உச்ச இராசியில் நிற்க, அவ் வுச்சக் கோள்களின் இராசியி லொன்று இலக்கினமாய் வரின் பதினாறு விதமான இராச யோகம் கிடைக்கும்.

சந்திரன் கடகத்தில் (தன் வீட்டில்) நிற்க, மேற் கூறிய சூரியன், வியாழன், சனி, செவ்வாய் என்னும் இந்நான்கு கோள்களில் இரண்டு அல்லது ஒரு கோள் உச்ச இராசியி லிருக்க அதில் ஏதாவதொன்று இலக்கினமாக வந்தால் பதினாறு வகை இராச யோகம் உண்டாகும். இவ்வகை இங்கு கூறிய முப்பத்திரண்டு இராச யோகங்களிற் பிறந்தவர் தாழ்ந்த குலத்திற் பிறந்தவரா யிருப்பினும் அரசராவார் ” என்னும் சாராவளியுடன் (அத்.-35-சு.-5) ஒப்பிட்டறிக.

உரையுள் ‘ தன சந்திரன் ’ என்றது வளர்பிறைச் சந்திரனே.



நாற்பத்துநான்கு இராசயோகம்.

169. உதய மெனினு மிந்தெனினும்
வர்க்கோத் தமங்க ளுற்றிருப்ப
மதியை யன்றி மற்றையவர்
நால்வ ராதி யாய்வருங்கோள்
அதனை அதனை நோக்குமெனில்
அரச யோக மொன்றினுக்கே
விதியா மிதுவிஞ் சதித்துவய
மிரட்டி யென்றே விளம்பினரே.

(எ-து) இலக்கினம் வர்க்கோத்தம கதமாகச் சந்திரன் ஒழிய மற்றுள்ளவர் நால்வ ராதியான கிரகங்கள் நோக்கில் இருபத்திரண்டு இராசயோகமாம்.

சந்திரன் வர்க்கோத்தம கதனாக நால்வராதியான கிரகங்கள் நோக்கில் இருபத்திரண்டு இராசயோகமாம். ஆக இவ் விராசயோகம் நாற்பத்து நான்காகும்.

அவை வருமாறு :—

1. ஆதித்தன் பூமன் சீவன் புதனால் ஒன்று.
2. ஆதித்தன் பூமன் புதன் சுக்கிரனால் ,,
3. ஆதித்தன் பூமன் புதன் சனியால் ,,
4. ஆதித்தன் பூமன் சீவன் சுக்கிரனால் ,,
5. ஆதித்தன் பூமன் சீவன் சனியால் ,,
6. ஆதித்தன் பூமன் சுக்கிரன் சனியால் ,,
7. ஆதித்தன் புதன் சீவ சுக்கிரனால் ,,
8. ஆதித்தன் புதன் குரு சனியால் ,,
9. ஆதித்தன் புதன் சனி சுக்கிரனால் ,,
10. ஆதித்தன் சீவன் சுக்கிரன் சனியால் ,,
11. பூமன் புதன் சீவன் சுக்கிரனால் ,,
12. பூமன் புதன் சீவன் சனியால் ,,



RangaRakes tamilnavarasam.com

13. பூமன் புதன் சீவன் சுக்கிரனால் ஒன்று.
14. பூமன் புதன் சுக்கிரன் சனியால் ,,
15. புதன் சீவன் சனி சுக்கிரனால் ,,

இந்தப்படி நாலுபேர் கூடி இலக்கினத்தைப் பார்த்த யோகம் பதினைந்து.

இனி ஐந்துபேர் கூடி இலக்கினத்தைப் பார்த்த யோகம்; பார்க்கிற பிரகாரம் வருமாறு :—

1. ஆதித்தன் புதன் சுக்கிரன் சீவன் சனியால் ஒன்று
2. ஆதித்தன் பூமன் புதன் சீவன் சனியால் ,,
3. ஆதித்தன் பூமன் புதன் சுக்கிரன் சனியால் ,,
4. ஆதித்தன் பூமன் புதன் சீவன் சுக்கிரனால் ,,
5. ஆதித்தன் புதன் சீவன் சுக்கிரன் சனியால் ,,
6. பூமன் புதன் சீவன் சுக்கிரன் சனியால் ,,

இந்தப்படி ஐந்து கோட்களைக் கொண்டவை ஆறு யோகம் என்றறிவது.

1. ஆதித்தன், பூமன், புதன், சீவன், சுக்கிரன், சனியால் (ஆறுகோள்களால்) கொள்ளப்பட்ட யோகம் ஒன்று.

இந்தப்படி இருபத்திரண்டு இராச யோகம் இவை இலக்கினத்திற்கும், சந்திரனுக்குமாய் வர நாற்பத்து நான்கு இராச யோகமாம் (எ-று). 3

குறிப்பு :—விஞ்சதித் துவயம்—இருப்பத்திரண்டு. இப்பாட்டிற் கூறிய யோகத்தைச் சாராவளி "இலக்கினமாவது சந்திரனாவது வர்க்கோத்த மாம்சத்தி லிருந்து, அந்த இலக்கினத்தையோ, சந்திரனையோ, சந்திரனுக்கு மித்திரர்களான நான்கு கிரகங்கள் பார்த்தாலும் இராச யோகம் உண்டாம். இங்ஙு இலக்கினத்தைக் கொண்டும், சந்திரனைக்கொண்டும் தனித்தனி யோகம் உண்டென்று அறிக" (அத்-35-சு-6) என்றும், "இலக்கினமோ சந்திரனோ வர்க்கோத்தம நவாம்சத்தி லிருந்து, சந்திரனைத் தவிர நான்கு, அல்லது ஐந்து, அல்லது ஆறு கிரகங்கள் பார்த்தாலும் இராசயோகம் (அத்-35-சு-11) என்றும் கூறுகின்றது.



### இராச யோகங்கள்.

170. மந்தன் சாலாய் மறிகதிராய்
மதியே ருக விவருதிப்பப்
புந்தி பொன்சேய் யாழலிதேட்
புல்லின் அடைவே அரசாகும்
இந்து சனிதம் உச்சத்தில்
எமுகக் திரிமால் கன்னியுற
கந்தின் மறிசேய் கோல்புகராய்
கண்டில் பொன்னும் உறப்பதியாம்.

(எ-து) கும்பத்தில் சனியும், மேடத்தில் ஆதித்தனும் இடபத்திற் சந்திரனும், மிதுனத்திற் புதனும், சிங்கத்தில் வியாழமும், விருச்சிகத்திற் செவ்வாயும், இந்தப்படிக் கிரகங்கள் நிற்க, கும்ப இலக்கினத்திற் பிறக்கில் ஓர் இராச யோகம், மேட இலக்கினமாகில் ஓர் இராச யோகம், இடப இலக்கினமாகில் ஓர் இராச யோகம்; இந்தப்படி மூன்று இராச யோகம் என்பது.

சந்திரன் இடபத்தில் உதிக்க, கன்னியிற் புதனும் ஆதித்தனும் நிற்க, மேடத்திற் செவ்வாயும் துலாத்திற் சுக்கிரனும், கற்கடகத்தில் வியாழமும் நிற்க ஓர் இராச யோகம்.

சனி துலா இலக்கினத்தில் உதிக்க, கன்னியிற் புதனும் ஆதித்தனும் நிற்க, மேடத்திற் செவ்வாயும், துலாத்திற் சுக்கிரனும், கர்க்கடகத்தில் வியாழமும் நிற்க ஓர் இராசயோகம்.

இந்தப் பிரகாரம் ஐந்துவகை இராசயோகம் (எ-று) 4

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :—எழுகந்திரி—சூரியன் ; எழுகுதிரைகளையுடையோன் என்பது பொருள்.

171. சனியாட் சியினிற் றனுதிப்பத்
தழல்துங் கத்திற் றனுக்கதிரிங்
தெளிலே யரசாம் சனிசோமன்
உதிப்ப எரிமான் தனுவிரவி
மனுகா வலனும் சனியிங்தேழ்
வரும்பொன் றனுவில் கதிர்துங்கந்
தனதே யுதிக்கு மெனிலரசாம்
அன்ன நடையி னரணங்கே.

(எ-து) சனி மகரத்திற்றான் கும்பத்திற்றான் நிற்க, அஃது இலக்கினமாக, செவ்வாய் உச்ச இராசியாகிய மகரத்தில் நிற்கத் தனுசிற் சூரியன், சந்திரன் நிற்கில் ஓர் இராசயோகம்.

மகரத்தி லாதல் கும்பத்தி லாதல் சனியுஞ், சந்திரனும் கூடி யுதிப்ப, மகரத்திற் செவ்வாயும், தனுவில் ஆதித்தனும் நிற்க ஓர் இராசயோகம்.

சனியும், சந்திரனும் துலாத்தில் நிற்கத் தனுவில் வியாழன் நிற்க மேட இலக்கினத்தில் ஆதித்தன் உதிக்கில் ஓர் இராசயோகம்.

இந்தப்படி மூன்று இராசயோகம் (எ—று). 5

குறிப்பு :—துங்கம்—உச்சம். தழல், எரி—செவ்வாய்.

இராச யோகங்கள்.

172. சோம னிடபந் தனிலுதிக்கச்
சுகமே திபூன கன்மத்தில்
ஆமே கதிர்பொன் மந்தனுறில்
அவன்மா னவர்தம் பதியாகும்
தாமே மகரஞ் சனியுதிப்பச்
சகசம் அரியே மானவியம்
ஏமப் பதியா மரசாகும்
இந்தே முதலோ ரிருந்திடிலே.

(எ—து) இடப இலக்கினத்திற் சந்திரன் உதிக்க, நான்காமிடத்தில் ஆதித்தனும், ஏழாமிடத்தில் வியாழனும் பத்தாமிடத்திற் சனியும் நிற்கப் (பிறந்தவன்) மானவர் பதியான இராசன் ஆவான்.

மகர இலக்கினத்திற் சனி உதிக்க, மூன்று, ஆறு, பத்து, பன்னிரண்டில் சந்திரன், செவ்வாய், புதன், வியாழன் அடைவே நிற்கில் ஏமப்பதியான இராசன் ஆவான்.

இந்தப்படி இரண்டு இராச யோகம் (எ—று). 6

குறிப்பு :—“இடபம் இலக்கினமாகி அதில் பரமோச்சத்தில் திங்கள் இருக்க, சிம்மத்தில் ஞாயிறு இருக்க, விருச்சிகத்தில் இரச்சுமி (ரஸ்மி) வலிவுடன் கூடிய வியாழன் இருக்கப் பிறந்தவன் எல்லையில்லாச் செல்வங்களையும், வாகனங்களையும் பெற்றிருக்கும் அரசனாயிருப்பன்” (சாராவளி அத். 36-சு-12).

“மகரம் பிறந்த இலக்கினமாயிருக்க அதிற் சனியும், மீனத்திற் றிங்களும், மிதுனத்திற் செவ்வாயும், கன்னியில் புதனும், தனுவில் குருவும் இருக்குங் காலத்திற் பிறந்தவன் தேவேந்திரனுக்குச் சமானமான மன்னவனாயிருப்பான்” (சாராவளி அத். 35 சு-13) என்னும் பகுதிகளை ஒப்பு நோக்கி அறிக.

173. மதியுங் குருவும் வில்லினுற
மகரந் தன்னிற் சேய்நிற்ப
உதயம் மீனந் தானாகப்
புகரேசன் உதயத் துற்றிடினும்



RangaRakes tamilnavarasam.com

திதிகோள் மதிபொன் வில்லினுறச்
செவ்வாய் மகரந் தனில்நிற்பப்
புதனுங் கன்னி யுதிக்குமெனிற்
பூமி பதியா மெனப்புகலே.

(எ-து) சந்திரனும், வியாழனும் தனுசில் நிற்க, மகரத்திற் செவ்வாய் நிற்ப, மீன இலக்கினத்திற் சுக்கிரன் உதயமாகில் ஓர் இராச யோகம்,

தனுசில் வியாழனும், சந்திரனும் நிற்க, மகரத்திற் செவ்வாய் நிற்கக் கன்னியிலக்கினத்தில் புதனுதிக்கில் ஓர் இராசயோகம்,

இந்தப்படி இரண்டு இராச யோகம் (எ-று). 7

குறிப்பு :—" திங்களும் வியாழமும் கூடித் தனுசி லிருக்க செவ்வாய் மகரத்தில் இருக்க மீனத்திற் சுக்கிரன் உதயமாக அல்லது கன்னியில் புதன் உதயமாகப் பிறந்தவன் மன்னனு மிருப்பான் " என்னும் சாராவளிக் கருத்தை (அத். 35-சு-19) ஒப்பிட்டறிக.

இராச யோகங்கள்.

174. கன்னி யதனிற் புதனுதிப்பக்
காரி செவ்வாய் அஞ்சிலுறப்
பொன்னும் மதியும் புகரோனும்
இபுகம் அரசாம் பூமகன்மான்
கன்னன் குடத்தில் அரியிரவி
சோமன் மீனில் உதித்திடினும்
பொன்னண் டாட்டிற் சேயெறினும்
பொன்னே யெறினும் புரவலனும்.

(எ-து) கன்னி இலக்கினத்திற் புதன் உதிக்க, ஐந்தாமிடத்திற் சனியும் செவ்வாயும் நிற்க, வியாழனும்



சந்திரனும் சுக்கிரனும் நான்காமிடத்தில் நிற்கில் ஓர் இராச யோகம்.

செவ்வாய் மகரத்தில் நிற்க, சனி கும்பத்திலும் ஆதித்தன் சிங்கத்திலும் நிற்க, மீன இலக்கினத்திற் சந்திரன் உதிக்கில் ஓர் இராச யோகம்.

வியாழன் கடகத்தில் நிற்க, மேடத்திற் செவ்வாய் உதிக்கில் ஓர் இராச யோகம்.

மேடத்திற் செவ்வாய் நிற்கக் கடகத்தில் வியாழன் உதிக்கிலும் ஓர் இராச யோகம்.

இப்படி நான்கு இராச யோகம் (எ-று). 8

குறிப்பு :—இபுகம்—நான்காமிடம்,

இப் பாட்டிற் கூறிய யோகங்களுள் முதல் யோகத்தைச் சிறிது வேறுபடக் கூறுகிறது சாராவளி. " இலக்கினம் கன்னியாகி, அதில் புதன் பரமோச்சத்தி லிருக்க, மீனத்தில் வியாழனும் திங்களு மிருக்க, மகரத்திற் சனியும் செவ்வாயு மிருக்க, மிதுனத்திற் சுக்கிரனிருக்கப் பிறந்தவன் பகைவருடன் போர் செய்கின்றவனுகி மேன்மை பொருந்திய படைகளால் எழுப்பப்படும் தூசி சூரியனை மறைத்து இருட்டினை உண்டாக்கும் படியான மன்னனுமிருப்பான் " என்று கூறுகிறது. (அத்-35-சு-23).

வேறு

175. கடகந் தன்னிற் கனகன் உதித்திடத்
திடமு றுங்கதிர் மேடந் தினைத்திட
இடபந் தன்னிற் புதன்புகர் இந்துநில்
புடவி யாளும் புரவல னுருமே.

(எ-து) கர்க்கடக இலக்கினத்தில் வியாழன் உதிக்க, சூரியன் மேடத்தில் நிற்க, இடபத்தில் புதன் வெள்ளி, சந்திரன் நிற்க ஓர் இராச யோகம் (எ-று). 9

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :—இப் பாட்டின் கருத்தினை, " கடகம் இலக்கின மாக, அதில் பரமோச்ச பாகையில் வியாழன் நிற்க, பத்தாமிட மாகிய மேடத்திலே சூரியன் நிற்க, பதினொன்று மிடமாகிய இட பத்தில் திங்கள், புதன், வெள்ளி இம் மூவருமிருப்பின் தன் சொந்த ஆற்றலைக்கொண்டு எல்லாத் தேயங்களையும் வென்று அரசாளும் ஆற்றலுள்ள அரசனுமிருப்பன் " என்று (சாராவளி அத்-35-சு-18) கூறும்.

176. மந்த னெய்தி மகரத் துதித்திடப்
புந்தி தண்டும் புகர்துலை யும்புக
உந்து மாடரி நண்டுடை யோருறத்
தந்த கீர்த்தித் தராபதி யாகுமால்.

(எ-து) மகர இலக்கினத்திற் சனி உதிக்க, புதன் மிதுனத்திலும் சுக்கிரன் துலாத்திலும் நிற்க, மேடம் சிங்கம், கர்க்கடகத்தில் அந்தந்த இராசிக்குடையவர்கள் நிற்கப் பிறந்தவன் சற்குணமும் கீர்த்தியுமுடைய இராசன் ஆவான் (எ-று). 10

177. புந்தி கன்னி பொருந்தி உதித்திட
இந்து சீவனொ டத்தம மெய்திட
மந்தன் சேயைந்து வான்புகர் மானமேல்
அந்த மில்குணன் அம்புவி யாளுமே.

(எ-து) கன்னி இலக்கினத்திற் புதன் உதிக்க, குருவுஞ் சந்திரனும் ஏழாமிடத்தில் நிற்க, செவ்வாயுஞ் சனியும் ஐந்தாமிடத்தில் நிற்க இந்த யோகத்திற் பிறந்தவன் நல்ல குணவானுவான்; இராசன் ஆவான் (எ-று). 11

குறிப்பு :— சீவன்—குரு. அத்தமம்—ஏழாமிடம். இப் பாட்டின் கருத்தைச் சாராவளி சிறிது வேறுபாட்டுடன் கூறுகிறது.

" கன்னி இராசியிற் பிறந்து அதிற் புதனிருக்க, செவ்வாய் பரம உச்ச பாகையிலும் சனி மகர இராசியிலும் நிற்க,



சந்திரனும் குருவும் சுக்கிரனும் பதினோராமிடமான கடக இராசியில் இருக்கப் பிறந்தவன் பலகலைகளை யெல்லாம் அறிந்து அதில் ஆற்றல் பெற்று அரசனு யிருப்பது நிச்சயம் " என்பது அக் கருத்தாகும் (சாராவளி அத்-35-சு-9).

178. அரச யோகத் தரசர்க ளாயினோர்
மரபு தன்னிற் பிறந்திடின் மன்னனும்
உரைசெய் யோகங்கள் பல்குலத் தோருக்கேல்
நிருப ருக்கு நிகரென வாழுமே.

(எ-து) இராசயோகத்திற் பிறந்தவன் இராச வங்கிசத்திலே (அரசர் குலத்திலே) பிறந்திருந்தால் இராசன் ஆவான். இராச யோகத்திலே பிறந்தவன் அன்னிய வங்கிசத்திலே பிறந்திருந்தால் இராசாக்களுக்குச் சமனாக வாழ்வான் (எ-று). 12

குறிப்பு :—" இராசயோகத்திற் பிறந்தவன் இழிகுலத்திற் பிறந்தவனாயினும் மன்னனாவான். மன்னவர் குலத்திற் பிறந்திருப்பின் முடிமன்னனாகிய பேரரசன் ஆவான் " என்று கூறுகிறது (ஓராசாரம் அத்-20-சு-28).

வேறு

179. ஒருகோளிரு கோளுச்சம துற்ருல்தன பதியாம்
தெரிமுன்றுட னுற்கோளெனிற் செம்மன்மர பரசாம்
வருமைந்துட னுறேழெனுங் கோள்சேருச்ச மருவில்
பொருபூரிய ரெனினும்மவர் புவியாளுவர் புகழால்.

(எ-து) ஒரு கிரகம், இரண்டு கிரகம் உச்சத்திலிருந்தால், கீர்த்தி யுடையவனாய்த், தனமும் பாக்கியமும் உடையவனு யிருப்பான். மூன்று கிரகம், நான்கு கிரகம் உச்சத்தி லிருக்கின் இராச வங்கிசத்திற் பிறந்தவன் இராசா ஆவான். வேறே குலத்திலானால் பிரதானியா யிருப்பான், ஐந்து கிரகம் ஆறு கிரகம் ஏழு கிரகம்



RangaRakes tamilnavarasam.com

உச்சத்தில் நிற்கில், நீசவங்கிசத்திற் பிறக்கினும் இராசா ஆவான் (எ-று).

குறிப்பு :—"மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கோள்கள் உச்ச இராசியிலிருக்க, அல்லது ஆட்சி யிராசியிலிருக்க, அக் கோள்கள் நீச நவாம்சத்தைப் பெறுதிருப்பின் இராசயோகமாம்" என்று கூறும் (ஓராசாரம் அத்-20-க, 4.)

180. அருக்கன்மதி மேடந்தனி லவரெய்தி யுதிப்பத்
தெரிக்குஞ்சனி குடமேவிடச் சேய்மானினை மருவத்
தரிக்குங்குரு தனுவெய்திடத் தனிற்றேன்றிய சிறுவன்
புரக்கும்புவி தனையென்றுரை புகன்றார்கலை வல்லார்.

(எ-து) ஆதித்தனும் சந்திரனும் மேட இலக்கினத்தில் உதிக்க, சனி கும்பத்திலும், செவ்வாய் மகரத்திலும், வியாழன் தனுவிலும் நிற்கில் (இந்த யோகத்திற் பிறந்தோன்) புவிக்கு நாதனும் (எ-று). 14

குறிப்பு :--இப் பாட்டின் கருத்தை "மேடத்தில் பரமோச்சத்திற் சூரியன் நிற்க, அவ் விராசியிலேயே திங்களும் நிற்க, சூரியன் தோன்றுகிற பொழுது மேட இலக்கினத்திற் பிறந்தோன் எல்லோருடைய விழியிலும் அன்புக்கண்ணீர் சொரிவிக்கும் மன்னனுமிருப்பான் " என்றும் (அத்-35-சு 16),

"மேடம் இலக்கினமாக, அதிற் சூரியன் பரம உச்சத்தில் நிற்க, வியாழன் தனுசிலும், சனியும், திங்களும் துலாத்திலும் நிற்கப் பிறந்தவன் பேசழகுள்ள மன்னனு யிருப்பான் (அத். 35. சு-25) என்றும்,

"மேடத்தில் திங்களுடன் கூடிச் சூரியன் நிற்கில் கேரளம், கன்னடம், ஆந்திரம், திராவிடம், சோளம் என்னும் ஐந்து திராவிட நாடுகட்கு அரசனு யிருப்பான் " என்றும் (அத்.35 சு 120) சாராவளி கூறும் வெவ்வேறுபட்ட கருத்தின் உண்மையை நன்கு கருதி அறிய வேண்டும்.



181. கண்டாங்கலை யுதிப்பப்புகர் நாலுற்றிட நவமம்
தண்டார்மதி யுவைகின்றிடச் சாற்றுதவர் யாரும்
கொண்டேவரு சகசம்பவ முதயந்தமை குறுகில்
வண்டார்குழ லாய்கேண்மகி பதியாமிவன் மண்மேல்.

(எ-து) கர்க்கடகம் உதயமாகச், சுக்கிரன் நான்கா மிடத்தில் நிற்க, ஒன்பதாமிடத்திற் சந்திரன் நிற்கச், சொல்லாதவராகிய சனி, செவ்வாய், சூரியன், புதன், வியாழன் இவர்கள் மூன்றுமிடம் பதிேனோராமிடம் இலக்கினம் இத் தானங்களில் நிற்கில் இராச யோகமாம் (எ-று). 15

182. சோமன்சுதன் வலியோடுய குதயந்தனிற் றுன்ன
மாமன்னிய சுபரியாவரும் வலிபெற்றிட மற்றோர்
ஆமொன்பதுந் தனமும்முப சயமும்மனை வாரேல்
காமன்பெறு மெழிலோடுயர் புவிகாவல னாமே.

(எ-து) புதன் வலிபெற்று உதயத்தில் நிற்க, சுபக்கிரகங்க ளெல்லோரும் பலவான்களாக ஒன்பதா மிடத்தில் நிற்க, ஒன்பது இரண்டு மூன்று ஆறு பத்து பதினொன்று இதில் (இவற்றில்) மற்றக் கிரகங்க ளெல்லாம் நிற்கப் பூமி காவலனும் (எ-று). 16

குறிப்பு :—உபசயம் 3, 6, 10, 11 என்னும் இடங்களாம்.

183. இடபம்மலை யுதிப்பக்குரு விபுகந்தனி லுறினும்
திடமூர்த்தியும் அரியுந்தன மிலாபந்தனிற் றிங்கள்
நடமில்சனி குருமற்றவ ருறினுஞ்சனி யுதயம்
புடவித்தல மவையாள்புர வலனுமெனப் புகல்வார்.

(எ-து) இடப இலக்கின மாக, வியாழம் நான்கா மிடத்தில் நிற்க, மூர்த்தி (இலக்கினம்), அரி, தனம், இலாபத்தில் அடைவே சந்திரன், சனி, குரு மற்றவர் இவர்கள் நிற்கில், (இங்கே மற்றவர் என்றது சூரியன், குசன், புதன், சுக்கிரன் என்பவர், இவர்கள் நிற்கினும்)

RangaRakes tamilnavarasam.com

இராசாவாம். சனி உதயத்தில் நிற்க, மற்றவர் நான்கில் பதினொன்றில் குச, புத, சுக்கிரன் நிற்கினும் இராசாவாம் (எ-று) 17

குறிப்பு :—பிரதியில் "சனி புதயம் மெனிலாங்கே" என்று மிகையாக எழுதப்பட்டுள்ளது.

பிருகத் சாதக ஆங்கில மொழிபெயர்ப்பு "இடபம் இலக்கினமாக 1ல், 2ல், 6ல், 11ல் முறையே சந்திரன், குரு, சனி, மற்றைய கோள்கள் நிற்பின் அரசன் ஆவான். குரு நாலில் நிற்க, சந்திரனும், சூரியனும் பத்தில் நிற்க, சனி இலக்கினத்திலிருக்க மற்றைய கோள்கள் பதினொன்றில் நிற்கப் பிறந்தோன் இராசனாவான்" என்று கூறுகிறது.

184. சசிபொன்சனி கன்மோதய மாயம்முறத் தனத்தில்
குசன்மாலுற விபுகங்கதிர் புகர்கொற்றவன் குசனே(டு)
அசிதன்னெழச் சுகங்காமமுந் தவமுந்தச மாயஞ்
சசிபொன்புகர் கதிரோன்புதன் சாரில்தர ணிபனும்.

(எ-து) சந்திரன், குரு, சனி இவர்கள் அடைவிலே கன்மத்திலும், உதயத்திலும் இலாபத்திலும் நிற்க, இரண்டாமிடத்திற் செவ்வாயும் புதனும் நிற்க, நான்காமிடத்திற் சூரியனும் சுக்கிரனும் நிற்கில் இராசாவாம்.

செவ்வாயும் சனியும் இலக்கினத்தில் நிற்க, சுகம், காமம், தவம், தசமம், ஆயம் (4, 7, 9, 10, 11) இத்தானங்களில் சந்திரன், வியாழன், சுக்கிரன், சூரியன், புதன் இவர்கள் அடைவிலே நிற்கில் தரணிபதியான இராசாவாம் (எ-று). 18

குறிப்பு :—பிருகத் சாதக ஆங்கில மொழி பெயர்ப்பாளர் (சூர்ய நாராயண ராவ் அவர்கள்) இப் பாட்டின் முதற் பகுதிக்குக் "கடக இலக்கினம், இலக்கினத்தில் வியாழன், இரண்டிற் செவ்வாய் புதன், நான்காகிய துலாத்திற் சூரியன் சுக்ரன், பத்தாகிய மேடத்திற் சந்திரன், பதினொன்றாகிய இடபத்திற் சனி இருக்கும்படி இராசிச் சக்கரம் வரைந்துள்ளார்.



இரண்டாம் பகுதிக்கு "மேடத்தை இலக்கினமாக வைத்து அதிற் செவ்வாயும் சனியும், நான்காகிய கடகத்திற் சந்திரனும், ஏழாகிய துலாத்தில் வியாழனும், ஒன்பதாகிய தனுசிற் சுக்கிரனும், பத்தாகிய மகரத்திற் சூரியனும், பதினொன்றாகிய கும்பத்திற் புதனும் நிற்கும்படி இராசிச் சக்கரம் வரைந்துள்ளார்.

185. கன்மம்முத யத்துற்றவர் கருதந்தர திசையில்
நன்மைப்பொருள் நாடுற்றிடும் நலமேவலி யோர்க்கும்
வன்மந்தரு பகைநீசங்க ளவையுற்றவர் திசையில்
தின்மையுறு பலனேடவர் தீதேயிழைத் திடுவார்.

(எ-து) கன்மத்திலும் இலக்கினத்திலும் இருந்தவர்களுடைய அந்தர திசை (யில்) தன இலாபமும் இராச்சிய பிராத்தியும் (பிராப்தியும்) உண்டாம்.

கன்மத்திலும் இலக்கினத்திலும் கிரகம் இல்லையாகிற் சென்ன காலத்திற் பெலவானா யிருக்கிறவனுடைய திசையில் இராச்சியப் பிராப்தி உண்டாம்.

சத்துருச் சேத்திரம் நீசச் சேத்திரத்தில் நின்ற கிரகங்களுடைய திசைச் சித்திரங்களில் பொல்லாத பலனைத் தரும் (எ-று). 19

குறிப்பு :—"இலக்கினத்தில் அல்லது பத்தாம் பாவத்தில் நிற்கும் கோள்களினுடைய திசையிலோ, அபகாரத்திலோ, அல்லது வலிவு பெற்ற கோள்களின் திசையிலோ அபகாரத்திலோ அல்லது இலக்கினாதிபன் பத்தாம் பாவாதிபன் இவர்தம் திசையிலோ அபகாரத்திலோ இராச்சிய இலாபம் முதலியன உண்டாம்" என்று கூறுகிறது (சாராவளி அத்.41-சு.58).

கோள்கள் நீசம் சத்துருத் தானத்தி லிருப்பில் அவை தரும் பலனை:

" புகல்சன்ன காலையினிற் சுபக்கிரக மெல்லாம்
பொருந்துநீ சஞ்சத்துரு ராசிதனிற் சேர்ந்தே
இகலுறகின் றிடுபலன்க ளுரைத்திடவுங் கேளாய்
இருந்தநலந் தன்னைவிட்டே யேகுவிக்குந் தூரம்
விகலுற்ற நாசமிக வுற்பவிக்கு மென்றே
மெய்யதனிற் குரூரமாம் வியாதிகளுண் டாகும்

RangaRakes tamilnavarasam.com

அகன்மரணா துக்கசோ கங்களிவை செறியும்
அனங்கண்டு சரநடைசொல் லானவிழி யாளே"
என்று (259) சாதகாலங்காரமும் கூறும்.

186. பொன்னன் புதன் புகரோனிவ ருதயந்தனைப் பொருந்தச்
சன்னன்மத னஞ்சூரியன் வியந்துன்னிடிற் போகி
முன்னஞ்சதுட் டயத்திற்சுபர் மொழியுஞ்சுப பலமே
மன்னுங்கொடி யோரோரைகள் வருஞ்சாமியிற் றனமே.

(எ-து) வியாழனும் புதனும் சுக்கிரனும் இலக்கினத்தில் நிற்கச், சனி ஏழாமிடத்திலும் சூரியன் பன்னிரண்டாமிடத்திலும் நிற்கிலும்; சகாயஞ் செய்யும் கேந்திரங்களில் சுபர் நிற்கிலும்; (முறையே போகமும் சுப பலமும் திகழும்).

குரூர இராசிகளில் குரூரர் விளக்கமுற்று நிற்கிலும் அவர்கள் திசைகளில் இராச யோகமும் அத்தமும் தரும் (எ-று). 20

குறிப்பு:—மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம் என்னும் ஒற்றை இராசிகள் குரூர இராசிகளாம். சதுட்டயம்—கேந்திரம். இப் பாட்டில் முதல் யோகத்தைக் கூறும் பொழுது 'சூரியன் வியந் துன்னிடில்' என்று உள்ளது. அதற்கு, 'சூரியன் பன்னிரண்டாமிடத்தில் நிற்கிலும்' என்று உரை எழுதப்பட்டுள்ளது. ஆனால், வடமொழி பிருகத்சாதகத்தில் இப் பகுதியைக் கூறுமிடத்தே "வியதி திவஸ நாதோ" என்று உள்ளது. அதற்கு உரை வரைந்த பட்டோத்பலர் "திவச நாதன் என்றது சூரியனை, வியதி என்றது தசமஸ்தானத்தை" என்பர். மங்களேஸ்வரீயமும் "மந்தனேழ் இரவி பத்தில்" என்றே கூறுகிறது. அதனால் மூலத்திலுள்ள 'வியதி' என்பதைத் தமிழ் நூலாசிரியர் 'வியம்' என்று திரித்தனர் போலும். உரை வரைந்தவர் பன்னிரண்டாமிடம் என்று எழுதிவிட்டார்.

பதினோராவது
இராச யோக அத்தியாயம்
முற்றும்.

## பன்னிரண்டாவது

## நாபச யோக அத்தியாயம்.

### நாபச யோகங்களின் வகைகள்.

187. திரிசுடர் மறைக டன்னை
நவந்திக்கு வகுவி னேற்ற
வருமவை யிரண்டு மூன்று
காலதாய் வகுத்து வந்த
தருவதா கிருதி சங்கி
யாசிரந் தலயோ கந்தான்
புருடனு ரரயுள் காறுந்
தியாகியாம் யவனர் போற்றே.

(எ-து) திரி சுடர் மறையாகிய மூன்று, மூன்று, நான்கு வைத்து, இதை நவம் திக்கு வசுவாகிய ஒன்பது, பத்து, எட்டு இதிற் பெருக்கினது (பெருக்கிய தொகையை) இரண்டு, மூன்று, நான்காகப் பிரித்து யோகம் அறிவது.

மூன்று கொண்டு ஒன்பதிற் குணித்தால் இருபத்தேழு; இது இரண்டு பிரிவு; ஆகிர (ஆகிருதி) யோகம் இருபது; சங்கியா யோகம் ஏழு. இந்தப்படி யோகம் இருபத்தேழு என்றறிவது.

மூன்று வைத்து பத்திற் குணித்தால் முப்பதாகும். இது (இத் தொகை) மூன்று வகுப்பாவது:—ஆகிருதி யோகம் இருபது; சங்கியா யோகம் ஏழு; முன்பிலுள்ளது ஆசிராசி (ஆசிரய) யோகம் மூன்று. இந்தப் படி முப்பது யோகம்.

RangaRakes tamilnavarasam.com

நான்கு வைத்து எட்டிற் பெருக்கினால் முப்பத்திரண்டு. இது நான்கு வகையாகும். ஆகிருதி யோகம் இருபது ; சங்கியா யோகம் ஏழு ; ஆசிர (ஆசிரய யோகம் மூன்று ; முன்சொன்ன நந்தல (தெல) யோகம் இரண்டு. இந்தப்படி முப்பத்திரண்டு யோகமாம்.

இவற்றை விஸ்த்தரித்து யவனாசாரியர் யவன ஓரையில் ஆயிரத்து எண்ணூறு யோகமாக (நாபச யோகங்களைப்) பிரித்துச் சொன்னார் (எ-று). 1

ஆசிரய யோகம்

188. சத்தியா சாரி முன்னஞ்
சாற்றுமா சிரய யோகம்
ஒத்ததோர் சராதி யாக
ஓதுங்கோ ளிரச்சி ரேடு
சுத்தமா முசலந் தானும்
நளயோகஞ் சுபர்கள் கண்டந்
தத்துரு சிராக்யந் தீயோர்
சர்ப்பமாந் தலமி ரண்டேல்.

(எ-து) சத்தியாசாரியார் சொன்ன ஆசிரய யோகங்களைச் சொல்லும்படி :—கிரகங்களெல்லாம் சர இராசியில் நின்றால் இரச்சு யோகம், திர இராசியில் நின்றால் முசல யோகம், உபய இராசியில் நின்றால் நள யோகமாம் (சாராவளி - அத்-21-சு-18).

சுபக்கிரகங்க ளெல்லாம் கேந்திரங்களில் நின்றால் சிராக்கிய யோகம். பாவக்கிரகங்க ளெல்லாம் கேந்திரங்களில் நின்றால் சர்ப்ப யோகம். இந்த இரண்டுவகைக் கிரகங்களும் ஒன்றிலுண்டானால் தல (தெல) யோகம் என்று பெயராம். (எ-று). 2



குறிப்பு :—இப் பாட்டிற் குறிப்பிட்ட முசல யோகத்தை,

" தெளிவுறு கோட்க ளேழுந்
திரராசி தம்மில் நிற்கில்
அளவிலா முசல யோகம்
அதன்பலன் எடுத்துக் கூறில்
வளமுளோன் அபிமா னத்தன்
மகிழ்வுறு தனவா னுவன்
ஒளிபெறும் உற்றார் கூட்டம்
உடையவன் என்ன லாமே " (2032) என்று சாதக சிந்தாமணி கூறுகின்றது.

சாராவளி " நாபச யோகம் முப்பத்திரண்டுள் ரச்சு, முசலம், நளம் இந்த மூன்றினையும் ஆசிரய யோகம் என்று மனித்தர் கூறுகிறார் " ( அத்- 21 ) என்று கூறுகின்றது.

தலயோகம் மாலாயோக மென்றும் சர்ப்ப யோகமென்றும் இருவகையாம். கேந்திரத்தில் நல்லோர் நிற்பது மாலாயோகம், கேந்திரத்தில் பாவிகள் நிற்பது சர்ப்ப யோகம் என்று சாராவளி கூறும்.

வச்சிர, அண்டச, கோளக யோகம்

189. அத்தல யோகந் தன்னை
அறைந்தனர் சிலர்க ளாங்கே
வைத்துவ முதலாய் வச்சிரம்
அண்டசங் கோள கங்கள்
ஒத்துரைத் தலயோ கத்தைக்
கேந்திர முதலா யோர்ந்து
மெய்த்தவ னுரைத்த யோகம்
விளம்பினர் வேறு வேறே.

(எ-து) பராசரரால் சொல்லப்பட்ட தலயோகத்தைச் சிறிது ஆசாரியன்மார் பேதங்களாய்ச் சொல்லுவர். அவ் யோகம் வச்சிர யோகம், அண்டச யோகம் கோளக யோகமென்று அடைவிலே கொள்க (எ-று).



RangaRakes tamilnavarasam.com

### ஆகிருதியோக பேதங்கள்

190. அறையுமா கிருதி கண்டம்
அடுத்தவை யிரண்டி ரண்டாய்
முறையினிற் கதாயோ கங்கள்
மூர்த்தியேழ் சகடங் கன்மம்
பறைதரு சுகம்வி கங்கம்
பஞ்சமம் நவம்மூர்த் திக்கேல்
உறைசிறுங் காட கங்கள்
உதயாந்தம் அலமென் றேதே.

(எ-து) இனிமேல் ஆகிருதி யோக பேதங்களைச் சொல்லுகிறோம். அடுத்த கண்டங்கள் இரண்டிரண்டிற் கிரகங்கள் நிற்கிற் கதா யோகம்.

ஏதென்னில்? (எவ்வாறென்னில்?) எல்லாக் கிரகங்களும் 1. இலக்கினத்திலும், நான்காமிடத்திலும் நின்றாலும், 2. நாலாமிடத்திலும், ஏழாமிடத்திலும் நின்றாலும், 3. ஏழாமிடத்திலும், பத்தாமிடத்திலும் நின்றாலும், 4. பத்தாமிடத்திலும், இலக்கினத்திலும் நின்றாலும் (இந் நான்கு வகையும்) கதாயோகம் என்று பெயராம்.

கிரகங்க ளெல்லாம் இலக்கினத்திலும் ஏழாமிடத்திலும் நின்றால் சகட யோகம்.

(கிரகங்க ளெல்லாம்) பத்தா மிடத்திலும் நான்கா மிடத்திலும் நின்றால் விகங்க யோகம். விகங்க யோக மாவது அண்டச யோகம்.

(கிரகங்க ளெல்லாம்) ஐந்தா மிடத்திலும் ஒன்பதா மிடத்திலும் இலக்கினத்திலும் நின்றால் சிறுங்க (சிருங் காட) யோகம்.



(கிரகங்க ளெல்லாம்) இலக்கினத்திலும் பன்னி ரண்டா மிடத்திலும் நின்றால் அல யோகம் என்று பெய ராகும் (எ-று). 4

குறிப்பு:—இப் பாட்டிற் கூறியுள்ள கதா யோகத்தை சாராவளியில் நாபச யோக (21) அத்தியாயத்தே 13ஆம் சுலோ கத்தாலும், சகட விகங்க சிறுங்க யோகங்களை 15ஆம் சுலோகத் தாலும் அறிக. ஈற்றிற் கூறப்பட்டுள்ள அல யோகத்தை "இலக்கினம் நீங்கலாக இரண்டு முதலான பாவங்களிலிருந்து அவற்றிற்குத் திரிகோணத்திலே எல்லாக் கோள்களும் நிற்பின் அல யோகமாம். இது மூன்று விதமாயிருக்கும்; இரண்டு, அதற் குத் திரிகோணம் ஆறு, அதற்குத் திரிகோணம் பத்து (2, 6, 10.) எனவும், மூன்று ஏழு பதினொன்று எனவும், நான்கு எட்டு பன்னி ரண்டு எனவும் வரும்" என்று சாராவளி வேறுபடக் கூறுகிறது. ஆனால் சாதக சிந்தாமணியில் உள்ள யோகமஞ்சரி,

வியமுத யத்தேழ் கோளும்
மேவிடில் அலயோ கந்தான்
பயனுறு நன்மை யுள்ளோன்
பயிர்ச்செல வுடைய னுவன்" (20, 84) என்று

வராகர் ஓராசாத்திரத்திற் கூறியுள்ளபடியே கூறுகின்றது.

191. சகடமண் டசத்தி னல்லோர்
தீயர்வச் சிரமாஞ் சாற்றில்
விகடம தாகில் மிக்க
யவயோகம் மிசிர மாகிச்
சுகமத னத்தும் மூர்த்தி
மானத்துங் கமலஞ் சொல்லின்
இகலுங்கேந் திரப்பு றங்கள்
இரண்டுமேல் வாவி யோகம்.

(எ-து) சகடம், அண்டசத்தில் (விகங்க யோகத்தில்) சுபரும், தீயரும் நிற்கில் வச்சிர யோகமாம். அஃதாவது, இலக்கினத்திலும், ஏழாமிடத்திலும் சுபக்கிரகம் நிற்கில்,

RangaRakes tamilnavarasam.com

பத்தாமிடத்தும், நான்காமிடத்தும் பாபரெல்லாம் நிற்கில் வச்சிரயோகம்.

இது (மேற்கூறிய வச்சிர யோகம்) விகடமதாகில் மிக்க யவ யோகமாம். அவையாவன :—இலக்கினத்தும் ஏழாமிடத்தும் பாபரெல்லாம் நிற்க, பத்தாமிடத்தும், நான்காமிடத்தும் சுபரெல்லாம் நிற்க யவ யோகம் என்று பெயராம்.

"மிசிர மாகிச் சுகம் மதனத்தும் மூர்த்தி மானத்தும் கமலம்" என்றது இலக்கினத்தும், பத்தாமிடத்தும், சுபரும், பாபரும் எல்லாரும் நிற்கில், ஏழாமிடத்தும், நான்காமிடத்தும் சுபரும், பாபரும் எல்லாரும் நின்றாலும் கமல யோகம் என்று பெயராம்.

இந்தப்படிக் கேந்திரத்தின் புறங்களிலே (2, 5, 8, 11 ஆகிய பணபரத்திலோ 3, 6, 9, 12 ஆகிய ஆபோக்கிலீபத்திலோ) நின்றால் வாவி (வாபி) யோகம். அவையாவன :—இரண்டு, ஐந்து, எட்டு, பதினொன்று இந்த நான்கு தானங்களில் கிரகமெல்லாம் கலந்து நின்றாலும், மூன்று, ஆறு, ஒன்பது, பன்னிரண்டு இத் தானம் நான்கிலும் கலந்து நிற்க எல்லோரும் நின்றாலும் வாவி யோகம் என்று பெயராம் (எ-று). 5

குறிப்பு :—விகடம தாகில்—மறுபாடாகில். நாபச யோகங்களுள் ஒன்றாகிய வச்சிர யோகத்தினை,

" நயமுத யம்மேழ் நல்லோர்
நாலுபத் ததனிற் றீயோர்
இயலுறில் வச்ர யோகம்
இத்தில்முன் பின்னுஞ் செல்வன் " (2034) என்று

சாதகசிந்தாமணி கூறும்.



இப் பாட்டிற் கூறிய நாபசயோகங்களுள் ஒன்றாகிய கமல யோகத்தினை,

காலுட னேழு பத்து
நாட்டிய வுதயந் தன்னிற்
சாலவே யெழு கோளுஞ்
சார்ந்திடிற் கமல யோகம்
கோலிய பலன்யா தென்னிற்
குணமுளோன் கீர்த்தி யுள்ளோன்
ஞாலமேல் வெகுசம் பத்தை
நயந்தவ னென்று கூறே. (2035) என்று சாதக

சிந்தாமணி கூறுகிறது.

இப் பாட்டிற் கூறிய வாவி யோகத்தை,

" குடும்பத்தி லைந்தி லெட்டிற்
கோளேழும் நிற்கு மேனும்
ஓடுங்குற்ற மூன்றி லாறில்
ஒன்பதிம் மூன்றி லேதான்
விடுங்கொற்றக் கோட்க ளேழும்
மேவிடில் வாவி யோகம்
நடுங்குற்ற லோபி யாவன்
நாட்டிய தனமுள் ளானே " (2036) என்று சிறிது

வேறுபடக் கூறுகிறது சாதகசிந்தாமணி. (யோகமஞ்சரி)

### பருவத யோகம்.

192. போகமா முன்னூ லாய்ந்தோர்
புகன்றநூல் வழாதே யாய்ந்து
யோகமாம் வச்சி ராதி
யோர்ந்திவை புணர்ந்து கொள்ள
பாகமாங் கதிரோன் நின்ற
பவனமாங் கதற்கு நாலில்
மாகமார் புந்தி சுங்கன்
பருவத யோகம் மானே.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) மயன் முதலோரால் உரைக்கப்பட்ட பூர்வ சாத்திரங்களை ஆராய்ந்து வச்சிர யோகம் முதலான யோகங்கள் எல்லாவற்றையும் உணர்ந்து கொள்ளவும்.

சூரியன் நின்ற இராசிக்கு நான்காமிராசியில் புதன் சுக்கிரன் நிற்கில் பருபத (பருவத) யோகம் (எ-று). 6

குறிப்பு :—இங்கே மயன் முதலோர் என்றது மயன், மணித்தர், யவனாசாரியர், சத்தியாசாரி என்பவர்களை. பல தீபிகை சாதகாலங்காரம் சாதக சிந்தாமணி முதலானவற்றிற் பருவத யோகம் வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளது. இவர் கூறுகிற பர்வத யோக இலக்கணப்படி சூரியனுக்கு நான்கிற் புதன் நிற்பானு என்பது ஆராயத் தக்கது. 'நாலில்' என்பதற்கு 'நான்கு இராசிக்குள்' என்றும் பொருள் கொள்ளலாம்.

வேறு

193. உதய மாதி யுரைத்திடுங் கண்டங்கள்
அதுமுன் னாகி யடைவின்னன் னாலினில்
பதிவி டாது பதிந்திடில் யூபமுன்
னதிவி டாதிழு சத்திதண் டங்களே.

(எ-து) உதயம், நான்கு, ஏழு, பத்து இக் கண்டங்கள் முதலாக நன்னான்கு இராசியிற் கிரகங்களெல்லாம் நின்றால் யூப யோகம், இழு யோகம், சத்தி யோகம், தண்ட யோகம் என்று பெயராம்.

அவையாவன :—இலக்கினம் முதல் நான்கு இராசியிற் கிரகங்களெல்லாம் நின்றால் யூப யோகம். நான்காமிடம் முதல் நான்கு இராசியிற் கிரகங்களெல்லாம் நின்றால் இழு யோகம். ஏழாமிடம் முதல் நான்கு இராசியிற் கிரகங்களெல்லாம் நின்றால் சத்தி யோகம். பத்தாமிடம் முதல் நான்கு இராசியிற் கிரகங்களெல்லாம் நின்றால் தண்ட யோகம் என்று பெயராம் (எ-று).





குறிப்பு :—அடைவின் னன்னாலினில் என்பதை அடைவில் நன்நாலினில் என்று பிரித்துக் கொள்க. இழுயோகம் என்பதற்குச் சரயோகம் என்றும் பெயர். (சாராவளி அத்-21 சுலோ-12) இந் நூல் சராக்கியம் (201) என்று கூறுகிறது.

இழுயோகத்தை யோகமஞ்சரி மரணயோகம் என்று கூறுகின்றது. அப் பாடலைக் கீழே காண்க.

" இலகிய நாலை நாலோ
டேழினி லேழு கோட்கள்
மலைவுறு திருப்ப ராகின்
மரணயோ கந்தா னென்பர்
அலைவுறு துட்டன் றன்னை
யடுத்தவர் தம்மைக் காவான்
கொலைபல செய்ய வெண்ணும்
கொடியவ னென்று கூறே " (2037)

அந் நூல் சத்தியோகத்தை,

" உன்னிய வேழெட் டொன்பது பத்தின்
மன்னுகோ ளேழும் வலிவுற் றிருந்திடிற்
சொன்னசத் தியயோ கந்துன் மார்க்கனும்
பின்னுந் தரித்திரன் பேசறுஞ் சோம்பனே " (2038)
என்று கூறுகிறது.

வேறு

நவ, கூட, சத்தி, சாப யோகங்களும், எட்டு வகை அர்த்த சந்திரயோகமும்

194. கேந்திரங் கண்முதற் கிளர்த்து மேழினிற்
போந்திடுங் கோட்களேற் பொருந்து மேகவம்
சார்ந்திடு புடையுடன் சத்தி சாபமாம்
ஏய்ந்திடு மர்த்தசந் திரன்மற் றேழெலாம்.

(எ-து) இலக்கினம் முதல் ஏழ் இராசியிற் கிரகங்களெல்லாம் (ஏழு கிரகங்களும்) நின்றால் நவ யோகமாம்,

RangaRakes tamilnavarasam.com

நான்காமிடம் முதல் கிரகங்க ளெல்லாம் ஏழிராசியில் நின்ருல் கூட யோகமாம். ஏழாமிடம் முதல் ஏழ் இராசியிற் கிரகங்க ளெல்லாம் நின்ருல் சத்தி (சத்திர) யோகமாம். பத்தாமிடம் முதல் ஏழ் இராசியிற் கிரகங்க ளெல்லாம் நின்ருல் சாப (கார்முக) யோகமாம். மற்றுள்ள (கேந்திர மல்லாத) இராசிகளில் நின்ற கிரகங்களைக் கொண்டு அர்த்தச் சந்திர யோகம் என்று சொல்லுகிருேம்.

" அர்த்தச்சந் திரன்மற் றேழரோ " என்றதனுல், இரண்டாமிடம் முதல் எட்டா மிடத்தளவும் கிரகங்க ளெல்லாம் (கிரகங்க ளேழும்) நிற்கில் (1) ஒரு அர்த்தச் சந்திர யோகம். மூன்ருமிடம் முதல் ஒன்பதாமிடத் தளவும் கிரகங்க ளெல்லாம் நிற்கில் (2) ஒரு அர்த்தச் சந்திர யோகம். ஐந்தாமிடம் முதல் பதிஞேராமிடத் தளவும் கிரகங்க ளெல்லாம் நிற்கில் (3) ஒரு அர்த்தச் சந்திர யோகம். ஆருமிடம் முதல் பன்னிரண்டா மிடத்தளவும் கிரகங்க ளெல்லாம் நிற்கில் (4) ஒரு அர்த்தச் சந்திர யோகம். எட்டாமிடம் முதல் இரண்டா மிடத்தளவும் ஒன்பதாமிடம் முதல் மூன்ருமிடத்தளவும் (5, 6) இரண்டு அர்த்தச் சந்திர யோகமாம். பதிஞேரா மிடம் முதல் ஐந்தாமிடத்தளவும் பன்னிரண்டாமிடம் முதல் ஆருமிடத்தளவும் கிரகங்க லெல்லாம் நிற்கில் (7, 8) இரண்டு அர்த்தச் சந்திர யோகமாம் (எ-று). 8

குறிப்பு :—நான்காமிட முதல் ஏழு இராசிகளில் ஏழு கிரகங்களு மிருந்தால் சத்திர யோக மென்றும், ஏழாமிடம் முதல் ஏழு இராசிகளில் ஏழுகிரகங்களு மிருந்தால் கூடயோக மென்றும் யவனுசாரியர் கூறுகின்ருர். வராகமேயர், சத்தியாசாரியார் கொள்கையைப் பின்பற்றி இங்கே கூறியுள்ளார்.

நான்காமிடத்திலிருந்து ஏழு இராசிகளில் ஏழு கோள்களும் இருத்தலை (கூடயோகத்தை) விகட யோகம் என்று யோகமஞ்சரி கூறுகின்றது,



" ஏற்றநா லெந்தசரே டேழெட்டொன் பதுபத்தில்
ஆற்றகோ ளேழும் அடைவா யிருந்திடில்
வேற்றடங் கண்ணுய் விகடயோ கந்தான்
மாற்றுறுஞ் சீவ வதைசெய்வன் பொய்யனே "

என்பது அப் பாட்டாகும். சத்திர யோகத்தைப் பற்றி,

" சத்தமங் தொட்டுச் சாற்றும் வியமெட்சி
வைத்தகோ ளேழும் வரிசை யொடுகிற்கில்
உத்தமஞ் சத்திர யோகம்பின் பார்க்கில்
நித்தமும் உற்ருர்க்கு நீடுப காரியே "

என்று யோகமஞ்சரி கூறுகிறது. இலக்கின கேந்திரத்திலிருந்து ஏழு இராசிவரை ஏழுகிரகங்களுமிருக்கும் நவ யோகத்தை,

ஒன்றுமுத லேழா மோரை வரையினில்
துன்றுகோ ளேழுந் தொடர்ந்தே யிருந்திடில்
என்ற நவயோகம் என்பர் சுமுகனும்
வென்றிசேர் கீர்த்தி மிக்க யிறுகனே.

என்று யோகமஞ்சரி கூறுகிறது.

பணைபரம் ஆபோக்லிமங்களால் எட்டுவிதமான அர்த்த சந்திரயோகம் உண்டாகின்றது என்று சாராவளி (அத். 21-ச-18) கூறும்.

அர்த்தசந்திர யோகத்துள் இரண்டிலிருந்து எட்டு வரையும் ஏழுகிரகங்களும் இருக்கும் யோகத்தினை,

" அருந்தனந் தொட்டே யட்டம மட்டில்
வருங்கோட்க ளேழும் வரிசை யுடனிற்கில்
ஒருங்குற்ற சந்திரிகா யோகம தாகும்
விரும்பிய ரூபவான் மெய்ப்பிர தானியே. "

என்று யோகமஞ்சரி கூறுகின்றது.

ஆகிருதி யோகத்துள்
சமுத்திர யோகமும் சக்கிர யோகமும்.

195. தனுமுத லொன்றுவிட் டாறிற்சா ருங்கோள்
எனிலிவை சமுத்திர யோக மென்பரால்
அனையபோ லுதயமுன் ஞறி லுற்றிடில்
தனியுறு சக்கிர மென்று சாற்றுவார்.



RangaRakes tamilnavarasam.com

(எ-து) இலக்கினத்தை விட்டு) இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு என்னும் இவற்றில் கிரகங்க ளெல்லாம் நிற்கில் சமுத்திர யோகம் என்று பெயராம்.

(அதனைப் போலவே) இலக்கினம், மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என்னும் இந்த ஆறு இராசிகளில் கிரகங்க ளெல்லாம் நிற்கில் சக்கர யோகம் என்று பெயராம்.

இவை ஆகிரதி (ஆகிருதி) யோக சங்கிரகம்(எ-று).9

குறிப்பு :—சூரியன் ஆதியான ஏழு கோள்களும் இலக்கினம் மூன்று ஐந்து ஏழு ஒன்பது பதினொன்று என்னும் ஒற்றித்த பாவத்தி விருப்பின் சக்கிர யோகமென்றும், இதனைப் போலவே இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு என்னும் இரட்டித்த பாவத்தி விருப்பின் சமுத்திர யோகமென்றும் சாராவளி (அத்-21-க-16) கூறுகின்றது. இவ் விரண்டு யோகங்களையும்,

" இலக்கின மூன்றைந்தி லேழொன் பதுபத்தொன்
நிலைப்படு கோளேழும் நேர்படவே நிற்கில்
உலப்பிலாச் சக்கிர யோகம தென்பர்
நலத்தகு ராசாதி ராசனு மாவானே " என்றும்,

" அயர்வி லிரண்டுநா லாறெட்டிற் பத்தில்
வியமதிற் கோளேழும் மிக்கா விருந்திடில்
உயருஞ் சமுத்திர யோக மெனச் சொல்வர்
தயவுறு ராசசன் மானன்மக யோகியே " என்றும்

யோகமஞ்சரி கூறுகிறது.

(1) நௌ (நவ) யோகம். (2) சத்திர யோகம் (3) கூட யோகம். (4) கார்முக யோகம். (5) யூப யோகம். (6) சர யோகம். (7) சக்தி யோகம். (8) தண்ட யோகம். (9) அர்த்தச் சந்திர யோகம். (10) கெத யோகம். (11) வச்சிர யோகம். (12) யவ யோகம். (13) சரோச யோகம் அல்லது கமல யோகம். (14) வாவி யோகம். (15) சகட யோகம். (16) விகங்க யோகம். (17) சிருங் காட யோகம். (18) அல யோகம். (19) சக்கர யோகம். (20) சமுத்திர யோகம். இவை ஆகிருதி யோக சங்கிரக மாகும்.



### வேறு

சங்கியா யோகம் ஏழு.

196. சாற்றுறு முன்னஞ் சொன்ன
சங்கியா யோக பேதம்
ஏற்றுமே ழிருட்சத் துற்றால்
வல்லகி யொன்றெழ் றுற்றால்
போற்றுதா மினியே பாசம்
புகலுங்கே தாரஞ் சூலம்
மாற்றிய யூகங் கோளம்
தொன்மையேற் பலன்மா றுமே.

(எ-து) முன் சொன்ன (செய்யுள் 187) சங்கியா யோகத்தின் பேதங்களைச் (பேதங்கள் ஏழு) சொல்லும் படி :—ஏழு கிரகங்களும் ஏழு இராசியில் நின்றால் வல்லகி யோகம். ஆறிராசியில் நின்றால் தாமினி யோகம். ஐந்திராசில் நின்றால் பாச யோகம். நான்கி ராசியில் நின்றால் கேதார யோகம். மூன்றிராசியில் நின்றால் சூல யோகம். இரண்டிராசியில் நின்றால் யூக (யுக) யோகம். ஓரிராசியில் நின்றால் கோள யோகம். என்றறிவது. முன்னே சொன்ன நாபச யோகங்களில் (ஆசிர யோகங்கள், ஆகிருதி யோகங்கள்) ஒரு யோகம். உண்டாகில் இச் சொல்லிய யோகம் பல மில்லை (எ-று). 10

குறிப்பு : சூரியன் முதலிய ஏழு கோள்களும் ஏழு இராசிகளி லிருந்தவே வீணையோகம் என்று கூறுகிறது சாராவளி (அத் 21-க-19)

இச் சங்கியா யோகம் ஏழினைக் கிரகமாலிகா யோகம் என்னும் பெயரால், தமிழ்ச் சாதகாலங்காரம் 256, 257, 258,

RangaRakes tamilnavarasam.com

259, 260, 261, 262 ஆம் செய்யுள்களில் கூறுகிறது. பல தீபிகையும் (அத்-6-சு-35, 36, 37,) சாராவலியும் (அத்-21சு-19) இச் சங்கியா யோகங்களைக் கூறுகின்றன.

ஆசிரய யோகபலன்களும், தலயோகபலன்களும்

197. இரச்சினிற் பிறரைக் காய்வன்
விதேசசஞ் சார னென்ப
தரித்திடு முசலம் மானி
தனபந்து வுளன்ந ளத்தில்
திரத்துறும் நிபுணன் மாடை
தேகானி சிராக்கி வல்லன்
பொருத்தும்பல் லர்த்த முள்ளோன்
புசகேசன் சர்ப்பந் துக்கி.

(எ-து) இரச்சு யோகத்திற் பிறந்தவன் (198) பிறரைக் காய்வன்; பரதேச வாசன்; சஞ்சார சீலன்.

மாட்டு (முசல) யோகத்திற் பிறந்தவன் (செய்யுள் 188) அபிமானி; தனவான்; பந்து சேர்க்கை யுள்ளவன்.

நள யோகத்திற் பிறந்தவன் (188) திரமுடையன்; நிபுணன்; தனமுடையவன்; அங்கவீனன்.

சிராக்கிய யோகத்திற் பிறந்தவன் (188) சர்வ சம்பத்துடையவன்; புசகேசன்.

சர்ப்ப யோகத்திற் பிறந்தவன் வெகு துக்கிதனும். (எ-று). 11

குறிப்பு :—" இரச்சு யோகத்திற் பிறந்தவன் எக்காலமும் சஞ்சரிப்பவனுகவும், அழகிய உறுப்புக்களை உடையவனுகவும் அயல் நாட்டிலிருந்து பொருளைத் தேடுபவனுகவும், குரூரகுணமுடையனுகவும், அயலார் பொருளில் ஆசையுடையவனுகவும், அவர்களுடன் கூடி வாழ்பவனுகவும் இருப்பான்" என்று கூறுகிறது (சாராவளி அத்-21-சு-43)



முசல யோகத்திற் பிறந்தவன் பெருமையும், பொருளும், அறிவும் உள்ளவனும், எல்லாச் செயல்களிலும் ஊக்கமுள்ளவனும், அரசரால் விரும்பப்பட்டவனும், ஒளியுள்ளவனும், நிலையான புத்தியுள்ளவனும், சூரனுயுமிருப்பன் என்று கூறுகிறது (சாராவளி அத்-21-சு-44)

நளயோகத்திற் பிறந்தவன் உறுப்புக்களில் கூடுதல் குறைதல் உள்ளவனும், மிகுதியாகப் பொருளைத் தேடுபவனும், செயல்களைச் செய்யும் ஆற்றல் உள்ளவனும், உறவுத் தன்மை உடையவனும், வடிவழகுள்ளவனுயு மிருப்பன் என்று கூறுகிறது. (சாராவளி அத்-21-சு-45).

இரச்சுவும், முசலமும், நளமும், நாபசத்துள் ஆசிரய யோகங்களாகும். சிராக்கியம் அல்லது மாலாயோகமும், சர்ப்ப யோகமும் நாபசத்துள் தல (தெல) யோகமாம்

மாலாயோகமாகிய சிராக்கிய யோகத்திற் பிறந்தவன் எக்காலமும் இன்பத்தைத் துய்ப்பவனுகவும், பலவகையான ஊர்திகள், சிறந்த ஆடைகள், பொன், பொருள், படுக்கைக்கும், இருக்கைக்கும் பயன்படும் பொருள்கள் உடையனுகவும், மிகவும் வனப்புள்ளவனுகவும் பல பெண்களை உடையனுகவு மிருப்பன் என்று கூறுகிறது. (சாராவளி அத்-21-சு-41)

சர்ப்ப யோகத்திற் பிறந்தவன் விஷமம் செய்பவனுகவும், கொடியவனுகவும், உறவினரிடத்திற் சேர்ந்து வாழாதவனுகவும், எக்காலமும் துக்கமுடையவனுகவும், மிகவும் வறுமையுள்ளவனுகவும், பிறர் தரும் உணவால் வாழ்பவனுகவும், தீய செயல்களிலும், தீய ஒழுக்கங்களிலும், பற்றுள்ளவனுகவும் இருப்பன் என்று கூறுகிறது, (சாராவளி அத்-21-சு-43). பல் அர்த்தம்— சர்வ சம்பத்து.

ஆசிரய யோகத்தில் வேறொருயோகமும் கலவாமலிருக்க வேண்டுமென்பது.

198. கருதுமா சிரய முண்டேற்
கதாதியிற் பலங்க ளின்றும்
அரிதுறு கதாதி யுண்டேல்
ஆசிர யப்ப லன்போம்

RangaRakes tamilnavarasam.com

இருவகைச் சமனு யுற்றால்
பலன்களுஞ் சமனு மென்க
ஒருவகை வலியுண் டாகில்
அப்பலன் உதவு மன்றே.

(எ–து) ஆசிரய யோகங்கள் உண்டானால் கதாதி யோகங்கள் (ஆகிருதி யோகங்கள்) பலமில்லாதே போம். கதாதி யோகங்கள் உண்டானால் ஆசிரய யோகங்கட்குப் பலமில்லாதே போம். இரண்டும் சம பலன்களா யிருந் தால் சம பலத்தைக் கொடுக்கும். இதிலொரு யோகம் பலமுண்டாகில் அந்த யோகம் பலத்தைக் கொடுக்கும் (எ–று). 12

குறிப்பு :—ஆகிருதி யோகம் முதலிய வேறு யோகங் களுடன் கலந்திராத ஆசிரய யோகத்திற் பிறந்தவன் இன்பம் பொருட்பேறு முதலானவற்றுடன் கூடியிருப்பன் வேறு யோகங்கள் கலந்திருந்தால் ஆசிரய யோகம் பலன் கொடுப்ப தில்லை என்று (சாராவளி அத்-21-சு-7) கூறும்.

ஆகிருதி யோகங்களிற் கதாதி யோக பலன்.

199. சாற்றிய கதயோ கத்திற்
றனமர்த்தம் வேள்வி ஞானி
காற்றுறு சகடிற் சாடு
சாசிநோய் குதாரி கங்கந்
தேற்றுசஞ் சாரி தூதன்
கலகியாஞ் சிருங்கா டத்திற்
போற்றுறு சுகியாய் வாழ்வன்
அலயோக முழவு பூணும்.

(எ–து) இனிமேல் (ஆகிருதி யோகங்களில்) கதாதி யோகங்களைச் சொல்லுகிறோம். கதா யோக பலன் (செய்யுள் 190) தனம் அர்த்தம் உடையவன் ; அசுவ யாகம் செய்பவன் ; தானஞ் செய்வான் ; அர்த்த ஞான சீலன்.



சகட யோக பலன் (190) சாடு (வண்டி) கொண்டு வியாபாரஞ் செய்வன் ; சாசன் ; வியாதிகன் ; குத்தரன்.

கங்க (விகங்க) யோக (190) பலன், சஞ்சார சீலன் ; தூதன் ; கலகப்பிரியன்.

சிருங்காட யோகத்தின் (190) பலன் வெகுகாலம் சுகியா யிருப்பன் ; சுபமுடையவன்.

அலயோக பலம் (190) கிருஷி உடையனும் (எ-று). 13

குறிப்பு :—" சகட யோகத்திற் பிறந்தவன் நோய் உள்ளவனுகவும், நற்பண்பில்லாத மனையாளை உடையவனுகவும், அறிவில்லாதவனுகவும், வண்டிகளால் பிழைக்கப்பட்டவனுகவும், உறவினர்களும் தனக்குரிய மக்களும் இல்லாதவனுகவும் இருப்பான் என்று கூறுகிறது (சாராவளி அத்-21சு-30).

விகங்க யோகத்திற் பிறந்தவன் எப்பொழுதும் சஞ்சரிப் பவனுகவும், இழிவானவனுகவும், குற்றேவல் செய்பவனுகவும், காம இன்பத்தால் வாழ்பவனுகவும், நாணமில்லாதவனுகவும் கலகவிருப்பினனுகவு மிருப்பன் " என்று கூறுகிறது (சாராவளி அத்-21-சு 31).

கதாயோகத்திற் பிறந்தவன், மானம் உள்ளவனுகவும் பொருள் தேடுவதில் விருப்பம் உள்ளவனுகவும், வேள்வி செய் பவனுகவும். சாத்திரப் பயிற்சி யோகப் பயிற்சிகளில் வல்லவ னுகவும், தனம் தானியம் பொன் மணி முதலான ஐஸ்வரியங்களை உடையவனுவும் இருப்பான் என்று கூறுகிறது (சாராவளி அத்-21 சு-32).

சிருங்காட யோகத்திற் பிறந்தவன் கலகம் செய்வதிலும், போரிலும், சாகசச் செயல்களிலும் விருப்பமுள்ளவனுகவும், இன்பம் நுகர்பவனுகவும், அரசனுக்கு உற்றுழி உதவுபவனுகவும், பாக்கியவதியான மனைவியை உடையவனுகவும், பிரபுத்தன்மை உடையவனுகவும் பெண்களால் குறைகூறப்படுபவனுகவு மிருப் பன் என்று கூறுகிறது (சாராவளி அத்-21-சு-33).

RangaRakes tamilnavarasam.com

அல யோகத்திற் பிறந்தவன் மிருதியாக உண்பவனாகவும் வறுமை யுடையவனாகவும், பயிர்த் தொழிலால் வாழ்பவனாகவும் ஓரிடத்திலும் நிலையா யிராதவனாகவும், அடிமை வேலை புரிபவனாகவு மிருப்பன் என்று கூறுகிறது. (சாராவளி அத்-21-சு-34).

200. வச்சிர மாதி யந்தம்
 சுகிதனும் வல்ல சூரன்
பச்யவ மந்தி யத்திற்
 சவுக்கியன் பதும யோகத்
துச்சுறு நிதியம் போக
 சுபகுணன் மாடை யீயும்
தச்சுறு வாவி யோகம்
 தருமித னிதிதம் பிப்போன்.

(எ-து) வச்சிர யோகத்திற் பிறந்தவன் (191) பூர்வ வயசிலும் அந்திம வயசிலும் பாக்கிய முடையவன்; சர்வசன வல்லபன்; சூரன்.

யவ யோகத்திற் பிறந்தவன் (191) அந்திய வயசிற் பாக்கிய முடையவன்.

பதும யோகத்திற் பிறந்தவன் (191) கீர்த்திமான், சௌக்கியன், அமுத சவுக்கிய குணன்; போகியன்; நிதிவைப்பன் தாதாவாம்.

வாவி யோக பலன் (191) சிறிது நாள் நிதிவைப்பன்; தானஞ் செய்வான் (எ-று).



குறிப்பு :—வச்சிர யோகத்திற் பிறந்தவன் இளமையிலும் முதுமையிலும் இன்பம் துய்ப்பவனு மிருப்பான். பேராற்றல் உள்ளவனாகவும் செல்வத்துடன் கூடியவனாகவும் உடல் நல முள்ளவனாகவும் சிலகாலம் செல்வக் குறைபாடுடையனாகவும் தன்னுடைய மக்கள் மீது வெறுப்புள்ளவனாகவு மிருப்பன் என்று கூறுகிறது சாராவளி (அத்-21-சு-26).



யவ யோகத்திற் பிறந்தவன் பல விரதங்களை மேற்கொள்பவனாகவும் நியமத்தோ டிருப்பவனாகவும், நற் செயல்களில் விருப்ப முடையவனாகவும், மத்திம வயசில் செல்வங்களைப் பெற்று இன்பம் துய்ப்பனாகவும், கொடைவள்ளலாகவும், உச்சாக மனம் உடையவனாகவு மிருப்பன் என்று கூறுகிறது (சாராவளி அத்-21-சு-27).

பதும (கமல) யோகத்திற் பிறந்தவன் உயர்ந்த புகழை யுடையவனாகவும் கல்வி, ஆற்றல் முதலானவற்றுடன் கூடியவனாகவும் நீண்ட நாள் வாழ்பவனாகவும் எல்லாமக்களாலும் புகழப் படுபவனாகவும் எல்லா மக்களாலும் விரும்பப் படுபவனாகவும் அரசனாகவோ அரசனால் தூய்மை கருதி மதிக்கப் பெற்றவனாகவோ இருப்பன் என்று கூறுகிறது (சாராவளி அத்-21-சு-28).

வாவி (வாபி) யோகத்திற் பிறந்தவன் மிக்க பொருள்களைத் தேடி ஒருவரிடத்திற் கொடுத்து வைப்பவனாகவும், நிலையான செல்வமும் இன்பமும் உடையவனாகவும், மிக்க பொறுமை யுள்ளவனாகவும், கேள் கூறுபவனாகவும், எல்லாமக்களும் வந்து எளிமையில் காணக் கூடியவனாகவும் இருப்பன் என்று கூறுகிறது (சாராவளி அத்-21-சு-29).

யூப, இஷு, சக்தி, தண்ட யோக பலன்.

201. யூபயோ கந்தி யாகி
 யாகவான் சாரக் கியோகம்
நீபகா தனத்தைக் காக்கும்
 சரத்தையன் சக்தி னீசன்
தீபல னலசன் றன்மி
 சுகன்றண்டேல் காமி தீய
மாபல னீச கர்மி
 நட்பின்வர்த் தனைய னுமே.

(எ-து) யூப யோகத்திற் (செய்-193) பிறந்தவன் தியாகி; யாகஞ் செய்பவன்.



RangaRakes tamilnavarasam.com

சாரக்கி, இமு அல்லது சர யோகத்திற் (193) பிறந்தவன் தனத்தை இரட்சிப்பவன் ; திக்கிரிபன் ; சரத்தையவன்.

சக்தி யோக பலன் (193) நீச கர்மஞ் செய்பவன் ; பொல்லாத பல முடையவன் ; அலசன் ; தருமி ; சுகியன்.

தண்ட யோகத்திற் (193) பிறந்தவன் காமி, நீச கர்மங்கள் வர்த்தனை யுடையன் ; இஷ்டன்மார் விற்கிதனும் (எ–று). 15

குறிப்பு :—யூப யோகத்திற் பிறந்தவன் உயிர்களைக் காப்பவனுக்வும், கொடுக்கும் பண்புடையவனுகவும். பொருள் நிறைவும், இன்ப நிறைவும் உடையவனுகவும், யாகம், தீட்சை முதலானவற்றையும் நியமங்களேயும் உடையவனுகவும், உண்மை யொழுக்க முள்ளவனுகவும், அறச்செயல்களிற் சிறந்தவனுகவும் இருப்பன் என்று சாராவளி கூறுகிறது. (அத்-21-க-37).

சர (இமு) யோகத்திற் பிறந்தவன் அம்புகளை இயற்று வதிலும், கள்வர்களைப் பிடிப்பதிலும், வேட்டை யாடுவதிலும், காடுகளில் இயங்குலதிலும், இளகும் மனத்துடனிருப்பதிலும், துன்பம் செய்வதிலும், தாழ்ந்த சிற்பங்களைச் செய்வதிலும் விருப்பமுடையவனு யிருப்பன் என்று சாராவளி கூறுகிறது. (அத்-21-க-38)

சக்தி யோகத்திற் பிறந்தவன் பொருள் இல்லாத வனுகவும், உறுப்புக் குறைவுள்ளவனுகவும், துக்கமும் இழி தன்மையும், சோம்பலும் உடையவனுகவும், குறைந்த ஆயுள் உள்ளவனுகவும், போர்ச் செயலிலும், கலகத்திலும், ஆற்றலுள்ள வனுகவும், உச்சாக முள்ளவனுகவும், பாக்கியமுடையவனுகவு மிருப்பான் என்று சாராவளி கூறுகிறது. (அத்-21-க-39)

தண்ட யோகத்திற் பிறந்தவன் புதல்வர், மனைவி அழியப் பெற்றவனுகவும், வறுமை யுடையவனுகவும், எல்லா மக்களாலும் இழிவுபடுத்தப்பட்டவனுகவும், நன்மக்களைவிட்டு விலகியவனுகவும், சஞ்சலம் உள்ளவனுகவும், இழிந்த ஒழுக்கம்



உடையவனுகவும், குற்றேவல் செய்பவனுகவு மிருப்பானென்று சாராவளி கூறுகிறது. (அத்-21-க-40)

202. நவமுறிற் சுகமே கீர்த்தி
கனமுளன் குடையே கன்னில்
பவனபந் தனம்பொய் சொல்லும்
சத்திபந் துகட்கு நல்லன்
கவலிலந் தியத்தி லின்பன்
கார்முக மாதி யந்தம்
உவகையன் சூரன் மிக்க
உயுத்தத்தில் வெற்றி யுள்ளோன்.

(எ-து) நவ (நௌ) யோகத்திற் (194) பிறந்தவன் சுகமுடையன் ; கீர்த்தி யுடையவன் ; சிக்கென்ற தேகத்தை யுடையவன்.

குடை (கூட) யோகத்திற் பிறந்தவன் (194) பவன பந்தனத்தையுடையவன் (வீட்டினைக்காக்குந் தொழில்) ; இடைவிடாதே பொய் சொல்வன்.

சத்தி (சத்திர) யோகத்திற் (194) பிறந்தவன் சுசென சவுக்கியன் ; அந்திய வயசில் சவுக்கிய முடையவன்.

கார்முக யோகத்திற் (193) பிறந்தவன் ஆதி யந்திய வயசுக்களில் சவுக்கிய முள்ளவன் ; சூரன் ; பூசலில் வெற்றியுடையவனும் (எ-று). 16

குறிப்பு :—நவ (நௌ) யோகத்திற் பிறந்தவன் நீரி லிருந்து கிடைக்கும் பொருளால் சீவிப்பவனுவான் ; மிக்க இலாபத்தைப் பெறுபவனுகவும் யஜஸ் உடையவனுகவும் உலோபி யாகவும் ஆற்றலுள்ளவனுகவும் மிக்க ஆசையுள்ளவனுகவும் நிலை யில்லாதவனுகவு மிருப்பான் என்று சாராவளி கூறும் (அத்-21-க-21).

கூட யோகத்திற் பிறந்தவன் பொய்யாகவும் கபடமாகவும் பேசுந் தன்மை யுள்ளவனுகவும், சூதாட்டம் ஆடுகிறவனுகவும்,

RangaRakes tamilnavarasam.com

சிறை முதலான இடங்களைக் காவல் புரிபவனாகவும், சிறிது பொருளும் இல்லாதவனாகவும், மாறுபட்ட மனமும் சொல்லும் உடையவனாகவும், குரூரனாகவும், மலைகளிலும் வனங்களிலும் வாழ்பவனாகவு மிருப்பன் என்று கூறுகிறது சாராவளி (அத்-21-சு-22).

சத்திர யோகத்திற் பிறந்தவன் தனது மக்களைக் காப்பாற்றுகிறவனாகவும், இரக்கம் உள்ளவனாகவும், கொடையுடையவனாகவும், அரசரால் விரும்பப் பெற்றவனாகவும், உயர்ந்த அறிவுள்ளவனாகவும், முதிய வயதில் இன்பத்தையும் பாக்கியத்தையும் துய்ப்பவனாகவும், வெண்குடையை யுடையவனாகவு மிருப்பன் என்று கூறுகிறது சாராவளி (அத்.12-சு-23).

கார்முக யோகத்திற் பிறந்தவன் பொய் புகல்பவனாகவும், சிறைச் சாலையைக் காவல் புரிகின்றவனாகவும், கள்வனாகவும், ஏமாற்றுபவனாகவும், காட்டில், வாழ்பவனாகவும், இளமையிலும் முதுமையிலும் இன்பமுள்ளவனாகவும், இடைக் காலத்தே பலவகைத் துன்பங்களை அனுபவிக்கிறவனாகவும் இருப்பான் என்று சாராவளி கூறுகிறது (அத்-12-சு-24).

இங்கு கூறிய கார்முக யோகத்தை மாலை யோகம் என்னும் பெயரால் சாதக சிந்தாமணியில் உள்ள யோக மஞ்சரி கூறுகின்றது,

“ கருமமுதல் நாலுமட்டும் கோளேழும் நிற்கில்
கனத்தமா கீர்த்திமா லாயோக மென்பர்
பெருகுசாத் திரிகோபி வித்துவா னிராசப்
பிரசித்தன் பந்துசன பூச்சியனென் றுரைப்பர் ”

அர்த்தசந்திர, சமுத்திர, சக்கிர, வீணையோகபலன்

203. அர்த்தசந் திரயோ கத்தில்
அதிசுகங் காந்தி செல்வம்
வைத்தசுந் தரச ரீரம்
பூச்சியன் போகி மன்னும்



ஒத்ததோர் சமுத்தி ரத்தில்
உதயமன் னுழி வேந்தர்
மெய்த்திடு முடித்தா னுள்ளோன்
வீணையே நிருத்த கீதன்.

(எ-து) அர்த்த சந்திர யோகத்திற் (194) பிறந்தவன் அதிக சவுக்கியன், சரீர காந்தியுடையவன், வெகு தனமுடையன், அழகுடையவன், சரீர பூச்சியன், போகி, இராசத்துவம், பிரதானித்துவ முடையன்.

சமுத்திர யோகத்திற் (194) பிறந்தவன் நரபதி, இராச சமான பாக்கியன், போகமுடையன்.

சக்கர யோகத்திற் பிறந்தவன் நரேந்திராகிய இராசாக்கள், மகுட இரத்தினங்கள், பட்டு அழுந்தும் தாளுடையவன்.

வீணை (வல்லகி) யோகத்திற் பிறந்தவன் (194) நிபுணன் நிருத்த கீதப் பிரியனும் (எ-று). 17

குறிப்பு :—அர்த்த சந்திர யோகத்திற் பிறந்தவன் எல்லா மக்களுக்கும் விருப்பமுள்ளவனாகவும், படைத்தலைவனாகவும், வடிவழகுள்ளவனாகவும், அரசனால் விரும்பப்பட்டவனாகவும், ஆற்றல் உள்ளவனாகவும், மணி, பொன், அணி இவற்றுடன் கூடியவனாகவுமிருப்பன் என்று சாராவளி கூறுகிறது. (அத்-21.சு-25).

அர்த்தச்சந்திரயோகம் 2, 5, 8, 11 ஆகிய நான்கு பணபரத்தினாலும் 3, 6, 9, 12 ஆகிய நான்கு ஆபோக்கிலீபத்தாலும் எட்டுவிதமாய்த் தோன்றுமென்க. வராகர் ஓரையாகிய இந்நூலும் சாராவளியும் எட்டிற்கும் பொதுவான பலன்களையே கூறுகின்றன, சாதக சிந்தாமணி எட்டிற்கும் தனித்தனிப்பலன் கூறுகிறது. அந் நூல் அர்த்தச்சந்திர யோகத்தை இரத்தினவளி மாலிகா யோகம் என்று கூறுகின்றது.

RangaRakes

tamilnavarasam.com

கோள்கள் இரண்டு முதல் எட்டு வரையுள்ள அர்த்த சந்திரயோகம்.

" இகலிரண்டு முதலெட்டு வரையிற்கோ ளேழும்
    இருக்கிலிரத் துவளிமா லிகாயோக பலன்ருன்
பகரழகு பிதுர்பத்தி கெணிதமுளன் றனவான்
    பார்த்திபன்றீ ரன்பெரியோன் காலமறி பவனே "
(2115)

கோள்கள் மூன்று முதல் ஒன்பது வரையுள்ள அர்த்த சந்திரயோகம்,

" மூன்றுமுதல் ஒன்பதுமட் டேழ்கோளும் கிற்கின்
    மொழியுமிதி லிரண்டுகோள் கேந்திரமே யாகில்
ஏன்றரத்து வளிமாலா யோகமிதன் பலன்ருன்
    இராசசிகம் தலையுடையன் போகிவித்வா னாகும்
கீன்றவின யங்களுள னிரோகிசெய முடையன்
    கிளரும்வாய்ச் சால்களுஞ் செயல்வல்லோன் றீரன்
மான்றனேவே லக்கயலைக் கடுவைமா வடுவை
    மதனன்வா ளியைப்பழித்த வாட்டடங்கண் மாலே. "
(2116)

நான்கு முதல் ஏழு இராசிவரை கோள்கள் உள்ள கூட யோகத்தை யோகமஞ்சரி மாலா யோகம் என்று கூறுகிறது. (2117) அதனையே அந்நூல் மற்றோரிடத்தே விகட யோகம் (2040) என்றும் கூறுகிறது.

கோள்கள் ஐந்துமுதல் பதினொன்றுவரையுள்ள அர்த்த சந்திரயோகம்,

" ஐந்திட முதலாய்ப் பதினொன்று வரைக்கும்
    ஆகுமேல ரேழுகோ ணிற்பின்
முந்துமாம் பின்மா லாயோக பலன்ருன்
    முழுவித்தை மந்திரி சூரன்
வந்தசாத் திரிகள் நீட்சதன் போகி
    வருதனங் கீர்த்திரா சாங்கஞ்
சந்ததந் தெய்வப் பிராமணர் பத்தி
    தலையுறு விதரண னென்பர் " (2118).



கோள்கள் ஆறுமுதல் பன்னிரண்டுவரையுள்ள அர்த்த சந்திரயோகம்,

" ஆறிடந் தொட்டுப் பனிரண்டு வரைக்கும்
    ஆனகோ ளேழுமே நிற்பின்
மீறிய தரித்ர மாலிகா யோகம்
    விதமுறு கத்திரி யோகம்
தூறிய தரித்ரன் சூரன்சஞ் சாரன்
    துட்டகா மியனரு சாரன்
கூறிய கமலப் பொகுட்டில்வீற் றிருக்குங்
    கோமளப் பச்சிளங் கொடியே " (2119) வராகர் ஓரை ஏழாமிடம் முதல் இலக்கினம்வரை ஏழு கோள்களு மிருந்தலைச் சந்திர யோகம் என்று கூறுகிறது. சாதக சிந்தாமணியில் உள்ள யோக மஞ்சரி காம மாலா யோகம் என்று (2120) கூறுகிறது. அந் நூலே மற்றோரிடத்தே (2041) சந்திர யோகம் என்றும் கூறுகிறது.

கோள்கள் எட்டு முதல் இரண்டு வரையுள்ள அர்த்த சந்திரயோகம்,

எட்டு முத லிரண்டுமட்டும் ஏழுகோள் நிற்பின்
    எதிர்துர்ப்பாக் கியமாலா யோகமதன் பலன்ருன்
தட்டுறுமி யாகாதி கன்மதா னத்துக்
    கதிகாரன் தேவபத்தி சகலகலை வல்லன்
மட்டுறுமற் றீர்க்காயுள் பாவசிந்தை சாமி
    வகுத்தமத் தியானதரித் திரன்சுரா பானி
விட்டுவசஞ் சலன்மாத ராற்செயிக்கப் பட்டோன்
    மெய்யெல்லாங் கிரிகிக்க மெலியுமென்பர் தானே
(2121).

கோள்கள் ஒன்பது முதல் மூன்று வரையுள்ள அர்த்த சந்திரயோகம்

" ஒன்பதா மிடமுதலாய் விக்கிரம மட்டும்
    ஓரேழு கோணிற்கிற் சுபமாலா யோகம்
அன்புறு தியாகிகன்மந் தனம்புத்தி யழகு
    அரதனம்நற் கீர்த்திவெகு களத்திரத்தை யுடையன்
நன்பிரியன் வசனத்தன் சர்வசனப் பிரியன்
    நல்லதொரு ரேகைகள்கால் கைதம்மி லுடையன்

RangaRakes
tamilnavarasam.com

துன்பமன்றிப் பொருளுடையன் மன்னவனென் றுரைப்பர்
சுவர்க்காதி போகமருட் டுணைசுவர்க்க மயிலே" (2112)

பத்திலிருந்து நான்காமிடம் வரை ஏழுகோள்களும் இருந்தலே வராகர்ஓரை கார்முக யோகம் என்று கூறுகிறது. யோகமஞ்சரி கீர்த்தி மாலா யோகம் (2123) என்று கூறுகிறது.

கோள்கள் பன்னிரண்டு முதல் ஆறுவரையுள்ள அர்த்த சந்திர யோகம்

"பன்னிரண்டு முதலாறு வரையிற்கோ ளேழும்
பதிந்துநிற்கிற் றபதனமா லிகாயோக மென்பர்
உன்னுதெய்வப் பிரதிட்டை தன்மவான் சமர்த்தன்
உயர்கிரய விக்கிரையன் வெகுபுத்தி மானும்
துன்னுமங்க லினன்மக வாசையன்மன் னவனும்
துய்யமறை யோர்களாற் பூச்சியனே யாவன்
நன்னியலா பப்பிரசித்தன் பாவசிந்தை யுடையன்
நளினமலர்த் திருவனைய நங்கையருக் கரசே"
(2024)

சமுத்திர யோகத்திற் பிறந்தவன் மிக்க பொன்னும் மணியும் உள்ள மன்னனாகவோ அல்லது மன்னவன் போன்றவனாகவோ விளங்கிச் சிறந்த போகம் உடையவனாய் எல்லா மக்களாலும் விரும்பப்படுபவனாகி, உச்சாகமும், வீரமும் உள்ளவனாயிருப்பன் என்று சாராவளி கூறுகிறது (அத்-21-சு-36).

சக்கர யோகத்திற் பிறந்தவன் வணங்கும் அரசருடைய முடிமணி யொளிவிடும் கால்களுடன் கூடிய பேரரசனாயிருப்பன் அல்லது அரசரால் வணங்கத்தக்க தவசியாகவோ ஞானியாகவோ இருப்பன் என்று சாராவளி கூறுகிறது (அத்-21-சு-35).

இனிச் சங்கியா யோகம் ஏழனுள் ஒன்றாகிய வல்லகி (வீணை) யோகத்திற் பிறந்தவன் உறவினர் உள்ளவனாகவும் நன்மொழி நவில்பவனாகவும் சாத்திரங்களை அறிபவனாகவும் இசையிலும் வாத்தியங்களிலும் நல்ல அறிவு படைத்தவனாகவும் பலவகை இன்பங்களைத் துய்ப்பவனாகவும் மிக்க பணியாட்களை உடையவனாகவும் இருப்பான் என்று சாராவளி கூறுகிறது (அத்-21 சு-52).



சங்கியா யோகங்களில் தாமினி, பாச, கேதார, சூல யோக பலன்

204. தாமினி யோகந் தாதா
பரகன்மன் பெற்றஞ் சார்ந்தோன்
ஆமிது பாசஞ் சீலன்
தனம்பந்து வாங்கே தாரம்
தோமிலாக் கிருஷி யத்தம்
சுபஞ்சூல முபாய சூரன்
நாமெனுந் தனத்திற் காமி
நல்குர வுடைய னாமே.

(எ-து) தாமினி யோகத்திற் (196) பிறந்தவன் தாதா ; அன்னிய காரிய திருதன் ; பசுக்களுடையவன்.

பாச யோகத்திற் பிறந்தவன் (196) சீலன் ; தனந் தேடுவன் ; சுயப் பிருத்திய (தொண்டர்) பந்துக்களுடையவன்.

கேதார யோகத்திற் பிறந்தவன் (196) கிருஷிகரன் ; திரவிய முடையவன் ; சுபமுடையவன்.

சூல யோகத்திற் (196) பிறந்தவன் உபாயி ; சூரன் ; தனத்தில் ஆசையுடையவன் ; தரித்திரனும் (எ-று). 18

குறிப்பு : தாமினி யோகத்திற் பிறந்தவன் எல்லோருக்கும் உதவி செய்பவனாகவும், பல ஆக்கள் உள்ளவனாகவும் பொருளுக்குத் தலைவனாகவும் எல்லோருக்குந் தெரிந்தவனாகவும், பல புதல்வரை யுடையவனாகவும் மணிகள் ஏனைய செல்வங்கள் இவற்றை யுடையவனாகவும் தைரிய முடையவனாகவும் புலவனாகவுமிருப்பான் என்று சாராவளி கூறுகிறது (அத்-21-சு-51).

பாசயோகத்திற் பிறந்தவன் அடங்கி யொழுகுபவனாகவும், செயல் செய்வதில் ஊக்கமுள்ளவனாகவும், வஞ்சனை உள்ளவனாகவும், மிகவும் பேசுபவனாகவும், சீலம் இல்லாதவனாகவும்,

29

RangaRakes tamilnavarasam.com

பல தொண்டர்களை யுடையவனுகவும் இருப்பான் என்று சாராவளி கூறுகிறது (அத்-21 க-50).

கேதார யோகத்திற் பிறந்தவன் பலர்க்கும் உதவுபவனுகவும், எல்லாச் செயல்களையும் செய்பவனுகவும், வாய்மை பேசுபவனுகவும், பலவகை இன்பங்களைத் துய்ப்பவனுகவும், நிலையற்ற தன்மையுடையவனுகவும், தனம் உடையவனுகவு மிருப்பானென்று சாராவளி கூறுகிறது (அத்-21-க-49).

சூல யோகத்திற் பிறந்தவன் கொடியவனுகவும், சோம்பலும், வறுமையும், உடையவனுகவும், உயிர்களை அலைந்தலில் விருப்பமுள்ளவனுகவும், மக்களால் விலக்கப்பட்டவனுகவும், போர்த் தொழிலில் ஆற்றலுள்ளவனுகவும், அதனால் பலர்க்குத் தெரிந்தவனுகவும், அச்சத்தைச் செய்பவனுகவு மிருப்பான் என்று சராவளி கூறுகிறது (அத்-21-க-48).

### பூகயோகத்திலும், கோண யோகத்திலும் பிறந்தவன் பலன்

205. மன்னிய பூகந் தன்னில்
தனத்தினில் வாஞ்சை யுள்ளான்
மின்னுபா சண்டி வேத
வற்சிதன் கோண மேவில்
நன்னிதி ஞான மில்லான்
நிந்திகன் நடனஞ் செய்யும்
பன்னருங் குசிப்பி யென்று
பகர்ந்தனர் தெரிந்த நூலோர்.

(எ-து) பூக யோகத்திற் (196) பிறந்தவன் அர்த்த விரகி; பாசண்டி; வேதவற்சிதன்.

கோண யோகத்திற் (196) பிறந்தவன் தனமில்லாதான்; ஞான மில்லாதவன்; நிந்திகன்; நடனன்; குசிப்பி (எ-று).

19

குறிப்பு — பூகம் புகமென்றும் கூறப்படும். புகயோகத்திற் பிறந்தவன் வேதநெறிக்கு மாறுபட்ட பௌத்தர், சமணர்

RangaRakes



முதலானவர்தம் சமயநெறியில் நிற்பவனுகவும், வறுமையுள்ளவனுகவும், வேத நெறியிற் செல்லும் மக்களால் விலக்கப்பட்டவனுகவும் மக்கட் பேறில்லாதவனுகவும் பெருமையைத் தான் மேற்கொண்ட அறங்களைச் செய்யாதவனுகவும் இருப்பன் என்று சாராவளி கூறுகிறது (அத்-21-க-47).

கோண யோகம் கௌண யோக மென்றும் கூறப்படும். கோண யோகத்திற் பிறந்தவன் சோம்பலும் வறுமையும் உள்ளவனுகவும் கல்வி அறிவு இல்லாதவனுகவும், பெருமை இல்லாதவனுகவும், அழுக்கு நிறைந்த உடலத்தை உடையவனுகவும் எப்பொழுதும் துன்பம் உடையவனும் அலைந்து திரிபவனுகவும் பலவகையிலும் மனக் கிலேசம் உடையவனுகவும் இருப்பான் என்று சாராவளி கூறுகிறது (அத்-21-க-46).

பன்னிரண்டாவது
நாபச யோக அத்தியாயம்
முற்றும்.

tamilnavarasam.com

## பதின் மூன்றாவது

## சந்திர யோக அத்தியாயம்.

### அதம மத்திம வரிட்ட யோகம்.

206. அருக்கன்முதல் மதிநின்ற விராசி யிருய்க்
கேந்திரமுன் னயமத்தம் ஞானம் புத்தி
தெரிக்கிலுறும் பலனதமம் மத்தி மங்கள்
செப்பியிடின் வரிட்டமுமே சேரு மென்ப
மருக்கமழுங் குழலணங்கே பகலி ராவின்
மகப்பிறக்கின் மதிசுயமித் திரக்கால் தன்னில்
தரித்திடப்பொன் புகர்நோக்கு மென்னின் மிக்க
தனமுடனே சுகிப்பனென்பர் தமிழ்நூ லாய்ந்தோர்.

(எ—து) ஆதித்தன் நின்ற இராசி முதல் சந்திரன் நின்ற இராசி யளவும் கேந்திரம், பணபரம், ஆபோக்கி லீபம் என்று மூன்று வகையாக அறிவது. ஆதித்தனுக்குக் கேந்திரத்தில் சந்திரன் நிற்கில் அதம யோகம். பணபரத்திற் சந்திரன் நிற்கில் மத்திம யோகம். ஆபோக்கி லீபத்தில் வரிட்ட யோகம்.

(அஃதாவது) ஆதித்தனுக்குக் கேந்திரத்தில் சந்திரன் நிற்கில் நயகுணம் அத்தம் ஞானம் புத்தி நிபுணம் இந்தப் பலன் அதமமா யிருக்கும்.

பணபரத்திற் சந்திரன் நிற்கில் இப் பலன்கள் மத்திமம்.

ஆபோக்கிலீபத்தில் சந்திரன் நிற்கில் இப் பலன்கள் உத்தமமா யிருக்கும்.



பகலிற் பிறந்தவனுக்குச் சந்திரன் தன்னுடைய சுயச் சேத்திரத்தில் நிற்கிலும் பந்துச் சேத்திரத்தில் நிற்கிலும் அந்தச் சந்திரனை வியாழன் பார்க்கிலும் தனமுஞ் சுகமு முடையன்.

இராத்திரியிற் பிறந்தவனுக்குச் சந்திரன் தன்னுடைய சேத்திரத்தில் பந்துச் சேத்திரத்திற்றான் நிற்க அந்தச் சந்திரனைச் சுக்கிரன் பார்க்கிலும் தனமும் சுகமும் உடையவனும் (எ—று). 1

குறிப்பு :—இந்த யோகம் ஓரா சாரத்தும் கூறப்பட்டுள்ளது. (அத்.19-சு-7) பலதீபிகையிலுங் காண்க. (அத்-6-சு.10) செய்யுளில் 'தமிழ் நூலாய்ந்தோர்' என்பது தமிழ்ச் சோதிட நூல்கள் அல்லது இனிய (தமிழ்-இனிமை) நூல்கள் என்று பொருள்படும்.

### அதியோகம்.

207. சோமனுக்குத் தியூனமரி நிதனந் தம்மில்
சுபர்களுறில் அதியோகஞ் சேனை நாதன்
மாமதிமந் திரியரச னாக வாழு
மாங்கிதனை வலியதனால் வகுத்துக் கூறல்
ஆமிதனிற் சம்பன்ன சுகமுள் ளோனும்
அடையலரைச் செயித்திடுவ னாயுள் தீர்க்கன்
நோமுறுத லில்லாதான் பீதி யில்லான்
நுவன்றனர்நுண் ணிடைமாதே நூலின் வல்லோர்.

(எ—து) சந்திரனுக்குத் தியூனம் ஏழாமிடம்; அரி-ஆறாமிடம்; நிதனம்-எட்டாமிடம்; இந்தத் தானங்களில் சுபக் கிரகம் நிற்கில் அதியோகம் என்று பெயராம், இந்த யோகத்திற் பிறக்கில் சேனாபதி, மந்திரி, இராசாவாம்.

இந்த யோகத்தில் சந்திரனும் சொல்லிய கிரகங்களும் பெலவீன ராகில் சேனாபதியாம். மத்திம பெலமாகில் மந்திரியாம்; பூரண பெலமாகில் இராசாவாம்.

RangaRakes tamilnavarasam.com

இந்த யோகத்தின் பலன் சம்பன்ன சுக முடையவன் சத்துருவைச் செயிப்பன்; தீர்க்காயு சுடையன்; வியாதியும் பயமும் இல்லாதவனும் (எ-று). 2

குறிப்பு:—இங்கு கூறப்பட்டுள்ள அதியோகத்தை

" சோமனுக் காறே ழெட்டிற்
சுபக்கிர கங்க ணின்றால்
பூமலி யதிக யோகம்
இதன்பலன் புகலுங் காலை
நேமியோன் சவுரி யங்கள்
நிறைசீவன் பலமு முள்ளான்
தீமையாம் பகையை வெல்லும்
சேனாதி பதியு மாவன் " என்று (282) சாத காலங்

காரம் கூறுதலைக் காண்க. பலதீபிகை சந்திர இலக்கினம் இலக்கினம் இவற்றிற்கு ஏழிலாவது ஆறிலாவது எட்டிலாவது நற் கோள்கள் நிற்பின் அதியோகம்; ஏழிலிருந்தால் தலைவன், ஆறிலிருந்தால் அமைச்சன், எட்டிலிருந்தால் பார்த்திபனும் (நிலத்தினை யுடையவனும்) திருவும் ஆயுளும் ஒளியும் பெற்று விளங்குவன் என்று (அத்-6-சு-38) கூறுகிறது. சர்வார்த்த சிந்தாமணியும் இவ்வாறே (அத்-13-சு-8) கூறுகிறது. சாத காலங் காரம் மற்றோ ரிடத்தே " ஏழில் நிறைந்த மதிக்குச் சுந்தரஞ்சேர் லக்கினத்தா றேழெட்டா மிடத்தில் சுபக்கிரகம் பார்க்கி னிற்கில் சொனுராச யோகம் " (275) என்று கூறுகிறது. இப் பாட்டு நிறைந்த சந்திரனுக்கு ஆறு ஏழு எட்டாமிடங்களைச் சுபர் பார்த்தாலும் இராச யோகம் என்று கூறுகிறது.

### சுனபா அனபா துருதுரா யோகம்

208. இரவியொழிந் துளோர்திங்கட் கத்தவிய முபயத்
தெனிற்சுனபை யனபைதுரு துராயோக மென்பர்
கிரகமிதி லாருமிலை யெனிற்கேமத் துருமம்
கேந்திரத்து மிந்துவொடுங் கிரகமுறி லில்லை
உரைசெயுநாற் கண்டகவாங் கிசந்தனிலும் புகல்வர்
ஒண்மதிக்குச் சுகங்கன்ம முபயத்திற் கோள்கள்
நிரைநிரையே யுற்றிடினுஞ் சுனபையுட னனபை
நிகழ்துருது ராயோக மென்றுநிகழ்த் துவரே.



(எ-து) ஆதித்தனை யொழிந்துள்ள கோள்கள் சந்திரனுக்கு அத்தம் (இரண்டாமிடம்), வியம், உபயத்தில் (இரண்டிலும் பன்னிரண்டிலும்) நிற்கில், அடைவே சுனபை, அனபை, துருதுரா யோகமென்று பல ஆசாரியரும் சொல்வர்.

சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் கிரகங்கள் நிற்கில் சுனபை யோகம். பன்னிரண்டாமிடத்திற் கிரகங்கள் நிற்கில் அனபை யோகம். இருபுறத்தும் கிரகங்கள் நிற்கில் துருதுரா யோகம். சந்திரனுக்கு இரண்டு புறத்தும் கிரக மில்லையாகில் கேமத்துரும யோகமாம் இலக்கின கேந்திரத்திற் கோள்கள் நிற்பினும் சந்திரனொடு கோள்கள் கூடினும் கேமத்துரும யோக மில்லை. (கேமத்துரும யோக பங்கம் என்க).

கேந்திரம் நவாங்கிசத்திற்குக் கிரகங்கள் நிற்கினும் இந்த யோகங்க ளுண்டென்று பலருஞ் சொல்வார்.

சந்திரனுக்கு நான்காமிடத்திற் கிரகங்களுண்டாகில் சுனபை. பத்தாமிடத்திற் கிரகங்கள் நிற்கில் அனபை. இரண்டிடத்தும் உண்டாகில் துருதுரா யோகம். இரண்டு புறத்தும் கிரகங்களில்லையாகில் கேமத்துரும யோகமாம் (எ-று). 3

குறிப்பு:—மதிக்கு நான்கில் செவ்வாய் முதலிய தாரைக் கிரகங்க ளிருப்பின் சுனபா யோகமென்றும் பத்தாமிடத்தி லிருந்தால் அனபா யோகமென்றும் மதிக்கு நான்கிலும் பத்திலும் கிரகங்களிருப்பின் துருதுரா யோகமென்றும் சில ஆசிரியர் கூறுவர் என்பது கருத்தாகக் கொள்க.

### இதுவும் அது

209. இயம்பியதோர் சுனபையவை யேகதிரிங் கிசமாம்
இவையேயாம் அனபையவை துருதுரா யோகம்
வியன்கோள்பிற் பேதமவை யெலாஞ்சட்டித் திரயம்
மேவுசிந்தை தனக்கொத்த படியடைவின் மாற

RangaRakes tamilnavarasam.com

வயங்கொளுங்கோ ளொன்றென்றின் மாறியதுகிற்க
மற்றிரண்டு மூன்றுகா லேந்தலடவு மாங்கே
பயன்பெறவே விகற்பிக்கப் பவுமனுடன் புந்தி
பகர்சீவன் சிதன்சவுரி இவர்க்கடைவே பகரே.

(எ–து) மேற் பாட்டிற் கூறிய சுனபா யோகம் முப்பத்தொன்று (ஏக திரிங்கிசம்). அனபா யோகம் முப்பத் தொன்று. துருதுரா யோகம் நூற்று எண்பது (சட்டித் திரயம்).

பொருந்திய சிந்தைதனக்கு ஒத்தபடி அடைவிலே மாற, முன்பில் ஒரு கிரகங்கொண்டு வழுத்துக. பின்பு, அதை நீக்கி மற்றென்றைக் கொண்டு வழுத்துக. பின்னையும் இப்படித்தானே இந்த யோகங்களை வழுத்தவும்.

முன்பில், ஒரு கிரக விகற்பம் ஐந்து ; பின்பு துவாக் கிரக (இரண்டு கிரக) விகற்பம் பத்து ; திரிக்கிரக விகற்பம் பத்து ; சதுர்க்கிரக விகற்பம் ஐந்து ; பஞ்சக் கிரக விகற்பம் ஒன்று ; ஆக யோகம் முப்பத்தொன்றும்.

அம் முப்பத்தொன்றும் வருமாறு :— ஏக விகற்பம் பஞ்ச யோகம், பவுமன், புதன், சீவன், சுக்கிரன், மந்தன் ஆக ஐந்து.

துவாக் கிரக விகற்பம் தசயோக மாவன :—பவுமன் புதன் ; பவுமன் சீவன் ; பவுமன் சுக்கிரன் ; பவுமன் சவுரி ; புதன் சீவன் ; புதன் சுக்கிரன் ; புதன் சவுரி ; சீவன் சுக்கிரன் ; சீவன் சவுரன் ; சுக்கிரன் சவுரன் என்னும் பத்தாகும்.

திரிக் கிரக விகற்பம் தசயோக மாவன, பவும புத சீவன் ; பவும புத சுக்கிரன் ; பவும புத சவரன் ;



பவும சீவன் சுக்கிரன் ; பவும சீவ சவரன் ; பவும சுக்கிர சவரன் ; புத சீவ சுக்கிரன் ; புத சீவ சவுரன் ; புத சுக்கிர சவுரன் ; சீவ சுக்கிர சவுரன் என்னும் பத்தாகும்.

சதுர்க் கிரக விகற்பம் பஞ்ச யோக மாவன, பவும புத சீவ சுக்கிரன் ; பவும புத சீவ சவுரன் ; பவும சீவ சுக்கிர சவுரன் ; பவும புத சுக்கிர சவுரன் ; புத சீவ சுக்கிர சவுரன் என்னும் ஐந்தாகும்.

பஞ்சக் கிரக விகற்பம் ஏகமாவன, பவும புத சீவ சுக்கிர சவுரன் என்னும் (ஐந்து கோள்களும் சேர்ந்தது) ஒன்றாகும்.

'ஏகத் திரிங்கிசம்' ஆவன, ஆக யோகம் முப்பத் தொன்று சுனபா யோகமாம். 'இவையேயாம் அனபை யவை' என்றது, இந்தப்படியேயாம் அனபா யோகத் துவமும்.

துருதுரா யோகங்கள் நூற்று எண்பது [1](சத அசீத்தி யதிகம்) ஆகும். அவை வருமாறு :—முதற் பிரபேதம் இருபது யோகங்கள் ஆகும். அவை வருமாறு :—

| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனுக்கு 2இல் | பவுமன் | 12இல் | புதன் | 1 |
| ,, ,, | புதன் | ,, | பவுமன் | 2 |
| ,, ,, | பவுமன் | ,, | சீவன் | 3 |
| ,, ,, | சீவன் | ,, | பவுமன் | 4 |
| ,, ,, | பவுமன் | ,, | சுக்கிரன் | 5 |
| ,, ,, | சுக்கிரன் | ,, | பவுமன் | 6 |
| ,, ,, | பவுமன் | ,, | சவுரன் | 7 |
| ,, ,, | சவுரன் | ,, | பவுமன் | 8 |
| ,, ,, | புதன் | ,, | சீவன் | 9 |

[1] குறிப்பு :—" ஏவம் துருதுரா யோக பேதா: சத் மசீத் யதிகம் ப்ரதர்சிதம் " என்பது பட்டோத்பலர் வியாக்கியானம் (சந்திர-4-பிருகத் சாதகம்.)



RangaRakes tamilnavarasam.com

| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனுக்கு | 2இல் சீவன் | 12இல் | புதன் | 10 |
| ,, | ,, புதன் | ,, | சுக்கிரன் | 11 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | புதன் | 12 |
| ,, | ,, புதன் | ,, | சவுரன் | 13 |
| ,, | ,, சவுரன் | ,, | புதன் | 14 |
| ,, | ,, சீவன் | ,, | சுக்கிரன் | 15 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | சீவன் | 16 |
| ,, | ,, சீவன் | ,, | சவுரன் | 17 |
| ,, | ,, சவுரன் | ,, | சீவன் | 18 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | சவுரன் | 19 |
| ,, | ,, சவுரன் | ,, | சுக்கிரன் | 20 |

இனி இரண்டாம் பிரபேதம் சந்திரனுக்கு இரண்டில் ஒரு கிரகமும், பன்னிரண்டில் இரண்டு கிரகமும்; பன்னிரண்டில் ஒரு கிரகமும், இரண்டில் இரண்டு கிரகமும் இருப்பதால் உண்டாகும்; அவை அறுபது யோகமாகும். அவை வருமாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனுக்கு | 2இல் பவுமன் | 12இல் | புத சீவன் | 1 |
| ,, | ,, புத சீவன் | ,, | பவுமன் | 2 |
| ,, | ,, சீவன் | ,, | சுக்ர புதன் | 3 |
| ,, | ,, புத சுக்ரன் | ,, | சீவன் | 4 |
| ,, | ,, பவுமன் | ,, | புத சவுரன் | 5 |
| ,, | ,, புத சவுரன் | ,, | பவுமன் | 6 |
| ,, | ,, பவுமன் | ,, | சீவ சுக்ரன் | 7 |
| ,, | ,, சீவ சுக்ரன் | ,, | பவுமன் | 8 |
| ,, | ,, பவுமன் | ,, | சீவ சவுரன் | 9 |
| ,, | ,, சீவ சவுரன் | ,, | பவுமன் | 10 |
| ,, | ,, பவுமன் | ,, | சுக்ர சவுரன் | 11 |
| ,, | ,, சுக்ர சவுரன் | ,, | பவுமன் | 12 |
| ,, | ,, புதன் | ,, | பவும சீவன் | 13 |
| ,, | ,, பவும சீவன் | ,, | புதன் | 14 |
| ,, | ,, புதன் | ,, | பவும சுக்கிரன் | 15 |
| ,, | ,, பவும சுக்ரன் | ,, | புதன் | 16 |
| ,, | ,, புதன் | ,, | பவும சவுரன் | 17 |
| ,, | ,, பவும சவுரன் | ,, | புதன் | 18 |



| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனுக்கு | 2இல் புதன் | 12இல் | சீவ சுக்கிரன் | 19 |
| ,, | ,, சீவ சுக்கிரன் | ,, | புதன் | 20 |
| ,, | ,, புதன் | ,, | சீவ சவுரன் | 21 |
| ,, | ,, சீவ சவுரன் | ,, | புதன் | 22 |
| ,, | ,, புதன் | ,, | சுக்கிர சவுரன் | 23 |
| ,, | ,, சுக்கிர சவுரன் | ,, | புதன் | 24 |
| ,, | ,, சீவன் | ,, | பவும புதன் | 25 |
| ,, | ,, பவும புதன் | ,, | சீவன் | 26 |
| ,, | ,, சீவன் | ,, | பவும சுக்கிரன் | 27 |
| ,, | ,, பவுமன் சுக்கிரன் | ,, | சீவன் | 28 |
| ,, | ,, சீவன் | ,, | பவும சவுரன் | 29 |
| ,, | ,, பவும சவுரன் | ,, | சீவன் | 30 |
| ,, | ,, சீவன் | ,, | புத சுக்கிரன் | 31 |
| ,, | ,, புத சுக்கிரன் | ,, | சீவன் | 32 |
| ,, | ,, சீவன் | ,, | புத சவுரன் | 33 |
| ,, | ,, புத சவுரன் | ,, | சீவன் | 34 |
| ,, | ,, சீவன் | ,, | சுக்ர சவுரன் | 35 |
| ,, | ,, சுக்ர சவுரன் | ,, | சீவன் | 36 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | பவும புதன் | 37 |
| ,, | ,, பவும புதன் | ,, | சுக்கிரன் | 38 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | பவும சீவன் | 39 |
| ,, | ,, பவும சீவன் | ,, | சுக்கிரன் | 40 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | பவும சவுரன் | 41 |
| ,, | ,, பவும சவுரன் | ,, | சுக்கிரன் | 42 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | புத சீவன் | 43 |
| ,, | ,, புத சீவன் | ,, | சுக்கிரன் | 44 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | புத சவுரன் | 45 |
| ,, | ,, புத சவுரன் | ,, | சுக்கிரன் | 46 |
| ,, | ,, சுக்கிரன் | ,, | சீவ சவுரன் | 47 |
| ,, | ,, சீவ சவுரன் | ,, | சுக்கிரன் | 48 |
| ,, | ,, சவுரன் | ,, | பவும புதன் | 49 |
| ,, | ,, பவும புதன் | ,, | சவுரன் | 50 |
| ,, | ,, சவுரன் | ,, | பவும சீவன் | 51 |
| ,, | ,, பவும சீவன் | ,, | சவுரன் | 52 |
| ,, | ,, சவுரன் | ,, | பவும சுக்கிரன் | 53 |

RangaRakes tamilnavarasam.com

| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனுக்கு 2இல் | பவும சுக்கிரன் | 12இல் | சவுரன் | 54 |
| ,, ,, | சவுரன் | ,, | புத சீவன் | 55 |
| ,, ,, | புத சீவன் | ,, | சவுரன் | 56 |
| ,, ,, | சவுரன் | ,, | புத சுக்கிரன் | 57 |
| ,, ,, | புத சுக்கிரன் | ,, | சவுரன் | 58 |
| ,, ,, | சவுரன் | ,, | சீவ சுக்கிரன் | 59 |
| ,, ,, | சீவ சுக்கிரன் | ,, | சவுரன் | 60 |

இனிமேல் சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் ஒரு கிரகமும், பன்னிரண்டாமிடத்தில் மூன்று கிரகமும் அல்லது பன்னிரண்டாமிடத்தில் ஒரு கிரகமும், இரண்டாமிடத்தில் மூன்று கிரகமும் இருப்பதால் உண்டாகும் மூன்றும் பிரபேதம் நாற்பது யோகம். அவை வருமாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனுக்கு 2இல் | பவுமன் | 12ல் | புத சீவ சுக்கிரன் | 1 |
| ,, ,, | புத சீவ சுக்கிரன் | ,, | பவுமன் | 2 |
| ,, ,, | பவுமன் | ,, | புத சீவ சவுரன் | 3 |
| ,, ,, | புத சீவ சவுரன் | ,, | பவுமன் | 4 |
| ,, ,, | பவுமன் | ,, | புத சுக்ர சவுரன் | 5 |
| ,, ,, | புத சுக்ர சவுரன் | ,, | பவுமன் | 6 |
| ,, ,, | பவுமன் | ,, | சீவ சுக்ர சவுரன் | 7 |
| ,, ,, | சீவ சுக்ர சவுரன் | ,, | பவுமன் | 8 |
| ,, ,, | புதன் | ,, | பவும சீவ சுக்கிரன் | 9 |
| ,, ,, | பவும சீவ சுக்கிரன் | ,, | புதன் | 10 |
| ,, ,, | புதன் | ,, | பவும சீவ சவுரன் | 11 |
| ,, ,, | பவும சீவ சவுரன் | ,, | புதன் | 12 |
| ,, ,, | புதன் | ,, | பவும சுக்கிர சவுரன் | 13 |
| ,, ,, | பவும சுக்கிர சவுரன் | ,, | புதன் | 14 |
| ,, ,, | புதன் | ,, | சீவ சுக்கிர சவுரன் | 15 |
| ,, ,, | சீவ சுக்கிர சவுரன் | ,, | புதன் | 16 |
| ,, ,, | சீவன் | ,, | பவும புத சுக்ரன் | 17 |
| ,, ,, | பவும புத சுக்ரன் | ,, | சீவன் | 18 |
| ,, ,, | சீவன் | ,, | பவும புத சனி | 19 |
| ,, ,, | பவும புத சனி | ,, | சீவன் | 20 |
| ,, ,, | சீவன் | ,, | பவும சுக்கிர சவுரன் | 21 |
| ,, ,, | பவும சுக்கிர சவுரன் | ,, | சீவன் | 22 |



| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனில் 2இல் | சீவன் | 12 இல் | புதன் சுக்கிர சவுரன் | 23 |
| ,, ,, | புதன் சுக்கிர சவுரன் | ,, | சீவன் | 24 |
| ,, ,, | சுக்கிரன் | ,, | பவும புத சீவன் | 25 |
| ,, ,, | பவும புத சீவன் | ,, | சுக்கிரன் | 26 |
| ,, ,, | சுக்கிரன் | ,, | பவும புத சவுரன் | 27 |
| ,, ,, | பவும புத சவுரன் | ,, | சுக்கிரன் | 28 |
| ,, ,, | சுக்கிரன் | ,, | பவும சீவன் சவுரன் | 29 |
| ,, ,, | பவும சீவ சவுரன் | ,, | சுக்கிரன் | 30 |
| ,, ,, | சுக்கிரன் | ,, | புதன் சீவ சவுரன் | 31 |
| ,, ,, | புதன் சீவ சவுரன் | ,, | சுக்கிரன் | 32 |
| ,, ,, | சவுரன் | ,, | பவும புத சீவன் | 33 |
| ,, ,, | பவும புத சீவன் | ,, | சவுரன் | 34 |
| ,, ,, | சவுரன் | ,, | பவும புத சுக்கிரன் | 35 |
| ,, ,, | பவும புத சுக்கிரன் | ,, | சவுரன் | 36 |
| ,, ,, | சவுரன் | ,, | பவும சீவ சுக்கிரன் | 37 |
| ,, ,, | பவும சீவ சுக்கிரன் | ,, | சவுரன் | 38 |
| ,, ,, | சவுரன் | ,, | புத சீவ சுக்கிரன் | 39 |
| ,, ,, | புத சீவ சுக்கிரன் | ,, | சவுரன் | 40 |

இனிமேல் சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் ஒரு கிரகமும், பன்னிரண்டாமிடத்தில் நான்கு கிரகமும்; பன்னிரண்டாமிடத்தில் ஒரு கிரகமும், இரண்டாமிடத்தில் நான்கு கிரகமும் இருப்பதால் உண்டாகும் நான்காம் பிரபேதம் பத்து யோக மாகும். அவை வருமாறு :—

| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரனுக்கு 2இல் | பவுமன் | 12ல் | புத சீவ சுக்கிர சவுரன் | 1 |
| ,, ,, | புத சீவ சுக்கிர சவுரன் | ,, | பவுமன் | 2 |
| ,, ,, | புதன் | ,, | பவும சீவ சுக்கிர சவுரன் | 3 |
| ,, ,, | பவும சீவ சுக்கிர சவுரன் | ,, | புதன் | 4 |
| ,, ,, | சீவன் | ,, | பவும புத சுக்கிர சவுரன் | 5 |
| ,, ,, | பவும புத சுக்கிர சவுரன் | ,, | சீவன் | 6 |
| ,, ,, | சுக்கிரன் | ,, | பவும புத சீவ சவுரன் | 7 |
| ,, ,, | பவும புத சீவ சவுரன் | ,, | சுக்கிரன் | 8 |
| ,, ,, | சவுரன் | ,, | பவும புத சீவ சுக்கிரன் | 9 |
| ,, ,, | பவும புத சீவ சுக்கிரன் | ,, | சவுரன் | 10 |

RangaRakes

tamilnavarasam.com

இனிமேல், சந்திரனுக்கு இரண்டாமிடத்திலும், பன்னிரண்டாமிடத்திலும், இரண்டு இரண்டு கிரகங்கள் இருப்பதால் உண்டாகும் ஐந்தாம் பிரபேதம் முப்பது யோகமாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சந்திரனுக்கு | 2இல் | பவும புதன் | 12ல் | சீவ சுக்கிரன் | 1 |
| ,, | ,, | சீவ சுக்கிரன் | ,, | பவும புதன் | 2 |
| ,, | ,, | பவும புதன் | ,, | சீவ சவுரன் | 3 |
| ,, | ,, | சீவ சவுரன் | ,, | பவும புதன் | 4 |
| ,, | ,, | பவும புதன் | ,, | சுக்கிர சவுரன் | 5 |
| ,, | ,, | சுக்கிர சவுரன் | ,, | பவும புதன் | 6 |
| ,, | ,, | பவும சீவன் | ,, | சுக்கிர சவுரன் | 7 |
| ,, | ,, | சுக்கிர புதன் | ,, | பவும சீவன் | 8 |
| ,, | ,, | பவும சீவன் | ,, | புத சவுரன் | 9 |
| ,, | ,, | புத சவுரன் | ,, | பவும சீவன் | 10 |
| ,, | ,, | பவும சீவன் | ,, | சுக்கிர சவுரன் | 11 |
| ,, | ,, | சுக்கிர சவுரன் | ,, | பவும சீவன் | 12 |
| ,, | ,, | பவும சுக்கிரன் | ,, | புத சீவன் | 13 |
| ,, | ,, | புத சீவன் | ,, | பவும சுக்கிரன் | 14 |
| ,, | ,, | பவும சுக்கிரன் | ,, | புத சவுரன் | 15 |
| ,, | ,, | புத சவுரன் | ,, | பவும சுக்கிரன் | 16 |
| ,, | ,, | பவும சுக்கிரன் | ,, | சீவ சவுரன் | 17 |
| ,, | ,, | சீவ சவுரன் | ,, | பவும சுக்கிரன் | 18 |
| ,, | ,, | புத சீவன் | ,, | பவும சவுரன் | 19 |
| ,, | ,, | பவும சவுரன் | ,, | புத சீவன் | 20 |
| ,, | ,, | பவும சவுரன் | ,, | புத சுக்கிரன் | 21 |
| ,, | ,, | புத சுக்கிரன் | ,, | பவும சவுரன் | 22 |
| ,, | ,, | பவும சவுரன் | ,, | சீவ சுக்கிரன் | 23 |
| ,, | ,, | சீவ சுக்கிரன் | ,, | பவும சனி | 24 |
| ,, | ,, | புத சீவன் | ,, | சுக்கிரன் சவுரன் | 25 |
| ,, | ,, | சுக்கிரன் சவுரன் | ,, | புத சீவன் | 26 |
| ,, | ,, | புத சுக்கிரன் | ,, | புதன் சவுரன் | 27 |
| ,, | ,, | சீவ சவுரன் | ,, | புத சுக்கிரன் | 28 |
| ,, | ,, | சீவ சுக்கிரன் | ,, | புத சவுரன் | 29 |
| ,, | ,, | புத சவுரன் | ,, | சீவ சுக்கிரன் | 30 |



இனிமேல், சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் இரண்டு கிரகங்களும், பன்னிரண்டாமிடத்தில் மூன்று கிரகங்களும் அல்லது பன்னிரண்டாமிடத்தில் இரண்டு கிரகங்களும், இரண்டாமிடத்தில் மூன்று கிரகங்களும் இருப்பதால் உண்டாகும் ஆறாம் பிரபேதம் இருபது யோகமாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சந்திரனுக்கு | 2இல் | பவும புதன் | 12ல் | சீவ சுக்கிர சவுரன் | 1 |
| ,, | ,, | சீவ சுக்கிர சவுரன் | ,, | பவும புதன் | 2 |
| ,, | ,, | பவும சீவன் | ,, | புத சுக்கிர சவுரன் | 3 |
| ,, | ,, | புத சுக்கிர சவுரன் | ,, | பவும சீவன் | 4 |
| ,, | ,, | பவும சுக்கிரன் | ,, | புத சீவ சவுரன் | 5 |
| ,, | ,, | புத சீவ சவுரன் | ,, | பவும சுக்கிரன் | 6 |
| ,, | ,, | பவும சவுரன் | ,, | புத சீவ சுக்கிரன் | 7 |
| ,, | ,, | புத சீவ சுக்கிரன் | ,, | பவும சவுரன் | 8 |
| ,, | ,, | புத சீவன் | ,, | பவும சுக்கிர சவுரன் | 9 |
| ,, | ,, | பவும சுக்கிர சவுரன் | ,, | புத சீவன் | 10 |
| ,, | ,, | புத சுக்கிரன் | ,, | பவும சீவ சவுரன் | 11 |
| ,, | ,, | பவும சீவ சவுரன் | ,, | புதன் சுக்கிரன் | 12 |
| ,, | ,, | புத சவுரன் | ,, | பவும சீவ சுக்கிரன் | 13 |
| ,, | ,, | பவும சீவ சுக்கிரன் | ,, | புத சவுரன் | 14 |
| ,, | ,, | சீவ சுக்கிரன் | ,, | பவும புத சவுரன் | 15 |
| ,, | ,, | பவும புத சவுரன் | ,, | சீவ சுக்கிரன் | 16 |
| ,, | ,, | சீவ சவுரன் | ,, | பவும புத சுக்கிரன் | 17 |
| ,, | ,, | பவும புத சுக்கிரன் | ,, | சீவ சவுரன் | 18 |
| ,, | ,, | சுக்கிர சவுரன் | ,, | பவும புத சீவன் | 19 |
| ,, | ,, | பவும புத சீவன் | ,, | சுக்கிர சவுரன் | 20 |

மேற் காட்டியவாறு துருதுரா யோகங்கள் :—

| | |
|---|---|
| முதற் பிரபேதம் | 20 |
| இரண்டாம் பிரபேதம் | 60 |
| மூன்றாம் பிரபேதம் | 40 |
| நான்காம் பிரபேதம் | 10 |
| ஐந்தாம் பிரபேதம் | 30 |
| ஆறாம் பிரபேதம் | 20 |
| ஆகத்தொகை | 180 |

RangaRakes tamilnavarasam.com

சுனபா, அனபா யோக பலன்

210. மன்னுஞ் சுனபை யதிகதனம்
மன்னர் சமன்பொன் புகழ்புத்தி
துன்னு மனபை பிரபுடிகன்
சுத்த சீலன் நோயுடையன்
உன்னுங் கீர்த்தி விடயசுக
முடைய ளுகும் பரிமளமே
மன்னுங் கலவை யலங்காரன்
அதிக தீர்க்க மனமுடையோன்.

(எ-து) சுனபை யோகத்திற் பிறந்தவன் பலன் :- அதிக திரவிய முடையவன் ; இராசாக்களுக்குச் சமனு யிருக்கப்பட்ட வாழ்வுடையன் ; சொர்ணம் பிரசித்த புத்தி யுடையவனும் என்பது.

அனபை யோகத்திற் பிறந்தவன் பலன் :—பிரபுடீகன் ; சுத்தசீலமுடையவன் ; நோயுடையன் ; பிரசித்த கீர்த்தி மான் ; விடய சுகமுடையவன் ; பரிமள கந்தாதிப் பிரியன் ; அலங்காரப் பிரியன் ; மனத்தீர்க்க முடையனும் (எ-று). 5

குறிப்பு :—" மதி நின்ற இராசிக்கு முன் இராசியில் நற் கோள் நிற்கில் அனபா யோகமாம். இதற்குப் பலன் :—பூர்வ திரவியமில்லாமல் தன் வாய்வலுவால் பொருள்தேடிக் கொள்வன் தைரியவான் ; தர்மி ; அரசர்கட்குச் சமானமானவன் ; கல்வி மான் ; வார்த்தை பேச வல்லவன் ; புண்ணியவானு யிருப்பன். பூர்வபட்சத்து மதியாகில் உத்தமபலன். அமரபட்சத்து மதியாகில் மத்திபபலன். மதிக்குப்பின் இராசியில் சுபக்கிரகம் நிற்கில் சுனபா யோகமாம்; இதற்குப் பலன்:—சற்குணன் ; ஒழுக்கமுடையவன் ; அநேக சாத்திரங்களில் வல்லவன் ; சௌரியவான் ; பெண்கள் வார்த்தையைக் கேட்பவன் " என்று வீமேசுர உள்ளமுடையான் 310 ஆம் பாட்டின் உரை கூறும்.

பலதீபிகை, சாராவளி, வராகர் ஓரை முதலிய நூல்கள் திங்களுக்கு இரண்டு பன்னிரண்டில் சூரியன் நீங்கலான தாராக்



கிரகங்கள் நின்றால் முறையே சுனபா யோகமென்றும் அனபா யோக மென்றும் பெயர் பெறும் என்று கூறுகின்றன. ஆனால் வீமேசுரன் உள்ளமுடையானே அவ்வாறு சுபர் நிற்க வேண்டும் என்கின்றது.

சந்திரன் பலமில்லாதவனு யிருப்பின் சுனபா யோகம் முதலியன நற்பலனைத் தரா தென்பது ஓரா சாரத்தின் கருத்து.

துருதுரா யோக கேமத் துருமயோக பலன்.

211. விளம்புந் துருது ராயோகம்
மேவுற்பன்ன யோக சுகன்
துளங்கும் பொன்வா கனமலிந்தோன்
சொல்லுந் தியாகி யடிமையுளன்
வளந்த கேமத் துருமத்தில்
மன்னு யிடினு மலிதுன்பன்
விளிந்த நீசன் கிசியனுமாம்
மிகுந்த கலாபிபிரேசியனே.

(எ-து) துருதுரா யோகத்திற் பிறந்தவன் பலன் :- போக சுக வுற்பன்னன் ; தன வாகன பூரணன் ; தியாகி ; பிருத்ய சன முடையவன் என்பது.

கேமத்துரும யோகத்திற் பிறந்தவன் பலன் :— இராச வங்கிசத்திற் பிறக்கினும் அநேக துக்க முடையவன் ; நீசன் ; நிசியன் ; கலாபி ; பிரேசியனும் (எ-று). 6

குறிப்பு :- துருதுரா யோக பலனை வீமேசர் உள்ள முடையான்

" நடக்குஞ் சந்திரன் முன்பின்னு நல்லகோள்
நயந்து நிற்கிற் றுருதுரா யோகமாம்
படைக்கு வீரன் பரிவார காவலன்
பரிக லங்கன்று காலி படைத்தவன் " (311) என்று

கூறுகிறது.



RangaRakes tamilnavarasam.com

கேமத்துரும யோக பலனை, மன்னர் குடியிற் பிறந்திருந் தாலும் மனைவி இன்பம் இல்லாதவனுகவும் நல்ல உணவும் உடையும் இல்லாதவனுகவும் உண்மையான நண்பரில்லாதவ னுகவும் செல்வமிருந்தும் வறுமையுற்றுப் பிறரிடம் இரக்கின்றவனு கவும் நோய் உள்ளவனுகவும் எக்காலமும் துக்க முள்ளவனுகவும் பாவம் செய்பவனுகவும் குடிக்குப் பழியான செயல்களைச் செய் பவனுகவும் தீய தன்மையை யுடையவனும்ப் பலரையும் பகைத்துக் கொள்ளுபவனுகவு மிருப்பன் என்று சாரவளி கூறுகிறது.

### யோகாதிபதி பலன்

212. சேயிறை யோகன் தீர்க்கன்
 சேவகன் வலியன் செல்வன்
நேயன்மால் கிளையோன் வித்தை
 நிபுணனல் வசனி யொன்னேல்
தூயபொன் சுகவா னீவோன்
 திருபர்பூ சிதனுஞ் சுங்கன்
மேயுறு நாரி காமி
 விடயம்வேன் டுவன்பொன் னுள்ளோன்.

(எ-து) யோகாதிபதி செவ்வாயாகில் தீர்க்கன்; இரணசேவன்; பெலவான்; செல்வமுடையவன்.

புதன் யோகாதிபதி யாகில் பந்துசனக் கிளையுடைய வன்; வித்தையில் நிபுணன்; விதர்த்தன்; இனிய வசனன்.

வியாழன் யோகாதிபனுகில் தனவான்; சுகமுடைய வன்; தருமமுடையவன்; இராச பூசிதன்.

சுக்கிரன் யோகாதிபனுகில் நல்ல பெண்களுடைய வன்; பெண்களிடத்திற் சுரத விலைப் பிரியன்; தன முடையன் (எ-று). 7

குறிப்பு:—இப் பாட்டு சுனபை முதலிய யோகங்கட்கு யோகாதிபதி ஆகுங்கோட்களுக்குப் பொதுவாகப் பலன்



கூறுகின்றது. சாராவளி மூன்று யோகங்கட்கும் யோகாதிபர் ஆகுபவர்கட்கு வெவ்வேருய்ப் பலன் கூறுகின்றது. அதனை அந் நூல் பதின்மூன்றும் அத்தியாயத்துட் காண்க.

213. மந்தனேற் பிறர்பொன் ஞரி
 மனையுளோன் கனோசன் கன்மி
சந்திரன் றிரிசி யார்த்தம்
 பகல்மிடி தனம்மற் ருேரை
அந்தியிற் பிறந்த வர்க்கிந்
 ததிரிசி யார்த்த மல்கல்
வந்துறுந் திருசி யார்த்தம்
 வாய்த்திடுஞ் செல்வ னுமே.

(எ-து) யோகாதிபதி சனியாகில் பிறருடைய திரவியங்களையும் பெண்களையும் கிரகங்களையும் அனுப விப்பன்; அநேக சனக் கூட்ட முடையவன்; அநேக கர்மங்களையு முடைய னென்பது.

பகலிற் பிறந்தவனுக்குச் சந்திரன் திருசி யார்த்தத்தில் நிற்கில் தரித்திர முடையவன். அதிரிசி யார்த்தத்தில் நிற்கிற் செல்வமுடையவன்.

இரவிற் பிறந்தவனுக்குச் சந்திரன் அதிரிசி யார்த்தத்தில் நிற்கில் தாரித்திர முடையவன்; திரிசி யார்த்தத்தில் நிற்கிற் செல்வ முடையனும் (எ-று). 8

குறிப்பு:—அதிருசியம் என்பது இலக்கினத்தில் சென்றது போகச் செல்ல வேண்டிய பாகை கலைகளி லிருந்து 180 பாகைவரை யுள்ள பாதிச் சக்கரமாகும். திருசியம் என்பது ஏழாவது பாவத்தில் இலக்கினத்திற் செல்ல வேண்டிய பாகை கலை அளவிலிருந்து தொடங்கி நிகழும் அடுத்த 180 பாகை வரையுள்ள பாதிச் சக்கர மாகும். எனவே இராசிச் சக்கரம் அதிருசியார்த்த மென்றும் திருசியார்த்த மென்றும் இரண்டாகப் பிரிக்கப் பட்டுப் பலன் கூறப்படுகிறது.

RangaRakes tamilnavarasam.com

வான மண்டல வட்டம் 360 பாகையாகும்; அதிற் பாதி பாகம் கண்ணுக்குத் தெரியும்; அது திரிசிய பாகம். மற்றொரு பாதி கண்ணுக்குப் புலப்படாது; அது அதிரிசிய பாகமாகும். திரிசியம் அறியப்படுவது. அதிரிசியம்—அறியப்படாதது.

214. தோற்றத்துக் குபச யத்திற்
சுபக்கோட்கள் தனவா னாகும்
சாற்றிய பரிசு தானே
சசிக்குமா மிருகோ ளாகின்
ஆற்றிய சமான மென்றேல்
அற்பமா மிவைக ளின்றேல்
ஏற்றுறு மிலம்பா டேனை
யோகங்க ளுறினு மெய்தும்.

(எ-து) இலக்கினத்திற்கு உபசயத்தானத்தில் சுபக்கிரகமெல்லாம் நிற்கில் தனவானும். சந்திரனுக்கு உபசயத்தானத்திற் சுபக்கிரகமெல்லாம் நிற்கிலும் தனவானும்.

இலக்கினத்திற்காதல் சந்திரனுக்காதல் உபசயத்தில் இரண்டு சுபக்கிரகம் நிற்கில் மத்திம தனவானும். ஒரு சுபக்கிரகம் நிற்கில் அற்ப தனவான்.

இலக்கினத்திற்கும் சந்திரனுக்கும் உபசயத்தில் ஒரு கிரகமும் இல்லையாகில் தாரித்திரிய முடையவன், மற்ற யோகங்கள் உண்டாகியிருக்கினும் இந்த யோகம் அனுபவிக்கும் (எ-று). 9

குறிப்பு:—இலக்கினத்திற்கு உபசய இராசிகளாகிய மூன்று, ஆறு, பத்து, பதினொன்றில் புதன், குரு, சுக்கிரன் என்னும் நற்கோள்களெல்லாம் நிற்பின் அதனால் பெரும்பொருள் உண்டாகும். இரண்டு நற்கோள்கள் மட்டும் அவ் விடத்திலிருப்பின் சமமான பொருள் கிட்டும். ஒரு நற்கோள் மட்டும் அவ் விடத்திலிருப்பின் குறைந்த பொருள் கிட்டும். இதைப் போலவே சந்திரனுக்கும் அறிந்து கொள்க.



இலக்கின உபசய நற்கோள்கள் உயர்ந்த பலனைத் தரும். சந்திர இலக்கின உபசய நற்கோள்கள் மேலதைவிடச் சிறிது குறைந்த பலனையே தரும்.

இலக்கினத்திற்கும் சந்திரனுக்கும் உபசயத்தில் நற்கோளே இல்லாமலிருப்பின் அவன் வறுமையுடையவனாவன். கேமத்துருமம் முதலிய தீயயோகங்கள் உண்டாகி யிருக்கினும் உபசயத்திலிருக்கும் நற்கோள்கள் நற்பலனைத் தருகின்றது என்று சாராவளி கூறுகிறது (அத்-13-சு-32).

பதின்மூன்றாவது
சந்திர யோக அத்தியாயம் முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com

## பதினைன்காவது

## [1] துவாக் கிரக யோக அத்தியாயம்.

### (துவாக் கிரகம்-இரண்டு கோள்கள்)

சூரியனுடன் திங்கள் செவ்வாய் புதன் குரு வெள்ளி
சனி கூடிய யோகம்.

215. கதிருட னிந்து சேரில்
கற்பணி செயுஞ்சேய் பாவி
புதன்சுகி நிபுணன் கீர்த்தி
பொன்பிறர் கருமன் கோபி
சிதனுறி லாங்கன் வாளாற்
சேர்ந்திடுந் தனமி லாபம்
விதிசனி தாது தன்னால்
விருக்கத்தாற் றொழிலே மேவும்.

(எ-து) சூரியனுடன் சந்திரன் கூடில் விக்கிரகங் களும் இயந்திரங்களும் கற்பணிகளும் செய்வன். சூரிய னுடன் செவ்வாய் கூடில் பாவி. சூரியனுடன் புதன் கூடில் நிபுணன் சுகம் புத்தி கீர்த்தியுடையன். சூரிய னுடன் வியாழன் கூடில் பிறர்காரியங்களைச் செய்வன், கோபி. சூரியனுடன் சுக்கிரன் கூடில் விளையாட்டினு லும், ஆயுத முதலானவையாலும் லபிக்கப்பட்ட (கிடைக் கப்பட்ட) தன முடையன். சூரியனுடன் சனி கூடில் தாம்பிரம் முதலான தாதுக்களினாலும் விருட்ச பல மூல வுபாதிகளாலும் கிரையம் விக்கிரைய முடையவனும் (எ-று). 1

குறிப்பு :—பலதீபிகையிற் கூறப்பட்டுள்ள துவிக்கிரக யோக பலனும், வராகர் ஓரையிற் கூறப்பட்டுள்ள துவிக்கிரக

[1] குறிப்பு :—' த்வி க்ரஹ யோகாத்யாயம் ' என்று கூறும் பிருகத் சாதகம்.



யோக பலனும் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளன. சாராவளியில் வேறு விதமாகப் பலன்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் கீழே காண்க.

" ஞாயிறும் திங்களும் கூடிய இருகோள் யோகத்திற் பிறந்தவன் பெண் வழிச் சேர்பவனும், அழகில்லாதவனும் வஞ்சகச் செயல்களைச் செய்பவனும், மிக்க பொருள் உள்ளவ னும் கள் முதலிய மயக்கந்தரும் பொருள்களை விற்பவனும் காரியம் செய்வதில் ஆற்றலுள்ளவனு மிருப்பன். (அத்-15,சு-2)

ஞாயிறும் செவ்வாயும் கூடிய இருகோள் யோகத்திற் பிறந்தவன் ஆண்மை உள்ளவனாகவும், ஆற்றல் வாய்ந்த செயல்களைச் செய்பவனாகவும், அறிவின்றி வலிவும் வீரமும் உடை யவனாகவும், பொய்ம்மொழியும், பாவ எண்ணமும் உடையவ னாகவும், தீய செயல்களில் விருப்பமுடையவனாகவு மிருப்பன் (அத்.-15-சு.-3)

ஞாயிறும் புதனும் கூடிய இருகோள் யோகத்திற் பிறந்தவன் அடிமை வாழ்வு உள்ளவனாகவும், நிலையில்லாப் பொருள்களை உடையவனாகவும், பிறர் விரும்பும்படிப் பேசுபவ னாகவும், புகழை எடுத்துக் கொள்பவனாகவும், மதிக்கப்படுபவ னாகவும், அரசர்க்கும், நன்மக்களுக்கும் விருப்பமுள்ளவனாகவும், ஆற்றல், அழகு, கல்வி இவற்றை உடையவனாகவும் இருப்பன். (அத்.-15-சு.-4)

ஞாயிறும் வியாழமும் கூடிய இரு கோள் யோகத்திற் பிறந்தவன் மிக்க அறங்களைச் செய்பவனாகவும், அரசனுக்கு அமைச்சனாகவும், நிறைவு உள்ளவனாகவும், உறவினருடன் நட் பாயிருந்து அவரால் கிடைக்கப் பெறும் பொருளை உடைய வனாகவும், ஆசிரியன் என்ற பெயரைப் பெறுபவனாகவும் இருப் பன் (அத்.-15-சு.-5).

ஞாயிறும் வெள்ளியும் கூடிய இருகோள் யோகத்திற் பிறந்தவன் படைக்கலங்களைச் செலுத்தும் ஆற்றலுள்ளவனாகவும், வலிமையுள்ளவனாகவும், முதுமையில் கண்ணொளி குறையப் பெற்றவனாகவும், போர்ப் பயிற்சியிற் சிறந்தவனாகவும், பெண்கள் கூட்டத்தாற்கிட்டும் பொருளுள்ளவனாகவு மிருப்பன் (அத்-15-சு-6)

RangaRakes

tamilnavarasam.com

ஞாயிறும் காரியும் கூடிய இருகோள் யோகத்திற் பிறந்தவன் பொன் வெள்ளி முதலான தாதுக்கள் பற்றிய செயலில் ஆற்றலுள்ளவனாகவும், அறத் தன்மை உடையவனாகவும், தன் தொழிலில் விருப்பமுள்ளவனாகவும், மனைவி புதல்வர் இவர்கள் பீடையுறுங் காலத்தே தானும் பீடையுறுபவனாகவும், தன் மரபிற் கேற்ற தன்மைகளைப் பெறுபவனாகவும், சிறிது நல்லொழுக்க முள்ளவனாகவுமிருப்பன். (அத்.-15-சு.-7)

திங்களுடன் செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன்
சனி கூடிய இருகோள் யோகம்.

216. மதியொடு செவ்வாய் மாடை
மதுக்குடந் தாய்பாற் றீயன்
புதனினி துரைக்குஞ் செல்வன்
புகழ்த்த நிபுண னென்ப
வதிகுரு மரபின் மேலோன்
வரதேசன் பலவான் புத்தி
சிதன்றுகில் கிரியன் கோணன்
மறுமண முடையான் சேயோன்.

(எ-து) சந்திரனுடன் செவ்வாய் கூடில் திரவியம் மதுக்குட முடையவன், தாய்க்குப் பொல்லாப்புச் செய்வன். சந்திரனுடன் புதன் கூடில் இனிய வசன முடையவன் ; செல்வமுடையவன் ; கீர்த்திமான் ; அத்தத்தில் (பொருளில்) சூட்ச திருட்டி யுடையன். சந்திரனுடன் வியாழன் கூடில் குலமுகியன் (குலமுக்கியன்) ; தனதன்னிய முடையவன் ; விக்கிரம பராக்கிரமன் ; சஞ்சல புத்தியுடையவன். சந்திரனுடன் சுக்கிரன் கூடில் வத்திரங்கள் கிரியன் என்றமையால் (கிரியன்—செய்பவன்) உரோம கம்பளாதிகள் நெய்கை துன்னல் பூபில ? (சாயம்) தோய்த்துப் பிழிதல் இவற்றிற் குசலனுமிருப்பன் ; விதர்த்தன். சந்திரனுடன் சனி கூடில் இரண்டாவது கல்யாண முடையவன் புத்திரனும் (எ-று).





குறிப்பு :—திங்கள் செவ்வாயுடன் கூடின் குழுவினரிடை வாழ்பவனாகவும், பெண்களையும், குடம் முதலான பொருள்களையும் விற்பவனாகவும், தாய்க்கு நன்மை செய்யாதவனாகவு மிருப்பன் என்று பலதீபிகை (அத்-18-சு-2) பகர்கிறது. சாராவளி சூரனாகவும், போரில் பேராற்றல் வாய்ந்தவனாகவும், மற்போரில் வல்லவனாகவும், இரத்தத்தைப் பற்றிய நோயால் பீடிக்கப்பட்ட உடம்பையுடையவனாகவும், மண், தோல், தாதுப்பொருள்கள் இவற்றால் அழகமைந்த பொருள்களைச் செய்பவனாகவும், மாரணம் உச்சாடனம் முதலிய மந்திர சித்தியில் வல்லவனாகவு மிருப்பன் என்று கூறுகிறது. (அத்-15-சு.8).

திங்கள் புதனொடு கூடியிருப்பின் எல்லோர்க்கும் தெரியும்படியான வாழுமிடத்தை உடையவனாகவும், நன்மையும், பலவகைச் செல்வமும், யோகமும், உள்ளவனாகவு மிருப்பன் (அத்.-18 சு.-2) என்று பலதீபிகை கூறுகிறது. சாராவளி காவியங்களில் கதைகளில் வல்லவனாகவும், பொருளுடையவனாகவும், பெண்களுக்கு இசைந்தவனாகவும், வடிவழகுடையவனாகவும், விளங்கும் முகத்தையுடையவனாகவும், அறச்செயல்களில் விருப்பமுள்ளவனாகவும், சிறந்த பண்புடையவனாகவு மிருப்பான் என்று கூறுகிறது (அத்-15-சு-9).

திங்கள் வியாழனுடன் கூடில் ஆற்றல் வாய்ந்தவனாகவும், குலத்திற் சிறந்தவனாகவும், உறுதியான சித்த முடையவனாகவும், பொருளுடையவனாகவுமிருப்பான் என்று பலதீபிகை கூறுகிறது (அத்-18-சு2). சாராவளி உறுதியான உறவினரை உடையவனாகவும், தன் கேளிர்க்கு உதவியும் சிறப்பும் செய்பவனாகவும், பொருளுடையவனாகவும், சிறிது நல்லொழுக்கம் உள்ளவனாகவும், தெய்வம் பார்ப்பனர் இவர்தம் விருப்பத்தை அறிந்து நடப்பவனாகவும் இருப்பான் என்று கூறுகிறது (அத்.-15-சு-10).

திங்களும் வெள்ளியும் சேர்ந்திருப்பின் நல்ல மலர் மாலைகள் வெண்மையான ஆடைகள் இவற்றை விரும்பி அணிபவனாகவும், விதிகளையும் செயல்களையும் அறிபவனாகவும், பாக்களில் விருப்பமுள்ளவனாகவும், மிகவும் சோம்பலுடையவனாகவும், விலைக்குவாங்குதல் விற்றல் இவற்றில் திறமையுள்ளவனாகவு மிருப்பான் என்று சாராவளி கூறுகிறது (அத்.-15-சு-11).

---

குறிப்பு :—"கூட ஸ்திரீயாஸவ கும்ப பண்யமசிவம்" என்னும் பகுதிக்கு "கூடபண்ய த்ரவ்யாணாம் ப்ரதிரூப விக்ரயஸக்தம், ஸத்ரீபண்யம் நாரீவிக்ரயிகம், ஆஸவபண்யம் பாந விக்ரயிகம். கும்ப பண்யம் கடவிக்ரயிகம்" என்பர் பட்டோத்பலர் (ஷத் விக்ரக-2-பிருகத்ஜாதகம்).



RangaRakes tamilnavarasam.com

திங்களும் காரியும் சேர்ந்திருப்பின் இரண்டாம் முறை திருமணம் செய்துகொண்ட பெண்ணிற்குப் பிறந்த புதல்வனு மிருப்பன் என்று பலதீபிகை கூறுகிறது (அத்-15-சு-2). சாராவளி முதுமை வாய்ந்த மனைவியை உடையவனாகவும், யானை குதிரை முதலான ஊர்திகளைக் காப்பவனாகவும், தீய தன்மையுள்ளவனாகவும், எல்லோர்க்கும் உரியவனாகவும், பொருளற்றவனாகவும், கள்ளக் கணவனின் புதல்வனாகவு மிருப்பன் என்று கூறுகிறது (அத்.-15-சு.-12).

217. சேயுடன் புதன்மூ லாதி
வாணிகன் மல்லன் செல்வன்
மேயபொன் கலைஞன் வேதன்
வேந்தனே நகர சாமி
தூயவான் புகரா வுள்ளோன்
சூதுமல் லயற்பெண் டோய்வன்
காயுஞ்சுன் றுன்ப முள்ளோன்
கழறுநிந் திகன்பொய் சொல்வோன்.

(எ-து) செவ்வாயுடன் புதன் கூடில் மூல மேதுவாகும் புட்பமும், சாரமும் உடையவன் ; வணிகன்; மல்லன் செல்வமுடையவன். செவ்வாயுடன் வியாழன் கூடில் பதினாலு கலையிலும் வல்லவேதியன் ; பூபதி ; கிராமாதிபத்தியன். செவ்வாயுடன் சுக்கிரன் கூடில் பசுவுடையன் ; சூது விளையாடுவான் ; மல்லன் ; பரஸ்திரீ சஞ்சாரஞ் செய்வான். செவ்வாயுடன் சனி கூடில் கிலேசி ; சர்வ நிந்திகன் ; பொய்யனும் (எ-று). 3

குறிப்பு :—பாட்டில் 'மூலாதி' என்றதற்குக் கிழங்கு முதலாய மருந்துவகைகளாற் றொழில் புரிந்து வாழ்வான் என்றும் பொருள் கூறலாம்.

செவ்வாயும் புதனும் சேர்ந்திருப்பின் பெண்களால் விரும்பப்பெறுதலனாகவும், ஆனால் தீயபெண்களாலும், கைம் பெண்களாலும், விரும்பப்பெற்றவனாகவும், சிறிது பொருள் மட்டும் உள்ளவனாகவும், பொன், இரும்பு முதலான தாதுப் பொருள்களைக் கொண்டு தொழில் புரிபவனாகவும், மருந்து செய்து விற்பவனாகவு மிருப்பான் என்று சாராவளி (அத்-15-சு-13) கூறுகிறது.



செவ்வாயும் வியாழனும் சேர்ந்திருப்பின் சிற்பக் கலையிலும், வேதம் முதலான சாத்திரங்களிலும், அறிவுள்ளவனாகவும், மறவாமலிருக்கும் புத்தியுள்ளவனாகவும், சொல்லாற்றல் உள்ளவனாகவும், படைக்கலங்களைச் செலுத்துவதில் விருப்பமுடையவனாகவும், தலைவனாகவு மிருப்பன் என்று சாராவளி (அத்-15-சு-13) கூறுகிறது.

செவ்வாயும் வெள்ளியும் சேர்ந்திருப்பின் வணங்கத் தக்கவனாகவும், குழுவின் தலைவனாகவும், கணித நூல்களை அறிபவனாகவும், தீய பண்புள்ளவனாகவும், சூதாடுபவனாகவும், பொய் கூறுபவனாகவும், வஞ்சகமும், தந்திரமும் உள்ளவனாகவு மிருப்பான் என்று சாராவளி கூறும் (அத்-15-சு-15).

செவ்வாயும் சனியும் சேர்ந்திருப்பின் தாதுப் பொருளைக் கொண்டு செய்யுந் தொழிலிலும், சால வித்தையிலும், களவு செய்யுந் தொழிலிலும் ஆற்றல் வாய்ந்தவனு மிருப்பான். மிகவும் வஞ்சகனாகவும், அறமில்லாதவனாகவும், நஞ்சு படைக்கலம் இவற்றைக் கொண்டு செய்யுந் தொழிலால் பொருட்பேறுள்ளவனாகவும், கலகம் செய்வதில் விருப்பம் உள்ளவனாகவு மிருப்பான் என்று சாராவளி கூறும் (அத்.-15-சு.-16).

218. புந்திபொன் னுறில ரங்கன்
நடன்கீதன் புகரின் சொல்லன்
கந்தவான் கனேசன் மந்தன்
நடலையன் குருசொற் றேடன்
தந்தபொன் புகரேல் வித்தை
தனந்தாரம் கோணன் குசன்
அந்தமி லுரோம சன்சோ
றடுமுடற் சமைப்போ னாகும்.

(எ-து) புதனுடன் வியாழன் கூடில் அரங்கன் ; திருத்த கீதப் பிரியன். புதனுடன் சுக்கிரன் கூடில் இனிய வசனன் ; பூமிக்குஞ் சனங்களுக்கும் அதிபன். புதனுடன் சனி கூடில் வஞ்சகன்; குருவசன தூடணன்,

வியாழனுடன் சுக்கிரன் கூடில் வித்தை அர்த்தம் உள்ளவன் ; நல்ல தாரம் உண்டாம்.

RangaRakes tamilnavarasam.com

வியாழனுடன் சனி கூடில் தாசன் ; தாசனாவது. ஒருவன் ஏவிய சொற்கேட்டு நடக்கிறவன். உரோமசன் ; உரோமசனாவது மயிர்களை கிறவன் ; சோறடுபவன் ; சோறு அடுபவனாவது, சோறு சமைக்கிறவன். உடற் சமைக்கிறவன் ; உடற் சமைக்கிறவனாவது ஒருவன் சரீரத்தை அலங்கரிக்கப் பட்டவனும் (எ–று). 4

குறிப்பு :—புதனும் வியாழனும் கூடியிருப்பின் நடித்தல் இசைபாடுதல் முதலிய நாட்டியச் செய்கையில் வல்லவனாகவும் அறிவுள்ளவனாகவும் இசையிலக்கண நூலில் வல்லவனாகவும் இன்ப முள்ளவனாகவு மிருப்பன் என்று சாராவளி (அத்-15–சு–17) கூறுகின்றது.

புதனும் வெள்ளியும் கூடி யிருப்பின் மிகவும் பொருளுள்ளவனாகவும், நீதி நூல்களை அறிந்தவனாகவும், பலவகை ஓவிய வேலைகளைச் செய்கின்றவனாகவும், வேதத்தை உணர்ந்தவனாகவும், இன் சொல் உள்ளவனாகவும், இசையறிவுள்ளவனாகவும், நகைச்சுவையில் விருப்ப முள்ளவனாகவும், நறுமணப் பொருளிலும் மலர் மாலைகளிலும் விருப்ப முள்ளவனாகவு மிருப்பன் என்று சாராவளி (அத்.-15-சு -18) கூறுகின்றது.

புதனும் சனியும் கூடியிருப்பின் பண்புள்ளவனாகவும், இடம்பம் உடையவனாகவும், மிகவும் ஏமாற்றும் இயல்புள்ளவனாகவும், சொன்னது சொன்னவாறு பலிக்கின்ற பாட்டினைப் பாடுபவனாகவும், சாத்திர விதி உலகியல் முறை இவற்றைக் கடந்து நடப்பவனாகவும், வல்லவனாகவும், நல்ல சொற்களைக் கூறுபவனாகவு மிருப்பான் என்று சாராவளி (அத்.-15-சு.-19) கூறுகிறது.

வியாழனும் வெள்ளியும் சேர்ந்திருப்பின் கல்வியால் சொற்போர் செய்பவனாகவும், உயர்ந்த அறங்களைக் காப்பாற்றுபவனாகவும், முறைமையுடன் கூடினவனாகவும், சிறந்த மனைவியுடனும், பொருளுடனும், நல்லியல் போடும் கொடைக் குணத்தோடு கூடியவனாகவு மிருப்பான் (அத்.-15-சு.-20) என்று சாராவளி கூறுகிறது.

வியாழனும் காரியும் கூடியிருப்பின் அஞ்சத்தக்கவனாகவும், பொருள் நிறைவு உள்ளவனாகவும், நகரத்திற்கும் உறவினர்க்கும் அவைக்கும் ஊர்க்கும் கழகத்திற்கும் தலைவனாகவும், மிக்க இன்பியாகவும் புகழ் உள்ளவனாகவு மிருப்பான். (அத்.-15-சு. 21) என்று சாராவளி கூறுகிறது.



219. புகருடன் சனியற் பக்கன்
பொன்னனுர் புணர்ச்சி மிக்கோன்
திகழ்தன மக்க ரத்தாற்
சித்திரத் தொழிலாற் சேரும்
தகுமிவற் ளெருகோ ளென்னிற்
சாற்றிய பலமே யாகும்
மிகுமெனி லவர வர்க்கு
விகற்பத்தாற் பலன்வி ளம்பே.

(எ-து) சுக்கிரனுடன் சனி கூடில் அற்ப திருட்டியுடையன். (சிறு நேத்திரமுடையன் என்று கூறுகிறது பலதீபிகை). ஸ்திரீ சையோகம் வர்த்திச்சவன் ; தனவான் ; அட்சர வித்தியாப்பியாசத்தினாலும், சித்திரத் தொழிலினாலும் தனமுடையன் என்பது.

ஒரு கிரகத்தோடே ஒரு கிரகம் கூடில் இந்தப்படி சொல்லவும். மூன்று, நான்கு, ஐந்து, ஆறு கிரகங்கள் கூடில் அவரவர்க்குச் சொன்ன பலன் விகற்பித்துச் சொல்லவும் (எ–று). 5

குறிப்பு :—வெள்ளியும், காரியும் . கூடியிருப்பின் மரங்களைக் கொண்டு தொழில் செய்யும் வாணிகத்தில் ஆற்றலுள்ளவனாகவும், க்ஷௌரத் தொழில் செய்பவனாகவும், ஓவியம் வரைவதில் வல்லவனாகவும், கல்வேலையிற் பயிற்சியுள்ளவனாகவும், மண்பற்றிய செயல்களைச் செய்பவனாகவும், மற்போரில் வல்லவனாகவும், இயக்கிக்கொண்டிருப்பவனாகவும், ஆனிரையைக் காப்பவனாகவு மிருப்பான் என்று சாராவளி கூறுகிறது (அத்.-15-சு -22).

பதினொன்காவது
துவாக் கிரக யோக அத்தியாயம்
முற்றும்.

RangaRakes
tamilnavarasam.com

## பதினைந்தாவது

## பிரவிரச்யா யோக அத்தியாயம்

(பிரவ்ரஜ்யா—மோட்சம் அல்லது விடு பேறு ; சன்யாசம் என்றுங் கூறுவர்).

220. ஓரையொன் றதனில் நால்வர்
முதலுநிற் பல்வாற் கோத
ஆரல்மால் வியாழன் சோமன்
அம்புகர் சனிய ருக்கன்
தேரர்சா வகர்சன் னாசி
விரதிகா பாலி நக்கன்
ஆரணி யாச னத்தோர்
அடைவினில் வலியா லோதே.

(எ—று) ஓர் இராசியில் நான்கு கிரகங்களிற் குறையாமல் கிரகங்கள் நிற்கில் பலமுடைய கிரகத்திற்குள்ள தீட்சையைச் சொல்லவும்

செவ்வாய் புதன் வியாழன் சந்திரன் சுக்கிரன் சனி சூரியன் இவர்களுக்கு நிரல் நிறையே தேரர் சாவகர் சந்நாசி விரதி காபாலி நக்கன் ஆரணியாசனி என்று அடைவிலே அறிவது.

தேரராவது பவுத்தர். சாவகராவது (சிராவகர்) ஏவ தண்டியாய்ப் பீலிகொண்டு வழியடிச்சு நடக்கிறவன். சந்யாசி—பிட்சாடகன். விரதியாவது மகாவிரதங் கொள்ளப்பட்டவன். காபாலி—கையிற் கபால மெடுத்துக்கொண்டு நடக்கிறவன். நக்கனவது திரிதண்டி ; நிக்கிராந்தியாய நிருவாணி என்பது.



ஆரணியாசனியாவது மூலபலங்கள் அசனமாய்த் தவஞ் செய்கிறவன் என்றறிவது.

கிரகங்களிலே பலமுடையவனுடைய பிரவிரச்சையைச் சொல்லவும். எத்தனைக் கிரகங்கட்குப் பலமுண்டாயிருந்ததோ அத்தனைக் கிரகங்களுடைய தீட்சையும் உண்டாம். அந்தக் கிரகம் சத்துரு நீசம் உயுத்தத்தில் தோற்றவ னாகில் அந்த விரதம் அழிந்து கெடுவன். அந்த விரதம் அந்த சுவாமிகளாலே விரதமும் சுயதிதியமும் உண்டாம் (எ—று). 1

குறிப்பு :—வடமொழியி லுள்ள வராகர் ஓரையில் தேரர் முதலானவரின் பெயர் முறையே சாக்கியா, ஆசீவகா, பிக்ஷு, விரதா, சாரகா, நிக்கிரந்தா, வன்யாசனு என்று காணப்படுகின்றது.

நான்கு அல்லது அதற்கு அதிகமான கோள்கள் ஒன்று கூடி ஒரு இராசியி லிருப்பின் அவ்வாறு பிறந்தவன் தவச் செயலை மேற்கொள்ளுவான் என்று சாராவளி (அத்-20 சு-1) கூறுகிறது. மங்களேஸ் வரீயம் என்னும் நூல் இவ் வத்தியாயத்தைச் சன்னியாசி யோகப்படலம் என்று கூறுகிறது.

தீட்சை எய்துதலும் எய்தாமையும்.

221. இன்னவர் கதிரி னூடி
யெய்திடிற் றீட்சை யில்லார்
நன்னய மெய்திற் கூடும்
வலியுறின் நவிலும் பத்தி
துன்னிய வுயுத்தந் தன்னிற்
றோற்றிடிற் றீட்சை தோடி
அன்னிய ரதனை நோக்கிற்
றீட்சையி லடையா னென்றே.

பிரவிரத்திக் (பிரவிரஜ்யாக்) கிரகங்கள் சூரியனுடன் கூடி அத்தமிக்கில் தீட்சை யில்லாதவனும். பலன் கொடுக்கிற கிரகம் சொச்சிய சுவர்க்கத்தில் நிற்கில்

சொன்ன தீட்சையில் நிற்பன். பலன் கொடுக்கிற கிரகம் பலமுள்ளவனுகில் அந்தத் தீட்சையில் பத்திகளோடு நிற்பன். உயுத்தத்தில் தோற்கில் சொன்ன தீட்சையிலே ஙங்கிசை யுண்டாகி யிருப்பன். மற்றக் கிரகங்கள் நோக்கு மாகில் தீட்சை யில்லாதவனும் (எ-று). 2

குறிப்பு :—'சொச்சிய சுவர்க்கம்' என்பது சுவ க்ஷேத்திரத்தும் சுபர் வர்க்கத்தும் என்று பொருள்படும்.

பிரவிரஜ்யா யோகத்திற்கு உரிய கோள்களுக்கு அத்த மனம் (பாடு) ஏற்படின் அத்தயோகபலன் நிகழாது. அத்தமனம் ஏற்பட்டாலும் அக் கோள்களுக்கு ஆட்சி உச்சம் முதலிய ஏனைய பலன்கள் நிகழின் பிரவிரச்சை அடைந்தவரிடத்தே அன்புள்ளவ னாக மட்டும் ஆவான். போர், பாடு முதலியவற்றுடன் கூடாமல் முழுவலிமையும் பெற்றுள்ள கோள்களாயின் உறுதியாக பிர விரச்சை உண்டாகும். பிரவிரச்சைக்குள்ள கோள்கள் போரில் தோல்வி யடைந்தால் பிரவிரச்சை யடைந்தபின் அதிலிருந்து தள்ளப்படுவான். பலகோள்கள் மிகவும் பலமுள்ளவையா யிருப்பின் அப் பலத்தினுடைய ஏற்றத் தாழ்விற்குத் தக்கபடி அடைவே பிரவிரச்சை உண்டாகும். சமமாகப் பலங்களிருப்பின் கலப்புவடிவாகிய பிரவிரச்சை உண்டாகும் என்று கூறுகிறது. (சாராவளி அத்-21 சு-20).

பிரவிரச்சைக்கு உரிய கோள்கள் அத்தமனம் அடைந் தாலும் மற்றக் கோள்களால் பார்க்கப்பட்டாலும் தீட்சையில் விருப்பம் மட்டும் உண்டாகும் பிரவிரச்சை கிடைப்பது அருமை யாகும் என்று கூறுவர் யவனாசாரியர் என்பது சாராவளி (அத் 21 சு-21). பாட்டில் 'தோடி' என்பது தோஷி என்னும் வடசொற் றிரிபாகும். தோஷமுடையவன் என்பது பொருளாகும்.

வேறு

222. ஏருத யேசனைச் சுன்னலார்
நோக்க மில்லை யேனும்
ஓரையா திபன்பல மீனமு
றச்சனி நோக்கு மேனும்



சாருறுந் தீட்சை மிக்கவ
லியுளோர் திசையிற் சாற்ற
ஆரல்கன் காலிந்துற் றுங்கவர்
நோக்கிலன் ஞேரின் தீட்சை.

(எ-து) சென்மாதிபதியை ஒரு கிரகங்களும் நோக் காமல் சனியினுடைய திருஷ்டிதானே உண்டாகில், அவனுக்குச் சொன்ன பிரவிரத்தி (பிரவிரஜ்யா) உண் டாகும்.

சென்மாதிபதியை ஒரு கிரகங்களும் நோக்காம லிருக்கப் பலவீனமா யிருக்கிற சென்மாதிபனைச் சனி நோக்கு மாகிலும் பிரவிரத்தியை அனுபவிக்கும்.

இவையிற்றில் வைத்து எவனுக்குப் பலம் ஏறும் அவனுடைய திசையில் பிரவிரத்தி அனுபவிக்கும்.

செவ்வாய் நவாங்கிசத்திற்றன் சனி நவாங்கித் திற்றன் சந்திரன் நிற்க, அந்தச் சந்திரன் நின்ற அங்கி சாதிபதி சந்திரனை நோக்குமாகிலும் அவரவர்க்குச் சொன்ன பிரவிர்த்திவை அதிரிசாகரத்தில் (அத்திசாபகா ரத்திலா)? அனுபவிப்பன் (எ-று). 3

குறிப்பு :—இப்பாட்டின் முதற் கருத்துடன்

"உறையுஞ்சென்மன் றன்னைச்சனி
யுற்றுநோக்கும் பொழுதில்
கிறையும்புவி யதில்வந்திடு
நீள்சாதகன் அதிகம்
மறைகளறிந் தவ்வவ்வழி
மருவிமாய்கை நீத்தும்
முறையாய்நிரு வாணம்பெறு
முனியாகுவ னின்னேன்"

என்னும் மங்களேஸ்வரீயப் பாட்டினை (13-21) ஒப்பு நோக்குக.



RangaRakes tamilnavarasam.com

மேற் பாட்டின் ஈற்றிற் கூறப்பட்டுள்ள கருத்துடன் "சனியின் திரேக்காணத்தில் சந்திரன் நிற்க, அச்சந்திரனைச் செவ்வாய், சனி நோக்கின் இவ் வியோகத்திற் பிறந்தவன் தவம் செய்பவனாய் இருப்பன். செவ்வாய் நவாம்சத்தில் (மேட விருச்சிகத்தில்) சனி நிற்க அச்சந்திரனை ஏனைய கோள்கள் பார்க்காமல் சனிமட்டும் பார்த்துக்கொண்டிருப்பின் இந்த யோகத்திற் பிறந்தவன் தவஞ் செய்பவனாவான். இவ் விரண்டு யோகத்திற்கும் சனிக்குக் கூறிய பிரவிரச்சை உண்டாம்" என்று சாராவளி (அத்-20 க 22) சிறிது வேறுபடக் கூறும் கருத்தினை ஒப்பு நோக்கி அறிக.

மங்களேஸ்வரீயம் "கும்ப மகரத் திரேக்காணத்தி லிருந்த சந்திரன், செவ்வாய் சனி நவாம்சத்தி லிருக்கும் மற்றக் கோள்களால் பார்க்கப்படாமல் சனியால் மட்டும் பார்க்கப் பட்டால் இவ்வாறு பிறந்தவன் திகம்பர சன்னியாசி யாவான்." என்று (16-23) கூறுகிறது.

223. குருமதி புதயந் தம்மைச்
சனிகாணக் குருநன் மத்தேல்
நிருபரா யிடினுந் தீர்த்தக்
கவிவலோன் நீல னென்பான்
மருவுறு வுதயந் தன்னை
மற்றையர் நோக்கா ரென்னில்
நரபதி யெனினு முன்னர்
நவின்றதீட் சகனு மன்றே.

(எ-று) வியாழனையும் சந்திரனையும் இலக்கினத்தையும் சனி நோக்க, வியாழன் ஒன்பதாமிடத்தில் நிற்கில், அப்போது பிறந்தவன் இராச யோகத்திற் பிறந்தானாகினும், தீர்த்த காவியங்கள் உண்டாக்கப்பட்ட கவியீசுர னாவான்.

சனி ஒன்பதாமிடத்தில் நிற்கில், இலக்கினத்திற்கு மற்றொரு கிரகங்களினுடைய திருஷ்டியும் இல்லையாகில்



இராச யோகத்திற் பிறந்தவனாகிலும் முன்னே சொன்ன தீட்சகனும் (எ-று). 4

குறிப்பு :—தீர்த்த காவியங்கள்—தூய இலக்கியங்கள். மேற்பாட்டில் இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள செய்தியை மங்களேஸ்வரீயம் வேறுபடக் கூறுகிறது "சென்ம இலக்கினத்திற்கு ஒன்பதில் சனி இருக்க, அந்தச் சனி மற்றக் கிரகத்தினாற் பார்க்கப்பட்டிருக்கப் பிறந்தவன் இராசாதி இராசனும். அப்படிப் பிறந்தவனும் சாத்திரம் உண்டுபண்ணுபவனு மிருப்பன்" (16-26). என்பதாம்.

பதினைந்தாவது
பிரவிரச்சியா யோக அத்தியாயம்
முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## பதினொருவது

# இராசி சீல அத்தியாயம்

## [1]நட்சத்திர பலன் I

### அசுவதி, பரணியிற் பிறந்தோன் பலன்

224. பூடணப் பிரிய னாகும்
        புத்திமான் செனங்கள் வல்லோன்
    காடுறு [2]தக்கன் நேசன்
        அசுவதி நாளில் வந்தோன்
    தேடுமிச் சயனு ரோகி
        செப்புறு தக்க வல்லோன்
    கூடுகுக் குறவின் மிக்கோன்
        சுகியனும் பரணி யானே.

(எ-து) அசுவதி நாளிற் பிறந்தவன் பூடணப் பிரியன், புத்திமான், செனவல்லபன், விதர்த்தன், தேகசுடையன் என்பது.

பரணி நாளிற் பிறந்தவன் குணம் நிச்சயம் வைப்பவன், ஆரோகி, விதர்த்தன், சத்தியவான், சுகியனும் (எ-று). 1

குறிப்பு :—விதர்த்தன்-சமர்த்தன், சதுரன், ஆரோகி-ரோகமில்லாதவன். நோயும், துக்கமும் இல்லாதவன் என்று கூறும் (மங்களே-17-2).

### கார்த்திகை, உரோகிணியிற் பிறந்தவனியல்பு

225. சித்திரன் பரதா ரத்திற்
        சிந்தையன் நேசை யுள்ளான்
    வைத்ததேசர் சீர்த்தி மானும்
        வகுத்தகார்த் திகையில் வந்தோன்

[1] 'ருட்ச சீலாத்தியாயம்' என்னும் பிருகத்சாதகம்.

[2] 'தக்ஷன்' என்பது தக்கன் என்று திரிந்தது, இதற்குச் சர்வ கார்ய காணபடு: என்பர் பட்டோத்புலர்,



    சத்தியன் சுசிய துள்ளோன்
        சாற்றிடு மினிய சொல்லோன்
    மெய்த்திற முடையன் நேசன்
        மேவுரோ கிணியி னானே.

(எ-து) கார்த்திகையிற் பிறந்தவன் குணம் வெகுவாசி; பரதார கமனன்; தேசுடையன்; கீர்த்திமானு மென்பது.

உரோகிணியிற் பிறந்தவன் குணம் சத்தியவாசகன்; சுத்த சீலன்; இனிய வசனமுடையன்; பெலவான்; தேகசுடையனும் (எ-று). 2

குறிப்பு :—சித்திரம்-சித்திரமாகப் பேசுபவன்; சித்திரம்-பல; உரையாசிரியர் வெகுவாசி என்பர். மெதுவாகவும், நயமாகவும் பேசுபவன் என்பர் (மங்களே-17.3) கார்த்திகைக்கு 'மிகு வுண்டிவுண்பன்' என்றும் கூறுகிறது (மங்களே-17-3) உரோகணியின் பலனை,

"குறியாளன் மிக்கான் ஞாலுணர்ந்
    தேகுண மாய்ந டப்பேசன்
அறிவாளன் மெய்யனு சாரன்முற்
    றப்பே ரழகுள் ளானும்
திறமான நெஞ்சன் பரமாதர்
    சீத்ததீஞ் சொல்லுள் ளானும்
பிறராதி செல்வ மதிலாசை
    யற்றபே ருரோகி ணிய்யே.

என்று மங்களேஸ்வரியம் (17-4) கூறுவதை ஒப்பு நோக்கி அறிக.

### மிருகசீரிடம், திருவாதிரை நாளிற் பிறந்தவனியல்பு

226. சாற்றிய சபலன் பீதி
        சதுரனே சுகவான் போகி
    ஊற்றமார் சொல்லன் பொல்லன்
        உச்சாகி மகீர காவான்

RangaRakes

tamilnavarasam.com

போற்றுந்தற் செயலாங் காரி
பூசல னுதவ லில்லான்
ஆற்றுமீங் கிசத்தன் பாவி
ஆதிரை நாளி னனே.

(எ–து) மிருகசீரிடத்திற் பிறந்தவன் குணம் கிரியைகளில் அத்திரன் ; பீஷணமுள்ளவன் ; விதர்த்தன் ; தனவான் ; உச்சாகமுடையவன் என்பது.

திருவாதிரையிற் பிறந்தவன் குணம் தன்காரிய மொழிந்து மற்றக் காரியம் வேண்டாதான் ; ஆங்கார முடையவன் ; கலக சீலன் ; உபகார சூனியன் ; ஈங்கிசை செய்வான் ; பாவி (எ–று). 3

குறிப்பு :— சபலன் - தொழிலில் நிலைபெறாதவன். பீஷணம்— அச்சம்.

புனர்பூசத்திற் பிறந்தோன் இயல்பு

227. செசல்லுறு மடக்க முள்ளோன்
சுகமுளன் சுத்த சீலன்
மெல்லிய தேகி புத்தி
மேவிய வின்ப முள்ளோன்
அல்லுறு தேக நோயன்
அன்புறுஞ் சுபோச னத்தன்
புல்லுறு மடவார் நேயன்
புனர்தநாட் டோன்றி னனே.

(எ–து) புனர்பூசத்திற் பிறந்தவன் குணம் அடக்க முடையவன்; சுகமுடையவன் ; சுத்த சீலன் ; மெல்லிய சரீரன் ; புத்திமான் ; சந்தோட முடையவன் ; வியாதி யுடையன் ; சுபமுடையன் ; சுத்த போசனத்தன் ; ஸ்திரீ சிக நேய முடையன் (எ–று). 4

குறிப்பு :—தேகநோயன் என்று இந் நூல் கூறுகிறது. பிணியால் வருந்தி அது தீர்த்தற்காக புரி கற்பதேகி என்று



மங்களேஸ்வரீயம் (17-7) கூறுகிறது. கற்பம் என்பது காய கற்ப மருந்தினை.

பூசத்திலும், ஆயில்யத்திலும் பிறந்தான் இயல்பு

228. சாந்தவான் சுபதே கந்தன்
சுபமுளன் தனத்தை யுள்ளோன்
போந்துபண் டிதன்றன் மத்தோன்
பூசநா டன்னில் வந்தோன்
சாய்ந்ததோர் பாவி தூர்த்தன்
தன்கரு மத்த னன்றி
ஆய்ந்திடான் யாவு முண்ணும்
ஆயிலி யத்தி னனே.

(எ–து) பூச நாளிற் பிறந்தவன் குணம் சாந்த குணன் ; சுகமா யிருக்கிற தேகமுடையன் ; சுப முடையவன் ; தனம் உள்ளவன் ; பண்டிதன் ; பண்டிதனுவது சாஸ்திர வல்லவன் ; தன்மவான் என்பது.

ஆயில்யத்திற் பிறந்தவன் குணம் பாவங்களைச் செய்பவன் ; பரவஞ்சகன் ; பரகாரிய விமுகன் ; உபகார சூனியன் ; சர்வபட்சண சீலன் (எ–று). 5

குறிப்பு :— பரவஞ்சகன் மேலான வஞ்சகன். பர காரிய விமுகன்—பிறர் காரியத்திற்கு முகங் கொடுக்காதவன், சர்வபட்சண சீலன் — விதிவிலக்கின்றி ஊன், கள் முதலிய எல்லாவற்றையும் உண்ணும் இயல்புடையோன்.

பூச நாளிற் பிறந்தோன் இயல்பை,

" மகிழும் ஏமதம சாந்தமா
திக்குணன் மாத வத்தோன்
புகழும் படிக்குச் சகலர்க்கு
நேயன் பொருளு டையான்
நிகழுநால் வேத சாத்திரந்
தன்னை தெரிந்து ளோர்ந்தோன்
இகழுங் குணங்களை நீக்கியவன்
பூச நெறிந்த னனே "

என்று மங்களேஸ்வரீயம் (17–8) கூறும்.

RangaRakes tamilnavarasam.com

மகத்திலும் பூரத்திலும் பிறந்தான் பண்பு.

229, உன்னிய பிருத்த யன்மார்
உளன்றனம் போகி நல்லன்
பன்னிய பிதிரர் தேவர்
பத்தியன் மகத்தில் வந்தோன்
நன்னய மொழிதி யாகி
நடையினில் வல்லன் றூதன்
பொன்னின்மன் னவரைப் போற்றும்
பூரநாட் டோன்றி னனே.

(எ-து) மகத்திற் பிறந்தவன் குணம், அநேகம் பிருத்தயன்மார் (வேலைக்காரர்) உடையன்; தன முடையன்; சுகமுடையன்; நல்ல வசன முடையன்; பிதிர்க்களிடத்திலும் தேவர்களிடத்திலும் பக்தியுள்ளவன் மகா உத்தமன் என்பது.

பூரத்திற் பிறந்தவன் குணம்; பிரிய வசனன்; தியாகி; வழிநடையுடையன்; தூதன்; இராச சேவிதனும் (எ-று). 6

குறிப்பு :—மகத்திற்கு இங்கே சொல்லியவை யன்றி சுந்தரன், தற் சிந்தை யுள்ளான், மிக்க சந்தோஷமும் செழிப்பும் உற்றவன் என்றும் கூறுகிறது (மங்களே-17-10)

பூரத்திற்கு இங்கே சொல்லியவையன்றிச் சொருசுள்ள பாவன், சமர் செய்ய ஆசைப்படும் சுந்தரன், சமர்த்தன், காரியத்தில் மனமுள்ளவன் என்பவைகளையும் கூறுகின்றது (மங்களே-17-11).

உத்திரம் அத்தத்திற் பிறந்தோன் இயல்பு.

230 தனமுறும் வித்தை யாளன்
சாற்றிய சுபவான் போகி
மனமுறு தீர்க்க முள்ளோன்
உத்திர நாளில் வந்தோன்



சினமுள்ளோன் எதிரி யுள்ளோன்
செப்புதற் கரனுச் சாகி
அனையவா னரகு ணத்தோன்
அத்தநாட் டோன்றி னனே.

(எ-து) உத்திரத்திற் பிறந்தவன் குணம், தன முடையன்; வித்தையினு லர்த்த முடையன்; சுபவான்; சுபவானுவது மனோகரன்; போகி; போகியாவது விஷயானுபவமுள்ளவன் (மனத்) தீர்க்க முடைய னென்பது.

அத்தத்திற் பிறந்தவன் குணம்; கோபி; சத்துருக்க ளுடையவன்; தற்கரன் (தஸ்கரன்); தற்கரனுவது கள்ளன்; உற்சாகி; வானர குண முடையவன் (எ-று). 7

குறிப்பு :—இங்கு கூறியவையன்றி உத்திரத்திற்குத் தீரன், மான முள்ளான் என்பன வற்றையும் மங்களேஸ்வரியம் கூறுகின்றது. அது "ஆனபல் வித்தை யதனுற் றனத்தை யடைத்தவனும்" (17-12) என்று கூறும் பகுதியுடன் 'வித்தையினுல் அர்த்த முடையன்' என்னும் இந் நூல் உரைப் பகுதியை ஒப்பிட்டறிக.

அத்தத்திற்கு இங்குக் கூறியவையன்றித் "தயவற்று உரைக்கும், மதுபானம் செய்திடும், தகாத விடயச் செயல்களைப் புரியும், புகழிலன்" என்பனவற்றையும் கூறுகிறது (மங்களே-17-13)

சித்திரையிற் சோதியிற் பிறந்தான் இயல்பு.

231. சித்திராம் பரங்க ளோடு
சித்திரா பரணந் தானும்
வைத்தமா ளிகையு முள்ளோன்
சித்திரை நாளில் வந்தோன்
ஒத்ததோ ரின்பஞ் சொல்லும்
வணிகனுந் தனமு முள்ளோன்
மெய்த்திற மடக்கன் ராகி
மேவிய சோதி யானே.



RangaRakes tamilnavarasam.com

(எ-து) சித்திரையிற் பிறந்தவன் குணம் :—சித்திர வத்திர முடையன் ; சித்திராபரண முடையன் ; சித்திர மாலிகையு முடையவன் ; சித்திரமாவது நானாவிதமா யிருக்கப்பட்டது. "அம்பர ஆபரண மாலிகை" என்பது அம்பரமாவது வத்திரம் ; ஆபரணமாவது பூடணம் : மாலிகையாவது மாலை என்றறிவது.

சோதியிற் பிறந்தவன் குணம் :—இனிய வசன முடையன் ; வாலிப முடையவன் ; தனவான் ; அடக்க முடையவன் ; நாகம் (ராகம்) உடையவன் (எ-று). 8

குறிப்பு :—சித்திரைக்கு இங்கு கூறியவை யன்றி "நெடும் மிருந்த சவுந்தர தேகமும் நல்விழி கூடும் அவயவ லட்சண முள்ளவன்" என்பதையும் கூறுகிறது (மங்களே-17-14)

சோதிக்குத் தருமஞ்செய்ய வற்றத் தவனுள்ள ; பிறர் செய்த குற்றத்தை இவன் மிகவும் பொறுக்கும் ; விநயமுடையவன் ; விடாவைப் (சாகத்தை) பொறுக்கான் என்று கூறுகிறது (மங்களே-17-15).

விசாகம், அனுடம் இவற்றிற் பிறந்தான் இயல்பு

232. காய்ந்திடு மேதி லாரை
யுளுத்தனே கலாபி கோபி
வேய்ந்ததோர் சொல்லின் வல்லோன்
விசாகநா டன்னில் வந்தோன்
சேர்ந்திடு நடையில் வல்லோன்
திரவியன் றேச வாசி
ஆய்ந்ததோர் சுதனை யுள்ளோன்
அனுடநாட் டோன்றி னுனே.

(எ-து) விசாகத்திற் பிறந்தவன் குணம் :-பிறரைச் சினந்து பேசுவன் ; உத்தீர்ந்தன் ; கலைப்பிரியன் ; கோப முள்ளவன் ; வசன வல்லபன் என்பது.



அனுடத்திற் பிறந்தவன் குணம் :—வழிநடை யுடையன் ; திரவிய முடையன் ; பரதேச வாசி ; சுதன் உடையன் (எ-று). 9

குறிப்பு :—விசாகத்திற் பிறந்தான் நல்வார்த்தை இயம்புவதிலும், திரவியத்தை எற்பதிலும், சிநேகத்தை மாற்றுங் கலகத்திலும் வல்லவன் ; முக காந்தியுள்ளவன் ; உலோபி ; மற்றவருடைய பொருளில் பொறுமை யுள்ளவன் என்று கூறும் (மங்களே-17-16)

அனுடத்திற்கு இங்கு கூறியவை யன்றிப் பசிபொறுக் காதவன், போரில் சமர்த்தன் என்பவற்றையும் கூறுகின்றது (மங்களே-17-17)

கேட்டை, மூலத்திற் பிறந்தவர் இயல்பு

233. மித்திர ரநேக முள்ளோன்
மிகுந்ததோர் சினத்தை யுள்ளோன்
சுத்தமாந் தருமி யின்பன்
சொல்லிய கேட்டை நாளான்
அந்திரன் சுகியன் போகி
அபிமானி தனத்தை யுள்ளோன்
மொய்த்தவீங் கிரைகள் செய்யும்
மூலநாட் டோன்றி னுனே.

(எ-து) கேட்டையிற் பிறந்தவன் குணம் :—அநேக மித்திர ருடையவன்; மிகுந்த கோபமுடையவன் ; தன்மஞ் செய்பவன் ; சந்தோஷ முடையவன் என்பது.

மூலத்திற் பிறந்தவன் குணம் :— அத்திரன் (அஸ்திரன்) ; அத்திரனாவது சபல முடையன் ; சுகமுள்ளவன் ; போகி ; போகியாவது அனுபவ யுக்தன் ; அபிமான முடையவன் ; தனமுள்ளவன் ; சங்கிரைசையே சீலமாக உள்ளவன் (எ-று). 10

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :—கேட்டைக்குச் சினேகிதரிடத்தில் உண்மை யற்றவன் ; அழகும், பலமும் உள்ளவன் ; சந்தோஷ சுபாவ முள்ளவன் ; தெரிந்து தருமஞ் செய்பவன் ; புத்தி கூர்மை யுள்ளவன் ; குரோத முள்ளவன் என்னும் பலவைக் கூறும் (மங்களே.-17-18).

மூலத்திற்குத் தனம் சுகம் உடையான் ; சீவர்கட்குத் தீங்கு செய்யாது காப்பவன் ; மான முள்ளவன் ; போக சீலன் ; துயர மற்றவன் ; மெய்யன் ; திரச்சித்தன் என்று கூறுகிறது (மங்களே.-17-19) வராகர் ஓரை ' அத்திரன் ' என்பதும், மங்களேஸ்வரீயம் ' திரச்சித்தன் ' என்பதும் தம்மில் மாறுபாடாகும்.

பூராடம் உத்திராடம் இவற்றிற் பிறந்தவன் இயல்பு.

234. மனதினுக் கின்ப மான
மனைவியன் மான முள்ளோன்
கனமுறு திடவா னாகும்
கருதுபூ ராட நாளன்
சனமுளோன் அடக்க முள்ளோன்
றருமிசெய்ந் நன்றி யில்லான்
புனைதரு மனோக ரத்தன்
போற்றுமுத் திராடத் தானே.

(எ-து) பூராடத்திற் பிறந்தவன் குணம் :—மனத்திற்குப் பிரியமான மனைவியை உடையன் ; அடக்க முடையவன் ; அபிமானி ; திடவான் என்பது.

உத்திராடத்திற் பிறந்தவன் குணம் :—பந்துசன முடையன் ; அடக்க முடையன் ; தருமஞ் செய்பவன் ; செய்ந்நன்றி யில்லாதவன் ; மனோகர முடையனும் (எ-று). 11

குறிப்பு :—பூராடத்திற்கு ' ஆண்டிமை யுடையவன் ' என்னும் ஒன்றினை அதிகமாகச் சொல்லுகிறது (மங்களே-17-20)

உத்திராடத்திற்குச் சர்வசன நேசன் ; பிறர்க்கு மிகவும் உபகாரி ; தானதர்மங்களைச் செய்பவன் ; விநயம் முதலிய சத்குணங்களை யுடையவன் என்று கூறுகிறது (மங்களே-17-21).



திருவோணம் அவிட்டத்திற் பிறந்தான் இயல்பு.

235. பகர்தரு சீமான் மிக்க
பண்டிதன் கீர்த்தி யுள்ளோன்
இகலுறு முதார தாரன்
இருந்தனன் ஓண நாளான்
புகலுறு தியாகி சூரன்
பொன்னுளோன் தனவு லுத்தன்
மிருதகுங் கீதத் தின்பன்
மேவிய அவிட்டத் தானே.

(எ-து) திருவோணத்திற் பிறந்தவன் குணம் :—ஸ்ரீமான் ; மகாவித்தை யுடையோன் ; கீர்த்தியுடையவன் உதார பாரியுடையவன் ; தனவானு மென்பது.

அவிட்டத்திற் பிறந்தவன் குணம் :—தியாகி ; சூரன் ; தனமுடையன் ; தனத்தில் உலுத்தன் ; கீதப் பிரியன் ; கீதப் பிரியனுவது பாடலிற் பிரியனும் (எ-று). 12

குறிப்பு :—ஸ்ரீமான்—திருவாளன், பாட்டு " மிக்க பண்டிதன் " என்று கூறுகிறது. அதற்கு உரையாசிரியர் மகாவித்தை யுடையோன் என்றனர். மங்களேஸ்வரீயம் திருவோணத்திற் பிறந்தானை " நீண்மறைகள் பலவா யுணர்ந்தவன் " (17-22) என்று கூறும்

சதயம், பூரட்டாதியிற் பிறந்தார் இயல்பு

236. இனியசொற் புடனும் நாரிக்
கிதமிலான் கரும மெண்ணுன்
தனியிக லடுத்தோ னெண்ணுஞ்
சிந்தையன் சதய நாளன்
தனமுளன் விதர்த்தன் ஈயான்
சாற்றரும் வயிர முள்ளோன்
வனிதையர் செயனுந் தன்மி
வருபூரட் டாதி யானே.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) சதயத்திற் பிறந்தவன் குணம் :—புட வசனஞ் சொல்லப்பட்டவன் ; ஸ்திரீகளிடத்திற் றுன் முகனு யிருப்பன் ; வருங்காரியம் நிரூபியாமல் ஒரு காரியத்தைச் செய்வன் ; சத்துருக்களை அடுத்தவன் ; யாராலும் அறியப்பட்ட வசமல்லாதவன் என்பது.

பூரட்டாதி நாளிற் பிறந்தவன் குணம் :— தனவான் ; விதர்த்தன் (சமர்த்தன்) ; ஈயாதவன் ; வயிராக்கிய முடையன் ; ஸ்திரீகளாற் செயிக்கப் பட்டவன் ; தரும வான் (எ-று). 13

குறிப்பு :—புடவசனன்—வெளிப்படையான சொற்களை யுடையவன் 'விற்பன வார்த்தையன்' என்பர் மங்களேஸ்வரிய ஆசிரியர். அந் நூல் சதய நாளிற்கு "விற்பன வார்த்தையன் கபடக் குணத்தன் விளங்கிழையாரால் அற்ப விசன முடையவன் ; சத்துருக்களை நிர்ப்பயமாகச் செயிப்பவன் தூர்க்கிருத்திய நிபுணன் கல்வியன் பற்பலவான சாகசத்தை யுடையவன்" என்று (17-24) கூறும். பூரட்டாதிக்கு "மாதர் தனத்தை யடைந்தும் அக் காரிகையால் மருவச் நிகழ்ப்படுவன் ; தனபதி ; வாய்ச் சமர்த்தன் மனத்துயரான் ; உலோபி சனகயற்ஜேரன்" என்று கூறும் (மங்களை-17-25).

உத்திரட்டாதி இரேவதியிற் பிறந்தவன் பலன்.

237. அன்புடைச் சொல்ல னிவோன்
அடையல ரிலான்சே யுள்ளோன்
வன்புறு சுகிய னாகும்
உத்திரட் டாதி வந்தோன்
துன்பமில் மனத்தன் சூரன்
சுசிசுகி யத்த முள்ளோன்
இன்பசம் பூர ணங்கன்
இரேவதி நாளி னானே.

(எ-து) உத்திரட்டாதியிற் பிறந்தவன் குணம் :— சுபவசன முடையவன் ; தருமஞ் செய்வன் ; சத்துருவைச் செயிப்பன் ; புத்திர ருடையன் ; சுகியன் என்பது.



இரேவதியிற் பிறந்தவன் குணம் :—மனோகர முடையவன் ; உயுத்தப் பிரியன் ; சுசியன் ; சுசியனானது சுத்தன் ; சுகவான் ; அத்தம் (பொருள்) உடையன் ; சம்பூர்ணமா யிருக்கிற அங்கமுடையவன் ; அங்கமாவது அவயவம் (எ-று). 14

குறிப்பு :—உத்திரட்டாதியிற் பிறந்தவன் தலைமையான் ; புத்திர பவுத்திர சந்ததியை யுடையன் ; அவைவின்கண் பய மின்றித் திரமாகப் பேசும் ஆண்மையை உடையன் ; சத்துருவைச் செயிப்பவன் ; புண்ணியவான் என்று கூறும் (மங்களை 17-26).

இரேவதியிற் பிறந்தவன் பூரண ஆயுளுடையவன், ஆண்மையுள்ளவன், சூரன், சுத்தன், தனபதி, பரதிரவியம், பரஸ்திரீயை விரும்பான், நல்ல நடையன், சகல சன நேசன் என்று கூறும் (மங்களை-17-27).

முழுப்பலன்கள்

இங்கே அசுவதி முதலிய இருபத்தேழு நாட்களுக்கும் கூறியிருந்த பலன்களனைத்தும், சந்திரன் ஆறு, எட்டு, பன்னிரண்டில் வலிகுன்றியிருந்தால் முற்றிலும் நடைபெறு தென்றும், நல்ல இடத்தில் வலிவுடன் இருந்தால் மட்டும் முழுப்பலன்கள் நடைபெறுமென்றும் கூறுகிறது (மங்களை-17-28).

RangaRakes tamilnavarasam.com

## [1]இராசி சீல அத்தியாயத்துள்

### இராசிகளில் திங்கள் இருந்த பலன் II

#### மேடத் திங்கள்

238. விருத்தமுறு தாம்பிரக்கன் வெய்ய சாக
மேவியசிற் றூண்சினத்தி னெல்லை யின்பன்
துருத்தியெனும் நடையன் அதி சபலன் காமி
துர்ப்பலசா னுளன்றனமத் திரனே சூரன்
வருத்தமிலங் கனைவல்லன் சேவை யோர்வன்
மானமுளன் குககள்விர ணங்கத் தானும்
சிரத்தனுயர் சகசதிகன் சத்தி பாணி
அங்கிதனீர்க் கஞ்சுமறித் திங்க ளானே.

(எ-து) வட்டமாய்ச் சற்றே சிவந்து செம்பு போன்ற கண்ணுடையன்; (தாம்பிர + அக்கன்) சூட்டோடே சாப்பிடுபவன்; இலைக்கறியிற் பிரியன்; சிறுக உண்பன்; கோபித்தவுடனே பிரியப்படுபவன்; பிரயோசன மில்லாமல் எப்பொழுதும் ஓடி நடந்து திரிவன்; அதி சபலன்; காமி; பலமில்லாத முழங்கா லுடையவன்; தனமத்திரன்; (தனம் + அத்திரன்) தனமத்திரனாவது தனம் இல்லாதவன்; சூரன்; சூரனாவது உயுத்தப் பிரியன் என்பதாம்; அங்கனை வல்லன்; அங்கனை வல்லவனாவது ஸ்திரீகளிடத்திற் பிரியன் என்பதாம்; சேவை ஓர்வோன்; சேவை ஓர்வோன் என்பது மற்றவர் புத்தியை யறிந்து சேவிக்கப்பட்டவன்; அபிமானி;

---

[1] குறிப்பு: மேல் அத்தியாயத்தை, ருக்ஷசீலாத்தியாய மென்றும், இதன், இராசி சீலாத்தியாய மென்றும் வடமொழி பிருகத்சாதகம் கூறுகின்றது. இவ் விரண்டனையும் இராசி சீலாத்தியாயம் என்றே கூறுகிறது தமிழ் வராகர் ஓராசாத்திரம்.



சொத்தை நகமுடையன்; விரணத்தினாலே தழும்புடைய தலையுடையவன்; (சகசதிகன்) பிராதாக்களுக்குள்ளே பிரதானமாயிருப்பன்; (அங்கிதன்) கையில் வேல் போன்ற இரேகை யுடையன்; அல்லது அங்கித முடையன்; தண்ணீர்க்குப் பயப்படுவன் இவை மேடத்திற் சந்திரனிருக்கப் பிறந்தவன் இலக்கணம் (எ-று). 15

குறிப்பு:—விருத்தம் — வட்டம். தாம்பிரம் — செம்பு. அக்கம் - கண். சானு—முழந்தாள். அங்கிதம்—தழும்பு. சாத காலங்காரம் 'சென்னிதனில் மறுவடுவொன் றுளன்' (153) என்று கூறுவதைக் காண்க.

#### இடபத் திங்கள்

239. காந்தன்மனோ கதன்வதன முரு நீண்டோன்
கானுமுகம் பாரிசம்வெண் ணங்கி தத்தன்
சந்திடுஞ்சிந் தாகுலனும் பிரவீண வாகும்
எருத்தமுளன் அங்கனையன் பெருங்க பத்தன்
போந்திடுபூ ருவபந்தைப் புதல்வர் தம்மைப்
பொருந்திலன்பாக் கியன்பொறைய ணங்கி யுள்ளோன்
ஆந்துணைவி யன்பனெக்கற் றிரனுவன் மத்தி
யாந்தியத்திற் சவுக்கியனென் றறிமதியேற் றுனே.

(எ-து) காந்தன்: காந்தனாவது சவுந்திர முடையன்; மனோகதி யுடைமையி லதிகன்; முகமும் துடையும் நீண்டவன்; முகத்திலும் விலாப்புறத்திலும் முதுகிலும் தழும்புடையன்; தியாகி; கிலேசி; தோளும் கழுத்தும் பெருத்திருப்பன்; பெண்களையுடையன்; (பெண் மகவு) மிக்க கபத்தையுடையன்; பூர்வத்தி லுள்ள பந்து சனங்களையும் புத்திரரையும் வேறுபட் டிருப்பன்; சவுபாக்கியன்; பொறுமை யுடையன்; அக்கினி தீபன முடையான் (பசி பொறுக்கான்) ஸ்திரீகளுக்குப் பிரிய முடையன்; திரமா யிருக்கிற உறவுடையன்; மத்தியாந்தியத்திற்



RangaRakes tamilnavarasam.com

சவுக்கியன் ; என்றது மத்திம வயசிலும் அந்திய வயசிலும் சவுக்கிய முடையன் ; இடபத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் இலக்கணம் (எ-று). 16

குறிப்பு :—'பெருங்கபத்தன்' என்றே எழுதப்பட்டுள்ளது பாட்டு. உரை, செற்ற முடையன் என்று எழுதப்பட்டிருந்தது. 'கந்யா ப்ரஜா சிலேஷ்மல:' என்று பிருகத் சாதகமும் கூறுவதால் அதற்கியைய உரை திருத்தப்பட்டது.

மிதுனத் திங்கள் பலன்.

240. அங்கனைவல் லபன்சுரத வுபசா ரத்தன்
அருணக்கன் நூலறிய வல்லன் றூதன்
பங்கிவளைத் தோன்மதிவல் லோன்வி னோதி
பகர்ந்திடுமிங் கிதஞ்சூது பூர ணங்கள்
துங்கமொழி யினிதுரிய பக்க ணத்தன்
தூர்ந்திடுங்கீ தத்ப்ரியன்பன் திருந்த மோர்வோன்
பொங்குவகை யோடுமலி யூடன்க ளிப்பன்
போகுயர்ந்த நாசியன்யா மிந்தி ருனே.

(எ-து) ஸ்திரீகளில் (அங்கனை) வல்லபனுவது பெண்களில் சக்தி யுள்ளவன் ; சுரத உபசாரனுவது காம சாத்திர வல்லபன் ; அருணக்கனுவது சிவந்த கண்ணன் ; சாத்திரங்களில் வல்லபன் ; தூதன் ; மயிர்முடி வளைந்தவன் ; புத்தியில் வல்லபன் ; விநோதி ; இங்கிதஞ் (குறிப்பு) சொல்பவன் ; சூது பொருந்துவோன் ; குறையாத அவயவ முடையவன் ; இனிய வசனம் சொல்வன் ; அறுசுவைத் திரவிய பட்சணங்களிற் பிரியன் ; கீதப் பிரியன் ; கீதப் பிரியனுவது பாடலிற் பிரியன் ; நிருத்தத்தை அறியப்பட்டவன் ; அலிகளோடு விளையாடுவான் ; நீண்டுயர்ந்த நாசியையுடையன் ; மிதுனத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் இலக்கணம் (எ-று). 17



கடகத் திங்கள்

241. அடிகோடிப் படர்ந்திடுவன் இடையு யர்ந்தோன்
அரிவைசயன் சற்சனபந் துடையோ னுகும்
கடவுளரின் அறிவுடையன் கிரகம் மிக்கோன்
களங்கனெனச் சயவிருத்தி யுளத னத்தன்
வடிவுகுறள் களம்பெருத்தோன் வணங்கி னேர்க்கு
வசமாவன் பந்தன்பன் வான்றே யத்தில்
அடவியினிற் களித்திடுவன் கிரகந் தன்னில்
அடைந்திடுமா டொறுங்கடகத் திந்தி ருனே.

(எ-து) அடியைக் கோணலாக வைத்து வேகமாக நடப்போன் ; இடை உயர்ந்தோன் ; ஸ்திரீகளைச் செயிப்பவன் ; சற்சனங்களைப் பந்துவர்க்கமாக உடையவன் ; தேவக் ஞான முடையவனுய்க் காலங்களை அறிபவன் (தேவக்ஞன்) ; அநேகங் கிரக முடையவன் ; சந்திரனைப் போலே க்ஷயமும் விருத்தியு முடைய தன முடையவன் ; குறளன் ; பெருத்த கழுத்துடையன் ; வணக்க முடையவர்க்கு வசமானவன் ; அல்லாதவர்க்கு வசமல்லாதவன் ; பந்துக்களுக்கு இஷ்டன் ; தண்ணீரிலும் பூஞ்சோலைகளிலும் விளையாடப் பிரிய முடையவன் ; எத்தேச காலமும் கிரகத்தி லிருப்பவன் ; கர்க்கடகத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் பலன் (எ-று). 18

குறிப்பு :—"களங்கன் எனச் சய (க்ஷய) விருத்தி உளதனத்தன்" என்ற கருத்து, சந்திரன் ஒரு காலத்தே கலைகள் வளரப் பெற்றும், குறையப் பெற்றும் இருத்தல் போல, ஒரு காலத்தே பொருள் வளரப்பெற்றும், ஒரு காலத்தே அது குறையப் பெற்றும் இருப்பன் என்பதாம். களங்கன்—சந்திரன்.

சிங்க இராசியிற் றிங்கள்.

242. தீர்க்கமுளன் நூலவலும் பரந்த துண்டன்
திகழ்ந்திடுமிங் கலக்கண்ணன் சிறுவ றற்பன்
வாக்கிலரி வையர்நோடி வனில்மலை வனத்தில்
வாஞ்சையுளன் அகாரியத்தில் நெடுஞ்சி னத்தன்

RangaRakes tamilnavarasam.com

நோக்கலிலாப் பசியுடனுட் டினத்தை யுள்ளோன்
நுவலுதரந் தந்தமன நோய துள்ளோன்
தேக்குகொடை விக்கிரமன் திரபுத்தி கெருவி
திகழன்னை நேயனரித் திங்க ளானே.

(எ-து) தீர்க்கவான்—சூரன் ; தூல அனு—பெருத்த தாள்வாயன் ; பரந்த துண்டன்—பரந்த மூக்குடையன் ; பிங்கலக் கண்ணன்—குராவிச்ச நிறத்தை யுடைய கண்ணன் (பொன்னிறம் உள்ள கண்ணன்) ; சிறுவர் அற்பன்—புத்திரர் அற்பமுடையன் ; (வாக்கில்) அரிவை யர் தோடி—(சொல்லால்) ஸ்திரீ துவேஷப் பிரியன் ; ஊனில் மலை வனம்—மாங்கிசத்திலும், மலையிலும், வனத் திலும் பிரிய முடையவன் ; அகாரிய கோபி—குறைந்த காரியத்திலே (பயனற்ற விஷயத்தில்) அநேக நேரங் கோபமுடையவன் ; பசியுடையன் ; உட்டினம்—உட்டின தாகத்தை யுடையவன் ; உதரம் தந்தம் மனம் நோயது உள்ளோன்—வயிற்றிலும், பல்லிலும், இருதயத்திலும் நோயுடையன் ; ஈகை உடையவன் ; விக்கிரமம்—மிக்கபலமுடையன் ; திர புத்தி (நிலைத்த புத்தி) யுடையன் ; தாய்க்கு இனியன் சிங்கத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் குணம் (எ-று). 19

குறிப்பு :—தீர்க்கன்—கொடூரனுமாம்.

கன்னிராசியிற் றிங்கள்

243. நாணுறுமந் திரமுடையன் அழகு முள்ளோன்
நன்னயனன் படர்ந்திடும்வா கங்கை நீண்டோன்.
காணுறுநற் சுகியுயர்ந்த சொல்லன் சூளன்
கலைநிபுணன் சாத்திரமுள் ளுணர்ந்தோன் றன்மி
பாணுறுமே தாவிசுர தத்தி லின்பன்
பரகிரகந் தனமுடையன் பரதே சத்தன்
வாணுதலாய் இப்புவியின் மீதே யின்ப
வசனமுளன் றாய்க்கினியன் வனிதை யிந்தோன்.



(எ-து) நாண முடையவன் ; மந்திர வசன முடையவன் ; அழகுடையவன் ; அழகிய கண்ணன் ; பரவிய தோளும் கையும் நீண்டவன் ; சுகமுடையவன் ; உச்சித (உயர்ந்த) வார்த்தை சொல்வன் ; சத்தியவான் ; சகல கலை வல்லன் ; சாத்திர அர்த்தம் அறிந்தவன் ; தன்மஞ் செய்வன் ; மேதாவி ; மேதாவியாவது புத்திமான் ; ஸ்திரீ சங்கமத்திற் பிரியன் ; பரகிரகங்களும் பர தனங்களும் உடையவன் ; பரதேச வாசி ; இனிய வசன முடையவன் ; தாய்க்கு இனியன் ; இவை கன்னியிற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் குணம் (எ-று) 20

குறிப்பு :—'பரகிரகத் தனமுடையோன்' என்பதிலிருந்து பிருகத் சாதகத்தில் இல்லை. (கடலங்குடி நடேச சாஸ்திரிகள் பதிப்பு) ஆனால் பிருகத் சாதகம் பழைய பதிப்பில் "பரக்ரு ஹைஹம் வித்தைச்ச ஸம்யுஜ்யதே கந்யயாம் பரதேசக: ப்ரியவசா: கந்யா ப்ரஜோல்ப தமஜ:" என்று உள்ளது. மங்களேஸ்வரியமும் "பரநகரதனில் வாசஞ் செய்பவன் பாவிலையச் சேர்ந்து பரதனம் பற்றும்" என்று கூறுகிறது. (18-19) சாதகாலங்காரம் 'சுதேச சஞ்சாரி' என்று கூறும் (159)

துலா இராசியிற் றிங்கள்.

244. தேவர்பிரா மணர்சற்ச னர்பூசை வல்லன்
செப்பரிய கீர்த்தியுளன் சுத்த சீலன்
பாவையர்கள் செயன்வளர்ந்தேகன் நீண்ட துண்டன்
படர்ந்திடுவன் கிரிசதனு வத்த முள்ளோன்
தாவுறும்ம ளுங்கமுளன் கொள்ளல் விற்றல்
தனிற்குசலன் சுரநாமத் துவய நாமன்
தூவுறுநோய் களியன்பங் துபகா ரத்தன்
துவேசிவிரோ தியன்றுலையி லிந்தி ரனே.

(எ-து) தேவர்களையும் பிராமணர்களையும் சற்சனர்களையும் பூசிப்பன் ; கீர்த்தி யுடையன் ; சுத்த சீலன் ; ஸ்திரீகளைச் சேயிப்பன் ; நீண்ட தேகன் ; நீண்ட மூக்குடையன் ; நடையில் வல்லவன் ; கிரிச தனு ; கிரிச

தனுவாவது ; இளகின சரீரத்தை யுடையன் ; தனவான் ; அங்க வீனன் ; கிரய விக்கிரயத்தில் வல்லவன் ; தேவர்கள் நாமத்திற்கு இரண்டாம் நாமத்தோடுங் கூடியவன் ; ரோகி ; செருக்குடையன் ; பந்துசன உபகாரி ; பந்துத் துவேசி ; பந்து விரோதி ; இவை துலாத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் குணம் (எ-று). 21

குறிப்பு :—சுத்த சீலன் உள்வெளி இரண்டிலும் தூய்மை யுடையன் ; அல்லது வேதத்தை அத்யயனஞ் செய்தவன் கிரிச தனு—இளைத்ததும் பலமற்றதுமான சரீரம். சுர நாமத் துவய நாமன்—சபையில் வியவகரிப்பதற் குரிய தேவதையின் சம்பந்தியான இரண்டாவது பெயரை யுடையவனாகவும் அதாவது இரண்டு பெயர்கள் ஏற்பட்டு அவற்றுள் இரண்டாவது பெயர் தேவதா நாமமாக இருக்கும் என்பது கருத்து என்பர் (கடலங்குடி — சாஸ்திரிகள்).

விருச்சிக இராசியிற் றிங்கள்.

245. நீண்டநய னத்தோடு மார்பை யுள்ளோன்
நிகழ்த்துசங்கஞ் சானூரு விருத்த முற்றோன்
ஆண்டுளவா லியநோயன் குருபி தாவோடு
அமருள்ளோன் அரசர்கள்பூச் சியனே யாகும்
வேண்டியபிங் கலநிறத்தன் குரூர சேட்டன்
விடமகுணன் குலிசங்கள் சங்கம் போன்ற
தூண்டுறுமிங் கிதமுடையன் மறைத்த பாவன்
சொல்லியதோர் விருச்சிகத்திற் சோமன் றனே.

(எ-று) நீண்ட கண்ணும் மார்பும் உடையவன் ; சங்கம் சானு ஊரு விருத்த முடையன் ; சங்கம்-கணைக் கால் ; சானு-முழங்கால் ; ஊரு-துடை ; விருத்தம்—உருட்சி ; கணைக்காலும், முழங்காலும் துடையும் உருண்டிருக்கும் ; வாலிப வயசில் (நோயுடையன்) குருவோடும், பிதாவோடும் வழக்குரைப்பன் ; இராச குல பூச்சியன் ; பிங்கல நிறத்தன் (பொன்னிறத்தன்)—பொற்கென்ற நிறமுடையன் ; குரூர சேஷ்டன் ; (அஃதாவது) விஷம குணத்தில் சேஷ்டன் ; மச்சம், வச்சிரம், பட்சி இவைகள் அடையாளமாக மறை கபாவத்தைச் செய்பவன் ; இவை விருச்சிகத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் குணம் (எ-று). 22

குறிப்பு :—பிருகத் சாதகம் பழைய பதிப்பில் "ஜநக குரு வியுக்த: சைசவே வ்யாதிதச்ச" என்று கூறிய முறை பாட்டில் மாற்றி வைக்கப்பட்டுள்ளது. குலிசங்கள் சங்கம் போன்ற இங்கிதமுடையன்' என்று மூலபாடம் உள்ளது ; ஆனால் பிருகத் சாதகம் 'மச்சம், வச்சிரம், பறவை இவற்றின் இரேகைகளை யுடையன்' என்று கூறுகிறது.



தனுர் இராசியிற் றிங்கள்

246. அதிதீர்க்க வானனத்தன் சிரோத ரத்தன்
அன்றியுமே பிதிர்தனத்தன் றியாகி யாகும்
துதிகவிஞன் வீரியவான் பொருளு ணர்ந்தோன்
தூலமுற்றோன் செவியதரந் தந்தம் நாசி
வதிகருமி சிற்பிகுற ளாங்கி சத்தன்
வருகுநகி திரண்டபுயன் மதுர வாக்கன்
விதிதருமி பந்திகமும் பெலவான் றன்னுல்
விதியலதைச் சாதிப்ப னுடன்றனுவில் விந்தோன்.

(எ-று) ஆனனம்—முகம் ; சிரோதரம்—கழுத்து ; அதி தீர்க்கம்—பெருத்தவன் ; முகமும் கழுத்தும் பெருத்தவன் ; பிதிர் தன முடையன் ; தியாகங் கொடுக்கப் பட்டவன் ; கவித்துவஞ் செய்வோன் ; வீரிய முடையன் சாத்திர அர்த்தங்க ளுணர்ந்தவன் (பேசும் திறமை யுள்ளவன் எ-ச) ; செவி அதரம் தந்தம் நாசி தூலவான் ; செவி—காது ; அதரம்—உதடு ; தந்தம்—பல் ; நாசி—மூக்கு, தூலம்—பெருத்தவன் ; கருமி—உத்யோக வல்லவன் ; சிற்பவான் ; குறளாங்கிசத்தன்—குறுகிய (கூனலான அல்லது நேராக விளங்காத) தோட்பட்டையை யுடையன் ; குநகி—அழிநக முடையவன் (விகாரமான நகமுடையவன்) திரண்ட புயமுடையவன் ; மதுரமா

யிருக்கிற சொல்லுடையன்; தருமவான் அந்தந்த காலத்திற் கேற்ற செயன் முறையறிந்தோன்; பந்துக் களை இகழுவோன்; பெலவான் (பலாத்); தன்னால் வசமல்லாத காரியத்தை உடனே சாதிப்பன் வசமாகுதலை அடையமாட்டான் என்பர் (கட. நடே). இவை தனுசில் நிற்கப் பிறந்தவன் குணம் (எ-று).

மகர இராசியிற் றிங்கள்.

247. தாரமொடு மைந்தரோடு களியே செய்வன்
தனதுதரு மம்புகலும் அரைக்கீழ்க் குஞ்சன்
பேரழகி னுட்டமுளன் இடைமெ லிந்தோன்
பேசல்கிர கித்திடும்பாக் கியத்தை யுள்ளோன்
பாரலசன் மாகுடம்பன் படர வல்லன்
பகர்வலியன் காவியனும் உலுத்தன் மோகி
கேரலதாம் விருத்தையினங் கனையன் நாணன்
நிந்தியனும் மகரத்தி லிந்தி னனே.

(எ-து) தாரத்துடனேயும் புத்திரருடனேயும் விளையாடுவன்; தான் செய்த தருமத்தை எந் நேரமுஞ் சொல்வன்; அரைக்குங் கீழ் குறளன்; அழகிய கண்ணுடையன்; இடை சிறுத்தவன்; சொன்னவுடனே வார்த்தைகளைக் கிரகிக்கிறவன்; பாக்கிய முடையன்; அலசன்; அலசனாவது மந்தன்; (அலசல்—சோம்பல்) அழுக் குடம்பன்; நடையில் (நடத்தலில்) வல்லவன்; ஸ்திரீகளுள் பெலமுடையவன்; [1](காவியம் உணர்பவன்; உலோபி; மோக முடையவன்; தனக்கு ஒவ்வாத முதுமைப் பருவத்தாளை மனைவியாக உடையவன்) நாணம் இல்லாதவன்; நிந்தியன் மகரத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் குணம் இவைகளாம் (எ-று). 24

[1] குறிப்பு:—"காவியனும் உலுத்தன் மோகி நேரலதாம் விருத்தையின் அங்கனையன்" என்பது வரையில் உள்ள பகுதிக்கு உரை காணப்படவில்லை. ஆனால் உரை எழுதிச் சேர்க்கப்பட்டது (பதிப்பாசிரியர்). குஞ்சம்—குறள்; "சிந்துவாமனமே குஞ்சம் குறள்" என்பது சூடாமணி நிகண்டு. மகரத்தில் சந்திரன் நிற்கப் பிறந்தவனை "மிகு லோபியே அருமையாகிய தமிழில் வல்லவன்" என்று மங்களேஸ்வரீயம் (18-23) கூறும். சாதகாலங் காரமும் "நிறைந்த காவியத் தெளிவான் நிதி உதவா வுலுத்தன்" (161) என்று கூறுகிறது.



கும்ப இராசியிற் றிங்கள்

248. கரபமெனுங் களமுடையன் நரம்பு யர்ந்தோன்
காணுமுரோ மங்களுளன் நீர்க்க தேகி
சரணமுடன் ஊருமுகஞ் சகனத் தோடு
தனிமருங்கு பெருத்திடும்பா வத்தின் மோகன்
பரவனிதை யத்தமுளன் சயம்வி ருத்தி
பன்மலரிற் சந்தனத்திற் பிரிய னாகும்
தெரிவரிய சுகிர்தமுளன் நடையில் வல்லோன்
சேயிழையே கும்பத்திற் றிங்க ளானே.

(எ-து) கரபம்-ஒட்டகம்; களம்-கழுத்து; ஒட்டகத்தின் களம்போலே யிருக்கிற கழுத்தை யுடையன்; நரம்புடையன்; உரோமக்கட் டுடையன்; தீர்க்க தேகன்-நீண்ட சரீரன்; சரணம்-கால்; ஊரு-துடை; சகனம்-இடை; கால்களும் துடையும் முகமும் இடையும் ஆகிய இவை பெருத்தவன்; பாவத்தில் இச்சையுடையன்; பரஸ்திரீகளையும், பரதிரவியங்களையும் அனுபவிப்பன்; க்ஷயமும், வர்த்தனையும் (குறைவும், பெருக்கமும்) உடையன்; புட்பத்திலும், சந்தனத்திலும் பிரிய முடையன்; சுகிர்த முடையன்; நடையில் வல்லவன்; இவை கும்பத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் குணம் (எ-று).

குறிப்பு:—மங்களேஸ்வரீயம் 'நயருள்ளவன்' என்று கூறுகிறது. பிருகத்சாதகமும் 'சிநேகிதனிடத்திற் பிரீதியுள்ளவன்' என்று கூறுகிறது. சாதகாலங்காரம் 'பெருங்குதியன்' என்று கூறுகிறது.



RangaRakes tamilnavarasam.com

### மீன இராசியில் திங்கள்

249. சலசரமே மாறிபல தனத்தை யுள்ளோன்
   தாரத்திற் கோசிகத்திற் பிரிய னாகும்
உலவுசம கந்தரதே கத்த னாகும்
   உன்னதமாந் துண்டமுளோன் பெருத்த கம்மன்
கலகமுறு கருதலரைப் பரிப விப்பன்
   காரிகையைச் செயித்திடுவன் அழகார் கண்ணன்
நிலவுநிதி தனமதனாற் போகி யாகும்
   நீள்கவினன் மீனத்திற் றிங்க ளானே.

(எ-து) சலசரம் முதலான பல தனங்களை உடையன்; சலசரம் முதலான பல தனங்களாவது சலத்தில் உண்டாகப்பட்ட மீன், முத்து, பவளம் இவற்றினாற் பலவகைத் திரவிய முடையவன்; ஸ்திரீ களிடத்திலும், வஸ்திரத்திலும், பிரியமுடையன்; சமனா யிருக்கிற அழகுடைய சரீரன்; உன்னத மாயிருக்கிற துண்டன்; உன்னதம்–வளர்ந்தது; துண்டம்–மூக்கு; பெருத்த தலையை யுடையன்; கம்-தலை; சத்துருக்களைப் பரிபவப்படுத்துபவன்; பரிபவப்படுத்தல்—செயித்தல்; ஸ்திரீகளைச் செயிப்பன்; அழகுள்ள கண்ணுடையன்; நிதி தனங்களினாலே அனுபோக முடையவன்; அதிக வித்துவான். இவை மீனத்திற் சந்திரன் நிற்கப் பிறந்தவன் குணம் (எ-று). 26

குறிப்பு :—இந் நூல் 'ஸ்திரீகளைச் செயிப்பன்' என்று கூறுகிறது. கடலங்குடி நடேச சாஸ்திரிகள் மொழி பெயர்த்த பிருகத் சாதகம் 'பெண்டிருக்கு அடங்கினவன்' என்று கூறுகிறது. மங்களேஸ்வரீயம் 'மான்நிகர் விழியர் வசப் படான்' என்று கூறுகிறது. ஓராசாரமும் 'பெண்களைச் செயிப்பன்' என்றே கூறுகிறது.



### இலக்கினமும், இலக்கினத்திற் கூரியவனும், திங்களும் வலிவு பெற்றிருந்தால் மேற்கூறிய பலன் நிகழும் என்றல்

250. உதயமுந் ததீசன் றானும்
      உயர்மதி யிம்மூன் றுக்கும்
   விதியுறு பலமுண் டாகில்
      பலங்கள்பூ ரணமாய் மேவும்
   அதிலொன்று தாழின் முவ்வொன்
      றவையிரண் டெனிலி ரண்டாம்
   புதியபூங் குழலாய் மூன்றும்
      போமெனிற் பலன்கள் போமால்.

(எ-து) உதய இலக்கினம், ததீசன்—இலக்கி னேசன், மதி—சந்திரன் இந்த மூன்றும் பலமுண்டாகில் சொல்லப்பட்ட பலன்கள் சம்பூரணமாய்க் கொடுக்கும்.

இலக்கினாதிபதி, சந்திரன், இலக்கினம் இந்த மூன்றில் ஒன்றுக்குப் பலங் குறையில் மூன்றி லொன்று குறையும், இரண்டுக்குப் பலன் குறையில் மூன்றில் இரண்டு பங்கு குறையும் மூன்றும் பலவீன மாகில் எல்லாப் பலமும் போம் (எ-று). 27

குறிப்பு :—"திங்கள் இருக்கும் இராசியும், திங்கள் இருக்கும் இராசிக் குடைய கோளும், திங்களும் தனக்குரிய பலத்தைப் பெற்றிருப்பின் மேற் கூறிய பலன்களெல்லாம் குறைவின்றிக் கொடுப்பவனாக அவன் ஆகின்றான்; பலன் தரும் திங்களைப் போல ஏனைய கோள்களும் நன்கு கருதத் தக்கன" என்று பிருகத் சாதகம் (அத்-17-சு-19) கூறுகிறது.

"திங்கள் மேற் கூறிய இராசிகளில் யாருடனும் கூடப் பெறாமலும் நோக்கப்படாமலு மிருப்பின் மேற் சொன்ன பலன்கள் நிகழும். வேறு கோள்களுடன் கூடப் பெறினும் அவரால் பார்க்கப் பெறினும் அக் கோள்களின் பலனையும் சேர்த்துச் சொல்ல வேண்டும்" என்று ஓராசாரம் (அத்-29-சு-18) கூறுகிறது.

RangaRakes tamilnavarasam.com

## இராசி சீல அத்தியாயம்

### சூரியன் இராசிகளில் நின்ற பலன் III

வேறு

மேடத்தில், இடபத்தில் சூரியன் நின்ற பலன்

251, கிரிய துங்க மிரவிவல்லன்
கீர்த்தி யற்ப தனம்படர்வோன்
கரவாள் தரித்தோ ஞும்பரமக்
காலே யெனிற்பூ ரணதனவான்
பரவாட் பிரத்த ருடையோனும்
பருதி விடையி லுநிற்கலிங்கன்
விரைசேர் சுகந்தம் பணியாரம்
கீத மரிவை வெற்றியனே.

(எ-து) மேடத்தில் உச்ச பாகத்தில் ஆதித்தன் நிற்கில் வல்லபன் ; கீர்த்தி யுடையன் ; அற்ப தனவான் ; நடையில் வல்லன் ; ஆயுத மெடுத்துச் சஞ்சரிப்பன் ; பரம உச்சாங்கிசத்தில் ஆதித்தன் நிற்கில், பூரண தன முடையன் ; ஆயுதமெடுத்து நடக்கிற பிருத்தயன்மா ருடையன்.

இடபத்தில் ஆதித்தன் நிற்கில் வஸ்திரப்பிரியன் ; சுகந்த பூஷணமுடையன் ; பணியார சீவிதன் ; கீதவாத் தியப் பிரத்தியன் (சமர்த்தன்) ; ஸ்திரீகளைச் செயிப்பன் (எ-று). 28

குறிப்பு :—மேட இராசியில் பத்தாவது பாகை சூரியனுக்குப் பரமோச்ச பாகையாகும். இடபச் சூரியனுக்கு "துன்னும் ஆடை சுகந்த வஸ்த்துவின் தொழிலினால் மிகச் செட்டுளான்" என்று மங்களேஸ்வரீயம் கூறுகிறது.



மிதுனம், கடகம், சிங்கம், கன்னியில் ஆதித்தன் நின்ற பலன்.

252. மிதுனங் கதிர்சோ திடவித்தை
வித்தை யுளன்நன் டிரவியிடி
அதிக தீர்க்கன் பரகருமி
அறியுந் தேக கிலேசமுளன்
கொதிமா விரவி மலைவனங்கோ
முதிருந் தனத்தோன் வீரமுளன்
கதிர்பெண் ணெழுதோ வியங்கதைகா
வியம்பெண் வடிவன் கணிதமுளன்.

(எ-து) மிதுனத்தில் ஆதித்தன் நிற்கில் சோதி டத்தினாலும் (ஏனைய) வித்தையினாலும் தனம் உடையன்.

கர்க்கடகத்தில் ஆதித்தன் நிற்கில் திரவிய மில்லா தவன் ; சூரன் ; பர காரியத்தைச் செய்யப்பட்டவன் ; அறிவுடையன் ; தேகத்திலே ரோகாதி கிலேச முடை யவன்.

சிங்கத்தில் ஆதித்தன் நிற்கில் மலைகள் வனங்களிற் சஞ்சாரன் ; பசுக்களுடையவன் ; அர்த்த முடையன். வீரிய முடையன் ; கன்னியில் ஆதித்தன் நிற்கில் அட்சர வித்தையுடையன் ; சிற்பி ; கதை காவியங்கள் அறிவன் ; ஸ்திரீவடிவனும் (எ-று). 29

குறிப்பு :—ஏனைய வித்தை—இலக்கணம் முதலிய கலை களாம். கடகச் சூரியனுக்குச் சாரீரமான கஷ்டம் என்று கூறிச், சாரீரம் வழிநடத்தல் என்றும் கூறுவர். கிலேசம் - மனம்பற்றிய துன்பம். சிங்கச் சூரியனுக்கு மூடனாக இருப்பன் என்றும் கூறுவர். கன்னிச் சூரியனுக்குக் கணித அறிவும் உண்டென்பர்.

துலாம் விருச்சிகம் தனுசு மகரங்களில் ஆதித்தன்.

253. கோலி விரவி சுரர்படர்வோன்
கூறும் பொன்கீ ழிணங்குக்தேன்
மேலு மிரவி சினஞ்சகசி
மிகும்பொன் படைவில் லினிலிரவி

RangaRakes tamilnavarasam.com

நூலார் புகழன் உண்டைகன்
தனவான் தீர்க்கன் மிகுசிற்பன்
பாலின் கதிர்மான் மிடியுலுத்தன்
பரபொன் னீசன் குவாணிகனே.

(எ-து) துலாத்தில் ஆதித்தன் நிற்கில் சுரர் சேர்வை செய்வன் (கள் முதலியவற்றை விற்பவர், உண்பவர்;) வழி நடையுடையன்; பொன் வாணிகன்; நீசரொடு சிநேக முடையன்.

விருச்சிகத்தில் ஆதித்தன் நிற்கில், கோபி; சகசி; சகசியாவது விசாரியாது ஒரு காரியத்தைச் செய்கிறவன். திரவியத் தேடிக் கூடுவன்; சாரத்திராந்தியம் அறிவன்; (அத்திர வித்தையை முடிவுபோகக் கற்றவன்).

தனுசில் ஆதித்தன் நிற்கில் வித்துவான்களால் கொண்டாடப்பட்டவன்; பிடகன்; பிடகனாவது காருக வயித்தியன்; தனவான்; தீர்க்கன்; தீர்க்கனாவது சூரன்; சிற்பி; சிற்பகர்மஞ் செய்பவன்.

மகரத்தில் ஆதித்தன் நிற்கில், தனம் இல்லாதவன்; உலுத்தன்; பாதிரவியமுடையவன்; நீசகர்மஞ் செய்வன் குவாணிகன்; குவாணிகனாவது ஆகாத வாணிகத்தைச் செய்கிறவன்; மூடனும் (எ-று). 30

குறிப்பு :—' சுரச் ' என்பது கள் விற்போர் கல்லுனன் போர்களை உணர்த்தும். துலாச் சூரியனுக்கு இரசவாத வித்தையால் பொன்னை யுண்டாக்குபவன் என்றும், விருச்சிகச் சூரியனுக்கு விஷப் பிரயோகத்தால் பொருளீட்டுபவன் என்றும், தனுசித் சூரியனுக்குக் (காருகன்) கைத்தொழில் நடத்துபவனாகவு மிருப்பன் என்றும், மூடனாக இருப்பனென்றும் கூறும். (பிருகத் சாதகம்).

கும்பத்தில் மீனத்தில் ஆதித்தன்

254. குடங்கதிர் மிடியன் நீசன்
குமரர்பாக் கியத்தைப் போக்கும்
திடங்கயற் பானு தோயச்
செல்வனா மியராற் பேணும்



உடுபதி யருக்கன் நட்சத்
திரத்துறும் மனித னுக்கே
இடுமுடற் பாகத் துக்கே
ஏயஅங் கிதமி யம்பே.

(எ-து) கும்பத்தில் ஆதித்தன் நிற்கில் "மிடியன் நீசன் குமரர் பாக்கியம் போம்" என்பது, மிடியன்—திரவிய மில்லாதவன்; நீசன்-கர்மங்களில் அனுசித கர்மங்களைச் செய்கிறவன்; குமரர் பாக்கியம் போம்—புத்திரரையும், பாக்கியத்தையும் போக்கும்.

மீனத்தில் ஆதித்தன் நிற்கில் தோயச் செல்வனாவான்; தோயச் செல்வன் என்பது தோயத்தினிட மாகத் தோன்றுகிற செல்வம்; தோயம்—நீர்; செல்வன் முத்துப் பிரவாளாதி வாவியத்தினால் ஐசுவரிய முடையவன்; ஸ்திரீகளால் ஆதரிக்கப்பட்டவன்.

சந்திரன், சூரியன் நின்ற நட்சத்திர பாகம் மனிதனுக்குச் சமனாகத் தேகம் எவ்விடங் கண்டது அந்தப் பாகங்களில் மறு, மச்சியமாகிய (மச்சம்) அங்கிதங்கள் சொல்லுக (எ-று). 31

குறிப்பு :—கால புருடனுடைய உறுப்பிற்கு ஒப்பானதும் திங்கள், ஞாயிறு என்னும் கோள்களுடன் கூடியதுமான சாதகனுடைய சரீர அவயவத் தானத்தே மறுவைச் சொல்லுக. அஃதாவது, மேடத்தில் சந்திரனோ, சூரியனோ இருப்பின் தலையிலும், இடபத்தி லிருப்பின் முகத்திலும், இவ்வாறு உய்த்துணர்க. இவ்வாறு கூறும் பிருகத் சாதகம். ஆனால் மங்களேஸ்வரீயம் "சந்திரன் சூரியன் ஏக இராசியை அடைந்திருக்க எந்த இராசியில் கூடி யிருப்பாரோ அந்த இராசியினுடைய நட்சத்திரமான கால புருடனுக்குச் சொல்லப்பட்ட சரீரத்துக்குச் சமானமான அங்கங்களில் மச்சம் சொல்ல வேண்டும்" என்று (18-13) கூறுகிறது.

RangaRakes tamilnavarasam.com

## இராசி சீல அத்தியாயம்

### செவ்வாய் இராசிகளில் நின்ற பலன் IV

#### செவ்வாய் மேட விருச்சிக இடப துலாம்.

255. அவனிசன் சுயபம் முற்றால்
அரசர்பூச் சியன்ப டேசன்
கவனிகன் தனவான் செட்டி
கள்வர்புன் விடய பூரி
புவனிசன் புகர்பம் முற்றால்
பெண்செயன் பந்து பொல்லான்
குவனிதை யன்பன் தேசன்
விஞ்சையன் சுபன்பிற் கோபி.

(எ-து) "அவனிசன் சுய பம் உற்றால்" என்பது, அவனிசன்—செவ்வாய்; சுய பம் உற்றால்—தன்னுடைய இராசியான மேட விருச்சிகத்தில் நிற்கில்; அரசர் பூச்சியன்; படைக்கு நாயகன்; நடையில் (நடத்தலில்) வல்லவன்; தனமுடையன்; வாணிக முடையோன்; களவினாலும் புண்ணினாலும் பயமுடையன்; விடயங் களினாலே பூரியாயிருப்பன்; விடயம்—ஸ்திரீ விடயம்; பூரி—நிறைந்தது.

செவ்வாய் சுக்கிர இராசியான இடப துலாத்தில் நிற்கில், ஸ்திரீ செயன்; பந்துக்களைப் பொல்லாப்புச் சொல்வன்; குவனிதையன்; குவனிதையனாவது தன்னுடைய ஸ்திரீ யில்லாமல் பிறர் தாரத்தில் இச்சை யுடையவன்; அழகுடையன்; இந்திர சாலாதி விஞ்சை யுடையவன்; சுப சோபனமாயிருக்கிற வேடத்தை உடையவன்; பீதி யுடையனும்; குரூரனும் (எ-று). 32

குறிப்பு :—'படேசன்' என்பது படைக்கு ஈசன் என்று பொருள்படும். 'கவனிகன்' என்பது கமனம் (போதல்)



செய்வோன் என்னும் பொருளது. அவனிசன், புவனிசன் என்பன செவ்வாயின் பெயர்.

#### மிதுன கன்னியிலும் கடகத்திலும் செவ்வாய் நின்ற பலன்

256. புந்திபம் அங்கி நிற்கில்
பொறுமையன் புதல்வ ருள்ளோன்
பந்திலன் கயன்காந் தர்வன்
காருணன் பயமின் றேற்போன்
சந்திர பம்மிற் செவ்வாய்ந்
தனஞ்சல வூர்திச் சோம்பன்
அந்தமி லறிவின் மிக்கோன்
அங்கவீ னன்க லாபி.

(எ-து) புதன் இராசியில் (மிதுனகன்னியில்) செவ்வாய் நிற்கில் சகிக்கப்படாதவன் (பொறுக்காதவன்) புத்திர ருடையன்; பந்துக்களோடு வேறுபட்டவன்; பரோபகாரி; கந்தர்வ வித்தையில் வல்லவன்; கந்தர்வ வித்தையாவது கீதம்; கீதத்தில் வல்லவன்; காருணன்; காருணனாவது காருண்யங்களோடு கூடினவன்; பய மில்லாதவன்; யாசகன் என்பது.

சந்திரன் இராசியில் (கடகத்தில்) செவ்வாய் நிற்கில், தனமுடையன்; சலவூர்தியை யுடையன்; சல வூர்தியாவது தோணி தொடங்கினவுள்ளன; சோம்ப லுடையவன்; அறிவில் வல்லவன்; அங்க வீனன்; கலாபி; கலாபியாவது துட்டன் (எ-று). 33

#### செவ்வாய் சிங்கத்திலும், தனுசு மீனத்திலும் கும்பத்திலும், மகரத்திலும் நின்ற பலன்

257. அரியிற்செய் மிடிசி லேசி
சுரமஞ்சான் அற்ப மிம்செய்
குருநிலம் எரியொன் ஜோர்சீர்
கோத்துகோ குமர ரற்பன்



RangaRakes tamilnavarasam.com

எரிகுடந் துக்க மர்த்த
　　மிலான்பொய்யன் படர்வன் கோபி
வருமக ரஞ்சேய் பூமி
　　தனஞ்சுத ருளன்மன் போல்வான்.

(எ-து) சிங்கத்திற் செவ்வாய் நிற்கில் திரவிய மில்லாதவன் ; கிலேசி ; சுரம் என்ற வனத்தில் நடக்கிறவன் ; அஞ்சான் ; ஸ்திரீ, புத்திரர் அற்ப முடையான் என்பது.

வியாழத்தின் நிலமான தனுசு மீனத்தில் செவ்வாய் நிற்கில் சத்துருவுடையன் ; கீர்த்தி யுடையன் ; இராசன் மந்திரி ; புத்திரர் அற்ப முடையன் என்பது.

கும்பத்தில் செவ்வாய் நிற்கில் துக்கமுடையன் ; தனவீனன் ; பொய் சொல்வன் ; நடக்கிறவன் ; குரூரனும் என்பது.

மகரத்திற் செவ்வாய் நிற்கில் பூமியுடையன் ; தனவான் ; புத்திரருடையன் ; இராசாக்களுக்குச் சமனான வனு மிருப்பான் (எ-று). 34

குறிப்பு :—சிங்கச் செவ்வாய்க்குக் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளுகிறவன் என்றும், தனுர் மீனச் செவ்வாய்க்கு ராசமந்திரியாயும், பயமற்றவனுயும் இருப்பன் என்றும் கூறும் (பிருகத்சாதகம்.)



## இராசி சீல அத்தியாயம்

### புதன் இராசிகளில் நின்றபலன் V

#### மேட விருச்சிகத்தில் இடப துலாத்தில் புதன்

258. புந்திசேய் நிலஞ்சூ தூனன்
　　புல்லியன் நாசன் சோரன்
பிந்துரு குபாரி தீயன்
　　படிறனும் பிருகிற் புந்தி
முந்துதே சிகனி றைந்த
　　முனைபாரி தனந்தே டின்பன்
தந்தருள் தானம் வல்லோன்
　　குருவின்கட் பத்தி சார்ந்தோன்.

(எ-து) செவ்வாய் நிலமான மேட விருச்சிகத்தில் புதன் நிற்கில் சூது பொருதுவான் ; ஆகாரத்திற் பிரியன் ; புல்லியன் ; புல்லியனுவது அமர்ந்தவன் ; நாசன் ; நாசனுவது தேவதா அனுக்கிரக மில்லாதவன் ; சோரன் ; குபாரி ; குபாரியாவது பொல்லாத வற்குடைய பாரியை யுடையவன் ; தீயன் ; தீயனுவது குரூரங்கள் செய்பவன்; படிறன் ; படிறனுவது பொய்யன் என்பது.

சுக்கிரன் நிலமான இடப துலாத்தில் புதன் நிற்கில் தேசிகன், நிறைந்த முனை, பாரி இவைகளை யுடையவன்; தேசிகனுவது-ஆசாரியன் ; நிறைந்த முனை பாரியாவது அநேகம் புத்திரர் பாரிகள் ; தனுர்ச்சிதத்தில் இட்ட முடையவன் ; தானஞ் செய்யவல்லன் ; குருபத்தி யுடையனும் (எ-று). 35

குறிப்பு:—மேட விருச்சிகத்தில் புதன் நிற்கப் பிறந்தவன் கடன் வாங்குதல் மதுபானம் செய்தல் நாஸ்திகனுயிருத்தல் என்னும் இவற்றையும் உடையன் என்றும், இடப துலாத்தில்

RangaRakes
tamilnavarasam.com

புதன் நிற்கப் பிறந்தவன் இங்கு கூறியவற்றுடன் சிநேகிதர் களையும் உடையனாக இருப்பன் என்றும் கூறும் (பிருகத் சாதகம்)

மிதுனத்திற் கடகத்திற் புதன் நின்ற பலன்.

259. மிதுனத்திற் புந்தி நிற்பின்
விகர்த்தனன் சாத்தி ரங்கள்
முதலுறு கலையில் வல்லோன்
முகப்பிரி யத்த னன்றி
அதிகமாஞ் சவுக்கி யத்தன்
அம்புலி யிருக்கம் புந்தி
துதிபெலார்ச் சிதமாஞ் சேமன்
சுபசனப் பகைஞ னுமே.

(எ-து) மிதுனத்தில் புதன் நிற்கில் விகர்த்தனன் ; விகர்த்தனனாவது பொல்லாத வண்ணம் பிரசங்கிக்கச் சொல்லுகிறவன் ; சாத்திரங்களிலும் கலைகளிலும் நிபுணன் ; நிபுணனாவது வல்லபன் ; பிரிய முகன் ; பிரியமுகனாவது சகலருக்கும் பிரியமாய் வசனிப்பவன் ; சவுக்கிய முடையன் என்பது.

சந்திரன் இருக்க (இருக்கை) மான கடகத்திற் புதன் நிற்கில் தன்னுடைய பெலார்ச்சித சேம முடையன் ; ஆர்ச்சிதம்—உண்டாக்கப்பட்டது ; சேமம்—தனம் ; தன்னுடைய பெலத்தினால் உண்டாக்கப்பட்ட தனம் உடையவன் ; சுய சனப் பகைஞன்—தன்னுடைய சனங்களுக்குச் சத்துருவாவன் (எ-று). 36

குறிப்பு :—விகர்த்தனன் · தற்புகழ்ச்சி செய்து கொள்ளுகிறவன் என்றுமாம். கடக புதனுக்குத் தண்ணீர் மூலம் ஈட்டப்பட்ட பொருளை யுடையவனாக இருப்பன் என்பர் (பிருகத் சாதகம்)

மங்களேஸ்வரீயம் மிதுன புதனுக்கு 'வியாகரணம் அறிந்தவன்' என்றும் கூறும்.



சிங்கத்திலும், கன்னியிலும் புதன்

260. சிங்கத்திற் புந்தி நிற்கிற்
றிரிதோடி தனஞ்சு கஞ்சேய்
பங்கிலான் படரு மூர்க்கன்
பரிபவன் நாரி லோலன்
தங்குமால் கன்னி யென்னிற்
றியாதியாம் புலவன் சாந்தன்
அங்கமே சுகிய துள்ளோன்
பொறைபுத்தி யஞ்ச லில்லான்.

(எ-து) சிங்கத்திற் புதன் நிற்கில் ஸ்திரீயைத் துவேசிக்கும் ; 'தனம் சுகம் சேய் பங்கிலான்' என்றது அற்ப தனமும், அற்ப சுகமும், அற்ப புத்திரரும் உடையன் ; நடந்து திரிவன் ; ஸ்திரீ லோலன் ; ஸ்திரீ லோலனாவது ஸ்திரீகளிடத்தில் இச்சையுடையன் ; பரிபவப்படுவன் என்பதாம்.

கன்னியிற் புதன் நிற்கில் தியாகி, அறிவுடையவன் ; குணமுடையவன் ; தேக சுகமுடையவன் ; பொறையுடையன் ; புத்தி வல்லன் ; பயமில்லாதவன் (எ-று) 37

குறிப்பு :—ஸ்திரீ தோஷி என்பது திரிதோடி என்று திரிந்தது. பரிபவம்—அவமானம். மங்களேஸ்வரீயம் கன்னிப் புதனுக்குரிய பலனை,

"உச்ச னாய்ப்புதன் கன்னி நின்றிட
உலகு தித்திடு பாலகன்
அச்ச மற்றவன் சௌரிய முள்ளவன்
ஆகுவா னிசை தியாகியாம்
மெச்ச வேமதி யூகி வித்துவான்
மேவு நற்கவிப் புலவனும்
இச்ச கத்தினில் வேத சாத்திர
இலக்க ணம்மதில் வல்லவன்" என்று (13-42) கூறுகிறது.

### மகர கும்பத்திலும், தனுசிலும், மீனத்திலும் புதன் நிற்கும் பலன்

261. காரியிற் புத்தி நிற்கிற்
        பரகரு மத்தன் இல்லான்
    சாருறு சிற்பி மிக்க
        கடனுளன் தீயன் தாங்கும்
    நேருறு வில்லிற் புந்தி
        நிருபற்குச் சமனில் வித்தை
    தேருற வுறைப்பன் மீனம்
        சேவக முவக்கி நீசன்.

(எ-து) சனி இல்லாகிய மகர கும்பத்திற் புதன் நிற்கில் பரவ காரிய கருமஞ் செய்வன்; தரித்திரன்; சிற்ப புத்தியுடையன்; கடன்படுவன்; எல்லோர்க்கும் பொல்லாப்புச் செய்வன்; சுமை சுமப்பன் என்பதாம்.

தனுசிற் புதன் நிற்கில் இராசாக்களுக்குச் சமனு யிருப்பவன்; வித்தை வல்லவன்; சத்திய வாசகன் என்பது.

மீனத்திற் புதன் நிற்கிற் சேவகன் சிநேகமுடையன் சேவகன்மார்-இராசாக்களைச் சேவிக்கப்பட்டவர்; அவ ருடைய சிநேகன்; நீச கர்மங்களைச் செய்வன் (எ-று) 38

குறிப்பு:—பரவ காரிய கருமம்-பிறர்க்குரிய செயலாகிய தொழில். அது அடிமைத் தொழிலாம். மகர கும்பப் புதனுக்கு பிறர்பொருளைக் கைப்பற்றுதல் என்னும் பலனும், ஊதியம் கொடாமல் பிறரிடம் வேலை வாங்குதல் என்னும் பலனும் கூறுப. மீன புதனுக்குச் சேவகரை வென்றவனாகவும், தாழ்ந்த சிற்பத் தொழில்களைச் செய்பவனாகவும் இருப்பன் என்ப (பிருகத்சாதகம்)



## இராசி சீல அத்தியாயம்

### வியாழன் இராசிகளில் நிற்கும் பலன் VI

#### செவ்வாய் சுக்கிரன் புதன் இல்லில் வியாழன் நின்ற பலன்

262. சேயிற் குருவேற் பொருநனிறை
        அத்தந் தாரம் சிறுவருளன்
    மேய கொடையாள் பொறைதேசன்
        உதார குணன்வெண் புகரிற்பொன்
    ஏயுந் தேகன் சுகம்பொன்னட்
        பெச்ச முளனீந் திடுமின்பன்
    ஆயும் புதனிற் பொன்னிறைந்த
        எழில்சேய் அமைச்சன் சுகியாமே.

(எ-து) செவ்வாய் இல்லான மேட விருச்சிகத்தில் வியாழன் நிற்கில் சேனைகளுக்கு அதிபனாவான்; மிகுந்த அத்தமும், தாரமும், புத்திரரும் உடையன்; கொடை யுடையன்; அடிமை யுடையன்; பொறை யுடையன்; தேசுடையன்; உதார குண முடையவன்; என்பதாம்.

சுக்கிரன் இராசியான இடப துலாத்தில் வியாழன் நிற்கில் நல்ல தேக முடையவன்; சுகம், அத்தம், மித்திர, புத்திர ருடையன்; கொடையுடையன்; எப் போதும் இன்பமுடையவன் என்பதாம்.

புதன் இல்லான மிதுன கன்னியில் வியாழன் நிற்கில் மிகுந்த அழகும் புத்திரரும் உடையனாவன்; மந்திரியாவன்; சுகமுடையனும். இல் என்பது இராசி. பொருநன் என்பது சேனாபதி (எ-று). 39

குறிப்பு:—மேட விருச்சிக வியாழனுக்கு 'உதார குணம்' உண்டென்று இந் நூலும் மங்களேஸ்வரீயமும் கூறுகிறது. 'தாதா' என்று கூறுகிறது பிருகத்சாதகம், இன்னும் அதற்கு

RangaRakes tamilnavarasam.com

மனைவி வழியான நலம் ஏற்படும் என்றும், இடப துலா வியாழனுக்கு 'எல்லோருக்கும் வேண்டியவனுக இருப்பான்' என்றும், மிதுன கன்னி வியாழனுக்கு மிக்க வீடு, தோட்டம் முதலிய பரிவாரங்களுடன் புத்திரர் சிநேகிதர் என்றும் இவரை உடையவனுகவும் இருப்பன் என்றும் கூறும் (பிருகத்).

கடகத்திலும் சிங்கத்திலும் தனுர் மீனத்திலும்
கும்பத்திலும் மகரத்திலும் வியாழன் நின்ற பலன்.

263. தூய குளிர்பொன் மணிபுதல்வர்
சுதார வாழ்வு கீர்த்திசுகி
ஆய அரிக்கு மிவைதனுமீன்
அரசு சேனு பதிதனவான்
சாய குருவின் பலமோர்ந்து
சாற்றுங் குடம்பொன் னலவற்கே
நேய மதுவாம் மகரம்பொன்
நீசன் அற்ப தனஞ்சுகியே.

(எ—து) கர்க்கடகத்தில் வியாழன் நிற்கில் இரத்தின புத்திர சுவதாரா காசு பரியம் (தார ஐசுவரியம்) உள்ளவன்; கீர்த்தி யுடையன்; சுக முடையன் என்பது.

சிங்கத்தில் வியாழன் நிற்கிலும் கர்க்கடகத்தில் வியாழத்திற்குச் சொன்ன பலனைப் போலே சொல்வது.

தனு மீனத்தில் வியாழன் நிற்கில் இராசாவாவன்; சேனுபதி யாவான்; தனவானுவான்; இதில் வியாழன் பூரண பலமாகில் இராசாவாவான்; மத்திப பலமாகில் சேனுபதி யாவான்; ஈன பலமாகில் தனவானுவான்; இந்தப்படி வலி கொண்டறிவது.

கும்பத்தில் வியாழன் நிற்கில் கர்க்கடகத்திற்குச் சொன்ன பலன் போலே சிந்தித்துச் சொல்வது.

மகரத்தில் வியாழன் நிற்கில் நீசன்; அற்ப தனமுடையவன் (அற்ப) சுகி.



நீசன்—பொல்லாத கர்மஞ் செய்கிறவன். அற்ப தனம்—குறைந்திருக்கிற தன முடையவன்; சுகி—சுகத்தோடு வேறுபட்டவன் (எ-று). 40

குறிப்பு:—"ரத்ன ஸுத ஸ்வ தார விபவ" என்பது பிருகத்சாதக மூலமாகும். கடக சிம்ம வியாழனுக்கு "மணியும் புத்திரனும் தனமும் களத்திரமும் ஐஸ்வரியமும்" உண்டாகும்என்பது அதன் உரையாகும். அதனுல் பாட்டில் 'சுதார' என்பதற்கு 'சுவம் தாரம்' என்று பிரித்துக் கொள்க. சிம்ம வியாழனுக்குச் 'சேனைத்தலைவனுக இருப்பான்' என்னும் பலனைச் சிறப்பாகக் கொள்ள வேண்டும். மகர வியாழனுக்கு அற்பதனம் அற்ப சுகி என்று பொருள் செய்க (அற்ப என்னும் அடைமொழியை சுகி என்னும் சொல்லுடனும் கூட்ட வேண்டும்.) "மகரே நீசோல்ப வித்தோ சுகி" என்பது பிருகத் சாதக மூலம். அங்கே 'அசுகி' என்று உரை காண்பர். மகர வியாழத்திற்கு

"அந்த ணன்கலை மீது றைந்திட
அவனி தன்வயின் வந்துசெய்
சந்த தம்மிக துக்கி யாமிவன்
சாரு நீசனுய்ச் சாற்றுவார்
சொந்த மாய்க்குல தொழில்வி டுத்தியும்
சொற்ப மாய்த்தன வந்தலும்
இந்த வாறென குருவு நீச
மிருக்க விப்பல னுமெனே"
என்று மங்களேஸ்வரீயம் (18-51) கூறும்.



RangaRakes tamilnavarasam.com

## இராசி சீல அத்தியாயம்

### வெள்ளி இராசிகளில் நிற்கும் பலன் VII

வெள்ளி மேட விருச்சிகத்திலும் இடபதுலாத்திலும் நிற்கும் பலன்

264. சிதன்குசன் இருக்கஞ் சேரிற்
பரத்திரி யாற்பொன் சேதம்
கொதிசினத் திழியுஞ் செல்வம்
குலபங்கன் சுயபம் மெய்தில்
மதிவலி யாற்பொன் றேடும்
மன்னர்பூச் சியன்றன் பந்துக்
கிதத்தரு பிரபு வாகும்
எய்திடுங் கீர்த்தி யஞ்சான்.

(எ–து) சுக்கிரன் செவ்வாய் இருக்கமான மேட விருச்சிகத்தில் நிற்கில் பரஸ்திரீ விஷயன்; அதனால், அர்த்த நாச முடையன்; கோப விபவங்களால் ஐசுவரிய மிழப்பன்; தன்னுடைய குலத்தி லுள்ளவர்க்குக் கேடு செய்வன் என்பது.

சுயபம்மான இடப துலாத்தில் சுக்கிரன் நிற்கில் தன்னுடைய புத்தி சாமர்த்தியத்தினாலே தனந் தேடுவன்; இராச பூச்சியன்; தன்னுடைய பந்துக் களுக்குப் பிரபுவானவன்; கீர்த்தி யுடையன்; அஞ்சான் (எ–று). 41

குறிப்பு :—மங்களேஸ்வரியம் "மேட விருச்சிகத்தில் சுக்கிரனிருக்கப் பிறந்தவன் பரஸ்திரீகளிடத்தில் வஞ்சகமான வார்த்தை பேசி அவர்களுடைய தனத்தை அபகரிப்பன்" என்று கூறும் (15-51).



மிதுனத்திலும் கன்னியிலும் மகர கும்பத்திலும் வெள்ளி நிற்கும் பலன்

265. பிருகுசன் மிதுனத் துற்றல்
பெருமைகொள் ளரசர் கர்மி
இருமைகொள் தனத்த னாகும்
இயலுறு கலையில் வல்லோன்
அரிவையில் புகரேல் நீச
கருமியால் சுன்பம் மானேல்
செரிவுறுஞ் சுநாரிக் கென்பர்
குநாரிகட் கினிய செய்வோன்.

(எ–து) பிருகுசன் ஆகிய சுக்கிரன் மிதுனத்தில் நிற்கில் இராச காரியமுடையவன்; தனவான்; கலை களில் வல்லவன் என்பது.

கன்னியிற் சுக்கிரன் நிற்கில் நீச கர்மங்களைச் செய்வன்; தரித்திர முடையன் என்பது.

சுன்பம் மானம்—மகர கும்பத்தில் சுக்கிரன் நிற்கில் சுய ஸ்திரீகளுக்குப் பொல்லாப்புச் செய்து, பொல்லாத ஸ்திரீகளுடன் கூடியிருப்பன் (எ–று). 42

குறிப்பு :—கன்னிச் சுக்கிரனுக்குத் 'தரித்திரமுடையன்' என்னும் பலன் பாட்டில் காணப்படவில்லை. மகரகும்பச் சுக்கிரனுக்கு 'சர்வசனப்பிரியன்' என்னும் பலனையும் சேர்த்துக் கூறும் (மங்களே–16–61).

வெள்ளி, கடகத்திலும் சிங்கத்திலும் தனுசிலும் மீனத்திலும் நின்ற பலன்

266. சுங்கனிந் திருக்கஞ் சேரில்
துவயபா ரியரி ரப்போன்
சிங்கலில் பீதி மிக்க
மதந்துக்கஞ் சேர்ந்தோன் சிங்கம்

RangaRakes tamilnavarasam.com

மங்கைய ராற்பொன் போக்கும்
மாதர்சொற் பெறுஞ்சே யற்பன்
தங்குவிற் கணன்பொன் னேன்மீன்
தனங்கவி இறைசன் மானி.

(எ-து) சுக்கிரன் சந்திரன் இருக்கமான கர்கடகத்தில் நிற்கில் இரண்டாம் பாரியுடையன் ; யாசகன் ; மனபீதியுடையவன் ; மிகுதியான ஆங்காரமும் (செருக்கும்) துக்கமும் உடையன் என்பது.

சிங்கத்திற் சுக்கிரன் நிற்கில் ஸ்திரீகளால் அழியப்பட்ட தனமுடையவன் ; (ஸ்திரீமூலம் கிடைத்த தனமுடையன் என்று கூறுகிறது ; பிருகத்.) ஸ்திரீகள் பிரதானமாய் அவர்கள் சொற் கேட்பன் ; அற்ப புத்திரருடையன் என்பதாம்.

தனுசிற் சுக்கிரன் நிற்கில் " கணன் பொன்னேன் " என்பது. கணனுவது சமூக பூச்சியன் ; பொன்னேன்—தனமுடையன் என்பது.

மீனத்திற் சுக்கிரன் நிற்கில் தனவான் ; வித்துவான் ; இராச பூச்சியன் ; சுபனும் (எ-று). 43

குறிப்பு :—தனுசுச் சுக்கிரனுக்கு " குணை: பூஜ்ய " என்று பிருகத் சாதகம் கூறுகிறது. அதற்கு நற்குணங்களால் பூசிக்கத் தக்கவன் என்று பொருளாகும். இந் நூல் " கணன் பொன்னேன்" என்று கூறுவதால் பிருகத் சாதக சுலோகத்திற்கு வேறு பாடமும் உண்டு போலும்.

மீனச் சுக்கிரனுக்கு " நிருப ஜனித பூஜோதி ஸாபக: " என்று பிருகத் சாதகம் கூறுகிறது. இந் நூல் " இறை சன்மானி " என்று கூறுகிறது. ஆனால் உரையாசிரியர் " இராச பூச்சியன் சுபனும் " என்று உரை எழுதி யிருப்பது மேற் காட்டிய பிருகத் சாதக சுலோகத்தை நினைவூட்டுகிறது. சிங்கச் சுக்கிரனுக்குக் கூறப்பட்ட பலன்களில் ' ஸ்திரீகள் பிரதானமாய் ' என்பதற்கு " உருவம் இலாவண்யம் அதிருஷ்டம் நற்குணம் முதலியன அமைந்த மனைவியாயிருந்தவிடுலே அம் மனைவிகள் பிரதானமாய்க் கருதப்பட்டு அவர் சொற் கேட்பன் " என்று கருத்துக் கொள்க.



# இராசி சீல அத்தியாயம்.

## சனி இராசிகளில் நின்ற பலன் VIII

### மேட விருச்சிக மிதுன கன்னியிற் சனி நின்ற பலன்.

267. மந்தன்மே டத்தின் மூர்க்கன்
வஞ்சன்பந் தில்லான் செல்வோன்
தந்ததேட் சிறைபா டுண்ணும்
சபலனுந் தயவில் லாதான்
புந்தியி னிருக்கங் காரி
நாணசுகம் பொன்சே யுள்ளோன்
சிந்திகன் எழுத வல்லன்
கலீனனும் பரிக்குஞ் செம்மல்.

(எ-து) சனி மேடத்தில் நிற்கில் மூர்க்கன் ; கபடன் ; பந்துக்களில்லாதவன் ; நடந்து திரிவன் என்பது.

விருச்சிகத்திற் சனி நிற்கில் சிறை காவற் கட்டுண்டாம் ; அதனுற் பாடுண்ணும் ; சபலன் ; சபலனுவது பல மில்லாதவன் தய வில்லாதவன் என்பது.

புதன் இருக்கமான மிதுன கன்னியிற் சனி நிற்கில் நாணம் சுகம் தனம் புத்திர ருடையன் ; ஆலசியம் (சிந்திகன்) : சித்திர மெழுதுவோன் ; கலீனன்—இடர்ப் பட்டவன் ; இரட்ச கர்த்நா ; இரட்சைக் குடைய கீர்த்தனும் (எ-று). 44

குறிப்பு :—சனி மேடத்தில் நிற்கில் சுயஅறி வில்லாதவன், பிறர் சொல்லைக் கேட்காதவன் என்றும், விருச்சிகச் சனிக்குக் காராக் கிருகம் கொலை இவற்றை அடைந்தவனுகவும் மிதுன கன்னியிற் சனி நிற்கில் வெட்கம் சுகம் புதல்வன் இலைகள் அற்றவனுகவும் எழுத்து வேலையில் தவறுத ஆள்னவனுகவும் பிரசைகளை ரட்சிக்கும்படி நியமிக்கப்பட்டவனுகவும் தலைவர்க்குத் தலைவனுகவும் இருப்பான் என்று கூறும் பிருகத் சாதகம் " ரட்சா பதிர் பவதி முக்ய பதிச்ச " என்பதைக் கருத்திற்

RangaRakes tamilnavarasam.com

கொண்டு இந் நூல் 'பரிக்கும் செம்மல்' என்று கூறுகிறது. சாதகாலங்காரம் சனி மேட விருச்சிகத்தில் நின்றால் தரும் பலனை

மேடத்திற் காரி நிற்கின்
மிகுமாய ரூபி மூர்க்கன்
தேடிடான் உறவு சுற்றும்
பிரமிக்கச் சிறிது சொல்வோன்
ஓடுதேள் காரிக் கேகட்
டுண்டுமெய்க் கீற தாவன்
நீடிய தனமு மில்லான்
கொலை செய்தே நிற்பன் ருனே. (165) என்றும்

சனி மிதுன கன்னியில் நின்றால் தரும் பலனை

ஆனதோர் மிதுனங் கன்னி
தனிற்சனி யமர்ந்த காலை
தானமாம் புதல்வ ரற்பன்
தகைகமையில் லார்க்கு மாண்பன்" (167)

என்றும் கூறுவனவற்றை ஒப்பிட்டறிக.

இடபத்தில், துலாத்தில், கடகத்தில், சிங்கத்தில்
சனி நிற்பின் தரும் பலன்

268. கரியவன் இடபந் தீய
நாரியன் புளன்அ நேகஞ்
சுரிகுழற் செல்வன் உச்சன்
சுன்கீர்த்தி சனங்கி ராமம்
புரபெலந் தனம்நண் டல்கல்
புதல்வர்தா யில்லான் மூர்க்கன்
அரியநா ரியன்சு கங்கள்
சுதனிலான் சுமக்கு மன்றே.

(எ—து) சனி இடபத்தில் நிற்கில் விடம் போன்ற ஸ்திரீயினிடத்தில் இட்டமுடையவன்; அநேக ஸ்திரீகளுடையவன்; தனமுடையன் என்பது.

உச்சமான துலாத்தில் சனி நிற்கில் கீர்த்தியுடையன்; சனங்கட்கும் (கூட்டங்கட்கும்) கிராமங்கட்கும் அதிபனுவான்; பெலம்—படை; படையுடையவன்; தனம் உடையவன் என்பது.



நண்டாகில்—கர்க்கடகத்திற் சனி நிற்கில், அல்கல்-தரித்திரன்; புதல்வருந் தாயும் இல்லாதவன்; மூர்க்கன் என்பது.

அரியாகிய சிங்கத்திற் சனி நிற்கில், நாரியுடையனுவது (அநாரியுடையனுவது) துஷ்டன்; சுகம் இல்லாதவன்; புத்திரர் இல்லாதவன்; சுமடு சுமந்து திரிவன் (எ—று). 45

குறிப்பு:—இடபச் சனிக்குப் போகிக்கத் தகாத பெண்களிடம் காம இச்சையுடையனென்றும் அதிக ஐஸ்வர்யம் இல்லாதவனென்றும், கடகச் சனிக்கு விகாரமான பத்களை யுடையவனென்றும் கூறும் (பிருகத்சாதகம்).

சாதகாலங்காரம் இடபச் சனிக்கு
" நிற்குமோ ரிடபங் காரி
நிற்கிற்பெண் கட்கு லோலன்
நற்குணன் மறதி யில்லான்
நாரியர் பலரைச் சேர்வன்" என்றும்,

துலாச் சனிக்கு,

" முற்கோலிற் சவுரி நிற்கின்
முற்றிய தனவா னுவான்
சற்குணன் கியாதி யுள்ளான்
தகுவனூர் மணிய மாவன்" (166) என்றும்

கடக சனிக்கு

" வாழுறு நண்டிற் காரி
மருவிற்றுப் மகன்பொன் னில்லான்
நலமிலான் ஞான வீனன்
மக்கின பல்லன் மூர்க்கன்" (167) என்றும்,

சிங்கச் சனிக்கு

" குலமாஞ் சிங்க வீட்டின்
முனிவுறுஞ் சனிதான் நிற்பின்

RangaRakes tamilnavarasam.com

சாலவா சார மில்லான்
சுகமிலான் தாழ்ச்சி யுள்ளான்
சீலமாம் குலம்வி ளங்கப்
பெற்றிடுஞ் சேயு மில்லான் " (168) என்றும்

கூறும் செய்யுட்களை ஒப்பிட்டறிக.

தனுசு மீனத்திலும், மகர கும்பத்திலும்
சனி நிற்கும் பலன்

269. அருக்கசன் சீவ பம்மில்
சுகாந்தனும் அரச ரில்லிற்
றருக்குறு சொல்லன் நல்ல
தாரபுத் திரார்த்த முள்ளோன்
புரத்தொடு பெலங்கி ராமம்
பதிசுயம் புரங்கி ராமன்
திரத்துறுப் பொன்னற் பாக்கன்
அன்னியர் பொன்பெண் சேர்ப்பன்.

(எ-து) அருக்கசன் ஆகிய சனி சீவ பம் ஆகிய தனுர் மீனத்தில் நிற்கில் சுகாந்தன்; சுகாந்தனுவது சோபனமா யிருக்கிற அந்தத்தோடுங் கூடினவன்; அந்தம்—அபரம் என்றது; சென்ன காலம் தொடங்கி மரணகாலத் தளவும் சுகமே யிருக்கிறவன்; இராச கிரகங்களை விசாரணை யுடையன்; தார புத்திர அர்த்த முள்ளவன்; 'புரம் பெல கிராமாதிபதி' என்றது புரம் பட்டினங்கள்; நகரங்கள்; பெலம்—படைக் கூட்டங்கள் கிராமம்—தேசங்கள்; இவைகளுக்கு அதிபதியானவன்.

சுய க்ஷேத்திரமான மகர கும்பத்தில் சனி நிற்கில் 'புரம் பெல கிராம அதிபதி' என்றது பட்டினங்களுக்கும் படைக் கூட்டத்திற்கும் தேசத்திற்கும் அதிபதி. சில வுடைய தனமுடையன்; அற்பாக்கன்; அற்பஅக்க னுவது மந்தமாயிருக்கிற கண்ணுடையன்; அந்நிய ஸ்திரீகளையும் தனத்தையும் அபகரிப்பன் (எ-று).





குறிப்பு :—தனுசு மீனத்தில் சனி நிற்கப் பிறந்தவனுக்குக் கூறப்பட்ட பலன்களில் 'சுகாந்தன்' என்பதும் ஒன்றாகும்; அதற்குக் கூறப்பட்டுள்ள உரையை மேலே காண்க. அவ் வுரையன்றிச் 'சுகமாக மரண மடைவன்' என்று பொருள் கூறி, "புண்ணியத் தலங்களிற் சென்று உத்தராயணம் முதலிய நல்ல காலத்திலே மரணத் துன்ப மின்றி மரணம் அடைவன்" என்று அறிஞர் விளக்கங் கூறுவர்.

சனி தனுசு மீனத்தில் நின்றால் தரும் பலனை.

விழிமீன தனுவிற் காரி
மேவின்மன் னவருக் கன்பன்
மொழிசுக முடையன் மைந்தர்
திரவியம் உள்ள னுவான்
வழிவச மான பெண்டிர்
உள்ளவன் மலர்க்கண் ணேயான்
கழியபெண் டீர்மே லன்பு
காட்டிடுஞ் சிந்தை யானே (169) என்றும்

மகர கும்பத்தில் சனி நின்றால் தரும் பலனை.

" சிந்துவாழ் மகர கும்பஞ்
செறிந்துஞன் காரி நிற்கில்
உந்திய நகரம் பட்டணம்
உடையவன் உறுகண் ணேயன்
சந்ததந் தனங்கள் சேர்ப்பன்
செல்வுளன் சரீர சுட்கன்
சுந்தரப் பரத்தை நண்பன்
பலமுள்ள சோர னுவான்" (170) என்றும் சாதகாலங்காரம் கூறுவதை ஒப்பிட்டறிக.

மேற் கூறிய பலன் சந்திரனுடைய நோக்கமோ
சேர்க்கையோ உண்டான பொழுது நேரும் என்றல்

270. ஓரைகட் கிந்து திட்டி
யுதமுள வென்னி லாங்கே
நேருறு பலன்கள் யாவும்
நிகழ்த்திய படியே நேரும்



RangaRakes tamilnavarasam.com

ஓரைகட் கதிபன் இந்தை
  ஒள்ளிதின் நோக்கு மேனும்
நேருறும் பலன்க ளென்ப
  நிகழ்த்துபம் மதியன் றன்றால்.

(எ-து) பலன் சொல்லுகிற கோளினுடைய இராசிக்குச் சந்திர யோக திருட்டி (சந்திரன் சேர்க்கை யும் பார்வையும்) உண்டாகில் அக் கோளுக்குச் சொன்ன பலன் ஒக்கும.

அவ் விராசி யதிபன் சந்திரனை நோக்கினும் (மேற் கூறிய) பலன்கள் ஒக்கும்.

இச் சொன்ன கோளினுடைய பலன்களெல்லாம் இந்த இராசிக்கு, இந்த இராசி யதிபனுக்குச் சந்திர யோக திருட்டி உண்டாகில் பலன்கள் ஒக்கும் (எ-று). 47

குறிப்பு :—இந்து திட்டி யுதம்—சந்திரனுடைய பார்வை யும் சேர்க்கையும்.

பதினாறுவது
இராசி சீல அத்தியாயம்
முற்றும்

பதினேழாவது
## திருட்டி பல அத்தியாயம்.

### 271. முதற் சுலோக கருத்து

மேட இடப மிதுன கடக இராசியிலுள்ள திங்களைக் கோள்கள் நோக்கிய பலன்.

(எ-து) மேட இராசியி லுள்ள திங்கள் செவ்வா யால் நோக்கப்படில் அரசனாகவும், புதனால் நோக்கப் படில் கல்வியில் வல்லவனாகவும், வியாழனால் நோக்கப் படில் அரசனுக்கு ஒப்பானவனாகவும், வெள்ளியால் நோக்கப்படில் நற்குண முள்ளவனாகவும், காரியால் நோக்கப்படில் கள்வனாகவும், ஞாயிறால் நோக்கப்படின் பொருள் அற்றவனாகவும் இருப்பான்.

இடப இராசியிலுள்ள திங்கள் செவ்வாயால் நோக்கப்படில் பொருள் அற்றவனாகவும், புதனால் நோக்கப்படில் கள்வனாகவும், வியாழனால் நோக்கப்படில் மக்களால் சிறப்பிக்கத் தக்கவனாகவும், வெள்ளியால் நோக்கப்படில் நிலத்தை ஆள்பவனாகவும், சனியால் நோக்கப்படில் பொருளுடையவனாகவும், ஞாயிறால் பார்க்கப்படின் பிறர்க்கு அடிமையாகவும் இருப்பான்.

மிதுன இராசியிலுள்ள திங்கள் செவ்வாயால் நோக்கப்படில் இரும்பு வாணிகஞ் செய்பவனாகவும், புதனால் நோக்கப்படில் அரசனாகவும், வியாழனால்

குறிப்பு :—சரஸ்வதி மகாலுக்குக் கிடைத்த வராகர் ஓராசாத்திர ஓலைச் சுவடியில் 17 ஆவது திருட்டி பல அத்தி யாயமும், 18 ஆவது பாவ பல அத்தியாயமும், 19 ஆவது ஆஸ்ரய யோக அத்தியாயமும் ஆகிய மூன்று அத்தியாயங்கள் இல்லை. இந் நூலைக் கற்பவர்கட்குப் பயன்படும் பொருட்டு வடமொழி வராகர் ஓரா சாத்திரத்திலிருந்து அம் மூன்று அத்தியாயப் பொருள்கள் கீழே தரப்படுகின்றன.

RangaRakes tamilnavarasam.com

நோக்கப்படில் கற்றவனாகவும், வெள்ளியால் நோக்கப் படில் அஞ்சாதவனாகவும், காரியால் நோக்கப்படில் தறித் தொழில் உள்ளவனாகவும், ஞாயிறால் நோக்கப்படில் பொருளற்றவனாகவும், இருப்பன்.

கடக இராசியிலுள்ள திங்கள் செவ்வாயினால் நோக்கப்படின் போர் செய்பவனாகவும், புதனால் நோக் கப்படின் பாவலனாகவும், வியாழனால் நோக்கப்படின் கற்றவனாகவும், வெள்ளியால் நோக்கப்படின் மன்னவ னாகவும், காரியால் நோக்கப்படின் இரும்புக் கருவியை அல்லது இரும்பைக் கையாளும் தொழிலுடையவனாகவும் இருப்பன் (எ–று).

குறிப்பு :—மேலே கூறியவற்றைச் சாதகாலங்காரத்தில் 171, 172, 173, 174 ஆம் பாட்டுக்களை நோக்கி அறிக.

சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம்
இவற்றிலுள்ள திங்களைக் கோள்கள் நோக்கிய
பலன்

272. சுலோகம் 2

(எ–து) சிங்க இராசியி லுள்ள திங்கள் புதனால் நோக்கப்படின் சோதிடக் கலைஞனாகவும், வியாழனால் பார்க்கப்படின் செல்வனாகவும், வெள்ளியால் பார்க்கப் படின் வேந்தனாகவும், காரியால் பார்க்கப்படின் மயிர் வினைஞனாகவும், ஞாயிறால் நோக்கப்படின் மன்னனாக வும், செவ்வாயால் நோக்கப்படின் நிலத்திற்குத் தலைவ னாகவும் இருப்பான்.

கன்னி இராசியி லுள்ள திங்கள் நற்கோள்களுள் புதனால் நோக்கப்பட்டால் மன்னனாகவும், வியாழனால் நோக்கப்பட்டால் படைத்தலைவனாகவும், வெள்ளியால் நோக்கப்பட்டால் வினைசெயல்வகை அறிந்தவனாகவும், ஏனைய தீக்கோள்களால் நோக்கப்பட்டால் பெண்வழி இயங்கிப் பிழைப்பவனாகவும் இருப்பான்.



துலா இராசியிலுள்ள திங்கள் புதனால் நோக்கப் படின் அரசனாகவும், வியாழனால் பார்க்கப்படில் பொற் கொல்லனாகவும், வெள்ளியால் பார்க்கப்படில் வணிகனாக வும், செவ்வாய், ஞாயிறு, காரி என்னும் தீக்கோள் களால் நோக்கப்படின் வஞ்சகனாகவும் இருப்பன்.

விருச்சிக இராசியி லுள்ள திங்கள் புதனால் பார்க் கப்படின் இரட்டைக் குழந்தைக்குத் தந்தையாகவும், வியாழனால் நோக்கப்படின் பணிவுடையவனாகவும், வெள்ளியால் நோக்கப்படின் வண்ணானாகவும் அல்லது சாயம் தோய்ப்பவனாகவும், காரியால் நோக்கப்படின் உறுப்புக் குறைந்தவனாகவும், ஞாயிறால் நோக்கப்படின் பொருளற்றவனாகவும், செவ்வாயால் பார்க்கப்பெறின் நிலத்திற்குத் தலைவனாகவும் இருப்பான் (எ–று).

குறிப்பு : மேற் கூறிய பலன்களைச் சாதகாலங்காரத்தே 175, 176, 177, 178 ஆம் பாட்டுக்களை நோக்கி அறிக.

தனுசு, மகரம், கும்பம், மீனம் இவற்றிலுள்ள
திங்களைக் கோள்கள் நோக்கிய பலன்

273 சுலோகம் 3

(எ–து) தனுர் இராசியிலுள்ள திங்கள் புதனால் நோக்கப்படின் மக்களைப் புரப்பவனாகவும். வியாழனால் நோக்கப்படின் அரசனுக்கு உதவும் நண்பனாகவும், வெள்ளியால் நோக்கப்படின் பலமக்களின் பிழைப்பு நடைபெறுவதற்குரிய பெரியோனாகவும், தீக்கோள் களாகிய காரி, ஞாயிறு, செவ்வாய் என்னும் இவரால் நோக்கப்படின் புறத்தே நல்லவன் போல் விளங்கி அகத்தே வஞ்சகனாகவும் இருப்பன்.

மகர இராசியி லுள்ள திங்கள் நற்கோள்களுள் புதனால் நோக்கப்படின் மன்னர் மன்னனாகவும், வியாழனால் நோக்கப்படின், அரசனாகவும், வெள்ளியால்

RangaRakes tamilnavarasam.com

நோக்கப்படின் கற்றவனாகவும், காரியால் நோக்கப்படின் செல்வனாகவும், ஞாயிறால் பார்க்கப்படின் வறியனாகவும், செவ்வயால் நோக்கப்படின் அரசனாகவும் இருப்பான்.

கும்ப இராசியி லுள்ள திங்கள் புதனால் நோக்கப் படின் அரசனாகவும், வியாழனால் நோக்கப்படில் அரசனுக் குச் சமானவானாகவும் வெள்ளியால் நோக்கப்படின் பிறர் மனைவியின் மேல் விருப்பமுள்ளவனாகவும், தீக் கோள்களாகிய காரி, ஞாயிறு, செவ்வாய் இவர்களால் பார்க்கப் பெற்றாலும் பிறர் மனைவியின்மேல் விருப்ப முள்ளவனாகவும் இருப்பான்.

மீன இராசியி லுள்ள திங்கள் நற்கோள்களான் புதனால் நோக்கப்படில் பகடி செய்பவனாகவும், வியாழனால் நோக்கப்படின் அரசனாகவும், வெள்ளியால் நோக்கப் படின் புலவனாகவும், தீய கோள்களாகிய காரி, ஞாயிறு, செவ்வாய் இவர்களால் நோக்கப்படின் விதி நூல்களுக்கு மாறான செயல்களைச் செய்பவனாகவும் இருப்பான் (எ-று).

குறிப்பு :— மேற் கூறிய பலன்களைச் சாதகாலங்காரத்தே 179, 180, 181, 182 ஆம் பாட்டுக்களை ஒப்பு நோக்கி அறிக.

## 274. சுலோகம் 4

ஓரை, திரேக்காணம், துவாதசாமிசம், நவாமிசம்
இவற்றிலுள்ள திங்களுக்குச் செவ்வாய் முதலிய
கோள்களின் நோக்கம் ஏற்படுவதால் உண்டாகும்
பலன் கூறப்படுகிறது.

(எ—து) சந்திரன் சூரிய ஓரையில் நிற்கச் சூரிய ஓரையிலுள்ள செவ்வாய் முதலான கோள்களால் நோக்கப்படினும், சந்திரன் தனது ஓரையாகிய சந்திர ஓரையில் நிற்கச் சந்திர ஓரையிலுள்ள செவ்வாய் முதலான கோள்களால் நோக்கப்படினும் சந்திரன் நற்பலன் தருபவனாவான் இதற்கு மாறுபடின் தீய பலனைத் தருபவனும் என்க,



சந்திரன் இருக்கும் திரேக்காணத்திற்கு உரிய கோள் சந்திரனைப் பார்த்தாலும், நட்புடையோன் வீட்டி லுள்ள கோள்களால் அவன் பார்க்கப்படினும் சந்திரன் நற்பலனைக் கொடுப்பான். இதற்கு மாறுபடின் சந்திரன் நற்பலனைச் செய்யான் என்றும் அறிக.

சந்திரன் மேடம் முதலான இராசிகளிலிருக்க அச் சந்திரனை மற்ற கோள்கள் நோக்கின் என்ன பலன் கூறப்பட்டதோ அந்தப் பலனே சந்திரன் துவாதசாம சத்தி லிருப்பதற்கும் கூறப்படுகிறது.

இனி, நவாம்சத்தி லிருக்கும் சந்திரன் சூரியன் முதலான கோள்களால் நோக்கப்படின் அதற்குரிய பலன் இனிக் கூறப்படும் (எ-று).

குறிப்பு :— மேலே கூறிய கருத்தினுள் ஓரை திருட்டி பலனை, மங்களேஸ்வரீயம்

"ஓரையா திபனின் ராசியர்த் தத்தில்
உற்றிடுங் கோள்களே மதியைத்
தெரியே நோக்கா திருந்திடும் பொழுது
திங்களும் சுபகர னாமே" (19-13) என்றும்

"எந்தரா சியிலும் இரவியோ ரையிலே
இருந்திடும் மதிதனை மற்றோர்
சொந்தமாய் இரவி ஓரையி லிருந்தோர்
சூழ்ந்துகண் டிடமதிச் சுபனும்" (19-14)

என்றும்,

"சந்திரன் தனது வோரையி லமரச்
சாற்றுமவ் வோரையி லுள்ளோர்
இந்துவை நோக்கச் சுபகர னவான்
என்றுமே அறிந்திடாய் இனியே" (19-14)

என்றும் மூன்று வகையாகக் கூறுவதைக் காண்க,

RangaRakes tamilnavarasam.com

## 275. சுலோகம் 5

**திங்கள், மேட விருச்சிக இடப துலாம் என்னும் நவாம்சங்களில் இருக்க, அவனை ஞாயிறு முதலான கோள்கள் பார்ப்பதால் உண்டாகும் பலனைக் கூறுகிருர்.**

(எ—து) திங்கள் செவ்வாயினுடைய மேட விருச்சிக நவாம்சத்தி லிருந்து ஞாயிருல் நோக்கப்படின் நகரத்தைக் காக்கும் அலுவலுள்ளவனுகவும், செவ்வா யால் நோக்கப்படின் உயிர்க்கொலை புரிவதில் விருப்புள்ளவனுகவும், புதனுல் பார்க்கப்படின் கைக் குத்துப் போரில் வல்லவனுகவும், வியாழனுல் நோக்கப் படின் நிலத்தை ஆள்பவனுகவும். வெள்ளியால் நோக்கப் படின் மிக்க பொருளுள்ளவனுகவும் காரியால் நோக்கப் படின் கலகம் செய்பவனுகவும் இருப்பான்.

திங்கள் வெள்ளியினுடைய இடப துலாம் என்னும் நவாம்சங்களி லிருந்து ஞாயிருல் நோக்கப்படின் இயற்கையறிவாகிய தன்னறிவில்லாதவனுகவும் பிறர் சொல்லைக் கேட்காதவனுகவும், செவ்வாயால் நோக்கப் படின் பரத்தையர் இன்பத்தில் பற்றுள்ளவனுகவும், புதனுல் பார்க்கப்படின் சிறந்த பாவலனுகவும், வியாழனுல் நோக்கப்படின் சிறந்த இலக்கியங்களைப் படைப்பவனுகவும், வெள்ளியால் நோக்கப்படின் இன்பம் துய்ப்பதில் விருப்ப முள்ளவனுகவும், காரியால் பார்க்கப் படின் பரத்தையர் இன்பத்தில் பற்றுள்ளவனுகவும் இருப்பன் (எ—று).

## 276. சுலோகம் 6

**திங்கள், மிதுன கன்னி, கடகம் என்னும் நவாம்சத்தில் நிற்க, ஞாயிறு முதலான கோள்களால் நோக்கப்படும் பொழுது பிறந்தவன் இயல்பு கூறப்படுகிறது.**

(எ—து) திங்கள் புதனுடைய மிதுனம் கன்னி என்னும் நவாம்சத்தி லிருந்து ஞாயிருல் நோக்கப்படின்



மற்போர், நாடகம் முதலிய தொழில்களைச் செய்பவ னுகவும், செவ்வாயால் பார்க்கப்படின் கள்வனுகவும், புதனுல் பார்க்கப்படில் சிறந்த பாவலனுகவும், வியாழ னுல் நோக்கப்படின் அமைச்சனுகவும், வெள்ளியால் நோக்கப்படின் இசைக்கலை அறிந்தவனுகவும், காரியால் நோக்கப்படின் கைத்தொழில் செய்வதில் மிக வல்லவ னுகவும் இருப்பான்.

திங்கள் தன்னுடைய கடக நவாம்சத்தில் இருந்து ஞாயிருல் நோக்கப்படின் இளைத்த உடம்புடையவ னுகவும், செவ்வாயால் நோக்கப்படின் அருளற்றவ னுகவும், புதனுல் நோக்கப்படின் தவம் புரிபவனுகவும் வியாழனுல் நோக்கப்படின் எச்செயலிலும் தலைவ னுகவும், வெள்ளியால் நோக்கப்படின் பெண்களால் சீவிப்பவனுகவும், காரியால் நோக்கப்படின் காரியங்களைச் செய்வதில் முயற்சி உள்ளவனுகவும் இருப்பான் (எ—று).

## 277. சுலோகம் 7

**திங்கள் சிங்கம், தனுசு, மீனம் என்னும் நவாம்சத்தில் நிற்க, ஞாயிறு முதலான கோள்களால் நோக்கப்படும் பொழுது பிறந்தவன் இயல்பு கூறப்படுகிறது.**

(எ—து) திங்கள் சிங்க நவாம்சத்தில் இருந்து ஞாயிருல் நோக்கப்படின் சினத்துடன் கூடியவனுகவும், செவ்வாயால் பார்க்கப்படின் அரசருக்கு உற்றுழி உதவுபவனுகவும், புதனுல் நோக்கப்படின் புதையல் கிடைக்கப் பெற்று அதனுற் செல்வனுகவும், வியாழனுல் நோக்கப்படின் பெருமை உள்ளவனுகவும், வெள்ளியால் நோக்கப்படின் புதல்வனற்றவனுகவும், காரியால் நோக்கப்படின் மிக்க கொடுஞ்செயல் புரிபவனுகவும் இருப்பான்.



RangaRakes tamilnavarasam.com

திங்கள் தனுசு, மீனம் என்னும் நவாம்சத்தில் நிற்க, ஞாயிறால் நோக்கப்படின் உலகமெங்கும் புகழ் வாய்ந்த ஆற்றலுள்ளவனாகவும், செவ்வாயால் நோக்கப்படின் போரியற்றும் முறையைச் சொல்லிக் கொடுப்பவனாகவும், புதனால் நோக்கப்படின் பகடி செய்யும் முறையை அறிந்தவனாகவும், வியாழனால் நோக்கப்படின் அமைச்சனாகவும், வெள்ளியால் நோக்கப்படின் பெண்ணின்பத்தில் விருப்பமற்றவனாகவும், காரியால் நோக்கப்படில் நல்லொழுக்கம் நிறைந்தவனாகவும் இருப்பான் (எ-று).

குறிப்பு :—தனுசு மீன நவாம்சத்தில் இருக்கும் திங்களை வெள்ளி நோக்கின் மிகவும் பெண்ணின்பமும் சுகமும் உள்ளவனாயிருப்பான் என்று சாராவளி (அத்-24-16) கூறுகிறது.

## 278. சுலோகம் 8

திங்கள் மகரம், கும்பம் என்னும்
நவாம்சத்தில் நிற்க, ஞாயிறு முதலான
கோள்களால் நோக்கப்படும் பொழுது பிறந்தவன்
இயல்பு கூறப்படுகிறது.

(எ-து) திங்கள் மகரம் கும்பம் என்னும் நவாம்சத்தில் நிற்க, ஞாயிறால் நோக்கப்படின், அற்பமான மகப்பேற்றை உடையவனாகவும், செவ்வாயால் நோக்கப்படின் பொருளிருந்தும் மனத்துன்பத்தை அடைபவனாகவும், புதனால் நோக்கப்படின் தற்புகழ்ச்சியில் விருப்பமுள்ளவனாகவும், வியாழனால் நோக்கப்படின் குல ஒழுக்கத்தைப் பின்பற்றுபவனாகவும், வெள்ளியால் நோக்கப்படின் தீய ஒழுக்கமுள்ள பெண்ணிற்கு வேண்டியவனாகவும், காரியால் நோக்கப்படின் உலோபியாகவும் இருப்பான். (எ-று).

குறிப்பு :—திங்கள் மேடம் முதலான நவாம்சத்திலிருந்து ஞாயிறு முதலான கோள்களால் பார்க்கப்பட்டால் எந்தப் பலன் கூறப்பட்டதோ அந்தப் பலனையே மேடம் முதலான நவாம்ச இலக்கினங்களை ஞாயிறு முதலான கோள்கள் நோக்குங் காலத்திற் பிறந்தவனுக்கும் கூறுக



ஆனால், கடக நவாம்ச இலக்கினத்தைத் திங்கள் நோக்கினால் நற்பலன் நிகழுமென்றும், மற்ற நவாம்ச இலக்கினங்களைத் திங்கள் நோக்கின் தீய பலன் நிகழுமென்றும் அறிந்து கொள்ள வேண்டும்.

## 279. சுலோகம் 9

மேற் கூறிய நவாம்ச நோக்குப் பலனின்
வேறுபாடுகளைக் கூறுகிறது.

(எ-து) மேடம் முதலான நவாம்சங்களில் திங்கள் நின்று ஞாயிறு முதலான கோள்களால் பார்க்கப்பட்டால் எந்த நற்பலன் கூறப்பட்டனவோ அந்தப் பலன்களானவை, திங்கள் வர்க்கோத்தமத்தில் நிற்கில் முழுமையாகவும், தனது அம்சத்தில் நிற்கில் சமமாகவும், பகைவீடுகளில் நிற்பின் அற்பமாகவும் நிகழும் என்க.

அத் திங்கள் ஞாயிறு முதலான கோள்களால் பார்க்கப்பட்டால் எந்தக் கெட்டபலன்கள் கூறப்பட்டனவோ அந்தப் பலன்களானவை தலைகீழாக ஏற்படுகின்றன.

திங்கள் எந்த நவாம்சத்திலிருக்கின்றானோ அந்த நவாம்சத்திற் குரிய கோள் பலம் பெற்றிருப்பின், அவன் முற் கூறிய திங்கள் மேடம் முதலான இராசிகளிலிருந்து ஞாயிறு முதலான கோள்களால் பார்க்கப் பட்டால் உண்டாவதாகக் கூறப்பட்ட பலன்களைத் தடை செய்து விடுவான் என்க.

நவாம்சத்தில் திங்கள் இருக்க ஏனைய கோள்கள் பார்த்தலாகிய ஒன்றினாலேயே மேலே கூறப்பட்ட பலன்கள் நிகழும் (எ-று).

குறிப்பு :—திங்கள் வர்க்கோத்தமத்திலிருப்பின் நற்பலன் முழுதும் நிகழும். தனது (கடக) நவாம்சத்திலிருந்தால் அத் நற்பலன் இடைதிகரவாய் நிகழும். சத்துரு நவாம்சத்தி

RangaRakes tamilnavarasam.com

விருப்பின் அந் நற்பலன் அற்பமாய் நிகழும். கெட்ட பலன்கள் மேற் கூறியதற்கு மாறாக நடக்கும் என்றது, திங்கள் சத்துரு நவாம்சத்தி லிருப்பின் கெட்ட பலன் முழுமையாகவும், தனது நவாம்சத்தி லிருப்பின் அவை இடைநிகரன வாகவும், வர்க் கோத்தமத் திருப்பின் அவை அற்பமாகவும் நிகழு மென்க.

பதினேழாவது
திருட்டி பல அத்தியாயம்
முற்றும்.

## பதினெட்டாவது
## பாவ பல அத்தியாயம்

இலக்கினம் முதலான பன்னிரண்டு பாவங்களில் ஞாயிறு முதலான கோள்கள் இருத்தலால் உண்டாகும் பலன்கள் இவ் வத்தியாயத்தே கூறப்படுகின்றன.

### 280. சுலோகம் 1

ஞாயிறு பாவ பலன்

இலக்கினம், இரண்டாமிடம் என்னும் பாவங்களில்
ஞாயிறு இருப்பதால் விளையும் பலன்கள்.

(எ—து) ஞாயிறு இலக்கினத்திலிருக்கப் பிறந்தவன் போரில் விருப்பம் உள்ளவனாகவும், பணிவற்றவனாகவும், அல்லது செயல்களை விரைந்து செய்யாதவனாகவும், கண் பார்வை குறைந்தவனாகவும், இரக்கம் அற்றவனாகவும் இருப்பான். இவை எந்த இராசி இலக்கினத்திற்கும் உரிய பொதுப்பலனாகும்.

இனி, மேடம் பிறந்த இலக்கினமாக அதில் ஞாயிறு இருக்கப் பிறந்தவன் செல்வனாகவும், கண் பார்வையை மறைக்கும் நோயுடையவனாகவும் இருப்பான்.

சிம்மம் பிறந்த இலக்கினமாக அதில் ஞாயிறு இருக்கப் பிறந்தவன் இரவில் கண் தெரியாத நோயுடைய வனாக இருப்பான்.

சூரியனுக்கு நீச இல்லான துலாம் பிறந்த இலக்கின மாக அதில் ஞாயிறு இருக்கப் பிறந்தவன் குருடனாகவும், வறியவனாகவும் இருப்பான்.

கடகம் பிறந்த இலக்கின மாக அதில் ஞாயிறு நிற்கப் பிறந்தவன் பூவிழுந்த கண்களை யுடையவனாவான்.

RangaRakes tamilnavarasam.com

இரண்டாம் பாவத்தில் ஞாயிறு நிற்கப் பிறந்தவன் மிக்க பொருளுள்ளவனாகவும், வேந்தரால் கவரப் பட்ட பொருளுடையவனாகவும், முகத்தில் நோயுடையவனாகவும் இருப்பான் (எ-று).

## 281. சுலோகம் 2

ஞாயிறு மூன்று, நான்கு, ஐந்து, ஆறும், பாவத்தில் நிற்கப் பிறந்தவன் பலன்.

(எ-து) ஞாயிறு மூன்றும் பாவத்தில் நிற்கப் பிறந்தவன் அறிவு ஆற்றல் உள்ளவனாயிருப்பான். நான்காம் பாவத்தில் நிற்கப் பிறந்தவன் சுகமில்லாதவனாகவும், கலங்கின மனம் உள்ளவனாகவு மிருப்பான். ஐந்தாம் பாவத்தில் நிற்கப் பிறந்தவன் புதல்வர் அற்றவனாகவும், பொருள் அற்றவனாகவும் இருப்பான். ஆறும் பாவத்தில் நிற்கப் பிறந்தவன் உடல் வலிவுள்ளவனாகவும், பகைவரால் வெல்லப் பட்டவனாகவு மிருப்பான் (எ-று).

குறிப்பு :— மங்களேஸ்வரீயம் "*திவாகரன் ஆறில் நிற்க வல்லதின் புயத்தனாகி மாற்றலர் தமைச் செயிப்பன்*" என்று கூறுகிறது.

## 282. சுலோகம் 3

ஞாயிறு ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று பனிரண்டாம் பாவங்களில் நிற்கப் பிறந்தவன் பலன்

(எ-து) ஞாயிறு ஏழாம்பாவத்தி லிருக்கப் பிறந்தவன் பெண்களால் பழிப்படைவன். எட்டாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் அற்பமான மகப் பேறுடையவன்; பார்க்கும் ஆற்றல் குறைந்த விழிகளை யுடையவன். ஒன்பதாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் நல்ல புதல்வர் செல்வம் சுகம் இவற்றை யுடையவன். பத்தாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் சுகமுடையவன்; அஞ்சுவிக்குந் தன்மை யுடையவன். பதினொன்றும் பாவத்தி லிருக்கத் தோன்றினவன் மிக்க பொருள் உள்ளவன். பன்னிரண்டாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் தனது குலத்திற்குப் பொருந்தாத செயல்களைச் செய்பவனாவான் (எ-று).



திங்கள் பாவ பலன்.
திங்கள் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்னும் பாவங்களி லிருக்கப் பிறந்தான் பலன்.

## 283. சுலோகம் 4

(எ-து) திங்கள் இலக்கின பாவத்திலிருக்கப் பிறந்தோன் ஊமையாகவோ, பைத்தியம் பிடித்தவனாகவோ, தாதுக்களின் தூண்டுதலால் தனக்குத் தோன்றியபடி செயல்புரிபவனாகவோ, மூடனாகவோ, குருடனாகவோ, தகாத காரியத்தைச் செய்கின்றவனாகவோ, செவிடனாகவோ, பிறர்க்கடிமைத் தொழில் புரிபவனாகவோ இருப்பான் என்க.

கடகம் பிறந்த இலக்கினமாக அதில் திங்கள் இருக்கப் பிறந்தோன் பொன்னுள்ளவனாக இருப்பான்.

மேடம் இலக்கினமாக அதில் திங்களிருக்கப் பிறந்தோன் மிக்க மகப்பேற்றினை யுடையவனாக இருப்பான்.

இடபம் இலக்கினமாக அதில் திங்களிருக்கப் பிறந்தோன் பொருளுள்ளவனாக இருப்பான்.

இரண்டாம் பாவத்தில் திங்கள் நிற்கப் பிறந்தோன் நல்ல குடும்பமுள்ளவனாக இருப்பான்.

மூன்றும் பாவத்தில் திங்கள் நிற்கப் பிறந்தோன் பிறரைத் துன்புறுத்துபவனாக இருப்பான்.

RangaRakes tamilnavarasam.com

நான்காம் பாவத்தில், ஐந்தாம் பாவத்தில் திங்கள் நிற்கப் பிறந்தோன் முறையே சுகம் உள்ளவனாகவும், மகப்பேறுள்ளவனாகவும் இருப்பான்.

ஆறாம் பாவத்தில் திங்கள் நிற்கப் பிறந்தோன் பல பகைவரை உடையவனாகவும், மென்மையான உடலினையும், பலங்குறைந்த சடராக்கினியினையும், குறைந்த காம இன்பத்தையும் உடையவனாகவும், கொடுந்தன்மை உள்ளவனாகவும், சோம்பல் உள்ளவனாகவும் இருப்பான். (எ-று)

குறிப்பு :— வளர்பிறைத் திங்கள் இலக்கினத்திற் பலம் பெற்றிருப்பின் திருமகள் நோக்கமும், உறுதியான உடலும், நிறைந்த ஆயுளும், அச்சமின்மையும் உண்டாகும் என்று பலதீபிகை (அத்-8-சு-8) பகர்கிறது.

"கடகம், மேடம், இடபம் நீங்கலான மற்றைய இராசிகள் இலக்கினமாக அவற்றில் திங்கள் நிற்கப் பிறந்தவன் பித்தனாகவோ, நீசனாகவோ, உறுப்புக் குறைந்தவனாகவோ, குருடு, செவிடு, ஊமையாகவோ இருப்பான். "தேய்பிறைத் திங்களா யிருந்து பலம் குறைந்திருந்தால் மேற்கூறிய பலன் தவறாமல் நிகழும்" என்று சாராவளி (அத்-30-சு14) கூறுகிறது.

## 284. சுலோகம் 5

திங்கள் ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரண்டு என்னும் பாவங்களி லிருக்கப் பிறந்தவனின் பலன்.

(எ-து) திங்கள் ஏழாம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் பொறுமை யுள்ளவனாகவும், மிக்க காம முள்ளவனாகவும் ; எட்டாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் பேரறி வுள்ளவனாகவும், நோயினால் துன்புறுத்தப் பட்டவனாகவும் ; ஒன்பதாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் எல்லா மக்களுடைய விருப்பத்திற்கும் உரியவனா யிருந்து புதல்வர் நட்பினர், உறவினர் என்னும்



இவர்களை உடையவரும்ப் பொருளையும் பெற்றிருப்பவனாகவும் ; பத்தாம் பாவத்திலிருக்கப் பிறந்தவன் அறம் பொருள், அறிவு, சவுரியம் என்னும் இவற்றுடன் கூடி எல்லாச் செயல்களையும் செய்பவனாகவும் ; பதினொன்றாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் உலகத்தில் அறியப்பட்டவனாகவும் பொருள் வருவாய் உடையவனாகவும் ; பன்னிரண்டாம் பாவத்தில் இருக்கப் பிறந்தவன் அற்பத் தன்மை உள்ளவனாகவும் உறுப்புக் குறைந்தவனாகவும் இருப்பான் (எ-று).

செவ்வாய், புதன் பாவபலன்.

## 285. சுலோகம் 6

(எ-து) செவ்வாய் இலக்கின பாவத்தி லிருக்கப் பிறந்தவன் காயமடைந்த உடம்புள்ளவனாகவும், இரண்டாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் தீய உணவுள்ளவனாகவும் (விருத்தியும் தூய்மையும் இல்லாத உணவுள்ளவனாகவும்) ஏழாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் பாவச் செயல் புரிபவனாகவும், மேற் கூறப் பட்டுள்ள பாவங்களைத் தவிர்த்து ஏனைய பாவங்களிற் செவ்வா யிருக்கப் பிறந்தவன் சூரியனுக்கு அவ்வவ் விடங்களிற் கூறிய பாவபலன்களைக் கொடுப்பவனாகவு மிருப்பான்.

புதன் இலக்கின பாவத்தி லிருக்கப் பிறந்தவன் கல்விப் பயிற்சி உள்ளவனாகவும், இரண்டாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் செல்வனாகவும், மூன்றாம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் மிகக் கெட்ட பண்புடையவனாகவும் நான்காம் பாவத்தி லிருக்கப் பிறந்தவன் கல்வி கேள்வி உள்ளவனாகவும், ஐந்தாம் பாவத்தி லிருப்பின் அமைச்சனாகவும், சிக்கலான சமயத்தில் தக்கதொரு உபாயத்தை மேற் கொள்பவனாகவும், ஆறாமிடத்தி லிருப்பின் பகைவர் அற்றவனாகவும், ஏழாமிடத்தி லிருப்பின் அறம் அறிந்தவ



RangaRakes tamilnavarasam.com

ளுகவும், எட்டாம் பாவத்தி லிருப்பின் உலகில் நன்கு தெரிந்த குணம் உள்ளவனுகவும் ஒன்பது, பத்து, பதினென்று, பன்னிரண்டாமிடங்களி லிருப்பின் சூரியன் அப் பாவங்களி லிருந்தால் எப்பலனைக் கொடுப்பானே அப் பலனைக் கொடுப்பவனுகவும் இருப்பான் (எ-று)

### வியாழன் பாவபலன்

### 286. சுலோகம் 7

(எ—து) இலக்கின பாவத்தில் வியாழன் நிற்பின் புலவனுகவும், இரண்டாம் பாவத்தில் நிற்பின் நன்ருய்ப் பேசுகின்றவனுகவும், மூன்ரும் பாவத்தில் நிற்பின் உலோபியாகவும், நான்காம் பாவத்திலிருப்பின் சுகம் உள்ளவனுகவும், ஐந்தாம் பாவத்தி லிருப்பின் அறிவு அமைந்தவனுகவும், ஆரும் பாவத்தி லிருப்பின் பகை யற்றவனுகவும், ஏழாம் பாவத்தி லிருப்பின் தன் தந்தையைக் காட்டிலும் புகழ்பெற்றவனுகவும், எட்டாம் பாவத்தி லிருப்பின் தாழ்ந்த பண்புடையவனுகவும், ஒன்பதாம் பாவத்தி லிருப்பின் தவம் செய்பவனுகவும், பத்தாம் பாவத்தி லிருப்பின் பொருள் உள்ளவனுகவும், பதினென்ரும் பாவத்திலிருப்பின் எந்தத் தொழிலிலும் வருவாய் அடைபவனுகவும், பன்னிரண்டாம் பாவத்தி லிருப்பின் கொடியவனுகவும் இருப்பான் (எ-று).

### வெள்ளி பாவ பலன்

### 287. சுலோகம் 8

(எ-து) இலக்கின பாவத்தில் வெள்ளி நிற்பின் பெண்களிடம் போகம் செய்யும் முறையை நன்கறிந்தவனுகவும், ஏழாம் பாவத்தில் அவன் நிற்பின் போர் செய்வதில் விருப்பம் உள்ளவனுகவும், பெண் இன்பத்தில் மிகவும் விருப்பம் உள்ளவனுகவும், ஐந்தா



மிடத்தி லிருப்பின் இன்பங்களை அறிந்து துய்ப்பவனுகவும், பன்னிரண்டாம் பாவத்திலிருப்பின் பொருளுடன் கூடியவனுகவும், இங்கே கூறப்படாத இரண்டு, மூன்று, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது, பத்து, பதினென்று ஆகிய பாவங்களி லிருப்பின் இவ்விடங்களில் வியாழனுக்குக் கூறிய பலன்களைக் கொடுப்பவனுகவும் இருப்பான் (எ-று).

### காரி பாவ பலன்

### 288. சுலோகம் 9

(எ-து) காரி இலக்கினத்தி லிருக்கப் பிறந்தவன் பொன்னினைக் (நாணயத்தைக்) கண்ணினுலும் பார்க்க முடியாத வறியவனுகவும், நோய் உள்ளவனுகவும், மிக்க காமம் உள்ளவனுகவும், மிக்க மடியனுகவும், இளமைப் பருவத்தே நோயினுல் துன்புறுத்தப் பட்டவனுகவும், சொற்களைச் சொல்வதிலும் சோம்பலுள்ளவனுகவும் இருப்பான்.

தனுசு, மீனம், மகரம், கும்பம், துலாம் பிறந்த இலக்கின மாக அதில் காரி இருப்பின் மன்னனுக்கு ஒப்பானவனுகவும், ஊர் பட்டினம் இவற்றிற்குப் பதியாகவும், நல்ல புலவனுகவும், அழகிய உடம்பை உள்ளவனுகவும் இருப்பான்.

காரி சூரியனைப் போலப் பாவபலன்களைக் கொடுப்பான் (எ-று).

### 289. சுலோகம் 10

#### கோள்கள் பாவங்களில் நின்று பலங் கொடுக்கும் முறை

(எ-து) நட்பு, பகை, சமன், ஆட்சி, உச்சம் என்னும் ஐவகைப் பலத்தைப் பெற்றுடைய கோள்களுக்குப் பலன் தரும் முறையை ஆராயும் பொழுது

RangaRakes tamilnavarasam.com

அவைகள் நிற்கும் இலக்கின பாவம் முதலான பன்னிரண்டு பாவங்களைக் கருதி உய்த்துணர்ந்து பலன் கூறுக. சத்யாசாரியார் இலக்கினம், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது, பத்து பதினொன்று என்னும் இப் பாவங்களில் நற்கோள்களிருப்பின் அப் பாவங்களுக்கு விருத்தியையும்; தீக் கோள்களிருப்பின் குறைவையும்; பன்னிரண்டு, ஆறு, எட்டு இப் பாவங்களிலே மேற் கூறியதற்கு மாற்றமான பலனையும் கூற வேண்டும் என்பர்.

290. சுலோகம். 11.

ஒருவர் பிறந்த பொழுது இராசி குண்டலிகையில் உள்ள (இராசிச் சக்கரத்தி லுள்ள) கோள்களின் வேறுபட்ட பலன்கள் கூறப்படுகின்றன.

(எ-து) கிரக குண்டலிகையில் உச்ச வீட்டிலுள்ள கோள் முழு நற் பலனையும், மூலத்திரிகோண வீட்டிலுள்ள கோள் முக்கால் நற் பலனையும், ஆட்சி வீட்டில் உள்ள கோள் பாதி நற்பலனையும், நட்பு வீட்டிலுள்ள கோள் காற்பகுதி நற்பலனையும், நீச வீட்டிலுள்ள கோள் மிகவும் குறைந்த நற்பலனையும், அத்தங்கமான கோள் முற்றிலும் நற் பலன் இல்லாமையையும் செய்யும் (எ-று).

குறிப்பு: மங்களேஸ்வரீயம் 11 ஆவது சுலோகக் கருத்தினை மூன்று பாட்டாற் கூறுகிறது. அவற்றினைக் கீழே காண்க.

" அகிலத்தி லுச்சக் கோள்கட்
    கடைவது பலன்சம் பூர்ணம்
மிகவுமே தருவார் தீய
    வெம்பலன் ஈயார் என்பர்
பகருமூ லத்திரி கோணம்
    பற்றினோர் அசுபம் காலும்
சுகமது முக்கா லீவர்
    தோன்றிடும் மக்கட் கென்ப. "



" சாதகன் றனக்கே ஆட்சி
    சார்ந்தவர் அசுபம் பாதி
கோதறு சுகப்ப லன்கள்
    கொடுப்பராம் பாதி என்ப
நீதிலா நட்பு பெற்றோர்
    தீம்பலன் நாலி லொன்று
காதலா லசுபந் தானே
    காலத்தி லீவார் முக்கால். "

" முக்கிய நீச மானோர்
    முழுதுமே அத்த மித்தோர்
எக்காலும் நற்ப லன்கள்
    ஈந்திடார் என்ப தாகும். "

என்று (பாவ பலப்படலம் 44. 45, 46) கூறுகின்றன.

பதினெட்டாவது
பாவ பல அத்தியாயம்
முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## பத்தொன்பதாவது
## ஆசிரய யோகாத்தியாயம்

### 291. சுலோகம் 1

**ஆட்சி நட்புக் கோள்களின் பலம்**

(எ-து) ஆட்சி வீடுகளில் ஒன்று, இரண்டு, மூன்று முதலான முறைப்படி கோள்களிருப்பின் அப்பலன்கள் வருமாறு :—ஒரு கோள் ஆட்சி வீட்டிலிருக்கப் பிறந்தோன் தன் குலத்திலுள்ளவர்களைப் பின்பற்றி யொழுகுபவனாகவும், இரண்டு கோள் ஆட்சியிலிருக்கப் பிறந்தோன் தன் குலத்திலுள்ளவரைக் காட்டிலும் சிறந்தவனாகவும், மூன்று கோள் ஆட்சியிலிருக்கப் பிறந்தோன் உறவினரால் போற்றியொழுகத் தக்கவனாகவும், நான்கு கோள் ஆட்சியிலிருக்கப் பிறந்தோன் செல்வனாகவும், ஐந்துகோள் ஆட்சியிலிருக்கப் பிறந்தோன் சுகம் உள்ளவனாகவும், ஆறுகோள்கள் ஆட்சியிலிருக்கப் பிறந்தோன் உலகப்பொருள்களை நன்கு துய்ப்பவனாகவும், ஏழு கோள்களும் ஆட்சியிலிருக்கப் பிறந்தவன் அரசனாகவும் இருப்பான்.

நன் மனமுடைய நட்புக்கோள்கள் ஒன்று முதலான வீட்டில் இருக்கும் பொழுது பிறந்தவன் பலனைக் கூறின், ஒரு கோள் நட்பிலிருக்கப் பிறந்தோன் பிறர் பொருளைத் துய்ப்பவனாகவும், இரண்டுகோள் நட்பிலிருக்கப் பிறந்தோன் நண்பரால் காப்பாற்றப்பட்டவனாகவும், மூன்று கோள்கள் நட்பிலிருக்கப் பிறந்தோன் தாயத்தவரால் காப்பாற்றப்பட்டவனாகவும், நான்கு கோள்கள் நட்பிலிருக்கப் பிறந்தோன் உறவினரால் காப்பாற்றப்பட்டவனாகவும், ஐந்து கோள்கள் நட்பிலிருக்கப் பிறந்தோன் மக்கட் குழுவிற்குத் தலைவனாகவும், ஆறு கோள்கள் நட்பிலிருக்கப் பிறந்தோன் படைத்தலைவனாகவும், ஏழு கோள்களும் நட்பிலிருக்கப் பிறந்தோன் வேந்தனாகவும் இருப்பான் (எ-று).



### 292. சுலோகம் 2

**உச்சம் பகை நீசமான இடங்களி லிருக்கும் ஒன்று முதலான கோள்களின் பலம்.**

(எ-து) ஒரு கோள் உச்சத்தி லிருந்து நட்புக் கோளால் பார்க்கப்படப் பிறந்தோன் மன்னனாவான். உச்சக்கோள் தனது நட்புக் கோளுடன் கூடியிருக்கப் பிறந்தோன் மிக்க செல்வம் உடையவனாகவும், உலக மக்களால் போற்றப்படுபவனாகவும் இருப்பான்.

பகை நீசங்களிலிருக்கும் ஒன்று முதலான கோள்களின் பலன்களைக் கூறத் தொடங்கின், ஒரு கோள் நீசம் பெற்றோ, பகைப்பெற்றோ இருக்கப் பிறந்தவன் பொருளற்றவனாகவும், இரண்டுகோள் நீசம் பெற்றோ, பகைபெற்றோ இருப்பின் சுகம் அற்றவனாகவும், மூன்று கோள்கள் நீசம் பெற்றோ பகை பெற்றோ இருக்கப் பிறந்தவன் அறிவில்லாதவனாகவும், நான்கு கோள்கள் நீசம் பெற்றோ பகைபெற்றோ இருக்கப் பிறந்தவன் நோயால் துன்புறுத்தப்பட்டவனாகவும், ஐந்து கோள்கள் நீசம் பெற்றோ பகைபெற்றோ இருக்கப் பிறந்தவன் உரிமையற்று பிறர்க்கு அடங்கி நடப்பவனாகவும், ஆறு கோள்கள் நீசம் பெற்றோ பகைபெற்றோ யிருப்பின் பிறரால் துன்புறுத்தப்பட்டவனாகவும், ஏழுகோள்கள் நீசம் பெற்றோ பகைபெற்றோ யிருப்பின் மிக்க பாவியாகவு மிருப்பன். (எ-று)

குறிப்பு:- சந்தானலங்காரம் மேற்கூறியுள்ள பலனைச் சிறிது வேறுபடக் கூறுகிறது. அதனைக் கீழே வரும் பாட்டால் உணர்க.

RangaRakes tamilnavarasam.com

புகல்சனன காலேயினிற் சுபக்கிரக மெல்லாம்
  பொருந்துநீ சஞ்சத்துரு ராசிதனிற் சேர்ந்தே
இகலுறனின் றிடுபலன்க ளுரைத்திடவுங் கேளாய்
  இருந்ததலந் தன்னைவிட்டே யேகுவிக்குந் தூரம்
விகலுற்ற நாசமிக வுற்பவிக்கு மென்றும்
  மெய்யதனிற் குரூரமாம் வியாதிகளுண் டாகும்
அகன்மரண துக்கசோ கங்களிவை செறியும்
  அனங்கண்டு சரநடைசொல் லானவிழி யாளே. (253)

## 293. சுலோகம் 3

கும்ப இராசியிற் பிறந்தவனைப் பற்றிய கருத்து வேறுபாடுகள்.

(எ-து) கும்ப இலக்கினத்தில் ஒருவன் பிறந்தால் அந்த இராசி அவனுக்கு நற்பலனைச் செய்யா தென்பது சத்தியாசாரியார் கருத்து. யவனாசாரியார் கும்ப இலக்கினத்துள் கும்பத் துவாதசாம்சமே நற்பலனைச் செய்யா தென்று கூறுகின்றனர். விஷ்ணுகுப்தர் என்பார் கும்பத் துவாதசாம்சம் கும்ப இலக்கினத்திற்கு மட்டுமன்றி மேஷம் முதலான எல்லா இராசிகளிலும் வரும் ஆதலாலே, கும்பத் துவாதசாம்சதீமை எல்லா இலக்கினத்திற்கும் வரும் என்பர் (எ-று).

குறிப்பு :—சாராவளியிலும் இக் கருத்து கூறப்பட்டுள்ளது (அத்-47-சு-45).

## 294. சுலோகம் 4

ஓரைகளிற் கோள்கள் நின்ற பலன்.

(எ-து) தீக்கோள்கள் ஒற்றை இராசியில் சூர்ய ஓரையில் நிற்கப் பிறந்தவன் உலகில் நன்கு அறியப் பட்டவனாகவும், எக் காரியத்திலும் மிக்க முயற்சியும், வலிவும் உள்ளவனாவுகம், பொருள் உள்ளவனாகவும், மிக்க ஆற்றல் உள்ளவனாகவும் இருப்பான்.



நற்கோள்கள் இரட்டித்த இராசியில் திங்கள் ஓரையில் நிற்கப் பிறந்தவன் மென்மையா யிருத்தல் ஒளி பெற்றிருத்தல் சுகம் பெற்றிருத்தல் எல்லோருக்கும் வேண்டியவனா யிருத்தல் அறிவு இன்சொல் இவற்றுடன் கூடியவனா யிருத்தல் என்னும் இவற்றை யுடையவனா யிருப்பான்.

## 295. சுலோகம் 5

இதுவும் அது.

(எ-து) வேறு இராசியிலுள்ள முற் கூறிய சூரிய சந்திர ஓரைகளிற் பிறந்தவர் முற் கூறிய பலன்களில் இடைப்பட்ட (மத்திம) பலன்களையே பெறுவர். தீக் கோள்களும் நற் கோள்களும் முற் கூறியதற்கு (நான்காஞ் சுலோகத்திற் கூறியதற்கு) மாறான ஓரை இராசியி லிருக்கப் பிறந்தோர் மேற் சுலோகத்திற் கூறிய பலன்களைப் பெறார். (எ-று).

குறிப்பு :—இரட்டித்த இராசியில் சூரிய ஓரையில் தீக்கோள் நிற்கப் பிறந்தவரும், ஒற்றித்த இராசியில் சந்திர ஓரையில் நற்கோள் நிற்கப் பிறந்தவரும் மேலே நான்காஞ் சுலோகத்திற் கூறப்பட்டுள்ள பலனை முற்றிலும் அடையாச் மத்திமமாக அடைவார்.

இரட்டித்த இராசியில் சந்திர ஓரையில் தீக்கோள்கள் இருக்கப் பிறந்தவரும், ஒற்றித்த இராசியில் சூரிய ஓரையில் நற்கோள்கள் நிற்கப் பிறந்தவரும் மேலே நான்காஞ் சுலோகத்திற் கூறப்பட்டுள்ள பலனைச் சிறிதும் அடையார்.

## 296 சுலோகம் 6.

திங்கள், திரேக்காணத்தில் தரும் பலன்.

(எ-து) திங்கள் தனது திரேக்காணத்தி லிருப்பின் சிறந்த உருவ முடையவன். திங்கள் நட்புத் திரேக்



RangaRakes tamilnavarasam.com

காணத்தி லிருக்கப் பிறந்தவன் சிறந்த குணம் உடையவனாக இருப்பான். முற் கூறியவற்றிற்கு வேறுபட்ட திரேக்காணத்தி லிருப்பின் தான் இருக்கும் திரேக்காண பதிக்குச் சொல்லிய குணம் உள்ளவனா யிருப்பான்.

திங்கள் சர்ப்பத் திரேக்காணத்தி லிருக்கப் பிறந்தோன் கொடுந்தன்மை உள்ளவனாகவும், ஆயுதத் திரேக்காணத்தி லிருக்கப் பிறந்தோன் உயிர்களைத் துன்புறுத்துபவனாகவும், நாற்கால் திரேக்காணத்திற் பிறந்தோன் குரு மனைவியைப் புணர்வதில் இச்சையுள்ளவனாகவும், பறவைத் திரேக்காணத்திற் பிறந்தோன் அங்கு மிங்கும் அலைந்து திரிபவனாகவு மிருப்பான் (எ-று).

குறிப்பு:—சர்ப்பத் திரேக்காணங்களாவன:—கடகத்தில் இரண்டாவதும் மூன்றாவதும் விருச்சிகத்தில் முதலாவதும் இரண்டாவதும் மீனத்தில் மூன்றாவதும் ஆகும்.

ஆயுதத் திரேக்காணங்களாவன:—மேடத்தில் முதலாவதும், மூன்றாவதும், மிதுனத்தில் இரண்டாவதும், மூன்றாவதும், சிங்கத்தில் இரண்டாவதும் மூன்றாவதும் கன்னியில் இரண்டாவதும் மூன்றாவதும், தநுசில் முதலாவதும் இரண்டாவதும், மகரத்தில் மூன்றாவதும் ஆகிய திரேக்காணங்களாம்.

நாற்கால் திரேக்காணங்களாவன:—மேடத்தில் இரண்டாவதும், இடபத்தில் இரண்டாவதும், கடகத்தில் முதலாவதும், சிங்கத்தில் முதலாவதும் இரண்டாவதும் மூன்றாவதும், துலாத்தில் மூன்றாவதும், விருச்சிகத்தில் மூன்றாவதும், தநுசில் முதலாவதும், மகரத்தில் முதலாவதும் ஆகிய திரேக்காணங்களாம்.

பறவைத் திரேக்காணங்களாவன:—மிதுனத்தில் இரண்டாவது திரேக்காணமும், சிங்கத்தில் முதல் திரேக்காணமும், துலாத்தில் இரண்டாவது [illegible] கும்பத்தில் முதல் திரேக்காணமும் ஆகும்.



297. சுலோகம் 7

மேடம் முதலிய நவாம்சத்தில் திங்கள் நிற்கப் பிறந்தோன் இயல்பு.

(எ-து) மேட இலக்கினத்து மேட நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்து மேட நவாங்கிசத்திற் பிறந்தோன் கள்வனாகவும், இடப இலக்கினத்து இடப நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்து இடப நவாங்கிசத்திற் பிறந்தோன் ஐம்புலன் நுகர்ச்சியை நன்கு துய்ப்பவனாகவும், மிதுன இலக்கினத்து மிதுன நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்து மிதுன நவாங்கிசத்திற் பிறந்தோன் கற்றவனாகவும், கடக இலக்கினத்துக் கடக நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்துக் கடக நவாங்கிசத்திற் பிறந்தோன் மிக்க பொருளுள்ளவனாகவும், சிங்க இலக்கினத்துச் சிங்க நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்துச் சிங்க நவாம்சத்திற் பிறந்தோன் மன்னனாகவும், கன்னியாலக்கினத்துக் கன்னி நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்துக் கன்னி நவாம்சையிற் பிறந்தோன் பேடியாகவும், துலா இலக்கினத்துத் துலாம் நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்துத் துலாம் நவாம்சையிற் பிறந்தோன் போர்செய்வதில் விருப்பமுள்ளவனாகவும், விருச்சிக இலக்கினத்து விருச்சிக நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்து விருச்சிக நவாங்கிசையிற் பிறந்தோன் சுமை சுமந்து உயிர்வாழ்பவனாகவும், தனுசு இலக்கினத்துத் தனுசு நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்துத் தனுசு நவாங்கிசையிற் பிறந்தோன் அடிமைத் தொழில் செய்பவனாகவும், மகர இலக்கினத்து மகர நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்து மகர நவாம்சையிற் பிறந்தோன் பாவியாகவும், கும்ப இலக்கினத்துக் கும்ப நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்துக் கும்ப நவாம்சையிற் பிறந்தோன் துன்புறுத்துவதில் விருப்பமுள்ளவனாகவும், மீன இலக்கினத்து மீன நவாங்கிசம் தவிர ஏனைய இலக்கினத்து மீன நவாங்கிசத்திற் பிறந்தோன் அச்சம் அற்றவனாகவும் இருப்பான்

RangaRakes tamilnavarasam.com

மேடம் முதலிய இலக்கினங்களில் அந்தந்த நவாங்கிசங்களிற் பிறந்தோன் மேட நவாங்கிசம் முதலிய பன்னிரண்டு நவாம்சங்களுக்குக் கூறியவருள் தலைவனாக இருப்பான்.

மேடாதி துவாதசாம்சத்திற்கு மேடாதி இராசிகளில் திங்கள் இருந்தாற் கூறும் பலன்களையே கூறுக (எ-று)

குறிப்பு:— மேடாதி இராசிகளுக்கு மேடாதி நவாம்சம் வர்க்கோத்தம நவாம்சம் ஆதலின், ஏனைய இராசிகளில் மேடாதி நவாம்சங்களுக்குக் கூறிய பலனில் சிறப்பாயிருக்கும் பலன் கூறப்பட்டுள்ளது. ஏனைய இராசி மேட நவாங்கிசத்திற்குக் கள்வன் என்ற பலன் கூறப்பட்டுள்ளது. மேட இராசி மேட நவாங்கிசத்திற்காயின் கள்வருள் தலைவன் என்று கூறல் வேண்டும் என்க.

298. சுலோகம். 8

திரிம்சாம்சத்திற் கோள்கள் நின்ற பலன்.

(எ-து) செவ்வாய் தனது திரிம்சாம்சத்தி லிருக்கப் பிறந்தவன் நற்பார்வையுடன் கூடியவனாகவும், ஆற்றல் அணிகலன் பெருந்தன்மை இவற்றுடன் கூடியவனாகவும் ஒளி உறுதி கருதாமல் காரியங்களைச் செய்தலை உடையவனாகவும் இருப்பான்.

காரி தனது திரிம்சாம்சத்தி லிருக்கப் பிறந்தவன் நோய் உள்ளவனாகவும், மனைவியைப் பிரிந்தவனாகவும், கொடுந்தன்மை யுள்ளவனாகவும், பிறர் மனைவியை விரும்புபவனாகவும், துக்கம் உள்ளவனாகவும், வீடு, நிலம், புதல்வர், வேலையாட்கள் என்னும் இவற்றை உடையவனாகவும் ஒளி குறைந்தவனாகவும் இருப்பான். (எ-று).

299. சுலோகம் 9

இதுவும் அது

(எ-து) வியாழன் தனது திரிம்சாம்சத்தி லிருக்கப் பிறந்தவன் பொருள் புகழ் இன்பம் அறிவு இவற்றுடன் கூடியவனாகவும், ஒளியுடன் கூடி உலகமக்களால் பூசிக்கத்



தகுந்தவனாகவும், நோய் அற்றவனாகவும், எச்செயலிலும் முயற்சி செய்தல் ஐம்புலப் பொருள்களைத் துய்த்தல் இவற்றுடன் கூடியவனாகவு மிருப்பான்.

புதன் தனது திரிம்சாம்சத்தி லிருக்கப் பிறந்தவன் அறிந்தவற்றை மறவாதிருக்கும் ஆற்றல், பாட்டு, வாத்தியம், நாட்டியம் முதலிய கலையுணர்தல், ஒருவரைப் போல வேடமணிதல், இலக்கியம் எழுதுதல், பேசும் திறமையைப் பெற்றிருத்தல், தச்சு வேலை முதலிய கைத்தொழிலிற் சிறந்திருத்தல், ஒழுக்கமுடையவனா யிருத்தல், கருதாமல் எதையும் செய்தல் என்னும் இவற்றை உடையவனா யிருப்பான் (எ-று).

300. சுலோகம் 10

இதுவும் அது

(எ-து) வெள்ளி தன் திம்ரிசாம்சத்தில் இருக்கப் பிறந்தவன் மிக்க மக்கட்பேறு, இன்பம், நோயின்மை, பாக்கியம், பொருள், உடலழகு என்னும் இவற்றுடன் கூடியவனாகவும், கொடுஞ் சித்தம், மிக்க அழகிய உடல் என்னும் மாறுபட்ட தன்மையை யுடையவனாகவும், அடங்காத இந்திரியங்களை உடையவனாகவும், பல பெண்களைப் புணர்பவனாகவும் இருப்பான்.

சூரியன் செவ்வாயின் திரிம்சாம்சத்தி லிருக்கப் பிறந்தோன் சவுர்யம் உள்ளவனாகவும், சந்திரன் செவ்வாயின் திரிம்சாம்சத்தி லிருக்கப் பிறந்தோன் பணிவில்லாதவனாகவும், சனியின் திரிம்சாம்சத்தில் சூரியனிருப்பின் கொடுந்தன்மை உள்ளவனாகவும், சந்திரனிருப்பின் உயிர்களை வருத்துபவனாகவும், வியாழன் திரிம்சாம்சத்தில் சூரிய னிருப்பின் நற்குணம் பொருந்தியவனாகவும், சந்திர னிருப்பின் செல்வவானாகவும், புதனின் திரிம்சாம்சத்தில் சூரியனிருப்பின் சுகமுடையவனாகவும்,

RangaRakes tamilnavarasam.com

சந்திரனிருப்பின் கற்றவனுகவும், வெள்ளி திரிம்சாம்சத்தில் சூரியனிருப்பின் அழகிய உடம்பினை உடையவனுகவும், சந்திர னிருப்பின் யாவர்க்கும் வேண்டியவனுகவு மிருப்பான் (எ-று).

301. இல்லை

பத்தொன்பதாவது
ஆசிரய யோகாத்தியாயம் முற்றும்.

---

## இருபதாவது
## பிரகீரண விதான நாம அத்தியாயம்
## அஃதாவது தான காரக பல அத்தியாயம்.

குறிப்பு :—இது பிரகீர்ணகாத்தியாயம் என்றும் பெயர் பெறும். பிரகீர்ணகம்—பலவகைப் பட்ட பொருள். மங்களேஸ்வரீயம் காரக யோகப் படலம் என்று பெயரிட்டுக் கூறுகிறது.

302. ஆட்சியில் உச்சம் மூலத்
திரிகோணத் தடைந்தோர் கண்டம்
மாட்சியில் நிற்ப ராகிற்
சகாயகா ரகராய் மன்னும்
காட்சிகொள் ளுதய நாதற்
கிப்பலங் கருமத் துள்ளோர்
தாட்சியில் சுபங்கள் மேன்மேல்
தருவரென் றியம்ப லாமே.

(எ-து) தங்கள் தங்களுடைய ஆட்சி, உச்சம் மூலத்திரிகோணத்தில் நின்ற கிரகங்கள், இலக்கினத்திற்குத்தான், இலக்கினுதிபதிக்குத்தான் கேந்திரங்களில் (நிற்பராகில்) அவர்கள் அன்னியோன்னிய சகாயத்தைச் செய்வார்கள்.

கர்மம் (என்னும்) பத்தாமிடத்தில் நின்ற கிரகம் விசேடித்து அன்னிய (அன்னியோன்ய) காரகனும் விசேடமாக மேலும் சுபத்தைத் தரும் (எ-று). 1

குறிப்பு :—சகாய காரகர்—சகாயமான பலனைச் செய்பவர். இதனை "முதலாவது சுயச்சேத்திர மூலத்திரிகோண உச்சமாகிருந்த கிரகங்கள் அன்னியோன்யம் இலக்கினுதி [illegible] கேந்திரத்தில் [illegible] ஒருவர்க்கொருவர் அன்னியோன்ய (சகாய) காரகராவார்கள் என்பதாம்.

RangaRakes
tamilnavarasam.com

அவருள், பத்தாமிடத்தி லிருந்த கிரகம் அதிகமாக அன்னி யோன்னிய காரகத்துவம் அடைந்ததாம்" என்று மங்களேஸ்வ ரீயம் (22-1) கூறும்,

மேற் கூறியவற்றிற்கோர் எடுத்துக் காட்டு

302. உடுபன் கடகந் தனிலுதிப்ப
உச்சஞ் சேய்சனி யருக்கன்பொன்
வடுவில் சுபகா ரகராதி
யந்தம் தருவ ரெனவகுப்பர்
விடுமோ ருதயந் தனக்கினிய
விளங்கு மம்பில் அம்பரத்தில்
நடுநின் றிடுவோர் பரற்பரமே
நன்மை தருவார் மேன்மேலும்.

(எ-து) கர்க்கடக இலக்கினத்திற் சந்திரன் உதய மாக, உச்ச இராசிகளில் செவ்வாய், சனி, அருக்கன், வியாழன் என்னும் இவர்கள் நிற்கில் பலதானத்திலும் சகாயஞ் செய்வர்.

இலக்கினத்தில் நின்றவனுக்கு அம்பு—நாலாமிடம், அம்பரம்—பத்தாமிடம் இவைகளில் நின்றவர் பரற்பரம் (பரஸ்பரம்)—ஆதியந்தம் நன்மையைத் தருவர் (எ-று) 2

குறிப்பு:—பிறந்த இலக்கினம் கடகமாக அதில் திங்களும், மகரத்தில் செவ்வாயும், துலாத்திற் சனியும், மேடத்திற் சூரியனும், கடகத்திற் குருவு மிருக்கப் பிறந்தோ னுக்குச் செவ்வாயும், சனியும், சூரியனும், குருவும் அன்னி யோன்னிய காரகராவர். இலக்கினத்தி லுள்ள கிரகத்திற்கு பத்து, நான்கு என்னும் இவ்விடங்களி லிருக்குங் கோள்கள் காரகராவார்.

இவ்வாறு கூறியதால் இலக்கினத்தி லுள்ள கிரகம் ஆட்சியிலோ, உச்சத்திலோ, மூலத்திரிகோணத்திலோ இருப் பினும்; அந்தக் கிரகத்திற்கு, பத்து, நான்காமிடத்தில் ஆட்சி,



உச்சம் மூலத்திரிகோணத்தில் இருக்கும் கிரகம் காரகமாகுமே யன்றி இலக்கினத்தி லுள்ள கிரகம் பத்து நான்காமிடத்திலுள்ள கிரகங்கட்குக் காரகம் ஆவதில்லை என்று உய்த்துணர்ந்து கொள்க.

மேலும் காரக நிமித்தங் கூறப்படுகிறது.

304. சொல்லுங்கேந் திரத்த ரல்லார்
சுயந்திரி கோண முச்சம்
புல்லியே கருமம் புக்கில்
பரற்பரம் பொருந்தும் நன்மை
அல்லதாங் கவர்க டம்மிற்
கேந்திரம் பரந்தி னுற்று
நல்லதோர் நட்ப ராகிற்
பரற்பரம் நன்மை நல்கும்

(இ-து) கேந்திரங்களுக் குடையவ னல்லாதே மற்றொரு கிரகம் ஆட்சி, திரிகோணம் (மூலத்திரி கோணம்), உச்சம் இவைகளில் பத்தாமிடத்தில் நிற்கில் பரற்பரம் (பரஸ்பரம்)—ஆதியந்தம் எல்லா இராசி களினும் சுபபலனைத் தருவன்.

இலக்கின கேந்திரங்க ளில்லாதே கிரகங்கள் தங்களில் கேந்திரிக்க நிற்கினும் யோக காரகராம்.

அன்றியும், யாதொரு கிரகத்துக் காயினும் அவனுக்குப் பத்தாமிடத்தில் நின்றவன் சேத்திரம் (சுய சேத்திரம்), உச்சம், திரிகோணத்தில் நின்று, மற்றக் கிரகத்துக்குத் தற்கால மித்துருவாய் நின்ற கிரகங்களி னுலே சுபபலம் சம்பூரண மாயிருக்கும் அவனுக்குப் பல தானத்திலும் அதிக சகாயத்தைச் செய்வன் (எ-று) 3

குறிப்பு:—"காரகமாகும் கோள் ஆட்சியிலோ, மூலத் திரிகோணத்திலோ, உச்சத்திலோ இருப்பது காரகமாகுந் தன் மைக்கு ஏதுவாகின்றது. இங்ஙனமாயினும் ஒரு கோள் இலக்கி னத்திற்குக் கேந்திர மில்லாத இடத்திலே நின்று ஆட்சியினையோ



RangaRakes tamilnavarasam.com

மூலத்திரிகோணத்தினையோ உச்சத்தினையோ பெற்றிருப்பின், அந்தக் கோளிற்குப் பத்தாமிடக் கேந்திரத்தில் மற்றொருகோள் நிற்க அவ் விருவரும் ஒருவருக் கொருவர் இயல்பான நட்பினரா கவோ தற்கால அதிநட்பினராகவோ இருப்பின், அக் கோளிற்குப் பத்தாமிடத்திலிருக்குங் கோளும் காரகமாகும்" என்பது (பிரகீர்ணகாத்தியாயம் - சுலோ - 3) பிருகத் சாதக கருத்தாகும்.

"இதுவரை ஒன்று, நான்கு, ஏழு, பத்து இவ்விடங்களில் இருக்கின்ற கிரகம் ஆட்சி, உச்சம்,மூலத்திரிகோணத்தி லிருந்தால் ஒன்றுக்கொன்று காரகமாக ஆகும் என்றும், ஆட்சி, உச்சம், மூலத் திரிகோணம் இவற்றிற் கோள்களிருந்து அவ் வீடு பிறந்த இலக்கினமாக ஆகில் அதற்கு நான்கு பத்திலிருக்கும் கிரகம் இலக்கினத்தி லிருக்கும் கிரகத்திற்கு மட்டும் காரகமாக ஆகும் என்றும், இலக்கினத்திலிருக்கும் கிரகம் நான்கு பத்தாமிடத்தி லுள்ள கிரகத்திற்குக் காரக மாவதில்லை என்றும் கூறப்பட்டன.

இந்தச் சுலோகத்தால் இலக்கின கேந்திரத்தில் கிரக மில்லாவிடினும் ஆட்சி, உச்சம், மூலத்திரிகோணம் இவற்றில் கிரகமிருந்து அந்தக் கிரகம் ஒன்றிற்கொன்று மித்திரனுகவும், பத்தாமிடத்தி லிருப்பதன் மூலம் அதிமித்திரனுகவுமாகி ஒன்றிற் கொன்று பத்தாமிடத்தி லிருக்குமானுல், பத்தாமிடத்தி லிருக்கிற கிரகம் ஆட்சி, உச்சம், மூலத்திரிகோணத்தி லிருக்கிற கிரகத் திற்குக் காரக மாகும்" என்பது கருத்தாகும் என்பர் (ஸ்ரீ நடேச சாஸ்திரிகள்). இப்பாட்டு உரையுள் சிலதிருத்தம் வேண்டும் போலும் அறிஞர் ஆராய்ந்து காண்க.

நற்பலன் தரும் காரகர்

305. செப்பும்வர்க் கோத்த மத்திற்
 செனித்திடிற் சுபமே யாகும்
கொப்புறு வேசித் தானம்
 கோள்களுற் றிடினும் நன்மை
தப்பில்நாற் கண்டந் தம்மிற்
 சார்ந்திடுங் கோள்க ளேனும்
மைப்பு, கண்ணி முட்டேன்
 மன்னிடுஞ் சுபங்க ளென்றே.



(எ-று) இலக்கினத்துக்கு வர்க்கோத்தம நவாங் கிசத்திற் பிறக்கில் சுபபலனைத் தரும். வேசித்தான மாகிய ஆதித்தனுக்கு இரண்டா மிடத்தில் கிரகங்கள் நிற்குமாகிலும் சுபபலனைத் தரும். நாற் கண்டங்களான உதயம் நான்கு ஏழு பத்தில் கிரகங்கள் நிற்கு மாகிலும் சுபபலனை அந்தக் கிரகங்கள் தரும். (எ-று). 4

குறிப்பு :- வர்க்கோத்தம நவாங்கிசத்தினை "ஆய்சரந் திரோப யங்கட் காதிமத் தியமே யந்தம், ஏய்தரு மிவற்றை வர்க்கோத் தமநவாங்கிசம தென்பர்" என்று (15) இந் நூல் கூறும் "மேடம், கடகம், துலாம், மகரம் என்ற இந்த நான்கு சர இராசிகளில் முதல் நவாம்சமும், இடபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் என்ற இந்த நான்கு திர இராசிகளில் மத்திய நவாங்கிச மாகிய ஐந்தாவது நவாங்கிசமும், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் என்ற இந்த நான்கு உபய இராசிகளில் கடைசி நவாம்சமாகிய ஒன்பதாம் நவாம்சமும் வர்க்கோத்தமம் என்று கூறப்படும். வர்க்கோத்தமத்தி லுள்ள கோள்கள் நற்பலனைத் தரும் என்றும், இதிற் பிறந்தோன் குலத்திற் றலைவனாக இருப்பன் என்றும் அறிஞர் கூறுவர்.

இந் நூல் "கொப்புறு வேசித்தானம் கோட்களுற் றிடினும்" என்று பொதுவாகக் கூறுகின்றது. ஆனால் மங்க ளேஸ்வரியம் "புதன், குரு, சுக்கிரன் இவர்களி லொருவர் (சுபர்) வேசித் தானத்தி லிருப்பினும்" என்று கூறுகிறது.

அந்தந்தப் பலன் கொடுக்கும் யோகமும், திசைகள் பலன் கொடுக்குங் காலமும்

306. எதிருங்கேந் திரங்க டம்மில்
 இரணிய னுதயஞ் சென்மத்
ததிபர்க ளுறினங் தத்தில்
 அவரவர் சுபத்தை யீவார்
வதியுங்கோள் சிரோத யத்தில்
 உபயத்திற் பிருட்டந் தம்மின்
முதிருறு நன்மை தின்மை
 முதனடு வந்தம் நேர்வார்,

RangaRakes tamilnavarasam.com

(எ-து) கேந்திரத் தானங்களிலே வியாழனும், உதய இலக்கினாதிபனும், சென்ம இலக்கினாதிபனும் நிற்கில், அந்திய வயசில் சுபமாகிய நல்ல பலத்தைத் தருவர்.

சிரசோதய இராசியில் நின்ற கிரகங்கள் திசையிலே தான், அபகாரத்திலேதான் ஆதியிற் பலத்தைத் தரும். உபயோதய (சிரபிருட்டோதய) இராசியில் நின்ற கிரகங்கள் திசையிலேதான், அபகாரத்திலேதான் நடுவிலே பலத்தைக் கொடுக்கும். பிருட்டோதய இராசியில் நின்ற கிரகங்கள் திசையிலேதான் அபகாரத்திலேதான் அவசானத்திலே (இறுதிக் காலத்திலே) பலத்தைக் கொடுக்கும் (எ-று). 5

குறிப்பு :—உதய இலக்கினம் என்பது ஒருவன் பிறந்த காலத்தில் உதித்த இலக்கினமாகும். சென்ம இலக்கினம் என்பது இங்கே செனித்த காலத்தில் சந்திரனிருக்கும் இராசியாகும். வடமொழி வராகவோரை "மத்யே வயஸஸ் ஸுகப் ரதா : கேந்திரஸ்தா குரு சன்ம லக்ன பா :" என்று கூறுகிறது. "மத்திய வயதில் சுகத்தைக் கொடுக்கும்; குருவும் சன்ம இலக்கினாதிபனும் இலக்கினாதிபனும் கேந்திரத்திலிருந்தால்" என்பது மேற்கண்ட சுலோகத்தின் பொருளாகும். ஆனால் வராக ஓரையின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலாகிய இந் நூல் 'அந்தத்தில்' என்று கூறுகின்றது. இப் பகுதி அறிஞர்களால் ஆராயப்பட வேண்டும்.

மங்களேஸ்வரீயம் "பிருட்டோதய விராசி, சிரோதய விராசி, உபயோதய விராசிகளில் இருந்த கிரகம் கிரமமாக திசையந்தத்திலும் திசாரம்பத்திலும் திசாமத்தியிலும் பலன் கொடுப்பர். ஆனால், திசாநாதன் திசாப் பிரவேச காலத்தில் பிருட்டோதய இராசியாகிய மேட, இடப கடக தனுசு மகரம் இவைகளிலிருந்தால், அந்தத் திசை சுபபலன் தருவதாகிலும் அசுபபலன் தருவதாகிலும் அவற்றை அந்தத் திசை அந்தியத்திற் கொடுப்பான். உபய உதயமான மீனத்திலிருந்தால் திசைமத்தியிற் கொடுப்பன், சிரோதய இராசியான மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் இவற்றை அடைந்திருந்தால் திசை ஆரம்



பத்திற் கொடுப்பன். அந்தத் திசை வருடத்தை மூன்று பாகமாய்ப் பிரித்துக் கொள்ளவும். இது கார்க்கேயர் வாக்கு" என்று (22-5) கூறுகிறது.

அட்டகவர்க்க பலனுண்டாகும் கால விசேடம்
(கோள்கள் பலன் தரும் காலம்)

307. [illegible]
[illegible] முதனாட் சேரும்
கனகனும் புகரும் பம்மில்
நடுவுறப் பலனைக் காட்டும்
சனிமதி பலங்கள் பம்மி
னந்தியந் தனில ளிக்கும்
அனுவழி யுற்ற பம்மிற்
பலமென்று மளிப்ப னன்றே.

(எ-து) ஆதித்தனும், செவ்வாயும் இராசிகளில் வருகிற பொழுதே பலத்தைத் தருவார். வியாழனும், சுக்கிரனும் இராசி மத்தியிற் பலனைத் தருவார். சனியும், சந்திரனும் இராசி அந்தியத்திலே பலத்தைத் தருவார். புதன் எப்பொழுதும் பலத்தைத் தருவான் (எ-று). 6

குறிப்பு :—அனுவழி—புதன். "சூரியன் முதலான கோள்களின் அட்டக வர்க்கத்தை ஏற்படுத்திக் கொண்டு கோசரத்தில் சூரியாதி கிரகங்கள் மேடம் முதலான இராசிகளில் சஞ்சரிக்கும் பொழுது வருவதாகக் கூறப்படும் பலனைச் சூரியன், செவ்வாய் இவர்கள் அந்தந்த இராசியின் முதற்பாக சஞ்சார காலத்திலும், குரு, சுக்கிரன் இவர்கள் இராசியின் நடுப்பாக சஞ்சார காலத்திலும், சனி சந்திரன் இவர்கள் இராசியின் கடைப்பாக சஞ்சாரத்திலும், புதன் இராசியின் எல்லாப்பாக சஞ்சாரகாலத்திலும் தருவர்" என்பர் (ஸ்ரீ-நடேச சாஸ்திரிகள்).

இருபதாவது
பிரகீரண விதான நாம அத்தியாயம்
முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## இருபத்தொன்பதாவது
## அரிட்ட யோக அத்தியாயம்

(வடமொழி பிருகஜ்ஜாதகம் 'அதிஷ்டாத்யாயம்' என்று பெயர் கூறுகின்றது. மங்களேஸ்வரியம் 'அரிட்டாயோகப் படலம்' என்று பெயர் கூறுகின்றது.

பரிணவி, பக்கள் மன்னுருநூல், மரித்தலும்.

308. உதய மதற்குச் சுதன்பாரிக்
கதிபர் சுபரோ டுறநோக்க
அதனி லுறிலாங் கவைமன்னும்
சசிக்கு மவைபோ லன்றியிலே
கதிர்பார்த் தோநத் துதிப்பச்சுன்
னேழி லுறிற்கா தலிமரணம்
மதலைத் தானந் தனிற்குருதி
மருவிற் றனயன் மரித்திடுமே.

(எ-து) இலக்கினத்துக்குப் புத்திர களத்திரத் தானதிபர்கள் சுபக்கிரகத்துடன் கூடினும், நோக்கினும், அந்தத் தானங்களில் நிற்கிலும் அவற்றினுடைய சம்பத்துக்களை அனுபவிப்பன்.

சந்திரன் நின்ற இராசிக்குப் புத்திர, களத்திர பம்முக்களுக்கு அதிபதி சுபக்கிரகத்துடன் கூடினும், நோக்கினும் முன்பு போலே அவற்றினுடைய சம்பத்துக்களை அனுபவிப்பன்.

இலக்கினத்துக்கும், சந்திரனுக்கும் புத்திர களத்திர இராசி யதிபதி சுபக்கிரக திருஷ்டி யில்லாமல் அந்தத் தானங்கட்குச் சட்டாட்டம வியங்களில் (6, 8, 12ல்) நிற்கில் அவற்றினுடைய சம்பத்துக்களில்லை என்பது.

சூரியன் கன்னி இலக்கினத்தி லுதிக்கச் சனி எழா மிடத்தில் நிற்கின் இவனுடைய பாரி மரணம்.

சூரியன் கன்னி இலக்கினத்தி லுதிக்கச் செவ்வாய் அஞ்சாமிடத்தில் நிற்கில் இவனுடைய புத்திரர் மரணம் (எ-று). 1

குறிப்பு:—பாவ பலன் கூறுதற்குச் சந்திர இலக்கினத்தையும், உதய இலக்கினத்தையும் முதலாக வைத்துக் கூற வேண்டும் என்பதை மங்களேஸ்வரியம்

" இந்தநற் கதிய தாக
ஈராறு வோரை கட்டும்
சந்திரன் றன்னைக் கொண்டும்
சாற்றிடு முதயங் கொண்டும்
சுந்தரப் புவியி லுள்ள
துயரங்கள் மாளி டக்குத்
சொந்தமாய்ச் சாற்று வரைக்கச்
குற்றமற் றறிந்து கொள்ளே" (189) என்று கூறுவ
தால் உணரலாம். பார்த்திபனாம், ... கன்னியா ராசிக்குப் பெயர். இது வடசொல்.

பரிணவி மக்கள் குறை முதலிய யோகங்கள்

309. புகரோன் றனக்குச் சதுரசிரயந்
தீயர் புகினும் புகரோனைப்
பகருந் தீயர் நெருக்கிடினும்
புகரைப் பாவர் நோக்கவுறச்
சுகமார் நற்கோ ளுறற்றிட்டி
யிலையே யெனினு மவன்றனோவி
தகனந் தன்னல் விழுதலினல்
தரும்பா சத்தாற் சாமடைவே.

(எ-து) சுக்கிரனுக்கு நான்காமிடத்திலும் எட்டாமிடத்திலும் பாபக் கிரகங்கள் நிற்கில் அக்கினியினுற் பாரி மரணம்.

RangaRakes tamilnavarasam.com

சுக்கிரனுக்கு இரண்டு புறமும் பாவர் நிற்கில் இவன் பாரி விழுந்து மரணம்.

சுக்கிரனைப் பாவக் கிரகங்கள் கூட, நோக்கச், சுபக் கிரகங்கள் கூடாமலும், நோக்காமலும் இருக்கில், இவன் பாரி கயிற்றினாற் கட்டுப்பட்டு மரிக்கும் (எ-று) 2

குறிப்பு :—சதுரசிரயம்—நான்காமிடம் ; எட்டாமிடம். இப் பாட்டில் மனையாள் மரித்தற்குரிய மூன்றாவது யோகம் "புகரைப் பாவர் நோக்க, உறச், சுகமார் நற்கோள் உறல், திருட்டி இலையே எனினும்" என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், கடலங்குடி ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் எழுதிய பிருஹஜ்ஜாதக உரையில் இதனைக் கூறும் சுலோகப் பகுதிக்கு "சுபக்கிரகங்களுடன் கூடியிருக்காமலும் அவர்களால் பார்க்கப்படாமலும் சுக்கிரனிருந்தால்" என்று உரை எழுதப்பட்டுள்ளது. இப் பகுதியைக் கூறும் மங்களேஸ்வரியம் என்னும் நூல்

"புகரவன் சுபரைச் சேர்ந்து
உறுடா னிருக்கும் போது
புகரவன் றன்னை நல்லோர்
பொற்புற நோக்கும் காலம்
புகலுவோ முலகு வந்த
புண்ணியன் களத்தி ரந்தான்
புகலுறுங் கயிறு தன்னாற்
போக்குவா ளுயிரைத் தானே" என்று (23-8)

வேறுபடக் கூறுகின்றது.

பலதீபிகை "சுக்கிரனுக்குப் பன்னிரண்டு, நான்கு, எட்டு இவ்விடங்களில் தீக்கோள்கள் நிற்கினும், சுக்கிரனுக்கு இருபுறத்திலும் தீக்கோள்கள் நிற்கினும், சுக்கிரனைப் பாவக் கிரகங்கள் நோக்கினும், சுக்கிரனோடு பாவக் கோள்கள் கூடியிருப்பினும் மனையாள் மரிப்பள்" என்று (அத்தியாயம் 10 — சுலோ. 1) கூறுகிறது.

ஒரே இராசியில், சுக்கிரன் நிற்கும் பாகைக்கு முன்னும் பின்னும் பாவர் நின்றாலும், சுக்கிரன் பாவர் நடுவே நின்றதாகவே கொள்ள வேண்டும் என்க.



கணவனும் மனைவியும் ஓர் கண்ணுடைய ராயிருக்கும் யோகமும் ; மனைவி உறுப்புக் குறைவுடையவளா யிருக்கும் யோகமும்.

310. உதயத்துக் கரிவி யத்தில்
உதயனும் மதியு முற்றல்
பதியொடு மனையாட் கோர்கண்
பானுவும் புகரும் ஏழில்
விதிமனை அங்க வீனி
சுதன்றவம் வெயிலோன் வெள்ளி
இதமுற நிற்கில் அங்க
வீனியாம் பாரி யெய்தும்.

(இ-ள்) இலக்கினத்துக்கு ஆறாமிடத்திற் சூரியனும் பன்னிரண்டாமிடத்திற் சந்திரனும் நிற்கில் தனக்கும் தன் பாரிக்கும் ஒரு கண்ணேயாம்.

சூரியனும், சுக்கிரனும் ஏழாமிடத்தில் நிற்கில், அங்க வைகல்லிய முள்ள (உறுப்புக் குறைவுள்ள) பாரியை யுடையவன்.

ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் இவற்றில் ஆதித்தன், சுக்கிரன் நிற்கினும், பாரிக்கு அங்க வீனம் உண்டாம் (எ-று).

அங்க வீனமாவது அங்கத்தில் விரணாதிகள் உண்டாதலாம். 3

குறிப்பு :—"சந்திரன் ஆறிலும், சூரியன் பன்னிரண்டிலுமாவது அல்லது, சந்திரன் பன்னிரண்டிலும் சூரியன் ஆறிலுமாவது மாறி யிருக்கப் பிறந்தவன் களத்திரத்துக்கும் தனக்கும் ஒரு கண் பார்வையும், மற்றொரு கண் ஊனமாகியும் இருப்பான் என்பதாம்" என்று மங்களேஸ்வரியம் (23-9) கூறுகிறது.



RangaRakes tamilnavarasam.com

மலடிக்குக் கணவனுமிருக்கும் யோகமும் ; மனைவியும் புதல்வரும் இல்லாத யோகமும்.

311. கோண னுதிப்ப வேழதனிற்
கூறு மிராசிச் சந்திபுகர்
மாண வைந்திற் சுபரிலையேல்
வந்தி பதியாய் மன்னியிடும்
சீண மதிய மைந்திலுறத்
தீக்கோள் விரைய முதயமதம்
பூணு மென்னிற் களத்திரமும்
புதல்வர் தாமு மிலையென்றே.

(எ–து) உதயத்திற் சனி நிற்க, ஏழாமிடத்திற் சக்கிர சந்தியான கர்க்கடக விருச்சிக மீனங்களில் அந்திய நவாங்கிசத்தில் சுக்கிரன் நிற்க, ஐந்தாமிடத்திற் சுபக்கிரக மில்லாம லிருக்கில் மலடிக்குப் புருடனு மிருப்பன்.

சீரண சந்திரன் (தேய்பிறைத் திங்கள்) ஐந்தாமிடத்தில் நிற்கப், பாபக் கிரகங்கள் பன்னிரண்டாமிடத்திலும், உதயத்திலும், ஏழாமிடத்திலும் நிற்கில், பாரியும், புத்திரனும் இல்லாதவனும் (எ–று). 4

குறிப்பு :—" கோணோதயே பிருகுதநயேஸ்த சக்ர ஸந்தௌ வந்தியாபதி " என்று வடமொழி வராக ஓரை கூறுகிறது. இச் சுலோகத்தில் 'அஸ்த சக்ர ஸந்தி' என்பதற்கு 'ஏழாவது இராசியினுடைய கடைசி நவாம்சம்' என்று பொருள் காண்பர் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள்.

ஆனால், தமிழ் வராக ஓரையின் 'ஏழதனிற் கூறு மிராசிச் சந்தி' என்னும் பகுதிக்கு அதன் உரையாசிரியர் 'ஏழாமிடத்திற் சக்கிர சந்தியான கர்க்கடக விருச்சிக மீனங்களில் அந்திய நவாங்கிசத்திற் சுக்கிரன் நிற்க' என்று உரை காண்பர்.

மங்களேஸ்வரீயமும் அவ்வாறு கூறுகிறது. அதனைக் கீழே காண்க.



" மந்தனே உதயம் நிற்க
மகிழுந்தேள் மீன்நண் டம்சம்
அந்திய மதிலே வெள்ளி
அமர்ந்திட ஐந்தே ழாகில்
விந்தையாய்ச் சுபரை வெள்ளி
விரும்பியே கூடாக் காலை
வந்தவன் மனைவி வந்தி
மான்சேடி யிடபத் தோர்க்கே "

" கன்னிமான் விடையில் வந்த
காளையின் களத்தி ரந்தான்
மன்னிய மலடி யென்று
வகுத்தனன் முன்தே . விக்குப்
பின்வரு பவட்குப் பிள்ளை
பிறந்திடு மென்று வேதன்
உன்னத மாய மைத்தான்
ஒண்டொடி யிரண்டா மென்றே "
(23-12, 13)

இப் பாட்டால்
பலர் பகையைப் புல்லும் யோகமும், இவன் பாரியும் பலரைப் புல்லும் யோகமும், மனைவி முன் மரிக்கும் யோகமும், மனைவி மூத்த வயதினளாய் அமையும் யோகமும் கூறப்படுகின்றன.

312. அசிதன் செவ்வாய் வர்க்கத்திற்
புகரோ னுதிப்ப அவர்நோக்கில்
இசைவிற் பலர்பா ரிகயப்புல்லும்
இந்தை நோக்கில் இவன்பாரி
நசையாற் பலரைப் புல்லிடுவாள்
மதியம் புகரோ னேழிலுற
விசைதன் பாரி முன்மரணம்
நன்றேக் குறின்மெல் லியள்மூப்பாம்.

(எ–து) சனி செவ்வாய் சட்வர்க்கத்தில் சுக்கிரன் உதயமாக; அந்தச் சுக்கிரனைச் சனி, செவ்வாய் நோக்கில், பிறருடைய பாரியைப் புணர்ந்து திரிவன்.

RangaRakes

tamilnavarasam.com

சந்திரன் இந்தப்படி (சனி செவ்வாய் சட்வர்க்கத்தில்) நிற்கச், சனி, செவ்வாய் நோக்கில் அவனுடைய பாரி பலரையும் புணர்ந்து திரிவள்.

சந்திரனும், சுக்கிரனும் ஏழாமிடத்தில் நிற்கப் பாவர் திட்டி உண்டாகில், புத்திரன் இல்லாதவனும். புத்திரனுண்டாகில் புருடனுக்கு முன்னே பாரி மரணம். சுபக்கிரகம் நோக்குமாகில் தனக்கு வயசுக்கு மூத்த பாரியை விவாகம் செய்வன் (எ-று) 5

குறிப்பு :—வடமொழி வராகவோரையுள் இப் பாட்டின் கருத்தினைக் கூறும் சுலோகத்திற்குச் "சனி செவ்வாய் இவர்களின் சட்வர்க்கத்திற் சுக்கிரனிருந்து, சுக்கிரனிருக்குமிடம் ஏழாவது வீடாகவும் வந்து, சனி செவ்வாய் இவரால் பார்க்கப்படப் பிறந்தவன் பிறர் மனைவியரைப் போகிக்கின்றவனாக இருப்பான். அந்தச் செவ்வாய் சனி இருவரும் சந்திரனுடன் சேர்ந்தவர்களாயிருந்து சனி செவ்வாய் இவர்களின் வர்க்கத்தில் ஏழாமிடத்திற் சுக்கிரனு மிருந்தால் பத்தினியுடன் கூடக் கெட்ட நடத்தையுள்ளவனாக ஆவான் சுக்கிரன் சந்திரன் இவர்கள் ஏழாமிடத்தி லிருக்கப் பிறந்த மனிதன் பத்தினியற்றவனாகவோ அல்லது புத்திர னற்றவனாகவோ இருப்பான். புருடக் கிரகங்களான சூரியன், செவ்வாய், குரு என்னும் இவர்களும், ஸ்திரீ கிரகங்களான சந்திரன் சுக்கிரன் இவர்களும் ஏழாமிடத்திலிருந்து, சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டிருக்கும் பொழுது, ஸ்திரீ புருடர்கள் சீக்கிரத்தில் கிழத்தன்மையை அடைந்த சரீர முள்ளவர்களாக ஆவார்கள்" என்று உரை கூறியுள்ளார் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள்.

இப்பாட்டு மரபு அறுதல், சிற்பியாயிருத்தல், தாசி மைந்தனாயிருத்தல், நீசனாயிருத்தல் என்னும் அரிட்ட யோகங்களைக் கூறுகிறது.

313. கருமகா மஞ்சுற் றத்திற்
களங்கனசுக் கிரன்றீக் கோள்கள்
மரபறும் எழுச்சிக் காண
மாலைச்சுன் றேக்கிற் சிற்பி
தருசனி காலிற் சுங்கன்
வியத்தினிற் சூசி மைந்தன்
இரவியிந் தேழிம் மிற்ப
இகற்சனி நோக்கில் நீசன்.



(எ-து) பத்தாமிடத்திற் சந்திரனும், ஏழாமிடத்திற் சுக்கிரனும், நான்காமிடத்திற் பாவக் கிரகங்களும் நிற்கில் இவன் பிறந்ததின் பின்பு வங்கிசம் முடியும்.

இலக்கினத் திரேக்காணத்தில் நின்ற புதனைச் சனி நோக்குமாகில் சிற்ப வித்தையுடையன். சனி நவாங்கிசத்தில் சுக்கிரன் நிற்கில், அது பன்னிரண்டாமிடமாகில் தாசியுடை புத்திரனும்.

சூரியனும் சந்திரனும் ஏழாமிடத்தில் நிற்கச் சனி நோக்கில் நீசனும் (எ-று). 6

குறிப்பு :—கருமம்—பத்தாமிடம். காமம்—ஏழாமிடம். சுற்றம்—நான்காமிடம். எழுச்சி—இலக்கினம் எழுச்சிக்காணம்—இலக்கினத் திரேக்காணம்.

இப் பாட்டிற் கூறியுள்ள 'மரபறுதல்' என்னும் யோகத்தினை

"பத்தினில் நிலவு தங்கப்
பனிங்குஏ ழதிலே நிற்க
உத்ததோர் சுகத்திற் பாபர்
உற்றிட உதித்த பேர்க்கு
நித்திய மகவுண் டானல்
நிரியாண மாகு மென்று
சத்திய லோகம் வாழும்
சதுர்முகன் மைந்திட் டானே"

என்று (23-10) மங்களேஸ்வரீயம் கூறுகிறது.

இப் பாட்டு வைத தோஷமும், சூர்ய தோஷமும், வெண்குட்டமும் அங்கவீனமும் உண்டாகும் அரிட்ட யோகங்களைக் கூறுகிறது.

314. சிதனும் சேயும் ஏழிலுறத்
தீயர் நோக்கில் நோய்வாதன்
மதிதேள் குளிர்கா லுறத்தீநோக்
குறின்மன் னிடுநோய் குய்யத்தில்
உதய மதியேழ் கதிர்பாவர்
இருப்பம் சொம்மேல் வெண்குட்டம்
விதியாக் கினையிந் தேழாரல்
வேசிச் சனியேல் விகலாங்கன்

(எ-து) சுக்கிரனும் செவ்வாயும் ஏழாமிடத்தில் நிற்கப், பாவக் கிரகங்கள் நோக்கில் வாத ரோக முடையன்.

சந்திரன் கர்க்கடக விருச்சிகாங்கிசத்தில் நிற்கப் பாவக் கிரகங்கள் நோக்கில் குய்ய ரோக முடையவன்.

உதய இலக்கினத்திற் சந்திரன் நிற்க, ஏழாமிடத்தில் ஆதித்தன் நிற்கப் பாவக் கிரகங்கள் பன்னிரண்டாமிடத்திலும், இரண்டாமிடத்திலும் நிற்கில் வெண் குட்ட முடையவன்.

பத்தாமிடத்திற் சந்திரன் நிற்க, ஏழாமிடத்திற் செவ்வாய் நிற்க, வேசித் தானத்திற் சனி நிற்கப் பிறந்தவன் அங்க ஈனனும் (எ-று). 7

குறிப்பு :—ஸிதன்—சுக்கிரன். குளிர் கடகம். இருப்பம் (ரிப்பம்)—பன்னிரண்டாம் பாவம், சொம் (ஸ்வம்)—தன பாவமாகிய இரண்டாம் பாவம். ஆக்கினை—பத்தாம் பாவம் குய்யம்—இங்கே ஆண்குறி. வேசித் தானம்—சூரியனுக்கு இரண்டாமிடம்.

வடமொழி வராகவோரை இப் பாட்டின் முதல் யோகத்தை 'அழிவை யுண்டாக்கும் வியாதி யுள்ளவனாக இருப்பான்' என்று கூறுகிறது. மங்களேஸ்வரீயம்.



" சுக்கிரன் குசனு மேழிற்
றுலங்கிடு கோள்க டன்னை
பக்கரைச் சனியி நோக்கப்
பாரதி லுதித்த செல்வன்
மிக்கவும் அரைநோக் குள்ளான்
வினையுறு நோயுங் கொண்டு
துக்கமுற் றிடுவா னென்று
துலக்கமா யுரைத்தி டாயே "

என்று (23-24) கூறுகிறது.

இப் பாட்டு சுவாச காசம், முதலிய நோய்களும் சய நோயும், பிச்ச காத்திரமும் உண்டாகும் அரிட்ட யோகத்தைக் கூறுகிறது.

315. பாவர்க் கிடையிந் துறவேழில்
பதங்க னுறமேற் சுவாசமொடு
மேவுஞ் சயம்பீ லிகைகுன்மம்
மிகும்வித் துருதி யுளனென்பர்
தாவி லிரவி சசிதத்தம்
பம்மிற் காலிற் சயமுடையன்
ஏவ லிவர்கண் மாறியுறில்
எய்துங் கிரிச காத்திரனே.

(எ-து) சந்திரனுக்கு இரண்டிலும், பன்னிரண்டிலும் பாபக்கிரகங்கள் நிற்க, ஏழாமிடத்திற் சூரியன் நிற்கில் சுவாச காசம், சயம், பீலிகை, குன்மம், வித்துருதி (என்னும்) ரோகம் உண்டாம். வித்துருதி—புண் வியாதி.

சூரியன் சிங்கத்தில் சிங்காங்கிசத்தில் நிற்கச், சந்திரன் கர்க்கடகத்தில் கர்க்கடகாங்கிசத்தில் நிற்கில் சயரோக முடையன்.

இவர்கள் மாறிச் சூரியன் கர்க்கடகத்தில் நிற்கச், சந்திரன் சிங்கத்தில் நிற்கிலும், சூரியன் கர்க்கட காங்கிசத்தில் நிற்கச், சந்திரன் சிங்காங்கிசத்தில் நிற்கிலும் கிரிச சரீர முடையவன்.

RangaRakes tamilnavarasam.com

கிரிசம் உலர்ந்த தேகம்; உஷ்ணதேகனும் (எ-று) 8

குறிப்பு :- இப் பாட்டு கூறும் முதல் யோகத்தினை மங்களேஸ்வரீயம் சிறிது வேறுபடக் கூறுகிறது அது வருமாறு :—

" திங்களுக் கிருபு றத்தும்
சேய் சனி மகரப் பானு
தங்கிட மகவாய் வந்தோன்
சயமொடு சுவரச காசம்
அங்கத்தில் மாம்ச கண்டம்
அடைந்திடுங் குன்மக் கட்டி
பொங்குபீ லிகையி னோடு
புகலுமிப் பிணியு ளானே " என்று (23-28)

கூறுகிறது

வடமொழி வராக வோரையும் ' மிருககே பதந்தே ' என்று கூறுகிறது. ' சூரியன் மகரத்தை அடைந்திருக்க ', என்பது அதன் பொருளாகும். ' வித்ரதி ' என்னும் சொல் வித்ருருதி எனத் திரித்தது. ' க்ருசம் ' கிரிசம் எனத் திரித்தது; இளைத்த அல்லது பலமற்ற உடம்பு என்பது பொருள்.

குட்ட நோய் விளையும் அரிட்ட யோகங்கள்.

316. வில்லி னிடையிற் கடகத்தில்
மீனந் தன்னில் மகரத்தில்
மெல்ல மிவையின் கான்மதியை
மேவிற் சனிசேய் குட்டமுளன்
சொல்லு மெழுச்சிக் கலவன் விடை
தேள்மான் திரிகோ ணகவரின்
புல்லுந் தீய குறநோக்கப்
பொருந்துங் குட்ட நோயென்றே.

(எ-து) தனுசு நடுவி லங்கிசத்தி லாதல், கர்க்கடகாங்கிசத்தி லாதல், மீனாங்கிசத்தி லாதல், மகராங்கிசத்தி லாதல், மேடாங்கிசத்தி லாதல், சந்திரன் நிற்கச் சனி, செவ்வாய் கூடில், குட்ட வியாதி யுடையனும்,



இலக்கினத்துக்குக் கர்க்கடகம், இடபம், விருச்சிகம், மகர மிவை திரிகோண மாகப் பாவ யோக திருட்டி யுண்டாகில் குட்ட வியாதி யுடையனும் (எ-று). 9

குறிப்பு :—தனுவின் நடுவிலங்கிசம் பூராடம் ஒன்றுங் காலிற் சந்திர னிருப்பது கர்க்கட காங்கிசம் அசுவதி, மகம் மூலம், ரோகிணி, அத்தம், திருவோணம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னு மிவற்றின் நான்காங் காலிற் சந்திர னிருப்பது. மீனாங்கிசம் கார்த்திகை, உத்திரம், உத்திராடம், திருவாதிரை, சுவாதி, சதயம், ஆயில்யம், கேட்டை, இரேவதி என்னு மிவற்றின் நான்காங் காலிற் சந்திர னிருப்பது. மகராங்கிசம் மேற் கூறிய கார்த்திகை முதலான ஒன்பது நாட்களின் இரண்டாங்காலிற் சந்திர னிருப்பதாம். மேடாங்கிசம், மேற் கூறிய அசுவதி முதலான ஒன்பது நாட்களில் முதற் காலிற் சந்திர னிருப்பதாம். இரண்டாவது யோகத்தைச் சாதகாலங்காரம் வேறுபடக் கூறுகிறது (930).

விழி யிழக்கச் செய்யும் யோகம்.

317. நிதனத்தில் அரியின் மிக்க
நீள்தனம் வியத்தி லாங்கே
கதிரவன் இந்து சேய்சுன்
கலந்திவ ரடைவே மேவில்
பதிவலிக் கோளின் தோடம்
பரனடி தெரிசி யார்தம்
மதியிலார் நயன மென்ன
நயனம திழப்பர் மண்மேல்.

(எ-து) நிதனம், அரி, தனம், வியமாகிய எட்டு, ஆறு, இரண்டு, பன்னிரண்டு இவையிற்றிற் கிரமத்தாலே சூரியன், சந்திரன், செவ்வாய், சனி நிற்கில், அஃதாவது எட்டாமிடத்திற் சூரியனும், ஆறாமிடத்திற் சந்திரனும், இரண்டாமிடத்திற் செவ்வாயும், பன்னிரண்டாமிடத்திற் சனியும் நிற்கில், இவர்களில் பலவா



RangaRakes tamilnavarasam.com

னுடைய கிரக தோடங்களினாலே "சிவனைத் தெரிசியாத பாவிகள் கண்ணைப் போல" பூமியில் நேத்திரமில்லாதவனும் (எ-று). 10

குறிப்பு:—வடமொழி வராக வோரையின் கருத்து "சூரியன், சந்திரன், செவ்வாய், சனி இவர்கள் யாதானு மோர் முறையில் 8, 6, 2, 12 இவ்விடங்களிலிருந்தால் மேற் கூறிய கோள்களுள் அதிக பலம் பெற்ற கோள்களுக்குச் சொல்லியவாத பித்த சிலேத்துமம் என்ற காரணங்களால் மக்களுக்குக் கண்ணற்றிருக்கும் தன்மையை உண்டாக்குகின்றனர்" என்பதாகும்.

செவி கேளாமை, பல்லீறுநோய் இவற்றை உண்டாக்கும் அரிட்ட யோகங்கள்.

318. தவம்பவம் சகோத்தம் புத்தி
தம்மிலே பாவர் நிற்க
அவர்தமைச் சுபர்நோக் காரேல்
அவன்செவி கேளா தென்பர்
குவிமுலை மாதே ஏழிற்
கொடியகோள் நிற்க நல்லோர்
நவமுற நோக்கா ராகிற்
பல்லினோய் நண்ணு மென்ப.

(எ-து) ஒன்பதாமிடம், பதினோராமிடம், மூன்றாமிடம், ஐந்தாமிடம் இவைகளிலே பாவக் கிரகங்கள் நிற்கச், சுபக்கிரகங்கள் நோக்காதே யிருக்குமாகில் செவி கேளாது.

ஏழாமிடத்திற் பாவக்கிரகங்கள் நிற்கச் சுபக்கிரக திருட்டி யில்லாமலிருக்கில் தந்த ரோக முடையவனும் (எ-று). 11

குறிப்பு:—மேற் சொன்ன இரண்டு யோகங்களிலும் நற்கோள் பார்வை உண்டாயின் மேற் சொன்ன நோய் விளையாதென்க.



இப் பாட்டு பிசாசு பிடித்தல்,
விழியிலாதல் என்னும் அரிட்ட யோகங்களைக்
கூறுகிறது.

319. உடுபதி யசுரன் றன்னோ
டுதித்திடத் திரிகோ ணத்தில்
வடுவுடைத் தீயோர் நிற்கில்
வகுத்திடும் பிசாச னென்றே
கடுகதி ரவன்கி ராண
மண்டலத் துதிப்பத் துன்னும்
கடியவர் திரிகோ ணத்திற்
கண்ணில ராகு மென்றே.

(எ-து) இலக்கினத்திலே இராகு அல்லது கேதுவொடுங் கூடிக் கிராண சகிதனான சந்திரன் உதயமாகத், திரிகோணங்களிலே பாவக் கிரகங்கள் நிற்கிற் பிசாசனும்.

இலக்கினத்திலே கிராண சகிதனான சூரியன் உதயமாகத் திரிகோணங்களிலே பாபக்கிரகங்கள் நிற்கில் திருட்டி இல்லாதவனும் (எ-று). 12

குறிப்பு:—"சந்திரன் சன்ம இலக்கினத்திலிருந்து இராகுவின் கிராஸத்தை அடைந்திருக்கும் பொழுது" என்றே வடமொழி வராகவோரை சுலோகத்திற்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. கேது கூறப்படவில்லை. மங்களேஸ்வரீயமும்

"அரவினாற் பீடை யுற்ற
அம்புலி உதயந் தங்க
தரணியின் மகனும் சனனும்
தங்கிட வைந்தோன் பஞ்னில்
திரமுட னுதித்தோன் அம்ப
தெய்வத்தின் பீடை யாலும்
உரமுள பிசாசி னாலும்
உபத்திரப் படுவ னாடே" என்று (23-37)

கூறுகிறது.

RangaRakes tamilnavarasam.com

இப் பாட்டு வாதநோய் உன்மாதம்
இவற்றை உண்டாக்கும் மூன்று அரிட்ட யோகத்தைக்
கூறுகின்றது.

320. குருவிலக் கினந்தி யூனங்
கொடுஞ்சனி வாத நோயன்
எரியத்த பவனஞ் செம்பொன்
எழுச்சியுன் மாத னாகும்
தருஞ்சனி யுதிப்பப் பூமன்
தவஞ்சுதன் உன்மா தத்தன்
விரியழல் சனியு திப்ப
வியஞ்சீண மதியுன் மாதன்.

(எ-து) இலக்கினத்திலே வியாழ முதிக்க, ஏழா மிடத்திற் சனி நிற்கில் வாத ரோக முடையவன்.

செவ்வாய் ஏழாமிடத்தில் நிற்க, வியாழன் இலக்கினத்தில் நிற்கில் உன்மாத னாவான்.

இலக்கினத்திற் சனி யுதிக்கச், செவ்வாய் ஒன்பதாமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம் இவற்றி லொன்றில் நிற்க உன்மாதனும்.

இலக்கினத்திற் செவ்வாயும் சனியும் நிற்கப், பன்னிரண்டாமிடத்தில் சீண சந்திரனும் நிற்கில் உன்மாதனும் (எ-து).



குறிப்பு :—திரூனம்—ஏழாம் பாவம். இப் பாட்டு (316) "தருஞ்சனி யுதிப்பப் பூமன் தவம்சுதன் உன்மா தத்தன்." என்றே உள்ளது. ஆனால், இதற்கு "இலக்கினத்திற் சனி யுதிக்கச் செவ்வாய் ஒன்பதாமிடம், ஐந்தாமிடம், ஏழாமிடம் இவற்றி லொன்றில் நிற்க உன்மாதனும்" என்று உரை கூறப் பட்டுள்ளது. பாட்டில் ஏழாமிடம் குறிக்கப்படவில்லை. உரையில் ஏழாமிடம் குறிக்கப் பட்டுள்ளது. வடமொழி வராகருரை யுள்ளும் ஏழாமிடம் கூறப்பட்டுள்ளது. மங்களேஸ்வரீயமும்



"ஒன்பதும் ஐந்தோ டேழில்
உதிரனே நிற்க, நீலன்
அன்புடன் சென்மந் தங்க
அவனியி லுதித்த வன்றான்
துன்பமும் சலன முற்றுத்
தோய்குவான் பிரமை கொண்டு
இன்பமும் அற்று நிற்பான்
இந்நாற் சேயோன் றானே" என்று (23-43)
ஏழாமிடத்தைக் கூறுகின்றது.

இப் பாட்டு அடிமைகளாக ஆகும்
அரிட்ட யோகத்தைக் கூறுகிறது.

321. பரிவின் ராசி யங்கிசபன்
பரிதி சோமன் பொன்னிவர்கள்
உரைசெய் நீசந் தனக்கதிபர்க்
கோதங் கிசத்தி லுற்றுசன்
அரிகள் பாகத் துற்றிடினும்
அற்ப முடன்மத் திமமிகுதி
கிரக மதனாற் றாசனெனக்
கிளத்துத் தாமக் குழலணங்கே.

(எ-து) இராசி அங்கிசபனுவது, சந்திரன் நின்ற இராசி அங்கிசத்தினுடைய அதிபதியும், சூரியனும், சந்திரனும், வியாழனும் ஆகிய இவர்கள் தங்கள் தங்களுடைய நீச விராசியினையுடைய அதிபதி நவாங்கிசங்களில் நிற்கினும், சத்துரு நவாங்கிசங்களில் நிற்கிலும் தாசனும். தாசன்—சொற்பணி கேட்கிறவன்.

"அற்பம் மத்திமம் மிகுதி" என்பது, இப்படிச் சொன்ன கிரகங்கள் ஒருத்தன் இருவர்தான் நிற்கில் அற்ப தாசன். அற்ப தாசனுவது சொன்னபடி கேட்கிறவன். மூன்று கிரகம் நிற்கில் மத்திம தாசன்,

RangaRakes tamilnavarasam.com

மத்திம தாசனாவது கொடுத்துக் கொள்ளப் பட்டவன். நான்கு கிரகங்களும் நிற்கில் மகா தாசன், மகாதாசனாவது கெற்பத்திலே தாசனும் (எ-று). 14

குறிப்பு :—அரிகள் பாகம் என்பது சத்துரு நவாம்கிசம்.

இப் பாட்டு முடப்பல்லனும் கலதியும்
பரிச னனும் நோயனும் அங்கவீனனும் ஆகும்
அரிட்ட யோகங்களைக் கூறுகிறது.

322. வில்லசம் விடையு திக்கில்
முடப்பல்லன் ; விடைவில் தீயர்
புல்லுறு பம்மு திப்பக்
கலதியாம் ; புத்தி யொன்பான்
எல்லியோன் நிற்கில் சட்கு
வினன் ; சன் சுதன்ற வத்தில்
கொல்லுறு நோயன் ; சேய்க்கு
விகலாங்கன் கொடியோர் நோக்கே.

(எ-து) தனுசு, மேடம், இடபம், உதய இலக்கினமாகில் பாவக் கிரகங்கள் நோக்கில் (கொடியோர் நோக்கே) முடப்பல் லுடையோனும்.

இடபந்தான், தனுசுந்தான், தீக்கோன்களினுடைய இராசிகள்தாம் உதய இலக்கின மாக ஆகில், பாவக் கிரகங்கள் நோக்கு மாகில் (கொடியோர் நோக்கே) கலதியாவான். கலதி-களண்டியாவன்.

இலக்கினத்துக்கு ஐந்தாமிடம் ஒன்பதாமிடத்திற் சூரியன் நிற்கில், பாவக் கிரகங்கள் நோக்குமாகில் (கொடியோர் நோக்கே), துர்ப்பலமா யிருக்கிற சட்கு வுடையன், சட்குவாவது பரிசம்.



சனி ஐந்தாமிடம் (சுதன்) ஒன்பதாமிடத்தில் (தவம்) நிற்கில் பாவக் கிரகங்கள் நோக்கில் (கோடியோர் நோக்கே) அநேக வியாதி யுடையன்.

செவ்வாய் ஐந்தாமிடம், ஒன்பதாமிடத்தில் நிற்கில் பாவக் கிரகங்கள் நோக்கில் விகலாங்கனும்.
விகலாங்கன் — அங்கவீனன். (எ-று). 15

குறிப்பு :—எல்லியோன் — சூரியன். வடமொழி வராக ஹோரையுள் கலதி என்பதற்கு வழுவற்ற கண்ணுள்ளவனாக இருப்பன் என்று உரை கூறியுள்ளார் ஸ்ரீ-நடேச சாஸ்திரிகள்.

இப் பாட்டு பந்தனங்கள் உண்டாகும்
அரிட்ட யோகங்களைக் கூறுகிறது.

323. வியந்தனஞ் சுதன்றன் மத்திற்
றீயர்மே விடப்பம் மேய
பயன்கொள்பந் தனங்க ளுண்டாம்
பாசமே நிகளஞ் சர்ப்ப
நயனுறு திரேக்கா ணங்கள்
உதயத்தை நண்ணத் தீக்கோள்
உயர்வலி யோடும் நோக்கில்
ஓதுபந் தனங்க ளுண்டாம்.

(எ-து) வியமும், தனமும், சுதனும், தன்மமும் ஆகிய பன்னிரண்டாமிடம், இரண்டாமிடம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் என்னும் இவையிற்றிற் பாவக்கிரகங்கள் நிற்கில், இலக்கின இராசி யாதொரு செந்துவுக்குச் சமமாயிருக்குமோ அதைக் கட்டுகிற வஸ்துக்களால் இவன் கட்டுப்படும்.

பாசத் திரேக்காணமும் நிகளத் திரேக்காணமும், சர்ப்பத் திரேக்காணமுமாம் யாதோர் இராசி இலக்கின மாச்சுது, யாதோர் இராசியுடைய திரேக்காண முதித்தது,

RangaRakes
tamilnavarasam.com

அந்த இராசி யாதொரு சேந்துவுக்குச் சமானமா யிருக்குது, அதுக்குச் சொல்லிய வஸ்த்துக்கொண்டு கட்டுப்படுவன். பத்தனம்—சிறை, காவல், தளை (எ—று).16

குறிப்பு :— பாபக் கிரகங்கள் 12, 5, 2, 9, இவ்விடங்களி லிருக்கும் பொழுது பிறந்தவனுக்குச் சனனமான இராசிக் கொப் பான கட்டுப்படுதல் உண்டாகும். அஃதாவது மேடம், இடபம், தனுசு இவைகள் இலக்கினமானால், கயிற்றினால் கட்டுப்பட்டவனா கவும், கடகம், மகரம், மீனம் இவைகள் இலக்கினமானால் கட்டுத லில்லாமலே பாதுகாவலில் வைத்துக் காக்கப்படுபவனாகவும், விருச்சிகம் இலக்கினமானால் பூமிக்குள் பந்தத்தை அடைந்தவனா கவும் பந்தனப்படுவான் என்க. கடகத்தின் இரண்டாவது மூன் றாவது திரேக்காணமோ, விருச்சிகத்தினுடைய ஒன்றாவது இரண் டாவது திரேக்காணமோ, மகரத்தின் முதல் திரேக்காணமோ வலி வுள்ள பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டவைகளாக விருப்பின் அவ்வாறு பிறந்தவனுக்கு முன் சொன்னபடியே கட்டுப்படுதலைக் கருதி உணர்ந்து கொள்க.

இப்பாட்டு சயரோகம் முதலிய நோய்
உடையவனாகவும், பனிமகனா யிருப்பவனாகவும் உள்ள
யோகங்களைக் கூறுகிறது.

324. மதிசனி யுடன்சேய் நோக்க
வட்டஞ்சூழ்ந் திடுமே யாகில்
பதிசயம் பரிசஞ் சொல்லும்
உன்மாத குணங்க ளுள்ளோன்
கதிர்சனி சேய்பத் தெய்திச்
சுபரதைக் காணா ரென்னிற்
பொதிபிரத் தியனா மற்ப
மத்திமம் மிகவும் போற்றே.

(எ—து) சந்திரன் சனியொடுங் கூடப் பரிவேடஞ் சூடிச் செவ்வாய் நோக்குமாகில் சயரோக முடையவன். பாரிச வாதத்தை உடையன், உன்மாத பயித்திய குண முடையன் என்பது.



சூரியன் சனி செவ்வாய் பத்தாமிடத்தில் நிற்கில் பிரத்தியன்மாரா யிருப்பன் (பிரத்தியன்—அடியான்).

"பொதி பிரத்தியனும் அற்பம் மத்திமம் மிகவும் போற்றே" என்பது, அற்ப மத்திம வெகு பிரத்தியனும். அஃதாவது, இவர்கள் (சூரியன், சனி, செவ்வாய்) மூவரில் ஒருத்தன் பத்தாமிடத்தில் நிற்கச் சுபக்கிரகங்கள் நோக் காதே யிருக்கில் பிரத்தியன்மாரில் அற்பவானும். இரண்டுபேர் பத்தாமிடத்தில் நிற்கச் சுபக்கிரகம் நோக் காதே யிருக்கில் மத்திம பிரத்தியன்மாரா யிருப்பன். இவர்கள் மூன்று பேரும் பத்தாமிடத்தில் நிற்கச் சுபக் கிரகங்கள் நோக்கில்லை யாகில் அதமனா யிருப்பன் (மிக்கவனா யிருப்பான்) (எ—று). 17

இருபத்தொன்றாவது
அரிட்ட யோக அத்தியாயம்
முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## இருபத்திரண்டாவது
## ஸ்திரீ சாதக அத்தியாயம்

**இப் பாட்டு ஆடவர் பிறப்பிற்கும் மகளிர் பிறப்பிற்கும் பொதுவாகக் கொள்ளும் பாவத்தையும், சிறப்பாகக் கொள்ளும் பாவத்தையும் கூறுகிறது.**

325. ஆணிரைக் குரைத்தல் செய்த
அப்பலம் அங்க னைக்கும்
காணுந்தம் முயிரின் மிக்க
கணவனுர் நிதன மெட்டால்
பூணுமிந் துதயந் தன்னற்
பொற்றொடி சௌந்த ரங்கள்
நாணுறு குணம்பத் தாவின்
நலந்தனம் நவிலு மேழால்.

(எ-து) ஆண்கள் சாதகத்துக்குச் சொன்ன பலம் போல்தானே அங்கனை (பெண்கள்) சாதகத்துக்குஞ் சொல்லலாம். ஆண்கள் சாதகத்துக்கும் அங்கனைகள் சாதகத்துக்கும் பேதமில்லை.

ஸ்திரீகளுக்குத் தங்களுடைய மரணத்தைப் பற்ற(மல்) பத்தாவினுடைய மரணம் பிரதானமான படியினாலே பத்தாவினுடைய ஆயுசு எட்டாமிடத்திலே நிருமிக்க வேணும்.

ஸ்திரீகளுடைய சரீர சௌந்தரியத்தை இலக்கினத்தைக் கொண்டும் சந்திரனைக் கொண்டும் நிருமிக்க வேண்டும்.

பத்தாவினுடைய சௌந்தரியத்தையும் சௌபாக்கியத்தையும் ஏழாமிடத்திலே சொல்லுக (எ-று). 1



குறிப்பு :— “ ஒரு ஆணுக்கு எந்தெந்த செய்திகள் சோதிட நூல்களில் சொல்லப் பட்டனவோ அவை யாவும் பெண்களுக்குமாம். அவற்றுள் எட்டாமிடத்தால் மாங்கல்ய பலத்தையும், ஒன்பதாமிடத்தால் புத்திரப் பேற்றையும், இலக்கினத்தால் உடலழகையும், ஏழாமிடத்தால் கணவன், பாக்கியம் இவற்றையும், நான்காமிடத்தால் சங்கத்தையும், கற்பையும் கூறுவர் ” என்பது (11-1) பலதீபிகை.

சாராவளி “ சந்திரனைக் கொண்டும் இலக்கினத்தைக் கொண்டும் சரீரத்தையும், ஐந்தாம் பாவங் கொண்டு பெண் மகவையும் ஒன்பதாம் பாவங் கொண்டு ஆண் மகவையும் கூற வேண்டும் ” (45–2) என்று கூறுகிறது.

**இப் பாட்டு உதய லக்னம் சந்திர லக்னம் இவற்றைக் கொண்டு பெண்களின் இயல்பை அறியுமாறு கூறுகிறது.**

326. இந்துத யங்க டானே
உக்கும மென்னின் மிக்க
சுந்தர முடையாள் அத்தைச்
சுபர் நோக்கிற் பணிகு ணங்கள்
மைந்துள வோச வோரை
மக்கடம் உணர்வு சீலம்
சிந்துதீ யுதநோக் குற்றுற்
றீதுறுக் குணத்தாள் பாவி.

(எ-து) சந்திர இலக்கினமும் சென்ம இலக்கினமும் உக்கும இராசியாகில் நல்ல குணங்களும் ஆபரணங்களும் உடையவளா யிருப்பாள்.

சந்திரனும், இலக்கினமும் உக்கும இராசியாகிச், சுபக்கிரக திருட்டி யுண்டாகில், நல்ல சீல குணத்தோடும் ஆபரண அலங்காரத்தோடும் கூடி யிருப்பாள்,

RangaRakes tamilnavarasam.com

சந்திரனும், இலக்கினமும் ஓச இராசியாகில் புருட ஆகாரமும் (வடிவமும்) புருட குணத்தோடும் கூடி யிருப்பள்.

ஓச இராசியான இலக்கினத்தையும், சந்திரனையும் பாபக்கிரகம் கூடினும், நோக்கினும் பாவியாய்ப், பொல்லாத குணத்தை யுடையவளா யிருப்பாள்.

இவையிற்றில் விசேடிச்சும் இலக்கினத்துக்காதல், சந்திரனுக் காதல் ஒன்றுக்குச் சுபர் யோகந்தான், சுபர் திருட்டிதான் உண்டாக, மற்றொன்றுக்குப் பாவர் யோகந்தான் பாவர் திருட்டிதான் உண்டாகில், மத்திம குணமும் மத்திம ஆகாரமும் உடையளா யிருப்பாள். இதிற் பல மேறியதன் குணம் ஏறி யிருக்கும்.

இலக்கினத்தையும் சந்திரனையும் பந்துக் கிரகங்கள் (நட்புக் கோள்கள்) நோக்கிலும் கூடிலும் நல்ல குணத்தோடுங் கூடி யிருப்பள்.

இந்தப்படி இலக்கினுதிபதியாலும் சென்மாதிபதியாலும் ஆராய்ந்து சொல்லுக (எ-று). 2

குறிப்பு :— ' தீ யுதம் நோக்கு உற்றால் ' என்பது தீய கோள்கள் கூடுதலுற்றாலும் நோக்குதலுற்றாலும் என்று பொருள் படும். உக்குமம் பெண்ணிராசி அல்லது இரட்டையிராசி. ஓசை ஆணிராசி அல்லது ஒற்றை யிராசி. சென்மாதிபதி — சந்திர இலக்கினுதிபதி. இதனை 304 ஆம் செய்யுளாலும் அறிக. " இலக்கினம் சந்திரன் இவையிரண்டும் இரட்டை இராசிகளாய் நற்கோள்களின் நோக்கத்தைப் பெற்றால் நல்ல குணமுள்ள கணவன் நல்ல குணமுள்ள புதல்வர் இவர்களை அடைவாள். அணிகலன் செல்வம் நல்லொழுக்கம் என்னும் இவைகளை அடைவாள். அவை ஒற்றை யிராசியாய்த் தீயகோள்களால் பார்க்கப் பெற்றும் கூடப்பெற்று மிருப்பின் ஆண்களின் தன்மை, வக்கிரபுத்தி, கணவனுக் கடங்காமை, கொடிய எண்ணம்



என்னும் இவை கொண்டவளாயும் வறுமையுடையவளாயு மிருப்பாள் " என்று (11-2) பலதீபிகை கூறுகிறது. இப் பலன் களைச் சாதகாலங்காரம் 360 ஆம் பாட்டினையும் நோக்கி அறிக.

இப் பாட்டு மேட விருச்சிகத்தில் செவ்வாய்
சனி, குரு, புதன், சுக்கிரன், திரிம்சாம்சத்தில் பிறந்தவள்
பலனைக் கூறுகிறது.

327. பூமன்றன் பம்மிற் சேய்சுன்
பொன்புதன் புகரின் பாகம்
மாமதி யுதயஞ் சேரின்
வரும்பல மடைவே கூறில்
தாமகன் னிகையிற் றுட்டை
தாசிசாத் தியமா யாவி
தோமுறு சரித்தி ரத்தாள்
என்றனர் துணிந்த நூலோர்.

(எ-து) சந்திரனுதல், இலக்கினமாதல் செவ்வாயினுடைய சேத்திரத்தில் செவ்வாயுடைய திரிம்கிசாங்கிசத்தில் நிற்கிற், கன்னிகையா யிருக்கும் பொழுதே தோஷ முண்டாம்.

செவ்வாய்ச் சேத்திரத்தில், சனி திரிம்கிசாங்கிசத்தில் நிற்கில், கன்னிகையா யிருக்கும் பொழுதே தோஷ முண்டாய்த் தூசி (தாசி) யாவாள்.

செவ்வாய்ச் சேத்திரத்தில் வியாழன் திரிம்கிசாங்கிசத்தில் நிற்கில் பதிவிரதையா யிருப்பள்.

அதில் (செவ்வாய்ச் சேத்திரத்தில்) புதனுடைய திரிம்கிசாங்கிசத்தில் நிற்கில் கபடியா யிருப்பள்.

அதில் (செவ்வாய்ச் சேத்திரத்தில்) சுக்கிரன் திரிம்கிசாங்கிசத்தில் நிற்கில், சரித்திர குணம் இல்லாதவளா யிருக்கும்.

சரித்திரம் —ஆசாரம் (ஒழுக்கம்) (எ-று). 3

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :— மூன்றன் பம் என்பது செவ்வாய் க்ஷேத்திரமாகும் அவை மேடமும், விருச்சிகமும் ஆகும். திரிம்சாங்கிசம் கொள்ளும் முறையை இந் நூலில் இராசிபேத அத்தியாயத்துள் ஏழாம் பாட்டில் அறிக. வடமொழி வராகர் ஓரையில் வழங்கியுள்ள ' ஸாத்வீ ' என்னும் சொல் ' சாத்தியம் ' என்று திரிந்தது. ' ஸ்மாயா ' என்னும் சொல் ' மாயாவி ' என்று வழங்கப்பட்டது ' குசரித்திரம் ' என்னும் சொல் ' தோம்உறு சரித்திரத்தள் ' என்று வழங்கப்பட்டது. அந் நூலில் ' கன்யேவ துஷ்டா ' ' கன்யேவ தோஷா ' என்ற பாட வேறுபாடு உள்ளன.

செவ்வாய் இராசியில் செவ்வாய்த் திரிம்சாங்கிசத்திற் பிறந்தாள் இறந்த மகவைப் பெறுபவளாயும், நற்குண மில்லாதவளாயுமிருப்பள். புதன் திரிம்சாங்கிசத்திற் பிறந்தாள் ஏமாற்றுபவளாயும் அநாசார முள்ளவளாயும், அற்ப புதல்வர்களை உடையவளாயு மிருப்பாள். வியாழன் திரிம்சாங்கிசத்திற் பிறந்தாள் கணவனால் விரும்பப்பட்டவளாயும் புதல்வர்ப் பேறுடையவளாயும் மிக்க செலவினால் வருத்துபவளாயு மிருப்பாள். சுக்கிரன் திரிம்சாங்கிசத்திற் பிறந்தாள் பெண்மகவையே பெறுபவளாயும் சோரவொழுக்கம் உடையவளாயு மிருப்பாள். சனி திரிம்சாங்கிசத்திற் பிறந்தாள் பணிப்பெண்ணாயும், தீயவொழுக்க முள்ளவளாயும் இருப்பாள். சூரியன் வீட்டிற் பிறந்தார்க்கும் இதுவே பலன் என்று (25–7, 8, 9.) ஓராசாரம் கூறும் சாதகாலங்காரம் (873) கூறுவதையும் இதனுடன் ஒப்பிட்டறிக.

அந்தத் திரிம்சாதிபதி பலமுடையவராயின் இங்கு கூறப்பட்ட பலன் முற்றிலும் நிகழும் என்று ஓராசாரம் (25–6) கூறும்

இப் பாட்டு சுக்கிரன், புதன் வீட்டில் செவ்வாய் முதலான திரிம்சாம்சத்தில் பிறந்தாள் பலன் கூறுகிறது

328. சுக்கிர னிருக்கம் முன்போற்
றுட்டைபூ மானி ரண்டாம்
சற்குணி கலையில் வல்லள்
சாந்தத்தாற் கீர்த்தி யுள்ளாள்



புக்கமா லிருக்கம் முன்போற்
கபடியாங் கலியைப் போல்வாள்
மிக்கதன் பதிக்கு நல்லாள்
குணமுள்ளாள் மிகுந்த காமி.

(எ-து) சுக்கிரன் சேத்திரத்திலும் (இருக்கத்திலும்) முன் சொன்னது போலச் செவ்வாய், சனி, குரு, புதன், சுக்கிரன் என்ற அடைவிலே (பலன் அறிந்து) கொள்வது.

இலக்கினமாதல் சந்திரனாதல் சுக்கிர க்ஷேத்திரத்தில் குசன் திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில், துட்ட குணமுடையள். சனி திரிங்கிசாங்கிசத்தில் இரண்டு புருடனுண்டாம். குரு திரிங்கிசாங்கிசத்தில் சற்குணம் உடையவளா யிருப்பாள். புதன் திரிங்கிசாங்கிசத்தில் கலையில் வல்லவள். சுக்கிரன் திரிங்கிசாங்கிசத்திற் சாந்த குணத்தாற் கீர்த்தி யுடையவளா யிருப்பாள் என்பது.

இலக்கினமாதல் சந்திரனாதல் புதன் க்ஷேத்திரத்தில் செவ்வாய்த் திரிங்சாங்கிசத்தில் நிற்கில் கபடி யாவள். அதில் சனி திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் அலிபோ லிருப்பாள். அதில் வியாழன் திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் பதிவிரதையா யிருப்பாள். அதில் புதனுடைய திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் நல்ல குண முடையவள். அதில் சுக்கிரன் திரிங்கிசாங்கிசாத்தில் நிற்கில் மிகுந்த காமத்தை யுடையவளாம் (எ-று). 4

குறிப்பு :— கலையில் வல்லள் என்றது நிருத்த கீத வாத்தியம் முதலான கலைகளிலே வல்லவள் என்றதாம்.

இலக்கினமாவது, சந்திர இலக்கினமாவது சுக்கிரனுடையதாகி செவ்வாயின் திரிம் சாம்சத்தில் பிறந்திருப்பின் துஷ்டை, கலகப்பிரியை, பர்த்தா துவேஷி ; புதனுக்குக் கலையில் விருப்பமுடையாள் ; குருவிற்கு அழகி, நற்குணி, நல்ல கணவன், நல்ல புதல்வர் இவர்களை உடையாள் ; சுக்கிரனுக்கு வல்லபமுடையவள் கணவனுக்குப் பிரியை பல மக்களுக்குப் பிரியை புகழுடையள் ;

RangaRakes tamilnavarasam.com

சனிக்குக் கணவன் இறந்த பின்னர் வேறு திருமணம் செய்து கொள்ளுவாள் இறந்த குழந்தையை உடையள் நோயுள்ளவள் என்று (25-14, 15, 16.) ஓரா சாரம் கூறும்.

இலக்கினமாவது சந்திர இக்கினமாவது புதனுடைய தாகி செவ்வாயின் திரிம்சாம்சத்தில் பிறந்திருப்பின் சோரம் போவாள் அற்ப புத்திரப்பேறுடையள்; புதனுக்குக் குலவொழுக்க முள்ளவள்; சுக்கிரனுக்கு ஆடு மாடு செல்வம் இவற்றை உடையவள் போக விருப்பமுடையவள்; வியாழனுக்குப் பதிவிரதை கணவனுக்கு விருப்பமுடையள்; சனிக்கு அலி, இறந்த மகவைப் பெறுபவள்; கணவனை விட்டுப் பிரிந்தவள் என்று (25-10, 11) ஓரா சாரம் கூறும்.

329\. சந்திரன்பம் மினின்முன்போற் சௌந்தி ரத்தாள்
பதிவதைப்பள் சற்குணத்தி சிற்பி தூர்த்தை
முந்திரவி யிருக்க மக்கட் போல்வாள் துட்டை
முன்னரசி புருடகுணி விருத்தன் பாரி
உந்துகுரு விருக்கம்ஏர் குணத்தாள் அற்பம்
உறும்போகி குணமறிவு மதிக்கு நல்லள்
மந்தனிருக் கத்திருமேற் றுசி நீசன்
மன்னியிடும் பதிவிரதை துட்டை வந்தி.

(எ-து) சந்திரன் பம்மில் நிற்கிலும் முன் சொன்ன படி கொள்வது :—

இலக்கினமாதல் சந்திரனுதல் கர்க்கடகத்தில் நின்று குசன் திரிங்கிசாங்கிச மேறில் சௌந்தர முடையள். அதிற் சனி திரிங்கிசாங்கிச மேறிற் புருடனைக் கொல்வள். அதிற், குரு திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் நல்ல குண முடையள். அதிற் புதன் திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் சிற்ப காரியத்தில் வல்லவள். அதிற் சுக்கிர திரிங்கி சாங்கிசத்தில் நிற்கில் தூர்த்தை. தூர்த்தை யாவது பதிவிரதை யல்லாதவளாம் என்பது.



சூரியன் சேத்திரத்திலும் முன் சொன்ன அடைவே கொள்வது. சூரியன் சேத்திரம் சிங்கம். சிங்கத்தில் இலக்கினமாதல், சந்திரனுதலாகில், செவ்வாய்த் திரிங்கி சாங்கிசத்திலாகில் புருட ஆகார முடையள். அதிற் சனி திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் துட்டை. துட்டை யாவது தோஷப்பட்டவள். அதிற் குரு திரிங்கிசாங்கி சத்தில் நிற்கில் இராச பதியா யிருப்பள். அதிற் புதன் திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் புருட சேட்டை யுடையவள். அதிற் சுக்கிர திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் விருத்தனுக்குப் பாரியா யிருப்பாள் என்பது.

வியாழன் சேத்திரத்தில் இலக்கின மாதல் சந்திரனுதல் ஆகில் குசன் திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் நல்ல குணமுடையவள். அதிற் சனி திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் அற்ப போகியா யிருப்பள். அற்பம் — சிறிது. அதிற் குரு திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் நல்ல குணமுடையள், அதிற் புதன் திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் ஞான முடையள். அதிற் சுக்கிர திரிங்கிசாங்கிசத்தில் நிற்கில் பதிவிரதையா யிருப்பள் என்பது.

சனி சேத்திரமான மகர, கும்ப இலக்கின மாதல் சந்திரனுதல் ஆக அதிற் குசன் திரிங்கிசாங்கிச மாகில் தாசி. தாசியாவது சொற்பணி கேட்கிறவள். அதிற் சனி திரிங்கிசாங்கிச மாகில் நீசனை அனுசரிப்பள். அதிற் குரு திரிங்கிசாங்கிச மாகில் பதிவிரதை. அதிற் புதன் திரிங்கிசாங்கிச மாகில் துட்டை. துட்டை—தோஷம் உள்ளவள். அதிற் சுக்கிரன் திரிங்கிசாங்கிச மாகில் வந்தியாம். வந்தி — மலடி. (எ-று) 5

இப் பாட்டு திரிம்சாங்கிசங்களைக் கொண்டு மேற்
கூறிய பலன்களைச் சொல்லுமாற்றைக் கூறுகின்றது.

330\. சந்திர னிலக்கி னங்கள்
தங்கள்தம் பெலத்தை யோர்ந்து
வத்திடும் பெலத்தின் மிக்கோன்
வைகுறும் ஓரை தன்னில்



RangaRakes tamilnavarasam.com

முந்திரிங் காங்கி சத்தில்
　　மொழிந்திடும் பலங்கள் தம்மால்
செந்திரு வனையார் தங்கள்
　　திறமெல்லாம் அடைவி னேதே.

(எ-து) சந்திரனும் இலக்கினமும் தங்களிற் பலமே தென் றறிந்து, அந்தப் பலமுடையது எந்த இராசியில், எந்தத் திரிங்கிசாங்கிசத்தில் நின்றது, அந்த இராசியில் அந்தத் திரிங்கிசாங்கிசத்துக்குச் சொன்ன பலன்களை அடைவே சொல்லுக (எ-று). 6

குறிப்பு :— "சந்திரன், பிறந்த இலக்கினம் இவ் விரண்டை அடைந்த திரிம்சாங்கிசங்களைக் கொண்டு சொல்லப்படும் இத்தப் பலன்களைச், சந்திரன், இலக்கினம் இவற்றின் பல, பலக்குறைவு இவற்றைப் பின்பற்றி, நன்கு கருதிச் சொல்ல வேண்டும்." என்பது வடமொழி வராக வோரைச் சுலோகப் பொருளாகும்.

இப் பாட்டு ஆடவர் போன்ற பெண்களால் காமத்தைத் தீர்த்துக் கொள்ளும் பெண்களுக் குரிய இருவகை யோகத்தைக் கூறுகிறது.

331. அம்புகர் சனியி ரண்டும்
　　பரற்பராங் கிசத்து நின்று
நம்புற நோக்கிற் காம
　　வெம்மைநா ரியரால் நீக்கும்
கும்பவங் கிசத்திற் சுங்கன்
　　பவனத்திற் பிறந்த கோதை
தம்பமாம் புருடர்க் கொப்பாந்
　　தையலார் காமந் துய்ப்பாள்.

(எ-து) சுக்கிரனும் சனியும் பரற்பராங்கிசம்—ஆதி யந்தம் அன்னியோன்னி யாங்கிசங்களில் நின்று, தங் களில் நோக்குமாகில் புருடனைப் போலே ஆகிருதியா யிருக்கிற பெண்களினாலே காமாக்கினியை அடக்கும்.



இடபந்தான், துலாந்தான் இலக்கினமாக அதிற் கும்ப நவாங்கிசத்திற் பிறந்த பெண் புருடனைப் போலிருக்கிற பெண்களினாலே தன்னுடைய காமாக் கினியை அடக்கிக் கொள்ளுவள் (எ-று). 7

குறிப்பு :—'பரஸ்பராங்கிசம்' என்பது 'பரற்பராங்கிசம்' எனத் திரிந்தது. சனி நவாம்சத்திற் சுக்கிரனும், சுக்கிர நவாம் சத்திற் சனியுமாக மாறி நிற்றலைப் பரஸ்பராங்கிசம் என்றனர்.

"சனி, சுக்கிரன் இருவரும் பரஸ்பராங்கிசத்தி லிருந்து, ஒருவர்க்கொருவர் பார்க்கும் பார்வையினையும் பெற்றிருந்தாலும், சுக்கிரன் வீடான இடபம், துலாம் இவற்றுள் ஒன்று இலக்கின மாக வாகி, அதில் சனிக்குரியதான கும்ப நவாம்சமா யிருந்தா லும் இந்த இரண்டு வகையான யோகத்திற் பிறந்த பெண் மிகமிக வளரும் நஞ்சு போன்ற காமத் தீயினைப் புருடனைப் போல வடிவமுள்ள மற்ற பெண்களால் சாந்தமாக்கிக் கொள்ளு வாள்" என்பது வடமொழி வராகவோரையின் சுலோகப் பொருளாகும். "தனது பெண் குறியுள்ள இடத்தில் தோல் முதலியவற்றால் தயாரிக்கப்பட்ட ஆண்குறியைக் கட்டிக்கொண்ட புருடனைப் போன்ற பெண்ணால்" என்பர் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள்.

இப் பாட்டு கணவன் இயல்பு முதலியன கூறும்.

332. அந்த பவனம் பெலமின்றி
　　அவைசு ளியமாய்ச் சுபதிட்டி
வைத்த திலையேற் பதிதுட்டன்
　　மந்தன் புதனே டுறிற்கிலிபன்
ஒத்த சரமேல் விதேசமுணர்
　　தீநோக் குற்றே டிரவியுறில்
பத்தா தூடி குசனிளமை
　　விதவை நீலன் நெடுங்கண்ணி.

(எ-து) இலக்கினத்துக்கும், சந்திரனுக்கும் ஏழா மிடம் பெலமில்லாமல், அதிற் கிரகங்களுமில்லாமல், சுபக்கிரக திருட்டியு மில்லையாகில் இவளுடைய பத்தா துட்டனா யிருப்பான்.

RangaRakes tamilnavarasam.com

ஏழாமிடம் புதன், சனி இராசியாகப் புதன், சனி நிற்கில், இவளுடைய பத்தா நபும்சகனுவான்.

இலக்கினத்துக்கும், சந்திரனுக்கும் ஏழாமிடம் சர இராசியாகிச், சனி, புதன் நிற்கில், இவளுடைய பத்தா தூர தேசத்திற் பிறந்திருப்பன். திரவிராசி யாகில் சுய தேசத்திற்றுனே பிறந்திருப்பன். உபய இராசி யாகில் சுய தேசமும் பரதேசமு மல்லாமல் அடுக்கப் பிறந்திருப்பன்.

ஏழாமிடத்திற் சூரியனிருக்கில்பத்தா இவளைத் தூஷிப்பன். இலக்கினத்துக்காதல் சந்திரனுக்காதல் ஏழாமிடத்திற் செவ்வாய் நிற்கில் வாலிப வயசில் விதவை யாவாள்.

இலக்கினத்துக்காதல், சந்திரனுக்காதல் ஏழா மிடத்திற் சனி நிற்கப் பாபக் கிரகம் நோக்கில் கன்னிகை யாகத்தானே விவாக மில்லாமல் வெகுதா ளிருப்பாள். (எ-று). 8

குறிப்பு :—பிறந்த இலக்கினத்திற்கோ சந்திர இலக் கினத்திற்கோ ஏழாம் பாவம் ஒரு கோளும் இல்லாமலிருப்பதுடன் நல்லோர்களால் பார்க்கப்படாததாயு மிருக்கு மாளுல் இதிற் பிறந்த பெண்ணின் கணவன் தீய வொழுக்கம் உள்ளவனுக இருப்பான். புதன், சனி, ஏழிலிருக்கப் பிறந்தவள் கணவன் நபுஞ்சகனு மிருப்பான். ஏழாமிடம் சர விராசியா யிருக்கப் பிறந் தாள் கணவன் எக்காலமும் வெளியுலகில் சஞ்சரிப்பவனுக விருப் பான். சூரியன் ஏழிலிருக்கப் பிறந்தவளைக் கணவன் விலக்கி விடுவான், செவ்வாய் ஏழிலிருக்கப் பிறந்தவள் இளம் வயதிற் றுனே விதவையாக இருப்பாள். பாபிகளால் பார்க்கப்பட்ட சனி ஏழிலிருந்தால் திருமணம் ஆகாமலே கிழப் பருவத்தை அடை பவளாவள் '' என்பது வடமொழி வராகவோரையின் சுலோகப் பொருளாகும்.

'' ஏழாம் பாவம் சர விராசியாயிருப்பின் கணவன் அயல் நாட்டில் வாழ்பவனு யிருப்பான் " என்று (45-15) சாராவளி கூறுகிறது.



சாதகாலங்காரம்

" இளமை ரேழே சரமனையா
யிருக்க, அதிபன் சரத்திலுறச்,
சினமே சராங்கிசை யாத்திரையாம் ;
திரமே யாகிற் றீர்க்கமுளன் " (889)
என்று கூறுகிறது.

இப் பாட்டு கைம்மையாதல், இருமணுவனைப் பெறுதல் கணவனுல் இகழப்படுதல், அன்னியனைத் தழுவுதல், கணவன் இசைவால் பலரைப் புணர்தல் என்னும் யோகங்களைக் கூறுகின்றது.

333. மதனத்திற் றீக்கோள் கைம்மை
சுபர்தீயர் இரும ணுளன்
அதிற்றீயர் தமக்கு நன்றேக்
குளவெனில் அவன்றூ சிப்பன்
புதியழல் புகர்கான் மாறில்
அன்னியன் றனைப் புல்லும்
சிதன்குசன் இந்தே முற்றல்
கொழுநனுற் பலரைப் புல்லும்.

(எ-து) சந்திரனுக்காதல், இலக்கினத்துக்காதல் ஏழாமிடத்திற் பாபக்கிரகங்கள் நிற்கில் விதவை யாவாள்.

ஏழாமிடத்திற் சுபக்கிரகங்களும் பாபக் கிரகங்களும் கூடி நிற்கில் இரண்டு விவாகஞ் செய்தவன் பர்த்தா ஆவான்.

ஏழாமிடத்திற் பாபக்கிரகங்கள் பெலவீனரா யிருக்கச், சுபக்கிரகங்கள் நோக்கு மாகில் அவளைப் பர்த்தா தூஷித்து விட்டுவிடுவன்.

செவ்வாய், சுக்கிரன் இருவரும் அங்கிசங்களில் மாறி நிற்கில், அன்னிய னொருத்தனைப் பர்த்தாவாகக் கொள்ளுவாள்

RangaRakes tamilnavarasam.com

சுக்கிரன், செவ்வாயுடனே சந்திரனுங் கூடி, ஏழா மிடத்தில் நிற்கில், தன் புருடனுக்குச் சம்மதிப்பித்துக் கொண்டு அன்னியனை அனுபவிப்பள். (எ-று) 9

குறிப்பு :— மதனம் — ஏழாமிடம். இப் பாட்டில் இரண்டாவது யோகத்தினை "சுபர் பாபர் இருவருஞ் சேர்ந்து ஏழாமிடத்திலிருக்கப் பிறந்தவள் இரண்டாம் முறை திருமணம் செய்து கொள்பவளாவாளென் " என்று கூறுவர்.

இப் பாட்டு ஏழில் ஒன்றுக்கு மேற்பட்ட கோள்கள் இருப்பதனால் நிகழும் பலன்களைக் கூறுகின்றது.

சாதகாலங்காரம்,

கொடுமையுளோர் பலரேழா மனையிருக்கிற் பார்க்கில்
கொழுநன்வா லிபத்திறப்பன் : கொடியர் நல்லோர்
கூடில்
சடுதியின்மீண் டொருவனுக்குப் பாரியுமே யாகித்
தானிருக்க வேண்டுமென வேசாற்றல் வேண்டும்" (331)

என்று, இப் பாட்டிற் கூறப்பட்ட முதலாவது, இரண்டாவது யோகங்களைக் (881) கூறுவதை ஒப்பிட்டறிக.

இப் பாட்டில் (331) கூறப்பட்ட நான்காம் யோகத்தைச் சாதகாலங்காரம் சிறிது வேறுபடக் கூறுகிறது,

"கீண்டகுசன் வெள்ளியுந்தன் னங்கிசத்தில் நிற்க
நிகழ்த்துமவர் மாறுகி நிற்கிலுமவ் வீடு
பூண்டிடுமே ழாமிடமே யாகிலவள் வேறோர்
புருடனையே யிச்சித்துப் போய்விடுவ ளென்றார்"

என்பது (883) அப் பாட்டாகும். மங்களேஸ்வரீயம் இந்த யோகத்தினை

"மங்கலன் சுங்கன் றானும்
மகிழ்வுட னொங்குற் றாலும்
சுங்கனின் நவாம்சம் சேயும்
சுக்கிரன் சேய்ந வாம்சம்
தங்கிடப் பிறந்த மங்கை
தன்னது விருப்பம் போலச்
சங்கமஞ் செய்வா ளென்று
சாற்றுவாய் மடவா ருக்கே" என்று (24-42)

கூறுகிறது.



இப் பாட்டு தாயும் மகளும் அயலாரைப் புணர்தலும்
பெண்குறியில் நோயுடையாளாயிருத்தலும் கணவனுக்கு
இனியவளாயிருத்தலும் ஆகிய யோகங்களைக் கூறுகிறது.

334. சேய்சனி இருக்கத் திந்து
சிதனேழத் தீயோர் நோக்கில்
தாயுடன் மகளும் மிக்க
அன்னிய சங்கஞ் செய்யும்
காய்சனி தியூனத் தாரல்
காலுறில் கடியில் நோயாள்
தூயவேழ் சுபர்சு பக்கால்
சுந்தரி கொழுநர்க் கன்பள்.

(எ-து) செவ்வாய் சனியினுடைய சேத்திரம் இலக்கினமாக, அதிற் சந்திரனும் சுக்கிரனும் நிற்கப், பாபக்கிரங்கள் நோக்கில், தாயுந் தானுங் கூடி, அன்னிய புருடனைச் சங்கம் (புணர்தல்) செய்வள்.

ஏழாமிடம் செவ்வாய் அங்கிசமாகில், அதிற் சனி நிற்கில் அவளுடைய யோனியில் வியாதி யுடையளா யிருப்பாள்.

யாதொரு நவாங்கிசம் உதித்தது (பிறந்த காலத்தில்) அந்த நவாங்கிசத்துக்கு ஏழாம் அங்கிசம் சுபக்கிரங்களி னுடைய அங்கிசமாக, அதிற் சுபக்கிர கங்கள் நிற்கச் சவுந்தரிய முடையவளாய்த் தன்னுடைய பத்தாவுக்கு இட்ட முடையளா யிருப்பாள் (எ-று). 10

குறிப்பு :— இப் பாட்டிற் கூறப்பட்டுள்ள முதல் யோகத் தினைச் சாதகாலங்காரம் சிறிது வேறுபடக் கூறுகின்றது.

"வென்றசனி செவ்வாயின் வீடேலக் கினமாய்
விரவுகுசன் அங்கிசமா கச்சென்மந் தன்னில்
துன்றுமிரு ளகற்றுமதி சுக்கிரனு மிருக்கச்
சூழ்ந்துதீ யோர்பலரும் தொடர்ந்துமே நோக்க
நின்றிடிலோ மலடியாம் அவளும்அவள் தாயும்
நேமிதனிற் பலபேரை நேசித்தே சேர்வர்.

என்பது (883) அப் பாடலாகும்.

RangaRakes tamilnavarasam.com

"கௌஜே ஸ்தாம்சே ஸௌரிணு வியாதி யோநி" என்னும் வடமொழி வராக வோரைச் சுலோகத்திற்கு ஏழாமிடத்தி லுதய மடைந்த நவாம்சமானது செவ்வாயினுடையதாக விருந்து சனியினுல் பார்க்கப்பட்டால் வியாதியுடைய பெண் குறியை உடையவளா யிருப்பள்" என்று உரை கூறியுள்ளார் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள்.

ஆனுல் தமிழ் வராக வோரை "காய்சனி திபூனத்தாரல் காலுதில் கடியில் நோயள்" என்று கூறுகின்றது. அதற்கு உரையாசிரியர் "ஏழாமிடம் செவ்வாய் அங்கிசமாகில் அதிற் சனி நிற்கில்" என்று உரை கூறியுள்ளார். அப் பாட்டின் சொல் லமைப்பை நோக்கிஞல் "சனி ஏழாமிடத்திலே செவ்வாய் அங்கிசத்தி லுற்ருல்" என்றே பொருள் கொள்ள வேண்டும். இக் கருத்தினைக் கூறும், மங்களேஸ்வரீயப் பாட்டு சிறிது பிழை பட விருப்பினும் அப் பாட்டின் உரை "ஏழாமிடத்தி லிருந்த குச நவாங்கிசை யடைத்த சனியினுல் சென்ம இலக்கினம் பார்க்கப்பட்டிருக்கப் பிறந்தபெண் நோயுடைய கடிதடத்தை யுடையளாம்" (24-45) என்று கூறுகின்றது.

ஆனுல் இக் கருத்தினைச் சாதகாலங்காரம் வேறுபடக் கூறுகின்றது.

சேருதய லக்கினவங் கிசத்துக்கோ ரேழில்
செவ்வாயும் சனியிருவர் சேர்ந்துமே நிற்க
நாடுபகந் தனிற்பிணிகொண் டிருந்துபர தவிப்பள்"

என்பது (884) அப் பாட்டாகும். இதனை 'நாடுபதந்தனில்' என்று பிழையாகவே அச்சிட்டுள்ளனர்.

ஏழாமிடத்தில் சுபக்கிரக சம்பந்தியான நவாம்சம் உதய மான பொழுது பிறந்தவள் அழகிய யோனி யுள்ளவளாகவும் கணவனுக்குப் பிடித்த முள்ளவளாகவும் இருப்பாள்" என்று வடமொழி வராகவோரைச் சுலோகத்தின் கடைசிப் பகுதிக்கு உரை யெழுதி யுள்ளார் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள். ஆனுல் இப் பகுதியைக் கூறும் மங்களேஸ்வரீயம்,



"மங்கையர் சென்மத் திற்கு
மாரனின் றலத்திற் ருனே
தங்கிய சுபக்கோள் தாமும்
தன்நவாங் கிசைய டைந்தால்
அங்கத்தில் நோயி லாதாள்
அழகுள கணவ னுக்கே
இங்கிதத் துடன்ந டக்கும்
இயல்புள பெண்ம ராமே" என்று (24-46)

கூறுகின்றது. சாதகாலங்காரமும்,

"நாடுமிவர் நல்லோராய் அங்கிசையும் நன்றேல் பாரியதோ ரிடைதொடைகள் சோபனமுள் ளவளாய் பத்தாவின் இதயத்திற் பட்சமுற விருப்பள்" என்று (884) பகர்கிறது. இது சுவடியிற் கண்ட பாடம்.

இப் பாட்டு பிறந்த இலக்கினத்திற்கோ
நவாம்ச இலக்கினத்திற்கோ ஏழாம் இராசி
எதுவாகுமோ, அதனிற் பிறந்தாளுக் குரிய கணவன்
இயல்பு கூறுகிறது.

335. ஏழ்சனி யோரைக் காலேல்
இவள் காந்தன் விருத்தன் மூர்க்கன்
ஆழ்தழ லோரைக் காலேல்
அங்கனை வல்லன் கோபி
வாழ்புக ரோரைக் காலேல்
காந்தன்பாக் கியத்தில் வாழ்வன்
வீழ்புத னோரைக் காலேல்
வித்துவான் நிபுண னமால்.

(எ-து) சனி இருட்சந்தான் (வீடு), அங்கிசந்தான் ஏழாமிடமாகப் பிறந்தவளுடைய கணவன் விருத்த னுகவும், மூர்க்கனுகவு மிருப்பன்.

குசனுடைய சேத்திரந்தான், நவாங்கிசந்தான் ஏழாமிடமாய் வரின், ஸ்திரீகளிடத்தில் வல்லபன் ; கோப முடையவன்.



RangaRakes tamilnavarasam.com

சுக்கிரனுடைய சேத்திரந்தான், நவாங்கிசந்தான் ஏழாமிடமாய் வரின், காந்தனுய்ச் சௌபாக்கிய முடைய பத்தாவை யுள்ளவள்.

புதனுடைய சேத்திரந்தான், அங்கிசந்தான் ஏழாமிடமாய் வரின், அவள் புருடன் வித்துவான் ; நிபுணனும் (எ-று). 11

குறிப்பு :—சாதகாலங்காரம் 884, 885 ஆம் செய்யுள்களை ஒப்பு நோக்குக. சாராவளியையும் (அத்-45-சுலோ-21, 22) ஒப்பு நோக்குக,

இதுவும் அது

336. பனிமதி யோரைக் காலேல்
பருவத்தின் முதியன் காமி
கனகன்றன் ஓரைக் காலேல்
காமத்தில் விரதன் அன்பன்
தினகரன் ஓரைக் காலேல்
திகழ்முது கருமி யென்பர்
அனகனை வெல்லுங் கண்ணய்
அருமறை ஆய்ந்த நூலோர்.

(எ-து) சந்திரனுடைய சேத்திரந்தான், அங்கிசந்தான் ஏழாமிடமாய் வரின், பத்தா காம பரவசனும் முதுகோமளனு யிருப்பான்.

வியாழனுடைய இராசிதான், அங்கிசந்தான் ஏழாமிடமாய் வரின், இந்திரியஞ் செயமுடைய னுகவும், நல்ல குணமுடையவனுயு மிருக்கிற பத்தாவுடையள்.

ஆதித்தனுடைய இராசிதான், அங்கிசந்தான் ஏழாமிடமாய் வரின் முதியனுய் அநேக கருமங்களைச் செய்கிறவனு யிருக்கிற பத்தாவை யுடையள். கருமம்—காரியம் (எ-று). 12



குறிப்பு :—" ஏழாம் பாவத்திற் கிரகங்களிருப்பின் அவர்களைக் கொண்டும், கிரகங்களில்லாவிடின் இராசி, அமிசம் இவைகளின் அதிபருள் வலிவுள்ளவரைக்கொண்டும் கணவனுடைய வடிவம், குணம் முதலானவற்றைக் கூறவேண்டும் " என்று சாராவளி (அத்-45-சு-24) கூறுகின்றது.

இப்பாட்டு திங்கள், வெள்ளி, புதன்
என்னும் இவருள் இரண்டு கோள்களோ,
அல்லது மூன்று கோள்களோ இலக்கினத்தி
லிருப்பின் அதனால் விளையும் பலனைக் கூறுகின்றது.

337. புகர்மதி உதய மெய்திற்
பொறைசுக முடைய ளாகும்
நிகழ்மதி புதனு திக்கில்
சுகிகலை நிபுணி நீராள்
புகர்புத னுதிக்கிற் புத்தி
நற்கலை நற்சாந் தத்தாள்
மிகுசுப ருதிக்கு மாகில்
மிகுதனம் சுகங்கு ணத்தாள்.

(எ-து) சுக்கிரனும், சந்திரனும் இலக்கினத்தில் நிற்கப் பிறந்தவள் பொறையும், சுகமு முடையவளாம்.

சந்திரனும், புதனும் இலக்கினத்தில் நிற்கப் பிறந்தவள் சுகமுள்ளவள் ; கலைகளில் நிபுணை ; நல்ல குணமுடையவள்.

சுக்கிரனும் புதனும் இலக்கினத்தில் நிற்கில் நல்ல புத்தியும், அறிவும், சாந்த குணமும் உடையவள்.

சுபக்கிரகங்களெல்லாம் இலக்கினத்தில் நிற்கில் வெகு திரவியமும், அதிக சுகமும், நல்ல குணமும் உடையவளாம் (எ-று). 13

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :—" சந்திரன் சுக்கிரன் இவர்கள் இலக்கினத்தி லிருக்கும் பொழுது பிறந்தவள் பொறுமையுடன் கூடியவளாகவும் சுகவாழ்வில் பற்றுடையவளாகவு மிருப்பாள் " என்று வடமொழி வராக வோரை கூறும். சாராவளியும் அவ்வாறு கூறுகிறது.

இப் பாட்டு கணவனுக்கு
மரணம் உண்டாவதற் குரிய யோகமும், அது வரும் காலமும்
பெண்களுக்குக் கணவற்குமுன் மரணம் தரும் யோகமும், அற்ப
புத்திர யோகமும் ஆகிய இவற்றைக் கூறுகின்றது.

338. தீயவர் எட்டி லுற்றல்
விதவையாம் செப்பு மெட்டின்
நாயகன் உறுங்கால் நேசன்
வயசினில் ரச்சு நாண்போம்
காய்விலாத் தனத்தின் நற்கோள்
கணவற்கு முன்னந் தான்சாம்
பாயரி விடைதேள் கன்னிப்
பனிமதிப் புதல்வ ரற்பம்.

(எ-து) பாவக் கிரகங்கள் அட்டமத்தில் நிற்கில் விதவையாவாள்.

அட்டமாதிபதி எவனுடைய நவாங்கிசத்தில் நிற்கிறான், அந்த நவாங்கிசாதிபதி யுடைய நிசர்க்க திசை வருடத்தில் முன்னே சொல்லிய விதவையாம்.

இரண்டாமிடத்திற் சுபக்கிரகங்கள் நிற்கில் புருடனுக்கு முன்னே இவளுக்கு மரணம் உண்டாம்.

சிங்கம் இடபம் விருச்சிகம் கன்னி இவைகளிலே சந்திரன் நிற்கில் அவளுக்குப் புத்திரர் அற்பமாம் (எ-று).





குறிப்பு :— பாவக் கோள்கள் பெண்களுக்கு எட்டாமிடத்தி லிருப்பின் கைம்மையைத் தரும். எவ்வளவு காலத்தில் தரும் எனில் ? எட்டாமிடத்திற் குரியவன் எவனுடைய நவாம்சத்தில் நிற்கிறானோ அந்த நவாங்கிசாதிபதி யுடைய நைசர்க்கிக திசையாண்டளவில் திருமணமான காலத்திலிருந்து நிகழும் என்க.

நைசர்க்கிக, அல்லது நிசர்க்க திசை யாண்டுகள் சூரியனுக்கு 20, சந்திரனுக்கு 1, செவ்வாய்க்கு 2 புதனுக்கு 9, குருவிற்கு 18, சுக்கிரனுக்கு 20, சனிக்கு 50 என்னும் யாண்டுகளாம். ஆனால் மங்களேஸ்வரீயம் " பெண் பிறந்த இலக்கினத்திற்கு எட்டாமிடத்தில் சூரியன், சனி, செவ்வாய் முதலிய பாவர்களில் யாராவ திருக்க அந்த அட்டமாதிபதி யிருந்த நவாங்கிசையின் அதிபதி யாரோ அவர்க்குரிய திசை புத்தி அந்தரங்களில் திருமணம் செய்து கொண்ட பெண்ணின் கணவன் மரணமாவான் " என்று (24-25) கூறுகிறது.

சாதகாலங்காரம் வேறுபடக் கூறுகிறது.

" உள்ளபல பாவரெட்டி லிருந்தக்கால் விதவை
உளதாவ தென்றெண்ணில் ஓரெட்டா மதிபன்
தெள்ளியவங் கிசைக்கிறைவன் அட்டகவர்க் கத்தில்
சேர்வருடம் எத்தனையோ அத்தனையாண் டதனில்.
மெள்ளவித வையுமாவள் " என்று கூறுகிறது.

சாதகாலங்காரம் நைசர்க்கிக யாண்டினைக் குறிப்பிடவில்லை. அட்டமாதிபதி நின்ற அங்கிசைக் கிறைவனுக் குரிய அட்டகவருக்க யாண்டைக் குறிப்பிடுகிறது. அட்டகவர்க்கயாண்டினைக் கணிக்கும் முறையைச் சாதக சிந்தாமணியுள் அட்டகவர்க்க படலத்துள் அறிக.

இப் பாட்டு ஒருபெண் புருட பாவம் உள்ளவளாகவும்,
போகசக்தியற்ற முக்கியவளாகவும் ஆகிற
இரண்டு யோகங்களைக் கூறுகிறது.

339. ஓசமே உதிப்ப மாலிந்
தொன்புகர் வலியின் ருகி
மாசனி நடுவே தாக
மற்றையோர் வலிய ராகத்

RangaRakes
tamilnavarasam.com

தேசீல்உக் குமமு திப்பச்
சீவன்மால் புகர்சேய் தேரில்
பேசுறும் பிரமஞ் கீர்த்தி
பெருமையின் றீட்ச முள்ளாள்.

(எ-து) ஓச விராசி இலக்கின மாகப், புதன், சந்திரன், சுக்கிரன், பெலவீன ராகச், சுன் (சனி) மத்திம பலவானுக, (மற்றையோ ராகிய) வியாழனும் ஆதித்தனும் செவ்வாயும், பலவான்களாக விருக்கப் பிறந்தவள் புருட பாவக முள்ளவள்.

அன்றியும், உக்கும விராசி இலக்கினமாக, வியாழன் புதன், சுக்கிரன், செவ்வாய், பலவான்களாக விருக்கப் பிறந்தவள் பிரமத்தைச் சொல்லுகிறவளாய்க், கீர்த்தியும் பெருமையும் மோட்சத்தை அடைவதற்கு ஆசையும் உள்ளவ்ளாம் (எ-று). 15

குறிப்பு :—புதன், குரு, சுக்கிரன், சந்திரன் இவர்கள் மிகவும் பலவான்களாகி எவ்விடத்திலாவ திருந்து இலக்னம் ஒற்றை இராசியேல் அவ்வாறு பிறந்த பெண் பல சாத்திரங் களிலும் உபநிஷத்துகளிலும் நல்ல பழிற்சி உள்ளவளா யிருப் பாள். (சாராவளி-45-31).

இப் பாட்டு துறவு நிலை எய்தும்
யோகத்தைக் கூறுகிறது.

340. சரிவில்சத் தமத்திற் பாவர்
சார்ந்திடிற் றருமந் தன்னில்
மருவுறுங் கோட்க ளுற்ற
வகும்பிர விருத்தி கூறத்
தெரிவையர் பிறந்த நாளும்
தெருட்சியும் விவாக நாளும்
உரைசெயும் படியே கொள்க
என்றனர் உணர்ந்த நூலோர்.



(எ-து) ஏழாமிடத்தில் ஒரு பாபக் கிரகம் நிற்கில், ஒன்பதாமிடத்தில் ஒரு கிரகம் நிற்கில், ஒன்பதாமிடத்தில் நின்ற கிரகத்துக்குச் சொன்ன பிரவிரஜ்யயை அனு பவிக்கும் என்பது.

இவையெல்லாம் ஸ்திரீ பிறந்த காலத்திலும் தெருண்ட காலத்திலும் விவாக முகூர்த்தமாய்க் கொள்ளு மிடத்துக்குக் கொடுக்குங் காலத்திலும் பிரச்சின காலத்திலும் (ஆகிய) இவைகளுக் கெல்லாம் முன்னே சொன்ன பலன்களை யெல்லாம் ஆராய்ந்து சொல்லவும் (எ-று). 16

குறிப்பு :— " பாபக்கோள் ஏழிலிருப்பின் கைம்மை உண்டாகு மென்று முன் கூறப்பட்டது. ஆனால் ஒரு கிரகம் ஒன்பதாமிடத்தி லிருப்பின் அந்தக் கோள் தனக்குரிய பிரவிரஜ் யயைக் கொடுப்பதால் அப்பெண் கைம்மை அடைவதில்லை என்று கூறுகிறது (அத்-45-31) சாராவளி. மங்களேஸ்வரீய மும் இவ்வாறு கூறுதலைக் காண்க.

" ஏழினி லொருபா பக்கோள்
இருந்திட மற்றோர் பாபி
சூழுமொன் பதிலே நிற்கத்
தொடருமொன் பதிலுற் றோர்க்கு
ஊழிலு லுறும்பிர விரச்யை
யொண்டொடி யடைவா ளென்றே
வாழுமிவ் வுலகத் தோர்க்கு
வழுத்திய பலனி தாமே " (24-61)

இருபத்திரண்டாவது
ஸ்திரீ சாதக அத்தியாயம் முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

## இருபத்து மூன்றாவது
## துன்மரண யோக அத்தியாயம்

(வட மொழி வராகஹோரை நைர்யாணிகாத்தியாயம் என்று கூறுகிறது அங்கே அத்தியாய எண் 25.) மங்களேஸ்வரியம் நிரியாணப் படலம் என்று கூறுகிறது.

இப் பாட்டு இலக்கினத்திலிருந்து எட்டாமிடமானது ஒரு கோளும் இல்லாமலிருந்து கோள்களால் பார்க்கப்படும் பொழுதோ, அல்லது கோள்களின் சேர்க்கையை அடைந்த பொழுதோ எவ்விதமான இறப்பு நிகழும் என்பதைக் கூறுகிறது.

341. வலியுறுங்கோள் மிருந்துத்தா னத்தை நோக்கில்
வருமிருத்தி தந்தாது கோபந் தன்னால்
பொலிவுறும் பவனந்திற் காத்தி ரத்திற்
பொருந்திடுநோய் பகைகிரக நோக்கி லந்நோய்
சொலுங்கதிரோன் முதற்றீயி னீரின் வாளின்
சுரமுதர நோய்தாகம் பசியாற் றுஞ்சும்
உலேவில்சர முதல்நிதனம் பரதே சத்தும்
உற்பனதே சத்தும்வழி தனிலு மாமே.

(எ-று) இலக்கினத்துக்குத்தான் சந்திரனுக்குத் தான் அட்டமத்தை வலிபெற்ற கிரகங்கள் நோக்குமாகில் மிருத்து வுண்டாம். நோக்கின கிரகத்தின் தாது கோபத்தான் மரணம் வரும். தாது கோபமாவது, அந்தக் கிரகத்தினுடைய வாத பித்த சேத்தும வியாதியினால் மரணம் வரும்.

பவனகாத்திரமாவது அட்டம இராசியைக் கொண்டுள்ள காத்திரம். காத்திரம் — சரீரம். அட்டமத்தை நோக்கிய கிரகத்தினுடைய சரீரம். அத் தாது கோபம் ஏதுவாய், அட்டமம் இவனுடைய அவயவத்தில் எவ்விடம் வந்ததோ அவ்விடத்திற் சொன்ன வியாதி யுடையவாய் மரணம் வரும்.



பெலம் பெற்றிருப்பவர்கள் பல கிரகங்களாய் பல கிரகங்களும் அட்டமத்தை நோக்கில் பல வியாதி உண்டாகும்.

அட்டமத்தைச் சூரியன் முதலான கிரகங்கள் நோக்குமாகில்,

ஆதித்தன் அட்டமத்தை நோக்கில் அக்கினி ஏதுவாக மிருத்தியும், சந்திரன் நோக்கில் சல கோபத்தினால் மிருத்தியும், செவ்வாய் நோக்கில் ஆயுதத்தால் மரணமும், புதன் நோக்கில் சுரத்தினால் இறப்பும், வியாழன் நோக்கில் உதர வியாதியினால் இறப்பும், சுக்கிரன் நோக்கில் அந்தத் தாகத்தினால் இறப்பும், சனி நோக்கில் பசி மிகுதியினால் இறப்பும் உண்டாகும்.

அட்டமம் சரவிராசியாகில் பரதேசத்தில் மரணம். அட்டமம் திரவிராசி யாகில் சுயதேசத்தில் மரணம். அட்டமம் உபயவிராசி யாகில் வழியில் மரணம் (நிகழும்) (எ-று). 1

குறிப்பு : வலுவுள்ள கோள்கள் எட்டாமிடத்தைப் பார்க்குமாகில் அக் கோள்களின் வாத பித்த சிலேத்தும மாகிய தாது கோபத்தால் இறப்பு உண்டாகும். அஃதாவது சூரியனுக்குப் பித்தமும், சந்திரனுக்கு வாதம் கபம் என்னும் இரண்டும், செவ்வாய்க்குப் பித்தமும். புதனுக்குக் கபம் வாதம் பித்தம் என்னும் மூன்றும், குருவுக்குக் கபமும். சனிக்கு வாதம் கபம் இரண்டும், சனிக்கு வாதமும் தாதுக்களாகும்.

எட்டாமிடத்திற் குரிய இராசி கால தேவனுடைய எந்த உறுப்பாக ஆகிறதோ அந்த உறுப்பின் மூலம் நோய் உண்டாகும். கால தேவனுடைய தலை மேடம், இடபம் முகம் மிதுனம் மார்பு, கடகம் இதயம், சிங்கம் வயிறு, கன்னி இடை, துலாம் நாபிக்கும் குறிக்கும் இடையிலுள்ள இடம், விருச்சிகம் குறி, தனுசு இரண்டு தொடைகள், மகரம் முழங்கால், கும்பம் கணுக்கால், மீனம் அடி என்று அறிக. இதனை இந் நூல் இராசி பேத அத்தியாயத்துள் நான்காம் பாட்டாலும் அறிக.

49

RangaRakes
tamilnavarasam.com

இப் பாட்டு கல்லினாலும், கிணற்றில் விழுதலாலும், கூறவினாலும், வெள்ளத்தில் முழுகிப் போதலாலும் உண்டாகும் இறப்பினைக் கூறுகிறது.

342. பானுசேய் கன்மம் பந்து
பருஞ்சிலை விழுந்து மாய்வன்
மானமே மதனம் பந்து
மங்கலன் மதிசுன் கூபம்
கூன்மதி கதிர்பெண் மேவக்
கொடியகோள் நோக்கிற் கேளால்
தானுப யோத யத்திற்
சசிகதிர் சலத்தின் மூழ்கும்.

(எ-து) சூரியன் பத்தாமிடத்திலும், செவ்வாய் நான்காமிடத்திலும் நிற்கில் சிலையாகிய கல் விழுந்தாதல் பட்டாதல் மரணம்.

பத்தாமிடத்திற் செவ்வாயும் ஏழாமிடத்திற் சந்திரனும் நான்காமிடத்திற் சனியும் நிற்கில் கிணற்றில் விழுந்து மரணம்.

சந்திரனும், சூரியனும், கன்னியில் நிற்கப், பாவக் கிரகங்கள் நோக்கில் பந்துக்களால் இவன் கொல்லப் படுவன்.

உபய விராசி இலக்கின மாக, அதிற் சந்திர சூரியர் நிற்கில், வெள்ளத்தில் முழுகிப் போவன் (எ-று). 2

இப் பாட்டு சலோதர நோயாலும், ஆயுதம் அக்கினியினாலும், இரத்த நோயாலும், கயிறு அல்லது தீயினாலும் உண்டாகும் இறப்பினைக் கூறுகிறது.

343. மந்தன் கடகம் மதிமகரம்
மரண மெய்தும் சலோதரத்தால்
இந்து குசன்பம் மினிற்றீக்கோட்
கிடையே வாளாற் றீயதனால்
தந்த தீயர்க் கிடைகன்னிச்
சசிநோ யிரத்தந் தீயர்நடு
முந்து சனிபம் மிந்துவுறிற்
கயிற்றுற் றீயான் முடிவுறுமே.

(எ-து) சனி கடகத்தில் நிற்கச், சந்திரன் மகரத்தில் நிற்கச், சலோதர வியாதியினாலே மரணம்.

பாபக் கிரகங்கட்கு நடுவே செவ்வாயினுடைய சேத்திரத்தில் சந்திரன் நிற்கில், ஆயுதத்தினாலாதல், அக்கினியினாலாதல் மரணம்.

பாபக் கிரகங்கட்கு நடுவே கன்னியில் சந்திரன் நிற்கில் இரத்த ரோகத்தால் மரணம்.

பாபக் கிரகங்கட்கு நடுவே சனிச் சேத்திரத்தில் சந்திரன் நிற்கில் கயிற்றினால் கட்டுப்பட்டாதல், தீயில் விழுந்தாதல் மரணமாம் (எ-று). 3

இப் பாட்டு கட்டுண்டு சாதலும் இல்லானாற் சாதலுமாகிய யோகத்தைக் கூறுகிறது.

344. சந்ததி தவந்தீக் கோளாய்ச்
சார்ந்தகோள் நோக்கின் றேனும்
அந்தியம் நிகளம் பாசம்
அராக்கான மெனுங்கட் டாற்சாம்
சிந்திய கதிரு திப்பச்
சிதன்மதி தீய ரோடே
இந்தரி லையிற் றிரூனம்
மந்திரத் தில்லா னாற்சாம்.

(எ-து) இலக்கினத்துக்கு ஐந்தாமிடத்திலும் ஒன்பதாமிடத்திலும் பாபக் கிரகங்கள் நிற்கச், சுபக்கிரகங்கள் நோக்கிலை யாகில் கட்டுப்பட்டு மரணம் வரும்.



RangaRakes tamilnavarasam.com

அட்டமத் திரேக்காணம் சர்ப்பத் திரேக்காணந்தான், நிகளத் திரேக்காணந்தான், பாசத் திரேக்காணந்தாளுகில் கட்டுண்டு மரணம்.

சூரியன் இலக்கினத்தில் நிற்க, மேடத்திற் சுக்கிரன் நிற்கில், பாபக் கிரகங்களுடனே சந்திரன் கூடிக் கன்னியில் ஏழாமிடத்தில் நிற்கில், தன்னுடைய மந்திரத்தில் (வீட்டில்) ஸ்திரீயினுடைய ஏதுவினலே விரோதங் கொண்டாதல் ஏதாகிலும் ஒரு பிரகாரம் மரணம் வரும் (எ-று). 4

345. பருதி யெனினுஞ் சேயெனினும்
பந்தி லூறச்சன் பத்தெனினும்
மருவுத் திரிகோண் டயரொடு
மதியுற் றிடினும் சுகங்கருமம்
இரவி குசனுற் றிடப்பிறைநோக்
கிடினும் சூலந் தனில்மரணம்
கரியோன் நோக்கச் சுகமானம்
கதிர்சேய் காட்டந் தனில்மரிக்கும்.

(எ-து) ஆதித்தனுதல், செவ்வாயாதல் நான்காமிடத்தில் நிற்கச், சனி பத்தாமிடத்தில் நிற்கக் கழுவிலேறி மரணம் வரும்.

ஐந்தாமிடத்திலாதல் ஒன்பதாமிடத்திலாதல் இலக்கினத்திலாதல் பாபக்கிரகங்கள் சீண சந்திரனேடுங் கூடி நிற்கில் கழுவிலேறி மரணம் வரும்.

நான்காமிடத்தில் ஆதித்தனும் பத்தாமிடத்திற் செவ்வாயும் நிற்கச் சீண சந்திரன் நோக்கு உண்டாகில் கழுவிலேறி மரணம் வரும்.

ஆதித்தன் நான்காமிடத்திலும், செவ்வாய் பத்தாமிடத்திலும் நிற்கில், சனி நோக்குமாகில், உலர்ந்த மரத்தில் அடிபட்டென்கிலும் (அடிபட்டாகிலும்) விழுந்தென்கிலும் (விழுந்தாகிலும்) மரணமாம் (எ-று) 5



346. இரந்திராற் பதங்தி யூனம்
இபுகத்திற் றேயு மிந்து
வருந்துதி ரன்சுன் பானு
வுறிற்காட்டத் தடியான் மாயும்
தெரிந்திவர் கருமந் தன்மம்
உதயம்புத் திரனிற் சேரில்
எரிந்துறு தூமந் தீயாற்
பந்தன மிடியான் மாயும்.

(எ-து) இரந்திரம், ஆற்பதம் (ஆஸ்பதம்) தியூனம், இபுகம் (ஹிபுகம்) இவற்றில் அடைவே சீண சந்திரனும் செவ்வாயும் சனியும் சூரியனும் நிற்கில் மரத்தில் அடியுண்டு சாவான்.

இவர்கள் அடைவே கருமம் தன்மம் உதயம் புத்திரன் இத் தானங்களில் நிற்கில் புகையினுலாதல், தீயினுலாதல், கட்டுப்பட்டாதல், இடிபட்டாதல் மரணம் வரும் என்பது. (இவற்றின் விளக்கம் அடியிற் காண்க).

அட்டமமாகிய எட்டாமிடத்திற் சீண சந்திரனும், பத்தாமிடத்திற் செவ்வாயும், ஏழாமிடத்திற் சனியும், நான்காமிடத்திற் சூரியனும் நிற்கில் அடியுண்டு சாவான்.

பத்தாமிடத்திற் சீண சந்திரனும், ஒன்பதாமிடத்திற் செவ்வாயும். உதயத்திற் சனியும், ஐந்தாமிடத்திற் சூரியனும் நிற்கில், புகையினு லாதல், தீயினு லாதல், கட்டுப்பட்டாதல், இடிபட்டாதல் மரணம் என்பது. இவர்கள் பலம் அறிந்து அடைவே சொல்லுக (எ-று). 6

இப்பாட்டு வாளால், நோய், நீரால் மரணம்
எய்துதலையும், புள்ளலில் விழுந்து மடிதலையும் கூறும்.

RangaRakes tamilnavarasam.com

347. பந்தத்த மயங்கன் மத்திற்
பார்மகன் கதிர்சுன் னுற்குல்
நிந்தைகொள் வாளாற் றீயால்
நிருபரால் நிதன மெய்தும்
அந்தமில் சொம்மு பந்து
ஆற்பதம் சனியிந் தாரல்
முத்துற நிற்கில் புண்ணிற்
புழுத்துயிர் முடியு மன்றே.

(எ-து) நான்காமிடத்திற் செவ்வாயும், ஏழாமிடத்தில் ஆதித்தனும், பத்தாமிடத்தில் சனியும் நிற்கில், ஆயுதத்தினுலாதல் அக்கினியினு லாதல், இராசகோபத்தினு லாதல் மரணமாம்.

இரண்டாமிடத்திற் சனியும், நான்காமிடத்திற் சந்திரனும், பத்தாமிடத்திற் செவ்வாயும் நிற்கில் புண்ணில் புழுத்து மரணமாம் (எ-று). 7

குறிப்பு :—பந்து, அத்தமயம், கன்மம் முறையே நான்காமிடம் ஏழாமிடம் பத்தாமிடமாம். சொம்மு, பந்து, ஆற்பதம் இரண்டாமிடம், நான்காமிடம், பத்தாமிடமாம்.

இப் பாட்டு வாகனத்திலிருந்து விழுந்தும் ஆலேயிலரைபட்டும் மரணமாதலேயும், மலமுள்ள இடத்தின் நடுவே மரண மாதலேயும் கூறும்.

348. மானம்பந் திரவி சேயல்
வாகனந் தனிற்சா மெட்சி
ஆனவிந் திரவி சுன்னேழ்
ஆரலெந் திரத்திற் றுஞ்சும்
தானழல் காரி யிந்து
துலேமறி சனிபம் மேனும்
பானுசே யிந்தேழ் பந்து
தசம்மல நடுவின் வீடும்.



(எ-து) பத்தாமிடத்திற் சூரியனும், நான்காமிடத் செவ்வாயும் நிற்கில், வாகனத்திலிருந்து விழுந்து மரணம்.

இலக்கினத்திற் சந்திரனும் (தேய்பிறைச் சந்திரன் ; சாராவளி), சூரியனும், சனியு முதிக்க, ஏழாமிடத்திற் செவ்வாயும் நிற்கில், இயந்திரத்தினுலே நெருக்கப்பட்டு மரணம் வரும். இயந்திரமாவது ஆலேயாதல் செக்காதலென்பது.

செவ்வாய் துலாத்தில் நிற்கச், சனி மேடத்தில் நிற்கச், சந்திரன் மகரத்திலாதல் கும்பத்திலாதல் நிற்கினும், மலத்தின் மத்தியத்திலே மரணம்.

சூரியன் ஏழாமிடத்தில் நிற்கச், செவ்வாய் நான்காமிடத்தில் நிற்கச், சந்திரன் (குறைமதி : சாராவளி) பத்தாமிடத்தில் நிற்கினும் மலத்தின் மத்தியத்திலே மரணம் (எ-று). 8

குறிப்பு :— இப் பாட்டிற் கூறப்பட்டுள்ள நான்குவகையான யோகங்களும் சாராவளி 46 ஆம் அத்தியாயத்தே 13, 14, 15, 16, ஆம் சுலோகங்களில் கூறப்பட்டுள்ளன. அவை ஒத்தும், ஒவ்வாமலு மிருப்பதை ஒப்பு நோக்கி அறிக. இப் பாட்டில் நான்காவதாகக் கூறப்பட்டுள்ள யோகம் கடலங்குடி ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் பதிப்பிற் காணப்படவில்லே. ஆனுல், மங்களேஸ்வரீயம் இதனே எட்டாம் சுலோகப் பொருளாகவே கூறுகிறது ; அதனேக் கீழே காண்க.

" திங்களும் குறைந்தீ சைந்தில்
தினகர னேழில் நிற்க,
மங்கலன் நாலில் தங்க
மானிலத் துதித்த மைந்தன்
சங்கின வாடேத் தியத்தாற்
சாவது திண்ண மென்று
இங்கிதத் துடனே சொல்க
இப்புவி யுள்ள பேர்க்கே " (25-31).

RangaRakes tamilnavarasam.com

இப் பாட்டு குய்ய நோய் உண்டாகின், அதனை அறுத்து, சுட்டு, உண்டான புண்ணில் புழு ஏற்பட்டு, மரணம் நிகழ்தலைக் கூறுகிறது.

349. தேயுமிந் தனைத்தான் மிக்க
 வலியுடைச் செவ்வாய் நோக்க
ஆயுவில் அசிதன் ருனே
 அனையுமேற் குய்யந் தன்னில்
நோயுறும் அதனிற் கூர்த்த
 சத்திரம் நுழைந்தே யாதல்
தேயுவிற் சுட்டே யாதல்
 கிருமியுற் ருதல் மாய்வன்.

(எ-து) தேய்ந்து அழிகின்ற சீண சந்திரனைப் பலவானு யிருக்கின்ற செவ்வாய் நோக்க, அட்டமத்திற் சனி நிற்குமாகின், அப்போது பிறந்தவனுக்குக் குய்ய ரோகம் உண்டாய், அதைச் சத்திரத்தினுல் (கத்தியால்) அறுத்தாதல், தீயினுற் சுட்டாதல், அதிற் புழுத்தாதல் மரணம் வரும் (எ-று). 9

குறிப்பு :—இவ்வாறு கோள்களிருப்பின் "இரகசியத் தானத்தில் உண்டான ரோகத்தின் உபத்திரவத்தாலோ அதாவது, குறிக்கும் மலத்து வாரத்திற்கும் இடையில் சல்லடைக் கண் போன்ற துவாரத்தை உண்டாக்கும் அர்சஸ் என்றும், பகந்தரம் என்றும் சொல்லப்படும் ரோகத்தின் பீடையாலோ புழுக்கள் உண்டாகியோ ஆயுதத்தாலோ நெருப்பு முதலிய வற்றின் சம்பந்தத்தாலோ உண்டான மரணம் ஏற்படும்" என்று உரை கூறியுள்ளார் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் (பிருகத்-25-9).

இப் பாட்டு பறவைகள் கொத்தித் தின்று மரணம் வருதலையும், சுவர், பருப்பதம், இடி இவை விழ்ந்து மரணம் வருதலையும் கூறும்.

350. அத்தம மிரவி சேயும்
 ஆயுள்சன் சுகந்தேய் சோமன்
கொத்துகங் கத்தாற் சாவன்
 கொடுங்கதிர் சேய்சுன் னிந்து



வைத்ததோ ருதயம் புந்தி
 கிரியாணந் தவசின் மன்னில்
தத்துறு சிகரத் தாதல்
 சயிலத்தால் அசனி யாற்சாம்.

(எ-து) ஏழாமிடத்தில் ஆதித்தனும், செவ்வாயும் நிற்க, அட்டமத்திற் சனி நிற்க நான்காமிடத்திற் சீண சந்திரனும் நிற்க பட்சிகள் கொத்தித் தின்று மரணம் வரும்.

இலக்கினத்தில் ஆதித்தனும், ஐந்தாமிடத்திற் செவ்வாயும், அட்டமத்திற் சனியும் ஒன்பதாமிடத்திற் சந்திரனும் நிற்கிற், சுவர் வீழ்ந்தாதல் பருப்பதம் வீழ்ந்தாதல் இடி வீழ்ந்தாதல் மரணமாம் (எ-று). 10

குறிப்பு :—அந்தமம், ஆயுள், சுகம் என்பன முறையே ஏழாமிடம், எட்டாமிடம், நான்காமிடங்களைக் குறிக்கும். உதயம் புந்தி கிரியாணம் தவசு என்பவை முறையே இலக்கினம் ஐந்தாமிடம் எட்டாமிடம் ஒன்பதாமிடம் என்னும் இவைகளைக் குறிக்கும். "பட்சிகள் மூலம் மரணம் உண்டாகும் என்றதின் கருத்து இத்தகைய யோகத்திற் பிறந்தவனுக்கு வைதிகமான பிரேத சம்ஸ்காரம் நடைபெருது என்பதாம்" என்பர் ஸ்ரீ நடேச சாஸ்திரிகள்

மங்களேஸ்வரீயமும்,

"சேய்ரவி சேர்ந்தேழ் நிற்கத்
 திகழ்சனி ஆயுள் தன்னில்
தேய்மதி நாலிற் றங்கச்
 செனித்தவ னுடல்ச மாதி
தீயினுற் றகன மாகா
 சீரற்றுப் பருந்து கூளி
நாய்நரி தின்னு மென்று
 நான்முக னமைத்த வாறே" என்று (25.33) கூறுதலைக் காண்க. வராக வோரையிற் கூறப்பட்டுள்ள இவ்விரண்டு யோகங்களைச் சாராவளியிலும் (46-அத்-18, 19 சுலோ) காண்க.



RangaRakes tamilnavarasam.com

351. இருபதி னிரண்டி னுற்ற
திரேக்காணம் மரண வேது
வருமதி னதிபன் எட்டின்
அதிபர்கள் வலியை யோர்ந்து
தெரிதரும் வலிமிக் கோற்குச்
செப்பிய மிருத்து வெல்லாம்
அரவமா யுதங்க ளாதி
மிருத்தினை யோத வாய்ந்தே.

(எ–து) செனன காலத்து இலக்கினத்திலுதித்த திரேக்காண மறிந்து, அதனுடைய இருபத்திரண்டாந் திரேக்காண விபத்துக்களால் மரண ஏதுவாம் என்று சொல்வது.

இருபத்திரண்டாந் திரேக்காணுதிபதியும், அட்டமாதிபதியும் இவர்களிருவரிலும் பலமுள்ளவனுக்கு முன் சொன்ன கவியில் (339) சர்ப்பம் ஆயுதம் இத்தியாதி குணங்களைக் கொண்டு மரணத்தைத் தரும் (எ–று). 11

குறிப்பு :— ஒருவன் ஓர் இலக்கினத்தில் எத்தனையாவது திரேக்காணத்திற் பிறந்தானே அதிலிருந்து இருபத்திரண்டாம் திரேக்காணம் மரணத்தைத் தரும் என்றறிய வேண்டும். அஃதாவது இலக்கினத்தின் முதல் திரேக்காணத்திற் பிறந்தவர்க்கு எட்டாமிடத்தில் முதல் திரேக்காணமும், இலக்கினத்தின் இரண்டாம் திரேக்காணத்திற் பிறந்தவர்க்கு எட்டாமிடத்தில் இரண்டாம் திரேக்காணமும், இலக்கினத்தின் மூன்றாந் திரேக்காணத்திற் பிறந்தவர்க்கு எட்டாமிடத்தில் மூன்றாந் திரேக்காணமும் இருபத்திரண்டாவது திரேக்காணங்களாகும். எந்த சாதகனுக்கு இதுவரை கூறப்பட்ட நிரியாண யோகங்கள் ஒன்றும் அமையாமலும் அல்லது எட்டில் ஒரு கோளும் இல்லாமலும் எட்டினை ஒரு கோளும் நோக்காமலும் இருப்பின் அவனுக்கு இருபத்திரண்டாம் திரேக்காணுதிபதியைக் கொண்டோ அல்லது அவ்வதிபதி இருக்கும் இராசி நாதனைக் கொண்டோ இந்த அத்தியாயத்தின் முதற் பாட்டிற் கூறியுள்ள கோள்களின் மரண ஏதுவால் மரணம் வரும் என்று அறிக. மங்களேஸ்வரியம் (25–ஆம் படலம்) 35, 36, 37, 38 ஆம் பாடல்களை நோக்குக.



இப் பாட்டு மரணம் நிகழும் இடத்தைப் பற்றியும் மரணகால மயக்கத்தின் கால அளவைப் பற்றியும் கூறுகிறது.

352. உதயத்தி னியாங்கி சேசன்
உறுமோரை நிலை வற்கே
யுதந்திருட் டங்கள் பூமி
உறும்உத யாங்கி சங்கள்
இதினுறு மளவாம் மோகம்
எட்சியைப் பதிநோக் கிரட்டி
முதிருறுஞ் சுபர்கள் நோக்கின்
மும்மடங் காகும் மோகம்.

(எ–து) இலக்கின நவாங்கிசத்தினுடைய அதிபதி நின்ற இராசிக்குச் சொல்லிய பூமியிலே மரணம் வரும் என்பது.

அந்த நவாங்கிசாதிபதியுடனே யாதொரு கிரகம் கூடித்தான் நோக்கித்தா னிருக்கில் அவனுக்குச் சொல்லிய பூமியில் மரணம் வரும்.

செனன காலத்தில் எத்தனை நவாங்கிசம் உதித்தது மரண காலத்தில் அத்தனை திவசம் (நாள்) மோகிக்கும்.

இலக்கினத்தை இலக்கினாதிபதி நோக்கில் முன் சொல்லிய காலத்தில் இரட்டித்து மோகிக்கும். அதைச் சுபக்கிரகங்கள் நோக்கில் முன் சொல்லிய மோக காலத்தில் மும்மடங்கு மோகிக்கும் (எ–று). 12

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :— ஒருவன் பிறந்த காலத்தில் உதயமான நவாமிசத்திற்கு உரிய கோள் எந்த இராசியில் இருக்குமோ அந்த இராசிக்குச் சொல்லப்பட்டுள்ள நிலத்திலே அவனுக்கு இறப்பு நிகழு மென்க.

ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் எழுதிய பிருகத்சாதக உரையுள் " இலக்கின நவாமிசாதிபதிக்கு ஏற்பட்ட வேறு கிரகத்தின் சேர்க்கையைக் கொண்டும். இலக்கின நவாமிச பதிக்கு ஏற்பட்ட மற்ற கிரகங்களின் பார்வையைக் கொண்டும், இலக்கின நவாமிசாதிபதி எந்த இராசியின் எந்த நவாமிசத்தி லிருக்கிறதோ அவனைக் கொண்டும் முற் கூறிய மரண தேசமானது ஏற்படுத்தத் தகுந்தது. மரண சமயத்தில் நேருகின்ற மோகமோ வெனில் (தன்னிலையற்றிருத்தல்) ஜனன காலத்தில் இலக்கினத்திற் செல்லான நவாமிசம் போக மீதமான நவாமிசம் எவ்வளவு உண்டோ, அதற்கு எவ்வளவு காலமோ அதற்கு ஒப்பான காலமுள்ளதாக இருக்கும் " என்று கூறுவர்.

இராசிக் குரிய இடங்களாவன மேடமானால் ஆடுகள் வாழ்கின்ற அல்லது இயங்குகின்ற இடமும், இடபத்திற்கு எருது, பசு வாழ்கின்ற, அல்லது இயங்குகின்ற இடமும், மிதுனமானால் வீடாகிய இடமும், கடகமானால் தண்ணீர் சம்பந்தமான இடமும், சிம்மமானால் காடு, மலை, மணற்பாங்கான இடமும், கன்னியானால் ஓடம் முதலியவை இயங்கு மிடமும், துலாமானால் கடைத் தெருவும், விருச்சிகமானால் படுகுழி முதலிய இடமும், தனுசானால் குதிரை முதலியன இயங்கு மிடமும், மகரமானால் நீர்க்கசிவுள்ள இடமும், கும்பமானால் வீடும், மீனமானால் தண்ணீருள்ள இடமும் மரண இடமாகும்.

இவ்வாறு மரண இடத்தை அறிவதில் பல இடங்கள் வருமேல், வலிவுள்ள கோள் எதுவோ, அதற்குரிய இராசியிடத்திலே மரணம் நிகழும் என்று கொள்க. அக் கோளிற்கு இரண்டு இராசி ஆதிபத்தியம் வருமேல், அவற்றுள் மூலத்திரிகோண இராசி எதுவோ, அதற்குரிய இடத்தில் மரணம் நிகழு மென்று கொள்க.

சிலர், கோள்களுக் குரிய இராசியிடத்தைக் கொள்ளாமல் கோள்களின் இடத்தை மரண இடமாகக் கூறுவதுண்டு.



இப்பாட்டு இறந்த பின்னர் உடம்பிற்கு உண்டாகும் நிலையைக் கூறுகின்றது.

353. நிதன வோரைக் காணங்கள்
நீரழல் மிசிர மாகில்
உதகமே கொளும்பி ரேதம்
தகனமாய் உலரு மென்பர்
பதிவுறு நிதன வோரை
பணிபுட்கள் விலங்கேல் உண்ணும்
சிதமுறு நூலாற் கூறச்
செல்பவம் வருப வங்கள்.

(எ–து) அட்டமத்தில் நின்ற (இருபத்திரண்டாவது) திரேக்காணம் சலத்திரேக்காண மாகில் சவத்தை வெள்ளங் கொண்டுபோம். அக்கினித் திரேக்காண மாகில் சவம் அக்னிகொண்டு தகனமாம். மிசிரத் திரேக்காணம் ஆகில் சவம் கிடந்து உலர்ந்து போம்.

நிதன பவனமாகிய அட்டமம் சர்ப்பத் திரேக்காணமாகில், பட்சி, மிருகத் திரேக்காணம் என்று சொல்லியவற்றில் ஒன்றாகில் சுய சூகராதிகளும் பட்சித்துப்போம்.

இப்படி விசாலமாய்ச் சொல்லியிருக்கிற சாஸ்திரத்திலே முன்னே பூர்வ சன்மமும், இனிமேல் வருகிற சென்மமும் (ஆகிய) இவை யெல்லாம் ஆராய்ந்து சொல்லுக (எ–று). 13

குறிப்பு :— " சன்ம இலக்கினத்திற்கு எட்டாமிடத்தி லிருக்கிற அக்கினித் திரேஷ்காணம் சலத் திரேஷ்காணம், மிசிரத் திரேஷ்காணம் இவைகளைக் கொண்டு, முறையே அக்னித் திரேஷ்காணமானால் அக்கினியால் எரிக்கப் பெற்றுச் சாம்பலாதலாலும், சலத் திரேஷ்காணமானால் கங்கை முதலிய சலத்தில் எறியப்படுவதாலும், மிசிரத் திரேஷ்காணமானால், வெயிலில் உணங்குவதாலும் பிணத்திற்கு மாறுதல் ஏற்படும். எட்டாமி

RangaRakes tamilnavarasam.com

டத்திலிருக்கின்ற சர்ப்பத் திரேஷ்காணங்களைக் கொண்டு நாய் நரிகளால் தின்னப்பட்டு அவற்றின் மலமாக மாறுதல் அடைகின்றது" என்பது ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் உரை. இப்பாட்டில் நிதன ஓரை என்றது எட்டாம் இராசியை. காணம் என்றது திரேக்காணத்தை.

இப் பாட்டு ஒருவன் எந்தப் பிறவியிலிருந்து
இப் பிறவிக்கு வந்தான் என்பதைக் கூறும்.

354. திங்க ளிரவி வலியிவைதந்
திரேக்கா ணத்தின் பதிகுருவும்
சங்கன் மதியுஞ் சுடர்சேயும்
சுன்மா லவனும் விபுதரொடும்
பொங்கு பிதிருந் திரிசாதி
நிரைய மிவைபூ ருவசென்மம்
துங்க பாக மிதினுயர்ந்தோர்
நீசந் தாழ்ந்தோ ரெனச்சொல்லே.

(எ-து) சந்திரன், ஆதித்தன் இவர்களை வைத்துப் பெலமுள்ளவன் நின்ற திரேக்காணத்தின் அதிபதி வியாழமாகில், தேவ லோகத்திலிருந்து வந்து பிறந்தவனிவன். சுக்கிரன் தான், சந்திரன் தானாகில் இவன் பிதுருலோகத்திலிருந்து வந்து பிறந்தவன். சூரியன் தான், செவ்வாய் தான் ஆகில் திரிசாதியாகிய பசு, பட்சி மிருகங்களிலிருந்து வந்து பிறந்தவன். சனி தான், புதன் தானாகில் நரகத்திலிருந்து வந்து பிறந்தவன்; கிருமி கீடாதிகளிலிருந்து வந்து பிறந்தா னென்றுமாம். இவையெல்லாம் பூருவ சென்ம மென்று சொல்வது. இவையிற்றில் துங்க (உச்ச) பாகம் உயர்ந்தோர், நீச பாகம் தாழ்ந்தோர் என்கையால், வியாழன் உச்சத்தில் நிற்கில் தேவலோகத்திலிருந்து வந்து பிறந்தவன்; சிரேஷ்டனுயிருக்கும்; இடையில் (உச்சமும் நீசமும் அல்லாத நிலை) மத்திமன்; நீசத்தில் அதமன். சூரியனும் செவ்வாயும் உச்சத்தில் நிற்கில், திரிசாதிகளிலிருந்து,





வந்து பிறந்தவன்; சிரேஷ்டன்; இடையில் மத்திமன்; நீசத்தில் அதமன். சனி, புதன் நீசத்தில் நிற்கில் அதமன் (எ-று). 14

355. இருபுரந் திரத்தி ரேக்கா
ணேசர்தங் கதியிற் சாரும்
மருவுசத் தமக்கோ ளாலும்
வகுக்கலாம் இருபு கண்டம்
சிரயும்பொன் னுச்ச முத்தி
சேர்ந்திடு மீனின் மீன்கால்
குருவெழ மற்றை யோர்க்கு
வலியின்றேற் கூடு முத்தி.

(எ-து) இருபு—ஆறுமிடம். இரத்திரம்—எட்டாமிடம். ஆறுமிடத்திலும், எட்டாமிடத்திலும் கிரகங்களில்லாமலிருக்க, அவ்விடத்தில் திரேக்காணங்களுடைய அதிபதிகளை வைத்து, அதில் எவனொருத்தன் பலவான், அவன் வியாழனாகில் தெய்வ லோகத்தைப் பிராபிக்கும். சந்திரன் தான், சுக்கிரன் தானாகில் பயதிரிலோகத்தைப் (?) பிராபிக்கும். சூரியன் தான், செவ்வாய் தானாகில் பசு பட்சி மிருகங்களில் பிராபிக்கும். புதன் தான் சனி தானாகில் கிருமி கீடாதிகளில் பிராபிக்கும் என்பது.

ஏழாமிடத்தில் நின்ற கிரகத்துக்குச் சொல்லிய லோகத்தைப் பிராபிக்கும். 'இருபு கண்டம் சிரயம்' என்பது, இருபு—ஆறுமிடம். கண்டம்—இலக்கினம், நான்கு, ஏழு, பத்து. சிரயம்—எட்டு என்று அறிவது. உச்சத்தில் நின்ற வியாழன் ஆறுமிடத்தில் உச்சத்தில் நிற்கிலும், கேந்திரங்களில் உச்சத்தில் நிற்கிலும், அட்டமத்தில் உச்சத்தில் நிற்கிலும் மோட்சம் பிராபிக்கும் என்றறிவது.

மீனத்தில் மீன்கால் (மீன நவாம்சம்) உதயமாக, அதில் வியாழன் நிற்க, மற்றுமுள்ள கிரகங்களுக்குப் பலமில்லாதேயு மிருக்கில், அப்பொழுது மோட்சம் பிராபிக்கும் (எ-று). 15

குறிப்பு :—பிராபிக்கும்—அடையும்.

இருபத்து மூன்ருவது
துன்மரணயோக அத்தியாயம் முற்றும்.

---

## இருபத்து நான்காவது
## நட்ட சாதக அத்தியாயம்.

குறிப்பு :—இதுவரை ஒருவன் பிறந்த காலத்தைக் கொண்டு அறியப்படும் பலன்கள் கூறப்பட்டன. இனிப் பிறந்த காலம் அறியாதா ஞெருவன் எதிர்காலப் பலனை அறிய விரும்பின் அதனை அறிந்து கொள்ளுதற் குரிய நட்ட சாதக அத்தியா யத்தைக் கூறுகிருர்.

இப் பாட்டு ஒருவன் பிறந்த உத்தராயண
தெக்கிணுயனங்களை அறியும் நெறியைக்
கூறுகின்றது.

356. ஓதும்ஆ தானம் சென்ம
காலங்கள் உணர்ந்தி டாதார்
ஆதனம் ஓரை(யாதி)
வகுத்திடேன்(றுரைத்த காலைப்)
போதுறும் உதயந் தன்னுற்
புகன்றிட உதயந் தன்னில்
ஆதிஉத் தராய ணங்கள்
அபரந்தெக் கணுய னங்கள்

(எ-து) ஆதான காலமும், சென்ம காலமும் அறியாதவன் என்னுடைய சென்னம் இன்ன காலத்தில் ஆதான மென்றும், இன்ன காலத்தில் சென்ம மென்றும், இன்ன நட்சத்திர மென்றும், இன்ன இராசி யென்றும், இன்ன இராசியில் வியாழ னென்றும் அறியாதே வினவினவனுக்கு, வினவுங் காலத்தில் உதய இலக்கினங் கொண்டு அவனுடைய சென்னத்தைச் சொல்லுக.

அப்போது உதய இலக்கினத்திற் சென்ற நாழிகை முன்பாதியாகில் உத்தராயணத்திற் சூரியன். பின்பாதியாகில் தெட்சணுயனத்திற் சூரியன் என்றறிவது (எ—து). 1



RangaRakes tamilnavarasam.com

குறிப்பு :— ஆதான காலம் என்றது கருப்பாதான காலத்தை யாகும். இக் கருத்தினை மங்களேஸ்வரியமும்,

" சென்ன காலம் அறியொணாத
செல்வ ருக்கி ரங்கியே
இனிமை யாக மொழிவதற்
கிணங்கு மவ்வி திப்படி
தனிய தாக வந்தபேர்க்குத்
தனது நிழலை யெண்ணியே
கனமு டனே நாழியாக்கிக்
கண்ட றிவாய் லக்கினம். "

" உதயமோ டாரு டத்தை
ஊக்கமோ டுணர்ந் துபின்
உதயமான லக்கி னத்தில்
உள்ள நாழி தன்னிலே
விதிய தாக சென்றநாழி
மிச்ச மாம்வி நாடியைத்
துதிபெற வரைந்து கொண்டு
சொல்லு நட்ட சாதகம் "

" உதயராசி தனின்முற் கூறு
உத்த ராய ணம்மதாம்
பதிய நின்ற அதன்பிற்கூறு
பகரு தெக்கி ணாயனம் " என்று (26-1, 2, 3)

கூறுதலைக் காண்க.

இப் பாட்டு நட்ட சாதகம் வினவினவனுடைய யாண்டு, இருது இவற்றை அறியுமாறு கூறுகிறது.

357\. உதயத்தின் றிரேக்கா ணத்தில்
உதயாதி திரிகோ ணங்கள்
முதலுறு வியாழ மென்பர்
மூன்னுள்காம் ஆண்டு பொன்முன்



சிதன்குசன் மதிமால் பொன்சுன்
திரேக்காண முதயஞ் சேரில்
அதுவசந் தாதி யென்னும்
அவைமாறிற் கதிர்சா ராதி.

(எ-து) இலக்கினத் திரேக்காணங் கொண்டு இலக்கினத் திரிகோணங்களில் வியாழனென்று சொல்லுக. இலக்கினத் திரிகோணங்கள் இலக்கினமும் ஐந்தாமிடமும் ஒன்பதாமிடமும் என்றறிவது.

அஃதாவது, இலக்கினத்தில் முதல் திரேக்காணம் உதிக்கில் அந்த இராசியில் (இலக்கினமாய் வந்த இராசியில்) வியாழன் நிற்கும் நாள் சென்னம் என்று சொல்லுக.

இரண்டாந் திரேக்காண முதிக்கில் அந்த இராசிக்கு ஐந்தாமிராசியில் வியாழன் நிற்கும் நாள் சென்னம் என்று சொல்லுக. மூன்றாந் திரேக்காண முதிக்கில் அந்த இராசிக்கு ஒன்பதாம் இராசியில் வியாழன் நிற்கும் நாள் இவனுடைய (சென்னம்) என்று சொல்லுக.

அன்றியும், முதற்றிரேக்காணத்தை நான்கு கூறிட்டு அதில் முந்தின அங்கிசத்தில் நிற்கிலிச்சினம் (?) அந்த இராசியிற் றானே வியாழன் நிற்கின்ற நாள் இவனுடைய சென்னம் என்று சொல்லுக. இரண்டாம் அங்கிசத்திலாகில் இரண்டாம் இராசியில் வியாழன் நிற்கிற நாள் சென்னம் என்று சொல்லுக. மூன்றாம் அங்கிசத்திலாகில் மூன்றாம் இராசியில் வியாழன் நிற்கிற நாள் சென்னம் என்று சொல்லுக. நான்காம் அங்கிசத்திலாகில் நான்காம் இராசியில் வியாழன் நிற்கின்ற நாள் சென்னம் என்று சொல்லுக.

இரண்டாந் திரேக்காண முதிக்கில், அதிலேயும் முந்தின அங்கிசமாகில், அஞ்சாம் இராசியில் வியாழன் நின்ற நாள் சென்னம் என்று சொல்லுக. இரண்டாம்

RangaRakes tamilnavarasam.com

அங்கிசமாகில், ஆறும் இராசி வியாழன் நின்ற நாள் சென்னம் என்று சொல்லுக. மூன்றும் அங்கிசமாகில், ஏழாம் இராசியில் வியாழன் நின்ற நாள் சென்னம் என்று சொல்லுக. நான்காம் அங்கிசமாகில், எட்டாம் இராசியில் வியாழன் நின்ற நாள் சென்னம் என்று சொல்லுக.

மூன்றுந் திரேக்காணம் உதிக்கில், அதை நான்கு கூறிட்டு முதல் அங்கிசமாகில், ஒன்பதாம் இராசியில் வியாழன்; இரண்டாம் அங்கிசமாகில் பத்தாம் இராசியில் வியாழன்; மூன்றும் அங்கிசமாகில் பதினொன்றும் இராசியில் வியாழன்; நான்காம் அங்கிசமாகில், பன்னிரண்டாம் இராசியில் வியாழன் நின்ற நாள் இவனுடைய சென்னம் என்று சொல்லுக.

இவன் எணம்? (சென்னம்) வியாழத்தைக் கற்பிக்க வயசினுடைய சரீரப் பிரமாணங் கொண்டு சொல்லுக.

இலக்கினத்திற் சூரியன் நிற்கில், (சூரியனுடைய திரேக்காணந்தான் உதிக்கில்), கிரீஷ்மமாகிய ருதுவில் இவனுடைய சென்னம் என்று சொல்லுக.

இலக்கினத்திற் சனி உதிக்கிற்றுன், சனியினுடைய திரேக்காணத்தான் உதிக்கில், சசி ருதுவிற் சென்னம்.

சந்திரன் உதிக்கிலும், சந்திரனுடைய திரேக் காணத்தான் உதிக்கிலும், வருஷ ருதுவிற் சென்னம்.

வியாழன் உதிக்கிலும், வியாழத்தினுடைய திரே காணந்தான் உதிக்கிலும் ஏமந்த ருதுவிற் சென்னம்.

புதனுக்குச் சாரிது. சுக்கிரனுக்கு வசந்த ரிது.

மற்று, அயனத்திலே இருது அருக்கனுடைய சார மாம்; அயனமும், ருதுவும், விபரீதமாகில் ஆதித்தனுடைய சாரங்கொண்டு இருதுவை அறிக (எ-று). 2



குறிப்பு :— ஒருவன் வந்து நட்ட சாதகம் வினவிய காலத்திலுள்ள இலக்கினத்தைப் பன்னிரண்டு பங்காகப் பிரித்து, அப் பன்னிரண்டுள் எது உதிக்கின்றதென்று அறிந்தால், அவ் விராசியில் குரு இருக்கும்போது பிறந்தவன் என்று அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு குருவின் நிலையை அறிந்து கொண்ட பின்னர், வினவினவனுடைய உடல் நிலையை நோக்கி அறிந்து, குரு பன்னிரண்டாண்டில் இராசிச் சக்கரத்தைச் சுற்றி முடிப்பான் ஆதலால், இவனுடைய பிறப்புமுதற் பன்னிரண் டிலா, இரண்டாம் பன்னிரண்டிலா, மூன்றும் பன்னிரண்டிலா என்று கருதி உணர்ந்து கணக்கிட்டு அவன் பிறந்த யாண்டினை அறிந்து கொள்ள வேண்டும்.

சனி, சுக்கிரன், செவ்வாய், சந்திரன், புதன், குரு என்னும் அறுவருக்கும் சிசிரம், வசந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரம் ஹேமந்தம் என்னும் ஆறு ருதுக்களும் நிரல்நிறையேஉரியனவாம் என்று, முன்னே இரண்டாம் அத்தியாயத்தே கூறப்பட்டுள்ளது. இலக்கினத்தே சூரியனிருப்பின் கிரீஷ்மருது என்று யவனுசாரியர் முதலியோர் கூறுவதாகப் பட்டோத்பலர் கூறுகிருர். தமிழ் வராக ஓரைப் பாட்டில் (355) கன், சிதன், குசன், மதி, மால், பொன் என்று கூறவேண்டிய முறை, செய்யுளாதலால் பிறழக் கூறப்பட்டுள்ளது.

இப் பாட்டு அயனமும், இருதுவும் தம்முள் ஒவ்வாமல் வரின் கொள்ளும் முறையினையும், தியதி அறியும் முறையினையும் கூறுகிறது.

356. அயனமும் இருது தானும்
அவைவிப ரீத மாகில்
உயர்மதி புதன்பொன் னுக்கும்
ஒண்புகர் சேய்சுன் னென்பர்
முயல்திரேக் காணக் கூறு
முன்முன்னும் பின்பின் மாதம்
தியதியும் உணர வேண்டிற்
செயுந்திரி ராசி கத்தால்.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) அயனமும், இருதுவும் மாறுபாடாய்வரில், சந்திரன் புதன் வியாழன் மூன்றுக்கும், சுக்கிரன் செவ்வாய் சனி இவர்கள் மூன்று பேருடைய இருதுவை அடைவிலே பரிவர்த்தனம் செய்து கொள்க.

உத்தராயன காலத்தில் தெட்சணாயனத்தினுடைய ருதுவாகில் பரிவர்த்தனம் செய்து கொண்டு இருதுவை அறிக. அஃதாவது, உத்தராயனத்தில் வருஷருது வருகில், வசந்த ருதுவிற் சென்னம் என்று சொல்லுக. சசிருதுவாகில் ஹேமந்த ருதுவிற் சென்னம் என்று சொல்லுக.

பிரச்சின காலத் திரேக்காணத்தை இரண்டு கூறிட்டுத், திரேக்காண பாகம் முதற்பாதி உதிக்கில் இந்த ருதுவில் முந்தின மாதத்தில் இவனுடைய சென்னம் என்று சொல்லுக. பின்பாதி உதிக்கில் அந்த ருதுவில் இரண்டாம் மாதம் சென்னம் என்று சொல்லுக.

அந்த மாதத்தில் எத்தனை தியதி சென்றதென்று அறிய வேண்டில் திரிராசிகம் செய்துகொண்டு அறிந்து சொல்லுக (எ-று). 3

பரிவர்த்தனம் — மாறிச் சொல்லுவது.

திரிராசிகம் — பிரித்துச் சொல்லுவது.

குறிப்பு :— " அயனம் ருதுவிற்குப் பொருந்தாமல் மாறி வருங்கால் திங்கள் புதன் வியாழன் என்னும் இவர்கள் சுக்கிரன் செவ்வாய் சனி இவர்களைக் கொண்டு முறையே மாற்றிக்கொள்ளத்தக்கவராம், திரேக்காணப் பகுதியில் முன்பாகம் விளங்கின இலக்கினத்தில் உதயமானால் இருதுவின் முதல் மாதமென்னும், இரண்டாவது பாகம் உதயமானால் இருதுவின் இரண்டாவது மாதமென்னும் அறியத்தக்கது, திரைராசிகம் செய்யும் முறையைக் கொண்டு திதியும் பிரித்தறியத் தகுந்தது " என்பது வடமொழி வராக வோரை.

மாசியும் பங்குனியும் சிசிர ருது, சித்திரையும் வைகாசியும் வசந்தருது, ஆனியும் ஆடியும் கிரீஷ்மருது, ஆவணியும் புரட்டாசியும் வருஷருது, ஐப்பசியும் கார்த்திகையும் சரருது, மார்கழியும் தையும் ஹேமந்தருது என்று அறிக.



உதய இலக்கினம் 1800 கலைகளைக் கொண்டதாகும். அதை மூன்றுப் (திரேக்காணம்) பிரிக்க ஒரு பகுதிக்கு 600 கலைகளாகும். அதனை இரண்டாய்ப் பிரிக்க ஒரு பகுதிக்கு 300 கலைகளாகும். இம் முந்நூறு கலைகள் மாதமாகையால் ஒரு மாதத்திற்குள்ள தேதியால் இதனைப் பிரித்துத் தியதி அறிக.

இப் பாட்டு சாந்திரமானப்படி திதியை அறிந்து கொள்ளும் முறையையும் இரவு பகல் அறியும் முறையையும் பிறப்பு நாழிகையை அறியும் முறையையும் கூறுகிறது.

359. கதிர்செலும் பாகை மட்டே
கருதிய தியதி தானும்
உதயோரை பகற்கூ றந்தி
இராக்கூறே பகலென் றோதும்
அதினுறு முதய பாகை
அளவுஞ்செல் கடிகை யென்றுர்
மதிகொள்சோ திடநூல் தன்னில்
மகபதி யனைய நீரார்.

(எ-து) பிரச்சின காலத்தில் ஆதித்தன் எத்தனை தியதி சென்றதென் றறிந்தால், அம் மாசத்தில் அத்தனை தியதி சென்ற விடத்து இவனுடைய சென்னம் என்று சொல்லுக.

பிரச்சின இராசி திவாபல இராசியாகில் இராத்திரிப் பிறந்தவன் என்று சொல்லுக. நிசாபல இராசியாகிற் பகற் பிறந்தவன் என்று சொல்லுக.

பிரச்சின இலக்கினத்தில் எத்தனை பாகை சென்றது இராவென்கிலும், பகலென்கிலும் அத்தனை நாழிகை செல்லும்போது சென்னம் என்று சொல்லுவர் ஓரா சாத்திரத்தில் வல்ல இந்திரன்மார்.

'இந்திரன் மார்' என்றது 'சிரேட்டன் மார்' என்றதாம் (எ-று). 4

RangaRakes tamilnavarasam.com

குறிப்பு —: "திதியை அறியும் இவ் விடயத்தில் ஓரா சாத்திர வல்லவரான முனிசிரேட்டர் திதியைச் சூரியன் இலக்கினத்திற் சென்றிருக்கும் அமிசத்திற்கு ஒப்பானதாகச் சொல்லுகின்றனர். பிரச்சின காலத்தில் இராத்திரி சமிக்ஞமாயும் திவா சமிக்ஞமாயும் உள்ள இராசிகள் உதயமாகுமானால் உதயமான இராசிக்கு மாறுபட்ட காலத்தில் பிறவியைச் சொல்ல வேண்டும். பிரச்சின காலத்திற் சென்ற பாகங்களைக் கொண்டு சென்ன காலங்கள் அறியத்தக்கன" என்பது வடமொழி வராகவோரையின் பொருளாகும்.

ஒருவன் நட்டசாதகங் கருதி வினவின காலத்திலே, சூரிய புடம் செய்து வைத்துக் கொண்டு, அந்த இராசியில் சூரியன் எவ்வளவு பாகைகள் சென்றிருப்பதாக ஏற்படுமோ அவ்வளவு திதிகள் பூர்வபக்கப் பிரதமை முதல் சென்றிருப்பதாக அறிந்து கொள்க. சூரியன் ஒரு இராசியில் இருபத்தைந்து பாகை சென்றிருப்பதாகவரின் சாதகனுக்குப் பூருவ பக்கத்தில் பதினைந்து திதிகளும் அமரபக்கத்தில் பத்து திதிகளும் சென்று விட்டதாகக் கருதிக்கொள்க. இது சாத்திர மானப்படி திதி அறியும் முறையாகும். சாதகன் தை மாதத்தில் பிறந்திருப்பின் சாத்திரமான முறைப்படி (பூருவபக்கம் பதினைந்து திதிக்கு மேற்பட்டு விட்டதால்) மாசி மாதமாகக் கொள்ள வேண்டும்.

மேடம், இடபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் என்னும் இவ்வாறு இராசிகளும் பகலிராசிகள். மற்றவை இரவிராசிகளாம்.

பிறந்த கால நாழிகை அறிவதற்கு 'அதினுறும் உதய பாகை அளவும் செல்கடிகை என்றார்" (359) என்று பாட்டு கூறுகின்றது. அதற்கு "பிரச்சின இலக்கினத்தில் எத்தனை பாகை சென்றது, இராவெனினும் பகலெனினும் அத்தனை நாழிகை செல்லும்போது சென்னம்" என்று உரை கூறப்பட்டுள்ளது. ஆனால் மங்களேஸ்வரீயம் "பிரச்சின காலத்திற் சூரியன் சென்ற கலைகளைத் தெரிந்து கொண்டு (சூரியன் நிற்கும் இராசியிற் சென்ற கலைகள்) இராத்திரி பிறப்பென்று வந்தால் பகலகசுப் பிரமாணத்தால் சூரியன் சென்ற கலைகளைப் பெருக்கி இராத்திரிக்குள்ள நாழிகையால் வகுத்துக் கொடுக்க வந்த ஈவு இரவு சென்ன நாழிகையாம். பகல் பிறப்பென்று தெரிந்தால் இராத்திரிப் பிரமாண நாழிகையால் சூரியன் சென்ற கலைகளைப்



பெருக்கிய தொகையைப் பகல் அகசு நாழிகையால் வகுக்க வந்த ஈவு பகல் சென்ன நாழிகையாம்" (26-21, 22, 23) என்று கூறுகிறது.

360. திங்களின் நவாங்கி சத்தை
ஒன்பது கூறு செய்து
தங்கிய நாளின் மாதம்
சாந்திர மாத மாகும்
இங்கெழுந் திரிகோ ணத்தின்
வலியோரை யிந்தி ரேரை
அங்கமாம் பரிசு மேரர்ந்தாங்(கு)
அவைமதி யிருக்க மென்றே.

(எ—து) சந்திரன் நின்ற நவாங்கிசத்தை ஒன்பது கூறு செய்து, அதிலே கண்ட நட்சத்திரத்தைக் கொண்டு சாந்திர மாதத்தைக் கற்பிக்கவும்.

இலக்கினத் திரிகோணத்திற் பலங்கண்டு சந்திரன் நின்ற இராசி சொல்லுக. இலக்கினத் திரிகோணமாவது இலக்கினம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம்; இவையிற்றிற் பலமுள்ள இராசியிற் சந்திரன் நிற்கும்போது சென்னம் என்று சொல்லுக.

அன்றியும், இவன் (பிரச்சினங் கேட்டவன்) யாதொரு பாகத்தில் அங்கத்தைத் தொட்டால் அந்த அங்கத்துக்குச் "சிரம் முகம் உரச்சு" (4) என்ற கற்பனைகொண்டு, அந்த அங்கத்தில் எந்த இராசி வந்தது, அந்த இராசியில் சந்திரன் செல்லுகின்ற நாள் சென்னம் என்று சொல்லுக (எ-று). 5

குறிப்பு :—இப் பாட்டில் முதலிற் கூறிய செய்தியின் விளக்கத்தை மங்களேஸ்வரீயம் 26 ஆம் படலத்தில் ஐந்தாம் சுலோக மொழி பெயர்ப்பாயுள்ள பல் செய்யுளை நோக்கி அறிக.

இப் பாட்டு சந்திரன் நின்ற இராசியை அறியும் வேறு முறையைக் கூறுகின்றது.



RangaRakes tamilnavarasam.com

361. வந்துறும் உதயந் தொட்டு
மதிநின்ற பம்மீ றெண்ணி
இந்துதொட் டந்த மட்டும்
எண்ணிய நாளாஞ் சென்மம்
உந்துமீ னத்தின் மீனம்
உதிக்குமேல் அவையித் தோரை
செந்துபக் கணஞ்சு ரூபம்
தொனியவை திங்க ளோரை.

(எ-து) இலக்கினத்துக்கு எத்தனையா மிராசியில் சந்திரன் நிற்கிறான் என்றறிந்து அத் தொகையைக் கண்டு, பின்பு சந்திரன் தொட்டு அத் தொகை யளவும் எண்ணி அத்தனையா மிராசியில் சந்திரன் நின்ற நாள் சென்னம் என்று சொல்லுக.

மீன இலக்கினமாக மீனம் உதயமாகில், மீன இராசியிற் சந்திரன் நிற்கும் நாள் சென்னம் என்று சொல்லுக,

பிரச்சின காலத்தில் யாதொரு பட்சணத் திரவியங் கொண்டு வந்து கண்டான், அது யாதொரு செந்துவுக்குப் பட்சணத்துக்காம் அந்த சென்ம ரூபமாயுள்ள இராசியில் சந்திரன் செல்லும் போது சென்னம் என்று சொல்லுக.

பிரச்சின காலத்தில் யாதொரு இராசியினுடைய சுரூபம் (ஸ்வரூபம்) போலே காணப்பட்டது. அந்த இராசியில் சந்திரன் செல்லும் போது சென்னம் என்று சொல்லுக.

பிரசசின காலத்தில் யாதொரு செந்துவினுடைய சத்தங் கேட்கப்பட்டது, அந்தச் சென்ம ரூபமாயுள்ள இராசியில் சந்திரன் செல்லுகின்ற நாள் சென்னம் என்று சொல்லுக. 6

இப் பாட்டு நட்டசாதகம் விருசிகமாகு பிறந்த இலக்கினத்தை அறியும் முறையைக் கூறுகின்றது,



362. நண்ணிய வுதய மாதி
நவாங்கிசத் தளவும் எண்ணி
எண்ணுக நவாங்கி சாதி
அவ்வள வெழுச்சி யோரை
கண்ணெழுந் திரேக்கா ணாதி
கதிர்திரேக் காணி றெண்ணிப்
பண்ணிய வுதய மாதி
அவ்வள வெழுச்சி பம்மாம்.

(எ-து) பிரச்சின இலக்கினம் முதலாக எத்தனை நவாங்கிசம் உதித்தது என்று எண்ணித், தொகை கண்டு, பின்பு அந்த நவாங்கிச இராசி முதலாக அத் தொகையளவும் எண்ணிச் சென்றது எத்தனை, அத்தனையா மிராசி இலக்கினம் என்று சொல்லுக.

இலக்கினத் திரேக்காண முதல் எத்தனையாந் திரேக்காணத்தில் ஆதித்தன் நிற்கிறான் என்று கண்டு, அந்தத் திரேக்காணத்தளவும் எண்ணித் தொகை கண்டு, பின்பு இலக்கினம் முதலாய் அத் தொகையளவும் எண்ணி அந்த இராசியில் (அந்த இராசி) இலக்கினம் என்று சொல்லுக (எ-று). 7

குறிப்பு :— மங்களேஸ்வரீயம் இப் பாட்டிலுள்ள முதற் செய்தியை வேறுபடக் கூறுகிறது. " பிரச்சின காலத்தில் எந்த இராசி சம்பந்தமான நவாங்கிசம் உதிக்குமோ அந்த இராசியே சென்ம இலக்கினம் என்று அறியவும் " (26 - 34 ஆம் பாட்டின் உரை).

திரேக்காணங்களை எண்ணும் போது பன்னிரண்டிற்கு மேல்வரின் 12 ஆல் வகுத்து மீதியைக் கொள்க.

RangaRakes tamilnavarasam.com

363. உதயத்தி னுறுங்கோ ளன்றி
வலியுளோன் புடத்தி னடி
அதைச்சாயாங் குலத்திற் றுக்கி
அரியீரா றுதயஞ் சேடம்
வதிவுற்றும் கிடந்தும் நின்றும்
மண்ணினில் எழுந்தும் கேட்கில்
பதிசுகம் உதயங் கன்மம்
பகர்ந்திடு முதய வோரை.

(எ-து) பிரச்சின காலத்தில் தற்கால உதய இலக்கினத்தில் நின்ற கிரகத்தைச் சுத்தமாய் வருத்தியதை (சுத்தமாய் ஸ்புடம் செய்ததை) இலி (கலை) யாக்கி இறக்கி, அடியளந்து விரலாக்கி அதைக் கொண்டு பெருக்கிப் பன்னிரண்டில் அரித்த சேடம் எத்தனை என்று கண்டு, அத்தனையளவும் மேடாதி எண்ணினால் எந்த இராசி வந்தது, அந்த இராசி இலக்கினம் என்று சொல்லுக.

இலக்கினத்திற் கிரகம் இல்லை யாகில், அக் காலத்தில் எல்லா வற்றிலும் பலமுள்ள கிரகம் எதுவென்று அறிந்து, அந்தக் கிரகத்தைச் சுத்தமாய் வருத்தி இலி யாக்கி, அடியளந்து அதை அங்குலமாக்கி, அது கொண்டு பெருக்கிப் பன்னிரண்டில் அரித்த சேடம் மேடாதி எண்ணி, அந்த இராசி இலக்கின மென்று சொல்லுக.

பிரச்சின காலத்தில் யாவனொருவன் இருந்து வினவினால், பிரச்சின இராசியினுடைய ஏழாம் இராசி இலக்கினம் என்று சொல்லுக. கிடந்து கொண்டு வினவினால் பிரச்சின இராசியினுடைய நான்காமிராசி இலக்கினமென்று சொல்லுக. நின்றுகொண்டு வினவினால் பிரச்சின இராசிக்குப் பத்தாமிராசி இலக்கின மென்று சொல்லுக. எழுந்திருக்கிற சமயங் கொண்டு வினவினால் பிரச்சின இராசியே இலக்கின மென்று சொல்லுக (எ-று).

8



குறிப்பு :— வினாவின இலக்கினத்தில் ஒரு கோளே இருப்பின் அக் கோளின் புடத்திலுள்ள பாகை கலைகளை யெல்லாம் கலைகளாக ஆக்கி வைத்துக்கொண்டு பல கோள்களிருப்பின் வலிவுள்ள கோளின் புடத்திலுள்ள பாகை கலைகளையெல்லாம் கலைகளாக ஆக்கி வைத்துக் கொண்டு, அதனைச் சாயாங்குலத்தாற் பெருக்கி, பெருக்கிய தொகையைப் பன்னிரண்டால் வகுத்து வந்த மிகுதியை மேடாதி எண்ணினால் எந்த இராசி வருமோ அது இலக்கினமாகும் என்று அறிக.

சாயாங்குலம் என்பதை ' அடியளந்து விரலாக்கி ' என்று இந் நூல் உரை கூறுகின்றது.

மங்களேஸ்வரீயம் " சமமான பூமியில் துவாத சாங்குல சங்கையில் தெரிய வந்த தற்கால சாயாங்குல எண்ணிக்கையால் " என்று கூறுகிறது. ஸ்ரீ நடேச சாஸ்திரிகள் " பன்னிரண்டு அங்குலம் (விரல்) அளவுள்ள ஒரு துரும்பை எடுத்து அத் துரும்பைச் சலமுள்ள இடத்திற்குச் சமீபத்தில் போட்டு ஒரு பாகத்தை மடித்து உயரத் தூக்கி, மேல் தூக்கிய பாகத்தின் நிழல் கீழிருக்கும் பாகத்திற்கு நேராக வருவதைக் கண்டு நேராக நிறுத்திய பாகத்தை அளந்து இவ்வளவு அங்குலமிருக்கிறதென்று கண்டு கொள்ள வேண்டும். இதுவே சாயாங்குலம் என்பர்.

இப் பாட்டு நட்ட சாதகம் கண்டு பிடிப்பதில்
வேறு முறையைக் கூறுகிறது.

364. அரிவிடை தசம்தேள் யாழெட்
டாடுகோல் ஏழ்மான் கன்னி
தருமைந்தின் பெருக்க மற்றைச்
சங்கையாம் குணகா ரங்கள்
இரணியன் பத்துச் சேயெட்
டேழ்புகர் மற்றோர்க் கைந்தாம்
வருமெட்சிக் கிரக வோரை
வழக்கித்த சமுகங் கூட்டே.

(எ-து) சிங்கம் இடபம் பத்திற் பெருக்கவும் ; விருச்சிகம் மிதுனம் எட்டிற் பெருக்கவும் ; மேடம் துலாம்

RangaRakes tamilnavarasam.com

ஏழிற் பெருக்கவும் ; மகரங் கன்னி ஐந்திற் பெருக்கவும் ; மற்றுள்ள இராசிகட்கு மேடமுதல் எத்தனையா மிராசி என்றறிந்து அத்தச் சங்கைகள் (எண்கள்) குணகாரம் என்றறிவது.

வியாழத்திற்குப் பத்து குணகாரம் ; செவ்வாய்க்கு எட்டு குணகாரம் ; சுக்கிரனுக்கு ஏழு குணகாரம் ; (ஏனைய) சூரியன், சந்திரன், புதன், சவுரனுக்கு ஐந்து குணகாரம் என்றறிவது.

அது (மேற் கூறியது) வருமாறு :— சிங்கந்தான், இடபந்தான் இலக்கின மாகில் (பிரச்சின இலக்கின மாகில்) அதை இறக்கி இலி (கலே) யாக்கிப் பத்திற் பெருக்கி வேறே வைக்கவும். மிதுனந்தான் விருச்சிகந் தான் பிரச்சின இலக்கினமாகில் அதை இறக்கி இலி யாக்கி எட்டாற் பெருக்கி வேறே வைக்கவும். மேடந் தான் துலாந்தான் பிரச்சின இலக்கினமாகில் அதை இறக்கி இலியாக்கி ஏழிற் பெருக்கி வேறே வைக்கவும், மகரந்தான், கன்னிதான் பிரச்சின இலக்கினமாகில் அதை இறக்கி இலியாக்கி ஐந்திற் பெருக்கி வேறே வைக்கவும். கர்க்கடகம் பிரச்சின இலக்கினமாகில் அதை இறக்கி இலியாக்கி நான்கிற் பெருக்கி வேறே வைக்க வும். தனுசு பிரச்சின இலக்கினமாகில் அதை இறக்கி இலியாக்கி ஒன்பதிற் பெருக்கி வேறே வைக்கவும். கும்பம் பிரச்சின இலக்கினமாகில் பதினொன்றிற் பெருக்கி வேறே வைக்கவும். மீனம் பிரச்சின இலக்கினமாகில் அதை இறக்கி இலியாக்கிப் பன்னிரண்டிற் பெருக்கி வேறே வைக்கவும்.

பிரச்சின இலக்கினத்தில் வியாழன் நிற்கில் அதை இறக்கி இலியாக்கிப் பத்திற் பெருக்கி (வேறே வைக்க வும்). இலக்கினத்திற் சுக்கிரன் நிற்கில் அதை இறக்கி இலியாக்கி ஏழிற் பெருக்கி வேறே வைக்கவும். புதன்



நிற்கில் ஐந்திற் பெருக்கி வேறே வைக்கவும். ஆதித்தன், சந்திரன், சனி இவர்கள் பிரச்சின இலக்கி னத்தில் நிற்கிலும் இலியாக்கி ஐந்திற் பெருக்கி வேறே வைக்கவும். இது கிரக குணகாரம்.

இராசி குணகாரத்தை வேறே வைக்கவும்.

பிரச்சின இராசியில் கிரக முண்டாகில் கிரக குண காரம் செய்து அதை வேறே வைக்கவும். பிரச்சின இராசியில் கிரகங்கள் பலர் உண்டானால் அவரவருக்குச் சொல்லிய குணகாரச் சங்கை கொண்டு பெருக்கி (அவற்றை) யெல்லாம் வேறே வைத்துக்கொண்டு பின்பு (அவற்றை) யெல்லாம் ஒன்றாகக் கூட்டி ஒரு இடத்தில் வைக்கவும். ஈ(ஈது) குணசமூகம் என்று பெயராம் (எ-று). 9

குறிப்பு :— இராசி குணகாரம், கிரக குணகாரங்களைக் கீழ் வரும் சாதகாலங்காரப் பாடல்களாலும் அறிக.

" இடபம் சிங்கம் ஈரைந்தாம்
இயல்மே டங்கோல் ஓரேழாம்
கடகம் ஓர் நான் காம்மீனம்
கருதும் ஈரா றேயாகும்
மடஞ்சேர் கன்னி சுறவைந்தாம்
மன்னுந் தனுவொன் பானாகும்
குடம்பன் னொன்று மிதுனந்தேள்
எட்டா மிராசி குணகாரம் " (1109).

" நற்ற வக்குரு பத்துடசேய்
உற்ற வெட்டுநற் சுக்கிரன்
முற்ற வேழுமொ ரைந்துமே
மற்றை யோர்குண காரகம் " (1110) என்பன அப் பாடல்களாகும். இப் பாடல்களிலும் தமிழ் வராக வோரையிலும் ' குணகாரம் ' ' குணகாரகம் ' என்று இது கூறப்படுகிறது. மங்களேஸ்வரீயம் ' குணகரித்தல் ' ' குணகரங்கள் ' என்று இதனைக் கூறுகின்றது மற்றொரு பாட்டில் " இராசி கிரக குணகலையை தன்றாய் ஏழில் தாக்கிட " என்று (26-13) அந் நூல் கூறுகிறது'

RangaRakes
tamilnavarasam.com

இதுவும் அது

365. பகர்சமு கத்தை நாலு
படிவைத்துப் பத்தில் எட்டில்
தகையுறும் ஏழில் அஞ்சில்
தாக்கிய உதய வோரை
நகையுறு சராதி யாய்ந்து
நவங்கூட்டி யன்ற வாட்டிப் ?
புகலும்ஆ ரகங்கட் கீந்தாற்
பொருந்தும்ஆண் டாதி யாமே.

(எ–து) முன்பு சொன்ன குணசமுகத்தை நான்கு படியாக வைத்து, முந்தின படியைப் பத்திற் பெருக்கவும், இரண்டாம் படியை எட்டிற் பெருக்கவும், மூன்றும் படியை ஏழிற் பெருக்கவும், நான்காம் படியை ஐந்திற் பெருக்கவும். இப்படிப் பெருக்கிப் பின்பு சர இராசி இலக்கினமாகில் ஒன்பது கூட்டவும்; உபய இராசி இலக்கினமாகில் ஒன்பதைக் கழிக்கவும்; திரவிராசி இலக்கினமாகில் கூட்டவும் வேண்டாம்; கழிக்கவும் வேண்டாம்.

இப்படிக் கிரிகை செய்து வைத்திருக்கிறதைத் தங்கள் தங்களுக்குச் சொல்லிய ஆரகத்துக்கு அரித்து நின்ற சேடங்கள் (சேடங்களைக்கொண்டு) வருடமும், இருதுவும், மாத முன்பின்னும், திதியும் பூர்வபட்சமும், அமரபட்சமும், அசுபதி முதல் நட்சத்திரங்களும், பகலும், இராத்திரியும், நாழிகையும், இலக்கினமும், ஓரையும், திரேக்காணமும், திரிங்கிசாங்கிசமும், நவாங்கிசமும், துவாதசாங்கிசமும் சொல்லுக (எ-து). 10

குறிப்பு :— வருடமும், இருதுவும், மாதமும் அறிதலை இந் நூல் 366 ஆம் பாட்டாலும், பட்சமும் திதியும் அறிதலை 371 ஆம் பாட்டாலும், நட்சத்திரங்களும் பகல் இரவும் அறிதலை 368 ஆம் பாட்டாலும், நாழிகை இலக்கினம் முதலியவற்றை அறிதலை 366 ஆம் பாட்டாலும் அறிக.



வேறு கருத்து :— வினாவின இலக்கினத்திலுள்ள பாகைகளைக் கலைகளாக்கிக் கலைகளுடன் கூட்டிக் கண்ட எண்ணினை வினாவின இலக்கினம் அதிலுள்ள கோள்கள் இவற்றிற்குரிய குணகாரசம் என்னும் எண்ணாற் பெருக்கி ஒன்றாய்க் கூட்டிக் குணசமுகத் தொகையை மறுபடியும் ஏழாற் பெருக்கிக்கொண்டு, பிரச்சின காலத்தில் முதல் திரேக்காணம் உதயமானால் முன் பெருக்கி வந்த தொகையுடன் ஒன்பதைக் கூட்டிக் கொள்ள வேண்டும்; இரண்டாம் திரேக்காணம் உதயமானால் முன் பெருக்கி வந்த தொகையிலிருந்து ஒன்பதைக் கழித்துவிட வேண்டும்; மூன்றாந் திரேக்காணமானால் ஒன்பதைக் கூட்டவோ கழிக்கவோ வேண்டியதில்லை என்றும் கூறுகின்றனர்.

இன்னும் வினாவின இலக்கினம் சரமானால் ஒன்பதைக் கூட்ட வேண்டும்; திரமானால் ஒன்பதைக் கழிக்கவேண்டும்; உபயமானால் ஒன்பதைக் கூட்டவோ கழிக்கவோ வேண்டுவதில்லை என்றும் கூறப்படுகிறது இது இந் நூல் உரையுடன் மாறுபடுகிறது. ஆனால் மங்களேஸ்வரீயம்,

" ராசி கிரக குணகலையை
நன்றாய் ஏழில் தாக்கிட
பேசு தொகையைச் சரமதற்குப்
பெருகு மொன்பான் சேர்த்திடு
வீசு வுபயம் தன்னுவொன்பான்
மேலுந் திரம தாகிடில்
நேசமாகக் கழித்தல்கூட்டல்
நெறியி தற்கே யில்லையே " என்று (25-43)

கூறுவது இந் நூல் உரைக்கருத்துடன் ஒத்துள்ளது.

இப் பாட்டு குணசமுகத்தைக் கொண்டு யாண்டு இருது மாதம் அறிதலைக் கூறுகிறது

366. பத்தினிற் பெருக்கி முன்னர்க்
கிரிகைசெய் படியைப் பின்னர்
வைத்ததோர் அறுபாற் கீந்து
வந்திடும் சேடம் யாண்டாம்
எய்த்திடா தாறுக் கீந்த
சிசிராதி இருது வாகும்
ஒத்ததோர் இரண்டுக் கீந்த
மாதமாம் முன்பின் னேதே.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) குண சமுகத்தைப் பத்திற் பெருக்கிக் கிரிகை செய்து வைத்திருக்கிற படியை (365) வேறே யொரு படிவைத்துக்கொண்டு அறுபதில் அரித்த சேடம் இவனுடைய வருடம் என்று சொல்லுக.

பின்னையும் (அதனை) வைத்து, ஆறில் அரித்த சேடம் சிசிராதி இருதுக்களாம்.

பின்னும் அதைத்தானே இரண்டில் அரித்து வந்த சேடம் ஒன்ருகில் முந்தின மாதமென்றும், இரண்டாகில் பிந்தின மாதமென்றும் சொல்லுக (எ-று). 11

இதுவும் அது

367. எட்டினிற் பெருக்கிக் கூறுங்
கிரிகைசெய் படியி ரண்டில்
முட்டுற ஈந்த சேடம்
முற்பக்கம் பிற்பக் கங்கள்
திட்டமு வைந்துக் கீந்த
சேடமே திதியாம் என்பர்
மட்டறுந் தவத்தி னோர்கள்
மாநிலத் தோர்கட் கென்றே.

(எ-து) குண சமூகங்களை எட்டிற் பெருக்கிக் கிரிகை செய்து வைத்திருக்கின்றதை (365) இரண்டில் அரித்த சேடம் ஒன்ருகில் பூருவ பட்சத்திற் செனன மென்றும், இரண்டாகில் அமரபட்சத்திற் செனன மென்றும் சொல்லுக.

பின்பு அதைத்தானே வைத்துக்கொண்டு பதினைந்தில் அரித்த சேடம் எத்தனை யென்று அறிந்து அப்பட்சத்தில் அத்தனையாம் பக்கம் (திதி) இவனுடைய செனனம் என்று சொல்லுக (எ-று). 12

குறிப்பு :— பதினைந்தால் வகுத்த சேடத்தைப் பிரதமை முதலாக எண்ணித் திதி அறிக.



இதுவும் அது

368. ஏழினிற் பெருக்கி முன்னம்
இயம்பிய கிரிகை செய்து
வாழ்வுறு படியை வைத்து
மன்னிய விரண்டுக் கீந்தால்
ஊழுறு பகலி ராவாம்
உவந்ததை யிருபத் தேழாற்
சூழுற அரித்த சேடம்
துரகமுன் விரித்துச் சொல்லே.

(எ-து) குணசமுகத்தை ஏழிற் பெருக்கிக் கிரிகை செய்து வைத்திருக்கிற படியை (365) வேறே வைத்துக் கொண்டு இரண்டில் அரித்த சேடம் ஒன்ருகில் பகற் பிறந்தவனென்றும், இரண்டாகில் இராத்திரி பிறந்தவனென்றும் சொல்லுக.

பின்பு அதை வைத்துக்கொண்டு இருபத்தேழில் அரித்த சேடம் எத்தனை யென்று அறிந்து அசுவதிமுதல் எண்ணிவந்த நாள் சென்ம நட்சத்திரமென்று சொல்லுக

" விரித்துச் சொல்லுக " என்றதனுல், பிரச்சின இராசியுடனே முந்தின திரேக்காண முதிக்கில் ஒன்பது கூட்டிக்கொள்ளவும். அந்தியத் திரேக்காண முதிக்கில் ஒன்பது கழிக்கவும். மத்திமத் திரேக்காண முதிக்கில் இரண்டும் வேண்டாம்.

இப்படி உதய இலக்கினம் அவனுடையது. (வினா வினா காலத்தே உதித்த இலக்கினத்திற்குக் கொள்வது வினாவினாவனுடையதாம் என்று கருத்து)

களத்திரம், சகோதரம், புத்திரன், சத்துரு இவர்களுடைய நாள் அறியவேண்டில், வினாவினாவனுடைய உதய இலக்கினத்தே ஆறு இராசி கூட்டி முன்னே

RangaRakes tamilnavarasam.com

சொன்னாற் போல வருத்தினால் களத்திரத்தினுடைய நட்சத்திரம் வரும். வினவினவனுடைய இலக்கினத்தில் இரண்டு இராசி கூட்டி, அந்தப் பிரகாரம் வருத்தினால் சகோதரத்தினுடைய நட்சத்திரம் வரும். இலக்கினத்தில் நான்கு இராசி கூட்டி அந்தப்படியே வருத்தினால் புத்திரனுடைய நட்சத்திரம் வரும். இலக்கினத்தில் ஐந்து இராசி கூட்டி அந்தப்படியே வருத்தினால் சத்துருவினுடைய நட்சத்திரம் வரும் (எ-று). 13

குறிப்பு :—துரகம்—அசுவதி நாள்.

இதுவும் அது

369. சமுகத்தை ஐந்திற் றுக்கிக்
கிரிகைசெய் படியைச் சாரும்
கமையுறு முப்பான் றன்னால்
கழிசேடம் நாழி யாகும்
தமிற்பனி ரெண்டுக் கீந்த
இலக்கின சட்டு வர்க்கம்
இமைவுற வாங்க தற்கே
இயம்புறுந் தொகைக்கீந் தோதே.

(எ-து) சமுகத்தை (குணசமுகத்தை) ஐந்திற் பெருக்கி முன் (365) கிரிகை செய்து வைத்திருக்கிறதை வேறே வைத்துக்கொண்டு, முப்பதுக் கீந்த சேடம் இத்தனையென்று கண்டு, இரவென்கிலும் பகலென்கிலும் அத்தனையாம் நாழிகையில் செனனம் என்று சொல்லுக.

அதைத்தானே வேறே வைத்துப் பன்னிரண்டில் அரித்து, சேடம் (சேடத்தை) மேடாதியாக எண்ணிக் கண்ட இராசி இலக்கினம்.

அதைத்தானே இரண்டில் அரித்த சேடம் ஓரை.

அதைத்தானே மூன்றில் அரித்து வந்த சேடம் திரேக்காணம்.



அதைத்தானே ஒன்பதுக் கீந்துவந்தது நவாங்கிசம்.

அதைத்தானே பன்னிரண்டுக் கீந்து வந்தது துவாதசாங்கிசம்.

அதைந்தானே ஐந்தில் அரித்து வந்தது திரிங்கிசாங்கிசம்.

நட்டசாதக சிந்தனை இந்தப்படி அறிக (எ-று). 14

இப் பாட்டு வினவினவனுடைய சன்ம நாளை
அறிவதற்கு வேறொரு வழியினைக் கூறுகிறது.

370. இயம்புறு சமற்கா ரத்தின்
நாமத்தை யிரட்டி செய்து
வியன்பெறும் அருக்கன் சாயை
கூட்டியே விரல தாக்கிச்
செயம்பெறும் இருபத் தேழுக்
கீந்துறு சேடந் தன்னை
நயம்பெறு மவிட்ட மாதி
நாளென வுரைக்க லாமே.

(எ-து) சமற்கார (சமஸ்கார) சகிதமாயிருக்கிற நாமத்தை இரட்டித்து, அடியளந்து, அந்த அடியளவு கூட்டி, விரலாக்கி, இருபத்தேழில் அரித்துக் கண்ட சேடம் எத்தனை யென்று கண்டு, அத்தனைக்கு அவிட்டம் முதல் எண்ணி வந்த நாள் இவனுடைய சென்ம நட்சத்திரம் என்று சொல்லுக (எ-று). 15

குறிப்பு :—"பெயர்வைத்தல் என்னும் சமஸ்காரத்தையொட்டி இட்ட பெயரிலுள்ள மாத்திரைகளை இரண்டினாற் பெருக்கிக்கொண்டு அதனுடன், நட்டசாதகம் வினவின காலத்திலுள்ள உடல் நிழலின் அங்குலங்களையும் கூட்டி அத் தொகையை இருபத்தேழால் வகுக்க மீதமாக வருவது யாதுண்டோ அதனை அவிட்டம் முதலாக வைத்து எண்ணிக்கொண்டால் வினவின

வனுடைய சென்ம நட்சத்திரம் வரும்" என்பது வடமொழி வராக வோரை.

மங்களேஸ்வரீயம் "தாய் தந்தையரால் வைக்கப்பெற்ற பிறப்புக்காலப் பெயரினை வரிசையாக எழுதி அதிலுள்ள மெய்யெழுத்திற்கு அரை மாத்திரையும், உயிரெழுத்திற்கும் உயிர்மெய்யெழுத்திற்கும் ஒரு மாத்திரையுமாக எண்ணி அவற்றை ஒன்று கூட்டி இரட்டித்துச் சாயாங்குல சங்கினிடமாக எத்தனை அங்குலம் கூடியிருக்குமோ அந்தத் தொகையையும் சேர்த்து மொத்தமாக்கி 27 ஆல் வகுத்த சேடத்தை அவிட்ட மாதியாக எண்ண வரும் நட்சத்திரம் சென்ம நட்சத்திரமாம்" (26-58) என்று கூறுகிறது.

தமிழ் வராக வோரை "அருக்கன் சாயை" என்று கூறுகின்றது. வட மொழி வராக வோரை "சாயாங்குலம்" என்று கூறுகிறது. அது கொள்ளுமாறு, பதினாறு அங்குலம் அளவுள்ள ஓர் துரும்பை எடுத்து நிலத்திற் கிடத்தி மடித்து உயரத் தூக்கினால், அதன் நிழல் கீழே படிந்துள்ள துரும்பின் முனைக்கு நேராக வரும்படி செய்து கொண்டு நீட்டிக் கிடத்தது போக நின்ற துரும்பின் விரலளவு, காலையானால் சென்ற நாழிகை யென்றும், மாலையானால் கிடந்த பாகம் பதினைந்து நாழிகைக்கு மேல் சென்ற நாழிகை யென்றும் அறிந்துகொள்ள வேண்டும். எனவே காலை, மாலைகளில் சென்ற நாழிகையின் அளவைக் காட்டும் துரும்பின் அங்குலத்தின் எண்ணையும், மாத்திரையின் எண்ணையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் சிலர் கருத்தாகும்.

இப் பாட்டு வினவினவனுடைய சன்ம நட்சத்திரத்தை
அறிவதற்கு மற்றுமோர் வழி கூறுகின்றது

371. பரிவுறும் இரண்டு மூன்று
பன்னான்கீ ரைந்து பன்னைந்
திருபதி னொன்று மொன்ப
தெட்டிந்தி ராதி கண்டு
ஒருபதி னைந்தி னேற்றி
உயர்திக்கின் முகனுஞ் சேர்த்(து)
இருபதி னேழால் நீக்கி
இருந்தபுள் ளாதி நாளாம்,



(எ-து) இரண்டு, மூன்று, பதினான்கு, பத்து, பதினைந்து, இருபத்தொன்று, ஒன்பது, எட்டு என்னும் இவை இந்திரன் முதலான, அஃதாவது கிழக்கு முதல் எட்டுத் திசைக்குத் துருவமாம். இவைகளைப் பதினைந்திற் பெருக்கி அத் திக்கு நோக்கி யிருந்த சனங்கள் முகமும் கூட்டி, இருபத்தேழில் அரித்த சேடம் அவிட்டம் முதலாக எண்ணி வந்தது இவனுடைய நாளென்று சொல்லுக.

யாவனொருவன் கிழக்கு நோக்கி வினவில் இரண்டைப் பதினைந்தாற் பெருக்கி, அத் திக்கு நோக்கி எத்தனை சனங்கள் உண்டு (உண்டாய்) நிற்கிறது என்றறிந்து, அந்தச் சங்கையும் அதிற் கூட்டி இருபத்தேழில் அரித்த சேடத்தை அவிட்டம் முதலாக எண்ணி வந்தது இவனுடைய நாளென்று சொல்லுக.

கேட்கிறவன் அக்கினிகோணம் நோக்கி வினவினால் மூன்று கொண்டு பதினைந்திற் பெருக்கி, அத் திக்கு நோக்கி எத்தனைச் சனம் உண்டு நிற்கிறது என்றறிந்து, அச் சங்கையும் அதிற் கூட்டி, இருபத்தேழில் அரித்த சேடத்தை அவிட்டம்முதலாக எண்ணிவந்தது இவனுடைய நாள்.

தெற்கு நோக்கி வினவினால், பதினான்கு வைத்துப் பதினைந்திற் பெருக்கி, அந்தத் திக்கு நோக்கி எத்தனை சனம் உண்டு நிற்கிறது என்றறிந்து அந்தச் சங்கையளவையும் அதிற் கூட்டி இருபத்தேழில் அரித்த சேடத்தை அவிட்டம் முதலாக எண்ணிக் கண்ட நாள் இவனுடைய சென்ம நாள் என்று சொல்லுக.

வந்து கேட்டவன் நிருதிகோணம் நோக்கி வினவினால் பத்தினை வைத்துப் பதினைந்திற் பெருக்கி அந்தத் திக்கு நோக்கி எத்தனை சனம் நிற்கிறார்கள் என்றறிந்து அந்தச் சங்கை யளவையுங் கூட்டி, இருபத்தேழில் அரித்த

RangaRakes tamilnavarasam.com

சேடம் அவிட்டம் முதலாக எண்ணிக் கண்ட நாள் இவனுடைய சென்ம நாள் என்று சொல்லுக.

மேற்கு நோக்கி வினவினால் பதினைந்து கொண்டு பதினைந்திற் பெருக்கி, அந்தத் திசையை நோக்கி யிருந்த சனங்கள் சங்கையையுங் கூட்டி இருபத்தேழில் அரித்த சேடம் அவிட்டம் முதலாய் எண்ணிக் கண்டது (இவனுடைய) சென்ம நட்சத்திரம்.

வாயு கோணம் நோக்கி வினவினால் இருபத் தொன்றினைப் பதினைந்தாற் பெருக்கி, அந்தத் திக்கு நோக்கி யிருக்கின்ற சன சங்கையையும் கூட்டி, இருபத் தேழில் அரித்த சேடத்தை அவிட்டம் முதலாக எண்ணி வந்தது (இவனுடைய) சென்ம நட்சத்திரம்.

வடக்கு நோக்கி வினவினால் ஒன்பதைப் பதினைந்திற் பெருக்கி, அந்தத் திக்கு நோக்கியிருந்த சன சங்கையையுங் கூட்டி, இருபத்தேழில் அரித்த சேடத்தை அவிட்டம் முதலாய் எண்ணி வந்தது இவனுடைய சென்ம நட்சத்திரம்.

ஈசான கோணம் நோக்கி வினவினால், எட்டினைப் பதினைந்திற் பெருக்கி, அந்தத் திக்குநோக்கி யிருந்த சன சங்கையையுங் கூட்டி, இருபத்தேழில் அரித்த சேடத்தை அவிட்டம் முதலாய் எண்ணி வந்தது இவனுடைய சென்ம நட்சத்திரம் என்று சொல்லுக. (எ-று). 16

குறிப்பு :—பிரச்சினம் செய்பவன் பார்த்து நின்ற திசையைப் பார்த்துக் கொண்டு சமீபத்தில் இருப்பவரின் எண்ணிக்கையையே கூட்ட வேண்டும்.



இப் பாட்டு இந் நட்டசாதக அத்தியாயத்திற்குப் புறனடை கூறுகின்றது.

372\. நட்டசா தகபல் பேதம்
நாடில்மா னுக்கள் றன்னுல்
மட்டுறு திசையாற் சொல்லால்
வதனத்தால் நாள்க டோறும்
திட்டமா யினிதிற் றேர்ந்து
செகந்தனி லுறையு மாந்தர்க்(கு)
இட்டமா யுரைக்க வென்றே
இயம்பினர் கணித நூலோர்.

(எ-து) நட்ட சாதகம் பல பிரகாரமாய்ச் சொல்லப் பட்டது. தன்னுடைய சீட காலத்திக்கினாலும், சொல்லி னாலும், முகத்தினாலும் நாடோறும் ஆராய்ந்து பரீட்சித் துக்கொண்டு சொல்லுக என்று, பூமியிலுள்ள மனித ருக்கு அறியத்தக்கதாகச் சோதிட சாத்திரம் வல்ல முனி வர்கள் அருளிச் செய்தார்கள் (எ-று). 17

குறிப்பு :—"இவ் விதம் இந்த நட்ட சாதகமானது என்னால் அநேகம் பிரகார முள்ளதாக உபதேசிக்கப்பட்டது. இம் முறையைக் கொண்டு எவ்விதம் நட்டசாதகமானது சரியாக வருமோ, அவ் விதம் கூர்மையான புத்தியுள்ள சீடர்களால் முயற்சி யுடன் பரிசோதித்து அது கிரகித்துக் கொள்ளத் தக்கது" என்பது வட மொழி வராக வோரை.

இருபத்துநான்காவது
நட்ட சாதக பல அத்தியாயம்
முற்றும்.



RangaRakes tamilnavarasam.com

## இருபத்தைந்தாவது.

## திரேக்காண அத்தியாய சுரூபம்

குறிப்பு :— (வடமொழி வராக வோரை 'திரேஷ்காணுத்தியாயம்' என்று கூறுகிறது. மங்களேஸ்வரீயம் 'திரேக்காணப் படலம்' என்று கூறுகிறது).

### மேடத்தின் முதற்றிரேக்காண சொரூபம்

373. வெண்ணிறத் துகின்ம ருங்கின்
வீக்கினேன் கறுத்த மெய்யன்
மண்ணினில் வலியர் போலும்
வரும்பயங் கோப முள்ளோன்
என்னுறு பரசங் கையின்
ஏந்தியே இரத்தம் மானுங்
கண்ணினை யுடையுன் மேட
முதற்றிரேக் காண மென்றே.

(எ-து) வெள்ளை வத்திரம்அரையிற் சுற்றப்பட்டவன்; கறுத்தவன்; இரட்சிக்க வலியுடையவன்; பயமுடையவன்; கோபத்தோடும் கையில் வெண்மழுவும் எடுத்துக்கொண்டு சிவந்த கண்ணை உடையவனும் இருக்கும் ஒரு புருடன் மேடத்தில் முதற்றிரேக்காணம் (எ-று). 1

குறிப்பு :—"பாவுதிரேக் காணமது இலக்கினத்தை மூன்றும்ப் பகுத்திடு" (241) என்னும் சாதகாலங்காரப்படி ஒரு இராசியை மூன்று கூறிட்டது திரேக்காணமாகும். அது பன்னிரண்டு இராசிக்கும் கொள்ள முப்பத்தாறு திரேக்காணமாகும். இத் திரேக்காணத்தின் பயன் யாதென்னில்? இதனால் பலவகைப் பயன் உண்டென்று அறிக. அதனைச் சோதிட நூல்களை நோக்கி ஆங்காங்கே அறியலாம். இது செவ்வாய்க்கு உரியதான ஆயுதத்துடன் கூடிய புருடத் திரேக்காணமாகும்.



"உயரத் தூக்கப்பட்ட கோடரியை உடையவன்" என்பது (வட-வராக). மங்களேஸ்வரீயம் "பல ஆயுதங்களைத் தரித்தவன்" என்று கூறும். இவற்றிற்குக் கூறப்படும் பலன்களைச் சாராவளி ஹோராசாரம் முதலியவற்றை நோக்கி உணர்க.

### மேடத்தின் இரண்டாந் திரேக்காண சொரூபம்.

374. அரத்தவம் பரங்க டன்னில்
அணியினிற் சுரையிற் சித்தம்
பொருத்திடுங் கும்ப தேகி
புரவியின் வதனந் தாகிப்
பரித்திடும் பதமே கத்திற்
படர்ந்திடுந் தெரிவை யாகி
விரித்திடு மேடந் தன்னில்
நடுத்திரேக் காண மேவும்.

(எ-து) சிவந்த புடவையை உடுத்து, பூடணங்களிலும், மதுவிலும் மனத்தினோடும், குடம் போன்ற சரீரமுடையவள். குதிரை முகத்தோடும், தண்ணீர்த் தாகத்தினோடும், ஒரு காலோடும் இருக்கப்பட்ட பெண்ணொருத்தி மேடத்தில் நடுத் திரேக்காணம் (எ-று). 2

குறிப்பு :—இது சூரியனுடன் கூடிய பெண்வடிவான நாற்கால் திரேக்காணம் என்று மங்களேஸ்வரீயம் கூறுகிறது. ஆனால், இதனை யவனர்கள் ஒருகால் (ஏக பாதம்) திரேக்காணமென்றே கூறுவர். இவள் குடம்போன்ற வயிறுள்ளவளென்றும் (வட-வராக) குடத்தைத் தாங்கிக் கொண்டிருப்பாள் (மங்க-27-2) என்றும் கூறுவர். இதற்குப் பட்சி முகத் திரேக்காணமென்றும் பெயருண்டு.

### மேடத்தின் மூன்றாந் திரேக்காண சொரூபம்.

375. காணருங் குரூரன் மிக்க
கலைவலன் கபிலக் கேழன்
வேணுருங் கிரிகை நாடும்
விரதத்தி னிலையி லாதோன்

RangaRakes
tamilnavarasam.com

நீண்டுந் தண்டு கையில்
எடுத்துயர்ந் திடுஞ்செந் நீவி
ஆணுரு வுடையன் மேடம்
அந்தத்தின் திரேக்கா ணன்னே.

(எ-து) குருசனுய்க், கலைகளில் வல்லவனுய்க், கபில நிறம் உடையவனுய்க், கிரிகையில் மனதுடையவனுய், விரதத்தில் நிலையில்லாதவனுய்த், தடியெடுத் துயர்த்திய கையை உடையவனுய்ச், சிவந்த வத்திரம் உடுத்தவனுய் ஒரு புருடன் மேட அந்தியத் திரேக்காணம் (எ-று). 3

குறிப்பு :—மேட இராசியின் மூன்றுத் திரேக்காணம் குருவுக்குரிய ஆயுத மேந்திய புருடத் திரேக்காண மாகும். (மங்களே)

கபில நிறம்—சிவப்பு வெண்மை இரண்டுங் கலந்த நிறம். தங்க நிறம் என்றும் கூறுவர் (மங்களே). கிரிகை—தொழில் செய்தல்.

இடபத்தின் முதல் திரேக்காணம்.

376. கோடிய குறளின் கேசம்
குடத்தினை யனைய தேகம்
பாடுறத் தீயின் வெந்த
பட்டினள் பட்ச ணத்தில்
பீடுறு தாகத் தோடும்
பேரணி கலன்க டம்மை
நாடுமோர் நாரி சேவின்
முதற்றிரேக் காணம் நண்ணும்.

(எ-து) வளைந்து குறுகிய கூந்தலோடும், குடம் போன்ற தேகத்தோடும், தீப்பட்ட பட்டையோடும், போசனத்திற் பெருத்த தாகத்தோடும், ஆபரணங்களில் இச்சையா யிருக்கும் ஒரு புருடப்பெண் இடப முதற் றிரேக்காணம் (எ-று). 4



குறிப்பு :—இது சுக்கிரனுக் குரிய பெண் திரேக்காண மாகும். இதனை அக்கினித் திரேக்காண மென்றும் கூறுவர். (மங்களே) சுருட்டையாகவும் அறுக்கப்பட்டதாகவும் உள்ள மயிர் குடம் போன்ற வயிறு ஓரிடத்தில் பொசுக்கப்பட்ட ஆடை என்று கூறுவர் (வட-வரா).

இடபத்தின் நடுத் திரேக்காண சொரூபம்.

377. மண்ணினிற் குனி யத்தில்
மனைபசுக் கலைய பேட்சன்
பண்ணிலாங் கலைச கட்டில்
வலன்பயிர் பசிய துள்ளோன்
எண்ணுறுந் தகர்மு கத்தன்
இடபமெய்ந் துள்ள கண்டன்
நண்ணுறும் புருடன் சேவின்
நடுந்திரேக் காண நண்ணும்.

(எ-று) பூமி தானியம் கிரகம் பசு வித்தை இவைகளிற் பிரிய முடையன்; கலப்பை, சகடு இவைகளி லுள்ள கிரிகையில் வல்லவன்; பயிருடையன்; பசியுடையன் ஆட்டின் முகம்போலே முகமுடையன்; இடபம் போலே கழுத்துடையன் ஒரு புருடன் இடபத்தில் நடுத் திரேக் காணம் (எ-று). 5

குறிப்பு :—இடபத்தின் இரண்டாந் திரேக்காணம் வயல் நெல் வீடு பசு இவைகளைப் பரிட்சிக்கும் முறையையோ அல்லது இவை பற்றிய தொழில் செய்யும் முறையையோ உடையன்; கீதம் வாத்தியம் ஓவியம் எழுதுதல் முதலிய கலைகளை அறிந்தவன்; வண்டியுடன் கூடிய கலப்பையில் சமர்த்தன்; அழுக்கடைந்த ஆடையை யுடையவன்" என்றும் கூறுவர் (வட வரா). இந்தத் திரேக்காணத்திற்குப் புதன் தலைவனென்றும் இதனைப் புருட சதுஷ்பாத (நாற்கால்) திரேக்காண மென்றும் கூறுவர். (மங்களே). கலப்பையை உணர்த்தும் ஹலம் என்னும் சொல் கலை என்று திரிந்தது அன்றி 'பண்ணிலா கலம்' என்று பாடங் கொள்ளினும் நன்று. 'செய்யவண்டி கப்ப லோட்டத் திறன்' என்று கூறும் (மங்களே).

RangaRakes tamilnavarasam.com

### இடபத்தின் இறுதித் திரேக்காணத்தின் சொரூபம்

378. நவையில்குஞ் சரம்போற் காயம்
சுவேதமாம் நகையி னோடும்
அவைசர பத்தைப் போலும்
அங்குலி குரால் நிறத்தில்
தவறிலாத் தகரின் பங்கி
வியாகுலஞ் சேர்ந்த சிந்தை
கவையுறு மிடபந் தன்னிற்
கடைத்திரேக் காண மென்றே.

(எ-து) யானை போலே தூல தேகமும், வெளுத்த பல்லும், எட்டிப் பட்சி (சரபப் பட்சி) போலே பெருத்த காலும், குரால் நிறமும், குறியாட்டின் உரோமம் போலே இருக்கின்ற ரோமமும், பரவச புத்தியா யிருக்கும் ஓர் புருடன் இடபத்திற் கடைத் திரேக்காணம் (எ-று) 6

குறிப்பு :—“இடப இராசியின் மூன்றாந் திரேக்காணம் யானைக்கொப்பான உடம்பை யுடையவனும் வெண்மையான தந்திப் பல்லையுடையவனும், சரபம் என்ற விலங்கின் அடிக்கொப்பான அடியை யுடையவனும் பொன்னிற முடையவனும் செம்மறியாடு, மான் இவைகளின் மேல் விருப்பங் கொண்டு அங்கு மிங்கும் அலையும் மனத்தை யுடையவனும் ஆகிய புருடனும்” என்பது (வட-வராக). அங்குலி—பாதம்

இதற்குச் சனி அதிபன்; நாற்கால் ஆண் (சதுஷ்பத புருடத்) திரேக்காணம் என்னும் (மங்களே).

### மிதுனத்தின் முதற்றிரேக்காண சொரூபம்

379. நாரிநல் லெழிலின் மிக்காள்
நல்லணி யுடைய ளாகும்
ஒருறும் புதல்வ ரில்லி
உயர்தரு கரத்த ளாகும்
நேருறு மதியிற் பூத்தாள்
நிகழ்த்திய சூசிக் கன்மத்
தார்வமே யுடையாள் தண்டிற்
றிரேக்காண மாதிக் கென்பர்,



(எ-து) ஒரு பெண் சவுந்தரிய முடையவள், ஆபரணங்களுடையாளாகிப், புத்திரன் இல்லாதவளாய், உயர்த்திய கையை யுடையவளாய், மாதம் சென்று பூத்தவளாய், ஊசியினாலே தொழிலுடையவள் ஒரு பெண் மிதுனத்தில் ஆதித் திரேக்காணம் (எ-று). 7

குறிப்பு :—நகை செய்வதில் பற்றுள்ளவள், ருது தோஷம் உள்ளவள். அல்லது காமவிடாய் உள்ளவள், ஊசியால் செய்யக்கூடிய நெசவு முதலிய காரியத்தை விரும்புபவள் என்றும் கூறுவர்.

இது புதனுக்குச் சொந்தமான பெண் (ஸ்திரீ) திரேக்காண மாகும் என்பது (மங்களே).

### மிதுனத்தின் நடுத்திரேக்காண சொரூபம்

380. உத்தியா னத்தின் மிக்க
கவசம்வில் லுடையோன் சூரன்
அத்திரத் துவணன் போலும்
ஆனனம் உடைய னாகும்
லவத்திடும் கீரீடம் மைந்தர்
வருமலங் காரம் அர்த்தம்
சித்தம துடையன் தண்டின்
திரேக்காண நடுவிற் சேரும்.

(எ-து) உத்தியான மாகிய நந்தன வனத்திலிருந்து, மெய்ச் சட்டையு மிட்டு, வில்லு மெடுத்து, பராக்கிரமத்தோடுங் கூடி, அஸ்த்திரங்களையு மெடுத்துக் கருட முகனாய்க், கிரீடத்திலும், புத்திரனிடத்திலும், அலங்காரங்களிலும், அர்த்தங்களிலும் சிந்தித்துக் கொண்டிருப்பான் ஒரு புருடன் மிதுனத்தில் இரண்டாந் திரேக்காணம், கிரீடம் — உண்டாவது (எ-று). 8

குறிப்பு :— கிரீடம் விளையாட்டு என்பர். இதற்கு அதிபதி சுக்கிரன்; இது புருடபட்சித் திரேக்காணம் என்று கூறும் (மங்களே).

RangaRakes tamilnavarasam.com

### மிதுனத்தின் கடைத் திரேக்காண சொரூபம்

381. வருணன்போல் இரத்தி னத்தால்
வகுத்தபூ டணங்க ளோடும்
பொருபடைத் தூணி சட்டை
பூண்டுகை வில்லு மேந்தி
பரதநிர்த் தாதி தன்னிற்
பலகலை வித்தை வல்லோன்
கருதுமோர் புருடன் றண்டிற்
கடைத்திரேக் காண மென்றே.

(எ-து) வருணனைப் போலே இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட பூடணங்களும் அம்பராத் தூணியும் கவசமு மிட்டு, வில்லு மெடுத்து, நிருத்த வாத்திய கலைகள் வித்தைகள் என்று சொல்லப்பட்டதில் விரதத் தனாய் இருக்குமொரு புருடன் மிதுனத்தில் அந்தியத் திரேக்காணம் (எ-று). 9

குறிப்பு :— 'காவியத்தை இயற்றுபவனும்' என்றும் கூறுவர், 'நாற்கவி கயஞ் சொல்வானே' என்பது (மங்களே).

இதற்கு அதிபதி சனி; இது ஆயுதத்துடன் கூடிய புருடத் திரேக்காண மாகும் என்று கூறும் (மங்களே).

### கடகத்தின் முதற்றிரேக்காணம்

382. பத்திர மூலத் தோடும்
பலமிவை யேந்தித் தந்தி
ஒத்தகா யத்தி னுற்ற
வனபவங் கிரீயி னோடும்
வத்திரம் கேழல் போலும்
மாப்பரி போலுங் கண்டம்
அத்தபூ தரம்வாழ் காலகல்
அலவனிற் றிரேக்கா ணதி.



(எ-து) இலையும் காயும் (கனியும்) கிழங்கும் இவற்றை எடுத்து, யானை போலே சரீரமுமாய் எட்டிமான் (மாப்) போலே காலுமாய்ப், பன்றி போலே முகமும், குதிரையுடைய கழுத்துப்போலே கழுத்தும், வனத்திலும் மலையிலும் கிரீடித்தல் (விளையாடுதல்) செய்து இருக்கப்பட்டது ஒரு சதுட்பாதம் கர்க்கடகத்தில் ஆதித் திரேக்காணம் (எ-று). 10

குறிப்பு ;— வடமொழி வராக ஹோரையுள் 'மலயக :' என்று வரும்சொல்லை இந்நூல் உரையாசிரியர் 'மலையிலும்' என்று மொழி பெயர்த்தனர். ஆனால் அச் சொல்லிற்குச் 'சந்தனமரம்' என்று பொருள் கொண்டனர். மங்களேஸ்வரியம்

குறித்திடு முகமோ பன்றி
குதிரைபோல் பிடரி நீண்டு
கரியெனப் பருத்த தேகம்
காலது சரபம் போலும்
நறுமணச் சந்த னத்தின்
நல்வன மதிலே வாழ்ந்து
சருகிலை கனிகி ழங்கு
தானிவன் புசிப்பா னென்னே" என்று (27 – 10)

கூறுகிறது. இதற்கு அதிபதி திங்கள். இது நாற்கால் ஆண் திரேக்காணமாம்,

### கடகத்தின் நடுத் திரேக்காண சொரூபம்

383. பதுமபூ சனையி னோடும்
மூர்த்தியிற் பாந்தள் சுற்றி
வநிதர வன்பின் றேகம்
வனத்தினிற் பலாசங் கொம்பில்
தகமுறக் கிளர்ந்த மூங்கும்
காரிகை யொருத்தி நண்டிற்
றிதமுற நடுவி லிற்குந்
திரேக்காண மென்பர் தேர்ந்தோர்.



RangaRakes
tamilnavarasam.com

(எ-து) பத்மங்களைக்கொண்டு பூசிதமுடையவளாய் உடல் தலையிற் சர்ப்பங்களோடும் கூடிக் கட்டின சரீரம் கறுத்தவளாய்க் காட்டிலிருக்கிற பலாசின் கொம்பிலே (கிளர்ந்து) அழுதுகொண்டிருக்கும் ஒரு, கறுத்த பெண் கர்க்கடகத்தினுடைய இரண்டாந் திரேக்காணம் (எ-று). 11

குறிப்பு :-- "தலையில் தாமரை மலர்களால் பூசிக்கப்பட்டவளும், சர்ப்பங்களுடன் கூடியவளும், கடுமையாயிருப்பவளும் தனி இடத்தை அடைந்தவளும், புரசமரத்தின் கிளையை அடைந்தவளுமாகிய பெண்ணொருத்தி கதறிக்கொண்டிருப்பாள்" என்பது வடமொழி வராகவோரை. அத்திமர நிழலிலிருப்பாள் என்றும் கூறும். இதற்கு அதிபதி செவ்வாய் ; இது பெண் திரேக்காணமாகும் (மங்களே) இதனைச் சர்ப்பத் திரேக்காணமென்றும் கூறுவர்.

கடகத்தின் கடைத் திரேக்காணம்

384. தங்குறு மனைவி யாளுக்குத்
தனமணிக் குதநி தன்னில்
வங்கமாங் கதனி லேறி
மாசுணஞ் சுற்ற வேமஞ்
சிங்கவில் பூட ணத்திற்
செவிடுறு முகத்தி னேடும்
பொங்கிய கடகம் மூன்றுந்
திரேக்காணம் பொருந்து மன்றே.

(எ-து) பாரிக்குத் தனமும் ஆபரணமும் உண்டாக்க வேண்டிச், சமுத்திரத்தில் தோணிமேற் கரையேறப் போவானொரு புருடன் பாம்பு கொண்டு சுற்றிப் (பாம்பு சுற்றியிருக்க) பொன்மயமாயிருக்கிற ஆபரணங்களையும் அணிந்து செவிட்டு முகத்தினேடும் ஒரு புருடன் கர்க்கடகத்திற் கடைத் திரேக்காணமாகும் (எ-று). 12

குறிப்பு :— செவிடுறு முகம் என்பது சிவந்த முகம் என்ற பொருளுடையது போலும்.



மங்களேஸ்வரியும் "ஏற்றுமே பட்சி வாயன் இவன்றலை மயிர்கருண்டு" (27-12) என்று கூறுகிறது. இதற்குப் 'பட்சிகளைப் போல் சிவந்தவாய்' என்று உரை கூறப்பட்டுள்ளது. இதற்கு அதிபதி வியாழன், இது ஆண் திரேக்காணம், சர்ப்பத்திரேக்காணம் என்று கூறப்படும்.

சிங்க விராசியின் முதற்றிரேக்காண சொரூபம்

385. சன்மலி தருமேற் கங்கம்
சம்புவா னரம தாகி
இன்மையின் மாசி னுற்ற
அம்பரம் எடுத்து வீக்கி
நன்மைகொள் தந்தை தாயை
நண்ணுரு திரங்கு மாந்தன்
வன்மைகொள் சிங்க மாதி
வருந்திரேக் காண மாமே.

(எ-து) இலவ மரத்தின் மேலே கழுகும், நரியும், குரங்குமாக, அழுக்குப் புடைவையை உடுத்து, மாதா பிதாக்களைப் பிரிந்து அழுதுகொண்டிருக்கும் ஒரு புருடன் சிங்க முதற்றிரேக்காணம் (எ-று), 13

குறிப்பு :— சான்மலி என்பது இலவமரமாகும் ; அது சன்மலி எனக் குறுகி வந்தது. " இது முள்ளிலவ மரத்தின் மேற் பகுதியிலுள்ள கழுகு நரி நாய் போலவும் அழுக்கடைந்த ஆடையை உடுத்த மனிதன் போலிருந்து பெற்றோரைப் பிரிந்த பிள்ளைபோல் கதறிக்கொண்டிருக்கும் " என்பது வடமொழி வராக வோரை இதற்கு அதிபதி ஞாயிறு ; இது ஆண்மகன் வடிவிலுள்ள சதுஷ்பாத பட்சித்திரேக்காணம் என்பர்.

சிங்க விராசியின் நடுத் திரேக்காண சொரூபம்

386. பரியெனு முடலிற் பாண்டு
மாலிகை சேக ரத்தின்
அரியென வத்தந் தன்னிற்
கார்முக மதனைத் தாங்கிக்

RangaRakes tamilnavarasam.com

கிரியுறு வளைந்த நாசி
கிருட்டிணு சனத்தி னேடும்
கரியகம் பளத்தன் சிங்க
நடுத்திரேக் காணங் காணே.

(எ-து) குதிரை போலே சரீரமும் வெளுத்த மாலையினை முடியிற் சூடிச் சிங்கத்தைப் போலே அவயவமுடையவனுய்க், கையில் வில்லு மெடுத்து மலையில் நின்று, வளைந்த நாசியோடும் கிருட்டிணுசனமும் கம்பளமுந்தரித்து ஒரு புருடன் சிங்கத்தில் மத்திமத்திரேக்காணம் (எ-று). 14

குறிப்பு :— மங்களேஸ்வரீயம் ' அசுவம் ஏறுபவன் ' என்று கூறும். இதற்கு அதிபதி வியாழன் ; இது புருடத்திரேக்காணமென்றும், ஆயுதத் திரேக்காணமென்றும் கூறப்படும்.

சிங்க இராசியின் கடைசித் திரேக்காண சொரூபம்

387. பல்லமா வான னத்திற்
பகர்ந்தவா னரத்தின் சேட்டை
புல்லியே நீண்ட தாடி
பொருந்துற வளையுங் கேசம்
வல்லதற் றண்ட மேந்தும்
மனிதனுன் பலங்கைக் கொண்டு
செல்லுரு நிற்குஞ் சிங்கந்
திரேக்காணங் கடையிற் சேரும்.

(எ-து) கரடி முகனுய், வானரசேட்டை யுடையவனுய், நீண்ட தாடியுமாய், வளைந்த தலை முடியுமாய்த், தடியும் எந்தி, மாமிசமும் பழமும் கையிற்கொண்டு ஒரு புருடன் சிங்கத்திற் கடைத் திரேக்காணம் (எ-று) 15

குறிப்பு :— இதற்குத் தலைவன் செவ்வாய் ; இது புருடத் திரேக்காணமென்றும் நாற்கால் திரேக்காண மென்றும் ஆயுதத்திரேக்காண மென்றும் கூறப்படும். ' கரியைப்போலே முகம் ' என்றும் கூறுவர்.



கன்னி இராசியின் முதல் திரேக்காண சொரூபம்

387. பூநிறை குடத்தி னேடுங்
கரியபுட் டகம்போர்த் தங்கத்
தானையில் அத்தந் தன்னிற்
றனிவை கூட்ட வெண்ணி
மானம துடைய ளாகிக்
குருகுலம் வாஞ்சை செய்யும்
ஆனதோர் கன்னி கன்னித்
திரேக்காண மாதி யாமே.

(எ-து) பூவினுலே நிறைக்கப்பட்ட குடத்தினேடும் கருத்த வத்திரம் போர்த்த சரீரத்தோடும், புடவையும் திரவியமும் உண்டாவான் எண்ணி, அபிமானியாய்க் குருவினுடைய குலத்தை வாஞ்சை செய்யும் ஒரு கன்னிகை கன்னியில் ஆதித் திரேக்காணம் (எ-று). 16

குறிப்பு :— கரிய புட்டகம் — அழுக்கடைந்த ஆடை என்றும், குருகுலம் வாஞ்சை — தந்தையின் வீட்டை விரும்புகின்றவள் என்றும் கூறுவர். கிழிந்த ஆடையை அணிந்த பணிப்பெண் என்று கூறும் (மங்களே). இது புதனைத் தலைவனுக உடையது ; பெண் திரேக்காணமாகும்

கன்னி இராசியின் நடுத்திரேக்காண சொரூபம்.

389. எழுதெழுத் தாணி கையில்
எடுத்தனு சாம வன்னம்
வழுவில்வத் திரசி ரத்தன்
மன்னிய வியாய முள்ளோன்
கழிவிலா வுரோம தேகன்
கார்முகம் பரிக்கும் மாந்தன்
அழிவிலாக் கன்னி தன்னில்
நடுத்திரேக் காண மாமே.

RangaRakes
tamilnavarasam.com

(எ-து) எழுதுகிற எழுத்தாணி கையில் எடுத்துச் சாம நிறமுமாய்ப், புடவை கொண்டு தலை மூடிச், சிலவும் (செலவும்) ஆதாயமும் உடையவனாய், உரோமங்கள் நிறையப்பட்ட சரீரமும் வில்லும் எடுத்து ஒரு புருடன் கன்னியில் இரண்டாந் திரேக்காணம் (எ-று).

குறிப்பு :— வியாயம் - வியமும் ஆயமும் ; வியம் — செலவு ; ஆயம்— வரவு இதன் தலைவன் சனி ; இது புருடத் திரேக்காண மென்றும் ஆயுதத் திரேக்காண மென்றும் கூறப்படும்.

கன்னி இராசியின் கடைசித் திரேக்காண சொரூபம்.

390. பாலுறு நிறத்தாள் தன்மேல்
பால்நிறப் படாகம் போர்த்துக்
கோலமே நெடிய ளாகிக்
கும்பமுங் கயிறுங் கொண்டு
சால்வுந் தூய ளாகிக்
தாரணி யதனிற் றேவர்
ஆலயஞ் செல்லுங் கன்னித்
திரேக்காணம் அந்த மென்றே.

(எ-து) வெள்ளை நிறமுடையவள் ; வெளுத்த புடவை போர்த்துக்கொண்டு நெடிய வடிவுடையவளாய்க், கும்பமுங் கயிறுங்கொண்டு, சுத்தம் உடையவளாய்த் தேவாலயத்துக்குப் போகின்ற ஒரு பெண் கன்னியில் மூன்றாந்திரேக்காணம் (எ-று). 18

குறிப்பு :— கும்பமும் கரண்டியும் கையில் உடையவள், மன அடக்கம் உடையவள் என்பர். "பலநிறத் தூய பட்டாடை அணிந்தவள் பொருத்தமான அணிகலை அணிந்தவள்" என்பர் (மங்களே) இதற்குத் தலைவன் வெள்ளி ; இது பெண் (ஸ்திரீ) திரேக்காணமாகும்.



துலா இராசியின் முதற்றிரேக்காண சொரூபம்

391. ஆவண நடுவின் ஆங்கோர்
பீடிகை யதிற்கோல் கொண்டு
வாவுற அளத்தல் தூக்கல்
வல்லனும் பகர்தல் கொள்ளல்
பாவிய மூல மாதி
பலவகை பகரு மாந்தன்
காவுறுந் துலாத்தில் ஆதித்
திரேக்காண மென்பர் காணே.

(எ-து) அங்காடியின் நடுவில் பீடிகையிலிருந்து துலாச்சும் எடுத்துக்கொண்டு, நிறுக்கிறதிலும் அளக்கிறதிலும் வல்லனாய் முறிவினை கையில் எடுத்துக்கொண்டு, இத் திரவியத்தைக் கொடுக்க வேண்டும் திரவியமே தென்றும் எத்தனை பணம் டென்று தென்றும் நிருபித்திருக்கும் ஒரு புருடன் துலாத்தில் முந்தின திரேக்காணம் (எ-று). 19

குறிப்பு :— "வீதியின் நடுவே உள்ள கடையில் இருப்பவனும் துலாக்கோலைக் கையில் தாங்கியவனும் நிறுப்பதிலும் அளப்பதிலும் வல்லவனும் நிறுக்கும் கல்லைக் கையில் உடையவனுமான ஒரு ஆடவன் பொருள்களையும் அவற்றின் விலையினையும் உள்ளத்தால் நினைத்துக் கொண்டிருப்பான்" என்று கூறுகிறது வடமொழி வராக ஹோரை. இதற்குத் தலைவன் வெள்ளி ; இது ஆடவ (புருட) திரேக்காணம்.

துலா இராசியின் நடுத் திரேக்காணம்.

392. எருவையின் முகத்தன் தாகம்
பசியுளோன் கலச மேந்தி
வருபவன் சீவ னத்தன்
மனைவியைப் புதல்வன் றன்னை
ஒருமையின் மனது தன்னில்
உன்னுமோர் புருட னாகித்
தெரிவைகேள் துலாத்தின் மிக்க
திரேக்காண நடுவி மென்றே

RangaRakes tamilnavarasam.com

(எ-து) கழுகுபோலே முகமும், தாகமும், பசியும் உடையவனாய்க் கையில் கலச மெடுத்துச் சீவிப்போனாய்ப் பாரியையும் புத்திரனையும் திருபித்துக்கொண்டு இருக்கு மொரு புருடன் துலாத்தில் இரண்டாந் திரேக்காணம் எ-று). 20

குறிப்பு:—இதற்குச் சனி தலைவன்; இது ஆடவ (புருட) திரேக்காணமும் பறவை (பட்சித்) திரேக்காணமு மாம். "பருந்து கழுகுபோலே முகமுள்ளவன்; பெண்மகவு பிறக்க ஆவலுள்ளவன்; பழுதுள்ள பாத்திரங்களை வைத்திருப்பவன்; புத்தியுள்ளவன்; தாகத்தைப் பொறுக்காதவன்" (மங்களே).

துலா விராசியின் கடைத் திரேக்காண சொரூபம்.

393\. அலங்குபைங் காஞ்ச னத்தின்
பரும ஆவங்கள் சேர்த்து
விலங்குறுங் கவிவே டத்தின்
வில்லெடுத் தம்பொன் காசு
நிலங்கொளும் வனத்தி லாங்கே
திகழுறு மிருகங் கட்கே
கலங்குறும் புருடன் கோலிற்
கடைத்திரேக் காண மாமே.

(எ-து) பொன்மயமா யிருக்கிற கவசத்தையும் ஆவ நாழிகையையும் தரித்து, வானர ரூபத்தோடும் வில் லெடுத்துப், பொன்னும் மணியும் நிறைந்திருக்கிற காட்டில், மிருகங்கட்குப் பயந்திருக்குமொரு புருடன் துலாத்தினில் மூன்றாந் திரேக்காணம். ஆவம்—அம்பறாத் தூணி கவி—வானரம். காசு—இரத்தினம் (எ-று). 21

குறிப்பு:—மேலே கூறியவையே யன்றி பழம் மாமிசம் இவற்றை உடையவனாய் விளங்கும் மனிதன் காட்டில் விலங்கு களைப் பயமுறுத்திக் கொண்டு இருக்கிறான் என்ற இந்தச் சொருப முள்ளதாக யவனரால் சொல்லப்பட்டுள்ளது" என்று கூறும் வடமொழி வராக ஹோரை.

இதற்குத் தலைவன் புதன். இது நாற்கால் திரேக் காணமென்று கூறப்படும், நாற்கால் ஆடவத் (புருடத்) திரேக் காணமு மாம்.



விருச்சிக இராசியின் முதற்றிரேக்காண சொரூபம்.

394\. அம்பரா பரண மில்லா
தடைந்துறு தானம் விட்டாள்
தம்பமில் பாம்பு சுற்றுந்
தாளினள் சவுந்த ரத்தள்
வம்புறும் அம்பு ராசி
தனில்நீந்தி வருந்தும் நாரி
செம்பத விருச்சி கத்தின்
முதற்றிரேக் காணம் சேரும்.

(எ-து) புடவைகளும் ஆபரணங்களும் இல்லாத வளாய்த் தானிருக்கும் நிலை விட்டவளாய்க் காலிலே பாம்புகொண்டு சுற்றவும் செய்து, சவுந்தர முடைய வளாய்ச் சமுத்திரத்தில் இறங்கிக் கரை யேறுவாள் தொடங்கின ஒரு ஸ்திரீ விருச்சிகத்தின் முந்தின திரேக் காணம் (எ-று). 22

குறிப்பு:—' கருங்கடலினின்றும் கரையைக் கருதி வந்து கொண்டிருக்கும் பெண், என்பது (வட-வராக). இதற்குத் தலைவன் செவ்வாய்; இது பெண் திரேக்காணம்; சர்ப்பத் திரேக் காணமு மாம்.

விருச்சிக இராசியின் இரண்டாந் திரேக்காண சொரூபம்.

395\. புயங்கமு டியதே கத்தாள்
கச்சபம் கும்பம் போல்வாள்
சயங்கொள்நா யகனை வேண்டிச்
சார்ந்துமத் தானந் தன்னில்
வயங்கிய சுகங்க டன்னை
விரும்புமோர் வனிதை யாகி
நயங்கொளும் விருச்சி கத்தின்
நடுத்திரேக் காண நண்ணும்.



RangaRakes tamilnavarasam.com

(எ-து) பாம்புகொண்டு மூடிய தேகத்தாளும், ஆமை போலேயும் குடம் போலேயு மிருக்கிற தேகத் தோடுங் கூடிப் பத்தாவை வேண்டியிருக்கிற தானத்திலே சுகங்களை வேண்டுமொரு ஸ்திரீ விருச்சிகத்தில் இரண்டாந் திரேக்காணம் (எ-று). 23

குறிப்பு :— " கணவனுக்கே, பண்ணுவாள் தான மாதிப் பலவித சுகங்கள் செய்து, கண்ணைப் பாது காப்பாள் கணவனைக் கருத்தி னோடும் " (27-23) என்பது மங்களேஸ்வரீயம். இதற்குத் தலைவன் வியாழனாவான். இது பெண் திரேக்காணம் ; சர்ப்பத் திரேக்காணமுமாகும்.

விருச்சிக இராசியின் கடைசித் திரேக்காண சொரூபம்

396. நீண்டராப் படமே கூர்மம்
நிகருறு வதனத் தோடு
தூண்டகு சூரன் நவ்வி
சூகரம் இகலன் அஞ்சக்
காண்டகு மலைவ னத்திற்
காத்துறுஞ் சிங்கம் போலாந்
தீண்டிடு தேளின் மூன்றுந்
திரேக்காண மென்று செப்பே.

(எ-து) நீண்ட சர்ப்பப் படத்தோடும் ஆமையோடு சமமா யிருக்கிற முகத்தோடுங் கூடி, நாய்களையும் மான்களையும் பன்றிகளையும் குறுக்க னரிகளையும் பயம் உண்டாக்குகிறவனாய் மலையிலும் வனத்திலும் காத்துக் கொண்டு சிங்கம் போலே யிருக்கிற ஒரு தேகம் விருச்சிகத்தினுடைய மூன்றாந்திரேக்காணம் (எ-று). 24

குறிப்பு :-இகலன்-ஓரி என்னும் நரி. ' பெரிதான கள்ளம் சந்தனமரம் அடர்ந்த பிரதேசத்தைக் காப்பவன் ' என்றும் கூறுவர். இதற்குத் தலைவன் திங்கள். இது நாற் கால் திரேக்காணம்.



வில்லின் முதற்றிரேக்காண சொரூபம்.

397. மனிதரா னனமு மிக்க
வாசியின் உடலு மாகி
இனிதுடன் மூரி வில்லும்
ஏந்தியாச் சிரமஞ் சார்ந்து
நனியுறு கிறுது தன்னை
நற்றவ முடையார் தன்னை
கனியுற வோம்பும் வில்லின்
முதற்றிரேக் காண மென்றே.

(எ-து) மனிதர் முகம்போலே முகமும், கழுத்துக் குங்கீழ் குதிரை போலே சரீரமுமாய்ப் பெரிய வில்லும் எடுத்து ஆசிரம முடையவனாய் யாக சாதனங்களையும் இருடிகளையும் பாதுகாத்து இரட்சிக்குமொரு மனிதன் வில்லின் முதற்றிரேக்காணமாம் (எ-று). 25

குறிப்பு :—இதற்குத் தலைவன் வியாழன் ; இது நாற் கால் (சதுஷ் பாத) புருடத் திரேக்காணம் ' வனத்தில் இயங்கு பவன், இதமான குணமுடையவன் ; யூக முள்ளவன், வல்லமையும் தைரியமும் உள்ளவன் ; அம்பும் வில்லும் ஆயுதங் களைத் தரிப்பவன் ' என்று கூறும் (27-25) மங்களேஸ்வரீயம். இது ஆயுதத் திரேக்காணமு மாம்.

வில்லின் நடுத்திரேக்காண சொரூபம்

398. புனிதமாஞ் சண்பக கம்போற்
பூரிபோல் வடிவ முள்ளாள்
தனியுறும் வனப்பை யுள்ளாள்
தன்னுடை யாச னத்தாள்
வனமுறு புணரி தன்னில்
மணியெடுத் தியக்கு மோர்பெண்
தனுவினில் நடுவே தானத்
திரேக்காணஞ் சாரு மென்றே.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) மனோகரமாய்ச் செண்பகப் பூப்போலேயும், பொன் போலேயும் இருக்கிற தேகத்தை உடையளாய்ச் சுந்தர முடையளாய்ப் பத்திராசனத்தி லிருக்கிறவளாய்ச் சமுத்திரத்தில் இரத்தினங்களை எடுத்து இயக்கா நிற்கும் ஒரு பெண் தனுவில் இரண்டாந் திரேக்காணம். (எ-று). 26

குறிப்பு :--" மனோரமா சம்பக ஹேமவர்ணே " என்பது வடமொழி வராக ஹோரை. ' மனோரமா ' என்பதைச் சம்பகத்துடன் கூட்டாமல், திரேக்காணத்துடன் கூட்டுக இதற்கு மனத்தைக் கவரக் கூடியவள் என்று பொருள் காண்பர். " சமுத்திரத்திலுள்ள இரத்தினங்களைத் தரித்தவள் " என்றும் கூறுவர். இதற்குத் தலைவன் செவ்வாய் ;- இது பெண் திரேக்காணமாம்.

வில்லின் கடைத்திரேக்காண சொரூபம்

399. வடிதரு தாடி யுள்ளோன்
மாடைசெண் பகம்போற் றேகன்
தடியொடு சோப முள்ளோன்
வரத்தினா சனத்திற் சார்ந்தோன்
புடவைகோ சிகத்தி னோடு
பொருந்திய தோலு மேந்தித்
திடமுறு புருடன் வில்லிற்
றிரேக்காணங் கடையிற் சேரும்.

(எ-து) நீண்ட தாடியன் ; பொன்போலேயும், செண்பகப் பூப்போலேயு மிருக்கிற சரீரத்தோடும் தடியும் எடுத்துச் சோபத்தோடும் சிரேட்டமா யிருக்கிற ஆசனத்திலிருந்து, பட்டுப் புடவைகளும் தோலும் எடுக்கும் ஒரு புருடன் தனுவில் மூன்றாந் திரேக்காணம். (எ-று). 27

குறிப்பு :- " பேர்தரு பட்டினுடை பிரபல சரும வத்திரம் " என்றும், " சிங்க வாசனத்தின் மீது " என்றும் கூறும் (மங்களே.)



இதற்குத் தலைவன் சூரியன் ; இது ஆடவத் (புருடத்) திரேக்காண மென்றும், ஆயுதத் திரேக்காண மென்றும் கூறப் படும்

மகர இராசியின் முதற்றிரேக்காண சொரூபம்

400. மன்னிய மயிரின் றேகம்
மகரத்தின் பல்போற் றந்தம்
கன்னிகு கரம்போற் காயம்
நுகம்வலை கயிறு மேந்திப்
புன்மையும் அஞ்சு கின்ற
வதனமும் புருட னாகும்
முன்னுறு மகரந் தன்னின்
முதற்றிரேக் காண மென்றே.

(எ-து) உரோமங்களினாலே நிறைந்திருக்கப்பட்ட தேகத்தோடுங் கூடி, மகரமீன் பற்போல் பல்லும், பன்றி போல் சரீரமுமாய், நுகமும் வலைக்கயிறும் எடுத்துப் பயங்கரமாயிருக்கிற முகத்தொடுங் கூடியிருக்கும் ஒரு புருடன் மகரத்தின் முந்தின திரேக்காணம் (எ-று). 28

குறிப்பு :—" மாடுகட்டும் தும்பு, வலை, விலங்கு இவைகளை ஏந்தி " என்றும் கூறுவர்.

இதற்குத் தலைவன் சனியாகும். இதனை ஆடவத் (புருடத்) திரேக்காண மென்றும், வலைக்கயிறு, மாடுகட்டும் தும்பு இவைகளை ஏந்தியதால் நிகட, நிகள, பாசத் திரேக்காணம் என்றும் கூறுவர்.

மகர இராசியின் நடுத்திரேக்காண சொரூபம்.

401. சகலமாங் கலையு ணர்ந்தாள்
தாமரை மலர்போற் கண்கால்
மிகுநிறஞ் சாம மாகி
விசித்திர வியாபா ரத்தாள்

வகைகொள்பூ டணங்கள் பூண்டு
வன்செவி யிருப்பு போலாய்
நிகழுமோ ரரிவை மானில்
நடுத்திரேக் காணம் கிற்கும்.

(எ-து) சகல கலையும் உணர்ந்தவளாய்த் தாமரைப் பூப் போலொத்த கண், கால் உடையவளாய்ச், சாம நிறத்தை உடையவளாய், விசித்திர வியாபாரத்தை உடையவளாய்ப், பூடணங்கள் பூண்டவளாய், இரும்பு போலொத்த செவி யுடையவளா யிருக்கும் மகரத்தின் நடுத் திரேக்காணம் (எ-று). 29

குறிப்பு :—விசித்திரமான பொருள்களைத் தேடுகின்றவள் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட இரும்புபோன்ற காதுகளையுடையவள் என்பர் (வட-வரா). இதற்குத் தலைவன் வெள்ளி ; இது பெண் (ஸ்திரீ) திரேக்காணமாம்.

மகர இராசியின் கடைத் திரேக்காண சொரூபம்.

402. கின்னரம் போலுந் தேகன்
கிளர்த்துகம் பளத்தை யுள்ளோன்
மின்னுறு கவசந் தூணி
வீக்கியே வில்லு மேந்தித்
துன்னுறு மணியாற் சூட்டுங்
குடங்கழுத் தினிற்சு மந்து
மன்னுறு மகரம் மூன்றாந்
திரேக்காண மாகு மன்றே.

(எ-து) கின்னரனைப் போலே சரீரமுடையவனாய்க் கம்பளம் உடையவனாய், மெய்ச் சட்டையுந் தொட்டு அம்பறாத் தூணியுங் கட்டி, வில்லு மெடுத்து, இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட குடத்தையும் கழுத்திலே சுமந்து இருக்கும் ஒரு புருடன் மகரத்தில்மூன்றாந் திரேக்காணம் (எ-று). 30



குறிப்பு : இதற்குத் தலைவன் புதனாவான் : இதனை ஆடவத் (புருடத்) திரேக்காண மென்றும், ஆயுதத் திரேக்காண மென்றும் கூறுவர்.

கும்ப இராசியில் முதற்றிரேக்காண சொரூபம்.

403 எண்ணெய்கள் சலிலம் மூரல்
இறைச்சியில் வியாகு லங்கள்
கண்ணிய கம்ப ளத்தன்
நனைந்திடுங் கோசி கத்தன்
கண்ணுறுஞ் சருமத் தோடும்
கழுகுறும் வதன னாகும்
மண்ணினிற் குடத்தில் ஆதித்
திரேக்காண வடிவ மென்னே.

(எ-து) எண்ணெய் முதலானவற்றிலும், மத்தியத்திலும் (கள்ளிலும்), தண்ணீரிலும், அசனத்திலும், மாங்கிசத்திலும் பரவசமா யிருக்கின்ற மன சோடுங் கூடி, நனைந்த புடவையு மெடுத்துத், தோலுமெடுத்துக் கழுகுபோலே முகமுமா யிருக்கும் ஒரு புருடன் கும்பத்தின் முந்தின திரேக்காணம் (எ-று). 31

குறிப்பு :—பட்டாடை உடையதாகவும், மான் தோலுடன் கூடியதாகவும் என்றும் உரைப்பர். இதற்குத் தலைவன் சனியாகும். இது ஆடவத் திரேக்காண மாகும். சலிலம்-தண்ணீர். மூரல்—சோறு. கோசிகம்—ஒருவகைப் பட்டாடை. 'கழுகுறும் வதனம்' என்றதால் பறவைத் திரேக்காணமு மாம்.

கும்ப இராசியின் நடுத்திரேக்காண சொரூபம்.

404. மாசுறு படங்க வித்து
வருஞ்சசி யாதி யான
தேசுகொள் சிரத்திற் றாங்கி
வெந்தசன் மலியிற் சேர்ந்து
ஓசலில் சகட்டின் மீதே
உலோகங்க ளொடுத்தே யெய்தும்
நாசமி லரிவை கும்பம்
நடுத்திரேக் காண கண்ணும்.

RangaRakes tamilnavarasam.com

(எ-து) கறுத்த (அழுக்கேறிய) புடவை கொண்டு மூடித், தலையில் சசியாதிகளும் எடுத்துக்கொண்டு, சற்றிடம் வெந்திருக்கிற இலவ மரத்தினாற் சேர்த்த சகட்டிலே உலோகத் திரவியங்களும் எடுத்துக்கொண்டு வரும் ஒரு பெண் கும்பத்தில் நடுத்திரேக்காணம் (எ-று). 32

குறிப்பு :— "கும்பத்தின் இரண்டாவது திரேக்காணமானது அழுக்கடைந்த ஆடையினால் சுற்றப்பட்டவளும், தலையில் இருக்கும் மண் பாண்டங்களுடன் கூடியவளுமான பெண் வடிவத்தினிருந்து கொண்டு, முள்ளிலவ மரம் நிறைந்த காட்டில் பொசுக்கப்பட்ட வண்டியில் உலோகங்களை எடுத்திருக்கின்றது" என்று கூறுகிறது (வட-வராக).

இதற்குத் தலைவன் புதன்; இதனைப் பெண் திரேக்காணமென்றும், அக்கினித் திரேக்காணமென்றும் கூறுவர். சசியம் — பாண்டம்.

கும்ப இராசியின் கடைசித் திரேக்காண சொரூபம்

405 சாமமார் கேழன் பங்கி
சார்ந்துறு செவிய துள்ளோசன்
தூமுடி தரித்தோ னாகி
தோல்பிசின் இலைகாய் தாங்கும்
ஏமுறு சிரத்த னாகி
இரும்புறு பாண்ட மேந்தி
யாமவன் படருங் கும்பத்
திரேக்காணம் அந்த மன்றே.

(எ-து) சாம நிறத்த னெருத்தன் செவி மேலே உரோம முடையவனாகிக் கிரீட முடையவனாய்த் தோலியும் பிசினும் இலையும் காயும் இவைகளு மெடுத்து உலோகத் திரவியங்களோடுங் கூடிச் (கூடிய) சசியங்களும் எடுத்துக் கொண்டு நடக்கும் ஒரு புருடன் கும்பத்தில் மூன்றாந் திரேக்காணம் (எ-று). 33



குறிப்பு :— "பல உலோகங்களை ஒன்றாகச் சேர்த்துச் செய்யப்பட்ட குடங்களில்மேற்சொல்லியவற்றையெடுத்து" என்றும் கூறுவர். இதற்குத் தலைவன் வெள்ளி; இது ஆடவத்திரேக்காணமாகும்.

மீன இராசியின் முதற்றிரேக்காண சொரூபம்

406. தரமுறு கிருது பாண்டம்
தரளம்வெண் சங்க மேந்திப்
பரவச முடைய னாகிப்
பகரலங் காரத் தோடும்
அரிவையர்க் கணிகள் வேண்டி
அம்புவில் அம்பில் ஏறி
வருமொரு புருடன் மீன
முதற்றிரேக் காணம் மாதோ.

(எ-து) எக்கிய பாண்டங்களையும், முத்துக்களையும் இரத்தினங்களையும், சங்குகளையும் எடுத்துப் பரவசமாயிருக்கின்ற காரியமாய், அலங்கார முடையவனாய்ப் பாரிக்கு ஆபரண நிமித்தம் சமுத்திரத்திலே தோணிமேல் நடக்கு மொரு புருடன் மீனத்தில் முந்தின திரேக்காணம் (எ-று). 34

குறிப்பு :— எக்கிய பாண்டங்கள் — சுருக்கு சுருவம் முதலானவை. எக்கிய பாண்டங்கள், முத்து, இரத்தினம், சங்கு இவைகளுடன் கூடிய கையையுடையவனும் என்பர்.

இதற்குத் தலைவன் வியாழன்; இது மனிதத்திரேக்காணம் என்பர்.

மீன இராசியின் இரண்டாந்திரேக்காண சொரூபம்

407. சண்பக மேய்க்கும் வண்ணஞ்
சார்ந்திடும் பரிவா ரத்தில்
விண்புகு துவசத் தோடும்
பதாகையு மீதே யாக



RangaRakes tamilnavarasam.com

என்படு போதந் தன்னில்
சலநிதிக் கூல மேறும்
பெண்படுங் கயலி ரண்டாந்
திரேக்காண மென்று பேசே.

(எ-து) செண்பக வன்னமா யிருக்கின்ற (பரி) சனங்களோடுங் கூடிக், கொடிமரமும் கொடிக் கூறையும் (துணி) உண்டா யிருப்பதொரு தோணிமேல் சமுத்திரத்தில் நின்று கரை யேறுதற்குத் தொடங்கும் ஒரு ஸ்திரீ மீனத்தில் இரண்டாந் திரேக்காணம் (எ-று). 35

குறிப்பு :— " சண்பகத்திற் செப்பமான நிறமுள்ள முகமுடையவள் ; தோழிகள், வினைசெய்வோர் இவர்களுடன் கூடியவள் " என்பர்.

இதற்குத் தலைவன் சிங்கள் ; இது பெண் (ஸ்திரீ) திரேக்காண மாகும்.

மீன இராசியின் கடைசித் திரேக்காண சொரூபம்

408. மடுவிடந் தனிற்பு யங்கள்
சுற்றிய வடிவ னுகிக்
கடியவத் திரமி லாதே
வனத்தினிற் கள்வர் தன்னுற்
படியினி லங்கி தன்னுற்
பரவச மழுமொ ருத்தன்
கடிகமழ் குழலாய் மீனங்
கடைத்திரேக் காண மாமே.

(எ-து) மடுவினிடத்தில் பாம்பால் சுற்றப்பட்ட தேகத்தை யுடையவனாய், வஸ்திர மில்லாதவனாய்க், காட்டிற் கள்ளரினாலும், அக்கினியினாலும் அழுதுகொண்டிருக்குமொரு புருடன் மீனத்தில் மூன்றாந் திரேக்காணம் (எ-று). 36

குறிப்பு :— காட்டில் ஓர் மரத்தினருகே யிருந்து கதறுகின்றது என்பர்.

இதற்குத் தலைவன் செவ்வாய். இதனைச் சர்ப்பதிரேக்காணம் என்பர்.

திரேக்காணத்தியாயம்

முற்றும்



இந் நூலின் முற்றுரை

இந் நூலை வடமொழியிலும் தமிழிலும் உரைத்தார் இவரெனல்.

409. மாவியல் மறைவல் லோர்முன்
வகுத்திடும் வடநூல் தன்னைத்
தேவர்க்குங் கால மோர்வான்
செப்பினன் வராக னென்போன்
நாவலன் வணிகர் தம்மில்
நல்லவன் அருள்இ லிங்கன்
தாவிய புவியின் மீதே
தமிழினிற் சாற்றி னுனே.

(எ-து) அநேக முனிவர் மதங்களாற் கூறியதை (கூறிய சோதிட சாத்திரத்தை) வடநூலால் ஒரு கோர்வை யாக்கி வராக முனிவர் சொன்னார். அந்த வடநூலை வணிகரில் நல்லவன் மகன் இலிங்கன் தமிழினாலே சொன்னான் (எ-று). 37

இந் நூலில் உள்ள அத்தியாயங்களின் பெயர்கள்,

410. ஓரையின் பேதந் தானும்
உயர்தரு கோளின் பேதம்
பாருறு யோனி பேதம்
பண்புறு நிஷேகம் சென்மம்
சார்சத்தி மரண மாயுள்
திசையொடு விகற்பந் தானும்
சேருறும் அட்ட வர்க்கம்
செயுங்கன்ம சீவ னங்கள்.

(எ-து) 1 இராசி பேதமும், 2கோளின் பேதமும் 3பிறக்கும், யோனி பேதங்களும், 4நிஷேக காலங்களும் 5 சென்மமும், 6சத்திய மரணமும் (சத்தியோ மரணமும்) 7 ஆயுர்த்தாய திசையும், 8 திசாபலங்களும் (திசாவி

RangaRakes
tamilnavarasam.com

கற்பம், திசாவிபாகம்), 9அட்டவர்க்க சமுச்சியங்களும், 10கன்ம சீவனங்களும் சொல்லுவன் (சொல்லினேன்) (எ—று). 38

இதுவும் அது.

411. நரபதி யோகத் தோடும்
நவின்றிடும் யோகந் தானும்
உரைகொள்சந் திரயோ கத்தோ (டு)
உபயமாம் கிரக யோகம்
வருபிர விருத்தி யோகம்
வகுத்திடும் இராசி சீலம்
பொருதிருட் டியின்ப லங்கள்
புகல்பாவ பலங்க டாமும்.

(எ-து) 11 இராசயோக அத்தியாயமும் 12நாபஸ யோக அத்தியாயமும், 13 சந்திர யோக அத்தியாயமும், 14 துவக்கிரக யோக அத்தியாயமும், 15 பிரவிருத்தியா (பிரவ்ரஜ்யா) யோக அத்தியாயமும், 16 இராசி சீல அத்தியாயமும், 17 திருட்டிபல அத்தியாயமும், 18 பாவபல அத்தியாயமும் (எ-று). 39

இதுவும் அது.

412. ஆசிர யோகந் தானும்
அலைபிர கீர ணங்கள்
காசுறும் அரிட்ட யோகம்
காரிகை சாத கங்கள்
நாசுதுன் மரண யோகம்
நட்டசா தகங்க டானும்
மாசிலாத் திரேக்கா ணங்கள்
வடிவெலா மடைவின் வைத்து.

(எ-து) 19ஆசிரய யோக அத்தியாயமும், 20 பிரகீரண யோக அத்தியாயமும், 21அரிட்ட யோக அத்தியாயமும் (அனிஷ்டாத்தியாயம்), 22காரிகை சாதக



அத்தியாயமும், 23துன்மரண யோக அத்தியாயமும், (நிர்யாணாத்யாயமும்) 24நட்ட சாதக அத்தியாயமும், 25திரேக்காண சுருப அத்தியாயமும் இவையெல்லாம் அடைவாக வைத்து (எ-று). 40

இந் நூற் பயன்.

413. ஆகவிவ் வத்தி யாயம்
அறைந்தனம் இருபத் தைந்தும்
ஓகையால் இந்நூல் தன்னை
உணர்ந்துல கோர்க்கு ணர்த்தின்
போகமாம் உலகு தன்னில்
கதிரெனப் புகழின் வாழ்ந்து
ஏகமாய்ப் பிரம மாகி
இன்பமுற் றிடுவ ரன்றே.

(எ-து) ஆக அத்தியாயம் இருபத்தைந்தும் ஆராய்ந்து பலாபலங்களை உலகத்திலுள்ள பேருக்கு அறியத்தக்கதாகச் சொல்லுவோர்கள் ஆதித்தனைப் போலே பிரகாசமான புகழோடு வாழ்ந்து பிரமபதத்தில் இன்பமுற் றிருப்பர் (எ—று). 41

குறிப்பு :— வடமொழி வராகஹோரை உபசம்காராத்தியத்தே கூறியவாறு இந் நூலாசிரியரும் 410, 411, 412 என்னும் பாட்டில் அத்தியாயப் பெயர்களை அடைவே கூறியுள்ளார். அவை வருமாறு : - 1ஆம் அத்தியாயம் ராசிபேதம், 2கிரகயோநிபேதம் 3வியோனி ஜென்மம் 4நிஷேக காலம் 5ஜன்மகாலம் 6சத்யோமரணம் 7ஆயுர்த்தாயம் 8தசாவிபாகம் 9அஷ்டகவர்க்கம் 10கர்மஜீவம் 11ராஜயோகம் 12நாபஸயோகம் 13சந்திரயோகம் 14த்விக்கிரகாதியோகம் 15பிரவ்ரஜ்யா யோகம் 16ராசி சீலம் 17திருஷ்டிபலம் 18பாவாத்தியாயம் 19 ஆச்ரய யோக அத்தியாயம் 20பிரகீர்ணகம் 21அனிஷ்டாத்யாயம் 22ஸ்திரீ ஜாதகாத்தியாயம் 23நிர்யாணாத்தியாயம் 24நஷ்ட ஜாதகாத்தியாயம் 25திரேக்காணாத்தியாயம் என்றும் வழங்கப்படும்.

ஓராசாத்திரத்தே இருபத்தைந்து அத்தியாயங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன என்றனர் வராகமுனிவர். ஆனால் இதற்கு உரையெழுதிய ஆசிரியர்கள் (16) இராசிசீல அத்தியாயத்தை லக்ன சீலம், சந்திர ராசி சீலம், சூரியாதி ராசி சீலம் என்று பிரித்துக் கொண்டு உரை எழுதி உள்ளனர்.

வராகர் ஓராசாத்திரம்

முற்றும்.

RangaRakes tamilnavarasam.com

# வராகர் ஓராசாத்திரம்

## மூலத்திலும் உரையிலும் கண்ட அருஞ்சொல் அகராதி

(பாட்டெண்)

அங்கம் 22
அங்கனை—பெண் 238, 325
அங்கி—செவ்வாய் 256
அங்கிசத்தன்—தோட்பட்டையுடையன் 246
அங்கிரசன்—வியாழன் 24
அங்கிதம்—தழும்பு
அங்கிதத்தன்—239
அங்கிதன்—238
அங்குசம்—அங்கிசம் 100
அசிதன்—சனி 25, 114, 184, 349
அசுரன்—இராகு25
அசுரன்—இராகு அல்லது கேது 319
அசுரர் துணை—வெள்ளி 23
அத்த சித்தி—பொருள் கிடைத்தல் 163
அத்த பவனம்—ஏழாமிடம் 19, 320, 332
அத்தம்—அர்த்தம் ; இரண்டாமிடம் 208
அஸ்தமனமாகிய ஏழாமிடம் 62, 134
அத்தம் என்று தொடங்கும் பாட்டு 151
அத்தமம்—ஏழாமிடம் 350
அத்தமயம்—ஏழு 347
அத்திரன்—அஸ்திரன் ; ஸ்திரமில்லாதவன் ; சபலன் 226, 233
அத்திரிசார்த்தம்—அதிரிசிய சக்கரார்த்தம் 98
அத்துச்சம்—அதியுச்சம் ; பரமஉச்சம் 14
அதிநீசம்—பரமநீசம் 14



அதிரிசியார்த்தம்—213
அதோ—அதோமுகக் கோளின் இராசி ; கீழ் நோக்கிய இராசி 55
அதோமுகி—55, 93
அந்தம்—115
அந்தற்புரத்தன் 108
அந்தியக்கால்—கடைசி நவாங்கிசம் 104
அந்தியம்—பன்னிரண்டாமிடம் ; மரணம் 61, 157
அந்தியோதயம்—140
அநு—கபோலம் 100
அபாவம் 132
அம்பரம்—ஆடை 394, பத்தாமிடம் 303
அம்பில்—தோணியில் 406
அம்பு—நான்காமிடம் 303, கடல் 406
அம்புசம்—நான்காமிடம் 19
அம்புராசி—கடல் 394
அம்புலி இருக்கம்—கடக இராசி 259
அரத்த அம்பரம்—சிவந்த ஆடை 374
அரி—சிம்மம் 257 ஆறும்பாவம் 16 ஆறு 317, 155, 109
அரிகள் பாகம்—பகை நவாங்கிசம் 321
அரித்தல்—வகுத்தல் 363
அரிவை—கன்னி 314
அரிவைஇல்—கன்னியிராசி 235
அரியபக்கணத்தன்—240
அருணக்கன்—சிவந்த கண்ணன் 240
அருக்கசன்—சனி 269
அல்—இரவு 58
அல்கல்—தரித்திரன் 268
அல்லன்—சந்திரன் 24
அலங்காரம்—அணிகலன் 380

RangaRakes

tamilnavarasam.com

அலசன்—மந்தன் ; சோம்பன் 201, 247
அவசானம்—இறுதிக் காலம்
அவனீசன்—செவ்வாய் 255
அழகியர்—நற்கோள் 107
அழல்—அக்கினித்திரேக்காணம் 353, செவ்வாய் 348
அழுங்குதல்—அழுதல் 383
அற்பாக்கன்—மந்தமான கண்ணுடையன் 269
அறுக்கன்—அருக்கன் ; சூரியன் 168
அனு—தாள் வாய் 242
அனுவழி—புதன் 161
ஆக்கினை—பத்தாமிடம் 17, 160, 314
ஆகேகோம்—மகரவிராசி 9
ஆங்கிசேசன்—நவாங்கிச அதிபதி 350
ஆச்சியம்—நெய் 94
ஆச்சிரமம்—முனிவர் வாழுமிடம் 397
ஆடகன்—வியாழன் 161
ஆதான காலம்—கர்ப்பாதான காலம் 55
ஆதி—ஒன்று 155
ஆயம்—பதினொன்றும் பாவம் 16-91 பதினொன்று 155
ஆயுள்—எட்டாம் பாவம் 350
ஆர்ச்சிதம்—உண்டாக்கப்பட்டது 259
ஆரகங்கள்—135
ஆரணி யாசனி—ஆரண்யத்தில் தோன்றிய மூல பலாதிகளை உண்பவன் 220
ஆரல்—செவ்வாய் 24, 220, 222, 314, 347
ஆரல் கால்—செவ்வாய் நவாங்கிசம் 334
ஆரோகி—நோயில்லாதவன் 224
ஆவணம்—அங்காடித் தெரு
ஆவம்—அம்பறாத் தூணி 393
ஆற்பதம்—ஆஸ்பதம் ; பத்தாமிடம் 16, 346, 347



ஆனனம்—முகம் 397
இகல்—155
இகலன்—ஓரி என்னும் நரி 396
இங்கிதி—இங்கிதம் சொல்வோன். இங்கிதம்—குறிப்பு 240
இடபம்—96
இதயம்—159
இந்திரன்மார்—சிரேட்டன்மார் 359
இந்து—101
இந்து திட்டியுதம்—திங்களின் பார்வையும் சேர்க்கையும் 270
இந்து வோரை 104
இபுகம்—நான்காமிடம் 19, 93, 111, 174, 183, 346
இயந்திரம்—ஆலை செக்கு முதலியன 348
இரசதம்—வெள்ளி 165
இரட்டை—உக்குமவிராசி ; பெண்ணிராசி 67
இரவி—101
இரவியிருக்கம்—சிங்கவிராசி 329
இராசி அங்கிசபன்—சந்திரன் நின்ற இராசி அங்கிசத்தினுடைய அதிபதி 321
இரந்திரம்—எட்டாமிடம் 17, 346
இரிப்பம்—பன்னிரண்டாம் பாவம் 16 ; பன்னிரண்டு 157
இரிபு—ரிபு ; ஆறுமிடம் 17
இருக்கம்—இருட்சம் ; இராசி 334
இருட்சம்—இராசி 334
இருட்சதிபதி—50
இருட்சாங்கிசம் 50
இருது சோகம்—கும்ப இராசி 9
இருப்பம்—ரிப்பம் ; பன்னிரண்டாம் பாவம் 314
இருபு ரந்திரத் திரேக்காணேசர்—ஆறுமிட எட்டாமிடத் திரேக்காணேசர் 355

RangaRakes tamilnavarasam.com

இல்—இல்லாள் 142 ; இராசி 262
இலம்பாடு—வறுமை 214
இலாங்கலே—லாங்கலே என்னும் சொல்லின் திரிபு அலேசன் என்பர் பட்டோத்பலர் 377
இலாபம்—பதினொன்றாமிடம் 63 பதினொன்று 157
இலி—கலை 363
இலிங்க விருஷணம்—ஆண்குறியும் பீசமும் 47
இலேயம்—லேயம் ; சிங்கவிராசி 81
உக்குமக் கால்—உக்கும நவாங்கிசம் 64
உக்குமப் பம்—இரட்டை இராசி58 பெண்ணிராசி 8,64,66
உண்டைகன்—பிடகன் ; காருக வயித்தியன் 253
உடல் சமைப்போன்—ஒருவர் உடலை அழகுபடுத்துவோன் 218
உத்திருட்டி—கூடுதல் நோக்குதல் 45, 55, 101
உததி—கடல் 384
உதயத்தமம்—உதயவிராசியும் ஏழாமிராசியும் 108
உதயம்—62, 63, 85, 86, 106, 346
உதயமாம் பவனம்—இலக்கினம் 59
உதிரன்—செவ்வாய் 346
உந்தி—100
உபசயங்கள்—மூன்று, ஆறு, பத்து, பதினொன்று 16, 54, 141, 182
உபயோதயம்—சிரபிருட்டோதயவிராசி 93, உபய இராசி இலக்கினமாதல் 342
உப சூதகி—98
உம்மை—முன் பிறப்பு 4
உயர்ந்தோர்—நற்கோள்கள் 43
உருத்திரர்—பதினொன்று 118
உரோமசன்—மயிர் வினைஞன் 218
உவணன் போலும் ஆனனம் 380



ஊறல் திருட்டி—கூடுதலும் பார்த்தலும் 309
ஊர்—ஊரு 100
ஊர்த்தம்—ஊர்த்துவ முகக்கோளின் இராசி 55
ஊர்த்த முகி—155, 93
ஊரு—239
ஊறுடையோர்கள்—தீய கோள்கள் 59
எச்சம்—புதல்வர் 262
எட்சி—இலக்கினம் 81, 348, 352
எட்சிக் கிரக வோரை 364
எரி—செவ்வாய் 257, 320
எருத்தம்—கழுத்து 239
எருவை முகம்—கழுகுமுகம் (கிருத்ர முகம்) 392
எல்—பகல் 58
எல்லி - ஞாயிறு 24
எழு—உதிக்க 71
எழுச்சி—இலக்கினம் 313, 316, 320
எழுச்சி பம்—362
எழுதல்—உதித்தல்
எழுது—எழுத்தாணி 389
எழும் திரிகோணம்—இலக்கினத் திரிகோணம் 360
ஏமம்—பொன் 384 ஏகம்—1 ஒன்று 140
ஏற்றி—பெருக்கி 371
ஏறு—இடபம் 70
ஒற்றை—ஓச விராசி ; ஆணிராசி 67
ஓசக்கால்—ஓச நவாங்கிசம் 64
ஓசப் பம்—ஓச விராசி 58
ஓசம்—ஆண் இராசி 66
ஓராசாத்திரம்—சோதிட நூல் 354
ஓரை—இராசி 5, 186 வீடு, 142, ஒரு இராசியை இருகூறு செய்தது 10
கங்கம்—பறவை 350 ; கழுகு 385 கிருத்ர ; (பிருகத்)
கச்சபம்—ஆமை 395



RangaRakes tamilnavarasam.com

கடகம்—96
கடற்பவம்—கடலில் பிறக்கும் பொருள்கள் 144
கடி—யோனி 334
கடியவர்—தீயகோள்கள் 319
கண் 100
கண்டங்கள் 104
கண்டம்—கேந்திரம்; அவை ஒன்று நான்கு ஏழு பத்து ஆகும் 18, 107, 111, 156, 355
கணம்—பதினெட்டு 140 இரண்டு நாழிகை 36
கணன்—சமூகத்தால் பூசிக்கப்பட்டவன் 266
கணேசன்—குழுக்களுக்குத் தலைவன் 218
கதிர்மகன்—சனி 25
கதிரவன்—கிரணம் 320
கந்தவான்—நிலம் உடையவன் 218
கபிலக்கேழன்—கருமை கலந்த பொன்னிற முடையவன் 375
கம்—தலை 249
கரபம்—ஒட்டகம் 248
கரம்—கழுதை 149
கருமம்—பத்து 346
கல்பியம்—இலக்கணம்
கலதி—களண்டி, கழண்டி 322
கலாபி—கலகப் பிரியன் 232, துட்டன் 256
கலீனன்—இடர்ப்பட்டவன் 267
கவசம்—மெய்ச்சட்டை 380
கவனிகன்—நடையில் வல்லவன் 255
கவிவேடம்—குரங்கு வேடம் 393
கவுள்—100
களங்கன்—திங்கள் 45
களம்—கண்டம் 100
களியன்—செருக்குடையன் 244
கன்மம்—பத்து 155, 172



கன்னி—96
கனகன்—வியாழன் 175
காசு—இரத்தினம் 393
காஞ்சனம்—பொன் 393
காது—100
காந்தர்வன்—இசையில் வல்லோன் 256
கபாலி 220
காமம்—ஏழு 155
காயம்—உடம்பு 4)0
காயுங்கோள்—தீயகோள் 107
கார்முகம்—வில் 389
காரி இல்—சனி இராசியான மகர கும்பம் 261
காருணன்—கருணை உள்ளோன் 256
கிரகத்தைச் சுத்தமாய் வருத்தியது—கிரக சுத்தஸ்புடம் 363
கிரகம்—இராசி 5
கிரணசோமன் 113
கிராமம்—தேசங்கள் 269
கிரிசதனு—இராசின உடல் 244
கிரியம்—கிறியம், மேடம் 251
கிரியாதி—5
கிரியம் ஆதி 21
கிரீடம் முடி 380
கிருது—வேள்விக்கு வேண்டும் கருவிகள் 397
கிருது பாண்டம்—எக்கிய பாண்டம் 406
கிருஷ்ணசனம்—மான்தோல்
கிலீபர்—நபுஞ்சகக் கோள்கள் 45
கிறியம்—கிரியம், மேடம் 9
கின்னரம் போல் தேகன்—கின்னரன் என்னும் தேவசாதியன் போல் உடம்பு 402
கீட இராசி—விருச்சிகம் 13
கீடம்—கீடவிராசி 105

RangaRakes tamilnavarasam.com

குசன் இருக்கம்—செவ்வாய் வீடு; அவை மேட விருச்சிகம் 264
குஞ்சன்—குறளன் 247
குடத்தினை அனைய தேகம் 376
குடம்—கும்பம் 96
குடும்பம்—இரண்டாம் பாவம் 16
குணகாரங்கள் 135
குதம்—மலங்கழி உறுப்பு 100
குதாரி—குத்தரன் 199
குதானியம்—இழிவான தானியம் 149
குநாரி—பொல்லாத பெண்கள் 265
குநகன்—சொத்தை நகம் உடையவன் 238
குநகி—246
குபாரி—இழிந்த மனைவி 258
கும்பதேகி—குடம்போன்ற உடலையுடையவள் 374
குரு—ஒன்பதாமிடம் 17
குரு இருக்கம்—வியாழன் வீடு; அவை தனுசு மீனம் 329
குரு நிலம்—வியாழன் இராசி 257
குரூரர்—தீயகோள் 43
குரூரன்—செவ்வாய் 21, 81
குவனிதை யன்பன்—தன் மனைவியின்றிப் பிறர் மனைவியிடத்தில் விருப்பமுள்ளவன் 255
குவாணிகன்—ஆகாத வாணிகத்தைப் புரிபவன் 253
குளிர்—நண்டு, கடக விராசி 263
குளீரம்—கடகம் 9
குறியாடு—கொறிமை, துருவாடு 378
கூபம்—கிணறு 342
கூர்மம்—ஆமை 396
கூலம்—கரை 407
கெற்ப சிரவம்—கரு கெட்டு வெளிவருதல் 62
கேந்திரம்—ஒன்று நான்கு ஏழு பத்தாமிராசி 18
கொடியர்—தீய கோள்கள் 59



கொடியோர் ஓரைகள்—குரூர இராசிகள் 186
கோசிகம்—ஆடை 219, 399, 403
கோணன்—சனி 168
கோர்ப்பி—விருச்சிக இராசி 9
கோல்—துலாவிராசி 96
சக்கரார்த்தம்—இராசிச் சக்கரத்தின் பாதி 105
சககம்—மூன்றுமிடம் 20, 63 மூன்று 155
சகசர்—உடன் பிறந்தோர் 145
சகசி—விசாரியாமல் ஒரு செயலைச் செய்பவன் 253
சகனம்—இடை 218
சகோணன்—சனி 25
சகோதரன்—மூன்றும் பாவம் 16
சகோர்த்தம்—மூன்றுமிடம் 160, 318
சங்கம்—கணைக்கால் 100, 245
சசி—திங்கள் 63
சசியாதி—பயிர், விளைவு 404
சட்டுவர்க்கம்—10, 141
சட்கு—பரிசம், ஊறு 322
சடம்—161
சத்துவன்—23
சதுட்டயம்—கேந்திரம் 18, 45, 186
சத்தி—சத்தியாசாரியார் 118
சதுர்த்தம் 61
சதுரம்—நான்கு 155
சதுரஸ்ரம்—நான்காமிடம் எட்டாமிடம் 17, 134
சதுரசிரயம் 309
சந்ததி—ஐந்து 156, 344
சந்தி—104
சந்தி அந்தியம்—கடக விருச்சிக மீன இராசிகளின் கடைசி நவாங்கிசம் 70
சந்தி இருட்சம்—கடக விருச்சிக மீனத்தின் கடைசி 71
சந்திர பம்—திங்கள் வீடு 256

சந்திரன்—30
சந்திரன் பம் 329
சபலன் — பலமில்லாதவன், தயவில்லாதவன் 267
சம்பூரணங்கள்—குறைபடாத உறுப்புநலம் உடையவன் 287
சம்பன்ன சுகம் 207
சம்பு — நரி 385
சமம்—இரட்டை விராசி 66
சம இருட்சம்—இரட்டைவிராசி ; பெண்ணிராசி 65
சமுகம் — குணசமுகம் 365
சர்வபட்சண சீலன்— 228
சரபத்தைப் போன்ற அங்குரி—378
சரபம்—எட்டிப்பட்சி 378
சராதி —சரம் திரம் உபயம் 355
சரித்திரம்—ஆசாரம் 327
சலசம் — நீரில் தோன்றும் பொருள் 164
சலசரம்—நீரில் இயங்கும் மீன் முதலியன 249
சலநிதி — கடல் 407
சலபம்— சல இராசி 93
சலம்—சல இராசி 85
சலமூர்தி—தோணி முதலியன 256
சலாபம்—84
சலிலம்—நீர் 403
சலிலவோரை— சல விராசி 85
சவுரி—சனி 25
சளன் = அசடன், செவிடன் 71
சன்மலி—இலவமரம் 404
சன்மலிதரு 385
சன்ஞசி 220
சனி 32
சாசி 199
சாடு—வண்டி 199
சாமம் —கருப்பு 400, 405



சாமவன்னம் 389
சாமன்— புதன் 87
சாமித்திரம் - ஏழாமிடம் 19, 84
சாயாங் குலம்—அடியளந்து விரலாக்கியது 369
சால்—கும்ப விராசி 170
சாவகர் - சிராவகர் 220
சான் — சானு 100
சானு—முழங்கால் 238, 245
சிக்கென்றதேகம் 202
சிகி --கேது 25
சிங்கம் — சிங்கவிராசி 96
சிசுனம்
சித்திரன் 225
சித்திராபரணம் 231
சித்திரமாவது நாலு விதமாயிருக்கப்பட்டது 231
சித்திராம்பரம் 231
சித்தோத்தம் — ஏழாமிடம் 17
சிதன்—ஸிதன் ; வெள்ளி 25, 51, 66, 67, 333, 337, 344
சிந்திகன்—ஆலஸ்யன் 267
சிரயம்— எட்டாம் பாவம் 355
சிரோதயம் —தலைமுன் தோன்றும் இராசி 93
சிரோதரம்—கழுத்து 246
சிறுகம் — கொம்புள்ளது 101
சீணமதி—தேயும் திங்கள் 311
சீதன்.. வெள்ளி 23
சீதாசுமி — திங்கள் 24
சீமான் — திருவுடையன் 255
சீவன் — வியாழன் 24
சீவ பம் -வியாழன் இராசி 209
சீறுங்கோள்—தீயகோள் 82
சுக்கிரன் 32
சுக்கிரன் இருக்கம் - இடப துலாம் 328

RangaRakes
tamilnavarasam.com

சுகம் நான்காமிடம் 17, 19, 63, 160, 172, நான்கு 84, 85
சுகாந்தன் 269
சுசி—தூய்மை யுள்ளவன் 237
சுடர் மூன்று 187
சுத பம்—ஐந்காமிடம் 19
சுதம்—115
சுதன்—ஐந்து 115
சுதாரம்—தன் மனைவி 263
சுதூமம்—மிதுனம் 9
சுநாரி தன் பெண்கள் 265
சுபம் - ஒன்பதாம் பாவம் 16
சுபயுதம்—நற்கோள் சேர்க்கை 63
சுப யோக திருட்டி - நற்கோளின் சேர்கையும் பார்வையும் 70
சுய துங்கம்—ஸ்வ துங்கம் ; பரமோச்சம் 135
சுயப் பிரத்தியர்—தன் தொண்டர் 143
சுய பம் - தன் வீடு 255
சுயம் தன் வீடு 112, 269
சுயமித்ரக்கால்—தன்வீடு நட்பினர் வீடு 206
சுயமு—ஸ்வம்மு ; இரண்டாமிடம் 17
சுரை—கள் 374
சுராங்கிசம்—சப்தம பாகம் 134
சுவர்க்கம்—தன் வர்க்கம் 71, 137
சுவேத நகை—வெண்பல் 378
சுன்—சனி 28, 65, 110, 350
சுன் பம்—மகர கும்பம் 265
சுன்னன் 174
சூகம் - துலாவிராசி 9
சூகரம் - பன்றி 396, 400
சூசி—ஊசி 379
சூரன்—நாய் 396



செந் நீவி—சிவந்த ஆடையணிந்தவன் 375
செம்பொன்—வியாழன் 320
செல பம் 101
செவ்வாய் 31
செவ்வியர்கள்—நற்கோள்கள் 46
சென்மம்—தோல் 143, 410
சே—இடபம் 376
சேகரம் - முடி 386
சேத்தசி - மீனம் 9
சேத்திரம்—இராசி 5
சேய்நிலம்—செவ்வாய் இராசி 258
சேயில்—செவ்வாய் இராசி 262
சொம் - ஸ்வம் ; பொருள், இரண்டாமிடம் 314
சொம்மு—இரண்டாமிடம் 314
சொற்புடன் - புடவசனன் ; வெளிப்படையாகப் பேசுபவன் 236
சோதிட நூல் ஓராசாத்திரம் 354
சோமன்—106
சோமன் சுதன்—புதன் 182
ஞயன் புதன் 24
தக்கன்—தக்ஷன் ; விதர்த்தன் ; சமர்த்தன் ; சதுரன் 224
தகர்—மேட விராசி 81
தண்டு - மிதுனம் 379, 880, 176 தண்டாயுதம் 375
தண்டம்—தண்டாயுதம் 387
ததீசன்—அதற்கு (இலக்கினத்திற்கு) ஈசன் 250
தபனன்—சூரியன் 80
தரணி புதல்வன்—செவ்வாய் 113
தரணிசன்—செவ்வாய் 161
தலை - 100
தவசு—ஒன்பதாமிடம் 350
தவம்—ஒன்பதாமிடம் 318 ஒன்பது 155, 344



RangaRakes tamilnavarasam.com

தவுட்சிகம் - தனுசு 9
தழல்—செவ்வாய் 171
தழல் ஓரை கால்—செவ்வாயின் இராசியும் அங்கிசமும்
தற்கரன் - தஸ்கரன் ; சோரன் 230
தற்காலம்—கருப்பாதான காலம் ; பிரச்சின காலம் 74
தன்மம்—ஒன்பது 346
தன்னுடைய ஆசனம் பத்திராசனம் 398
தனம்—இரண்டு 155 இரண்டாம் பாவம் 63, 317
தனு—இலக்கின பாவம் ; தனுர் இராசி 96, ஒன்று 156
தனுர்ச்சயம்—பொருள் அடைதல் 116
தாக்குதல்—பெருக்குதல் 363, 365
தாகி—நீர் வேட்கையுடையள் 374
தாசர் மூவகையர் - அற்ப மத்திம மகா தாசர் என்பவர் 321
தாசன்—சொற்பணி கேட்கிறவன் 321
தாசி—சொற்பணி கேட்பவள் 329
தாதுகோபம்—வாத பித்த சேத்தும வியாதி 341
தாபுரு—இடபம் 9, 81
தாம்பிராக்கன்—தாம்பிரம் போற் சிவந்த கண்ணன் 238
தாவுறல்—உண்டாதல் 167
தாள்—100
தானை—ஆடை
திக்கு—பத்து 187
திசாப் பிரவேதம்—திசாப் பிரபேதம் ; திசை வேறுபாடு 135
திதி—பதினைந்து என்னும் எண் 118
தியூனம்- ஏழாம் பாவம் 17, 83, 108, 111, 112, 156, 172, 320, 334, 344, 346
திரணம்—புல் 164
திரி—ஸ்திரீ 55 ; மூன்று 187
திரிகோணம் - ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் 63



திரிகோணம் - ஐந்தாமிடம் 19
திரிசாதி—திரியக் சாதி ; விலங்கின் பிறப்பு 354
திரிசியார்த்தம்—இராசிச் சக்கரத்தில் தெரியும் பாதி பாகம் 98, 100, 213
திரிதோடி—ஸ்திரீ தோஷி ; பெண்ணைப் பழிப்பவன் 260
திரிராசிகம் பிரித்துச் சொல்வது 358
திரிய முகி 55, 93
திரிங்கிசம்—திரிம் சாங்கிசம் ; இராசியை முப்பது கூறு செய்தது 8
திரேக்காணம்—ஒரு இராசியை மூன்று கூறு செய்தது 10
திவா விராசி—பகலில் விழிப்புடைய இராசி 11
தினநாதன்—சூரியன் 95
தினேசன்—சூரியன் 118
தீட்சம் - ஆசை 339
தீமை—தீய கோள்கள் 110
தீய இருட்சம்—தீய கோள்களுக் குரிய இராசி 83
தீய பம்—தீய கோள்களின் இராசி நிலை 52
தீயர்—தீக்கோள்கள் 63
தீயதூனம் - தியூனம் ; ஏழாமிடம் 106
தீயுதம் நோக்கு - தீய கோள்களின் சேர்க்கையும் பார்வையும் 326
துக்கிதன்—சனி 23
துகில் கிரியன்—ஆடை நெய்வோன் 216
துங்கம்—உச்சம் 118, 171, 251
துங்க பாகம்—உச்சம் 354
துச்சிக்கம்—மூன்றாமிடம் 20
துரகம் முன்—அசுவதி முதலாக 368
துலை—துலாவிராசி 176
துவசம்—கொடிமரம் 407
துவய குணம்—முகம் கை கால் இரட்டுதல் 70

RangaRakes tamilnavarasam.com

துவாத சக்கால்—துவாதசாங்கிசம் 45
துவாரம்—வீட்டு வாயில் 94
தூய பம்—சுப இராசி 141
தூர்த்தை—பதிவிரதை அல்லாதவள் 329
தேயும் வலியர்—வலி குறைந்த கோள்கள் 46
தேரர் 220
தேவர் துணை—வியாழன் 29
தேள்—விருச்சிக இராசி 96
தொலி—தோல் 405
தோடி—தோஷி ; குற்றம் உடையவன் 242
தோயச் செல்வன்— நீரிலிருந்து தோன்றும் முத்து பவளம் முதலிய செல்வன் 254
தோற்றம்—இலக்கினம் 214
நக்கன் 220
நட்பின் வர்த்தனை 201
நடலையன்—வஞ்சகன் 218
நண்டு—கடக விராசி 84
நபுஞ்சக யோகம்—கிலீப யோகம் 66
நவ்வி—மான் 396
நவம்—ஒன்பதாமிடம் 83 ஒன்பது 140
நவம் தவம் கோணுந்தம்—ஒன்பதாமிடம் 20
நற்பம்மம்—நற்கோள்களின் இராசி 52
நற்கோள் 101
நன்னூல் உணர்ந்தோர்—சோதிட நூல் அறிந்தோர்
நாசம்—சாதல் 113
நாசன்—தேவதா அனுக்கிரக மில்லாதவன் 258
நாசி 100
நாலைந்து—இருபது 140
நிதனவோரைக் காணங்கள்—அட்டம இராசித் திரேக்காணங்கள் 353



நிதனம்—எட்டாம் பாவம் 111, 113, 114, 317 எட்டு 157 இறப்பு 325, 347
நிபீடிதன்—கோள் உயுத்தத்தில் தோற்றல், பரிவேடத் தொடு கூடுதல், அதிநீச மடைதல்
நியனம்—எட்டாமிடம் 61
நிரியாணம்—எட்டு 350
நிரையம்—நரக உலகம் 354
நிறைந்த முனை—அநேகம் புதல்வர் 258
நிஷேகம் 410
நீசம் 354
நீர்ப்பம்—சல இராசி 85
பகை 159
பங்கி—மயிர் 405 ; மயிர்முடி 240
பங்கிலான்—மிகுதியாக இல்லான் 260
பட்சண தாகம்—தின்னவேண்டு மென்ற விருப்பம் 376
பட்டு உதித்தான் 133
படாகம்—ஆடை 390
படேசன்—படைக்குத் தலைவன் 255
படைத் தூணி—அம்பராத் தூணி 381
பணி—பாம்புத் திரேக்காணம் 353
பதங்கன்—ஞாயிறு 315
பதாகை—கொடிக் கூறை 407
பந்து—நான்காம் பாவம் 16, C1, 345, 348, 347 நான்கு 155
பந்தனம்—சிறை காவல் தளை 323
பம்—இராசி 5
பரகன்மன்—பிறருடைய காரியத்தைச் செய்பவன் 204
பர காரிய விமுகன்—பிறர் காரியத்திற்கு முகங் கொடாதவன் 228
பரசு—மழு 373

RangaRakes tamilnavarasam.com

பரந்த துண்டன்—பரந்த மூக்கினை உடையவன் 242
பரவஞ்சகன்—228
பரற்பரம்—பரஸ்பரம்; ஆதியந்தம் 303
பரற்பராங்கிசம்—அன்னியோன்னி யாங்கிசம் 331
பரார்த்த நவாங்கிசம்—வேறு கோள்களின் நவாங்கிசம் 47
பரி—குதிரை 386
பரிபவம்—செயித்தல் 249, 143
பரிவர்த்தனம்—மாறிச் சொல்வது 358
பருமம்—கவசம் 393
பருதி—சூரியன் 24
பரோச்சன் 77
பல்லமாம் ஆனனம்—பல்லூகத்தை ஒத்த முகம். பல்லூகம்—கரடி 387
பலசமயத்தவர் 220
பவம்—பதினொன்றும் பாவம் 17, 318; பதினொன்று 155 பிறப்பு 353
பவனம்—இராசி 5, 74
பவன கதம்—காற்றின் சினம் 149
பாகம் 100
பாண்டு மாவிகை 386
பாந்தள்—மலைப்பாம்பு
பார்த்தூநம்—பார்த்தோனம்; கன்னியிராசி 9
பார்த்தோநம்—கன்னிராசி 308
பாரி 159
பானு—சூரியன் 51
பானு சூனு—சனி 51
பிங்கலக் கண்ணன்—பொன்னிறமுள்ள விழியன் 242
பிங்கல நிறத்தன்—பொற்கென்ற நிறமுடையன் 245
பிதிர்—பிதுர் என்னும் தேவ உலகம் 354



பிரச்சின காலம்—ஆருடங் கேட்ட காலம் 55
பிரதாபம்—ஒளி; வீரம் 143
பிரவீண வாகு—பெருத்த தோள்
பிராரத்துவம்—தொடக்கம் 141
பிராபிக்கும்—அடையும் 355
பிரிதி பம்—ஐந்தாமிடம் 17
பிருகில்—பிருகு+இல்; வெள்ளி இராசி 258
பிருகு—வெள்ளி 25
பிருகுசன்—பிருகு முனிவர் மகன்; வெள்ளி 265
பிருகுமகன்—வெள்ளி 25
பிருட்டோதயம்—பின்புறம் முன்னாக உதிக்கும் இராசி 93
பிருத்தி—வேலையாள் 146
பிருதி—வேலையாள் 145
பீசம் 100
பீஷணம்—அச்சம் 226
புகர் பம்—வெள்ளியின் வீடு 255
புகரில்—வெள்ளி வீடு 262
புட்கள்—பட்சித்திரேக்காணம் 353
புட்டகம்—புடவை 388
புத்தி—ஐந்தாமிடம் 318; ஐந்து 160
புத்திரன்—ஐந்தாம் பாவம் 16; 346
புதன் 31
புந்தி இருட்சாங்கிசம்—புதனுடைய வீடாகிய மிதுன கன்னி நவாங்கிசம் 71
புந்தி பம்—புதன் வீடு 256
புயங்கம்—பாம்பு 395
புயங்கன்—பாம்பு 408
புரம்—பட்டினம்; நகரம் 269
புரவி—அசுவதி 5
புவனிசன்—செவ்வாய் 255

RangaRakes tamilnavarasam.com

புனர்தம் — புனர்பூசம் 227
புனிதம் — மனோகரம் 398
பூமகன் — செவ்வாய் 174
பூமன் — செவ்வாய் 71, 110 ; செவ்வாய், அரசன் 145
பூதம் — ஐந்து 118
பூப்புறு மதி — பெண்கள் பூப்புற்ற மாதம் 54
பூமான் — செவ்வாய் 61
பூரி - பொன் 398
பூரியர்கள் - நீசர்கள் 148
பெண் பம் — பெண் இராசி 54
பெந்து வர்க்கம் — கோள்கள் நட்பு வர்க்கத்தில் நிற்றல் 141
பெலம் - பலம் ; படைக் கூட்டம் 268, 269
பைம் பொன் — குரு 114
பொருநன் — போர்செய்பவன் 262
போகு — நீண்டு 240
போதம் — தோணி 407
மக்கள் போல்வான் — புருட இயல்புள்ளவன் 329
மகரம் — மகர விராசி 96
மகிரம் — மிருகசீரிடம் 226
மருணன் பம் — கணவனுடைய இராசி 54
மத்தி — ஏழாம் பாவம் 16
மதம் — ஏழாம் பாவம் 115
மதனம் — ஏழாம் பாவம் 111, 141, 333 காமம் 23
மதி உதயாந்தரம் — சந்திர இலக்கினம் உதய இலக்கினம் இவற்றிற்கு இடையே 98
மந்தன் — சனி 101
மந்தன் இருக்கம் — மகர கும்பம் 329
மயிடம் — எருமை 149, 165
மயிர்ப்படம் - கம்பளம் 164



மரணம் — எட்டாம் பாவம் 16
மதி — மேட இராசி 170
மறை — நான்கு 187
மனம் 159
மனிதர் பம் — இருகால் இராசி 88
மனைவி — ஏழு 159
மனோகதன் — மனத்தின் கதியில் அதிகன் 239
மாசின் உற்ற அம்பரம் — அழுக்கினையுடைய புடவை 385
மாசுறு படம் — அழுக்குப் புடவை 404
மாடை — பொன் 200, 216, 399
மார்த்தாண்டன் — சூரியன் 114
மார்பு 100
மால் இருக்கம் — புதன் இராசி 328
மான் — குறுக்கு 55, மகர விராசி 174, 400
மானம் — பத்தாம் பாவம் 17, 345, 348
மிசிரம் — மிசிரத்திரேக்காணம் 353
மீன் 96
முக்காலம் 75
முடிவுறு மதி — தேயுந் திங்கள் 59
முதுமகன் சனி
முரண்கோள் — தீயகோள் 101
முனை — புதல்வர் 258
மூர்த்தி — மூர்த்தநி ; தலை 383 இலக்கினம் 183
மூரல் — சோறு 403
மூரிவில் — பெரியவில் 397
மேசூரணம் — பத்தாம் பாவம் 19, 85
மேடம் — மேட விராசி 96
மேதாவி — புத்திமான் 243
வக்கிரன் — செவ்வாய் 24, 168.
வத்திரம் — முகம் 100
வங்கம் — நாவாய் 384
வசு — எட்டு 187

RangaRakes tamilnavarasam.com

வட்டம்- பரிவேடம் 324
வடிதரு—நீண்ட 399
வத்திரம்—வஸ்திரம் ; ஆடை 389
வந்தி—மலடி 329
வந்தி பதி—மலடியின் கணவன் 311
வர்க்கம்—சட்வர்க்கம் 82
வர்த்தனை 144
வர்தவ—விருத்த, முதிய 142
வரத்திருசனம்—வர ஆசனம் ; பிரதான ஆசனம் 399
வயிறு 100
வறுபகம்—வக்கிரம் 136
வற்காலி—மேடவிராசி 74
வன்சேய்—செவ்வாய் 101
வஸ்தி—நாபிக்குங்கீழ் 100
வாக்கு—15)
வாகு—தோள் 100
வாசி—குதிரை 397
வாநரம்—குரங்கு 385
வாரிக்கவும்—களையவும் 12)
விக்கிரமம்—மூன்றாமிடம் 17
விகடம்—மாறுபாடு 191
விகர்த்தனன்—வேறுபட்ட பொல்லாத சொற்களை
யுடையன் 259
விகலாங்கன்—அங்கவீனன் 322
விஞ்சதித்துவயம் இரட்டி—நாற்பத்து நான்கு 169
விடமம்—ஒற்றைறயிராசி 66
விடமமாம் இருட்சம்—ஒற்றையிராசி ; ஆணிராசி 65
விடய பூரி—ஸ்திரீ விடயத்தில் நிறைந்தவன் 255
விடயம்—ஐந்து 118
விடயோகி—வேலையாள் 29
விட விருட்சம்—நச்சுமரம் 51
விதர்த்தன் ?சேதக்கன் ; சமர்த்தன் 224, 236



விதேசன் 77
விபலன்—பழமில்லாத மரங்களை உண்டாக்குங் கோள் ;
அவன் புதன் 51
விபாதம் 149
விபுதர்—தேவர் 354
வியம்—பன்னிரண்டாமிடம் 17, 86, 155
வியாழன் 32
வியாயம்—வியமும் ஆயமும் : செலவும் வரவும் 389
விரதி—ஓர் சமயத்தன் 220
விருத்தம்—வட்டம் 238
விலங்கு—மிருகத்திரேக்காணம் 353
விஜசம் 109
வினை—இரண்டு 118
விசம்—பீசம் ; 56
வீட்சிதம்—நோக்கம் 63
வெட்சி—இலக்கினம் 91, 96, 108, 109, 110, 139, 128
வென்—முதுகு 239
வேக்குமம்—நான்காமிடம் 19
வேசித்தானம்—ஞாயிறு நின்ற இராசிக்கு
இரண்டாமிடம் 21
யவன வோரை—ஓர் சோதிட நூல் 187
யாழ்—மிதுனம் 96, 170
யுத்திருட்டி—கூடுதலும் பார்வையும்
யுதம் திருட்டங்கள்—கூடுதலும் பார்த்தலும் 352
யுதம்—கூடுதல் 72
யுதன் புதன்—பாவருடன் கூடிய புதன் 28
யோக திருட்டி—கூடுதலும் பார்த்தலும் 94
யோகம்—தாபச யோகம் 411
யோனி பேதம் 410
ரச்சு நாண்—தாலி 338
லேயம்—சிங்கவிராசி

RangaRakes tamilnavarasam.com

# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 26 | சோதிடம | சோதிடம் |
| 3 | 29 | வராகர், ஓரை | வராகர் ஓரை |
| 13 | 17 | ஓசைவிராசிக்கு | ஓசவிராசிக்கு |
| 58 | 13 | நாற்காள் | நாற்கால் |
| 58 | 14 | நற்கோல் | நற்கோள் |
| 80 | 2 | சூதகி காலம் | சூதக காலம் |
| 94 | 10 | பிறந்தார்குக் | பிறந்தார்க்குக் |
| 110 | 25 | கேந்திரத் | கேந்திரத் |
| 138 | 17 | தணர்பின் | திணர்பின் |
| 141 | 10 | திசாம் | திசாப் |
| 150 | 10 | வயற்றிலே | வயிற்றிலே |
| 153 | 19 | சேர்வை | சேவை |
| 155 | 30 | பாத்திரீ, இட்டம் | பாத்திரீ இட்டம |
| 156 | 27 | கலவில்புறங் | கலவில்புரங் |
| 157 | 4 | புறக்கிராம | புரக்கிராம |
| 159 | 2 | திரிட்டம் | திருட்டம் |
| 160 | 28 | புத்திசை | புததிசை |
| 166 | 20 | புத்திசுபன் | புந்திசுபன் |
| 170 | 9 | ஆயன் | ஆயம் |
| 173 | 25 | துடையவனுதல் | துடைவவனுதல் |
| 174 | 12 | நமர்குப் | நமக்குப் |
| 176 | 12 | எய்திடும் | எய்திவிடும் |
| 176 | 24 | தொழிறுலும் | தொழிலிறுலும் |
| 182 | 9 | கர்கடக | கற்கடக |
| 200 | 25 | ளொல்லால் | ளொல்லாம் |
| 206 | 12 | நாளில் | நாவில் |
| 226 | 14 | சாாவளி | சர்ராவளி |
| 231 | 30 | பிற்பேத | பிரபேத |
| 233 | 28 | சத்மசீத் | சதமசீத் |
| 249 | 38, 39 | ஷத்வி | த்வி |
| 272 | 27 | இதன் | இதனை |
| 277 | 24 | கிரிகதனு | கிரிசதனு |
| 278 | 27 | கனைக்கால் | கனைக்கால் |
| 293 | 3 | புத்தி | புந்தி |
| 294 | 4 | புத்தி | புந்தி |
| 333 | 15 | திம்ரிசாம்சத்தில் | திரிம்சாம்சத்தில் |
| 336 | 6 | 302 | 303 |
| 363 | 23 | நீதுறுக் | நீதுறு |
| 364 | 23 | 304 | 306 |
| 366 | 5 | எழாம்பாட்டில் | எட்டாம் பாட்டில் |

RangaRakes tamilnavarasam.com